UNIVERSAL LIBRARY
OU_208233
UNIVERSAL LIBRARY

Tm 291.35 Tm 979
C54A
Chokkalingam, A.
Alayangalin utporul Vilakkam
1953

**OSMANIA UNIVERSITY LIBRARY**

Call No. Tm 291.35 C54A Accession No Tm 979

Author Chokkalingam, A

Title Alayangalin utporul vilakkam.

This book should be returned on or before the date last marked below.

1953

உ

# சமயக் கிண்டர்கார்டன்.

அல்லது

# ஆலயங்களின் உட்பொருள் விளக்கம்.

II. ஆலயந்தொழுவது சாலவும் நன்று.

## காப்பு

" சாட்டி நிற்கும் அண்டமெலாம் சாட்டையிலாப் பம்பரம்போல்
ஆட்டுவிக்குங் குற்றாலத் தண்ணலார் பதம்போற்றி."

## வேண்டுகோள்.

ஆலய வழிபாடு அறிகுறியாக அறிவைப் பெருக்கும்; அருள்நெறியாக அன்பை வளர்க்கும்; அனுபவவாயிலாக அழியாப் பேரின்பத்திற்கு அடிகோலும். அம்முறைகளைக் கற்றவர் மற்றவருக்குக்கூறிப் பயன்பெறுக.

A. சொக்கலிங்கம்.
இலஞ்சி.

1953.

## THERE IS NO RELIGION HIGHER THAN TRUTH.

1. உண்மையினும் உயர் சமயமொன்றில்லை.

2. ஒன்றும் உலகில் இன்றியமையாத தில்லை.
அனேகமான ஏற்பாடுகள் அவசியமானவை யல்ல; அவற்றைச்
செய்யாதொழிவதால் சேதமொன்றுமில்லை; (ஆனால்)
செய்ய விரும்பினால் திருந்தச் செய்க.—(ஏனெனில்)
பிழைபடச் செய்தலின் செய்யாமை நன்று
குளிக்க விரும்புவோர் சேற்றில் முழுகார்.

3. தானே தனக்குப் பகைவனும் நட்டானும்;
தானே தனக்கு மறுமையும் இம்மையும்;
தானே தான்செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி. (அறநெறிச்சாரம்.)

அச்சிட்டோர்: கிருஷ்ணா பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை-1

# உரிமை.

தனது மக்கள் பலருள்ளும் என்மீது மிகுதியான பேரன்பு கொண்டவளும், என் தாயைப் பெற்றவளும், எனது பத்தாவது வயதில் என் அருமைத் தாய் இறந்துபட, அன்று முதல் என்னை எடுத்து வளர்த்து என்னை நன்னெறியில் நடத்த ஓயாது முயன்றவளும், என்மீது கற்றாவின் மனம் போலக் கடைசிவரை கசிந்துருகியவளுமாகிய

என் பாட்டியார்

## பொன்னம்மையம்மாள்

(1843—1925)

[இலஞ்சி, புதுவீடு I. S. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் (1841—1934) மனைவியார்]

திருப்பாதங்களில் என்றும் நீங்காத
எனது நன்றியுடனும் கழிபேரன்புடனும்
இச் சிறுநூல் சமர்ப்பிக்கப்படுகின்றது.

## என் பாட்டியார்

பேரும் பொன்; குணமும் பொன்; அழகும் பொன்; நிறமும் பொன்; இறக்கும் வரை அவள் தொட்டதெல்லாம் அவளுக்குப் பொன்னுகவே பூத்து வந்ததும் நான் நேரே கண்ட உண்மை. அவள் இருமுறை காசிமுதல் கன்னியா-குமரி வரை ஸ்தலயாத்திரை செய்தவள். இறக்கிற அன்று-வரை தான் எடுத்துக்கொண்ட ஆன்மார்த்த பூஜையை மிகுந்த பக்தி சிரத்தையோடு ஒருநாள் கூடத் தவருது இயற்றி வந்தவள். 1101 ம் ஆண்டு ஐப்பசி-மீ 25 உ மங்கள வாரம் தேய்ப்பிறைத் தசமியன்று (10—11—1925) இரவு 8 மணிக்குக் கட்டிலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தவள், அருகில் நின்று உரையாடிக்கொண்டிருந்த அவளுடைய மகள் பெரியதாயம்மாளுக்கும், பத்தடிக்கப்பால் அடுத்த பட்டகசாலையில் கிழக்கு மேற்காக உலாவிக்கொண்டு பேசி நின்ற எனது பாட்டனுருக்கும் தெரியாமலே உயிர் நீத்தது, அவள் செய்த தவத்திற்கு ஓர் அறிகுறி என்று இன்றும் இலஞ்சியில் புகழப்படுகிறது.

---

### வெண்பா.

பொன்னம்மை என்றபேர் போற்றிஇட்டார் எவ்விதமோ
மின்னுள் என் பாட்டிக்கு மூதறிவோர்—பெண்ணரசி
பேரும்பொன், ஆகம்பொன், பேரறத்தாள் கைபட்ட
சேரும்பொன் னும்பெருமை தேர்ந்து.



# முன்னுரை.

## மக்கள் மூவகையினர்.

"கேளுங்கள்! ஒரு குடியானவன் விதைக்கச் சென்றான். விதைக்கும்போது, சில விதைகள் வழியருகே விழுந்தன; பறவைகள் வந்து அவற்றைக் கொரித்து விட்டன.

சில விதைகள் அதிக மண்ணில்லாத கல்லாந் தரையில் விழுந்தன; ஆழமான மண்ணில்லாததால் அவை விரைவில் முளைத்தன. வெயில் ஏறியபோது கொதிப்படைந்து வேரில்லாமையால் அவை உலர்ந்து போயின.

சில விதைகள் முள்ளுக்குள் விழுந்தன; முட்கள் வளர்ந்து அவற்றை அமுக்கி விட்டன.

மற்றவை நல்ல நிலத்தில் விழுந்து, சில நூறு பங்கும், சில அறுபது பங்கும், சில முப்பது பங்குமாகப் பலன் கொடுத்தன."

இது கிறிஸ்து நாதருடைய சிறு கதைகளில் ஒன்று. உண்மையைக் கேட்டோரெல்லோரும் ஒன்றுபோலப் பலன் பெறார் என்பதை விளக்குவது. சிலர் ஒருவித பலனையும் பெறாததையும் சிலர் சிறிதே பெறுவதையும் சிலர் பெரும் பலனை அடைவதையும் இக்கதை குறிக்கும்.

உலகத்தில் மக்கள் மூவகைப்படுவர். எவ்வகைத் துன்பங்கள் வரினும் அவற்றில் உழன்று கொண்டே உலகச் சிற்றின்பங்களில் திருப்தியுற்றிருப்பவர் அதமர். அவர்கள் தமோகுணத்தவர். மிருகங்களும் அவ்விதமே காலங்கழித்தலால் அவ்வாழ்வு மிருக வாழ்வே.

அன்றி, துன்பம் வந்த காலத்து அதனால் அதிருப்தியுற்று அதை நீக்கவும், மேலுக்கு அத்துன்பம் வராமல் விலக்கவும் முயற்சிப்பவர் மத்திமர்.

வெள்ளம் வருமுன்னமே அணைகோலிக் கொள்வது போல, உலகத்தில் பலர்படுந் துன்பங்களைக் கண்ணால் கண்டு அவை

தமக்கும் வரக்கூடியவை யென்பதை உணர்ந்து அவற்றை வராமல்-தடுக்கவும், பழவினைப்பயனாக அவை வரும்போது அவற்றை விலக்கவும் அல்லது சகிக்கவும் வேண்டிய அறிவை முன்கூட்டியே தயார் செய்து அதன்படி நடந்து கொள்பவர் உத்தமர்.

சாதாரணமாக, தம் நிலையில் அதிருப்தியுற்றவருக்கே சமய நூல்களும் நீதிநூல்களும் அதிகம் பயன்படும். உள்ளது கொண்டு திருப்தியாயிருப்பவர்களும் உலகப்பற்று மிகுதியாயிருப்பவர்-களும் அந்நூல்களை அதிகம் கவனியார், அவற்றின்படி நடக்கவும் முயலார். அவர்கள் கண்டும் கேட்டும் கற்றும் படிப்பவரல்லர்; உண்டு, அதாவது பட்டுப் படிப்பவர்கள்.

தெய்வஞானவித்தாகிய இச் சிறு நூலும் தமிழ் நாட்டுக் கழனியில் எல்லா மக்களுக்கும் பொதுவாக விதைக்கப்படுகிறது. பலன் நிலத்தைப்பொறுத்தது.

ஆலயங்களின் உபயோகங்களைப்பற்றி ஐயப்பாடுகள் மிகுந்-துள்ள இக்காலத்தில் அவற்றின் உட்பொருள்களைப்பற்றிய ஒரு சில கருத்துக்கள் மிகையாகா என்ற நம்பிக்கையோடு இந்நூலின் இரு பாகங்களும் எழுதப்பட்டுள்ளன. நமது சமயத்திற்கு அஸ்தி வாரமாயுள்ளது அதன் ஆலய ஏற்பாடு. அஸ்திவாரத்திற்குச் சேதம் ஏற்படும்பொழுது மேற்கட்டிடங்கள் சீரழிந்துவிடும். நம் சமயத்தின் சிகரங்களாகிய வேதாந்த சித்தாந்தங்களை அறிபவர் நம்மில் மிகமிகச் சிலரேயாவர். ஆனால் அவற்றின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுள்ள ஆலயங்கள் யாவரும் பின்பற்றும் படியான எளியமுறையில் அமைக்கப்பட்டுள்ளன. அடியார்கள் அறிவைப்பண்படுத்துவதற்கு அங்கு அமைக்கப்பட்டுள்ள அறி-குறிப்பொருள்கள் இந்நூலின் முதற் பாகத்தில் பல படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. இனி அடியார்களின் அன்பைப் பண்-படுத்துவதற்கு அங்கு அமைந்துள்ள அருள் நெறிகள் அல்லது ஆலயக்கிரியைகள் இந்த இரண்டாம் பாகத்தில் பலபடங்களுடன் விளக்கப்படுகின்றன.

"கிரியைகளுடைய போது நோக்கம் மேலுலகங்களிலுள்ள அருட்சக்திகளை பூலோகத்திற்கு இறக்கி, அங்குள்ள உயிர்களிடம் அவை எளிதில் சாரக்கூடிய முறையில் அவற்றைப் பக்குவப்படுத்தி உலகிற்பரப்புதலாம்". என்று ஒரு அனுபவ ஞானி கூறியுள்ளனர்.

அவ் வேலையின் பொருட்டு நமது ஆலயங்களில் அவற்றின் வரு-வாய்க்குத் தக்கபடி நாள்தோறும் ஒருகாலப்பூஜை முதல் ஆறு காலப்பூஜைகள்வரை நடைபெறுகின்றன. இவை நித்தியம் என்னப்படும். இவையன்றி வேறு சிறப்புப்படித்தரங்கள், விசேஷ பூஜைகள், திருவிழாக்கள் முதலிய நைமித்திகங்களும் நடைபெறு-கின்றன. அவற்றால் ஏதோ இறைவனுடைய அனுக்கிரகம் அங்கு பெறப்படுவதாக நமக்குள் ஒரு பொது நம்பிக்கையைத்தவிர, மற்றப்படி உண்மையாதென்றோ, துல்லியமாக அங்கு யாது ஏற்படுகிறதென்றோ, விதிக்கப்பட்டுள்ள கிரியைகளுக்குப் பலன் யாதென்றோ அறிந்துள்ளவர் மிகச் சிலரே யாவர். அச்சிலரும், நம் போன்ற சாதாரண மக்களுக்கு அவற்றைப்பற்றி விளக்க முன் வராமையால், அடியார்களுக்குள் ஒரு அலட்சிய மனப்-பான்மையும் ஆலயங்களிலும் அவற்றின் கிரியைகளிலும் பற்-றின்மையும், அக்கிரியைகளும் இன்று சரிவர அனுசரிக்கப்படா-மலும் இருந்து கொண்டிருக்கின்றன. அதற்கு ஒரு அற்பப்பரி-காரமாக இந்நூல் மேற்சொன்ன அறிவாளிகளின் உதவி கொண்டு எழுதப்படுகின்றது.

அப்பெரியார் வாக்கிலிருந்து, ஆலயங்களில் இறை அரு-ளானது மழைபோலப் பரந்து பொழியப்படுவதில்லையென்று தெரியவருகிறது. அங்கு நடைபெறுவது விஞ்ஞான சாஸ்திர முறையாம்; ஆனால் சூட்சும உலக வேலையாம். மின்சார சக்தியைப் பெறுவதற்கு மின்சார உற்பத்தி சாலைகள் (Generating Stations) ஏற்பட்டிருப்பன போன்று அருட்சக்திகளுக்கு ஏற்பட்டிருப்பவை ஆலயங்களாம். இரண்டிடத்தும் வேலை நடை-பெறும் முறை ஒன்று தானும். அதுவே சிக்கனமான முறையாம். மின்சார நிலையத்திலிருந்து மின்சாரமானது மழைபோல நாடெங்-கும் பொழியப்படுவதில்லை. உற்பத்திசெய்யப்படும் மின்சார-மானது சேமிப்புக்கருவிகள் (Storage Batteries) மூலம் முதலாவதாக ஆலைக்குள் சேமித்து வைக்கப்படும். வேண்டிய அளவு சக்தி திரண்டவுடன் உரிய முறைப்படி அது வெளியே அனுப்பப்படும்.

ஆலயங்களில் அருள் திரட்டும் முறையும் அதே ஒழுங்கில் நடைபெறுவதாக அனுபூதிமான்கள் தெரிவிக்கின்றனர். மேலுலக

அருட்சக்திகளைக் கீழுலகிற்குக் கொண்டுவருமுன் அவற்றைச் சேமிப்பதற்கு அருள் திரட்டிகள் அமைக்கப்படவேண்டுமாம். அவை மேலுலக வாசிகளாகிய தேவர்களாலேயே செய்யப்படத்-தக்கனவாம். அதனாலேயே பூஜை ஆரம்பத்தில் தேவர்களையும் தேவகணங்களையும் அழைப்பது இன்றியமையாததாகின்றது. அந்தத்தேவர்கள் ஆவாகனமும் எல்லாப் பூஜை முறைகளிலும் விதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் உதவியின்றிப் பூஜைகள் ஒழுங்காக நடைபெறுவதில்லையாம். சூட்சும உலக தத்துவங்களையும் பொருள்களையுங் கொண்டு அவர்கள் நிர்மாணிக்கும் அருள் திரட்டிகள் அருளாலயங்கள் என்று அழைக்கப்படும். அந்த அருளாலய நிர்மாண வேலைக்கு அத்தியாவசியமாயுள்ளவை அத்தேவர்களுடைய ஆவாகன சம்பந்தமான பலவிதக் கிரியை-களும் அடியார்களுடைய ஒழுங்கான தொழுகையுமாம். இந்த நிர்மாணங்கள் நெற்றிக்கண்ணுக்கு நன்கு புலப்படும் சூட்சுமக் கட்டிடங்களாம். அவற்றின் சில படங்கள் இந்நூலில் உள்ளன. கிரியைகளும் தொழுகையும் ஒழுங்கு தவறி நடைபெறும்பொழுது இந்த நிர்மாணங்களுக்கு ஊனம் ஏற்படுகின்றதாம்.

பின்னர் அந்த சூட்சும அருளாலயங்களுக்குள் அருளை நிரப்புவதற்கு இறைவன் இறைவியர் ஆவாகனங்கள் செய்யப்பட வேண்டும். அவர்களுடைய பிரசன்னமும் அதை யொட்டிய கிரியைகளும் அருளை அந்த சூட்சும நிர்மாணத்தினுள்ளும் அதனுள் அடங்கியிருக்கும் ஸ்தூல ஆலயத்துள்ளும் அமோக-மாய்ப் பெருக்குகின்றனவாம். பின்னர் பூஜை விஸர்ஜனம் செய்யப்படும்பொழுது அருள் திரட்டிகள் உலைந்து, அங்கு, பேரழுத்தமாக அடைபட்டிருக்கும் அருட் சக்திகள் விடுபட்டு நாற்புறமும் பரவி நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை செய்யுமாம்.

இந்த அருட் சக்திகளும் இறைவனுடைய ஐந்தொழில் சம்பந்தமானவையாக இருக்குமாம். உரிய உரிமை பெற்ற பூஜகர்களால் உரிய மந்திரம் முத்திரை பாவனைகளோடு இயற்றப்-படும்போது அபிஷேகம் சிருஷ்டி கிருத்திய (படைப்பு) சக்தி-களையும், நைவேத்தியம் ஸ்திதி கிருத்திய (காத்தல்) சக்திகளையும், தீபாராதனை திரோபவ கிருத்திய (பிரவர்த்தி முறை) சக்தி-களையும், ஹோமம் அனுக்கிரக கிருத்திய (நிவிர்த்தி முறை) சக்தி-

களையும், பலிபோடுதல் சம்மார கிருத்திய (வீடுபேற்று) சக்திகளையும் உற்பத்தி செய்யுமென்று ஆகம நூல்களிற் கூறப்பட்டுள்ளன.

ஆனால் தக்க உரிமை பெறுதார் கையில் இவை யொன்றும் நடைபெறுவதில்லையாம். அந்த உரிமைகளும் பலவகையாம். வைதிகக் கிரியைகளுக்கு உபநயனம் பெற்ற பிராமணர் யாவரும் உரியவர். சிவாலய ஆகமக் கிரியைகளுக்கு சமய, விசேஷ, நிர்வாண தீக்ஷைகளும் ஆசாரியபிஷேகமும் பெற்ற ஆதிசைவர்களே உரியவர். வைஷ்ணவ ஆலயங்களுக்கு பாஞ்சராத்திரம் முதலிய வைஷ்ணவ ஆகமங்களின்படியுள்ள தீக்ஷைகள் பெற்றவராயிருத்தல் வேண்டும். அந்தந்த உரிமை பெறுதார் கையில் அருட் பொழிவு நிஷ்பலமாகின்றதாம்.

இனி, ஆகமங்களில் பூஜைக்கு விதிக்கப்பட்டுள்ள அங்கங்கள் தவறுமலும் மந்திரம் முத்திரை பாவனைகள் தவறுமலும் வழிபாடு நடைபெறுதபொழுது அப்போதும் அருட் பொழிவிற்குப் பங்கம் ஏற்படுகின்றதாம்.

அன்றி, அடியார்களும் ஆகம முறைப்படி தொழாதபோது அங்குள்ள அருளால் முழுப்பலனையும் பெறுது போகின்றனராம்.

இவையாவும் இந்நூலில் ஒரு சிறிது ஆராயப்பட்டுள்ளன. கற்றவர் மற்றவருக்கு அவற்றை எடுத்து விளக்கிப் புண்ணியம் பெறுவாராக.

இலஞ்சி
1-8-1953

# அணிந்துரை.

ஆசிரியர் உயர்திரு. ஆ சொக்கலிங்கம் பிள்ளை யவர்கள் தம் மிக நுண்ணிய ஆராய்ச்சியாலும் அனுபவ உண்மையாலும் இந் நூலை நமக்கு எழுதித் தந்திருக்கின்றனர். இது 'சமயக் கிண்டர் கார்டன்—பாகம் 1.—அண்டத்திலுள்ளது பிண்டத்தில்' என்ற நூலின் தொடர்ச்சியாகும்.

ஆலயங்கள் அறிகுறிகளாகவும் அருள் நிலையங்களாகவும் இப்பூவுலகில் விளங்குகின்றன. ஆலயக் கிரியைகள் இறைவ-னருளைப் பூலோகத்தில் பரப்பும் வழிகளாம்—வெறும் பொரு-ளற்ற வீண் சடங்குகளல்ல! முறைப்படி ஆலயத்தில் கிரியைகள் செய்வதால் சம்பந்தப்பட்ட சூக்கும, நவகண தேவர்கள் அந்தர்-யாமியாய்த் தோன்றி நின்று, தொழுது நிற்கும் அடியார்களாகிய நமக்கு இறைவனருள் விரைவில் முற்றிலும் கிடைக்க உதவி செய்கின்றனர். ஆலயக் கிரியைகளாகிய திருமஞ்சனம், ஆவா-கனம், ஆராதனை, விஸர்ஜனம் முதலியவைகளின் விளக்கங்களும் முறைகளும் அவைகளாலேற்படும் பயன்களும் மிகச் சிறப்பாக இந்நூலுள் விளக்கப்பட்டிருக்கின்றன.

இந்து ஆலயங்களில் காணப்பட்ட ஒருமையற்ற (தனித்தனி) வழிபாட்டைவிட, கிறிஸ்தவ, சுதந்தரச் சிற்ப விதான, பாரத சமாஜ கூட்டு ஆராதனையின் உயர்வையும், அதனாலேற்படும் பயனையும் இந்நூலுள் ஆசிரியரவர்கள் மிக நுணுக்கமாகக் காட்டி விளக்கியுள்ளார்கள். அதனை நோக்குங்கால் நம் இந்துக் கோயில்-களிலும் அக்கூட்டு வழிபாட்டு முறையைக் கையாண்டால், இப்பொழுது காணப்படும் பல குறைபாடுகளும் நீங்கி, அருட்-குறைகளின் உண்மைநிலை நன்கு தெளியப்பட்டு, நம்முள்ளும் நாஸ்திகக் கூட்டம் பெருகாமல் காத்துக் கொள்ளலாமென்பது திண்ணம்.

வங்கப்பணி முனிவரின் (Bishop C. W. Leadbeater) நெற்றிக்கண் பார்வை யனுபவத்தில் கண்ட கிறிஸ்தவ ஆலய

வழிபாட்டின் பல அற்புத நிகழ்ச்சிகளையே இந்நூல் மிக விரிவாகக் கூறிச் செல்லுகின்றது. இரண்டாவதாக, மறைமுக வழிபாடாகிய சுதந்தரச் சிற்பவிதான வழிபாடும் ஓரளவு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றது. எல்லா சமயங்களும் ஓர் இறைவனையே காணமுயலும் பல வழிகளே யானமையின், மேற்கண்ட கிறிஸ்தவ வழிபாட்டில் கண்ட காட்சிகளே வேத ஆகம சமய வழிபாட்டிலும் காணப்பட வேண்டும் என்ற அநுமானத்தின் பேரில் இந்துக் கோவில்களின் வழிபாட்டு முறைகளெல்லாம் விளக்கப்பட்டு, அக்கிரியைகள் சரிவர ஆசாரியாபிஷேகம் பெற்ற பெருமக்களால் செய்து வைக்கப்படின் உரிய பயனைத்தரும் என்பதும் தெள்ளிதின் இந்நூலில் காட்டப்படுகின்றது.

'யான் கண்ட இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உயர்ந்த குறிக்கோளுடன் எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாது வேறொன்றையும் தம் வாழ்க்கையின் பயனாகக் கருதாத ஆசிரியரவர்கள் யாவரும் உண்மையை உணர்ந்து இன்புற வேண்டுமென்ற பேரவாவில் இந் நூலைத் தகுந்த முறையில் எழுதித் தந்திருக்கிறார்கள். நம் கோயில்களில் செய்யப்படும் புண்ணியாகவசனம், ஆவாகனம், அர்க்கியம், அபிஷேகம், நிவேதனம், விஸர்ஜனம் முதலிய கிரியைகளின் உண்மைத் தன்மையும்; நம் பலதிறக் கடவுளருக்குப் பாகுபடுத்தி யணியும் பூ, ஆபரணங்களின் உண்மைக் கருத்தும்; அலங்கார தூபதீப ஆராதனை, மேளம் கண்டாமணி முதலிய இனிய நாதங்கள், நைவேதனம் முதலியவற்றின் அவசியமும்; விநாயகர், அய்யனார், சண்டேசர், பைரவர் முதலிய கடவுளரை வணங்கும் முறையும அதன் கருத்துகளும்; கொடிமரத்தின் அறிகுறியும் விழாக்களின் காரணங்களும் மிக நுணுக்கமாக எளிய முறையில் விளக்கப் பட்டிருக்கின்றன. ஆன்மார்த்த பரார்த்த பூசைகளின் தொடர்பும் ஆலயங்களில் பரார்த்த பூசையின் அவசியமும் அதற்குக் கூட்டு வழிபாடே சிறப்புடையதென்பதும் தகுந்த காரணச் சான்றுகளுடன் விளக்கப்பட்டிருக்கின்றன. பிள்ளையார்முன் குட்டிக்கொள்ளுதலும் தோப்புக்கரணம் போடுதலும் அடியார்களின் மனோவாக்குக் காயங்களை ஒருமுனைப்படுத்திக் குண்டலியை யெழுப்பும் முத்திரைகளென்பதும், புராணப் படனத்தில்

செய்யப்படும் சடங்குகளெல்லாம் மிகுந்த கருத்துக்களை உள்ள-
-க்கியனவே யென்பதும், கட்டியம், காப்பு, திருச்சிற்றம்பலம்—
இவை வெற்றுரையல்ல என்பதும் நூலுள் குறிப்பிடத்தக்க
செய்திகளாம்.

இந்நூலுள் அதிகமாகக் காணப்படும் கிறிஸ்தவ சடங்கு
விவரங்களும், கிறிஸ்தவ மேரியே இந்து மகாமாயையான மாரி;
சிலுவையிலறையப்பட்டதே பாற்கடல் கடைந்த வரலாறு;
சிலுவை முத்திரையிடுதலே வைதீகச் சடங்கில் நெற்றி தொப்புள்
தோள்கள் தொடுதல்; என்றிவ்வாறெல்லாம் காட்டப்படும்
ஒப்புமைப் பகுதிகள் ஆசிரியரவர்களின் மதப் பூசலற்ற பரந்த
சமரச மனப்பான்மையையும் ஒருவனே தேவனென்ற உறைப்-
புள்ளத்தையும் காட்டுகின்றன வென்பதற்கு நூலுள் பக்கம்
241-ல்,

'வேறுபடும் சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்கு பரம் பொருளே நின் விளையாட்டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை................''

என்ற அருள் வாக்கின் கருத் தொற்றுமை சான்றாகும்.

இந்நூலில் அதிகாரங்கள் 40, 41-ல் ஆசிரியரவர்கள் நமது
இந்து ஆலயங்களில் காணப்படும் குறைபாடுகளை (அதிகாரி,
அர்ச்சகர், அடியார்களின் அட்டூழியங்களை) சிறிது வெள்ளை-
யாகவே எடுத்துக் காட்டி யிருக்கின்றனர். அக்குறைகளால்
தற்காலத்தில் நம் ஆலயங்கள் சீர்கேடுற்ற நிலையையும், நம்முள்
பலர் நாஸ்திகராய் அறிவிழந்து போனதையும் கண்டு வருந்தி,
இம்முறை இன்னும் நீடிக்கவிடில் ஆதியும் அந்தமுமில்லாது
தொன்று தொட்டு வரும் நமது தெய்வீக மதமும் ஆசாரமும்
வீணாய் அழிந்தொழியுமே யென்ற அச்சமே ஆசிரியரவர்களை
அவ்வாறு எழுதச் செய்தது.

வழக்கம்போல் கருத்தை நன்கு தெளிவிக்க வேண்டுமென்ற
பேராவல் ஆசிரியரவர்களுக்கு சிறந்த பல உவமானங்களை
இந்நூலிலும் தேடித் தந்திருக்கிறது:

(1) மழைநீரைப் பெரிய அளவில் தேக்கி கால்வாய்கள் மூலம் அனுப்புகிற அணைபோலவும், மின்சாரத்தை ஓரிடத்தில் உண்டாக்கிப் பெருக்கி, பல இடங்களுக்கும் பகுத்து அனுப்பும் 'பவர் ஹவுஸ்' போலவும், நம் ஆலயங்கள் தெய்வ அருளை ஒருமுகமாகப் பெற்றுத் தேக்கிக்கொண்டு ஊர் முழுவதும் நாலாபக்கமுமாகச் செலுத்துவதால், ஊர் நடுவே தேவாலயம் அமைந்திருக்கிறது; கோயிலில்லா ஊருமில்லை.

(2) தண்ணீரைத் தேக்கி பெரிய வேலைகளைச் செய்வது போல, ஆராதனையில் அருளைத் திரட்டி மிக உன்னத வேலைகளைச் செய்யலாம்.

(3) தேக்கிய மின்சாரம் முழுமையும் அப்படியே ஓரிடத்துக்குச் சென்றால், அது அவ்விடத்தை முழுவதும் அழித்துவிடும்; எனவே இடத்தின் வேண்டிய அளவுக்குத் தக்கபடி குறைத்து வினியோகிக்கவே 'Transformers' அமைக்கப்பட்டிருக்கின்றன. குடி தண்ணீர் தேக்கங்கள் முழுவதும் பெரிய குழாய்கள் மூலமே நீரை வெளிவிடாமல், இடத்தின் தேவைக்குத் தகுந்தபடி சிறு குழாய்கள் மூலமே நீரைத்தந்து பயன்பெறச் செய்கிறது. அதுபோல இறைசக்தி முழுவதும் கொண்ட அருட் பிரவாகத்தை இந்திரன் முதலிய அஷ்டதிக் கணங்களும் நவவானவரும் இடையே நின்று ஏற்றுக்கொண்டு அடியார்களின் நிலைக்குத் தகுந்தவாறு சிறிது சிறிதாய் வினியோகிக்கின்றனர்.

(4) கல்லை வாயால் ஊதி நகர்த்த முடியாது; கையால் தொட்டுத் தள்ளியே நகர்த்தவேண்டும். அதுபோல ஆராதனை மூலம் பெறப்படும் அருட் சக்திகள் சூக்கும உடமபையே எளிதில் சேரக்கூடியவை; ஸ்தூல உடம்புடன் அவ் அருள் நன்கு சேர்ந்து நிலைத்து நிற்பதற்கு உதவுவதே நமது கோயில் நைவேத்தியப் பொருள்கள்.

(5) அடுப்புக் கட்டிகளைத் துணைக்கொண்டே சமைத்துச் சோறுண்ணமுடியும். அதுபோலவே பல திறப்பட்ட கிரியை முறைகளைச் செய்தே இறைவனருளை எளிதில் பெற்று இன்புற முடியும்.

இவைபோன்ற பல போற்றத்தக்க கருத்துக்கள் யாவரும் இந்நூலுள் படித்து இன்பமும் பயனும் அடையத்தக்கன.

தன்னலமற்ற கருணைமிக்க ஆசிரியரவர்களை இளமைமுதலே தாய்நிலையில் இருந்து புரந்தந்து ஆளாக்கித் தந்தவர்கள் இலஞ்சி புதுவீட்டுப் பொன்னம்மை யம்மாளவர்களே. அருமைப் பாட்டியாராகிய அன்னாருக்குச் செலுத்தும் நன்றியாக ஆசிரியரவர்கள் அவ்வம்மையாரின் ஒரு ஞாபகார்த்த நிதி யேற்படுத்தி, அப்பொருள்மூலம் அறிவுடை உலகம் பயன்படுமாறு இந்நூல் போன்ற வேறு சில பயனுடைய நிலைத்த தன்மை பெற்ற அருள் நூல்களும் எழுதித் தந்திருக்கிறார்கள். அவர்களின் கருணைப் பெருங்குணம் இருந்தவாறென்னே!

அறிவுடைப் பெருமக்கள் எல்லோரும் இம்முயற்சியில் பங்கெடுத்து பேரறத்தை வளர்க்கும் முறையில், ஆசிரியரவர்களின் அறிவுக் கருவூல நூல்களை வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக.

அண்ணாமலை நகர்
25-5-52.

ஆ இராமசாமி, M.A., L.T.

# அட்டவணை


| பாடம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அங்கிங்கெனாதபடி எங்கும் | .... | 1. |
| 2. | கிரியையென மருமவை யாவும் | .... | 10 |
| 3. | அவனருளே கண்ணாகக் காணினல்லால் | .... | 16 |
| 4. | தேவவர்க்கம் | ... | 21 |
| 5. | ஷை பூதகணங்கள் | .... | 25 |
| 6. | பிருதிவி பூதகணங்கள்—குபேர பூதகணங்கள் | .... | 28 |
| 7. | பூதகணங்கள்—சில பொதுக்குணங்கள் | ... | 31 |
| 8. | தேவவர்க்கம்—பிருதிவி பூதகணங்கள் | ... | 35 |
| 9. | ஷை — அப்பு, தேயு, வாயு பூதகணங்கள் | .... | 37 |
| 10. | ஷை — ஆகாய பூதகணங்கள் | ... | 39 |
| 11. | ஷை — தேவகணங்கள் | .... | 41 |
| 12. | பூஜை முறைகள் — பொது | ... | 47 |
| 13. | ஷை — சிறப்பு வகைகள் | ... | 49 |
| 14. | கிறிஸ்தவ தேவாராதனை — முன்னுரை | ... | 52 |
| 15. | ஷை I. சுத்தி செய்தல் | .... | 57 |
| 16. | ஷை II தயாரிப்பில் | .... | 71 |
| 17. | ஷை II. ஷை (1) விண்ணப்பம் | ... | 79 |
| 18. | ஷை II ஷை (2) மனந்திருப்புதல் | .... | 86 |
| 19. | ஷை II. ஷை (3) பக்தியைப் பெருக்குதல் | .... | 94 |
| 20. | ஷை II. ஷை (4) பகுத்தறிவைப் பெருக்குதல் | ... | 104 |
| 21. | ஷை III. காணிக்கை செலுத்துதல் | ... | 107 |
| 22. | ஷை III சுவிசேஷம் ஓதுதல் | .... | 117 |

| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 23. | ஷை IV. நற்கருணை ஆராதனை—1. சுத்தி .... | 121 |
| 24. | ஷை ,, 2. தேவர்கள் ஆவாஹனம் ... | 124 |
| 25. | ஷை ,, 3. அருள்விநியோக விண்ணப்பம் | 131 |
| 26. | ஷை ,, 4. பிரதிஷ்டை ஜெபம் .... | 136 |
| 27. | ஷை V. கிறிஸ்தவ ஆராதனை முடிவு. ... | 149 |
| 28. | சுதந்தரச்சிற்ப விதானம்—1. முன்னுரை .... | 154 |
| 29. | ஷை 2. அரங்கமும் தளவாடங்களும் .... | 160 |
| 30. | ஷை 3. ஆரம்பக் கிரியைகள் ... | 164 |
| 31. | ஷை 4. நடைதிறப்பு ... | 173 |
| 32. | ஷை 5 தீக்ஷைகள் ... | 183 |
| 33. | ஷை 6 நடை அடைத்தல் .... | 189 |
| 34. | பாரத சமாஜ பூஜை ... | 190 |
| 35. | ஷை இதர குறிப்புகள் ... | 198 |
| 36. | சிவாலயப்பரார்த்த பூஜை—முன்னுரை ... | 20( |
| 37. | ஷை —ஒற்றைக்காலம் ... | 2( |
| 38. | ஷை ஷை தொடர்ச்சி I ... | 210 |
| 39. | ஷை ஷை II .... | 236 |
| 40. | பூஜைகள் தப்பிடின் ... | 242 |
| 41. | ஆலய தரிசன விதி .... | 258 |
| 42. | தீக்ஷைகளும் பிறவும் ... | 269 |


## பின் இணைப்புகள்


1. தமிழ் மறை வழிபாடு .... 284
2. வேற்றுமையுள் ஒற்றுமை .... 285
3. ஞாபகார்த்த நிதி



கிறிஸ்தவ அருளாலயம்

# சமயக் கிண்டர்கார்டன்

அல்லது

## ஆலயங்களின் உட்பொருள் விளக்கம்

## II

*ஆலயந் தொழுவது சாலவும் நன்று.*

பாடம் 1.

### "அங்கிங்கெனாதபடி எங்கும்..."

நம் இந்திய நாட்டின் தென்னாடாகிய தமிழ் நாட்டைப் பொன்னாடாக்கிய புனித மக்களுள் ஔவைப் பாட்டியாரும் ஒருவர். அவர் தமிழன்னை பெற்ற ஒரு தவமுதுமகள். "ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்ற உண்மை கண்ட அவ்வருளம்மையார், தமிழ் நாட்டில் கல்வியறிவில்லாத பாமர மக்களும் கடைத்தேற வேண்டுமென்ற ஆர்வத்தினால் சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளடங்கிய சிறு சிறு நூல்களை நமக்கு ஆக்கிக் கொடுத்தனர். யாவருங் கற்கத்தக்க உரைநடை நூல் இல்லாத அக்காலத்தே பிள்ளைகளும் எளிதில் மனப்பாடம் பண்ணும் விதத்தில் தமிழ் நெடுங்கணக்கின் அகர முதல் னகர மீறாகத் தொடங்கும் இரண்டெழுத்து மூன்றெழுத்துச் சொற்களைக் கொண்டு அவர் ஆத்திசூடியை இயற்றினர். அவ்வாறே நான்கு சிறு தொடர்களால் மோனை நயம்படக் கொன்றைவேந்தனையும் இயற்றித் தந்தனர். அவ்வம்மையார் இயற்றியுள்ள "விநாயகரகவ"லிலிருந்து அத் தமிழ்மூதாட்டி யோகம் பயின்று அட்டமா சித்திகளும் கைவரப்பெற்றவரென்பது விளங்கும். அதனால் அவருக்கு யோகக் காட்சி என்ற சூக்ஷ்ம திருஷ்டியும் இருந்திருக்க வேண்டும். அவர் "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்று அருளிச் செய்தபோது, அது வெறும் புறப்பார்வை கொண்டு மாத்திரமல்லாமல், அகப் பார்வைக்கும் உகந்ததெனக் கொண்டே அவ்வாறு கூறியிருத்தல் கூடும். ஆனால், "இறைவன் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கையில், அவரைக் காண்பதற்கு ஆலயஞ் செல்வானேன்?"

என்பது இக்காலத்தே அடிக்கடி நிகழுங் கேள்வி. இது புதிய கேள்வியல்ல. பண்டும் பன்முறை கேட்கப்பட்டதே யாகும். அதற்குப் பண்டையோர் கூறிய விடையென்ன? ஆலயங்களுக்குப் பிரமாண நூல்களாகிய ஆகமங்கள் அதனைப்பற்றிக் கூறுவது யாது?

ஆங்கிலம், வடமொழி, தென்மொழிப் புலமையாலும் கல்வி கேள்விகளாலும், ஆகம அறிவாலும், ஞான அநுபவத்தாலும், சமீப காலத்தில் தலைசிறந்து விளங்கிய பெருந் துறவிகளில் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் ஒருவர். அவர் பண்டையோர் கூற்றாக, "கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபகமாய் நிற்பினும், ஆலயத் திருமேனிகளிலும் மெய்யடியார் திருவேடத்திலும் தயிரில் நெய்போல விளங்கி நிற்பர்; மற்றை யிடங்களில் பாலில் நெய்போல விளங்காது நிற்பர்," என்று தம் நூலிற் கூறியுள்ளனர். இறைவன் விளங்குவதாக இங்கு கூறப்படும் அந்த இரண்டு உருவத் திருமேனிகளில், அநுபூதிமான்களாகிய மெய்யடியாரைக் காணக் கிடைப்பதே அருமையான காரியம்; அதனினும் அடிக்கடி அவரை அண்டக் கிடைப்பது அருமையினும் அருமையாம். ஆனால் ஆலயங்களில்லாத ஊர்கள் மிக அபூர்வம். "கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்," என்பதே நமது முன்னோர் துணிபு. அத்துடன் ஆலயங்கள் அடிக்கடி நாம் செல்லக்கூடிய இடங்களுமாம். அதனால், சாதாரண மக்கள் தயிரில் நெய் போல இறைவனைக் காணக்கூடிய இடங்களே ஆலயங்கள் என்பது பெறப்படும். இதனையே "தேவாலயங்கள், எங்கும் வியாபகமாய் மறைந்திருக்கும் கடவுள் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுச் சாந்நித்தியராய் எழுந்தருளி யிருக்கும் இடங்களாம்," என்று ஆறுமுக நாவலர் மேலும் விளக்குகின்றனர். அங்ஙனமாயின், எங்கும் பிரகாசமாயுள்ள ஆனந்த பூர்த்தியைத் தாமிருக்கும் இடத்திலேயே அநுபவித்துக் காணமாட்டாத சாதாரண மக்கள், ஆலயஞ் சென்று எதனைக் காண்கின்றனர்; எவ்வாறு, அதாவது புறக்கண்ணாலா மனக்கண்ணாலா, காண்கின்றனர்; அங்கு அவர்கள் பெறும் பயன் யாது; இறைசாந்நித்தியம் என்பது என்ன; அதில் ஏதாவது உண்மை உண்டா, அல்லது எல்லாம் கற்பனையும் உருவெளித் தோற்றமுமா, அதாவது வெறும் ஏமாற்றம்தானா?

என்பன போன்றவையே முறையான கேள்விகளாகுமேயன்றி, ஆலயஞ் செல்வானேன் என்ற கேள்வி இறைவனைக் காணவும் அதன் பலனாகிய ஆனந்தத்தைப் பெறவும் விரும்புவோருக்கு முறையான கேள்வியாகாது. அதனால் ஆலயங்களில் பற்றும் அவற்றைப் பயன்படுத்தும் விருப்பமும் உடையோருக்கு எழும் மேலே சொன்ன ஐயப்பாடுகளில் ஒரு சில இங்கு இயன்றவரை இனி ஆராயப்படும்.

இந்துமத ஆலயங்களில் உள்ளே செல்வோருக்கு முதலாவதாகக் காணப்படுவது அங்குள்ள பல விக்கிரகங்கள். இரண்டாவது அவற்றின் ஒழுங்குமுறை அல்லது வரிசைக்கிரமம். சைவம் அல்லது வைணவம் பற்றிய எல்லா ஆலயங்களிலும் அதே விக்கிரகங்கள் அதே முறையில் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவை இரண்டும் கண்ணுக்குப் புலப்படுவன. இனி மூன்றாவதாக உள்ளது, கண்ணுக்குப் புலப்படாத யந்திரங்கள். இவை விக்கிரகங்களின் கீழ் புதைபட்டிருப்பன. யந்திர ஸ்தாபனமில்லாத விக்கிரகங்கள் வெறுஞ் சிலைகளே யாகும். மண்டபத்தூண் முதலியவற்றில் காணப்படும் உருவங்கள், அழகுக்காக அமைந்த சிலைகளே யன்றி அவை விக்கிரகங்களாக வணங்கப்படுவதில்லை, ஆராதிக்கப்படுவதுமில்லை. நான்காவதாக, ஆலயத்துள் அர்ச்சகர் ஆராதிக்கும் முறை. ஐந்தாவதாக, அடியார்கள் வழிபடும் முறை அல்லது தெரிசன விதி. இவ்வைந்தும் சேர்ந்து சமயக் கிண்டர்கார்டனின் இலக்கணங்களாகும்.

இவற்றுள், கடவுளைக் குறிப்பதற்காக அமைந்த உருவங்களே முதலாவதான விக்கிரகங்களாம். கடவுள் என்ற சொல்லே "கட" + "உள்" எனப் பிரிந்து உள்ளத்தைக் கடந்தவர், உள் பொருள்கள் அதாவது தத்துவங்கள், தோற்றப் பொருள்கள் யாவற்றிற்கும் அப்பாற்பட்டவர், என்றே பொருள்படும். அதனால் அவர் உருவமில்லாதவர், ஒரு உருவத்திலும் அடங்காதவர் என்பது தெளிவாகும். இது நம் முன்னோர் அறியாத உண்மையல்ல. அவர்கள் நூல்களிலிருந்து ஆயிரக்கணக்கான சான்றுகளால் இதை நிலைநாட்ட முடியும். ஆனால் உருவமல்லாத ஒன்றை மனம் எங்ஙனம் எண்ண முடியும்? அதனால் அநுபூதிமான்களாகிய நம் பண்டைப் பெரியோர்கள் சாதாரண மக்களாகிய நாம்

தியானித்து உய்யும் பொருட்டுச் சில உருவங்களை ஏற்படுத்தி யுள்ளனர். உருவ வழிபாட்டை ஒப்புக் கொள்ளாதவருங்கூடக் கடவுளைப் பற்றி நினைக்க வேண்டுமானால், எங்கும் நிறைந்த ஆகாயமாகவோ, அல்லது அதற்கப்பாலிருக்கும் ஏதோ ஒருருவ-மாகவோ எண்ண முடியுமே தவிர, மனத்தை வெறுஞ் சூனிய-மாக வைத்துக்கொள்ளுதல் இயலாத காரியம். கடவுளின் குணங்குறி ஏதுமிலாத் தன்மையைப் பதிகம் பதிகமாகப் பாடி-யருளிய அநுபூதிமான்களாகிய நமது ஆழ்வார்களும் நாயன்மார்-களும், அதே பதிகங்களில் அவருக்குக் குணங்குறிகளையுங் கற்பித்திருப்பது நம் போன்ற ஆன்மாக்களின் பொருட்டேயாம்.

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"

என்பதே நம் தமிழ் மறை. வடமொழியில் "புருஷஸூக்தம்" விளக்குவதும் இக்கருத்தையே.

இன்றைய மேல்நாட்டு மனோதத்துவ சாஸ்திரிகள், காடும் மலையும் கருங்கடலும் கால்விட்டோடும் மனக்குரங்கைக் குவிய வைப்பதற்கு, அதாவது ஒருமுகப்படுத்துவதற்குக் கண்ணாடிக்-கல், கரும்புள்ளி, விளக்கொளி முதலியவற்றை உபயோகிக்கச் செய்கின்றனர். அவற்றின் மூலம் கண்ணொய்கள் பரவுவதாகவும அங்கு கூறப்படுகின்றது. ஆனால் நம்மவர், மனம் சார்ந்ததன் வண்ணமே ஆகும் என்ற இயற்கை உண்மையை அனுபவ வாயி-லாக அறிந்தோராகையால், பூவினைச் சேர்ந்த நாறும் மணம பெறுவதுபோல, இறைவனைச் சார்ந்து ஆன்மாக்களும் இன்பம் பெறும் பொருட்டுப் பொருளற்ற குறிகளை விடுத்துப் பொருள் செறிந்த இறை யுருவங்களை தியானத்துக்காக வகுத்துக் கொடுத்-தனர். ஆயினும், அந்த உருவங்கள் இயற்கையில் காணப்படாமை-யால் அவை யாவும் செயற்கை உருவங்களென்பது எளிதில் எவருக்கும் விளங்கக் கூடியதே. ஆறுமுகம், ஐந்துமுகம், யானைத்தலை முதலியவையின்றி, மனிதனைப்போல வகுக்கப்பட்ட திருவுருவங்களும் நான்கு கைகளுக்குக் குறையாதவையாய்ப் பல ஆயுதங்களை யுடையனவாயிருக்கின்றன. ஆகவே இந்த ஆலய விக்கிரகங்கள் ஆண்டவனுடைய ஐந்தொழில்களையும் அருட் குணங்களையும் விளக்கும் அறிகுறிகளாகவே நிற்கின்றனவென்பது

வெளிப்படை. "யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுரு-வாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்," என்ற அருள் வாக்கின்படி ஆலயங்களில் உருவங்களாகக் காணநிற்பவை இறைவன் அருளே யன்றி உயிரற்ற வெறுங் கற்பாவைகளல்ல.

இனி, ஆண்டவனுடைய குணங்களும் அருட் சக்திகளும் அனந்தமாகையால், ஆலய விக்கிரகங்களும் பலவாகின்றன. மொழி வழக்கிற்கு எழுத்துக்களும் அவற்றாலாகிய சொற்களும் அறிகுறிகளாவதுபோல, சமய வழக்கிற்கு விக்கிரகங்களும் அவற்றை ஒழுங்குபடுத்தி அமைக்கப்பட்ட ஆலயங்களும் அறி-குறிகளாகும். விக்கிரகங்களுக்குத் தனித்தனி யேற்பட்ட அறி-குறிப் பொருளும், ஆலய அமைப்புக்கு ஏற்பட்ட அறிகுறிப் பொருளும், வழிபடுவோர் அறிவைப் பண் படுத்துவன. இந்த அறிவின்றிய ஆலய வழிபாடு அதிகமான நற்பலனைத் தராது-போகும். இதனையே, "உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால், முறுக வாங்கிக் கடைய (இறைவன்) முன் நிற்குமே" என்றார் அப்பர் சுவாமிகளும்.

மூன்றாவதாக, வெறும் அழகுச் சிலைகளை ஆராதிக்கத்தக்க விக்கிரகங்களாக மாற்றுவது அடியிலுள்ள யந்திரங்கள் என்று மேலே சொல்லப்பட்டது. இந்த யந்திரங்கள் பெருத்த பணச்-செலவோடும் மிகுந்த மந்திரப் பிரயோகங்களோடும் ஸ்தாபிக்கப்-படுகின்றன; அதனால் அவை இறைவனுடைய பல அருள் முகூர்த்தங்களோடு இணைக்கப்படுவனவாக ஆகம சாஸ்திரங்கள் கூறுகின்றன. யந்திரங்கள் என்பன சக்தியை விளைவிக்கும் பல-விதமான கருவிகள். நீராவி யந்திரம், எண்ணெ யந்திரம், மின்-சார யந்திரம் முதலியன சக்திகளை உண்டுபண்ணி ரயில், மோட்டார், கப்பல் முதலியவற்றை நடத்துவதுபோல, ஆலய யந்திரங்கள் பலவித அருட் சக்திகளை உண்டுபண்ணி அவற்றிற்-குரிய வேலைகளை நடத்தும். அதுகாரணமாகவே வெறுந் தகடு-களில் வரையப்பட்டுள்ள கோலம் போன்ற அந்தச் சக்கரங்-களுக்கு யந்திரங்கள் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றன. யந்திரமில்லாத மோட்டார் முதலியன வேலையொன்றுஞ் செய்யா; அதுபோலவே யந்திரமில்லாத உருவங்கள் அருட்-பொழிவைக் கொடா. வெளி யந்திரங்களுக்கு எண்ணெ, தண்ணீர்,

திலக்கரி முதலியன உணவாவது போல, ஆலய யந்திரங்களுக்கு அபிஷேகங்கள், மந்திரங்கள், முத்திரைகள் முதலியவை உணவாம். எப்படி மற்ற யந்திரங்கள் உணவில்லாமல் ஓடாவோ, அவ்வாறே பூஜையில்லாத ஆலய யந்திரங்களும் வேலை செய்யாமல் கெட்டுப் போகும். ஆலயங்களில் பெறப்படும் இந்த அருட்பலனைக் கொடுப்பதே நித்திய பூஜை என்ற ஆராதனை. இந்த ஆராதனை விதிகளே அருள் நெறி, அதாவது அருள் உற்பத்தியாகும் வழி எனப்படுவது. இங்ஙனம் ஆக்கப்படும் அருளானது ஆலயத்தைச் சுற்றி நாற்புறமும் பரவி நாட்டிற்குப் பல நன்மைகளைப் பயக்கும். இந்த அறிவும் அன்பும் கலந்த உண்மையான பக்தியுடன் ஆலய தெரிசனஞ் செய்வோர் அங்குள்ள அறிகுறியினாலும் அருள் நெறியினாலும் அடையும் பலன், அனுபவம் என்னப்படும். ஆகவே, "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்பதன் உண்மையை அறிய விரும்புவோர், அறிகுறி, அருள்நெறி, அனுபவம் என மூன்று வகையாக அதன் பொருளை ஆராய்தல் அவசியமாகும்.

வெறுங்கல்லைக் கடவுளாக வணங்குகிறார்களென்று சிலர் அறியாமையாற் கூறுகின்றனர். இது அகப் பார்வைக்கும் புறப் பார்வைக்கும் வேறுபாடறியாத மக்கள் கூற்றாகும். நம் பழமொழிகளுள் ஒன்று, "கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம்," என்பது. அதாவது கல்லிற் செதுக்கப்பட்டுள்ள அழகிய நாயுருவமொன்று இருக்கின்றது. அந்த அழகில் ஈடுபடுபவனுக்கு அது கல் என்ற உணர்வு அப்போது உண்டாவதில்லை. நாயை மறந்து அதை நோக்கும்போதே அது கல்லிற் செய்யப்பட்டதென்று தோன்றும். அதனால் அது கல்லுருவமென்று அவன் அறியவில்லை யென்பதல்ல. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகச் சொல்லப்படும் திருமூலர் திருமந்திரத்திலுள்ள,

"மரத்தை மறைத்தது மாமத யானை,
மரத்தில் மறைந்தது மாமத யானை,
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்,
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம்."

என்ற பாட்டும் இதனையே விளக்கும்.

அதாவது, "மரத்தினால் ஒரு அழகிய யானை செய்யப்பட்டுள்ளது. யானையோ மரத்தையன்றி வேறொரு இடத்திலிருந்து வந்து புகுந்ததல்ல. மரம்தான் யானையாகக் காணப்படுகிறது. யானையின் அங்கங்களின் அமைப்பை நோக்குங்கால் மரம் பாவனையற்றது; என்ன மரத்தால் இது செய்யப்பட்டுள்ளது என்று கவனிக்கும்போது யானையின் பாவனை ஒழிந்தது. அதுபோல, எல்லாம் சிவமயமாய் விளங்கும்போது உலகத் தோற்றம் உண்டாவதில்லை; பிரபஞ்சம் தோன்றும்போது இறைவன் வடிவு விளங்குவதில்லை." என்று அத் திருவிருத்தம் விளக்கப்படும். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டதே ஆலய விக்கிரக வழிபாடு. உலக ரக்ஷகர்கள், குருநாதர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோர் படங்களை வைத்துப் பலர் போற்றுகின்றார்கள். அவை வெறுந் துண்டுக் காகிதங்களென்ற எண்ணத்துடனா அவற்றை மாலை சூட்டிக் கொண்டாடுகின்றார்கள். உண்மையில் அவை பொடிமடக்கக்கூட உதவாத துண்டுத்தாள்கள் தாமே. அது போன்றே ஆலயங்களில் அடியார்கள் வணங்குவது வெறுங் கல்லையல்ல, அத் திருவுருவங்களில் மறைந்துநின்று ஒளிவீசித் திகழும் இறைவனது சாந்நித்தியத்தையே. அந்த அடியார்களை ஏளனம் செய்வதை விட்டு அவர்களை வினவினாலே இந்த உண்மை எளிதில் அறியப்படும்.

விக்கிரகாராதனை வீடு கட்டுவதற்குச் சாரம் போடுவது போலாம். வீட்டு வேலை முடிந்தவுடன் சாரம் அப்புறப்படுத்தப்படும்; அதனை அப்புறப்படுத்தாமல் முடியாது. அதனால் சாரம் வீட்டு வேலைக்கு அவசியமில்லையென்பது அறிவுடைமையாகாது அவ்விதமே மன ஒருமையும் இறைவனை எங்குங் காணுந் தன்மையும் எய்தப் பெறும்போது விக்கிரகாராதனை தானே விலகிவிடும். விக்கிரகாராதனை முக்தி நெறியில் ஒரு வழியே யன்றி, அதுவே மனிதர்க்குக் குறிக்கோளல்ல.

உலகம் பலவிதம். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு உணவுப பொருள் பிடித்தமாயிருக்கும். அதுபோல ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு குணமோ தோற்றமோ கவர்ச்சி கொடுக்கும். அவ்வுண்மைக் கிணங்க ஆலயங்களில் வழிபடுவோர்க் கேற்பப் பல உருவங்களும் பல்வேறு குணக் கற்பனைகளும் வகுக்கப்பட்டுள்-

என. எனினும் அவை அனைத்தையும் அதிட்டித்து நிற்பது ஒரே இறைவன் திருவருளே. மின்சார விளக்குகள் வெளித் தோற்றத்தில் பலவிதமாயிருப்பினும் அவற்றிற்கு ஒளி கொடுக்கும் மின்சார சக்தி ஒன்றேயாம். மிட்டாய்க் கடைகளில் குரங்கு மிட்டாய், குதிரை மிட்டாய், பொம்மை மிட்டாய் என்ற பல பல உருவங்கள் காணப்படும்; குழந்தைகள் ஒவ்வொன்றையே பிரியப்பட்டு வாங்குவராயினும் கடைக்காரன் அவை யாவற்றையும் ஒரே சர்க்கரைக் கட்டியாகவே உணர்வான். விக்கிரகாராதனையைக் கண்டிப்போர் இந்த இரண்டு உண்மைகளையும் உய்த்துணர்தல் முறை.

இதுவரை கூறியவற்றிலிருந்து விக்கிரகாராதனையில் நான்கு பெரும் நோக்கங்கள் புலப்படும். அவையாவன,

1. ஓடும் மனத்தை ஒடுக்குதற்குரிய உபாயம் ஆவது.

2. விக்கிரகங்களின் அங்கங்கள், ஆயுதங்கள், வாகனங்கள், வரலாறுகள் முதலியவற்றால் இறைவனுடைய அருட்குணங்களை விளக்கி, அவற்றைத் தியானிப்பதால் அடியார்களின் அறிவையும் அன்பையும் ஒழுக்கத்தையும பண் படுத்துவது.

3. அடியிலுள்ள யந்திரங்கள் மூலம் அல்லும் பகலும் இடைவிடாது ஆன்ம சாந்தியைச் சுற்றுப் புறங்களில் பரப்புவது.

4. கும்பாபிஷேகம், பிராணப் பிரதிஷ்டை முதலிய கிரியைகளால் விக்கிரகத்தோடு இணைக்கப்பட்டிருக்கும் மூர்த்தியின் அருளையும் ஆசீர்வாதத்தையும் ஆராதனைகளின் மூலம் பூலோகத்திற் பொழியச் செய்வது; அடியார்கள் மீதும் அமோகமாகத் தோயவைப்பது.

மதப்பற்றுடைய ஒவ்வொருவரும் இவை ஒவ்வொன்றையும் பற்றிச் சிறிது விரிவாக அறிந்திருக்க வேண்டியது இன்றியமையாதது. ஏனெனில், ஆறுமுக நாவலர் தம் பால பாடத்தில் கூறுகின்றபடி, "கடவுளுடைய குணங்களையும், மகிமைகளையும், அவரை வழிபடும் முறைமையையும், அவ் வழிபாட்டாலே

பெறப்படும் பயனையும் அறியாதவர், கடவுளை வழிபட்டு உய்வது எப்படி? அவர்களுக்குத் தேவாலய முதலியவைகளினாலே பயன் யாது?"

இங்கு ஒரு எச்சரிக்கையும் கூற வேண்டுவ தாகின்றது. உணவுப் பொருளொன்று ஒத்துக்கொள்ளாதவர் அதனை ஒதுக்கிவிடுவது அறிவுடைமையே; ஆனால் ஒத்துக்கொள்பவரும் அதனை விலக்கிவிட வேண்டுமென்று அவர் வற்புறுத்துவது வெறும் அறியாமையும் மூர்க்கத்தனமுமாகும். அவ்வாறே விக்கிரகாராதனையிலும் ஆலய வழிபாட்டிலும். வீடுபேறென்ற பேரின்பப் பேறு மிகமிகச் செங்குத்தான மலையுச்சியில் சென்று சேருவது போலாம். நேரே மேலே ஏறிச்செல்ல வல்லவரும் இருக்கின்றனர். ஊன்றுகோலின்றி ஏற வல்லவரும் இருக்கின்றனர். ஆனால் பெரும்பாலான மக்கள் சரிவுகளை யொட்டி வளைந்தும் சுற்றியுமே முன்னேற வல்லவர். வழித்தங்கல், கைத்தாங்கல்களை வேண்டுபவர். அறிவோடியற்றும் ஆலய வழிபாடு அவருக்கு மிகுந்த உதவியைக் கொடுக்குமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. என்றாலும், "அவா இல்லாதாருக்கு உலகில் ஒன்றுமே இன்றியமையாததில்லை" யென்பதும் உண்மையே. அது காரணமாக, ஆணவத்தால் தம்மை உயர்த்தி மதித்து, ஆலய வழிபாட்டை இழித்துரைத்து ஒருதலைக் கொள்கையால் தம்மைத்தாமே எவரும் ஏமாற்றிக் கொள்ளற்க. "ஒருவனை வஞ்சிப்பதோரும் அவா"

பாடம் 2.

## "கிரியையென மருவுமவையாவும்—".

உயர் சமயங்கள் யாவும் கிரியா பாதம், ஞான பாதம் என இரு பெரும் பாதங்களைக்கொண்டு நடப்பன. அவற்றுள் அகத்திருந்து ஆன்ம சக்தியை விளக்குவது ஞானபாதம்; புறத்திருந்து ஆன்மாவின் ஸ்தூல சூக்ஷ்ம உடம்புகளையும் அவற்றின் மூலம் ஆன்மாவையும் பண்படுத்துவது கிரியா பாதம். அழகிய உருவங்கள், ஆபரணங்கள், பலவர்ணப் பூமாலைகள், பட்டாடைகள், தூப தீபங்கள், சரவிளக்குகள், மேளதாளங்கள், இன்னிசை மணியோசைகள் முதலியவை மூலம், கண்டு கேட்டுண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனுக்கும் ஆனந்த உணர்ச்சியை ஊட்டி, பக்திப் பரவசத்தைப் பெருக்கி, யான் எனதென்னும் செருக்கை அறுக்க முயல்வதே கிரியைகள் ஆன்மாக்களுக்குச் செய்யும் உதவி. அதனாலேயே,

> "கிரியையென மருவுமவை யாவும் ஞானம்
> கிடைத்தற்கு நிமித்தம்........."

என்று உமாபதி சிவாச்சாரியார் தம்முடைய சிவப்பிரகாசம் என்னும் நூலில் கூறியுள்ளனர். உமாபதி சிவம் தில்லை வாழந்தணருள் ஒருவர்; பொன்னம்பலத்து ஆனந்தக் கூத்தனின் கோயில் அர்ச்சகர்; கிரியா முறைகளில் சித்தி பெற்றவர், அதனால் பல அற்புதங்களை இயற்றியவர்; ஞானமுறையிலும் உச்ச நிலை பெற்றவர்; சைவ சமய சந்தானாசாரியர் நால்வருள் ஒருவர்; பல ஞான நூல்களை இயற்றியவர்; அநுபூதிமான். அவர் கூறியுள்ளதே "ஞானத்திற்கு நிமித்தம் கிரியை, கிரியைகள் பலனற்ற விளையாட்டுகளென்பதல்ல" என்பதாம்.

தியஸாபிக்கல் சங்கத்து சித்த புருஷருள் ஒருவரும், பல கிரியா முறைகளில் பங்கு கொண்டு அவற்றாலேற்படும் சூக்ஷ்ம பலன்களைத் தம் யோகக்கண்ணால் இருபத்தைந்தாண்டுகளாக மேனாட்டு முறையில் ஆராய்ச்சி செய்து பல நூல்களாக உலகுக்கு உதவியுள்ள உத்தமருமானவர் வங்கப்பணி முனிவர், என்ற பிஷப் C. W. லெட்பீற்றர் துரைமகன். அவரும், "கிரியைகளுடைய

போது நோக்கம், மேலுலகங்களிலுள்ள அருட் சக்திகளை பூலோ-கத்திற்கு இறக்கி, அங்குள்ள உயிர்களிடம் அவை எளிதில் சாரக்கூடிய முறையில் அவற்றைப் பக்குவப்படுத்தி உலகிற் பரப்புதலாம்," என்றே கூறுகின்றனர்.

மேற்படி சங்கத்தின் தலைவராய், சமீபத்தில் வாழ்ந்து மறைந்த மற்றொரு சித்த புருஷர் அன்னை வசந்தம்மையார் (Dr. Annie Besant) ஆவர். அவர் யோக விஞ்ஞான ஆராய்ச்சிகளில் வங்கப்பணி முனிவருக்கு வலக்கையாயிருந்தவர். மாபெரும் ஆத்ம ஞானி. அவரும, "சமயக் கிரியைகள் உபயோகமுடையனவாம்; அவற்றால் மிகுந்த உதவிபெற முடியும். அவற்றின் உதவிக்கு நாம் நன்றி செலுத்த வேண்டியவர்களே. ஆனால் அந்த உதவி நம்மில் நன்கு தோய்ந்து, நமது உட்பலத்தை உபயோகிக்கச் செய்து நம்மைத் திருந்தச் செய்தாலே, உண்மை முன்னேற்றம் உண்டாகும். அல்லாதபோது அக்கிரியைகள வெறும் மூடக்கொள்கைகளாய் விடும்." என்றே கூறியுள்ளனர். இவ்வுண்மையினாலேயே, கிரியைகள் ஞானத்திற்கு நிமித்தமென ஆகம நூல்கள் கூறுவதாகத் தெரிகிறது. இவ்விதம ஞான நிமித்தமாக உபயோகிக்கப்படாதபோது அவை பந்தங்களாய் மூடக்கொள்கைகளாய்விடுமென்பதும உண்மையாம். இவ்வுண்மை பெரும்பாலும் இன்றைய சாதாரண அனுபவம்.

தியஸாபிக்கல் சங்கத்து மூன்றாவது தலைவராக இருந்து சமீபத்தில் காலஞ்சென்ற டாக்டர் அருண்டேல் துரையவர்கள் தம் சுய அனுபவத்தை யொட்டி "குண்டலினியை எழுப்புதல்" என்றோர் நூல் எழுதி யிருக்கின்றனர். அங்கு அவர்,

"குண்டலினியை எழுப்புவதுபோன்ற வேலைகளில் சமயக்-கிரியைகள் மிகுந்த விலையுள்ளன. அவை ரயில்ப் பாதைக்குத் தண்டவாளங்கள் அமைப்பது போலாம். நன்கு அமைக்கப்பட்ட தண்டவாளங்களில் குண்டலினி ரயில் உறுதியாகவும் அதிக ஆபத்தின்றியும் பயணஞ்செய்யும். சமயக்கிரியைகளெல்லாம் குண்டலினிக்கு மாத்திரம் அல்ல, மற்றும் பல அருட் சக்தி-களுக்கும் வாய்க்காலாகும். சமயக்கிரியைகள் மனிதனுடைய பல உடம்புகளையும் பண்படுத்தி ஒற்றுமைப் படுத்துவன,

இக்கிரியைகள் இன்றியமையாதனவல்ல, ஆனால் மிகுந்த உதவி செய்யக்கூடியவை; என்னெனில் அவை தாமாகவே வேலை செய்பவை.'' என்று கூறியுள்ளனர். இவர் குண்டலினியைக் கையாளுவதற்கு உதவியாகக் கிறிஸ்தவக் கிரியைகளில் அத்தியக்ஷகர் அபிஷேகம் (Bishop Ordination) இவருக்குச் செய்யப்பட்டது. இது சைவாகம முறையில் ஆச்சாரியாபிஷேகத்துக்குச் சமானமானது. இச்கிரியையால் அவர் மிகுந்த உதவிபெற்றதாகக் கூறப்படுகின்றது. இக்கிரியைகளுடன் நல்லொழுக்கமும் இணைக்கப்படவேண்டுமென்பதை அவர் அடிக்கடி வற்புறுத்துகின்றனர். அல்லாதபோது நற்பலனுக்கும் மேலாகத் தீயபலன் ஏற்படுவது திண்ணமாம்.

சமயக் கிரியைகளால் தனிமனிதனுக் கேற்படும் பலன்களே இதுவரை கூறப்பட்டன. இவையன்றி நாட்டுக்கும் இருவகையான நன்மைகள் இவற்றால் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது; அதாவது, இக்கிரியைகள் புவர்லோக சுவர்லோக சம்பந்தமான சுகாதார இலாக்கா போன்றவைகளாம். நம் நாடு நகரங்களில், தெருக்கூட்டுதல், மல மூத்திரங்களை அப்புறப்படுத்துதல் முதலான துப்புரவு வேலைகளால், தொத்து வியாதிகள் ஒருவாறு தடுக்கப்படுகின்றன; குடி தண்ணீர், காற்றோட்டம் முதலிய ஆக்க வேலைகளால், ஆயுள் விருத்தி செய்யப்படுகின்றது. அம்மாதிரியே நம்மைச் சுற்றியுள்ள புவர்லோக சுவர்லோகங்களில், நமது சுயநல எண்ணங்களும இச்சைகளும் உருவங்களாய்த் திரண்டு சிதறி, மக்கள் மனத்திலும் இசையிலும் பல வகையான தொத்து நோய்களை உண்டு பண்ணின வண்ணமாகவேயிருக்கின்றனவென்று யோகக் காட்சியர் கூறுகின்றனர். உலகில் அடிக்கடி காணப்படும் கொடும்போர்களுக்கும் கோர யுத்தங்களுக்கும், நாடெங்கும் இடைவிடாது நடைபெறும் ஓயாத சண்டை சச்சரவுகளுக்கும், இந்த சூட்சுமத் தொற்று வியாதிகளே காரணமாம். தொரட்டி போன்ற கொக்கிகளைக்கொண்ட இச்சுய நல உருவப் படங்களை, இந்நூலின் முதற் பாகத்தில் காண்க. அவை, மக்களுடைய சூட்சும உடம்புகளில் அட்டைபோல ஒட்டிக்கொண்டு வேலைசெய்து மனோ வியாதிகளைப் பரப்பும் முறையும் அங்கு விளக்கப்பட்டுள்ளது. ஆலயக்கிரியைகளாலாகும் அருட் சக்திகள் இந்த உருவங்களைத் தகர்த்தெறிந்து,

சூட்சும உலக ஆகாயத்தை ஒருவாறு சுத்தப்படுத்தி அவ்வுல-கிலும் இவ்வுலகிலும் உள்ள இடைஞ்சல்களைக் கூடியவரை குறைக்கின்றனவாம். அத்துடன் சாந்த அலைகளை எங்கும் பரப்பி அனுகூலமும் செய்கின்றனவாம். அக்காரணம் பற்றியே ஆலயங்கள் ஊரின் நடுவே அமைக்கப்படுவனவாம். ஆறுகாலப் பூஜையின் முக்கிய நோக்கமும் அதுவேயாம்.

சமயக் கிரியைகள் பொதுவாக ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகைப்படும். ஆன்மார்த்தமாவது தனிப்பட்ட மனித-னுடைய நன்மையைக் கோரிச் செய்யப்படும் கிரியைகள்-அவை கருவுற்ற நாள் முதல் கருமாதி அடியந்தரம் வரை பல மதங்களில் பல பல விதங்களாக நடைபெறுவன. பரார்த்த-மாவது உலக நன்மையை உத்தேசித்துச் செய்யப்படுவது. இவை ஆலயங்களில் நடைபெறும் நித்திய நைமித்திகங்களாம். படித்தரமாக அன்றாடம் நடைபெறும் ஆறுகாலப் பூஜைகள் நித்தியம் எனப்படும். சிறப்பாக அவ்வப்போது நடைபெறும் திருவிழாக்-கள் யாவும் நைமித்திகங்களாம். ஆன்மார்த்தமுறை கிணற்று நீரைக் கைவாளி கொண்டு அவரவர் வீட்டுக்கு இறைப்பது போல்வது. மலை வெள்ளத்தை அணைகட்டித் தேக்கி ஊரெங்கும் பரப்புவது போல்வது பரார்த்தமுறை ஆலய அமைப்பு, ஆராதனை அல்லது பூஜை, தெரிசனமுறை என்ற மூன்றில், ஆராதனையே அருள் வழங்கும கருவியாகையால் அதுவே ஆலயங்களுக்கு உயிராவது. ஆகம முறைபபடி ஆராதனை நடை-பெறாத ஆலயங்கள் ஆபத்துக்கிடமானவை யென்று எச்சரிக்கப் படுகின்றது. ஆகம நூல்களிற் கூறப்பட்டுள்ளதைத் தவிர திருமந்திரத்திலும்,

> " ஆற்றரும் நோய்மிகும் ; அவனி மழைகுன்றிப்
> போற்றரும் மன்னரும் போர்வலி குன்றுவர் ;
> கூற்றுதைத் தான்திருக் கோயில்கள் ஆனவை
> சாற்றிய பூஜைகள் தப்பிடில் தானே.
>
> முன்னவ னார்கோயில் பூஜைகள் முட்டினின்,
> மன்னர்க்குத் தீங்குள ; வாரி வளங்குன்றும் ;
> கன்னம் களவு மிகுத்திடும் காசினிக்கு
> என்னருள் நந்தி எடுத்துரைத் தானே."

என்ற திருமூலர் திருவாக்காலும் அவ்வுண்மை தெளியப்படும். "தப்பிடில்" என்பது பூஜை செய்யாது தப்புதலும், தப்பான முறையிற் செய்தலுமாம். திருமந்திரம் செந்தமிழ் நாட்டுப் பதினெண் சித்தர்களுள் ஒருவராகிய திருமூல நாயனர் அருளியுள்ள பிரமாண யோக நூல். அதனால், செய்வன திருந்தச் செய்ய விரும்புவோர் முதலாவதாக ஆராதனையைப்பற்றி நன்கறிவது ஆவசியமாகும். அதாவது இந்தப் பரார்த்த முறைகள் என்னவேலை செய்கின்றன, எவ்விதம் வேலை செய்கின்றன, என்பதைப் பொதுப்படையாகவாவது அறியாமல், ஆலய வழிபாட்டின் முழுப்பலனை நாம் பெற முடியாது. முழுப்பலன் எய்தப்பெறுததோடன்றி, மேலே சொல்லியபடி எதிரிடையான பலனும் ஏற்படக்கூடும். அதுவே குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்வதென்பது.

அருள்மாரி பொழியும் சூத்திரக் கருவிகளாகிய இந்தப் பரார்த்த பூஜை முறைகள் இந்து மதத்திற்கு மாத்திரம் உரியனவல்ல. இன்று இவை முக்கியமாய் நடைபெறும நிலையங்கள் (1) இந்து மத ஆலயங்கள், (2) கிறிஸ்தவ ஆலயங்கள் (3) சுதந்தரச் சிற்ப ஆலயங்கள் (Freemasonic Temples) என்ற மூன்றுமாம். பண்டைய எகிப்தியர், பாபிலோனியர், கிரேக்கர், ரோமர், கால்டியர், அக்காடியர் முதலிய நாகரீக மக்களுக்கிடையே வேறு வேறு பரார்த்த முறைகள் முற்காலங்களில் செழித்திருந்து இபபோது மாண்டுபோய் விட்டன. இன்று பாழடைந்து கிடக்கும் அவர்கள் ஆலயங்கள் இப்போது உலக அதிசயங்களாக விளங்குகின்றன. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எகிப்து தேசம் மிக மிக உன்னத நாகரிகத்திலிருந்த காலத்தில், அங்கு செழித்து வாழ்ந்த ஒரு இரகசியக் கிரியையின் பகுதி யொன்றே இன்றைய சுதந்தரச் சிற்பமுறையாகும்.

மேலே சொன்னவற்றுள், கிறிஸ்தவ ஆராதனையும் சுதந்தரச் சிற்ப விதானமும் இந்து மதத்தில் பாரத சமாஜப் பூஜையும் நெற்றிக்கண் திறந்த ஆங்கில ஞானியராகிய வங்கப்பணி முனிவரால் தற்கால விஞ்ஞான முறைப்படி மிக மிக நுணுக்க-

மாக ஆராயப்பட்டுப் பல படங்களோடு கூடிய நூல்களாக வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்து பரார்த்த பூஜை-யின் அமைப்பு, அதன் இன்றியமையாத அங்கங்கள், அவ்வங்-கங்களாலாகும் பலன்கள் முதலிய பல மறைபொருள்கள் நன்கு தெரிய வருகின்றன. அந்த அங்கங்கள் பலவும் நம்முடைய ஆலய முறைகளிலும் அமைந்திருப்பதால் அம்முறைகளையும் விளக்க அப்பெரியாரது ஆராய்ச்சிகள் பெரிதும் துணைபுரிகின்றன. அவற்றின்மூலம் இந்த அருள் நெறியை நுணுக்கமாக ஆராயுமுன் இங்கு அருள் என்னப்படுவது யாது என்று அறிவது பொருத்த முடையது.

பாடம் 3.

## "அவனருளே கண்ணாகக் காணினல்லால்."

"அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை," என்பது இறைவனுக்கு அருள்வள்ளலார் வழங்கிய பெயர். "இறையருள்" என்னும்போது இறைவனுடைய கருணையே யாவருக்கும் நினைவுக்கு வரும். அது இறைவனுடைய தயை, மன்னுயிர்மீது அவர் காட்டும அன்பு. அந்தப் பொருளில், அருள் என்பது இறைவனுடைய உயிர், என்றால் தவறாகாது.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்,
அன்பே சிவமாவ தாருமறிகிலார்."

என்பர் திருமூல நாயனார். ஆனால் இப்பாடத்தில் அருள் என்று குறிப்பிடப்படுவது இறைவன் கருணையல்ல, அந்த அளவற்ற கருணையை சப்த உலகங்களிலும் காரியப்படுத்தும் அருட்சக்திகளாம். இறைவன் தன் அருளையும் உயிரையும் ஒளியையும் அண்டம் முழுவதிலுமே ஓயாது பரப்பிக் கொண்டிருக்கின்றனன். அதன் பலனாக ஒவ்வொரு உலகிலும் கணக்கற்ற சக்திகள் ஓய்வு-ஒழிவின்றி வேலை செய்து கொண்டிருக்கின்றன. அவற்றாலேயே அண்டங்களும் உயிர்களும் ஆன்மாக்களும் தொழிற்படுகின்றன வென்பர் ஆன்றோர்.

நமக்குப் புலப்படும் இந்த பூலோகமானது பலவிதமான சக்திகளால் ஆகியுள்ளது, பலவிதமான சக்திகளால் நடைபெறுகின்றது, என்பது தற்கால பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியின் முடிபு. இந்த சக்திகள் அனைத்தும் இறைவனிடமிருந்து வெளி வருகின்றன, என்பது இந்து மதக் கொள்கை. இந்த சக்திகள் தொழிற்படுவதால் பூலோக அணுக்கள் பலவிதமான சலனங்களையும் அலைகளையும் அடைகின்றன. அந்த அலைகள் மனிதனைத் தாக்கும்போது அவனுக்குச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புல உணர்ச்சிகளும் அவற்றின் மூலம் பலவித இன்ப துன்ப அனுபவங்களும் ஏற்படுகின்றன. இவ்வுண்மை இன்று யாவரும் அறிந்ததே. ஆனால் இதுபோன்ற நிகழ்ச்சிகள் மேலுலகங்களிலும் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டிருக்-

கின்றன வென்பதை நம்மில் பெரும்பாலோர் அறிவதில்லை. பூலோகமானது திண்ணிய, மிகத்தடித்த பருப்பொருள்கள் அல்லது தத்துவங்களாலாகியது; மேலுலகங்கள் படிப்படியாக மிக மிக நுண்ணிய தத்துவங்கள், பொருள்களாலாக்கப்பட்டிருக்கின்றன. அதனுல் பூலோகத்தில் ஏற்படும் அலைகளும் சலனங்களும் திண்ணியனவாகவும், அவற்ருலாகும் அனுபவங்கள் கீழ்த்தரமாய்த் தாழ்ந்தவைகளாய் மனக் கொந்தளிப்பைக் கொடுப்பனவாயு மிருக்கும். மேலுலக அலைகள் நுண்ணியவைகளாகவும், அனுபவங்களும் மிக நுட்பமானவை யாகவும், மன அமைதியையும் சாந்தியையும் இன்பத்தையும் தருவனவாயுமிருக்கும். பூலோக அலைகள் துன்பங்கூடுதலும் இன்பங் குறைவுங் கொடுப்பனவாக இருக்கும். புவர்லோக அலைகள் படிப்படியாகத் துன்பத்தைக் குறைத்துக்கொண்டேபோய், உயர் படிகளில் இன்ப துன்பங்கள் இரண்டினையும் ஒப்பக் கொடுப்பன. சுவர்க்கலோக அலைகள் துன்ப உணர்ச்சியை மேலும் ஒழித்து இன்பத்தையே பெரிதும் தரவல்லன ; ஆயினும் அவ்வின்பங்கள் நல்வினைப் பயன்களைச் சார்ந்து நம்மை விட்டு நீங்கக்கூடிய இயல்புடையன வாகையால், அங்ஙனம் நீங்குந் தருணத்து ஆன்மாக்களுக்குத் துன்பந் தோன்ருமலிராது. சுவர்க்கலோகத்திற்கு மேற்பட்ட உலகங்களில் நடைபெறும் அலைகளும் சலனங்களும் நீங்காத இன்பத்தையும் சாந்தத்தையுமே தருவன. அதனுல் அங்கு இயங்கும் சக்திகள் அருட் சக்திகள் என்றழைக்கப்படுகின்றன. இந்த இன்ப துன்பப் பலன் ஏற்றக் குறைவை நோக்கியே, பூலோக புவர்லோகங்கள் அசுத்தமாயை என்றும், சுவர்க்கலோகம் சுத்தாசுத்த மாயை என்றும், அதற்கு மேற்பட்ட உலகங்கள் சுத்தமாயை என்றும் சாஸ்திரங்களிற் சொல்லப்படுகின்றன. எவ்வுலக சக்தியாயினும் சரி; மனத்திற்கு சாந்தியையும் மனிதனுக்குத் துன்பங்கலவாத இன்பத்தையும் கொடுக்கவல்லவை யாவும் அருட் சக்திகளே.

இந்த அருட் சக்திகளும், மின்சாரம் காந்தம் சூரிய உஷ்ணம் ஆகர்ஷணம் முதலிய இயற்கைச் சக்திகள் போன்றவையே; ஆனுல் அவற்றைவிட மிக நுட்பமான அலைகளால் மேலுலகங்களில் வேலை செய்வனவாம். மேலுலகங்கள் என்பன ஏதோ

சூரியனை ஒட்டியோ நட்சத்திரங்களை ஒட்டியோ தொலைவில் இருப்பனவல்ல; நாம் இருக்கும் இடத்திலேயே நம்மைச்சுற்றியே இருக்கின்றன. அவற்றைப்பற்றி இந்நூலின் முதற் பாகத்தில் கண்டு கொள்க. சக்திகள் எவையும் கண்ணுக்குப் புலப்படுவன-வல்ல, அவை இவ்வுலகத்தவாயினும் சரி, மேலுலகத்தவாயினுஞ்-சரியே. அவற்றின் உண்மையும் தன்மையும் அவை செய்யும் வேலைகளிலிருந்தே அறியக் கிடப்பன. அருட் சக்திகளும் கண்ணுக்குப் புலப்படாவாயினும் அவற்றின் பலன்கள் அனு-பவத்தால் அறியக்கூடியனவே. பூலோக சக்திகள் மனிதனுடைய ஸ்தூல உடம்பில் வேலை செய்வதுபோல மேலுலக சக்திகள் மனிதன் மனத்திலும் இச்சையிலும் உணர்ச்சியிலும் வேலை செய்வன. பூலோக சக்திகளைப்போலவே இவையும் அளந்து நிர்ணயிக்கப்படக் கூடியவையே. மின்சார சக்தியின் தன்மையை அறிந்தவர்கள் அதனை எவ்விதம் அளக்கக் கூடுமென்று ஐயுறுவர். ஆயினும் மின்சார விளக்குள்ள வீடுகளில் அங்கு உபயோகப்படும் சக்தியை அளந்து கணக்கெடுப்பதும் அதற்கு விலை வாங்குவதும் நாம் நன்கறிந்ததே. அவ்விதமே இந்த அருட் சக்திகளும் அவ்வவற்றிற்குரிய அளவு கருவிகளால் மிகத் துல்லியமாக அளக்கத்தக்கன.

இவற்றுள், ஒவ்வொரு உலகப் பொருளின் திட்ப நுட்பங்-கள், அல்லது தடிப்பு மென்மைகளுக் கேற்றவாறு அமைந்துள்ள சக்திகள், அந்தந்த உலகங்களிலேயே வேலை செய்வதன்றி அவற்றினின்றும் கீழுலகங்களுக்குத் தாமாக இறங்குவதில்லை. ஏனெனில், திண்ணிய முரட்டு அலைகளால் இயக்கப்படும் கீழுலக தத்துவங்களாகிய பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயங்களில், மேலுலக நுண்ணிய அலைகள் தொழிற்பட மாட்டா. அது சடம்புக்கயிற்றில் வீணைத்தந்தியின் நாதத்தை உண்டுபண்ண இயலாதது போலாம். ஆயினும் சில சில ஏற்பாடுகளால், அதாவது அவற்றிற்கு இசைவான பண்பையுடைய அலைகளைத் தற்காலிகமாகக் கீழுலகங்களில் உண்டுபண்ண நேரிடும்பொழுது, மேலுலகங்களுக்கமைந்த அருட் சக்திகளும் அவற்றாலாகும் சாந்தமும் இன்பமும் ஒரு அளவிற்குக் கீழுலகங்களுக்குக் கொண்டு வரப்பட்டு, அங்கு அற்புதமான பலன்களை விளைக்கச்

செய்யலாகும். அது கீழ்சுருதித் தந்திகளை மேல்ஸ்தாயி சுருதிக்குத் தற்காலிகமாகக் குறுக்கிப் பிடிப்பது போலாம்.

மனிதனுடைய எண்ணங்களும் இச்சைகளும் சுயநலங் கொண்டவையா யிருக்கும்பொழுது, அவை கொக்கி போன்ற உருவெடுத்து, எங்கெங்கு சுற்றித் திரிந்த போதிலும் திரும்பவும் அவனவனையே வந்து பற்றிப் பலன் கொடுக்கும். ஆனால் அவை சிறிதும் தன்னலப்பற்றின்றி யிருக்குமாயின், அவற்றாலாகும் சக்திகள் அவனை நோக்கித் திரும்பாமல், இறைவன் திருவடியை நோக்கி மேலுலகங்களிலேறிச் செல்லும். அதனால் மேலுலக அலைகளுக்கு இயைபுடையனவாக பூலோகத்திலிருந்து மேலுல-கங்களை இணைத்து ஒரு குழாய் ஏற்பட, அதன் மூலம் அங்குள்ள அருள் தடையின்றி உலகிற் கிறங்கி உதவி செய்யும். (முதற்பாகம் பக்திப்படம் பார்க்க.) இந்நிகழ்ச்சி உயரத்திலிருக்கும் நீர்த்-தொட்டியிலிருந்து குழாய் வழியாகத் தண்ணீர் தரையில் இறங்குவது போலாம். குழாயைத் திறக்கும்போது மேலிருக்கும் தொட்டிநீர் கீழ்நோக்கி இறங்கக் காத்திருப்பது போலவே, அருட் சக்திகளும் வழி வாய்க்கால் அமையும்போது எளிதில் கீழுலகிற்கிறங்கி அங்குள்ள உயிர்கள் மீது சாரும். அதனால், இவ்வருளிறக்கத்திற்குக் கருவியாயிருப்பவன் தானும் ஆன்ம-லாபம் அடைவதோடு, தன்னைச் சுற்றியுள்ளோருக்கும் சுற்றுப்-புறங்களுக்கும் ஒரு அனுக்கிரக யந்திரமாக இருப்பான். இக்கருவிகள் உண்மை ஞானிகளும் முத்தர்களும் உத்தம பக்தர்களுமாக இருப்பரேல், அவர்கள் காரணமாக இறங்கும் அருளும் அமோகமாக விருக்கும்.

பிண்டத்திலுள்ளது அண்டத்தில். கீழுள்ளது போலவே மேலேயும். அதனால் பூலோக சக்திகளைப் போன்றே மேலுலக சக்திகளும் இயற்கை விதிகளை அனுசரித்தே நடப்பன. மின்சார வசதியுள்ள வீட்டில் ஒரு விளக்கை மாத்திரம் ஏற்றும்போது, அதற்குரிய சக்தி மாத்திரம் கீழிறங்கும்; வெளிச்சமும் குறை-வாகவே இருக்கும். பல விளக்குகளை யேற்றும்போது சக்தியும் கூடுதலாக இறங்குவதோடு, ஒளியும் சூரியப் பிரகாசம்போல வீசும். அதுபோலவே பலர்கூடி உண்மையான பக்தி செலுத்-தும்போது, அங்கு ஏற்படும் குழாயிணைப்பும் மிகுந்த பரப்-

புடையதாய், அருளிறக்கமும் அளவிற் கூடுதலாக விருக்கும். இதுவே கூட்டு வழிபாட்டாலாகும் (Congregational Worship) பேரனுகூலம்.

இனி, இவ்வுலகத்து நிலவும் பலவேறு சக்திகளை இயக்குவது இவ்வுலக வாசிகளாகிய மனிதருக்கு எளிதாயிருப்பது போலவே, மேலுலக சக்திகளை அவ்வுலக வாசிகளாகிய தேவர்கள் எளிதில் இயக்கவல்லவர். அது காரணமாக அவருடைய ஒத்துழைப்பு இந்த அருட் பொழிவிற்கு இன்றியமையாததா யிருப்பதால், அந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டே ஆலயக் கிரியைகள் நெற்றிக்கண் திறந்த ஆன்றோரால் அமைக்கப்பட்டுள்ளன. தேவர்கள் பூமாரி பொழியும் செய்திகள் நமது சமய நூல்களில் அடிக்கடி காணப்படுவன. அது ஸ்தூல பூக்களைக் கொண்டல்ல. அவர்கள் இறைவனை நோக்கிப் பெய்யும் அன்பு மாரியும் பக்தி மாரியும், மக்கள் மீது பொழியும் அருள் மாரியும், வானவில் நிறங்களைக்கொண்ட சூரியப்பிரகாசமான பல பல அழகிய மலர்போன்ற உருவங்களாகவே மக்கள் மீது வந்து படிகின்றன. அவற்றுட் சிலவற்றை வங்கப்பணி முனிவர் எழுதியுள்ள "நினைவுருவங்கள்" ("Thought Forms" By C. W. L.) என்ற நூலிற் காண்க. இந்நூலின் முதற் பாகத்திலும் பக்தி, அன்பு மலர்கள் ஒன்றிரண்டு படங்கள் காணப்படும். இந்த அருட் பூமாரி பொழிவது தேவர்களுக்கு எளிதான ஒரு வேலை, அவர்கள் மிகமிக விரும்பிச் செய்யும் வேலையுமாம். அதனாலேயே எல்லா அருட் கிரியைகளிலும் அவர்கள் ஆவாகனஞ்செய்து அழைக்கப்படுகிறார்கள்.

பாடம் 4.

## தேவ வர்க்கம்.

உலகில் வாழ்ந்து வரும் பல பல உயிர் வர்க்கங்களில் தேவ வர்க்கமும் ஒன்று. அது சாதாரணமாக நமது ஊனக்கண்ணுக்குப் புலப்படாததாயினும், பல துறைகளில் நம் மானிட வர்க்கத்தோடு நெருங்கிய தொடர்புடையதாகும். இதனை நன்கறிந்திருந்த பண்டையோர், அவரவர் சமய நூல்களிலும் புராணங்களிலும் தேவர்களைப் பற்றிப் பல பல செய்திகள் கூறியிருக்கின்றனர். மேனாட்டிலிருந்து வந்த கிறிஸ்தவர்கள் தங்கள் சமய நூலைத் தமிழில் எழுதியபோது, கடவுளுக்கு "தேவன்" என்ற சொல்லை உபயோகித்தனர். அதிலிருந்து, இந்து மதத்தில் தேவ வர்க்கத்தின் தொகையாகச் சொல்லப்படும் முப்பத்து முக்கோடி தேவர்களையும் கடவுளராகவே திரித்துப் பொருள் கொண்டு, அந்த அன்னியர் இந்துமதக் கொள்கைகளை இழித்தும் பழித்தும் கூறியும் எழுதியும் வருகின்றனர். நாம் கடவுளை "தேவாதி தேவ" னென்று அழைப்பதையும், அவர்கள் மதத்துக் கூறப்பட்டுள்ள ஏஞ்சல்களே (Angels) நமது தேவர்கள் என்பதையும் அவர்கள் அறியாது போயினர். அதனால், பெரும்பாலும் அந்த அன்னிய நாகரிகத்தின் பலனாக, இன்றைய உலகில் இருவகையான மக்கள் சாதாரணமாகக் காணப்படுகின்றனர். அவருள், "கண்டதே காட்சி கொண்டதே கோலம், உண்டதே போகம் உகந்ததே வாழ்வு" என்ற கொள்கையர் ஒரு பெருங் கூட்டத்தினர். அவர்கள் வேறெவரையும் நம்புவதில்லை; தம் புலன்களையே ஆதாரமாகக் கொள்பவர்கள். தம் தம் மெய் வாய் கண் மூக்கு செவிகளே அவர்களுக்குப் பிரமாணம். அவை உண்மைகளைத் திரித்துக் காட்ட வல்லனவென்பதை அவர்கள் உணர்வதில்லை. அவர்களோடு வாதம் புரிவதோ அவர்களுடைய கொள்கைகளைப் பலவந்தமாக மாற்றி யமைப்பதோ இந்நூலின் நோக்கமல்ல, அதற்குரிய அவகாசமும் இங்கில்லை. இயற்கையில் நடைபெறும் விகாசமுறையின் பலனாக, இன்னுஞ் சில நூற்றாண்டுகளில் மக்கள் பலருக்கு நெற்றிக்கண் பார்வை ஏற்படுமாகையால், இந்நூலிற் காணப்படும் உண்மைகளையும் இவைபோன்ற வேறு

பல மறைபொருள்களையும் தர்க்கத்திற் கிடமின்றித் தமக்குத்-தாமே அவர்கள் கண்டு கொள்வார்கள். அதுவரை, இங்கு கூறப்படுபவை ஆலய வழிபாட்டில் நம்பிக்கையுடைய மக்களுக்கு மாத்திரமே. இங்கு கூறப்படுவன வெல்லாம், யோக சித்தராகிய வங்கப்பணி முனிவர் தேவகணங்களைப் பற்றித் தம் நெற்றிக் கண்ணுல் கண்டு வெளியிட்டுள்ளவற்றுள், ஆலயக் கிரியைகளை அறிவதற்கு வேண்டிய சில குறிப்புக்களே யாகும்.

மக்கள் இனம், அதாவது மனிதவர்க்கமும், தேவர் இனம், அல்லது தேவவர்க்கமும் வெவ்வேறு விகாச முறைகளைச் சேர்ந்தவை; இரண்டும் ஒரே விகாசமுறையல்ல. இந்த பூலோ-கத்திலேயே பலவேறு விகாசமுறைகள் ஏககாலத்தில் நடைபெறு கின்றன; அவற்றுள் ஒன்றே மானிடரைக்கொண்ட முறை. அந்த மானிடத் தொகுதியும் எண்ணிக்கையில் முதன்மையான-தென்று சொல்வதற்கில்லை. கீழே காட்டியிருக்கும் விகாச-முறைக் கட்டத்திலிருந்து பூலோக மக்கள் நிலத்தில் மாத்திரமே, அந்நிலத்திலும் மிகச் சிறு பாகத்தில் மாத்திரமே வசித்துக் கொண்டிருக்கவும், மற்று தேவ பூதகணங்கள் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயமெங்கும் இடையீடின்றி நிறைந்திருப்பது காணப்-படும். இரண்டாவது, தேவவர்க்கம் பொதுவாக மனிதராய் இருந்திருப்பதுமில்லை, இருக்கப்போவதுமில்லை யென்பதும், இந்த இரண்டு வர்க்கங்களும் இருப்புப் பாதைத் தண்டவாளங்கள் போல ஒன்றை யொன்று ஒட்டாமலே முத்தி நிலைவரை மேலேறுகின்றன வென்பதும் அந்த அட்டவணையிலிருந்து அறியலாகும்.

**குறிப்புகள்:** (1) அட்டவணையில் பெயர்களை ஒட்டி இங்ஙனம் (—) பிறைக்குறிக்குள் காட்டப்பட்டிருக்கும் உடம்புகளே அவ-ரவருடைய மிகத்தணிந்த உடம்புகள். அவற்றிற்கு மேற்பட்ட உலகங்களுக்குரிய உடம்புகளேயன்றிக் கீழ்ப்பட்ட உடம்புகள் அவர்களுக்குக் கிடையா. அவர் தங்கும் உலகங்களும் அவ்வாறே.

(2) உயிர்கள் தனிப்பட்ட ஆன்மாக்களாகும் பருவம் காரண உடம்பு ஏற்படும் நிலைமை. அப்பக்குவ நிலைக்குப் பின்னரே உயிர்கள் மனிதர், தேவர் எனப்பெயர் பெறுகின்றன.

அவற்றிற்குப் பகுத்தறிவும் ஆன்ம நிலையும் ஏற்படுகின்றன. இதற்குக் கீழ்நிலையிலுள்ள பிராணிகள் உயிர்கள், ஆவிகள் என்றழைக்கப்படுவது முறை. அவற்றிற்குக் காரண உடம்பு கிடையாது. நன்மை தீமைபற்றிய பகுத்தறிவு கிடையாது. பசி, உறக்கம்போன்ற உடம்பின் தேவைகளும், விருப்பு வெறுப்பாகிய இச்சை யுணர்ச்சிகளும் மாத்திரமே அவை அனுபவிப்பன. அழகு, அன்பு போன்ற அருவ எண்ணங்கள் அவற்றின் மனத்திற் கெட்டா; வீடு மரம் போன்ற உருவ எண்ணங்களே அவை நினைக்கற்பாலன, இவற்றின் விரிவையும் விளக்கத்தையும், இந்த இன ஆன்மா அல்லது கூட்டான்மா என்பவற்றின் குண குணங்களையும், "அண்டத்திலுள்ளது பிண்டத்தில்," என்ற இந்நூலின் முதற் பாகத்தில் கண்டுகொள்க.

பாடம் 5.

## தேவவர்க்கம் — பூதகணங்கள்.

தேவ வர்க்கத்திலுள்ள உயிர் வகைகள், அடிப்படியிலிருந்து ஆன்ம நிலையடையும்வரை, அதாவது காரண உடம்பைப் பெறுத-வரை, பூதகணங்கள் (Nature Spirits) என்றும், காரண உடம்-பைப் பெற்றுத் தனித்தனி ஆன்மாக்களாக நிற்கும் நிலையில் தேவ கணங்கள் (Angels) என்றும் இந்நூலில் அழைக்கப்படு-கின்றன. அவற்றுள், எந்தெந்த மனிதர் மிருகங்களோடு எந்தெந்த கணங்கள் அறிவு இச்சை செயல்களில் ஒத்து நிற்பன என்பதை, விகாசமுறைக் கட்டத்தில் நேர் நேராகக் காட்டி-யிருக்கின்றது. இந்தப் பூதகணங்களை நம்மிற் சிலர் தேவதைகள் என்ற பெயரால் அழைக்கின்றனர்; வேறு பலரையும் பலவற்-றையும் அப்பெயர் கொண்டே அழைக்கவுஞ் செய்கின்றனர். ஆயினும், தேவவர்க்கத்தின் இந்த அடிப்படைப் பிராணிகளே பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயமாதிய பஞ்ச பூதங்களில் ஒவ்வொன்றைத் தமக்கு வாசஸ்தானமாகக் கொண்டு உயிர் வாழ்-வதால், அவற்றை பூதகணங்கள் (Nature Spirits) என்றழைப்-பது பொருத்தமா யிருப்பதோடு, தேவர்களுக்கும் அவர்களுக்கும் உள்ள தார தம்மியங்களின் வேறுபாட்டை விளக்கவும் அப்-பெயர் உதவியாயிருக்கும்.

இனி, இந்த பூதகணங்களே (Fairies, Nature Spirits) உண்மையில் அந்தந்த நாட்டின் பழங்குடி மக்களென்று சொல்லத்தகுவன. ஆதியில் அவையே உலகின் நிலம் நீர் தீ காற்று ஆகாயமெங்கும் நிறைந்திருந்தன. கொலைகாரக் கொடிய மக்கள் நிலத்தைத் திருத்திக் குடியேறக் குடியேற அங்கிருந்த மிருகங்கள் காட்டை நோக்கி ஓட்டமெடுப்பதுபோல, நிலப் பரப்-பெங்கும் ஏகமாய் நிறைந்திருந்த இந்த கணங்களும் மனித சஞ்சாரத்தா லேற்படுகின்ற ஆபாசங்களுக்குப் பயந்து, நகர்ப்-புறங்களைவிட்டு நீங்கி, அமைதியான நாட்டுப் புறங்கள், காடு கரைகளை நோக்கிச் சென்றுவிட்டன. அதனால், மனிதர் பெருந்-திரளாகத் தங்கு மிடங்களில் இவை மிகக் குறைவாகவும், மற்று

மலைகள், காடு கரைகள், வனம் வனாந்தரங்கள், அருவிகள் ஆற்றோரங்கள், பெரிய ஏரிகள் நீர்ப்பெருக்குகள், தோப்புத் துரவுகள் போன்ற இயற்கை வளமும் வனப்புஞ் செறிந்த இடங்களிலெல்லாம் இவை கும்பல் கும்பலாகவும் இன்று வசித்து வருகின்றன. சூட்சும உடம்புகளைக்கொண்ட அவற்றின் இருப்பை நாம் ஊனக்கண்ணால் காணாது போயினும், மரத்தில் மறைந்து கிடக்கும் வாசனைப்பூ அடுத்து வருவோரிடம் மணத்தை வீசுவதுபோல, இவற்றின் சாந்தியும் மனக்களிப்பும் கவலையற்ற விட்டாற்றியும் ஊக்கமும் உல்லாசமும் இந்த இயற்கை வனப்பிடங்களில் நடமாடும் மக்கள் மீது அவர் அறியாமலே படியும். இது வனபோஜனம், கடல் யாத்திரை, மலையாத்திரைகள் செய்பவர்கள் எளிதில் உணரக்கூடியது.

பூதகணங்களில் (Fairies) பலபல படிகளிருப்பது விகாசமுறை அட்டவணையிலிருந்து அறியப்படும். அவற்றுள் மிகத் தாழ்ந்தவை, பிராணிகளில் பாம்பு பூரான் கரப்பான் தேள் நட்டுவக்காலிபோன்று, பார்வைக்கு மிக அருவருப்பாகவும் மனிதருக்குத் தீங்கு விளைப்பனவாகவும் உள்ளன. அவை நாடும் நுகர்ச்சிகளும் தேடும் அனுபவங்களும் எல்லாம் மிக இழிந்தனவும் அசங்கிய மானவையுமாம். அவற்றின் உருவமும் தோற்றமும் அந்த இழிந்த இச்சைகளுக் கேற்றவாறே அமைந்திருப்பன. ஆடுமாடறுக்கும் கிடங்குகள், கசாப்புக்கடைகள், மிருக பலிக் களங்கள், இறைச்சி நடமாடும் இடங்கள் எல்லாவற்றிலும் ஒரு வகை அந்தமற்ற பிண்டாகார உருவங்கள், செவ்விரத்தம் போன்ற அகன்று எக்களிக்கும் வாய்களை அங்காத்துக்கொண்டு பெருங்கும்பலாக ஆவேசத்தோடு நடமாடும். அவை பார்வைக்கும் மனத்துக்கும் பயங்கரமாகவும் அருவருப்பாகவு மிருக்கும். வேசி வீடுகளிலும் விபசார மடங்களிலும், ஆராத காமவெறியோடு தலைமட்டத்தில் திரளாக மிதந்துகொண்டு, அகப்பட்டவரைப் பிடித்தாட்டக் குறிபார்த்து நிற்பவை தவிட்டு நிற ஒடு பொதிந்த ஒருவகைக் கொடிய உருவங்கள். கள்ளுக் கடைகளிலும் சாராயக் கிட்டங்கிகளிலும் குடிவெறியரை ஊக்கப்படுத்திக்கொண்டும், அங்கு பரவும் துர்நாற்றத்திலும் வெறி மயக்கிலும் பெருமிதங்கொண்டு நீந்திக் களித்துக்கொண்டும் தலை

விரித்தாடுவன வேறொருவித பூதகணங்கள். செக்கச் சிவந்த மூர்க்க வெறிகொண்ட கண்களும் யானைக்கால்போன்ற கால்களும் உடையன அவை. இந்த வகைகள் யாவுமே பயங்கரமான தோற்ற முடையன, தீயபலனை விளைப்பன. இவற்றின் பிடியிற் சிக்கியவர் எளிதில் மீளார். இவைகள் பேய்களல்லவாகையால், இவற்றால் ஆட்டப்படுவதாகவே அம்மக்கள் அறியார்.

இவற்றிற்குச் சற்று மேல்நிலையில் நிற்கும் இனங்கள் இவ்வளவு கோர ரூபமுடையன அல்லவாயினும், மிக்க அருவருப்பான தோற்றங்களை யுடையனவேயாம். இவையாவும் காமக் குரோத லோப மோக மத மாற்சரிய அலைகளில் திளைத்து விளையாடுவன. இக்குணங்களையுடைய மக்களைச்சுற்றி இவைகள், பிணத்தைச்சுற்றிப் பருந்துக் கூட்டங்கள் வட்டமிடுவதுபோல, எப்போதும் வட்டமிட்டுக் கொண்டே யிருக்கும். அம்மக்கள் தமது தீயகுணங்களுக்கு இடங்கொடுக்கும்போது, அவற்றாலாகும் அலங்கோலமான ஆகாய அலைகளில் இவை எக்களிப்போடு நீந்திக் கும்மாளம்போடும்; அந்த அலைகளின் வேகம் தணியும் போது அவற்றை மறுபடியும் துரிதப்படுத்தி அம்மக்களின் தீக்குணங்களை மேலும் மேலும் ஊக்கப்படுத்தும். மிக இழிவான இந்த இருவகை பூதகணங்களே மனிதரோடு நெருங்கி வாழ்வன, உறவு கொண்டாடுவன, தம் குணத்தை யொத்த மானிடரை விரும்பித்தேடுவன. இவையே அசுரகணங்களுமாம். இன்றைய மனித சமூகம் இவற்றின் விருத்திக்கும் வளர்ச்சிக்குமே அனுகூலமாயிருப்பது. இவற்றைவிட உயர்படியில் நிற்கும் பூத கணங்கள், மனிதருடைய சுயநல இச்சைகள், எண்ணங்கள், துற்செயல்களால் ஏற்படும் சீர்கேடான ஆகாய அலைகளுக்கும் உருவங்களுக்கும் அஞ்சி, மனிதர் நெருங்கி வாழும் இடங்களைவிட்டு நீங்கி, அமைதியான நாட்டுப்புறங்களிலும் இயற்கைமணம் வீசும் இடங்களிலும் ஒதுங்கியே வாழும். மனித சமூகத்தில் அன்புக் குணங்கள் ஓங்கும்போது இவையும் மனிதரோடு உறவாடத் தொடங்கும்.

தமிழ் மூதாட்டியாகிய ஔவைப் பிராட்டியார், "தீயாரைக் காண்பதுவும் தீதே" என்று வெறுங் காட்சியையே இழிவும்மை

கொடுத்துக் கூறியிருப்பது நம்மில் அனேகருக்கு வியப்பைத் தரக்கூடியது. "என்ன, தீயாரைக் கண்டாலே பேயா பிடித்துக் கொள்ளும்?" என்று கேட்கத் தோன்றும். ஆம், பேய்தான் பிடித்துக்கொள்ளும். அவ்வம்மையார் தமது யோகக் காட்சியால் கண்ட உண்மை யாதெனின், "தீமையின் வித்தேயில்லாத மனிதர் உலகில் மிக மிகச் சிலரே. அம்மக்கள் தீமையே தொழிலாகக் கொண்டுள்ள மனிதரை அண்டும்போது, முதலாவது அங்கிருந்து பரவும் தீய அலைகளால் தூண்டப்படுவர். அதைவிடக் கூடுதல் அபாயமாவது, அத்தீயோரைச் சுற்றி எக்களித்து உணவருந்தும் பேய் பூத கழுகினங்களும் கோட்டான்களும் இவரையும் தொடர்ந்து இவரிடமிருக்கும் வித்துக்களையும் விரைவில் முளைக்கச் செய்துவிடும்," என்பதே. அதனால் ஆன்மலாபத்தைக் கருதும் ஒவ்வொருவரும் தம்மைத் தக்கபடி பாதுகாத்துக் கொள்ளும்பொருட்டே இவ்வுண்மை சூட்சுமமாக அம்மையாரால் அருளப்பட்டிருக்கின்றது; மற்று மனிதரை அவமதிக்கும் நோக்கங்கொண்டல்ல. மனிதருக்கும் இந்த பூதகணங்களுக்கும் உள்ள தொடர்பு, வானொலிப்பெட்டி என்ற ரேடியோப் பெட்டிகளுக்கும் வானொலி நிலையங்களுக்கும் உள்ள தொடர்பு போன்றது. பெட்டியில் எந்த அலை நீளத்தைத் திருப்புகிறோமோ அந்த அலைக்கு ஒத்த எல்லா ஓசைகளும் அங்கு வந்து பெட்டியில் புகுந்து ஒலிக்கின்றன. அவ்விதமே கீழ்த்தர அலைகளுக்கு, அதாவது தீயவற்றிற்குத் தம் இச்சைகளையும் நினைவுகளையும் திருப்பி வைத்திருக்கும் மனிதர், இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல, இத்தீய கணங்களைத் தம்மைச்சுற்றித் தவறாமல் வசீகரித்து இழுப்பர்.

பாடம் 6.

## பிருதிவிகணங்கள் — குபேரகணங்கள்.

பூதக்கணங்களில் சாதாரணமாக மனிதர் கண்ணுக்குத் தென்படக்கூடியவை பிருதிவிகணங்களே (Earth spirits). ஏனெனில் அவை மனிதனைப்போலவே நிலத்தில் வசிப்பவை. ஆயினும் அவற்றின் மிகத்தாழ்ந்த உடம்பு பிராணமய கோசமே யாகையால், பிருதிவிகணங்கள் நினைத்தபோது தரைக்குள் ஆழப்புகவும் வேண்டும்போது வெளியே விரைவில் வரவும் வல்லன; அதனால் பூமிக்குள் மறைந்து கிடக்கும் புதையல்களைப் பாதுகாக்கவும் உரிய மனிதருக்குக் காட்டவும் உதவுகின்றன. இந்தப் பிருதிவிகணங்களே குபேர கணங்கள் எனப்படுபவை. பிருதிவிக் கதிபதி குபேரன்.

இந்தப் பிருதிவி கணங்கள் பொதுவாக உருவத்தில் மனிதனைப்போலவே இருக்கும்; ஆனால் அவரினும் குள்ளமாயிருக்கும்; ஏதாவது ஒரு உறுப்பு விகாரமாகவும் அமைந்திருக்கும். கண், மூக்கு, காது, கை, கால், வாய் ஏதாவதொன்று மிகப்பெருத்தோ தடித்தோ விரிந்தோ கோமாளி வேஷம் போட்டிருப்பது போலத்தோன்றும். பிருதிவிகணங்களில் பல இனங்கள் சுமார் 12 அங்குல உயரமுள்ளனவாம்; அதனால் அவை குறளிகள் என்றழைக்கப்படும். பிராணமய உடம்பு நினைத்தபடியெல்லாம் நிலைமாறக்கூடியதாகையால் ஓரடி உயரமுள்ள இக்குறளிகள் நொடிப்போதிலேயே ஆறடி உயரமுள்ள மனித உருவாக மாறித் தோன்ற முடியுய; என்றாலும அந்நினைப்பு நீங்கியதும் பழைய குள்ள வடிவத்திற்கே மாறிவிடும்.

மனிதர், மிருகங்கள், பறவைகளிற் போலவே இவற்றிலும் எண்ணற்ற இனங்கள் இருக்கின்றன; அவற்றைப்போலவே இவையுமு நாட்டுக்கு நாடும், ஒரு நாட்டிலேயே ஊருக்கு ஊரும், ஒரே ஊரினுள்ளும் இடத்திற்கு இடமும் வேறு பட்டுக் காணப்படும். ஒரே மலையின் அடிவாரத்தில் ஓரினமும், மேலே ஏற ஏற வெவ்வேறு உயரங்களில் வெவ்வேறு இனங்களும் காணப்படுகின்றன. மற்றும் மனிதரைப்போலவே இவையும் இனம் இன-

மாகவும் வகுப்பு வகுப்பாகவும் தனித்தனிக் கூட்டங்களாகவும் வாழும் இயல்புடையன. இந்த இன வேறுபாடுகள் அவற்றின் உடல் நிறங்களால் அறியப்படும். பறவைகளிற் காணப்படுவது-போல, மிகுந்த பளபளப்பான நிறங்கள் உஷ்ணப் பிரதேசங்-களிலும் மங்கலான நிறங்கள் குளிர் நாடுகளிலும் காணப்படு-கின்றன. இங்கு காட்சியென்பது ஊனக்காட்சியல்ல, சூட்சும திருஷ்டியாகும்.

குளிரும் மூடுபனியுங்கொண்ட இங்கிலாந்தில் மங்கலான பச்சை நிறமும், ஸ்காத்லாந்துப் புதர்க்காடுகளில் மஞ்சள்த்த-விட்டு நிறமும் சாதாரணமானவை. வெயில் நாடாகிய ஸிஸிலி, இத்தாலி முதலிய இடங்களில் பொன்னும் மணியும் போன்ற மின்னல் நிறங்கள் காணப்படுகின்றன. பொன்னும் வெள்ளியும் மாறி மாறி இழைத்தது போன்றவை அமெரிக்காவில் காலி-போர்னியாவிலும், அற்புதமான ஒரு ஆகாய நீலவர்ணம் ஆஸ்திரேலியாவிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. பொற் சரிகையிழைத்த அவுரி நீலமும், தனி மஞ்சளில் பல வகைகளைக் கலந்து காட்டும் ஒரு விநோத வகையும் ஜாவாத்தீவிலும் ஆஸ்தி-ரேலியாவின் பாகங்களிலும் காணப்பெறுவன. ஆஸ்திரேலி-யாவில் வேறொரு வகை, மஞ்சளும் பச்சையும் மாறி மாறிப் பட்டை பட்டையாகத தீட்டப்பட்ட உடம்புகளையுடையன; அவை பார்வைக்கு மரங்கொத்திப் புள்ளின் சிறகு போலவும் பந்தாடுவோர் அணியும் ஜெர்ஸிச் சட்டைபோலவுமிருக்கும். அம்மாதிரியே மஞ்சள்—சிவப்புப்பட்டை உடம்புகள் மலேயா நாட்டிலும், வெள்ளை—பச்சைப் பட்டையுடையவை சுமாத்ராத் தீவிலும் ஏராளமாகவுள்ளன. நியூஸீலாந்தில் வெள்ளிச் சரிகையிழைத்த கரு நீலமும் பஸிபிக் சமுத்திரத் தீவுகளில் வானவில் நிறங்களையெல்லாம் விட்டு விட்டுக் காட்டும், அதாவது டாலடிக்கும் ஒரு மின்வெள்ளி நிறமும், அந்தந்த இடங்களுக்கே உரியனவாகவுள்ளன.

இந்தியாவில் அனேகமான எல்லா இனங்களுமே காணப்-படுகின்றன. மலை நாட்டில் இளஞ்சிவப்பு—இளம்பச்சைக் கலபபுகளும், இள நீலம்—வெண்சிவப்புக் கலப்புகளும், கடுவெயி-

லெரிக்கும் சமவெளிகளில் பல வர்ணங்களை உருக்கி வார்த்த ஜோதி போன்றவைகளும், மின்னல்போன்ற பளபளப்பையுடைய எல்லா நிறக் கலப்புகளும், கண்ணை உறுத்தும் கோர ரெங்குகளும் மிலேச்ச வேஷங்களும், ஆகாய விருசுவாணக் காட்சிகளும் அளவற்று நிறைந்திருப்பன. ஆப்பிரிக்காப் பாலைவனத்திற்கே உரியதான ஒருவகைக் கரும்பொன் கணங்களும் நம்மிந்திய நாட்டின் பாகங்களில் காணப்படுகின்றன. மின்வெட்டும் மஞ்சளையால் உருவாக்கப்பட்ட குள்ளமான குறளிக் கூட்ட-மொன்று இந்நாட்டிற்கே அலாதியாகக் காணப்படுகின்றது. தென்னாட்டில் காளிதேவிக்கு உகந்த சாத்துப்பொடி மஞ்சளை-யே; காளி சக்தியும் குண்டலினி சக்தியும் வெளிப்படும்பொழுது யோகக் காட்சிக்கு மஞ்சளை நிறமாகவே விளங்குகின்றனவாம். இந்த மஞ்சளைப்பொன் குறளிகளும் அக்காளிதேவியின் கூளிகளாகும்.

---

பாடம் 7.

## பூதகணங்கள் — சில பொதுக்குணங்கள்.

பூதகணங்களின் சராசரி வயது அவற்றின் இனங்களைப் பொறுத்துப் பெரிதும் மாறுபடும். சில மிகச் சுருங்கிய காலமும், சில மனிதர் வயதுக்கும், வேறு சில மனிதரைவிட மிக நீண்ட காலத்திற்கும், உயிர் வாழ்வன. அவற்றிற்கு, பிறப்பு இறப்பாலாகும் துன்பங்கள் நமக்குப்போல இல்லை. அவை பிறக்கும்போதே அவற்றின் சூட்சும உடம்புகள் பூரண உருவத்துடன் தோன்றுகின்றன. அவ்வுடம்புகளில் எய்ப்பு, இளைப்பு, பிணி, மூப்பு, சோர்வு முதலிய இடைஞ்சல்களொன்றுமின்றித் தம் இயற்கை வயதுக்கு அவை உயிர்வாழு கின்றன. அந்த வயது முடியுங்காலம் நெருங்கும்போது வாழ்க்கையில் ஒரு வெறுப்பும் அயர்வும் உண்டாக, உயிர்வாழ வேண்டுமென்ற விருப்பம் அவற்றைவிட்டு நீங்குகின்றது. அப்போது அந்த உடம்பு புகை இளகுவது போலக் கொஞ்சங் கொஞ்சமாக இளகிச் சிதைந்து மறைந்துவிட, அவை மேலுலக வாழ்க்கை யடைந்து அங்கு சில காலம் உள்ளடங்கிய உணர்ச்சியோடு தங்கியிருக்கும். சிறிது காலத்திற்குப்பின், வெளி நோக்கும் அவா, அதாவது பூரண உணர்வோடு வாழவேண்டுமென்ற அவா தலையெடுக்கின்றது. விகாச முறையின்படி ஏற்படும் இந்த இயற்கை ஆசை அதனைக் கீழுலகத்திற்கு இழுக்க, அங்ஙனம் புவர்லோகத்திருந்து பூலோகத்திற்கு மாறும் நொடியிலேயே அந்த பூதகணத்தின் பக்குவத்திற்கேற்ற பிராணமய கோசம் பூ ணமாக அதற்கு அமைந்துவிடுகின்றது. இத்தனை எளிதான பிறப்பு முறையுடன், அவற்றிற்கு நோயென்பதே இல்லை, பசி இல்லை, ஊண் உடை உறக்கத்திற்கு அவசியமேயில்லை, வெயில் மழைக்கு அஞ்சவேண்டுவதில்லை, அதனால் வீடு வாசல்களுந் தேவையில்லை; இவ்வளவுக்கும் மேலாக, ஆண்பெண் என்ற பாகுபாடும் அதனாலாகும் காமச் சிக்கல்களும் அவற்றிற்கு இல்லை. இவ்வளவு சுயேச்சையான நிலைமையில், அவைகள் பொறுப்போ கவலையோ இல்லாத குழந்தைகளின் கூட்டம்போல எப்போதும் களித்துக் கும்மாளம் போட்டுக் கொண்டு திரியும். பொதுவாக அவைகள் பறவைகளைப்போலவும்

கன்று காலிகளைப் போலவும், காட்டு மிருகங்களைப் போலவும், கவலையற்றுக் கூட்டங் கூட்டமாய் வாழ்ந்து வரும்.

அவற்றின் இன்பதுன்பங்களெல்லாம் .இயற்கை நிகழ்ச்சிகளையே ஒட்டியன. சூரிய ஒளியிலும் வெப்பத்திலும் அவைகள் நீந்திக் களிக்கும்; நிலவொளியில் வட்டமிட்டுக் கூத்தாடிக் கொட்டமடிக்கும்; மழையிலும் பனியிலும் மகிழ்ந்து மிதக்கும்; காற்று வீசும்போது கூட ஓடியும் எதிர்த்துப் பறந்தும் சுற்றிச்-சுற்றிச் சுழன்று குட்டிக்கரணமிட்டும் விளையாடும். மரம் துளிர்த்தல், பூப்பூத்தல், செடிகள் மரங்கள் கொடிகள் தென்றலில் அழகாக அசைந்தாடுதல், காய்கனி விளைதல், பறவைகள் விட்டில்கள் பறந்து விளையாடுதல், அணில்கள் முயல்கள் தாவி ஓடுதல், கன்று காலிகள் துள்ளிக் குதித்தல் போன்றவைகள் எல்லாம், இந்தப் பூதகணங்களின் கண்ணுக்கு ஓயாத அற்புதக் காட்சிகளாம். இந்த இயற்கை நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிப்பதிலும் கண்டு களிப்பதிலுமே அவை அதிகமான நேரத்தைப் போக்கும். அதனால், விகாசமுறையென்ற உலகப் பரிணாம முறையை நடத்துவிக்கும் அதிகார முத்தர்கள், இவற்றின் இந்தக் குணங்களைப் பயன்படுத்தி, புதுப்புது வகையான பூக்கள், மரஞ் செடிகள், கொடிகள், பறவைகள், பிராணிகளை வனைவதிலும், ஒட்டுக்கட்டி உற்பத்தி பண்ணுவதிலும், அவற்றை ஏவுவர். இயற்கை சம்பந்தமாக அவ்விதம் ஏவப்பட்ட பணிகளில் ஈடுபடுவதும், தமக்குக் கொடுக்கப்பட்ட கருவிற்குள் ஏற்ற பொருள்களை உருப்படுத்துவதும் அவர்களுக்கு மிக ஆனந்தகரமான வேலை. அதுவே அவர்களுக்கு இறைவன் வகுத்துள்ள வளர்ச்சி முறையுமாம்.

இவற்றின் உடம்புகள், வயிறு இருதயம் ஈரல் முதலிய உள்ளுறுப்புகள் ஒன்றுமின்றிப் பனி மூட்டங்கள் போலவும் புகைப் பிண்டங்கள் போலவுமே யிருக்கும். மெய் வாய் கண் மூக்கு செவி போன்ற தோற்றங்கள் காணப்படினும், அவை ஞானேந்திரியங்களாகத் தொழிற்படா. ஆனால் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றங்கள் யாவும ஆகாய அலைகளின் விளைவாகையால், அந்த அலைகளில் ஓயாது திளைத்து விளையாடும் இவற்றின் உடம்பிலுள்ள ஒவ்வொரு அணுவும் அவ் அலைகளால்

தாக்கப்பட்டுப் பஞ்சேந்திரியங்களாக வேலை செய்யும். அது காரணமாக நாம் பெறுவதைவிட நூறு மடங்கு கூர்மையான உணர்ச்சிகளை அவை பெறுகின்றன. அவ் அலைகள் தாழ்ந்தவையாய், அருவருப்பான ஒலி, மணம் முதலியவற்றைக் கொடுப்பனவா யிருக்குமாயின் அவ்விடத்தைவிட்டு இக்கணங்கள் வாயுவேகம் மனோவேகத்தில் நீங்கிவிடும். அதாவது புலால், கள், காம அலைகள் வீசும்போது தீய கணங்கள் அங்கு திரண்டு கூடும்; மற்றவை மூச்சுத்திணறி மிரண்டு ஓடும். மனோகரமான அலைகள் வீசும்போது தீயவை வெறுத்து விலகும்; மற்றவை விரும்பித் திரளும். தமக்கு விருப்பமில்லாத இடங்களைவிட்டு அவ்வளவு வேகத்தில் அவை விலகிக்கொள்ளக் கூடுமாகையால், அவற்றிற்குத் துன்பம் என்பது இல்லை என்றே சொல்லலாம். "அஞ்சுவ தியாதொன்று மில்லை, அஞ்ச வருவது மில்லை," என்பது பஞ்ச பூத கணங்கள் அனைவற்றிற்குமே பொருந்துவது.

இவற்றின் உடம்புகளின் தன்மையை ஒரு சிறிது விளக்கி-யதிலிருந்து, அந்த உடம்புகளைத் துண்டு படுத்தவோ, ஒட்ட-வைக்கவோ, வெட்டவோ குத்தவோ புண்ணாக்கவோ ஒன்றும் முடியாதென்பது நன்கு விளங்கும். தண்ணீரையோ காற்றை-யோ வாளால் இரு துண்டாக்க முடியாதபோது, அவற்றிலும் நுட்பமான ஆகாயத்தையும் அதனாலாகிய பிராணமய கோசங்-களையும் எவ்வாறு துண்டிக்க முடியும். அதனால், தேவாசுர யுத்தங்களின்போது நடைபெறுவதாக நமது புராணங்களில் கூறப்படும் வெட்டுகள் குத்துகள், ரத்தவெள்ளங்கள், தலையற்ற முண்டங்கள், கைகால் துண்டங்கள், பல்லுடைப்பது, மூக்கறுப்-பது, கண் பொட்டையாவது முதலிய ஸ்தூல சம்பவங்களெல்-லாம், வாக்கிற்கு எட்டாத சூட்சும உலகக் கோர நிகழ்ச்சிகளை நம் போன்றவருக்கு ஒருவாறு விளக்க எடுத்துக் கொண்ட வர்ணனைகளேயாகும். அந்த வாசகங்களை சூட்சும உலகிற்குரிய துன்ப அறிகுறிகளாகக் கொள்ளவேண்டுமே தவிர, ஸ்தூலமாகப் பொருள் கொள்ளக் கூடாது. அன்றி அவை கோர நினைவுரு-வங்களாகவு மிருக்கலாம். அப்போது அவை மனத்தைக் கலக்கும் கோரக் காட்சிகளையும் உணர்ச்சிகளையும் கொடுக்க வல்லன.

பூதகணங்களிற் பெரும்பாலானவை மனிதனை வெறுத்து விலகிக் கொள்பவை. அவை மனிதனை நாசகாரப் பேய்களாகவே கருதுகின்றன. அவைகள் விரும்பிப் போற்றுகின்ற அழகிய பிராணிகளை யெல்லாம் அவன் கொல்கின்றான், சித்திரவதை செய்கின்றான்; மரங்களை வெட்டுகின்றான், பசும்புல்லை மிதித்துச் சமட்டி அங்கு மலத்தைக் கழிக்கின்றான்; பூக்களையுஞ் செடி-கொடிகளையும் பிடுங்கிக் கசக்கி யெறிந்து வாடவிடுகின்றான்; அழகிய பூஞ்சோலைகளை வெட்டி அருவருப்பான குடிசைகளைக் கட்டுகின்றான். இயற்கை வாசனைகளையும் பூமணங்களையும் கெடுத்துத் துர்நாற்றங்களைப் பரப்புகின்றான். அவை விரும்புவனவற்றை யெல்லாம் மனிதன் சீரழிக்கின்றான். இதனைவிட நாசகாரவேலை அவற்றின் பார்வைக்கு வேறென்ன இருக்கக்கூடும். அதனால் நாம் விஷப் பூச்சிகளைக் கண்டு பயந்து விலகுவதுபோல அவையும் மனிதனைக்கண்டு அஞ்சி ஒதுங்குகின்றன.

இந்த நாசவேலை மாத்திரமன்றி அவனுடைய ஆக்கவேலை-களும் அவற்றிற்கு அருவருப்பையே கொடுப்பனவாம். அவன் விரும்பி உண்ணும் கள், புகையிலை, கருவாடு நாற்றங்கள், காமக்-குரோத லோப மோகங்களெல்லாம் ஆகாயத்தில் இடைவிடாது பரப்பும் அலைகள், யாவும் அவற்றிற்குச் சாக்கடைத் தண்ணீரைத் தலையில் கொட்டுவது போன்ற அருவருப்பைக் கொடுக்கின்றன. பகுத்தறிவு பெற்றுள்ள, பொறுப்பு வாய்ந்த தேவர்களும் தேவ கணங்களும் மனிதருடைய இந்த இழிதொழில்களையும் சீர்கேடு-களையும் பொருட்படுத்துவதில்லை; அவற்றிற்காகத் தம் வேலை-களையோ கடமைகளையோ உதறிவிட்டு ஒதுங்குவதுமில்லை. ஆனால் குழந்தைப் பருவத்திலிருக்கும் பூதகணங்கள் இவற்றை மிகவும் வெறுத்தோடுவனவாம். அதனால் அவற்றைப் பலவந்த-மாக அடக்க முயலும் மாந்தரீகர் பலர் அவற்றின் கையாலேயே துர்மரண மடைகின்றனர்.

பாடம் 8.

## பிருதிவி கணங்கள்.

பிருதிவி கணங்கள் மிகவும் வியக்கத்தக்க மனோ பாவனைகளை-யுடையவை. அவற்றின் கற்பனா சக்திக்கு அளவே கிடையாது. விதம் விதமான கதைகள் கட்டுவதிலும் அவற்றை நடித்துக் காட்டுவதிலும் அவைகளுக்குச் சலிப்பே ஏற்படுவதில்லை. கற்பனைகள் பெரும்பாலும் அசம்பாவிதமாகவும் சிறுபிள்ளைத்-தனமான விளையாட்டுகளாகவுமே இருக்கும். ஆயினும் கதை-களைச் சொல்லும்போதே பொருத்தமான வேஷங்களை உடனுக்-குடனேயே தம் உடம்பில் காட்டுவது பார்ப்பவருக்கு அதிசய-மாகவே யிருக்கும். பிராணமய கோசங்கள் எண்ணிய எண்ணிய-வாங்கே, எண்ணிய நொடியிலேயே மாறவல்லன. அவ்வாறு கதை சொல்வதில் சாமர்த்தியமுடையவை மற்றையோரால் மிக-வும் பாராட்டப்படும்.

இவைகள் மனிதரை மயக்கும் ஜாலவித்தையிலும் மிக மிக வல்லவை. இயற்கையில் நடைபெறாத ஒன்றை நடைபெறுவதாக ஆயிரக்கணக்கான மக்களை ஒரே சமயத்தில் நம்பச் செய்வதிலும் பார்க்கச் செய்வதிலும் கேட்கச் செய்வதிலும் ஐம்புலன்களால் அறியச் செய்வதிலும் இவை மிகுந்த திறமைசாலிகள். இவற்றின் உதவிகொண்டே இந்நாட்டுச் செப்படி வித்தைக்காரர் பல அதிசயமான வித்தைகளைக் காட்டுகின்றனர். ஆளைக் கூடையால் மூடிக் கைவாளைக்கொண்டு குத்தி வெட்டுவது, கயிற்றை ஆகா-யத்தி லெறிந்து அதில் ஆளேறி மறைந்து போவது, முதலிய அற்புத விளையாட்டுகள் இந்த ஜாலவித்தை வகைகளே.

கள், கஞ்சா முதலிய போதைப் பொருள்களால் ஏற்படும் வெறி, மயக்க வேளைகளில் மனிதன் கண்ணுக்குச் சில சமயங்கள் புலப்படுபவை இந்தப் பிருதிவி கணங்களே. இவற்றின் உடம்பு பிராணமய கோசமாகையாலும் இவை தரையையொட்டி வாழ்வ-தாலும் இவை மனிதருக்கு எளிதில் காணப்படத் தகுவன. அறிவிலும் ஒழுக்கத்திலும் மட்டமான பலர் குறி சொல்வ-தெல்லாம் பெரும்பாலும் இவற்றின் உதவியாலேயாம். சில-

விடத்து, இறந்துபோன மனிதர் உதவியாலும் வேறு உபாசனைகளாலும் இது சொல்லப்படும். ஆனால் இக்குறிகாரர் பொதுவாகத் தாழ்ந்த மக்களா யிருப்பராதலால், பண்படாத அவர்கள் மூளையில் சூட்சும பார்வையுடைய இக்குறளிகள் ஆராய்ந்து புகுத்தும் குறிப்புகள் நன்கு பதியாமற்போகும். இது காரணத்தாலேயே சில சமயங்களிற் குறிகள் பலிதமாவதும் வேறு பல சமயங்களில் அவை தவறிப்போவதுமாம். அது உபாசனா தேவதைகளின் அறிவுக் குறைவினா லல்ல.

ஜாலவித்தையிலும் குறி சொல்வதிலும் உபயோகப்படுபவை பெரும்பாலும் குறளிகளாம், சுமார் ஒரு அடி, ஒரு முழம் உயர-முடையவை. ஏகதேசம் மனித உயரத்தையொத்த கணங்களில் மோகனப் பிசாசுகள் ஒருவகை; அவற்றுள் பால் வேற்றுமை-யில்லையென்பது மேலே கூறப்பட்டுள்ளது. ஆதலால் அவை ஆண்களைப் பற்றும்போது பெண்ணுருவெடுத்தும், பெண்களைப் பற்றும்போது ஆணுருவெடுத்தும் அகப்பட்ட மக்களை அல்லற் படுத்தும்.

இப்பிருதிவிகணங்கள் நம் புராணங்களில் குபேரகணங்கள் என்று கூறப்படும். குபேரன் கின்னரேசன், யக்ஷர் கோமான் எனப்படுவான். அதனால் பிருதிவி கணங்களின் விகாசமுறையில் மேலேறி நிற்பவர் யக்ஷர், கின்னரர், கந்தருவர் முதலிய கான தேவ கணங்களாக இருப்பர்.

பாடம் 9.

## தேவவர்க்கம் — அப்பு, தேயு, வாயு கணங்கள்.

அப்பு கணங்கள் வருண கணங்க ளென்னப்படும். பிருதிவி கணங்கள் மிகப்பெருங் கூட்டமானவை யென்று மேலே சொல்லப்பட்டது. அப்பு கணங்கள் அவற்றினும் பெருந்திர-ளானவை; அவற்றின் இனங்களும் எண்ணிறந்தவையாம். அவற்றின் உருவங்கள் பிருதிவி கணங்களைப்போலக் குள்ளமாக இராமல் பொதுவாக மனித உயரத்திலேயே இருப்பதோடு, கடலில் வாழும் இனங்கள் பிரம்மாண்டமான உயரமாகவு மிருக்கும். இவற்றில் உவர்நீர்க் கணங்கள், ஏரிநீர்க் கணங்கள், ஆற்றுநீர்க் கணங்கள், அருவிநீர்க் கணங்கள், எனப்பல இனங்-களும், அவை ஒவ்வொன்றிலும் பல பல ஜாதிகளும் உள்ளன. கடலிலுள்ளவை ஆழ்கடல், நடுக்கடல், அலைகடல் எனப் பல பல விதங்களாக இருக்கும். அத்லாந்திக் கடல் இனங்களின் நிறங்கள் பஸிபிக் கடலில் காணப்படா. இந்த இரண்டிலு முள்ளவை மத்தியதரைக் கடலிலோ துருவக் கடல்களிலோ காணப்படா. அம்மாதிரியே ஏரி குளம் குட்டைகளி லுள்ளவையுமாம்.

வருண கணங்கள் தண்ணீரில் நீந்தி விளையாடும், மேலே துள்ளிக் குதிக்கும், அலைகளோடு புரண்டு தாவும், அருவி நீரில் மிக ஆனந்தமாக மேலுங்கீழும் குறுக்கும மறுக்குமாகப் பாய்ந்து விளையாடும். சில இனங்கள் உப்பு நீரிலும் நல்ல நீரிலும் இடைஞ்சலின்றி வசிக்கக் கூடியன; சிலவற்றிற்கு உப்புநீர் பிடிப்பதில்லை; சிலவற்றிற்கு நல்லநீர் பிடிப்பதில்லை. நீர்த்துறை-கள் வறண்டு போகும்பொழுது, அவற்றில் வாழும் பறவைகளைப் போலவே இவையும் வேறு நீர்த்தேக்கத்தைத் தேடித் திரளாகச் சென்றுவிடும்.

நம் புராணங்களில் வருணன் தைத்யதேவன் எனப்படுவன். அதனால் அப்புகணங்களில் ஓரினமோ அல்லது அவற்றின் உயர் நிலைத் தேவர்களோ தைத்யராக இருக்கலாம். இந்த வருண கணங்கள் நீரில் வசித்து விளையாடுவது போன்று நெருப்பில் வசித்து விளையாடுபவை தேயுகணங்கள் எனப்படும். பெரும்

தீ எரிகிற இடங்களில் ஜ்வாலையும் பொறிகளும் மேல்நோக்கிப் பறப்பதுபோல, இந்தத் தேயு கணங்களும் மாறி மாறி அடியில் புகுந்து மேல்நோக்கிக் களிப்போடு பறக்கும். அவற்றை உபாசிக்கும் மக்களிடம் எந்தப் பெருநெருப்பையும் இவை சுடாமலிருக்கச் செய்யவல்லன.

இவற்றிற்கும் மேற்பட்டவை வாயுகணங்களாம். இவை பெரும்பாலும் மேகத்திலேயே சஞ்சரிப்பன; அந்த மேகங்களைப் பல பல உருவங்களாகப் புனைந்து வனைந்து அவற்றைக் கண்டு களிப்பன. இந்த நான்கு கணங்களுக்கும் இயற்கையான உடம்புகள் பிராணமய கோசங்களே; நம்போன்ற அன்னமய கோசம் அவை ஒன்றுக்கும் இல்லை. அவை அனைவற்றிற்கும் பிராணமய உடம்பு, இச்சையுடம்பு, உருவமன உடம்பு என மூன்றுடம்புகளே உள்ளன. (முதற்பாகம் படம் பார்க்க). விஞ்சையர், வித்யாதரர் முதலியோர் நம் புராணங்களில் மேக வாகனர் என்று கூறப்படுகின்றனர். இவர் வாயுகணங்களின் வகைகளாக இருப்பரெனச் சொல்லலாம்.

பாடம் 10.

## தேவவர்க்கம் — ஆகாய கணங்கள்.

இதுவரை கூறப்பட்டவற்றிற்கெல்லாம் உயர்ந்தவை இந்திர கணங்கள் எனப்படும் ஆகாய கணங்கள். இவை விகாசமுறையில் பூதகணங்களின் உச்ச நிலையில் நிற்பன. இவற்றின் இயற்கை-யுடம்பு புவர்லோக உடம்பாகிய இச்சையுடம்பே யாகும். பிருதிவி முதல் வாயுகணங்கள்வரை பிராணமய கோசத்தில உயிர் வாழ்வன, அதிலேயே பூரணப் பிரக்ஞையுடன் தொழில் செய்வன. ஆகாய கணங்களோ இச்சையுடம்பிற்குக் கீழ் இறங்-குவதில்லை. அது பிராணமய கோசத்திற்கு அடுத்த மேலுடம்பு (முதற் பாகம் பார்க்க); இந்த ஆகாய கணங்கள் அறிவிலும் ஆற்றலிலும் மற்ற நால்வகைக் கணங்களையும் விட மிக உயர்ந்-தவை; சாதாரண மனிதனுடைய அறிவுக்கு ஒத்திருப்பவை. ஆயினும் இவற்றிற்குக் காரண உடம்பு கிடையாதாகையால், அவ் வுடம்பையுடைய மனிதனுக்குள்ள பகுத்தறிவும் நன்மை தீமையுணர்ச்சியும் இவற்றிற்குக் கிடையா. அதனால் இவை அறிவில் மனிதருக்குச் சமமாகவும பகுத்தறிவில் விலங்களுக்குச் சமமாகவும் இருக்கும். இவற்றின் அடுத்த மேல்நிலை தேவகணங்-களிற் சென்று சேர்வதாகும். தேவர்களும் தேவகணங்களும் தனிப்பட்ட காரண உடபபுகளை யுடையவர். இந்தக காரண உடம்பைப் பெறும் முறைகள் விலங்கினத்திற்கும் பூதகணங்-களுக்கும் ஒன்று போலவே இயற்கைத திட்டததில் ஏற்பட்-டுள்ளன.

மிருகங்கள் மனிதனோடு நெருங்கிப் பழகி உறவாடுவதனல் அவற்றின் அன்பும் அறிவும் விருததியாகும். தம்மை நேசிக்கும் எஜமானன் நன்மையென்று நாடுவனவற்றை அவைகள் விரும்பிச் செய்யும், வெறுதது விலக்குவனவற்றை ஒதுக்கும். அங்ஙனம் பழகிப் பழகி அவை பகுத்தறிவு பெறும் நிலை எய்துமபோது காரண உடம்பைப் பெற்றுப் பின் மனிதராகப பிறக்கும். இந்த மாறுதல் காட்டு மிருகங்களுக்கு ஏற்படுவதில்லை; மனித-னுக்கு உறுதுணையாக நிற்கும் அறிவு வாய்ந்த மிருகங்களாகிய நாய், பூனை, யானை, குதிரை, குரங்கு, ஒட்டகைபோன்ற இனங் களுக்குள்ளேயே நிகழும்.

அதுபோலவே ஆகாயகணங்களும் தேவர்களோடு நெருங்கிப் பழகி, அவர்கள் ஏவுதலை எதிர்பார்த்தும், இட்ட வேலைகளைச்

செய்தும் படிப்படியாக முன்னேற்றமடைந்து, தக்க பருவத்தில் காரண உடம்பைப்பெற்று தேவகணத்தில் சேரும். தேவர்களும் மனிதரைப்போலவே ஏழு கலைகளாக விளங்குவர்; அவர் செய்யும் வேலைகளும் அவருடைய கலைகளுக்கேற்ப வெவ்வேறாயிருக்கும். இவ்வேலைகள் யாவற்றிலும் ஆகாயகணங்கள் மிகுந்த ஊக்கத்-துடனும் மனக் களிப்புடனும் ஈடுபடும்.

ஆகாயகணங்கள் புவர்லோக வாசிகளாகையால், மனிதர் மனத்து நிகழும் எண்ணங்களும் இச்சைகளும் அவையுண்டு-பண்ணும் அலைகளும் உருவங்களும் இவற்றிற்கு நன்கு புலப்படும். அதனால் மேல்நாட்டார் இறந்தவரோடு உறவாட முயலும் கூட்டங்களில் (Seances) இவற்றுட் சில புகுந்துகொண்டு, அங்கு குழுமி யிருக்கும் மக்கள் மனத்து நிகழ்வனவற்றைத் தெளிவாகக் கண்டு, அவற்றிற்கேற்ப நடித்து அங்குள்ளோரை ஏமாற்ற வல்லன. இறந்தவர் உண்மையாகவே வருவதும் உண்டு, ஆனால் இறந்து சில வருஷங்களுக்குப்பின் அங்ஙனம் வருவது அவருக்கு இயலாமல் போகும். அப்பேர்ப்பட்ட சமயங்களில், இந்த ஆகாயகணங்களே எல்லாவற்றையும் சரிப்படுத்தி இறந்தவரைப் போலவே நடித்துவிடும். மற்றைப்படி, வெகு தொலையிலுள்ள சாமான்களைக் கொண்டுவருதல், அன்னிய நாட்டுப் பூக்கள் பழங்கள் முதலியவற்றை எடுத்து வருதல், மிட்டாய் முதலிய தின்பண்டங்களைத் தருவித்தல், மிகப்பழுவான கட்டில் மேஜை முதலியவற்றை ஒருவர் கையும் படாமலே இடம்விட்டு இடம் பெயர்த்தல்-நகர்த்தல், கதவுகளிலும் மேஜைகளிலும் மனிதன் முதுகு முகங்களிலும் அடித்தல்-தட்டுதல்-குட்டுதல் முதலியன, விளக்கேற்றுதல், கேள்விகளுக்குச் சமாளிப்பாகப் பதிலிறுத்தல் இவற்றையெல்லாம் இந்த ஆகாய கணங்கள் எளிதில் செய்ய வல்லன. பெரிய மாந்தரீகர் இவற்றின் உதவியால் பல பல அற்புதங்களைச் செய்வார்கள்; ஆனால் அவற்றின் அதிருப்திக் குட்பட்டால் அவற்றால் அறையுண்டு சாவார்கள். இறந்துபோன குழந்தைகளை புவர்லோகத்தில் கூட்டங் கூட்டமாகத் திரட்டி அவருக்கு விளையாட்டுக் காட்டுவது இந்த ஆகாயகணங்களுக்கு மிகப் பிரியமான வேலை. அவ்வேலையில் இவைகள் என்றும ஈடுபட்டிருக்கும். இந்த இந்திரகணங்கள் அந்தரர், ஆகாய கணங்கள் என்று இந்துமத நூல்களில் அழைக்கப்படுகின்றன.

பாடம் 11.

## தேவவர்க்கம் — தேவகணங்கள்.

மேலே காட்டியுள்ள விகாசமுறைக் கட்டத்தில், தேவவர்க்கத்தில், பகுத்தறிவுக் கோட்டுக்குக் கீழுள்ளவற்றிற்கு பூதகணங்கள் என்றும், மேலுள்ளவற்றிற்கு தேவகணங்கள் என்றும் இந்நூலில் பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பண்டைக் காலத்தில் இந்திரவிழாவென்பது நமக்குள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பெற்ற விழாக்களில் ஒன்ருக இருந்தது. அது தேவர்கள் மக்களுக்குச் செய்யும் எண்ணிறந்த உதவிகளுக்கு அவர்மாட்டு நன்றி செலுத்தும் கொண்டாட்டமாகும். இன்றும் இது கிறிஸ்தவருக்குள் மைக்கெல்மஸ் என்றும் தேவர்கள் திருநாளென்றும் கொண்டாடப்படுகின்றது. இந்திரன் தேவர்களுக்கும் தேவ பூத கணங்களுக்கும் தலைமையாக நிற்பவன். அவர் பெயரால் விழாக் கொண்டாடுவது தேவகணங்கள் முழுவதையும் கொண்டாடுவதாகும். இந்த விழாக்களால் தேவருக்கும் மக்களுக்குமிடையே தொடர்பும் உறவும் வலுப்பெற்று வநததோடு, தேவர்களால் ஏற்படும் உலக நன்மைகள் மனிதரிடம் நன்கு படிவதற்கு அனுகூலங்களும் உண்டாயின. என்னெனில், கதவு திறக்காத வீட்டிற்குள் கதிரவன் ஒளி புகாததுபோல, மனக்கதவு திறக்காத மக்களிடம் அருட் சக்திகள் நன்கு படிவதில்லை. அதனல் இன்றும் தேவர்கள் நம்மைச் சுற்றியிருந்து பணியாற்றிவரினும் அவர்கள் உதவி இக்காலத்து அவநம்பிக்கை காரணமாக அதிகம் நம்மிடை பயன் தராமற் போகின்றது.

தேவர்கள் என்ற சொல் தேஜஸை யுடையவர்கள், தெய்வத் தன்மை பொருந்தியவர்கள் என்று பொருள்படும். அவரைக் காண வல்லவருக்கு, அப்பெயர்கள் எவ்வளவு பொருத்தமுடையனவென்பது விளங்கும். இன்று தேவர்கள் மனிதர் கண்ணுக்கு சாதாரணமாகத் தென்படுவதில்லை. அதனல் தேவர்கள் மக்களிடையே நடமாடினர்கள் என்று பழைய நூல்களில் சொல்லப்படுவனவெல்லாம் வெறும் கவி வருணனை யென்றும் வெள்ளைப் பொய்களென்றும் கருதப்படுவதோடு, தேவர்களின் இருப்பைப்பற்றியே அவநம்பிக்கையும் ஏற்பட்டுவிட்டது.

தேவர்களைக் காணக்கூடியவர்கள் இன்றும் இருக்கின்றனர். ஆனால் அந்த தேவர்கள் ஸ்தூல உடம்போடு உலகில் தோன்றினாலன்றி அவர்களை எல்லோரும் காண்பது இன்று இயலாதகாரியம், தேவகணங்களில் மூன்று பெரும் பிரிவுகள் காணப்படுகின்றன. புவர்லோகத்தில் இச்சையுடம்பில் வாழ்பவர்கள் புவர்லோக வாசிகளாகிய காமதேவர்கள் எனப்படுவர்; மனவுடம்பிலுள்ளவர் சுவர்க்கலோகவாசிகள், ரூபதேவர்கள்; காரண உடம்பில் மகர் லோகத்தில் வாழ்பவர் அரூபதேவர்கள். இச்சையுடம்பும் மனவுடம்பும் காரணவுடம்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கின்றன. (முதற்பாகம் படம் பார்க்க) பூலோக உடம்பால் இன்று நாம் காண்பதுபோல, மற்ற உடம்புகளையுங்கொண்டு நாம் காண முயற்சிப்போமானால் அந்த மூன்று பிரிவிலுமுள்ள தேவகணங்களை அனைவரும் காண முடியும். உலகம் மனிதனுடைய சிற்றின்ப வாழ்க்கைக்காகவே படைக்கப்பட்டிருக்கிறதென்ற கொள்கை பரவியது முதல், தேவர்களும் மக்கள் கண்ணிலிருந்து மறைபட்டனர் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. இன்னுஞ் சில நூற்றாண்டுகளில், திரும்பவும் முன்போல அவர்கள் மனிதரிடையே நடமாடுவரென்று அறிஞர் கூறுகின்றனர்.

இந்தக் காமதேவர், ரூபதேவர், அரூபதேவர் என்ற மூன்று பெரும் பிரிவுகளிலும் தனித்தனி ஏராளமான இனங்களும், ஒவ்வொரு இனத்திலும் மனிதருட்போலவே அறிவு அன்பு ஆற்றல்களில் பலதிறப்பட்ட ஏற்றத்தாழ்வுகளும் காணப்படுகின்றன. ஒரு கூட்டத்தார் நம்மில் உத்தம மக்களுக்குச் சமமான நிலையில் நிற்பவர்; ஆனால் வேறு பல கூட்டத்தவர் நம் பார்வைக்குக் கடவுளராகவே தோன்றுவர்; அவ்வளவு உன்னத நிலையிலுள்ளன அவர் அறிவும் அருளும் திறனும். தேவவர்க்கத்தில் பெரும்பாலோர் மனிதரைக் கவனிப்பதேயில்லை. தன்னுடைய வளர்ச்சிக்கும் வீடுபேற்றிற்கும் மனிதன் வாழ்ந்து வருகின்றானேயொழிய, மற்று மிருகங்களுக்காகவோ மரஞ்செடிகளுக்காகவோ அவன் வாழ்க்கை நடத்தவில்லை. அம்மாதிரியே தேவர்களும் அவருக்கமைக்கப்பட்ட விகாசமுறைப்படி வாழ்ந்து வருகின்றார்களேயொழிய மனிதருக்காகவோ உலகத்தின் பொருட்டோ அவர்கள் உயிர் வாழவில்லை. ஆயினும் சப்த உலகங்களும் வலைப்-

பின்னல்போலவும் சங்கிலியிணைப்புப்போலவும் ஒரே தொடர்ச்சியுடையனவாயிருப்பதால், அங்குள்ள எல்லா உயிர் வர்க்கங்களும் பல கட்டங்களில் பரஸ்பர சம்பந்தமுடையோ ராகின்றனர். அங்ஙனம் நெருங்கும் சந்தர்ப்பங்களில் முக்கியமான ஒன்று நமது ஆலய வழிபாடு. இந்த உண்மை இந்துமத ஆலயங்களுக்கு மாத்திரமன்றி மற்று எல்லாமத ஆலயங்களுக்கும் பொருந்துவது. சமயக் கிரியைகளில் பங்கு கொள்ளும் தேவர்கள் கானதேவர்கள், தூபதேவர்கள், தேவதூதர்கள் என்ற நாமாவளி - அர்ச்சனை தேவர்கள், மயன் - விஸ்வகர்மன் என்ற நிர்மாண தேவர்கள் எனப் பலவகைப்படுவர். அவர் ஆலயங்களில் புரியும் பணிகள் இந்நூலில் ஆங்காங்கு கூறப்படும். ஆலயக் கிரியைகள் அருளைப் பூலோகத்தில் பரப்பும் முறைகளென்பது முன்னே சொல்லப்பட்டது. இந்த வேலையில் ஈடுபடுவதால் தேவர்களின் முன்னேற்றம் பெரிதும் பலிதம் பெறுகின்றபடியால் அவர்கள் மிகுந்த பிரியத்துடன் இவற்றில் கலந்து கொள்வார்கள். ஆயினும மிக உயர்படியிலிருக்கும் தேவர்கள் கிரியைகளின் அவசியத்தைக் கடந்தவர்கள்; அவர்கள் உலகத்திற்கு உதவி செய்யும் பொருட்டே அங்கு வருகின்றனர். இன்னோர் உதவியின்றி அருளாலயங்களும் அருள் யந்திரங்களும் முற்றுப்பெறு, ஆலயக் கிரியைகளும் உரிய பலனைத்தரா. ஆனல் அவர்கள் ஆற்றும்பணி பண்டும் இன்றும் ஒன்றுபோலவே யிருப்பினும், ஆலயஞ் செல்வோரிற் பெரும்பாலோர் மூடக் கொள்கையராய் முறை தவறி வழிபடுவதால், பரார்த்த ஆலயங்கள் பண்டைக் காலத்துப் புரிந்த உலக க்ஷேமத்தை இன்று செய்யாமல் போகின்றன. ஆலயங்களைப்பற்றி இந்நூலில் ஒரு சில குறிப்புகளே கொடுக்கப்பட்டிருப்பினும், ஆலயந்தொழ விரும்புவோர் அவற்றையாவது கற்று, முறைப்படி தொழ முயற்சிப்பது அவர்கள் கடமையாகும்.

தேவர்களின் தோற்றத்தை விளக்குவது எளிதான காரியமல்ல. அவர்கள் ஜோதிக் கூண்டுகளாகவும் நடுவே மனிதவுருவம் போலவும் காணப்படுகின்றனர். பெரும்பாலோர் மனித உயரத்தவராயிருக்கின்றனர், மனிதரைவிட இருமடங்கு மும்மடங்கு உயரமுள்ள வேறு பல இனங்களும் இருக்கின்றன. அவர் கண்கள் சாந்தமே உருவெடுத்த நட்சத்திரங்கள் போலப்

பிரகாசிக்கும். அண்ட உருவமான, அதாவது பெரிய முட்டை வடிவமான அவருடைய உடம்புகளில் காணப்படும் அழகிய வானவில் நிறங்களும் ஒளியும் பொலிவும் பளபளப்பும் சொல்லுக் கடங்குவனவல்ல. அவருடைய உடம்புகள் மனிதருடைய சூட்சும உடம்புகளைவிடப் பலமடங்கு பெரியவை. மனிதர் பெரும்பாலோருடைய நுண்ணுடம்பு முட்டைக் கூண்டுகள், கை முழத்துக்கு மூன்று முழ அகலமும் ஆறுமுழ உயரமுமா யிருக்கும், அதாவது நம்மைச்சுற்றி நாற்புறமும் ஒரு முழம் விரிந்திருக்கும் (முதற்பாகம் படம் பார்க்க). தேவ உடம்புகள் முன்னூறு நானூறு முழ அகலமும் அதற்கேற்ற உயரமுங் கொண்டவையாயிருக்கும். மனிதரிடம் உணர்ச்சி ததும்பும்போது அவருடைய நுண்ணுடம்புகள் ஒளிமிகுத்து வீசுவதன்றி விரிவடைவதில்லை. ஆனால் தேவர்கள் களிப்படையும்போது அவருடம்புகள் நாலைந்து பங்கு நாற்புறமும் விரிந்து உருக்கி வார்த்த நவரத்தினங்களாலான ஒளிப்பிழம்பாய், ஒன்றிரண்டு மைல் அகலத்திற்குப் பரவி நிற்கும். நெற்றிக்கண் பார்வைக்கு அப்போது அவர்கள் என்றும் மறக்கவொண்ணுக் காட்சியா-யிருப்பர். அவர்கள் ஒருவரோடொருவர் ஊடாடும்போது அற்புதமான நினைவுருவங்களும் அருமையான தேவகானங்களும் அழகிய நவரத்ன மின்வெட்டுகளும் நறுமணங்களும் எல்லாம் ஒன்றுகப் பின்னிப் பிணைந்து ஒருவரிடமிருந்து ஒருவருக்குப் பறந்து செல்லும். எண்ண உருவங்கள் எல்லாத் தேவர்களுக்கும் பொதுவாயிருப்பன. ஆனால் கானதேவர்கள் பேசும்போது இன்னிசைகள் கூடுதலாகவும், தூபதேவர்கள் பேசும்போது தேவமணங்கள் கூடுதலாகவும், இவ்விதம் அவரவர் இனத்தைப் பொறுத்து அவர்களுடைய சிறப்புக்குணங்கள் அவர் பரிமாற்றங்-களில் கூடுதல் தொனித்துக் காட்டும்.

இங்கு பூதகணங்களுக்கும் தேவகணங்களுக்கு முள்ள வேறொரு வேறுபாடும் அறியத்தக்கது. தேவகணங்கள் ஆகா-யத்தில் அலைகளை உண்டுபண்ணித் தாம் விரும்பிய நிறங்கள், மணங்கள், இசைகள் முதலியவற்றை ஆக்கிக்கொள்ள வல்லவர், அதாவது தாமே அவற்றைத் தொடங்கவல்லவர்; இவையே அவர்கள் பேசும் பாஷைகள். பூதகணங்கள் அவ்வளவு வல்லமை

யுடையனவல்ல; ஆனல் இயற்கையாக கானம், தீபம், தூபம் முதலிய நடைபெறும் இடங்களில், அங்கு ஏற்படும் ஆகாய அலைகளில் மூழ்கி நீந்தி அவற்றை வேகப்படுத்தவும் அவ்வேகத்தை நீடித்து நிற்கச் செய்யவும் பூதகணங்களுக்கு இயலும். கடலைக் கொந்தளிக்கச் செய்வது மனிதனுக்கு இயலாத-தாயினும் பெரும்புயலொன்று அவ்வேலையைச் செய்யும்போது அங்கங்கே அலைகளைத் தணியவொட்டாமல் நீடிக்கச்செய்ய மனிதன் கருவிகளுக்கு இயல்வது போன்றது அது.

தேவகணங்களில் அடிப்படியிலுள்ளவர்கள் காமதேவர்கள்; அவர்கள் இச்சையுடம்பில் புவர்லோகத்தில் வாழ்பவராகையால் அவரே மனிதரோடு அதிகத் தொடர்புடையவர்கள். வன-தேவதைகள், சாஸ்தா, ஜடாமுனி என்று மனிதரால் கொண்-டாடப்படுபவ ரெல்லோரும் காமதேவர் இனங்களாம். இவர்கள் வனங்கள், தோப்புத் துரவுகள், குளப்புறவுகள், குன்றுகள், சிற்றாறுகள், நீர்நிலைகள் இவற்றைப் பேணிப் பாதுகாப்பவர்கள். மிருக பலிகளுக்கு அஞ்சி ஒதுங்குபவர்கள். முறைப்படி போற்றப்பட்டால் அவர் பாதுகாக்கும் இடங்களுக்கும் அங்கு செல்லும் மனிதருக்கும் பிராணிகளுக்கும் அவர்களாலியன்ற உதவியை விரும்பிச் செய்பவர்கள். மனிதருடைய நன்மைக்காக அவர்கள் அவ்வேலைகளைச் செய்யக் காத்துக் கொண்டிருப்பதாகக் கொள்வது தவறு; அவர்களுக்கு அமைந்துள்ள வளர்ச்சி முறையே அது. ஆனல் மக்களுடைய தற்கால மனக்கோணலால் இவர்கள் உழைப்பு இன்று பூரண பலனைக் கொடுப்பதில்லை. இமயம், பொதியம், மகேந்திரம் போன்ற புராதன மலைகளையும், பிருந்தாவனம், தண்டகாரணியம்போன்ற புராதன வனங்களையும் பாதுகாத்தும் கவர்ந்தும் அன்போடு ஆண்டும் நின்று, அங்கு இடைவிடாத சாந்தியையும் சக்தியையும் பரப்பி நிற்கும் தேவர்-கள் தேவகணத்தில் மிக உச்ச நிலையில் நிற்பவர்கள்; அவர்கள் மனிதருக்குள், சித்தர், முத்தர்களை யொப்பவர்; அரூபதேவ-ரினத்தவர். அன்னேர், உலகின் பல பாகங்களிலுமுள்ள உத்தம மலைகளையும், நதிகளையும். ஆரணியங்களையும் இவ்விதம் பாதுகாப்-பதோடு, ஒவ்வொரு நாட்டையும், ஒவ்வொரு மனிதவகுப்பையும் ஒவ்வொருவர் பொறுப்பேற்றுப் பண்படுத்தி வருபவர். அம்-மாதிரியே பெரிய ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்படும்போது

பிரதான மூர்த்தியின் யந்திரத்தோடு இணைக்கப்படுபவரும் தேவ-ருக்குள் இந்த மேலான நிலையிலிருப்பவர்களே ஆனால் அந்த ஆல-யங்களில் மனிதர் பேரில் அர்ச்சனைகள், நாமாவளிகள் ஆகம முறைப்படி செய்யப்படும்போது, அம்மக்களுக்குரிய அருளை விலாசம் பார்த்துக் கொண்டுசேர்க்கும் வேலை முன்னே கூறப்பட்ட புவர்லோக வாசிகளாகிய காமதேவர்களுக் குரியது. வேறொரு விதத்திலும் இக்காம தேவர்கள் நமக்கு உதவுவர். நாம் தொலைவி-லிருப்பவர் யாரையாவது ஆசீர்வதிக்கும்போதும், நண்பரை அன்போடு நினைக்கும்போதும், வாழ்த்தும்போதும், நமது நல்லெண்ணங்கள் சூட்சும உருவெடுத்து அவரை நோக்கிப் பறந்து செல்லும். (முதற் பாகம் பார்க்க). அப்போது அவ்வுருவங்கள் இந்தக் காமதேவரின் கவனத்தை இழுக்கு மாகையால் அவர்கள் அவற்றை அந்தந்த மக்களுக்கு ஏற்றமுறையில் புதுக்கியும் பெருக்கியும் பண்படுத்தி அவரிடம் சாரச்செய்வர். ஆயினும் இந்த நவ நாகரீகக் கலியுகத்தில் தேவர்களுக்கும் நமக்குமுள்ள அதிகத் தொடர்பு சமயக் கிரியைகளிலேயாம்.

---

பாடம் 12.

## பூஜைமுறைகள்—பொது.

ஆலயக் கிரியைகள் யாவும் அருள் நெறிகள் என்பது முன்னே சொல்லப்பட்டது. அந்த அருட் சக்திகளும் மின்சாரம் (Electricity), காந்தம் (Magnetism), ஆகர்ஷணம் (Gravitation) போன்ற இயற்கைச் சக்திகளின் இனம் என்பதும் சொல்லப்பட்டுள்ளது. மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு உலகில் பலவகையான முறைகள் கையாளப்படுகின்றன; என்றாலும் எல்லா முறைகளுக்கும் பொதுவாகச் சில இன்றியமையாத உறுப்புகள் அவை ஒவ்வொன்றிலும் காணப்படும். அவ்வாறே அருட் சக்திகளுக்கும் அனேகமான முறைகள் வேறுவகைப்பட்ட சமயங்கள் தோறும் வெவ்வேறாக அமைக்கப்பட்டிருப்பினும், அவையெல்லாவற்றிற்கும் பொதுவான சில உறுப்புக்களும் அவற்றுள் காணப்படுகின்றன. அவ்வுறுப்புகள் சிவஞான சித்தியாரில்,

“ புத்திரமார்க்கம் புகலிற் புதிய விரைப்போது
புகை ஒளி மஞ்சனம் அமுது முதற்கொண்டு, ஐந்து
சுத்திசெய்து, ஆசனம் மூர்த்தி மூர்த்தி மானும்
சோதியையும் பாவித்து ஆவாகித்துச் சுத்த
பத்தியினு லர்ச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினெடும் எரியில்வரு காரியமும் பண்ணி,
நித்தலும் இக்கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலந்தன் அருகிருப்பர் நினையுங்காலே.”

என்று சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. மானிடர் யாவரும் இறைவனுடைய மக்களே யெனக் கூறப்படுகின்றனர். அந்த இறைவனுடைய அருட் செல்வத்தை அவருடைய பிள்ளைகள் அன்பு வழிபாட்டால் அடையும் முறைகள் யாவும் புத்திர மார்க்கம் என்னப்படும். அந்த மார்க்கத்தின் அவசியமான அங்கங்களே (1) புதிய மலர், தூபதீப நைவேத்தியங்கள் (2) சுத்திகள் (3) ஆவாகனம் (அழைத்தல்) (4) ஆராதனை அர்ச்சனைகள் (5) அக்கினி காரியம், விஸர்ஜனம் அல்லது வழியனுப்புதல் என இப்பாட்டு விளக்குகின்றது. இவற்றுள்

நைவேத்தியம், திருமஞ்சனம், தீபம், தூபம், நறுமலர் ஐந்தும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்களையும், பூ புவர் சுவர் மகர் ஜனோ லோகங்களையும் ஆராதனையோடு இணைப்பன. (2) பஞ்சசுத்திகள், அருட் பிரவாகத்திற்கு இடை-யூறாக நிற்கும் பூதகணங்களையும் நினைவுருவங்களையும் ஆலயத்தி-னின்றும் அகற்றி, அநுகூலமானவற்றை வரவழைக்கவும் அவற்-றிற்கான சூட்சும கவசத்தை அமைக்கவும் உதவுவன. (3) பஞ்சா-வரண ஆவாகனங்கள், மூர்த்தியின் அருளுருவத்தையும் பரிவார-தேவதைகளையும் பிரசன்னப்படுத்துவன. (4) அவர்கள் மூலம் அருளைத் திரட்டுவன ஆராதனைகளும் போற்றுதல்களும் (5) மேற் சொன்ன கவசத்தை அகற்றி அருளைப் புறஉலகிற் பரப்பு-தலும், அழைப்பிற் கிணங்கிவந்த மூர்த்திகளையும் தேவ பூதகணங்-களையும் விடை கொடுத்தனுப்புதலும் முடிவுக்கிரியை யாகும்.

ஆன்றோரால் அருட்பொழிவிற்கு அமைக்கப்பட்டுள்ள பூஜை முறைகளெல்லாம் இந்த உறுப்புகளைப் பொதுவாகவும், அந்தந்த மதத்திற்குரிய வேறு சில/பல உறுப்புக்களைச் சிறப்-பாகவும் உடையனவாயிருக்கும். இந்த உண்மைகளை யறிந்தவர் மற்ற மதக் கிரியைகளை இகழ்ந்தோ வெறுத்தோ ஒதுக்கார்; அன்றிப் பூரண அன்போடு அவற்றிலும் பங்குகொண்டு அவற்று-லாகும் அருளையும் நற்பலனையும் அடைவார்.

## பூஜை முறைகள்—சிறப்பு வகைகள்.

சென்ற நூற்றாண்டிற் பிறந்த பெரியாருள் வங்கப்பணி முனிவர் ஒருவர். அவர் கி. பி. 1847ல் இங்கிலாந்தில் பிறந்து C. W. லெட்பீற்றர் என்ற பெயரைப் பெற்றனர். பூர்வ வாசனையின் பயனாக அவர் இளமையிலேயே விரக்தி உடையவராய்த் தம் கல்லூரிப்படிப்பு முடிந்ததும், தாம் பிறந்திருந்த ப்ரொட்டஸ்ட்டாண்டு மதத்துக் கிறிஸ்துவக் குருக்களாயினர். அத்துடன், தம் வீட்டிலும், மேனாட்டில் இறந்தவரைத் தருவிக்கும் கூடங்களாகிய ஸியான்ஸ் (Seance) அறைகளிலும், மரணத்தின் பின் மனிதர் நிலையைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அப்போது ஒரு நாள், ஸின்னேற் துரை எழுதிய "குப்த உலகம்" (The Occult World) என்ற நூலின் பழைய பிரதி ஒன்று கழிவு புஸ்தகக் கடையில் அவர் கண்ணிற்பட, அதனை வாங்கிச்சென்று படிக்கவும், மரணத்தின் பின்னுள்ள நிலைகளைப்பற்றிய பல உண்மைகள் அவருக்கு விளங்கியதோடு, அவர் முற் பிறப்புகளில் பழகியிருந்த ஞான வாசனையும் மேலோங்கித் தீவிரமாக எழுந்தது. உடனே அவர் அந்நூலிற் கூறப்பட்டிருக்கும் வித்தகச் சித்தர் கணத்தவருக்கு அடிமைப்பட ஆசை கொண்டு, அவர்களால் அமைக்கப்பட்டுள்ள தியஸாபிக்கல் சங்கத்தில் சேர்ந்தனர். அச்சங்கத்தின் அகத்தலைவர் இருவருள் மகரிஷி கூட்டுமீ நாதரைத் தமக்கு குருவாகப் பெறும் அவாவுடையவராய், இரண்டாண்டுகள் வரை அப்பெரியார் திருப்பெயரால் சமயப்பணி செய்து வரும்போது, அவர் நாடிய குருநாதரிடமிருந்து இந்தியாவிற்கு வரும்படி அவருக்கு உத்தரவு கிடைத்தது. உடனே அவர் தம் பாதிரியார் வேலையை உதறி எறிந்து விட்டு, அடுத்த கப்பலில் புறப்பட்டு இந்தியாவை அடைந்தனர். அங்கு தியஸாபிக்கல் சங்கத்தின் தலைமைக் காரியாலயமாகிய சென்னையில், அடையாறு வந்து சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது 37 (கி. பி. 1884) அதுமுதல் ஞானோபதேசமும் குருநாதருடைய நேர் பார்வையில் யோகப் பயிற்சியும் பெற்று வெகு விரைவில் நெற்றிக்கண் பார்வை முதலிய பல சித்திகளுங் கைவரப்பெற்-

றனர். இந்தப் பயிற்சிக்காலத்தில் இந்தியா, பர்மா, இலங்கை-யாகிய மூன்று நாடுகளிலும் குருநாதர் தொண்டை இடைவிடாது இயற்றிக்கொண்டிருந்தார். தம் விழிப்பு நிலையிலேயே அவர் புவர்லோக சுவர்லோகங்களைக் காணவும் ஆராயவும் நன்கு திறமை பெற்றிருந்ததனால், நெற்றிக்கண் உதவிகொண்டு பல சூட்சும ஆராய்ச்சி நூல்களை இயற்றினர். சித்திர புத்திரர் கணக்கேட்டிலிருந்து பல முற்பிறப்பு வரலாறுகளையும், நேர் பார்வையிலிருந்து இறந்தோருடைய வாழ்க்கை முறைகளையும், புவர்லோக சுவர்லோகப் பூகோள சாஸ்திரங்களையும் பெருநூல்-களாக எழுதி உதவினர். இதற்கிடையில் இங்கிலாந்திற்குச் செல்ல நேர்ந்தபோது, வழியில் மத்திய தரைக் கடலில் ஸிஸிலி என்ற தீவில் சில நாள் தங்கியிருந்தனர். இவர் ஞான சாதனந் தொடங்கியது முதல் சமயக் கிரியைகளில் இருந்த கவனம் மாறிப்போனது மாத்திரமல்லாமல், அக்கிரியைகளினால் அதிகப் பலனிருப்பதாகக் கருதியதாகவும் தெரியவில்லை. இந்த மனப்-பான்மையுடன் அவர் ஸிஸிலியில் ஒரு நாட் காலை உலாவி வருஞ் சமயத்தில், வழியில் ஒரு தேவாலயத்தில் ஆராதனை நடக்கக்-கண்டு பழைய ஞாபகங்கொண்டு உள்ளே சென்றனர். ஸிஸிலியர் அனைவரும் ரோமன் கத்தோலிக்கர். அதனால் அவருடைய முறைப்படி அங்கு ஆராதனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. வங்கப்பணி முனிவர் உள்ளே புகுந்ததும், சிலுவையின் பீடத்தி-லுள்ள தேவ நற்கருணை என்னும் அப்பத்திலிருந்து கோடிசூரியப் பிரகாசமான ஒளியொன்று வீசுவதை நெற்றிக் கண்ணாற் கண்டனர். அது அவரை மிகவும் பிரமிக்கச் செய்தது. தாம் சிறிதும் எதிர் பாராத அற்புதமொன்று அங்கு நிகழ்வதை யறிந்து, ஓராசனத்தமர்ந்து, ஆராதனை முழுவதையும் கவனிக்-கவே, அப்போது கண்ட அதிசயமானது மிகுந்த ஆச்சரியத்தை-யும் அதன் காரணத்தைக் கண்டறியும் ஆவலையும் அவருக்குக் கொடுத்தது.

கிறிஸ்தவருக்குள் பல பிரிவுகளும் பிளவுகளும் அவ்வவ-ருக்குத் தனித்தனியான ஆராதனை முறைகளும் இன்று ஏற்பட்-டிருக்கின்றன. அதனால் ஒவ்வொரு ஆராதனை முறையையும், பல ஆலயங்களிலும் பல சமயங்களிலும் பலதரப் பட்ட பரி-

பக்குவமுடைய அதிகாரிகள் நடத்தும்போதும் கவனித்தும், அவ்வாறான பல ஆண்டு முயற்சியின் பயனாக "கிறிஸ்துவக் கிரியா சாஸ்திரம்," (Science of the Sacraments) என்ற அரிய நூலை எழுதி அவர் உலகிற்கு உதவினர். அந்நூலிலிருந்து ஆலயக் கிரியைகளில் இதுவரை யாரும் அறியாதனவும், விளக்காதனவு-மான பல பல உட்பொருள்களும் மறை பொருள்களும் தெரிய வருகின்றன. அவற்றுட் சில குறிப்புகள் தமிழ் மக்கள் நன்மையின் பொருட்டு இங்கு பொறுக்கித் தரப்படுகின்றன. ஆங்கிலங் கற்றவர் மேலே சொல்லப்பட்ட மூல நூலைக் கற்பதால் இந்துமத நுணுக்கங்கள் பலவற்றை அறிய வல்லவராவர்.

பாடம் 14.

## கிறிஸ்துவ ஆராதனை.

## (The Holy Eucharist)

### முன்னுரை.

கிறிஸ்து நாதர் தம் மக்களுடைய நன்மைக்காக ஏற்படுத்தியிருக்கும் சம்ஸ்காரங்களில், ஞானஸ்நானம் (Baptism) உறுதிப்படுத்தல் (Confirmation), போன்றவை தனித்தனியாக ஒவ்வொரு மனிதனுக்கும், அதுவும் அவன் வாழ்நாளில் ஒருமுறை மாத்திரமே செய்யத் தக்கனவாம். ஆனால் அவர் அமைத்திருக்கும் தேவாராதனையானது (The Eucharist) ஆயுள் முழுவதும் அவனுக்கு நாள்தோறும் தனிப்பட்ட முறையில் நன்மை பயப்பதோடு, ஆலயத்துள்ளிருக்கும் அனைவருக்கும் ஒருசேர அருளையும், ஆலயத்தைச் சுற்றியிருக்கும் நாட்டிற்கும் நெடுந்தூரம்வரை நன்மையையும் சாந்தியையும் பரப்பி உதவுகின்றபடியால், அதுவே கிறிஸ்துவக் கிரியைகளிலெல்லாம் முதன்மையாய்த் தலை சிறந்து விளங்குவது. அத்துடன், அது கிறிஸ்தவருக்கு மாத்திரமல்லாமல் ஆலயத்தைச் சுற்றியுள்ள நானா சமயத்தாருக்கும் அதே நன்மையைப் பயக்கின்றது. அதனால் அந்த ஆலயங்கள் இறைவனை வழிபடும் இடங்களாகவும் அந்தந்த ஊருக்கு ஊட்டமளிக்கும் அருள் நிலையங்களாகவும் கருதப்படவேண்டும். இது நம் ஆலயங்களுக்கும் பொருந்தும் உண்மை.

இந்த அருள், மழைபோல எங்கும் ஒரே பரப்பாய்ப் பொழியப்படுவதில்லை. அவ்வாறு செய்வதற்குக் கடும் முயற்சி வேண்டப்படுவதோடு, முயற்சிக்குத்தக்க பலனும் பெறப்படாமையால் அது சிக்கனமான முறையுமல்ல. அதனால் குறைந்த அளவு முயற்சியில் உயர்ந்த அளவு அருளைப் பெறும் வண்ணமாக ஆராதனைக் கிரியைகள் மகான்களால் அமைக்கப்படுகின்றன. மின்சாரத்தை ஒரே யந்திரசாலையில் உற்பத்தி செய்து ஊர் முழுவதும் கம்பி வழியாக அனுப்புவதே சிக்கனமாயிருப்பது போலவும், மழை நீரைக் குளங்களில் பெருக்கி வயல்களுக்குப் பாய்ச்சுவதே விவசாய முறையாயிருப்பது போலவும்,

ஆராதனைக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட ஆலயத்தில் மலையருவி-போல அருளை இறக்கி அங்கிருந்து நாடெங்கும் அதனைப் பரப்பு-வதே இந்தச் சிக்கனமுறை. தகுதி பெற்ற எஞ்சினியரின்றி மின்சார உற்பத்தி நடைபெருததுபோல, திருச்சபை முறைப்படி அபிஷேகம் பெற்ற குருக்கள் (Priest) கையிலன்றி இந்த ஆரா-தனையும் அருட் பொழிவைக் கொடுப்பதில்லை.

தேவாராதனைக்கு மற்றொரு பெயர் இறைசேவை, கடவுள் தொண்டு (Divine Service) என்பது. ஆராதனையின் உட்-பொருளை யறியும்போது இது மிகப் பொருத்தமான பெய-ரென்பது விளங்கும். ஆலய வழிபாட்டில் இறைவனைப் போற்றிப் புகழ்வதொன்றே போதுமானதென்று பலருங் கருதுகின்றனர். அது தொழுகையேயாயினும் தொண்டாகாது. எல்லாமாய் எங்குமாய் நிற்கும் இறைவன், அருட்பெருஞ்சோதி அண்ணல், தனிப்பெருங்கருணைத் தலைவன், வேண்டுதல் வேண்டாமையிலான் நம் போற்றுதலை எதிர்பார்த்து ஆலயத் தமர்ந்திருக்கின்றனென் றெண்ணுவது வெறும் சிறு பிள்ளைத்தன மாகுமேயன்றி அறி-வுடைமையாகாது. ஆனுல் அர்ச்சகருடன் ஒத்துழைத்து அருட்-பெருக்கை அதிகப்படுத்தக் கூடுமாயின் அது தொண்டென்பது பொருந்தும். அந்தச் சேவையே அடியார்களிட மிருந்து எதிர்-பார்க்கப்படுவது.

பண்டைய மதங்களில் உணவு, பானம் இவற்றை இறைவ-னுக்கு நிவேதித்து அவற்றை அருட்சளஞ்சியங்களாக்கி அடியார்-களுக்கு வழங்கி ஆசீர்வதித்து வந்தனர். ஆராதனைகள் அடியார்-களுடைய சூட்சும உடம்புகளைப் பேணவும், அவர்கள் உட்கொண்டு அவர்கள் உடலோடு கலந்த அந்தப் பிரசாதங்கள் அவர்களுடைய ஸ்தூல உடம்புகளைப் பண் படுத்தவும் உதவின. அந்த முறையே கிறிஸ்துவ ஆராதனையிலும் கையாளப்பட்டு வருவது. ஆராதனையின்போது அடியார்கள் தன்னலமற்ற உண்மை யன்போடும் பக்தியோடும் வழிபடுவாராயின், அத்தூய சக்திகள் இறைவன் திருப்பணிக்காகத் தேவர்களால் உபயோகப்-படுத்தப்படும். இறைவன் திருப்பணி யென்பது உலக விகாச முறை—ஆன்ம முன்னேற்ற முறை—யாவரும் பேரின்பப் பெரு நிலை எய்தும் முறை.

ஆராதனையின்போது அர்ச்சகர் அழைப்பிற் கிணங்கி தேவர்கள் பிரசன்னமாகி, ஸ்தூல ஆலயத்தைக் கூடாரம்போலப் பொதிந்து ஒரு சூட்சும ஆலயத்தை நிர்மாணிக்கின்றனர். இதுவே விசுவகர்ம நிர்மாணம். (மேலே பார்க்க). இந்தக் கவச ஆலயம் பன்னீர் வடிக்கும் கருவியாகிய வாலை போன்றது. ரோஜாப்பூவைத் திறந்த பாத்திரத்திலிட்டுக் கொதிக்கவைத்தால், ஆவி காற்றோடு கலந்து சிதறிப்போய், மணத்தையுங்கொடாமல் பன்னீருமாகாமல் பாழாகிப்போகும். ஆனால் அந்த இளக்கமான நீராவியை இறுக்க மடையும்படி வாலைக்குள் அடைத்துக் குளிர்வித்தால், அது பன்னீராக மாறித் தக்க பலனைக் கொடுக்கும். அவ்விதமே ரயில் வண்டியிலும், நீராவியைத் தக்கபடி அடைத்து அதில் போதிய அமுக்க மேற்படுத்தாவிட்டால் ரயில் ஓடமாட்டாது. அதுபோன்றதே அருட் சக்திகளின் வேலையும். அவற்றிற்குப்போதிய திரட்சியையும் அமுக்கத்தையும் ஏற்படுத்த அமைவனவே இந்த சூட்சும அருளாலயங்கள். ஆலய அருட் சக்திகள் யாவும் மேலுலக சக்திகளாகையால், அவற்றிற்குரிய வாலைகளும் அடைப்புப் பாத்திரங்களும் மேலுலகப் பொருள்களாலேயே ஆக்கப்படல் வேண்டும். அந்த நிர்மாணங்களும் அம் மேலுலக வாசிகளாகிய தேவர்களாலும் பூதகணங்களாலுமே சாதாரணமாகத் திறம்படச் சமைக்கப்பட வல்லன. இந்த சூட்சும ஆலயங்கள் மனோவல்லமையால் அமைக்கப்படுகின்றமையால், இவற்றை மனக்கோயில்களென்றாலும் தவறாகாது. அணைகட்டித் தண்ணீரைத் தேக்கி அபாரமான வேலைகளைச் செய்வதுபோல, ஆராதனையில் திரட்டப்பட்ட அருளைக்கொண்டு தேவர்கள் அமோகமான வேலைகளைச் செய்வார்கள். அங்ஙனம் திரட்டப்படாத அருள் தரையில் மழை சிதறிப்போவதுபோல ஆகாயத்தில் சிதறிப்போகும். இவ்விதம் அருளைத் திரட்டும் இந்த சூட்சுமக் கட்டிடங்களுக்கு இந்நூலில் அருளாலயங்கள், அருள் திரட்டிகள், அருள் வாலைகள் (Retorts), அருள் ஆசயங்கள் (Receptacles), தேவ நிர்மாணங்கள் என்ற பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இனி, ஆன்றோர் அமைத்த விதிகளின்படி அர்ச்சகர் நடத்தும் ஆராதனையே அருளாலய நிர்மாணத்திற்கு முதற்கருவியும்

முக்கிய கருவியுமாம். சுண்ணும்பு, சாந்துகளின் உதவியால் செங்கல் கருங்கல் முதலியவற்றைக்கொண்டு ஸ்தூலமான கோவில்களைக் கட்டுவதுபோல, அன்பு பக்தி அறிவு முதலியவற்றின் உதவியால் சூட்சும உலகப் பஞ்சபூதப் பொருள்களைக்கொண்டு தேவர்கள் இந்த அருளாலயங்களை நிர்மாணிக்கின்றனர். இவற்றின் முறை முழுவதையும் அடியார்கள் ஆராய்ந்தறிந்து, அந்த அறிவின்படி ஆராதனையின்போது தம் மனம் மொழி மெய்கள் மூன்றுலும் இறைவனுக்குச் சேவை செய்வாராயின், அது தேவர்களியற்றும் வேலைக்குப் பெரிய துணைக் கருவியாயிருக்கும். அதுவே ஆலயசேவையும் இறைபணியுமாவது. அவ்வித வழிபாட்டால் அடியார்களுக்கு உயரிய நன்மையும் ஆன்ம முன்னேற்றமும் ஏற்படுவதோடு, உலகிற்கும் மட்டற்ற தூய்மையும் சாந்தியும் உண்டாகும். அத்தகைய சேவைக்குத் துணைபுரியும் பொருட்டே இந்நூல் எழுதப்படுகின்றது.

கிறிஸ்துவ ஆராதனை ஒரு கூட்டு வழிபாடு, கோஷ்டி பூஜை. (Congregational Worship). நமது ஆலயங்களிலும் அடியார்கள் பெருந்திரளாகக் கூடுவர்; ஆனுல் அங்கு ஒவ்வொருவரும் மனம்போன போக்கில் ஆடுவதும் பாடுவதும் வலம் வருவதும், அல்லது வலம் வருவதாகப் பாவித்துப் பந்தய ஓட்டம் ஓடுவதுமாக எங்கும் அமளிகுமளியாக இருக்குமேயன்றி, கிறிஸ்தவர், மகம்மதியருட்போல யாவரும் ஒன்று கூடி ஒரே மந்திரத்தை ஓதவோ பிரார்த்திக்கவோ பாடவோ செய்வதில்லை. அதனுல் ஆலயத்துள் அமைதி காணப்படுவதுமில்லை. அர்ச்சகர் தீபாராதனை நடத்தும் போதுகூட, சிலர் தலைமேல் கை குவிப்பதும் சிலர் தரையைத் தொட்டுக் குனிந்து நிற்பதும் சிலர் தாடையிலடித்துக் கொள்வதுமாகப் பலவித சிலம்ப வரிசைகள் காணப்படுமேயன்றி அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே பண்ணையோ பாட்டையோ பிரார்த்தனையையோ ஒப்புவிப்பதும் ஒரேமுறையாக வணங்குவதும் கிடையாது. பிரார்த்தனைகளும் பெரும்பாலும் சுயநலப் பிரார்த்தனைகளாக விருக்குமே தவிரப் பரார்த்த பூஜைக்கேற்ற பரநலப் பிரார்த்தனைகளாக இருப்பதுமில்லை. இந்தச் சந்தைபோன்ற தொழுகை முறைக்கு மாற்றுகவே நமது ஆலயங்களில் மாத்திரம் பெரிய மேளம் அமைந்திருப்பதாக எண்ணவேண்டியிருக்கிறது. அது எல்லாச் சந்தடிகளையும் அடக்கி அவற்றையும் மீறி நிற்பது யாவரும் அறிந்தது.

கிறிஸ்துவ ஆராதனை இதற்கு நேரே எதிர் மாறானது. அதில் அர்ச்சகருக்கும் (Priest) அடியார்களுக்கும் (Congregation) நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. அர்ச்சகர் சில மந்திரங்களை ஓத, அடியார்கள் அவற்றோடு இணைந்த அடுத்த பாகங்களை ஓதவோ பாடவோ வேண்டிய முறையில் அந்த ஆராதனை அமைந்திருக்கின்றது. மண்டியிட்டோ, இருந்தோ, நின்றோ தொழவேண்டிய கட்டங்களில் அனைவரும் ஒரே அபிநயத்துடன் தொழுகின்றனர். அவர்கள் ஓதும் உத்தாரங்களும் (Responses) பரநலங் கருதியவைகளாகவே அமைக்கப்பட்டுள்ளன. அதனால் அவர்கள் தொழுகை முறை ஆலயத்துள் மிகுந்த அமைதியைக் கொடுப்பதோடு, தேவர்கள் வேலைக்கும் திரளான அருட் பெருக்கிற்கும் இணையற்ற அனுகூலத்தையுந் தருகின்றது. தனிப்பட்ட வழிபாட்டின் அருட் பொழிவு சிறு சிறு வாய்க்காலுக்கும், கூட்டு வழிபாட்டின் அருட்பொழிவு பெரிய மலையருவிக்கும் ஒப்பாக அறிஞரால் சொல்லப்படுகின்றது இக் கூட்டு வழிபாடு தேரோட்டத்தில் நகரா அடிக்கும்போது அனைவரும் ஏகோபித்து இழுப்பது போன்றது. அல்லாதபோது தனித்தனியாக வடத்தை அசைப்பது போன்றது நம்முடைய ஆலய வழிபாடு. இக் கிறிஸ்துவ தேவாராதனை ஐந்து பகுதிகளைக்கொண்டது. அவை

1. சுத்தி செய்தல்.
2. தயாரிப்பு, அல்லது ஆயத்தஞ் செய்தல்.
3. காணிக்கை செலுத்துதல்.
4. அப்பம் பிரதிஷ்டை செய்தல்.
5. நற்கருணை வழங்குதல், அல்லது பிரசாதம் கொடுத்தல்.

என்பனவாம். இக்காலத்துக் கிறிஸ்தவர் பல இனங்களாகப் பிரிந்திருப்பதால், அவர்கள் ஆராதனைகளும் பலவிதங்களாம். அவற்றுள் இந் நூலில் விளக்கப்படுவது லிபரல் கத்தோலிக்கர் முறையாகும் (Liberal Catholic Church Service). மேல்வரும் பாடங்களைப் படிக்கும் இந்துக்களும் மற்று கிறிஸ்துவ ஆராதனையில் பழக்கமில்லாத ஏனையரும் தம்மை யடுத்துள்ள ஏதாவதொரு வேதக் கோவிலுக்குச்சென்று, அங்கு ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும் திவ்ய நற்கருணை ஆராதனையை (The Holy Eucharist) ஒன்றிரண்டு முறை கவனித்து வருவது இந் நூற்கருத்துக்கள் விளங்குவதற்கு மிக்க உதவி தருவதாயிருக்கும்.

பாடம் 14. A.

# கிறிஸ்துவ தேவாராதனை மந்திரங்கள்.

(சுருக்கம்)

## I. சுத்தி செய்தல்.

### தீர்த்தம் தெளித்தல். (Asperges).

அடியார்கள் :
(பாட)

தாவீதின் சங்கீதம்—121.

"நீர் என்னை ஈஸோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன். என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த பனியிலும் வெண்மையாவேன்.

1. எனக்கு ஒத்தாசை வரும் மலைகளுக்கு நேராக: என் கண்களை ஏறெடுக்கிறேன்.
2. வானத்தையும் பூமியையும் உண்டாக்கின: கர்த்தரிடமிருந்து எனக்கு ஒத்தாசைவரும்.
3. அவர் உன் காலைத் தள்ள வொட்டார்: உன்னைக் காக்கிறவர் உறங்கார்.
4. இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குகிறதுமில்லை: தூங்குகிறதுமில்லை.
5. கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலது பக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்.
6. பகலிலே வெயிலாகிலும் இரவிலே நிலவாகிலும்: உன்னைச் சேதப்படுத்துவதில்லை.
7. கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்: அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.
8. கர்த்தர் உன்போக்கையும் உன் வரத்தையும்: இது முதற்கொண்டு என்றைக்கும் காப்பார்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதா-காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

"நீர் என்னை ஈஸோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த பனியிலும் வெண்மையாவேன்".

### சின்ன ஆசீர்வாதம்.

சாமியார் :—*கர்த்தர் உங்களோடிருப்பாராக.*

அடியார்கள் :—*அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.*

### சுருக்க ஜெபம்.

சாமியார் :—*ஜெபம் பண்ணக் கடவோம்.*

*சர்வ வல்லமையுள்ள பிதாவே, நாங்கள் செய்யும் எந்தக் காரியங்களிலும் வழிகாட்டி, உம்மைத் தொழவும் உமக்குப் பணிசெய்யவுங் கூடியிருக்கும் உமது மக்களோடிருக்க, உம்முடைய பரிசுத்த தேவ தூதரை உமது பரலோக சிம்மாசனத்திலிருந்து அனுப்பி வைக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம்.—ஆமென்.*

## II. தயாரிப்பு.

### விண்ணப்பம். (Invocation).

சாமி :—*பிதா +, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே.*

அடி :—*ஆமென்.*

### ஞானப் பாட்டு.

சாமி :—*இப்போது நம்முடைய ஆலயத்திற்கு : அடிப்படையிடுவோமாக.*

அடி :— *கிறிஸ்து நாதரே நமக்கு அடிப்படை : நமது ஆலயத்தின் பிரதான மூலைக்கல்.*

*கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசை வீணாகும்.*

*தேவனே, உமது ஒளியையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும் : அவைகள் என்னை நடத்தி, உமது பரிசுத்த பர்வதத்திற்கும் உமது வாசஸ்தலங்களுக்கும் என்னைக்கொண்டு போவதாக.*

*அப்பொழுது நான் தேவனுடைய பீடத்தண்டைக்கும் எனக்குப் பேரானந்தமாயிருக்கிற தேவனிடத்திற்கும் பிரவேசிப்பேன் : தேவனே, என் தேவனே, உம்மைச் சுரமண்டலி* (Harp) *கொண்டு துதிப்பேன்.*

*பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் : மகிமை உண்டாவதாக.*

*ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான : சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக.—ஆமென்.*

## மனந்திரும்புதல்.

சாமி :—✝ நமக்குச் சகாயம் கர்த்தருடைய நாமத்தில் உள்ளது.

அடி :—வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் அவரே.

சாமி :—தேவனே எங்களை மனந்திரும்பச் செய்யும்: எங்கள் இருதயத்தை ஏவி அருளும்.

அடி :—அப்போது உம்முடைய மக்கள் உம்மில் மகிழ்ச்சி கொள்வார்கள்.

சாமி :—கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்.

அடி :—கர்த்தரே நமது பல்லூழி காலத்துப் பர்வதம்.

## பாவ அறிக்கை. (Confession).

அடி :—"தேவனே, நீர் நித்திய வாழ்விற்காகவும் உம்முடைய நித்தியத்தின் சாயலாகவும் மனிதனைப் படைத்துள்ளீர். ஆயினும் நாங்கள் எங்கள் பிதிரார்ஜிதத்தின் மகிமையை மறந்து சத்தியத்தின் நெறியை விட்டு விலகி அலைந்து விடுகின்றோம். ஆனால், கடவுளே, நீர் எங்களை உமக்கென்றே படைத்தீர்; உம்மை அடைந்தாலன்றி எங்களுக்கு இளைப்பாறுதல் இல்லை. எங்கள் பலவகைப்பட்ட குறைபாடுகளை உம்முடைய கருணைக் கண்ணால் நோக்கி, எங்கள் குறைகளையெல்லாம் மன்னித்தருளும். அப்போது நாங்கள் நித்திய ஒளியின் பிரகாசத்தால் நிறைந்து உமது வல்லமையையும் நன்மையையும் பிரிதிபலிப்போம். நமது கர்த்தராகிய ஏசுவின்மூலம் ஆமேன்."

## பாவ விமோசனம். (Absolution).

சாமி :—தேவனாகிய பிதா, தேவனாகிய குமாரன், தேவனாகிய பரிசுத்த ஆவி உங்களை ✝ ஆசீர்வதித்துக் காத்துப் பரிசுத்தமாக்குவாராக. கர்த்தர் உங்கள்மேல் கிருபைகூர்ந்து உங்களைக் கண்நோக்கக்கடவர். கர்த்தர் எல்லாப் பாவங்களையும் உங்களுக்கு ✝ விமோசனஞ் செய்து பரிசுத்த ஆவியினாலுண்டாகும் கிருபையையும் ஆறுதலையும் உங்களுக்குக் கட்டளையிடுவாராக. ஆமேன்."

## தூப ஆராதனை. (Censing).

சாமி :—கர்த்தர் உங்களோடிருப்பாராக.

அடி :—அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

## மகா மகிமை ஸ்தோத்திரம்.

யாவரும் :—(1) உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலுள்ள நல்லுறவு மக்களுக்கு சாந்தியும் உண்டாவதாக. கர்த்தராகிய பராபரனே, பரமராஜாவே, சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய தேவனே, உம்மைத் துதிக்கிறோம், உம்மைப் புகழ்கிறோம், உம்மை வணங்குகிறோம், உம்மை மகிமைப் படுத்துகிறோம், உமது சிறந்த மகிமையினிமித்தம் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்.

(2) பிதாவினிடமாத்திரமேயிருந்து (அதாவது தாயின் சேர்க்கையின்றி) அவதரித்த கர்த்தராயிருக்கிற கிறிஸ்துநாதரே, உள்ளுறையும் ஒளியே, கர்த்தராகிய பராபரனே, பிதாவின் சுதனே, எல்லாவற்றையும் அழகாகவும் வல்லமையுடனும் தமது பேரறிவால் நடத்தி வைக்கிறவரே, உமது கருணையைப் பொழியும்; சிருஷ்டி முழுவதையும் உமது வல்லமையினால் தாங்கிப் பாதுகாப்பவரே, எங்கள் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளும்; அண்டம் முழுவதிலும் உம்முடைய அழகைப் பிரகாசிப்பிக்கின்றவரே, உம்முடைய மகிமையை ஒளிவு மறைவின்றி விளக்கிக்காட்டும்.

(3) நீரே பரிசுத்தர், நீரே கர்த்தர், தேவரீர் ஒருவரே பரிசுத்த ஆவியோடே தேவனாகிய பிதாவாவின் மகிமையிலே + உன்னதமானவராயிருக்கிறீர்.—ஆமென்.

## சுருக்க ஜெபம்.

சாமி :—“எல்லா இருதயங்களையும், எல்லா விருப்பங்களையும், எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனே, நாங்கள் தேவரீரிடத்தில் பரிபூரணமாய் அன்பு கூரவும், உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும், எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவினிமித்தம், உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம் பண்ணியருளும்.—ஆமென்.”

## விசுவாசப் பிரமாணம். (The Creed).

யாவரும் :—

(1) “வானத்தையும் பூமியையும், காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய ஒரே தேவனை விசுவாசிக்கிறோம்.

(2) “ஒரே கர்த்தருமாய், தேவனுடைய ஹிரண்ய கர்ப்பக் குமாரனுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறோம்; அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே தமது பிதாவினாலே ஜெனிப்பிக்கப்பட்டவர்; தெய்வத்தில் தெய்வமானவர், ஜோதியில் ஜோதியானவர், மெய்த் தேவனில் மெய்த்-

தேவனானவர், உண்டாக்கப்படாமல் ஜெனிப்பிக்கப்பட்டவர், பிதாவோடே ஒரே தன்மையுடையவர், சகலத்தையும் உண்டாக்கினவர்; மனிதராகிய நமக்காகவும் நமக்கு இரட்சிப்பு உண்டாகவும் பரமண்டலத்திலிருந்து இறங்கி, பரிசுத்த ஆவியினாலே கன்னி மரியாளிடத்தில் அவதரித்து மனுஷனானார்; நமக்காகப் பொந்தியு பிலாத்துவின் காலத்தில் சிலுவையில் அறையுண்டு, பாடுபட்டு, அடக்கம் பண்ணப்பட்டார்; வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். பரமண்டலத்துக்கேறி, பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்; உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந் தீர்க்க மகிமையோடே திரும்ப வருவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவில்லை.

(3) "கர்த்தருமாய், ஜீவனைக் கொடுக்கிறவருமாய், பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமாய், பிதாவோடும் குமாரனோடும் கூடத் தொழுது தோத்தரிக்கப்படுகிறவருமாய், தீர்க்க தரிசிகள் மூலமாக உரைத்தவருமாயிருக்கிற பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறோம். ஒரே பொதுவான அப்போஸதலத் திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறோம். பாவ மன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட ஒரே ஞானஸ்நானத்தை அறிக்கையிடுகிறோம். மரித்தோர் உயிர்த்தெழுதலும் மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகும் என்று காத்திருக்கிறோம்.— ஆமென்."

சாமி :—கர்த்தர் உங்களோடிருப்பாராக.

அடி :—அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

## III. காணிக்கை செலுத்துதல்.

சுவிசேஷம் வாசித்தலும், பிரசங்கமும்.

## IV. நற்கருணை ஆராதனை.

(அப்பம் பிரதிஷ்டை செய்தல்).

(Consecration).

சுத்தி—தூபாராதனை.

சாமி :—கர்த்தாவே, இந்த தூபம் உமது சந்நிதியில் மேலெழுவதுபோல, எங்கள் பிரார்த்தனையும் உமது பார்வையில் விளங்கட்டும். உமது பரிசுத்த தேவர்கள் உம்முடைய அடியார்களைச் சூழ்ந்து, அவர்கள் மீது உமது ஆசீர்வாதத்தின் பலனைப் பொழியட்டும்.

கர்த்தர் எங்கள் இருதயத்தில் தம்முடைய அன்பின் ஆர்வத்தையும் அயராத் தண்ணளியின் சுவாலையையும் எழுப்புவாராக.

## தேவர்கள் ஆவாகனம்.

## கட்டளைப்பிரமாணம். (The Canon).

சாமி :—உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்.

அடி :—எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்.

சாமி :—நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தக் கடவோம்.

அடி :—அப்படிச் செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது.

## முகவுரை. (Preface).

சாமி :—"கர்த்தாவே, பரிசுத்த பிதாவே, சர்வ வல்லமையுள்ள நித்தியதேவனே, நாங்கள் எக்காலத்திலும் எவ்விடத்திலும் தேவரீருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவது மிகவும் தகுதியும் நீதியும் எங்களுக்கு விசேஷித்த கடமையுமாயிருக்கிறது.

"ஆதலால், தூதரோடும் பிரதான தூதரோடும், சிம்மாசனங்களோடும், துரைத்தனங்களோடும், ராஜ்யங்களோடும், நீதிவான்களோடும், வல்லமைகளோடும், கெருபீன்களோடும், சேராபீன்களோடும் பரலோக குழாங்கள் அனைத்தோடும், நாங்களும் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து, மேன்மைப் படுத்தி இடைவிடாமல் உம்மை ஸ்தோத்தரிக்கிறோம்."

யாவரும் :—"நீர் பரிசுத்தர், நீர் பரிசுத்தர், நீர் பரிசுத்தர், பரம தேவாதி தேவர், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்துள்ளன, உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமை யுண்டாவதாக.

கர்த்தரின் நாமத்திலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா."

## அருள் விநியோக விண்ணப்பம்.

சாமி :—அன்பே வடிவெடுத்த எங்கள் பிதாவே, இந்தப் பரிசுத்த ஆராதனை யக்ஞத்தைக் கீழ்க்கூறும் காரியங்களுக்காக நாங்கள் அர்ப்பணஞ் செய்ய வேண்டுகிறோம் :—

(1) உமது பரிசுத்தமுள்ள திருச்சபைக்கு சாந்தியும் ஐக்கியமும் அருளிச்செய்து, அதை உலக முழுவதிலும் மேன்மையுற நடத்துவீராக.

(2) எங்கள் அரசனுக்கும், அத்யக்ஷகருக்கும், மற்றுமுள்ள எங்கள் ஆலய குருக்கள்மாருக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும், இங்கு கூடியிருக்கும் அடியார்கள் அனைவருக்கும் அருள் வழங்குவீராக.

(3) நிலையில்லாத இந்த உலக வாழ்க்கையில் துன்பம், துக்கம், வறுமை, வியாதி முதலான உபத்திரவங்களால் வருந்து-

கிற யாவரையும், விசேஷமாக இன்னின்னாரையும் (பேர்களைச் சொல்ல) உமது தயவினாலே தேற்றி ஆதரிக்கவேண்டுமென்று பணிவாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

(4) தூல உடற்சுமையை நீக்கி உமது திருவடிக்கு நீர் அழைத்துக்கொண்ட உமது பிள்ளைகள் எல்லோருக்காகவும், விசேஷமாய் (அ—ஆ—இ—ஈ) என்போருக்காகவும் வேண்டிக் கொள்கிறோம்.

பிரதிஷ்டை ஜெபம்.

சாமி:—I—"சர்வ வல்லமையுள்ள பிதாவே, பரிசுத்த தேவனே, இந்த நற்கருணைத் திரவியங்கள் உமது புத்திரனுடைய விலையற்ற + சரீரமும் + இரத்தமுமாக எங்களுக்கு மாறும்படி அவற்றை உமது வார்த்தையாலும் பரிசுத்த ஆவியினாலும் + ஆசீர்வதித்து + அங்கீகரித்து + உறுதிப்படுத்துவீராக.

II—"தேவனே, அவர் பாடுபடுகிறதற்கு முந்தின நாளிலே, தமது பரிசுத்தமான திருக் கரங்களால் அப்பத்தை எடுத்து, தம்முடைய சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய உம்மை நோக்கிக் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அப்பத்தை + ஆசீர்வதித்துப் பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லோரும் இதை வாங்கிப் புசியுங்கள்,

"இது என்னுடைய சரீரமாயிருக்கிறது",

என்று அருளினார்.

சாமி:—"அப்படியே இராப்போஜனம் பண்ணின பின்பு, அவர் பாத்திரத்தையும் எடுத்து மறுபடியும் ஸ்தோத்திரம்பண்ணி, அதை + ஆசீர்வதித்து சீஷர்களுக்குக் கொடுத்து, இதை எடுத்து நீங்கள் எல்லோரும் பானம் பண்ணுங்கள்,

"இது என்னுடைய இரத்தமாயிருக்கிறது,"

நீங்கள் இவற்றைச் செய்யும் பொழுதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இவற்றைச் செய்யுங்கள், என்று திருவுளம் பற்றினார்."

யாவரும்:—ஓ உள்ளொளிந்த ஜோதியே, உமது சாக்கிரமெந்தில் காணப்படும் உம்மை வணங்குகிறோம். இந்தப் பூலோகத் திரையின்கீழ் உம்மை வணங்கி கனபக்தியாய் உமது சன்னிதானத்தை வாழ்த்துகிறோம்.

(1) "வாரும் வாரும் விசுவாசிகளே! வெற்றி சிறந்தோரே!
ஆனந்தக் களிப்போடே அனைவரும் வருவீரே!

"வாரும் வாரும் ஓ பெத்தல கேமுக்கு,
வந்து தூதர்களின் ராஜனைப் பாரும்,
வந்து அவரை சாஷ்டாங்கஞ் செய்வோம்,
வந்து கர்த்தராகிய கிறிஸ்துவை சாஷ்டாங்கஞ்செய்வோம்,

(2) தேவாதி தேவர், ஜோதியில் ஜோதி,
பூலோகச் சட்டையில் தம்ஜோதியை மறைத்துள்ளவர்,
மெய்த்தேவன், அவர் தேவனில் பிறந்தவர்,
வாரும் அவரைச சாஷ்டாங்கஞ் செய்வோம்.

(3) பரலோக பாடகரே, சந்தோஷத்தால் ஆர்ப்பரியும் !
பரலோகவாசிகளே, எல்லோரும் துதியுங்கள்,
உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை உண்டாவதாக,
வாரும் அவரைச சாஷ்டாங்கஞ் செய்வோம்.

(4) "கர்த்தாவே, உமது பலிபீடத்தில் வீற்றிருக்கும் உம்மை
வாழ்த்துகிறோம்'
பிதாவின் வார்த்தையே, நித்தியவெளிசசமே,
உமக்கே எக்காலமும் மேலான மகிமை ஏற்கும்,
வாரும் அவரைச சாஷ்டாங்கஞ்செய்வோம்.
ஆமென்."

## V. நற்கருணைப் பிரசாதம் வழங்குதல்.

### கவச மந்திரம்.

சாமி:—ஜெபம் பண்ணக் கடவோம். (ஜனங்கள் முழங்காலில் நிற்க) பரமாவினால் முசிப்பாற்றப்பட்ட நாங்கள் உம்மைப் பிரார்த்திப்பதாவது: கர்த்தாவே, உம்முடைய கிருபை எங்கள் இதயங்களில் ஒட்டவைக்கப்படவும் எங்கள் ஜீவியத்தில் இடைவிடாமல் காணப்படவும் அருள் செய்யும். கிருஸ்துவினிமித்தமே—ஆமென்.

சாமி:—கர்த்தர் உங்களோடிருப்பாராக.

அடி:—அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

முடிவு.

அடியார்கள்:—ஆமென், நம்முடைய தேவனுக்குத் துதியும், மகிமையும், ஞானமும், ஸ்தோத்திரமும், கனமும், வல்லமையும், சக்தியும் சதாகாலங்களிலும் உண்டாவதாக.—ஆமென்.

சாமியார்:—(ஆசீர்வாதம்) எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்களோடே இருந்து, நீங்கள் தேவனையும் அவருடைய குமாரனுகிய நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும் அன்பிலும் நிலைத்திருக்கும்படி, அது உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் காக்கக்கடவது. பிதா குமாரன் பரிசுத்த ஆவியுமாகிய சர்வ வல்லமை பொருந்திய தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது—ஆமென்.

முற்று.

பாடம் 15.

## தேவாராதனை.

### பகுதி I. தீர்த்தம் தெளித்தல், அல்லது சுத்தி செய்தல். (Asperges)

பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயங்களில் நாள் தோறும் ஆராதனை ஒழுங்காக நடைபெறும்போது, அந்த ஆலயங்கள் சாந்தி நிலயங்களாகவும் பக்திக் களஞ்சியங்களாகவும் மாறிவிடும். ஆயினும் அங்கு வரும் அடியார்கள் உலகத்தில் ஈடுபட்ட மக்களாகையால் அவர்களுடைய மனம் பலவிதக் கவலைகளாலும் எண்ணங்களாலுமே நிறைந்திருப்பது இயற்கை. உலகத்திற்கு இயற்கையான பிணி மூப்புச் சாக்காடுகள், மண் பெண் பொருளாசைகள் லாப நஷ்டங்கள், அவை காரணமாக ஏற்படும் கவலைகள் துன்பங்கள், இவை யாவும் அங்கு கூடும் மக்கள் மனத்தை உறுத்தி, ஆலயம் முழுவதையும் அத்தகைய நினைவுருவங்களால் (Thought Forms—என்ற நூல் பார்க்க) நிரப்பி விடும். பூஜை தொடங்குமுன் அந்தப் பிரதிகூலமான நினைவுருவங்களைத் தகர்த்தெறியவும், அங்குள்ள மனிதர் மனத்தை உலக விவகாரங்களிலிருந்து மாற்றி இறைவனை நோக்கித் திருப்பவும் உதவியாக, முதல் முதல் ஆலயப் பிரதட்சணம் நடைபெறும். அதாவது, அடியார்கள் அவரவர் இடத்தில் அமைதியாக ஆலயத்துள்ளே அமர்ந்திருக்கவும், பாதிரியாரும் குருக்களும் உதவிகளும் பணிவிடைக்காரரும் வெளியே பத்தி பத்தியாக நின்று, முன்னே தூபப் பணிவிடைக்காரன் தூபமிட்டுச்செல்ல, அனைவரும் கீதம் பாடிக்கொண்டு ஆலயத்துட் பிரவேசித்து, பிராகாரத்தைச்சுற்றி வலமாக வந்து சிறுவையிருக்கும் பீடத்தண்டை சேருவார்கள்.

சாம்பிராணிப் புகையின் மணம் இயற்கையாகவே மனத்திற்குச் சாந்தத்தைக் கொடுப்பது. தூபத்திலிடுமுன் அதனைச் சாமியார் சாந்தியைப் பரப்பும்படி இறைவன் பேரால் அபிமந்திரிப்பதால் அதன் இயற்கைச் சக்தி பன்மடங்கு வலுப்பெறுகின்றது. தூபக்காரன் ஆலயத்துள்ளே புகுந்ததும், அந்த நறு

மணம் கோவிலெங்கும் பரவி, அடியார்களுடைய சூட்சும உடம்புகளின் சீர்கேடான சலனங்களை ஒருவாறு பண்படுத்தி, அவரிடத்தும் ஆலயத்துள்ளும் ஒருவிதமான சாந்தியைப் பரப்புகின்றது.

இரண்டாவதாக, பாடப்படும் கீதம் தாய் மொழியிலிருப்பதால் அதன் பொருள் மனத்தைக் கவர்ந்து அதனை ஒருமுனைப்படுத்தி இறைவனிடம் திருப்புகின்றது. கீதத்தினுடைய பாக்கள் தேவாரப் பதிகங்கள் போன்று ஒரே பண்ணில் மாறி மாறிப் பாடப்படுவதால், ஆகாயத்திலேற்படும் ஒரேவிதமான ஒலியுருவங்கள் பாசறை முழக்கம்போலவும் பட்டாளத்துப் பறையடிப்புப் போலவும் அங்குள்ளோருடைய பிராணமய மனோமய கோசங்களை அடிமேல் அடியாக அடித்து அவற்றின் கனலையும் பக்தியுணர்ச்சியையும் தட்டியெழுப்பி ஊக்கப்படுத்த உதவுகின்றன. இதற்கேற்ற பண்களே ஆலயங்களில் பாடுதற்கும் பண்டைக்காலம் முதல் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் விருதுகள், தோரணங்கள, வர்ண விளக்குகள் முதலிய எடுபிடிகளை அலங்கார வரிசையாகக் கொண்டு செல்லக்கூடுமாயின், அடியார்களுடைய கண் மூக்கு செவி மூன்றும் கவரப்பட்டு அவற்றால கூடுதலான பலன் ஏற்படுகின்றது. இவ்விதம் தயாரிக்கப்பட்ட ஆலயத்தில் பூஜை ஆரம்பமாகின்றது.

பூஜையின் முதற் பகுதியின் முக்கியமான வேலைகள் :—

1. ஆலயத்தைச் சுத்தி செய்தல்,
2. அடியார்கள் மனம் வாக்குக் காயங்களை ஒற்றுமைப் படுத்தல்,
3. விசுவகர்ம தேவராகிய அருளாலய நிர்மாணதேவரை அழைத்தல்,

என மூன்றும். பூஜை நடத்தும் சாமியார், மற்றுமுள்ள பாதிரிமார், பணிவிடைக்காரர், பாடகர், அனைவரும் பிரதட்சணமாக வந்து சிலுவைப் பீடத்தண்டை சேர்ந்ததும், சாமியாரைத் தவிர மற்றவர்கள் அவரவர் இடத்தில் நிற்கின்றனர். சாமியார் பீடத்தின் முன் முழங்காற் படியிட்டு வணங்கி, "நீர் என்னை ஈஸோப்-

பினுல் சுத்திகரியும்,'' என்ற கீதத்தை அனைவரும் பாடும்படியாக அடியெடுத்துக் கொடுத்துவிட்டு, எழுந்து நின்று தீர்த்தப் பாத்திரத்தை (Aspergill) வாங்கி, அதைத் தீர்த்தத்தில் தோய்த்து உரிய மந்திரங்கூறித் தன் மீது சிலுவை அடையாளமாகத் தெளித்துத் தன்னை முதலாவதாகச் சுத்தி செய்து கொள்வர்; பின், பீடத்தையும் சிலுவையையும் மூன்றுதரம் அவ்வாறே புரோக்ஷணம் செய்வர். அப்புறம் முறையே மற்றப் பாதிரிமார், உதவிகள், பாடகர்களையும், பின்னர் நாலா திக்கிலுமுள்ள அடியார்களையும் ஆலயத்தையும், நின்ற இடத்திருந்தே முன்போலவே மந்திரங்கூறித் தெளித்துப் புரோக்ஷணம் செய்வர்.

சாமியார் புரோக்ஷணம் செய்யும்போது மற்றவர்கள் எல்லோரும் ஒன்று கூடி,

## தாவீதின் சங்கீதம்—121.

"நீர் என்னை ஈஸோப்பினுல் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த பனியிலும் வெண்மையாவேன்.

1. எனக்கு ஒத்தாசைவரும் மலைகளுக்கு நேராக:
என் கண்களை ஏறெடுக்கிறேன்.

2. வானத்தையும் பூமியையும் உண்டாக்கின:
கர்த்தரிடமிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.

3. உன் காலைத் தள்ளவொட்டார்:
உன்னைக் காக்கிறவர் உறங்கார்.

4. இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குகிறதுமில்லை:
தூங்குகிறதுமில்லை.

5. கர்த்தர் உன்னைக் காக்கிறவர்: கர்த்தர் உன்
வலது பக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிருர்.

6. பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும்:
உன்னைச் சேதப்படுத்துவதில்லை.

7. கர்த்தர் உன்னை எல்லாத்தீங்குக்கும் விலக்கிக் காப்பார்:
அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.

8. கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும்:
இதுமுதற்கொண்டு என்றைக்கும் காப்பார்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்:
மகிமை உண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான:
சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

"நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த பனியிலும் வெண்மையாவேன்" என்ற கீதத்தைப் பாடி முடிக்கின்றனர்.

ஈசோப் என்பது வெள்ளெருக்கு (Hyssop). கீதம் முடிந்தது சாமியார் ஜனங்களை ஆசீர்வதிக்கின்றனர்.

## சின்ன ஆசீர்வாதம்

இரு கைகளையும் உயர்த்தி **சாமியார்** ஓதுதல்: கர்த்தர் உங்களோடிருப்பாராக.

**அடியார்கள்** பதில் ஓதுதல்: அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

## சுருக்க ஜெபம்

**சாமியார்:**—ஜெபம் பண்ணக்கடவோம் (அனைவரும் முழந்தாளிடல்)

**சாமியார்:**—சர்வ வல்லமையுள்ள பிதாவே, நாங்கள் செய்யும் எந்தககாரியங்களிலும் வழிகாட்டி, உம்மைத் தொழவும் உமக்குப் பணிசெய்யவுங் கூடியிருக்கும் உமது மக்களோடிருக்க, உம்முடைய பரிசுத்த **தேவ தூதரை** உமது பரலோக சிம்மாசனத்திலிருந்து **அனுப்பி வைக்கும்படி**, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்கிறோம்—ஆமென்.

இது அருளாலயக் கட்டும் விஸ்வகர்மதேவர் அழைப்பு. இத்துடன் பூஜையின் முதற் பகுதி முடிவடைகின்றது.

## விளக்கக் குறிப்புகள்.

முதலில் பிரதக்ஷிணஞ் செய்யும்போது ஆலயம் பொதுப்படையாகச் சுத்தி செய்யப்படுகின்றது. பின்னர் அதனைத் தனிப்பட்ட முறையில் சுத்தி செய்வதற்காகச் சாமியார் தீர்த்தம் தெளிக்கின்றனர். "தீர்த்தந் தெளித்தல்" என்பது நமது புண்ணியாக வாசனம் போன்றதொரு கிரியை. இதற்காக முதலில் தீர்த்தம் (Holy Water) தயார் செய்யப்படுகின்றது. அதாவது, சாமியார் சுத்தமான தண்ணீரையும் சுத்தமான உறியுப்பையும் தனித்தனியாக வைத்துக்கொள்கின்றனர். சுத்தி, கழுவுதலாகிய நீர்ச்சுத்தியும் சுட்டெறித்தலாகிய நெருப்புச் சுத்தியுமென இருவகைப்படும். இது நம் கிரியைகளில் நிரீட்சணம் போன்றது. எவ்வகைச் சக்தியையும் எளிதில் உறிஞ்சிக்கொள்ளுந் தன்மை தண்ணீருக்கொரு தனிக்குணம். மின்னொழுக்குக் கம்பியை (Lightning Conductor) கிணற்றுக்குள் இறக்குவதும், சூரிய ஒளியை மருந்தாகக் கொள்வதற்கு வர்ணக் குப்பிகளில் தண்ணீரை அடைத்து வெயிலிற் பிடிப்பதுவும் இக்காரணத்தாலேயாம். ஆனால் நல்லவை தீயவை என்ற வேறுபாடின்றி அண்டின சக்தி எதையும் தண்ணீரானது அங்ஙனம் ஏற்றுக்கொள்ளும். மாசு படியாத நீரிலும் இவ்விதம் படிந்து காண்பதான அசுத்தங்கள், பூலோக ஆகாய சம்பந்தமான அசுத்தங்கள், புவர்லோக அசுத்தங்கள், சுவர்லோக அசுத்தங்கள் (Etheric, Astral, Mental impurities) என மூவகையாக விருக்கும். இவை மனித உடம்பில் சாரும்போது, அவனுடைய பிராணமய கோசத்தில் நரம்பு நோய்களையும், இச்சையுடம்பில் தீய அலைகளையும் ஆசாபாசங்களையும், மன உடம்பில் கெட்ட நினைப்புக்களையும் சுயநல எண்ணங்களையும் சூழ்ச்சிகளையும் உண்டு பண்ணும். (முதற் பாகம் பார்க்க). பலர் கைப்படும் தண்ணீரிலெல்லாம் ஸ்தூல அழுக்குகள் ஒன்றுமில்லையாயினும் இம்மூவகைப்பட்ட சூட்சும அசுத்தங்கள் இருந்துகொண்டே யிருக்கும். அதனால் முதலில் அவற்றை நீக்கும்பொருட்டுச் சாமியார் சிலுவை முத்திரையாலும் உரிய மந்திரம் பாவனைகளாலும் தண்ணீரைச் சுத்திகரிப்பர். இது புவர்லோக, சுவர்லோகச் சல்லடைகொண்டு அந்நீரை அரிப்பதுபோலாம். அப்போது நெற்றிக்கண் பார்வைக்கு அந்த அழுக்குகள் கருஞ்சாம்பல்

நிறமுடைய புகைபோலத் தண்ணீரிலிருந்து வெளிவருவது புலப்படும். அதன் பின்னர், பரிசுத்தமான எண்ணங்களையும் அன்பையும் பக்தியையும் பெருக்கும் சக்திகளை அத்தண்ணீரில் ஊட்டும் பொருட்டு, உரிய மந்திரம் முத்திரை பாவனைகளால் அதற்குச் சம்ஸ்காரஞ் செய்கின்றனர். அப்போது நெற்றிக்கண்ணுக்கு அந்நீரில் ஒரு புதிய மின்னொளி புலப்படுகின்றதாம். அம்மா திரியே கறியுப்பையுந் தயாரித்து, அந்தத் தூய உப்பை வேறு மந்திரஞ் சொல்லிச் சிலுவைக் கோலமாக மும்முறை தண்ணீரில் இட்டு நன்கு கலந்து, அக்கலப்பு நீரைக்கொண்டே ஆசீர்வதிக்கின்றனர். இதுவே "தீர்த்தம்" (Holy Water) என்று கிறிஸ்தவருக்குள் சொல்லப்படுவது. கறியுப்பிலுள்ள குளோரீன் என்ற பொருள் தகிக்குந் தன்மையது, அதனால் தேயு அல்லது அக்கினி தத்துவமுடையது. ஆகவே இவ்விதம் நீரும் நெருப்பும் சேர்ந்த இந்தத் தூய தீர்த்தம் மிகுந்த வல்லமை பொருந்திய சுத்திகாரி ஆகின்றது. இரண்டும் தனித்தனியாக இவ்வளவு பலனைத் தருவதில்லையாம். அடியார்கள் ஆலயத்துள்ளே புகும்போது இத்தீர்த்தத்தைத் தொட்டு, "என் அறிவு இச்சை செயல்கள் இதனால் தூய்மை பெருவதாக," என்று மனத்திலெண்ணி உடம்பில் தெளித்துக் கொள்ளும்போதும், "பிதாவினுடையவும் புத்திரனுடையவும் பரிசுத்த ஆவியினுடையவும் நாமத்திலே" என்று ஓதிக்கொண்டு அத்தீர்த்தத்தால் தம்மீது சிலுவை செய்து கொள்ளும்போதும், அந்நீரிலடங்கியிருக்கும் அருட் சக்திகள் அலையலையாக வெளிவந்து அவருடைய நுண்ணுடம்புகளைச் சிக்கறுத்து, அங்கு சாந்த அலைகளையும் பக்தி யலைகளையும் விளைவித்து, ஏறுமாறான அலைகளை அவற்றினின்றும் அகற்றுவது நெற்றிக்கண் பார்வைக்கு விளங்கும அற்புத நிகழ்ச்சிகளில் ஒன்றும். இதனை அனுபவித்தறிவதனாலேயே இந்துக்களிற் பலரும் கத்தோலிக்க மாதாக் கோயில்களுக்குச் சென்று சாமியாரால் தீர்த்தந் தெளிக்கப்படுகின்றனர். இதனால் குழந்தைப் பிணிகளும் முதியோருடைய பலவகைச் சிறு பிணிகளும் சில்லறை உபத்திரவங்களும் நீங்குவது இன்றைய சாதாரண அனுபவம். நம்மில் ஆலயஞ்செல்வோர் அபிஷேகத் தீர்த்தத்தை ஆசமனம் பண்ணுவதும் தலையில் தெளித்துக் கொள்வதும் மேற்சொன்ன சாந்தியைப் பெறுவதற்காகவே. ஆனால் அதன்

கருத்தை அறியாமலும், மனத்தினுள் உரிய பாவனை செய்து கொள்ளாமலும், மந்திரம் எதுவும் சொல்லிக் கொள்ளாமலும் இதனைச் செய்கின்றனர். ஆலயத்துட் சென்றவுடன் செய்ய வேண்டிய இக்கிரியையை அனேகமாக வெளி வரும்போதே செய்கின்றனர்; பலர் செய்வதேயில்லை. அங்குள்ள அபிஷேகத் திரவியங்களும் முறைப்படி இக்காலத்தில் அபிமந்திரிக்கப்படுவ-தில்லை. அது இன்றைய அர்ச்சகருடைய பல பெருந்தவறுகளில் ஒன்று. இப் பலவித குறைபாடுகளினால் நம் ஆலய அபிஷேகத் தீர்த்தம் இன்று நமக்கு அதிகப் பலனை அளிப்பதில்லை. நீரையும் மற்றும் சேர்மானத் திரவியங்களையும் கிறிஸ்துவ தீர்த்தத்திற்-போலப் புனிதப்படுத்துவதற்கு நமக்குள் அஷ்ட சம்ஸ்காரங்கள் ஏற்பட்டிருக்கின்றன அவற்றுள் நிரீக்ஷணம், தாளத்திரயம் முதலியவை தூய்மைப்படுத்தவும், புரோக்ஷணம், தாடனம், அமிர்தீகரணம் முதலியவை சக்தி யூட்டவும் அமைந்துள்ளவை. அவை யாவற்றிற்கும் தனித்தனி மந்திரங்கள், முத்திரைகள், பாவனைகளும் உள்ளன. சிவதீக்ஷை பெற்றுள்ளவர்கள் இவை யாவற்றையும் அறிவர்.

இனி, மேலே சொன்னபடி சாமியார் தீர்த்தத்தால் தன்மீது சிலுவை முத்திரை செய்து கொள்ளும்போது அவருடைய சூட்சும உடம்புகள் சுத்திகரிக்கப் படுகின்றன. அருட்பணிக்-கிரியைகள் தொடங்கும் எவரும் முதல் முதலாகத் தம்மைச் சுத்தி செய்து கொள்ளவேண்டியது மிக மிக அவசியமானது. ஏனெனில், தண்ணீர்க் குழாயே அழுக்கடைந்திருந்தால் அதன்-மூலம் வரும் தண்ணீர் எவ்விதம் சுத்தமா யிருக்கமுடியும்? நமது ஆலயக் கிரியைகளிலும் அர்ச்சகர்கள் பிராணாயாமம், சகளீ-கரணம், வியாபக பாவனை, அந்தர்யாகம் முதலியவற்றால் தம்மைத் தூய்மை செய்துகொண்ட பின்னரே மற்றக் கிரியை-களைத் தொடங்கும்படி ஆக்ஞாபிக்கப்பட் டிருக்கின்றனர். இந்து மதத்திற்கு அமைந்த சுத்திமுறை அதுவாகும். மேலுலகங்களைப் பூலோகத்தோடு இணைத்து அங்குள்ள அருளை இங்குள்ள நம்மீது பொழியச் செய்வதற்கு இந்துமத ஆலயங்களில் விக்கிரகங்களும் யந்திரங்களும் உள்ளன போலக் கிறிஸ்துவ ஆலயங்களில் சிலு-வையும் பீடமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அத்தொழிலைச் சரிவர நடத்த அவை மிக மிகத் தூயனவாயிருக்கும் பொருட்டு,

சிலுவையும் பீடமும் மும்முறை புரோக்ஷணம் செய்யப்படும். அதன் பின்னர் ஆலயமும் அங்குள்ளவரும் தூய்மை செய்யப்படு-கின்றனர். இந்தப் புரோக்ஷணத்தின்போது நீர்த்துளிகள் ஆலயத்தின் கோடிவரை செல்லவேண்டுமென்பதில்லை. தீர்த்தச் செம்பென்பது பன்னீர்ச்செம்பு போன்றதோர் கருவி, வெள்ளி-யினால் செய்யப்பட்டது, ஒரு கொண்டையும் கைபிடியும் உள்ளது அதனைத் தீர்த்தத்தில் தோய்த்து ஒவ்வொரு திக்குநோக்கிச் சாமியார் உதறும்போது, "இந்நீரிலுள்ள சக்தியால் இவ்வாலய-மும் அடியார்களும் தூய்மை பெறட்டும்," என்று மனத்துள் பாவித்துக்கொண்டே தெளிப்பர். அப்போது, மின்சாரக் கைத்-தீவட்டியாகிய டார்ச்லைட்டைப்போட்டவுடன் அதன்ஒளிக்கத்தை அதிவேகமாக முன்சென்று வெகுதூரம் விசிறிப் பரவுவதுபோல, நீர்த்துளியிலடங்கியிருக்கும் தேவ வசீகர சக்தியானது விடுபட்டு மனோவேகத்தில் ஆலயத்தின் வெளிச்சுவர்வரை சென்று, சென்ற விடமெங்கும் தூய அலைகளைப் பரப்புகின்றது. இங்கு தூய்மை-யென்பது, அடியார்கள் சம்பந்தப்பட்டவரையில் அவருடைய மனம் மொழி மெய்கள் மூன்றும் சுயநலத்தினின்றும் நீங்கிப் பக்தியுடன் இறைவனை நாடி நிற்கும் ஒருமைப் பாட்டையே உணர்த்துவது. இது அடியார்களுக்கு நம் ஆலயங்களில் பிள்ளை-யார் குட்டினால் பெறப்படுவது; அதன் விளக்கத்தைப் பின்னால் காண்க

இவ்வித அகத்தூய்மை பெறுவதற்கு அநுகூலமாக, ஆலய-மும் அடியார்களும் நல்ல வண்ணம் புறத்தூய்மை பெற்றிருக்க வேண்டுவது அத்தியாவசியம். புது நாகரிகத்தின் பலனாக நம்மில் அனேகர் உடுப்பிட்டுக்கொண்டே இன்று ஆலயந்தொழச் செல்லுகின்றனர். அவை புதிதாகச் சலவை செய்யப்பட்டவை-யாக இருப்பின் குற்றமொன்றுமில்லை. ஆனால் பெரும்பாலான சட்டைகள் சில/பல தடவைகள் அணியப்பட்டு, வேர்வை முதலிய துர்நாற்ற முடையனவாயிருக்கின்றன. அவை அணிந்தோர்க்குத் தீமையை விளைப்பதுமன்றி அருகில் நின்று வணங்குவோருக்கும் அருவருப்பையும் தீங்கையுந்தருகின்றன. அது மிகப் பாபகர-மான காரியம். தண்ணீர் எவ்வளவு தூயதாக விருப்பினும் அழுக்குக்கையால் அருந்தினால் பிணி அண்டாதிருக்குமா!




**கிறிஸ்துவப் புண்யாக வாசன சூட்சுமக் குமிழி**

1. *சாமியாா நிற்கும் இடம் - பின்னால சிலுவையும் பீடமும் - முன்னால் அடியார்களும் ஆலயமும்.
2. சிலுவைமேல் குமிழி. (பக்கப் பார்வை)
3. முன்புறம குமிழி. (பக்கப் பார்வை)

[பக்கம் 64

அன்னார் ஆலயந்தொழுவது குளிக்கப்போய்ச் சேறு பூசிக்-கொள்வது போலாம்; அவர் அது செய்தலிற் செய்யாமை நன்று. பல சட்டைகளுக்கு வகையில்லாத பாமரமக்கள் இதனை நாகரிக முறையாகக்கருதி நாற்றமுடைய சட்டைகளை அணிந்துகொண்டு இப்பொழுது ஆலயஞ் செல்கின்றனராகையால், வெளுத்த சட்டையிட்டுச் செல்லும் பணக்காரரும் மற்றவருக்கு நல் வழி-காட்டி ஆகமாட்டார்கள்; அதனால் நேரும் பாவத்திலும் பங்குடையவராவார்கள். ஆலயங்களில் உட்பிரகாரஞ் செல்ல விரும்புவோர் உடுப்புகளைக் கழற்றிவிட வேண்டுமென்ற கட்டுப் பாட்டை ஆலய அதிகாரிகள் கைக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். இன்றேல், இன்னுஞ் சிலகாலத்தில் அம் மக்கள் செருப்பிட்டு உள்ளே செல்லத் தொடங்கி விடுவர். இத்தப்பு முறைகளைத் தடுக்க இயலாதும் முயலாதும், பெருமைக்கோ பணத்துக்கோ ஆலய அதிகாரஞ் செலுத்துவோர், பின்னால் அத் தீவினைப் பலனை அனுபவியாதிரார். துவைத்த துணிகொண்டு உடம்பைப் போர்த்துக் கொள்ளுதல் குற்றமாகாது.

இனி, இப் புரோக்ஷணத்தால் ஏற்படும் சுத்தியை, நம் மனத்திலுண்டாகும் சாந்த உணர்ச்சியால் மாத்திரமே சாதாரண மக்கள் அறிய முடியும். ஆனால் நெற்றிக்கண் பார்வையுடையோர் அது நடைபெறும் முறை முழுவதையும் வேறு விதங்களிலும் காண்கின்றனர். செம்படவன் ஒருவன் ஆற்றில் வலை வீசும்-பொழுது அந்த வலை முதலில் விசிறிபோலப் படர்கின்றது. வலை-யின் விளிம்பு தண்ணீரில் படும்போது அது மிகப்பெரிய ஒரு குமிழி போலவும் கொப்புளம் போலவும் கவசம் போலவும் காணப்-படுகின்றது. அத்தகைய குமிழிக் கவசமொன்று சாமியார் தீர்த்தந் தெளிக்கும்போது ஆலயத்தினுள் உண்டாகின்றது. அது சாமியார் நிற்குமிடத்தில் நுனிபோன்று சிறுத்தும், எதிர்ப்-புறத்தில் விசிறிபோன்று விரிந்து அடியார்களை உள்ளடக்கியும், ஆலயத் தட்டட்டிக்கு மேலாக உயர்ந்தும் ஒரு மாபெருங் குமிழி-யாக இருக்கின்றது. (படம் பக்கம் 64. பார்க்க.) இந்தக் குமிழிக் கவசமே அருளாலயத்தின் ஆரம்ப நிலை. இது புவர்லோக சுவர்-லோக பஞ்ச/சப்த பூதங்களாலும் பூலோகத்தில் ஆகாயமும் அதற்கு மேற்பட்டதுமான தத்துவங்களாலும் அமைக்கப்படு-கின்றது. பூலோகமானது நிலம் நீர் தீ காற்று ஆகாயம் முதலிய

வற்றால் ஆக்கப்பட்டிருக்கின்றது. அவற்றுள் ஆகாயமோ நமது ஊனக்கண்ணுக்குப் புலப்படுவதில்லை. அதைவிட மிக நுண்மை-யான பஞ்ச/சப்த பூதங்களால் புவர்லோக சுவர்லோகங்கள் ஆக்கப்பட்டுள்ளன. (முதற் பாகம் பார்க்க) இந்த மிக நுணுக்கப் பொருள்களாலேயே மேற்சொன்ன அருளாலயக் கவசம் கட்டப்-படுகின்றது. இந்தக் குமிழி சாமியாரிடமிருந்து முன்னேக்கி விரிந்து செல்லும்போது இடையிலுள்ள சீர்கேடான அலைகளையும் எண்ண உருவங்களையும் சுருட்டிப் புரட்டித் தள்ளிக்கொண்டு போய் தனக்கு வெளியே ஒதுக்கி விடுகின்றது. அத்துடன் புறத்தே உலாவும் அசுர அலைகளையும் நினைவுருவங்களையும், ஆக்கக் கேடுபண்ணும் உபத்திரவங்களையும் விரும்பத்தகாத பூதகணங்களையும் உள்ளே புகவிடாமலும் தடுத்து நிற்கின்றது. அது, நன்கு கட்டப்பட்ட வீடு வெயிலை மழையை உள்ளே விடாமல் தடுத்து நிற்பது போலாம். அன்போடும் பக்தியோடும் அடியார்கள் கீதம் பாடும்போது இந்தக் கவசக் குமிழியானது நுனிப்பக்கத்திலும் விரிவடைந்து சாமியாரையும் சிலையையும் பீடத்தையும் அடியார்களையும் நுனி அடியென்றில்லாமல் ஒரே அளவாக வளைந்து ஆலயத்தைக் கவிந்து நிற்கும் ஒரு பிரமாண்ட-மான ஆமையோடுபோல ஆகின்றது. சுத்தி செய்யப்பட்ட இந்த மாபெரும் குமிழிக் கவசம்—ஆலயத்தைக் காத்து நிற்கும் கூர்மாவதாரம்—சாமியார் அழைப்பிற்கிணங்கி இப்போது வர-விருக்கும் தேவதூதருக்கு, நின்று வேலை செய்ய ஏற்ற கருவி-யாகின்றது. இக்கவசம் இல்லாதவிடத்தில் தேவர்கள் வந்து நின்று தம் வேலைகளைச் சரிவரச்செய்ய இயலாது போகின்றன ராம்.

இந்த ஆலய சுத்தி நமது பூஜைமுறையில் "புண்ணியாக வாசனம்" என்று சொல்லப்படும். இந்த சுத்தி செய்யப்படாத இடங்களில் தேவர்களுக்கு வந்து பணி செய்தல் எளிதல்ல வென்பது நமது ஆலயங்களுக்கும் பொருந்தும். இந்த தேவர்-களும் அழைத்தவுடனே வருவதற்கு எடுப்பார் கைப் பாவைக-ளல்ல. சில கிரியாமுறைகளால் தீக்ஷை செய்யப்பட்டோ-ருக்கே அவர்களைத் தருவிக்கும் உரிமை ஏற்படுகின்றது. அதன் விளக்கத்தைப் பின்னிணைப்பில் (Appendix) காண்க. மற்றவர் அழைப்பு அவர்கள் கவனத்துக் கெட்டுவதில்லை,



விசுவகர்மதேவர் குமிழியை விசாலித்துத் தளவரிசையிடல்

[பக்கம் 66

சுத்தி செய்யப்பட்ட ஆலயத்தில் சாமியார் சிலுவையை நோக்கி நின்று, "சர்வ வல்லமையுள்ள பிதாவே, உமது பரிசுத்த தேவதூதரை அனுப்பிவையும்," என்று பிரார்த்தித்து முடிக்கு முன்னரே, விஸ்வகர்ம இனத்தைச் சேர்ந்த ஒரு உன்னத தேவர் மின்னொளி போலத் திடீரென்று சிலுவைக்கு முன் பிரசன்ன மாகின்றனர். இவர்கள் இயற்கையில் மகர்லோகத்தில் மனோமய கோசத்திற்குமேல் வாழ்பவர்கள். ஆலயத்திருப்பணி செய்வதற்காகக் கீழிறங்கும்போது தற்காலிகமாக ஒரு மன உடம்பையும் இச்சையுடம்பையும் தமக்குக் கற்பித்துக்கொண்டு, அவற்றில் நின்று அங்கு வேலை செய்கின்றனர். இச்சையுடம்பிற்குக் கீழ் அவர்கள் இறங்குவதில்லை. அவர்களுடைய தூய பிரசன்ன மாத்திரமே ஆலயத்துள் சாந்தியையும் தூய்மையையும் அதிகப்படுத்துகின்றது. ஒருவன் கோவிலுக்குள் விருந்துகொண்டு வேண்டுமென்றே உலகக் கவலையில் உழல்வானுனல் அவன் மனத்துட் புகுந்து அவனைச் சாந்தப்படுத்துவரென்பது அதன் பொருளல்ல. உடம்பை உலர்த்த வெயில் உதவுமாயினும் வேண்டுமென்று வாவிக்குள்ளே கிடப்பவனை அவ்வெயில் ஒன்றுஞ் செய்யமாட்டாது. அதுபோலவே பக்தியைப் பெருக்க உண்மையாக விரும்புகிறவனுக்கே அந்த தேவதூதருடைய வருகையும் அவரிடமிருந்து பரவும் தூய அலைகளும் நன்கு உதவிபுரியுமே யன்றி மற்றோரை அவை தொட்டும் தொடாமலும் போகும். இவ்வுண்மை நமது இந்து ஆலயங்களுக்கும் பொருந்துவதொன்று.

மேற்சொன்ன தேவதூதர் வந்ததும், அவர் அருளாலயத்தைக் கட்ட ஆரம்பிக்கின்றனர். அவர் சிலுவைக்கு முன்னால் நின்றுகொண்டும் அதற்குமேலாக உயரே மிதந்துகொண்டுமே தம் பணியைச் செய்துமுடிப்பதைத் தவிர, கோவிலின் மற்றப்பாகங்களுக்கு நகருவதில்லை. அவர் நின்றவிடத்திருந்தே கைகளை நாற்புறமும் ஒச்சி, சக்திகளை நோக்கம்போலப் பரப்பித் தம் மனோ வல்லமையால் அருளாலயத்தை உரிய திட்டப்படி படைத்து விடுகின்றனர். அவர் முதலாவதாகக் கவசக் குமிழியைச் சிலுவைக்கு முன்னும் பின்னும் ஒரே அளவுக்கு அகற்றுகின்றனர். பின் அதனுள்ளாக அருளாலயத்தின் தளப்பரப்பைத்

தீர்மானிக்கின்றனர். (படம் பக்கம் 66. பார்க்க.) அந்தப் பரப்பு, அங்குள்ள அடியார் கூட்டத்தையும், அவருடைய பக்தி, பகுத்தறிவு, பரநல மனப்பான்மைகளாலாகும் சக்திகளையும் பொருத்ததாயிருக்கும். மூட பக்தியும் மூடக்கொள்கைகளும் சிற்றின்ப ஆசைகளுங்கொண்ட அடியார்கள், பல பல காமத்தராகிப் பதைத்தெழும் மனத்தையுடையவராய், இந்த நிர்மாணதேவர் வேலைக்கு இடைஞ்சலாகவே யிருப்பர். தன்னலமற்ற பக்தியும், பகுத்தறிவோடு கூடிய சமயக் கொள்கைகளும், பரந்த மனப்பான்மையும் உடையவர், அத் தேவதூதர் வேலைக்குப் பெரிதுந் துணைபுரிபவராவார். இவ்வுண்மை எல்லாமத ஆலய வழிபாடுகளுக்கும் பொருந்துவது.

இனி, சில பிரதான ஆலயங்களில் அதே தேவர்கள் நாள்தோறும் பிரசன்னமாகின்றனர்; ஒரு சில தேவர்கள் குறிப்பிட்ட உத்தமப் பாதிரியார்களுடனும் பட்டர்களுடனும் தனிப்பட்ட தொடர்ச்சி யுடையவராய், அவர் ஆராதிக்கும் ஆலயங்களுக்கு மாத்திரம் உதவச்செல்கின்றனர்; இதர ஆலயங்களில், ஆராதனையின்போது நிர்மாண இன தேவரில் அவகாசமுள்ள யாராவது அடுத்துக் காணப்படுபவர் அங்குவந்து பணி புரிந்து செல்கின்றனர்.

இங்கு, மேற்சொன்ன கிறிஸ்துவத் தீர்த்த சம்பந்தமான செய்தியொன்றைக் குறிப்பிடுவது குற்றமாகாது.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு,"

என்ற திருக்குறள், நேற்று இருந்தவன் இன்று இல்லையென்பதை நமக்கு நினைப்பூட்டுவது. மேல் நாட்டில் இன்றைய விஞ்ஞான முறைப் போக்குக்கும்,

"நெருநல் உளதொன்று இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்தவ் வுலகு,"

என்பது பொருத்தமாகவிருக்கும். அங்குள்ள மேதையர் ஏதோ புதிது புதிதான அற்புதங்களை ஆக்கிவிட்டதாகப் பெரிதும் விளம்பரப் படுத்துவர் ஒருநாள். மறு நாள் அதனை மறுத்துரைப்பர். என்றாலும் சில/பல அற்புதங்களை உருவாக்கியும்

உள்ளன்ரென்பதும் நாம் நன்கறிந்த உண்மையே. விமானங்கள், இசைத்தட்டுகள், கம்பியில்லாத் தந்தி, கம்பியில்லாக் காட்சி, (Television), திரைப்படங்கள், வாஞெலிப்பெட்டிகள்—நிலையங்கள், இவையாவும் முதலில் பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்டுப் பின்னர் பலராலும் பரிகசிக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் இறுதியில் அற்புதங்களாக உருப்பெற்று இலங்குபவை. இவ்வாறே வேறு பலவும் உள்ளன. புவர்லோக உண்மையை அவர்கள் இன்று ஒப்புவதில்லை. ஆயினும் கணித சாஸ்திர நிபுணர்கள் இடம், காலம் (Space and Time) என்ற இரட்டையர்களைப்பற்றி ஆராயும்போது, இடத்தில் நீளம் அகலம் உயரம் என்ற மூன்று அளவுகள் மாத்திரமன்றி நான்காவதொரு திசையும் உள்ளதாகக் காண்கின்றனர். இதனைப் புவர்லோக வியாபக தத்துவங்களில் ஒன்ருக (Fourth Dimension) நம்மவர் பண்டே கூறியுள்ளனர். அணுவென்பது நமக்குள் பூலோகத் தத்துவங்களில் முதலாவதற்குப் பெயர். அது பிரிபடக் கூடாதது என்று மேனுட்டார் ஒரு காலத்தில் கருதினர். இன்று 'அணுப்பிளவு' அவருக்குள் ஒரு சாதாரண நிகழ்ச்சி. அந்த அணு ஒவ்வொன்றிலும் அவர் ப்ரோட்டான், எலக்ட்ரான், நியூட்ரான், பீஸான், மேஸான் எனப் பல பல உருப்படிகள் அடங்கிக் கிடப்பனவாக இன்று கூறுகின்றனர். நமது பண்டையோர் சப்த லோகங்களின் ஆதி விந்துவாகிய பரமாணுவென்பதே ஒரு விதத்திலும் பிரிபடாததென்பதும், சாதாரண அணுவென்பது பூலோகத்தின் முதல் தத்துவமென்றும், அதன் உருபபுக்களைப் பிரிக்கலாகுமென்றும், அங்ஙனம் பிரிபட்ட பொருள்கள் புவர்லோகத்தின் பிருதிவி தத்துவமாகுமென்றும் கூறியுள்ளனா. (முதற் பாகம் பார்க்க) இவற்றை ஒப்பிட்டு நோக்கும்போது மேனுட்டார் புவர்லோக தத்துவங்களையே ஆராய்கின்றனரென்பதும புவர்லோகத்தின் இருப்பையும் அங்குள்ள சில நிகழ்ச்சிகளையும் சாதாரண மக்களுக்கும் புலப்படுத்தவல்ல யந்திரங்களை உருவாக்கும் சமயத்தை நெருங்கி விட்டனரென்றும் அனுமானிக்க இடமுண்டாகின்றது. இன்றைய பத்திரிகைகளில் டாக்டர் கிளேவியூஸ்கி என்ற ஒருவர் மேலே கூறிய கிறிஸ்துவத் தீர்த்தத்திற்கும் சாதாரணத் தண்ணீருக்கும் உள்ள காந்த வசீகர வேறு பாட்டைக் காட்டும் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். கிறிஸ்

தவக் குழந்தைகளுக்கு ஞான ஸ்நானம் பண்ணுவது இத்தீர்த்தத்தாலேயே. அங்ஙனம்* ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகளுக்கும் அல்லாத குழந்தைகளுக்கும் காந்த சக்தி ஈடுபாட்டில் பெரிதும் வேறுபாடுள்ளதாகவும் அதனையும் காட்டவல்ல கருவி இருப்பதாகவும் கூறுகின்றனர். இது உண்மையாயின், ஆலயக் கிரியைகளின் சூட்சும நிகழ்ச்சிகளில் சில ஸ்தூலமாக நிரூபிக்கப்படும் காலம் அடுத்துள்ளதோவென ஐயப்பாடுண்டாகிறது.

---

## MACHINE TO DIAGNOSE ILLNESS

1951—Hindu London. Jan. 15.

Dr. A. J Glazewski, who told a Devon audience to-day that people will be able to "walk through walls in the not distant future" (as reported earlier) is the inventor of a machine which he claims diagnoses illness by showing variations in waves sent out by the body, and can tell the sex of unborn children.

A French scientist, he said, had found that holy water reacted differently from ordinary tap water, and that a baptised infant differed electrostatically from an unbaptised child, he stated.

Waves from a crowd of praying pilgrims had penetrated a sealed metal box and exposed a photographic plate, though a disorganised crowd produced no effect, he added.

பாடம் 16.

## தேவாராதனை

### பகுதி II: தயாரிப்பு அல்லது ஆயத்தஞ் செய்தல்.

*இனிச் சாமியார் தயாரிப்பு வேலையைத் தொடங்குவர் :—*

**சாமியார்** :—*பிதா +, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே.*

**அடியார்கள்** :—*ஆமென்.*

*சாமியார் மேற்சொன்ன கிறிஸ்தவ மகாமந்திரத்தைச் சொல்லிச் சிலுவை முத்திரையால் மக்களை ஆசீர்வதித்து, ஆராதனையின் இரண்டாவது பகுதியைத் தொடங்குகின்றனர். அப்போது அடியார்கள் தயமீது சிலுவை யடையாளஞ்செய்து கொண்டு "ஆமென்" என்று விடையளிக்கின்றனர். இது நமது ஆலய பூஜையில் சங்கற்பம் போன்றது.*

*கிறிஸ்தவர்களின் மகாமந்திரமும் அதிகார மந்திரமுமாயிருப்பது "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே," என்பது. இதனை ரோமன் கத்தோலிக்கர், "பிதாவினுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்து ஸாந்துவினுடையவும் நாமத்திலே,"* (In the Name of the Father, and of the Son, and of the Holy Ghost). *என்று தமிழில் கூறுவர். சைவசமய குரவருள் ஒருவராகிய அப்பர் சுவாமிகள் அருளியுள்ளபடி, "ஒருவனாய் உலகேத்த நின்றவன் ஒருருவே மூவுருவமாகின்றான்," அண்டத்திற்கு அடிப்படையாகும் இச்சா ஞானக் கிரியைகளான மூவகைச் சக்திகளையும் உலகிற் பரப்பும் பொருட்டு. சைவ சமயக் கிரியைகளிலும் "ஓம் சிவ சிவ சம்போராக்ஞாய" என்பது ஒரு தொடக்க மந்திரம். இந்த ஆணை கூறியே அங்கு சங்கற்பம் செய்யப்படுகின்றது. அம்மந்திரத்தில் சிவ, சிவ, சம்போ என்பன இறைவனுடைய மூன்று மூர்த்தங்களையுங் குறிப்பன. சிவன், விஷ்ணு, பிரம்மா என்ற மும்மூர்த்தங்களையே கிறிஸ்தவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற பெயர் கொண்டு அழைப்பது. அதனால் அவர்களுக்கு, "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே" என்ற திரியேக மந்திரமே மகா மந்திரமாக இருந்து வருகின்றது.*

மந்திரங்களை யொட்டிய முத்திரைகள் பலவற்றினுள்ளும் கிறிஸ்தவர்களுக்கு உயிர்நாடியா யிருப்பது சிலுவை முத்திரை-யாம். மேற்சொன்ன மகா மந்திரம் சொல்லித் தம் மீதோ மற்றுப் பொருள்களின் மீதோ சிலுவை அடையாளத்தை வலக்கை இருவிரல் கொண்டு வரைவதே சிலுவை முத்திரை. அடியார்கள் தம்மீது வலக்கை இருவிரலால் புருவ நடு, நாபி, இடத்தோள், வலத்தோள்களை முறையே தொடுவதால் சிலுவை செய்வர். சாமியார் பிறரை ஆசீர்வதிக்கும்போது அவரை நோக்கி நின்று ஆகாயத்தில் சிலுவையை வரைவர்; ஆசீர்வதிக்கப் படவேண்டிய பொருள்களின்மீது, நேரே அந்த அடையாளத்-தைச் செய்வர். இவ்விளக்கம் கிறிஸ்தவ ரல்லாதாருக்காகக் கூறப்படுவது.

இவ்வித மந்திரம் முத்திரைகளின் உபயோகத்தையும் வல்லமையையும் அறியுமுன், தற்காலம் மறந்து விடப்பட்ட இயற்கை உண்மை யொன்றை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அதாவது, நம்மைச்சுற்றி நாலா பக்கமும் பரந்து நிற்பது இக்காலத்து அறிஞர்கள் நினைக்கின்றபடி வெறும் பாழ்-வெளியல்ல என்பதே. ஊனக்கண்ணுக்குப் புலப்படாத உலக-மொன்று—ஏன், பல உலகங்களும் பல உயிரினங்களும்—நம்மைச் சுற்றி நாற்புறமும் அகன்று விரிந்து கிடப்பதாகவே பண்டைய ஞானிகள் கூறியுள்ளனர். நாம் அந்த சூட்சும உலகை இன்று காணவில்லையாயினும், அது காணக்கூடாத தொன்றன்று. இன்னும் முளை கிளம்பாத வித்தாகக் கிடக்கும் பல கருவி கரணங்கள் ஒவ்வொரு மனிதனிடத்தும் இருந்து வருகின்றன. அவை காலக் கிரமத்தில் முளைத்தெழும் பொழுது, இன்று இவ்வுலகம் நமக்குப் புலப்படுவதுபோல அன்று அவ்வுலகங்களும் அங்கு நிகழ்வனவும் அவருக்குத் தெளிவாகத் தெரியவரும். இந்தப் பொறி புலன்கள் எல்லா மனிதருக்கும் இயற்கையாக அமைந்துள்ளனவே. மனிதவர்க்கம் நாளாவட்டத்தில் முன்-னேற்ற மடையும்போது, உலகப்போக்கை யொட்டி விகாச-முறையென்ற பரிணும முறையில் படிப்படியாக அது மேலேறி வரும்போது, எல்லா மனிதருக்குமே அந்தக் கருவி கரணங்கள் யாவும் மலர்ந்து விரிந்து தொழிற்படும். ஆயினும், தமது கடு முயற்சியால் அவற்றை இப்பொழுதே மலரச் செய்பவரும் இருக்-

கின்றனர். ஓயாத உடற் பயிற்சியால் ஒருவன் தன்னோடொத்த இளைஞரைவிடக் கூடுதல் பலவானாவதுபோல, நமக்குள் சிவராஜ-யோகம் எனப்படும் கடுமையான யோகமுறையைப் பயில்பவர்கள் இன்றே அப்பலன்களைப் பெறவல்லவர்—பெற்று வருகின்றனர்—பெற்றுள்ளவரும் இன்று இருக்கின்றனர்.

அங்ஙனம் ஆற்றல் பெற்ற மக்கள் அந்த நுண்ணுலகங்களைப் பற்றிப் பல பல செய்திகளைப் பண்டு வெளியிட்டிருப்பதோடு இன்றும் வெளியிட்டு வருகின்றனர். அன்னோர், "அவற்றை நம்புங்கள்" என்று சொல்வதைவிட்டு, "அனுபவவாயிலாகக் கண்டறியுங்கள்" என்றே இன்று கூறுகின்றனர். அவர்கள் கூற்றின்படி, நம் கண்ணுக்குப் புலப்படாத பலவகை உயிரினங்கள் மிகப் பெருந்திரளாக நம்மை நீங்காது சூழ்ந்து நிற்கின்றனவாம். அவருள், தேவர்கள், தேவகணங்கள் எனப்படுபவர் மனிதரைவிட மிக மேலான நிலையில் நிற்பவர்கள்; எண்ணிலடங்காத இறந்த மக்கள் நம்மோடொத்தவராக உள்ளவர்; கோடிக்கணக்கான பஞ்சபூத கணங்கள், மனிதராலாக்கப்பட்ட நினைவுருவங்கள் ஒலியுருவங்கள் முதலியன, மனிதனைவிடத் தாழ்ந்த நிலையிலுள்ளவை. இவர்கள் இன்று நம் கண்ணுக்கோ அறிவுக்கோ புலப்படவில்லையாயினும், இவர்களனைவரும் தத்தம் இயற்கையின்படி நன்மைக்கோ தீமைக்கோ நம்மை இடைவிடாது உந்துகின்றனர், எழுப்பித் தள்ளுகின்றனர், தூண்டிச் செலுத்துகின்றனர், நம் அறிவு இச்சை செயல்களைப் பலவிதங்களில் பாதிக்கின்றனர். அவ்விதமே நாமும் அவர்களை இடைவிடாது நம் நினைவுகளாலும் ஆசைகளாலும் செய்கைகளாலும் பாதிக்கின்றோம். இவ்வுண்மைகளை அறியாமலும் ஆராயாமலும் நாம் பெரும்பாலோர் இருட்டு வீட்டில் குருட்டெருமைபோல எப்படியோ தட்டித் தடவி முட்டி முனங்கிக்கொண்டு உலக வாழ்க்கையை நடத்தி விடுகின்றோம். ஆயினும், எத்துறையிலும் புத்திமானே பலவானாகையால் இந்த உண்மைகளை அறிந்து நடந்துகொள்பவர் இன்பத்தையும் நன்மையையும் பெறுவர்; அல்லாதவர் அவற்றை இழந்து கவல்வர்.

இனி, அரசனுடைய அதிகாரிகளிலொருவன், "அரசன் ஆணைப்படி" என்று சொல்லி ஒன்றை ஏவுவானானால் அச்சொல்-

விற்கு எவ்வளவு வல்லமையுண்டோ, அவ்வாறே இறைவனிடமிருந்து சில அதிகாரங்களைப் பெற்றுள்ள பாதிரியார் இறைவன் நாமத்திலே ஆசீர்வதிப்பதும் மிகப்பெரிய மகிமையையுடையது. பாதிரியார் கிறிஸ்தவ முறையின்படி ஆச்சாரியாபிஷேகம் பெறும்பொழுது அவருடைய சூட்சும உடம்புகள் பகவான் கிறிஸ்துநாதருடன் இணைக்கப்படுகின்றனவாம். அதனால் பாதிரியார் ஆசீர்வதிக்கும்போது பகவானுடைய அருள் வெள்ளமும் அநுக்கிரகமும் இவருடைய கை விரல்கள் வழியாக ஆசீர்வதிக்கப்படுவோர்மீது பெருவாரியாகப் பொழிகின்றனவாம். அவற்றுள் கிரியா சக்திப் பொழிவானது வெள்ளிக் கதிரவனொளி போலவும், ஞான சக்தியானது நீல ஞாயிறுபோலவும், இச்சா சக்தியானது செந்நிறச் சூரியன் போலவும் முறையே பிதா புத்திரன் பரிசுத்த ஆவியின் நாமஞ் சொல்லும்பொழுது தனித்தனியே வெளிப்பட்டுப் பின் மூன்றும் கலந்தும் அந்த ஆசீர்வாதத்தின் மூலம் ஆலயத்தை நிறைக்கின்றனவாம். அந்தக் கோடி சூரியப் பிரகாச சூட்சும ஒளியைக் காணும்போது, முன் பாடங்களிற் சொல்லப்பட்ட பூதகணங்களில் உத்தமமானவை அதில் திளைத்து ஆநந்தக் கூத்தாட, தேனைக்கண்ட ஈக்கூட்டம்போல நாற்புறத்திருந்தும் வந்து திரளுமாம்; அந்த அலைகளை விரும்பாத தாழ்ந்த பூதகணங்களோ அங்கிருந்து ஓட்டமெடுக்குமாம். தண்ணீரில் குழந்தைகள் கும்மாளம் போடும்பொழுது தடாகத்தின் அலைகள் அதிகப்படுவதுபோல, இப்பூதகணங்களின் பெருந்திரள்களால் ஆலயத்துள்ள அருளலைகளும் அதிகவேகம் பெறுகின்றனவாம்.

அடுத்ததாக, இந்த ஆசீர்வாத அருள் ஆலயத்துள்ள அடியாரைத் தாக்கும்பொழுது, அவர்களுடைய மன உடம்பு வழியாக அது உட்புகுந்து, அவர்களுடைய நுண்ணுடம்புகளைப் பண்படுத்தி ஒற்றுமைப் படுத்துகின்றன. மனிதனுடைய அறிவு இச்சை செயல்களின் மூலங்கள் அல்லது கேந்திரங்கள் (Focus Points), அவர்களுடைய தலைக்கு உயரே மனோமய கோசத்தின் மேல்பாகத்தில் தேங்காய்க் கண்களின் அமைப்புப் போன்ற மூன்று நட்சத்திரப் புள்ளிகளாகக் காணப்படும். அந்த நட்சத்திர ஒளிகள் முறையே வெண்மை நீலம் சிவப்பு நிறங்களாக விருக்கும்.

பாதிரியார் பிதா என்று சொல்லும்பொழுது வெண் புள்ளியும், குமாரன் என்று சொல்லும்பொழுது நீலப் புள்ளியும், பரிசுத்த ஆவியென்னும்பொழுது சிவப்புப் புள்ளியும் மிகக் கூடுதலாகப் பிரகாசிக்கும்; அவற்றின் வழியாகவே அருளானது மன உடம்புக்குள் புகுவதும். பக்தியின்றியும் கவனமின்றியும் தொழுபவரிடம் இந்தப் பிரகாசம் மிகக் குறைவாகவேயிருக்கும்; அருட் சார்பும் அதற்கேற்ப மட்டமாகவே யிருக்கும்.

பகவானுடன் பாதிரியாரைப்போன்று இணைக்கப்படாதிருக்கும் ஏனைய மக்கள் இந்த முத்திரை மந்திரங்களைத் தம்மீது பிரயோகிக்கும்பொழுது, எல்லா உயிர்களும் இறைவன் சார்புடையனவே யாகையால், அவரிடமிருந்து ஒரு சிறு அளவான அருள் அம்மக்கள் மீதும் வந்து படிகின்றதாம். அப்போது காமக்குரோத லோப மோக சம்பந்தமான பூதகணங்களும் நினைவுருவங்களும் அவரைவிட்டு அகலும்; அருளலைகளுக்கேற்ற அன்புக்குணங்களை விரும்பும் கணங்களும் நினைவுகளும் அவரைச் சூழ்ந்து அவருக்குச் சாந்தியையும் மன ஒருமையையும் ஊட்டும். இவ்விதம் திரண்டு கூடுபவர் தேவர்களோ தேவகணங்களோ அல்லர். அவர்கள் மிக உயர்ந்த நிலையில் நிற்பவர்கள், மனிதராலாகாத பெரும் பெரும் பணிகளில் ஈடுபட்டிருப்பவர்கள்; அவர் இந்த அருளலைகளை ஆவசியப்படுபவரல்லர். சிலுவை முத்திரை செய்து கொண்டிருக்கும் மனிதனை தேவரொருவர் காண நேரிடின், அவர் மகிழ்ச்சியுற்று அவனை ஆசிர்வதித்துச் செல்வதைத்தவிர அங்கே தங்கி நிற்பதில்லை. ஆனால் பூதகணங்களோ (Nature Spirits) அப்பேர்ப்பட்டவைகளல்ல. இவ்வித அலைகளாலேயே அவைகள் வளர்ச்சி பெறுவன; தமக்கு உகந்த அலைகள் உண்டாகும் இடங்களை எப்போதும் தேடி எதிர் பார்த்து நிற்பன. சில, தன்னல இச்சை யலைகளை விரும்புவன; வேறு சில, பரநல இச்சை யலைகளை விரும்புவன. சுய நலமிகளை விரும்பிச்சுற்றிப் பருந்துகள் போல இடைவிடாது வட்டமிட்டுக் கொண்டிருக்கும் பூதகணங்கள் அம்மக்களுடைய சுய நலத்தையும் காம விருத்திகளையும் வளர்த்துக்கொண்டே யிருக்கும். நல்லொழுக்க முடையோரைச் சூழ்ந்து நிற்கும் கணங்கள் அவரிடம் நல்ல எண்ணங்களையும் அன்பு, பக்தி, அமைதி, பொறுமை போன்ற நல்லுணர்ச்சிகளையும் அடிக்கடி எழுப்பி நிற்கும். அவையே இந்தச் சிலுவை முத்திரை,

நமக்குள் பிள்ளையார் குட்டுத் தோப்புக்கரணம்போன்ற இந்துமத அநுஷ்டான முத்திரைகள், இவற்றைக்கண்டு விரும்பி வந்து திரண்டு கூடுவன. தொற்று நோய்க் கிருமிகள் வெறும் ஊனக்கண்ணுக்குப் புலப்படுவதில்லை. ஆனால் அவற்றின் உண்மையை நாம் நம்பினும் நம்பாவிடினும் அவை நம்மைப் பாதியாதிருப்பதில்லை. அதுபோலவே பூதகணங்களின் இருப்பை நாம் நம்பினாலும் நம்பாவிட்டாலும் அவை நம்மை இடைவிடாது நன்மைக்கோ தீமைக்கோ பாதித்துக்கொண்டே யிருக்கின்றன. அவ்வுண்மையை அறிவோர்க்கு இச் சிலுவை முத்திரை மிகுந்த நற்பலனைத் தருவதொன்று. ஆனால் விருப்பு வெறுப்பு நீங்கிய மேன்மக்களுக்கு இது ஆவசியமானதன்று. அவருடைய உயரொழுக்கமே அவருக்குப் போதிய அரணாகும்.

சிலுவை முத்திரை கிறிஸ்தவருக்குப் பல அறிகுறிப் பொருள்களைத் தருவது. அவற்றின் விரிவைக் கிறிஸ்தவ அறிஞரிடம் கேட்டுத் தெரிந்து கொள்க. அவற்றுள் ஒன்று, இறைவன் இரு கைகளையும் விரித்துநின்று உலகை இடைவிடாது ஆசிர்வதிப்பதைக் குறிப்பது. அப்போது அவ்வுருவம் சிலுவைப் படம்போல விருக்கும். மற்றொன்று, கிறிஸ்துவ சமயத் தத்துவப்பொருளை அறிகுறியாகக் காட்டுவது. அதாவது, உடம்பில் வானம்போன்றுயர்ந்த புருவ நடுவாகிய பரமண்டலத்திலிருக்கும் பிதாவினிடமிருந்து, குமாரன் தொப்புளாகிய பூலோகத்திற்கிறங்கி, அங்கு உலகரட்சையின் பொருட்டுச் சிலுவையிலறையப்பட்டு, மூன்றும் நாள் உயிர்த்தெழுந்து, இடதுதோளாகிய நரகத்திற்குச் சென்று அங்குள்ள யாவருக்கும் அருள் புரிந்து, வலத்தோளாகிய பிதாவின் வலப்புறத்தமர்ந்து அண்டத்தைக் காத்து வருவதை அது குறிக்கும். இது கிறிஸ்துவேதக் காரருடைய மதக் கொள்கையின் சாராம்சம், அவர்களுடைய விசுவாசப் பிரமாணச் சுருக்கம். இனி இவையெல்லாவற்றிற்கும் மேலான உண்மை அம்முத்திரை நெற்றி, கழுத்து, இருதயம், நாபியிலுள்ள ஆதாரச் சக்கரங்களுக்கு உதவும் பலனாகும். சைவ சந்தியாவந்தனத்தில் "தோடுமிடந்தோடுத" லென்னும் கிரியையும் அடியிலிருந்து மேல் நோக்கிச் சிலுவை செய்வதை ஒத்திருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

சாமியார் கர்த்தருடைய திரித்துவ நாமஞ்சொல்லிப் பிரார்த்தனை தொடங்கும்போது அடியார்கள் "ஆமேன்" என்று ஆமோதிக்கின்றனர். "ஆமேன்" என்பது "ததாஸ்து," "அப்படியே ஆகுக," "அவ்வாறே ஆகட்டும்," என்ற பொருளுடையது. இச்சொல் முழுக்கருத்தோடு ஓதப்படாமல் வெறும் பேச்சளவாக மாத்திரம் உரைக்கப்படுமானால் அதற்குரிய ஒலி யுருவம் மாத்திரமே அவ்விடத்து உண்டாகும். ஆனால் அதனைச் சொல்பவர், "நம் விண்ணப்பப்படியே நடக்கின்றது," என்ற முழுக்கருத்துடனே, அல்லது தாம் தொழக்கூடியிருக்கும் இறை முகூர்த்தத்தை இதயத்தில் நிறுத்தி, "அவர் அருளால் அவ்விதமே ஆகின்றது," என்ற உறுதியான நம்பிக்கையுடனே அங்ஙனம் ஓதுவாரானால், அவரிடமிருந்து பக்தியலைகளும் ஆற்றல் வாய்ந்த நினைவுருவங்களும் வெளிப்போந்து பூஜைக்கு அதிகமான உதவிகளைப் புரியும். ரோமன் கத்தோலிக்கர் வெறும் "ஆமென்" என்று கூறாமல் "ஆமென் சேஸு" என்றே கூறுவர். அதாவது, "சேசுநாதர் அருளால் உறுதியாக அவ்விதமே ஆகும்," என்று அது பொருள் படும். இந்த பக்தியுருவங்கள், அலைகள் இவற்றின் உண்மைகளை நம்மவர் அறியார். அதனால் நமக்குள் "ததாஸ்து" என்பது மிகப் பராமுகமாகவே ஓதப்படுகின்றது; பலனும் அதனை யொத்தே யிருக்கும்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் எகிப்து தேசம் மிக உன்னத நாகரிகததில் இருந்தபோது, "ஆமென்" என்பது அவருடைய அன்றைய மதத்தில் இறைவன் நாமமாயிருந்தது. "ஆமென் ஆணையாகச் சொல்லுகிறேன்" என்றால் அது கலப்பில்லாத உண்மையென்று அங்கு கொள்ளப்பட்டது—இன்று நாம் கண்ணாணை, கடவுளாணை என்பது போல. "ஆமென்" என்ற சொல் பின்னர் யூத மதத்திற் புகுந்து, அங்கிருந்து கிறிஸ்து மார்க்கத்தில் மேற்சொன்ன பொருளில் வழங்கி வருகிறது.

---

குறிப்பு:—இந்நூல் சுருங்கச் சொல்லல் என்னும் முறைக்கு மாறாக, வைக்கோல் விரித்த மாதிரிக் கால்மாடு தலைமாடாகவும் ஒருமுறை சொன்னவற்றைப் பலமுறை மாறி விளக்கியும், மிக்க வழவழப்பாக

எழுதப்படுகின்றது. காரணம் யாதெனில் இது கிறிஸ்தவ ஆராதனையை விளக்கவந்த சுருக்க நூலல்ல. அந்த ஆராதனையின் அங்கங்கள் பல நமக்குள்ளும் காணப்படுவனவற்றை விளக்குவதற்காகவே இது எழுதப்படுவதால், சுருங்கச் சொல்லல் என்னும் நேர் பாதை பிடித்துச்செல்வதை விட்டு, வழியில் இடையிடையே நின்று இருபுறமும் தென்படுவனவற்றை விளக்குவது ஆவசியமாகின்றது. வாசகர்கள் இக் குறைபாட்டைப் பொறுத்துக் கொள்வார்களாக.

பாடம் 17.

## தேவாராதனை.

### பகுதி II: தயாரிப்பு—முதல்வேலை.

விண்ணப்பம் (Invocation).

**பாதிரி:**—*பிதா* +, *குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே.*

**அடியார்கள்:**—*ஆமென்.*

### ஞானப் பாட்டு.

**பாதிரி:**—(*முதலடி பாடிக்கொடுப்பர்*) *இப்போது நம்முடைய ஆலயத்திற்கு: அடிப்படை யிடுவோமாக.*

**அடியார்கள்:**—(*பாடுகிறார்கள்*) *கிறிஸ்து நாதரே நமக்கு அடிப்படை: நமது ஆலயத்தின் பிரதான மூலைக்கல்.*

*கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசை வீணாகும்.*

*தேவனே, உமது ஒளியையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்: அவைகள் என்னை நடத்தி, உமது பரிசுத்த பர்வதத்திற்கும் உமது வாசஸ்தலங்களுக்கும் என்னைக் கொண்டு போவதாக.*

*அப்பொழுது நான் தேவனுடைய பீடத்தண்டைக்கும் எனக்குப் பேரானந்தமாயிருக்கிற தேவனிடத்திற்கும் பிரவேசிப்பேன்: தேவனே, என் தேவனே, உம்மைச் சுரமண்டலி* (Harp) *கொண்டு துதிப்பேன்.*

*பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக.*

*ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக—ஆமென்.*

இதனைத் "தயாரிப்பின்" முதல் அங்கம் என்னலாம். இதில் "விண்ணப்பம்" என்பதனை நமது "அனுக்ஞைக்கு" ஒப்பிட்டால் "ஞானப்பாட்டு" என்பது நமது முறையில் "சங்கற்பம்" போன்றது. இடவிரிவஞ்சி 'விண்ணப்பப்' பாட்டில் இடை-யிடையே பாக்கள் நீக்கப்பட்டுள்ளன. இப்பாட்டை அடியார்-கள் பொருளுணர்ந்து பாடும்போது, அவர் மனத்துண்டாகும் பக்தி அலைகளும் அன்புருவங்களும், பண்ணிசை உண்டு பண்ணும் ஒலி யுருவங்களும் மேலே சொல்லப்பட்ட மாபெருங் கவசக் குமிழிக்குள் பெருக்கெடுக்கின்றன. அவற்றை உபயோகப்-படுத்தி விஸ்வகர்மதேவர் முதலில் ஆலயத்திற்குத் தளம் அமைக்-கின்றனர். கெட்டியான தளமில்லாதபோது, அருளாலயத்துள் இறங்கும் அருட் பொழிவு தரைக்குள் ஒழுகிப் போகுமாதலால், முதலில் அதற்கான தடை செய்யப்படுகின்றது. பக்தி யலைகள் பலவகைப்பட்ட ஊதா நீலங்களாக ஒளிவீசி மின்னும். அன்பு அலைகள் அவ்விதமே சிவந்த ஒளிவீசும் நிர்மாணதேவர் சிலுவைப்-பீடத்தின் முன்னால் நின்றுகொண்டு கைகளை வேண்டிய திக்கை நோக்கி நீட்டி விரலைக்கொண்டு சுட்டிக்காட்டவும், தளமானது அந்தந்தக் கோட்டில் குறுக்கும் நெடுக்குமாக வரிசை வரிசையாக அமைகின்றது. பக்தி அலைகள் நீல நிறத்தில் சதுரப் பளிங்குக் கற்கள்போல உறைந்து மூலையோடு மூலை ஒட்டி "டைமன்" கட்டம்போல வரிசையாக அமைகின்றன. அன்பலைகள் அவ்வாறே அடுத்த வரிசையில் சிவந்த கற்களாக அமைய, இவ்விதம் மாறி மாறிச் சிவப்பு நீல டைமன் வரிசையில் தளம் பூர்த்தியாகின்றது. அவ்வரிசையின் வழியாக அந்தந்த நிற அலைகள் ஊடும் பாவும்போல ஓடிக்கொண்டே யிருக்கும். அத்தளத்தின் மேல்மட்டம் ஆராதனை நடக்கும் கோவிலின் தரை மட்டமாக இருக்கும்; அதன் பரப்பு அடியார்களை உட்படுத்தி நாற்புறமும் கொஞ்சம் கூடுதலாக அகன்றிருக்கும்; அதன் ஆழம் அடியார்கள் கூட்டத்தைப் பொறுத்து இரண்டு முழக்கனம்வரை யிருக்கும். இது விண்ணுலகத் தளவரிசையாகையால் நெற்றிக்-கண்ணே காணவல்லது; பல சூரியப் பிரகாசமான பளிங்குக்-கட்டம்போலச் சிவப்பு நீல மின்னொளிகளை வீசிக்கொண்டிருப்பது.

பயங்கொள்ளித் தனமாகப் பாடும் பாடல்கள் இருண்ட நிறங்களையும் அருவருப்பான உருவங்களையும் உண்டு பண்ணும்,

(முதற் பாகம் பார்க்க.) கிறிஸ்து மதத்தில் "பாவ மன்னிப்பு" என்ற ஒரு கொள்கை இருந்து வருகின்றது. "மிகப்பெரிய பஞ்சமா பாவியாயினும் கிறிஸ்துவை மாத்திரம் அவன் நம்பி விசுவசிப்பானுனால், அவனுடைய கொடிய பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டுத் தேவ தண்டனையினின்றும் அவன் விடுபடுவான்," என்பது அக்கொள்கையின் கருத்து. இந்து மதத்திலும், புத்தமதத்திலும், அவரவர் வினையை அவரவர் அனுபவிக்காமல் தீராதென்ற கொள்கையே வற்புறுத்தப்படுகின்றது. பாவபரிகாரம் செய்யலாமே தவிரப் பாவ மன்னிப்பென்பது அங்கு இல்லை.

"தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினையறுப்பான்,"—"கொன்ற பாவம் தின்றால் தீரும்," அதாவது அனுபவித்தாலே தீரும், என்பன போன்ற நீதிமொழிகள் நம்மில் பாமர மக்களிடமும் வழங்குவன.

(1) "தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று."

(2) "தானே புரிவினையால் சாரும் இருபயனும்
தானே யனுபவித்தல் தப்பாது."

என்பன போன்றவை கர்ம நியதிகளை விளக்கும் பண்டிதர் கூற்று. இவ்வளவு தெளிவாக இந்துமதம் வினைப்பயன் முறையை விளக்கி யிருந்தும், இந்த விதியை ஏமாற்றிவிடலா மென்ற மூடநம்பிக்கையோடு பாவமன்னிப்பைக் கோரி ஆலயந்தொறும் பலர் இந்துக்களுக்குள்ளும் இருந்து வருகின்றனர். "ஏமாந்து போகாதேயுங்கள்; தேவனை ஏளனம் பண்ணமுடியாது. அவனவன் விதைத்ததையே அவனவன் அறுப்பான், அவனவன் அளந்த நாழி கொண்டே அவனவனுக்கும் அளக்கப்படும்," என்பன போன்ற வாக்கியங்கள் கிறிஸ்துவ பைபிளிலும் இருக்கின்றன. ஆயினும் பாவமன்னிப் பென்பது அவரிடையே ஒரு முக்கியமான கொள்கையாக இருந்து வருகின்றது. அதனால் அவருடைய கீதங்களில், இறைவனுடைய இரக்கத்தைக் கோரும் பொருட்டு, "நாங்கள் பாபிகள்"—"மகாபாபிகள்"—"நீசப்-

பாபிகள்"—"ஏழைப் பாபிகள்"—"எங்களுக்கு இரங்கும்"—"எம்மைத் தண்டிக்காதேயும்" "இயேசு கிறிஸ்துவுக்காக எங்களை மன்னியும்," என்பன போன்ற வாக்கியங்கள் பல இடங்களிலும் காணப்படுகின்றன. இவை அவருக்கு யூத மதத்திலிருந்து வந்த பிதிரார்ஜிதங்கள். இவற்றைப் பாடும்போது, அழகும் வசீகரமும்கொண்ட தூய பக்தியலைகளுக்குப் பதிலாக இருண்ட கரும் புகைகளே அங்கு கிளம்புகின்றன. (முதற் பாகம் பார்க்க.) அவை விஸ்வகர்மதேவர் வேலைக்கு மிகுந்த இடைஞ்சலாயிருப்பன. நெற்றிக்கண் பார்வைக்கு இக்குறைபாடு நன்கு புலப்பட்டமையால், "லிபரல் கத்தோலிக்க" ஆராதனையில் இத்தகைய கீதங்களை உபயோகிப்பதில்லை. உயர்ந்த கருத்துடைய பாக்கள் பொருத்தமான பண்களில் பாடப்படும் பொழுது, கின்னரர், கந்தர்வராதிய கானதேவர்கள் பிரசன்னமாகி அருள் அலைகளை அதிகப் படுத்துகின்றனர். பயங்கொள்ளித்தனம், சுயநலம், மூடபக்திகொண்ட பாக்கள் பாடப்படும்பொழுது, அங்கு கீழ்த்தரமான பூதகணங்கள் திரண்டு ஆலயவேலைக்கு இடைஞ்சலைக் கொடுக்கும் மருள் அலைகளை உண்டுபண்ணுகின்றன. அவை போன்றவை உட்புகாமல் தடைபட்டு நிற்கும்படியாகவே முதலாவதாக ஆலயத்துக்குக் கவசம் அமைத்துக்கொள்ளப் படுகிறது. அதனுள் நின்றே நிர்மாண தேவர் வேலை தொடங்குகின்றனர். அடியார்களுடைய இன்றைய பரிபக்குவ நிலையில் அக் கவசமில்லாதபோது இவர் நிர்மாண வேலையும் வீணாகும்.

பகுத்தறிவுடைய மக்கள் அருட் பாடல்களை அன்போடும் பக்தியோடும், தன்னலமின்றி இறைவன் புகழ்ச்சியாகவும், பாடும்போது அங்கு ஏற்படும் சக்திகளும் அலைகளும் அருளாலய அமைப்பிற்குப் பெரிதும் உதவுவன. மூட பக்தியால் ஏற்படும் சூட்சும உருவங்களும், மற்றும் தூய பக்தியுருவங்களும், வங்கப் பணிமுனிவர் நெற்றிக்கண் ஆராய்ச்சிகொண்டு இயற்றியுள்ள "நினைவுருவங்கள்" (Thought Forms) என்ற நூலில் படங்களாகக் காட்டப்பட்டுள்ளன. மூட பக்தியுள்ள மக்கள் பெருந்திரளாகக்கூடும் திருவிழாக்களில் நீராவிச் சுருள்கள், தூபப் புகைப்படலங்கள் போன்ற நினைவுருவங்கள் மட்டமானதும் இருளடைந்ததுமான ஊதா நிறங்களில் தலைக்கு மேலாக ஆகாயத்தில்

மிதக்கும்; தூய பக்தி உருவங்கள் கூர்மையான கூம்பு போலத் (Cone) தலையிலிருந்து மேலோங்கி எழுந்து தூய நீல அக்கினி-யாகப் பிரகாசிக்கும். தலைக்குமேல் கைகூப்பித் தொழுவது போன்று இந்த உருவம் காணப்படுகின்றது அன்றி இயற்கை மலர்கள் போலவும் அவை வடிவெடுக்கின்றன. அந்த உருவங்-களின் உயரமும் காந்தியும் பக்தியின் தூய்மைக்கேற்பக் கூடி-வரும். பக்தியின் அளவுக்கும் பகதர்களின் திரளுக்கும் தக்க-படி உருவங்களின் வண்ணமும் விரிவும் ஏற்படும். இந்த வண்ணத்-திற்கும் உயரத்திற்கும் பொலிப்பத்திற்கும தக்கவாறே மேலுல-கங்களிலிருந்து இறங்கும் அருட் பொழிவும் இருக்கும். கொக்கி-போன்று பிறரைப பற்றிப் பிடிக்கும் சுயநல எண்ண உருவங்-களையும், இறைவனை நோக்கிப் பறக்கும் பரம் பொருட் பக்தி யுருவங்களையும மேற் சொன்ன நூலில் படமாகக் காண்பவர் சுய-நலக் கருத்தோடு ஆலயந் தொழச்செல்வது எவ்வளவு குற்றமான காரியமென்பதை எளிதில் உணர்வர்.

அவ்வாறே பண்களாலேற்படும் ஒலியுருவங்களிலும் அருளா-லயப் பணிக்குப் பொருத்தமானவையும பொருந்தாதனவும் இருக்கின்றன. ஒலிகள் அனைத்தும் உருவங்களை யுண்டு பண்ணு-கின்றனவென்பது இன்று யாவரும் அறிந்த உண்மை. ஒருவன் பாடும்பொழுது அது இசைத்தட்டில் உருவமாகப் பதிவதும் அந்த உருவத்தில் ஊசியை ஒட்டும்பொழுது திரும்பவும் அப்-பாட்டு கேட்கப்படுவதும் இன்றைய சாதாரண நிகழ்ச்சிகளில் ஒன்று. இந்த ஒலிகள் அதே சமயத்தில் ஆகாயத்திலும பலவித-மான உருவங்களை அமைக்கின்றன இவை நெற்றிக்கண் பார்-வைக்கு விளங்குவன. இவ்வுருவங்களிற் சிலவே ஆலயப்பணிக்கு அதிக உபயோக முடையனவாகக் காணப்படுகின்றன. அறு-சுவையனைத்தும் மனித உணவுக்கு ஏற்றவையேயாகும். ஆயினும் பாயசத்தில் புளியைக் கலப்போரில்லை; பானகத்தில் பாகற்-காயை இடுவோரில்லை. அவை வேண்டப்படுஞ் சுவைகளே யாயினும், அந்த இடத்திற்குப் பொருந்தாச் சுவைகளாம். கிறிஸ்துவ ஆராதனையை நெற்றிக்கண்ணால ஆராயும்போது அவர்-களுடைய பல பண்களில் பண்டைக்கால முதலே ஆராதனைக்-கென அமைக்கப்பட்டுள்ள கிரிகோரியன் இசையே (Gregorian

Chant) மிகப் பொருத்தமானதாக் காணப்பட்டது. நமது பதிகங்களில் பப்பத்துப் பாக்கள் அமைந்திருப்பன போலவே அவர்களுடைய கீதங்களிலும் ஒரே மெட்டுடைய பல பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அதனுல் ஒரேமாதிரி உருவம், பாட்டுக்கொரு தடவையாகப் பலமுறை சிருஷ்டிக்கப்படுகின்றது. அவை அடிமேலடியடிப்பதுபோல் அடியார்களுடைய சூட்சும உடம்புகளைப் பாதித்து, அவற்றில் ஒரே அளவான அலைகளை யுண்டுபண்ணி அவற்றை ஒருமைப்படுத்த மிகவும் உதவுகின்றன. இவ்வுண்மையை யுணர்ந்தே நமது சமய குரவர்களில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தம் பதிகங்களைப் பப்பத்துப் பாட்டாக ஒரே மெட்டில் பாடியுள்ளனரென்று எண்ணவேண்டி யிருக்கிறது.

வங்கப்பணி முனிவர் நெற்றிக்கண் ஆராய்ச்சியிலிருந்து, நமது தேவாரப் பண்கள் சம்பந்தமாகவும் ஓர் உண்மை புலப்படுகின்றது. நாயன்மார்கள் காலத்திற்குப்பின் அவர்கள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள் பெரும்பாலும் மறைந்தொழிந்தனவாக, அவற்றை ஓத விரும்பிய அபயகுல சேகர சோழன் நம்பியாண்டார் நம்பியினை உதவிகொண்டு, அவற்றைச் சிதம்பரத்தின்கண் கண்டெடுத்துத் திருமுறையாக வகுத்தனன். அப்போது அப்பதிகங்களுக்குப் பண்ணடைவு பெருமையினுலே, அனைவரும் 'திருவெருக்கத்தம் புலியூரை' அடைந்து,

" ... ... ... ... ... ... ... ... ... சிவன்
மன்னுதிருக் கோயிலினை வலங்கொண்டு பணிந்து, " அரனே,
இன்னிசை தந்தரு " என்ன இரக்கமுடன் குறைந்திரப்பக்
கன்னியொரு பங்குடையோன் அருள்செய்த கூறுரைப்பாம்.

" நல்லிசை யாழ்ப்பாணனுர் நன்மரபின் வழிவந்த
வல்லி ஒருத்திக்கு இசைகள் வாய்ப்ப அளித்தோமென்று
சொல்ல, அவள்தனையழைத்துச் சுருதிவழிப் பண்தழுவு
நல்லிசையின் வழிகேட்டு நம்பியிறையுள் மகிழ்ந்தார்.

" ஆங்கவளை அம்பலத்துள் ஆடுவார் திருமுன்பே
பாங்கினுடன் கொடுவந்து பண்ணடைவு பயில்பாடல்
ஓங்கருளால் முறைபணித்தற்கு ஒக்கும்," என ஓரோசை
நீங்கரிய வானின்கண் நிகழ அரசன்கேட்டான்.

"மன்னனுக்கும் நம்பிக்கும் மறையவர் மூவாயிரவர்
பன்னரிய திருத்தொண்டர் பலதுறை யோர்களுங்கேட்க
இன்னருள் முன்வியந்துரைத்த இவண்முதலா இசைத்த இசை
தென்னிலமேல் மிகத்தோன்றத் திருவருளால் தோன்றியதாம்."

என்பது புராண வரலாறு. அதாவது, பண்வகுத்தருளுமாறு அடியார்கள் சிவபெருமானை வேண்டிக்கொண்டதாகவும, திருஞானசம்பந்தருடைய தோழரும் அவரால் பாராட்டப்பட்டவருமாகிய திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் மரபிலே பிறந்த பெண்ணொருத்திமூலம் பண்களை இறைவன் அருளிச்செய்ததாகவும் புராணவரலாறு.

பண்டைய இசைவாணர் இன்றைய பாடகர்களைவிட ஆற்றலிற் குறைந்தவரென்று கூறுவது பொருந்தாது. இன்றைய இசைவல்லார் தேவாரப் பதிகங்களையும் திருவாய்மொழிப் பிரபந்தங்களையும் "டடடா" மெட்டிலும் "லாலி" மெட்டிலும் மற்றும் மனம்போன வாறெல்லாம் பாடும்போது, அன்றைய மக்கள் அவ்விதம் துணியாத காரணம் என்ன? பண் வகுப்பதற்கு இறைவனருளை எதிர் பார்த்து நிற்பானேன்? அதன் உண்மை வங்கப்பணி முனிவர் ஆராய்ச்சியிலிருந்து புலபபடுகின்றது. சில பண்களின் ஒலியுருவங்கள் சிற்றின்பம தருவனவாகவும் வேறு சில மனச்சாந்தியையும் பக்தியையும் பெருக்குவனவாகவும் உள்ளனவாம். அருட் பாடற் பண்களில் "தகக இன்ன தகாதன இன்ன" வென்ற விதி விலக்குகள் இருப்பதை முன்னோர் அறிந்திருந்தனராதலால், பண் வகுக்கும் பொறுப்பை அவர்கள ஏற்க அஞ்சினர். சங்கீதக் கச்சேரிகளில் தனிப்பட்ட பாசுரங்களை மனமபோனவாறு பாடுவதில் குற்றமொன்று மேற்படாது. ஆனால் ஆலயங்களிலும திருவிழாக்களிலும் கோஷ்டிகானம் பண்ணுமபோது, பழைய பண்முறைப்படி பாடுவதே தகுதியுடையது, நன்மை பயப்பது. அல்லாத முறை குற்றமுடைத்து.

கிறிஸ்துவக் கிரியைகளில் பாடப்படும் கீதங்களெல்லாம், "பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக—ஆதியிலும இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும மகிமை உண்டாவதாக," என்ற தோத்திரத்தோடு முடிவுறும். இது நம்மில், "பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு"—"பண்டும் இன்றும் என்றும் உள்ளானுக்குப் பல்லாண்டு கூறுதுமே," என்பனவாகிய மங்களாஸாஸனம் போன்றது; மனத்தில் பக்தியை மிகப் பெருக்க உதவுவது.

பாடம் 18

## தேவாராதனை.

### பகுதி II: தயாரிப்பு—2-வது வேலை.

இதுவரை நடைபெற்றது புறச்சுத்தி; இனி அகச்சுத்தி செய்யப்படுகின்றது. அது மனம் திரும்புதல், பாவ அறிக்கை, பாவ விமோசனம் அல்லது மன்னிப்பு என்ற மூன்று முறைகளால் நடைபெறுகின்றது

#### 1. மனந்திரும்புதல்.

*சா:—நமக்குச் சகாயம் கர்த்தருடைய நாமத்தில் உள்ளது.*

*அ:—வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் அவரே.*

*சா:—தேவனே, எங்களை மனந்திரும்பச்செய்யும்: எங்கள் இருதயத்தை ஏவி அருளும்.*

*அ:—அப்போது உம்முடைய மக்கள் உம்மில் மகிழ்ச்சி கொள்வார்கள்.*

*சா:—கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்*

*அ:—கர்த்தரே நமது பல்லூழி காலத்துப் பர்வதம்.*

விளக்கக் குறிப்புகள்.

கிரியைகளின் உறுப்புக்களைப் பொது அம்சங்களெனவும் சிறப்பு அம்சங்களெனவும் இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட மதங்களிற் காணப்படுவன பொது அம்சங்கள், ஒன்றிற்கே தனியாக அமைந்துள்ளன சிறப்பு அம்சங்களாகும். கிறிஸ்து மதத்திலுள்ள சிறப்பு அம்சங்களிலொன்று பாவவிமோசனக்கிரியை. இது அடியார்கள் அகச் சுத்திக்கென பகவான் கிறிஸ்து நாதரால் அமைக்கப்பட்டுள்ள சிறப்புக்கிரியை. அந்த அகச் சுத்திக்கு ஏற்பட்டிருக்கும் கிரியையின் உட்பொருளை அறியாமல் அது பாவமன்னிப்பையே கொடுக்குமென்று தவறாக இன்று கருதப்படுவதால், அதனைச் சிறிது ஆராயவேண்டி-

யிருக்கின்றது. அவர்கள் பாவமன்னிப்பென்பது, பாவத்திற்குரிய தண்டனையும் துன்ப அனுபவமும் பாவஞ் செய்தவனுக்கு ஏற்படாமல், அதாவது பிரதி பலிக்காமல், நீக்கப்படுமென்பதே.

பூரண புருஷர்களால் ஆன்ம லாபத்திற்காகவும் உலக நன்மைக்காகவும் விதிக்கப்பட்டவற்றைச் செய்தல் புண்ணியமென்றும், விலக்கப்பட்டவற்றைச் செய்தல் பாவமென்றும் நீதி நூல்கள் கூறும். அந் நூல்களின்படி களவு ஒரு பாவமாகும். ஒருவன் அப்பாவத்தைச் செய்வானானால் மூன்று பலன்கள் உடனே நிகழ்கின்றன: களவு கொடுத்தவனுக்கு நேரும் நஷ்டம், அரச நீதிக்கு விரோதமான நடை, களவு செய்தவனுடைய மனத்திலும் அதன் மூலம் அவன் நுண்ணுடம்புகளிலும் ஏற்படும் சில கோளாறுகள். இவற்றுள் முன்னைய இரண்டு பலன்களுக்கும் எவனும் பரிகாரஞ் செய்தே தீரவேண்டும். அவ்வாறில்லாமல் ஒவ்வொரு கள்வனும் மன்னிக்கப்படுவானானால் அதன் பலன் உடனே உலக நடையில் தெரிந்துவிடும்; மக்கள் வாழும் அந்நாடு மாக்கள் (விலங்குகள்) வாழும் காடாக மாறிவிடும். களவு துலங்காதுபோகுங் காலங்களிலும், "அரசன் அன்று கேட்பான் தெய்வம் நின்று கேட்கும்," என்ற முதுமொழிப்படி கள்வனுக்குப் பலன் எப்பிறவியிலாயினும் வந்தே தீருமென்பதே சமய விதிகள் கூறுவது. அதனால் பாவ விமோசனத்தால் ஏற்படும் விடுதலை, நுண்ணுடம்புக் கோளாறாகிய மூன்றாவது பலனைப் பற்றியதென்று எண்ணவேண்டும். அதுவே அகச் சுத்தியாவது.

நீதியும் அரசநீதி, தெய்வ நீதியென இருவகைப்படும். அவற்றுள் தெய்வ நீதி எவ்விடத்தும் எக்காலத்தும் எவ்வுயிருக்கும் பாகுபாடின்றி ஒன்றுபோல நிகழ்வது. அரசநீதி தேச கால வர்த்தமானங்களைப் பொறுத்து மக்களால் தெய்வ நீதியை ஏகதேசமாக ஒட்டி வகுக்கப்படுவது. தெய்வ நீதியை மீறுவதே பாவம்; தெய்வநீதிக் கொவ்வாத அரசநீதிகளை மீறுவது அரசதண்டனைக்குரிய குற்றமேயன்றிப் பாவமாகாது. தெய்வ நீதியென்பது உயிர் வர்க்கங்களின் முன்னேற்றத்திற்கும் பேரின்பத்திற்குமாக இறைவன் அமைத்திருக்கும் ஒழுங்கு. அவ்வொழுங்குகளின் தொகுதியே நம் மனத்திற்கு எட்டக்கூடிய இறைவன் என்று கூடச் சொல்லலாம். இறைவனுக்கு விதி, நீதி என்ற

பெயர்கள் அதனாலேயே. அது இயற்கை என்றும் அழைக்கப்படும், இயற்கையன்னை என்றும் சொல்லுவர். அவ்வொழுங்குகள் உயிரினங்களுக்குள் யாதொரு வேற்றுமையும் பாராட்டாது, சீரிய துலாக்கோல் போல என்றும் சமனாய் நிற்கும். ஒருவன் தகாத நடையால் இறைவனுடைய ஒப்பு நோக்காகிய துலாக்கோலைத் தட்டிச் சம நிலையைக் குலைத்து விடுவானானால், தட்டிவிட்ட தராசு முனையைப்போல அது திரும்பவும் பழைய சமநிலையை எய்த வேலை செய்கின்றது. அதன் பலனாக ஏற்படும் இன்ப துன்பங்களை, பார்த்தும் கேட்டும் படிக்க மாட்டாத ஆன்மாக்களுக்கு பட்டுப் படிக்கும்படி நியமிக்கப்பட்டுள்ள இயற்கை ஆசிரியர்; அவர்களுக்கு மருந்தூட்டி வளர்க்கும் இயற்கையன்னை. அல்லாதபோது அவர்கள் நோய் குணமாகாது. அதனாலேயே "அரசன் அன்று விட்டாலும் தெய்வம் என்றுவது கேளாது விடாது," என்று கூறப்படுவது. தக்க சான்றுகள் கிட்டாதபோது அரச நீதி தவறிப்போதல் இயல்பு. தெய்வ நீதி அவ்விதம் தவறுவதில்லை. "கரும நிழல் வந்து, தாமே கணக்கெழுது"வதால் அங்கு பொய்ச்சான்றுகளும இல்லை, நீதி தவறுதலும் இல்லையாம் (மறுபிறப்பு வரலாறுகள், என்ற நூல முகவுரையைப் பார்க்க.)

ஆகவே, கிறிஸ்துவமதத்தில் பாவ விமோசனம் என்பது உண்மையில் அங்கு ஏற்படும அகச்சுத்தியை மாத்திரம் குறிப்பதைத் தவிரத் தீவினையின் எல்லாப் பயன்களையும் நீக்கிவிடும் என்பதல்ல. இந்த அகச் சுத்தி நடைபெறும் முறை அடியார் நுண்ணுடம்புகளில் நெற்றிக் கண்ணுக்கு நன்கு புலப்படுகின்றது. மனிதனுடைய பல நுண்ணுடம்புகளில் இங்கு சம்பந்தப்பட்டவை பிராண உடம்பு, இச்சையுடம்பு, உருவமன உடம்பு, அருவமன உடம்பாகிய காரண உடம்பு என்பனவாம். (விபரங்களுக்கு முதற் பாகம் பார்க்க.) இவைகள் நமது அன்னமய கோசத்தை யொட்டியும் அதனை ஊடுருவி நிறைந்தும் இருந்தபோதிலும், ஒன்றை விட்டொன்று பிரிந்து தனித்தனியாக இயங்கக்கூடிய உடம்புகளாகும். "குளோரபாரம்" போன்ற மயக்கு மருந்துகள் அன்ன உடம்பை மற்றவற்றினின்றும் தனியே பிரித்துவிடவல்லன. அப்போது அந்த அன்ன உடம்பில் வெட்டுக்குத்துகள்

ஒரு உணர்ச்சியையும் கொடுப்பதில்லை. மனிதன் இறந்தவுடன் அவனுடைய பிராண உடம்பும் தனித்துப் பிரிந்துபோய்விட, எஞ்சிய உடம்புகளுடன் அவன் புவர்லோகத்தில் சிறிது காலம் சஞ்சரிப்பான். அங்கு நாளாவட்டத்தில் இச்சையுடம்பும் இறந்துபோக, மற்ற உடம்புகள் தனித்து நிற்கும். சுவர்க்க-லோகத்தில் உருவமன உடம்பும் இறந்து பட்டபின் காரண உடம்பு வேறு பிரிந்து நிற்கும். இந்தப் பல உடம்புகளும் வேறு வேறாகப் பிரிபடாமல் நிற்கும்போது, ஒன்றோடொன்று மின்னல் போன்ற சன்னக் கம்பிகளால் பிணைக்கப்பட்டிருக்கும். ஒரு வாழைத்தண்டையெடுத்து நடுவில் ஒடித்துத் தொங்கவிட்டால், இரண்டு துண்டுகளும் தாரை நீர்போன்ற நூற்றுக்கணக்கான நூல் இழைகளால் இணைக்கப்பட்டிருப்பது காணப்படும். அந்நூல்கள் ஒன்றையொன்று ஒட்டாமலும் கோணல் சிக்கல் இல்லாமலும் நேர் கோடுகளாகத் தொங்கிக் கொண்டிருக்கும். அவ்விதமே யிருக்கும் சூட்சும உடம்புகளை ஒன்றுக்கொன்று பிணைத்து நிற்கும் அக்கினிப் பிழம்பான சன்ன இழைகள். இவற்றாலேயே உடம்புக்குடம்பு பரஸ்பர சம்பந்தம் ஏற்படுகிறது. ஒருபொருளைப் பார்க்கும்போது, கண்ணில் தட்டிய அதன் அலைகள் மூளையில் தட்டி, பிராண உடம்பின் கம்பிகள் வழியே இச்சையுடம்பில் தட்டி, அங்கிருந்து மன உடம்பில் தட்டவும் நமக்குக் காட்சி எண்ணம் நிகழ்கின்றது. அம்மாதிரியே மனம் ஒன்றை நினைக்கும்போது, அதன் அலைகள் இக்கம்பிகள் வழியாக இச்சையுடம்பிலிறங்கி அங்கிருந்து பிராண உடம்பிற்கு வந்து மூளையைத் தட்டிப் பின்னால் செயலாக நிகழ்கின்றது. இந்தக் கம்பிகள் கோணல் சிக்கலின்றி நேர்மையா யிருக்கும்போது இறைவன் அருள் மேல்கீழாக எளிதில் நடமாடும். அப்போது ஏற்படும் அறிவும் உண்மை அறிவாக விருக்கும். அல்லாதபோது அருட்போக்குக்குத் தடை ஏற்பட்டு, அவனுக்கு மயக்க அறிவே புலனாகும்; ஐயம் திரிபுணர்ச்சிகளே அவன் அனுபவங்களாக-விருக்கும். இவ்வுடம்புகளின் படங்களையும் அமைப்பையும் வேலையையும முதற் பாகத்திற் காண்க.

இறைவன் தான் படைத்த உலகங்களைப் பாதுகாப்பதற்-காகவும், அங்குள்ள உயிர் வர்க்கங்கள் இன்புற்று வாழ்வதற்-

காகவும், பலவகையான அருட் சக்திகளை இடைவிடாது பொழிந்து கொண்டே யிருக்கின்றான். அவை இறைவனிட-மிருந்து ஆற்றொழுக்குப்போல அண்டத்தின் எல்லைவரை சப்த உலகங்களிலும் ஓடிக்கொண்டிருக்கின்றன. அந்த சக்திகளை அனுசரித்து நடக்கும் விதிகளே இயற்கை விதிகள் என்றும் தெய்வ நீதி யென்றும் சொல்லப்படுவன. இந்தப் பல்வகை அருட் சக்திகளும் அவனவன் பரிபக்குவத்திற் கேற்ப மனித-னுடைய சப்த உடம்புகளிலும் புகுந்து மேல் கீழாக ஓடி அந்த உடம்புகளைப் பண்படுத்தி அவனுக்கு இன்பத்தையும் மன அமைதியையும் முன்னேற்றத்தையும் கொடுக்கின்றன. தெய்வ நீதியில் தவறி நடப்பவன் ஆற்றொழுக்கில் குறுக்கும் எதிர்ததும் நீந்துபவனைப்போல அருள் ஒழுக்கின் நேர்போக்கைவிட்டு நீங்கி விடுகிறபடியால், அவனுடைய நுண்ணுடம்புப் பிணைப்புக் கம்பிகள் நேர்மை தவறிக் கோணிச் சிக்கலடைந்து விடுகின்றன. அந்த க்ஷணமே அவன் திருவருளுக்கு விலக்காகி அதனு-லடையப்படும் பெரும் பேற்றை இழந்து விடுகின்றான். அச்சிக்கலைச் சீர்படுத்துவதே கிறிஸ்துவப் "பாவ மன்னிப்பின்" நோக்கம். பாதிரியார் பாவ விமோசன மந்திரஞ் சொல்லிச் சிலுவை முத்திரையால் மக்களை ஆசீர்வதிக்கும்போது, இறைவ-னிடமிருந்து பகவான் கிறிஸ்து நாதர் மூலம் பாதிரியார் கரதின் வழியாகச் சிக்கல் நீக்கும அருளானது பேரொளியாக இறங்கி ஆலயத்துள்ளோரைச் சீர்படுத்துகின்றது. அதன் பின்னர் அவர் அங்கு பூரண அனுக்கிரகம்பெற அருகராகின்றனர்.

திருவருட் சிக்கு ஏற்படும் முறையைக் கூறியபின், அவ்விதச் சிக்கல்கள் நம்மிற் பெரும்பாலோருக்கு எப்போதும் இருந்து கொண்டே யிருக்குமென்பதை எடுத்துக் காட்டவேண்டுவதில்லை. அது கிறிஸ்துவக் கிரியையிற் போலச் செயற்கை முறையால் அவ்வப்போது நீக்கப்படாதபோது, இயற்கை முறையில் நாளடைவில் வெகு சாவதானமாக விடுதலையாகும். அதற்கு மாதக் கணக்கும் வருஷக்கணக்கும் ஆகுமாகையால் அதற்குள்ளாக வேறு சிக்கல்க ளேற்பட்டு, இவ்விதம் நம் நுண்ணுடம்புகள் சிக்கல் நிலையிலேயே என்றும் இருந்துவரும். 'பெண்கள் அணியும் கவரிமான் முடியைப் பலரும் அறிவர். அது சிக்கற் படும்போது அதனைக் கையால் சிக்கெடுக்கலாகும்; அல்லது ஆற்றிலோ

தண்ணீர்க் குழாயிலோ அலசி அலசிப் பிரயாசையோடு சிக்கலை நீக்கவுஞ் செய்யலாம். முன்னது சீக்கிரம் நடைபெறும்; பின்னது மிகத் தாமதப்படும். அதுபோன்றவையே மேற்கூறிய சூட்சுமச் சிக்கலகற்றும் இருமுறைகளும்.

இந்தப் "பாவ விமோசன"த்திற்கு முக்கியமான முன்னெச்சரிக்கையாயிருப்பது 'மனந்திரும்புதல்' என்ற மந்திரம். இதில் பிரயோகமாகும், "எங்கள் இருதயத்தை ஏவியருளும், அல்லது, பிரகாசிக்கப் பண்ணும்" (Quicken us) என்னுஞ் சொற்கள் நமது காயத்ரி மந்திரங்கள் எல்லாவற்றிலும் காணப்படும் "பிரசோதயாது," என்ற பொருளுடையது. கிரியைகளில் உயிர்ப்பாகமாயுள்ள மந்திரங்களின் ஒற்றுமையும் இதனால் விளங்கும். "மனந்திருமபுதல்" என்பது இறைவனிடம் மனத்தைத் திருப்புதலும், அவருடைய அருளின் வல்லமையில் பூரண நம்பிக்கை வைத்தலுமாம். இவற்றைச் செய்யாது பராமுகமாயிருப்போரிடம் சிக்கல் நீக்கும் சக்தி பூரண பலனைத்தராது போகின்றதாம். இது நெற்றிக்கண்ணால் காணப்பட்ட நிகழ்ச்சி.

'திருவருட்பயன்' என்ற சைவசித்தாந்த நூலில் இறைவனைப் பற்றி,

"நலமிலன் நண்ணார்க்கு, நண்ணினர்க்கு நல்லன்,
சலமிலன், பேர சங்கரன்."

என்ற குறளொன்று உள்ளது. "தம்மிடம் மனந்திரும்பாதவர்க்கு நன்மையில்லாதவன், மனந்திரும்புபவருக்கு நன்மையாயுள்ளவன்; ஆயினும் விருப்பு வெறுப்பு இல்லாதவன், அவன் பேரும் 'யாவருக்கும் சுகத்தைச் செய்பவன்' என்பதே," என்று இக்குறள் பொருள் படுகின்றது. இறைவனுடைய தன்மை இன்னதென உணரமாட்டாத நமக்கு இக்கருத்துக்கள் முன்னுக்குப் பின் பூரணகத் தோன்றுகின்றன. ஆனால் சங்கரன் என்ற சொல்லைச் சூரியன் என்று மாற்றியமைப்போமானால், இந்தக் குறளின் உண்மை எளிதில் விளங்கும். சூரியன் விருப்பு வெறுப்பின்றி எங்கும ஒருப்போல ஒளியையும வெயிலையும் பரப்புகின்றான். எவனொருவன் தன் வீட்டிலுள்ள கதவுகள், பலகணிகள் எல்லாவற்றையும் அடைத்துத் தாளிட்டுக்கொண்டு உள்ளே

உட்கார்ந்திருப்பானே, அவன் சூரியனால் யாதொரு பலனும் அடையமாட்டான். கதவுகளையும் பலகணிகளையுந் திறந்து வைத்திருப்பவன் சூரிய ஒளியை உள்ளே பெற்று உடல் நலமும் மன நலமும் ஒருங்கே எய்துவான். அதனால் சூரியனை விருப்பு வெறுப்புடையவனென்று யாருங்கூற மாட்டார்கள். "ஊருணி நீர் நிறைந்தற்றே," என்ற திருக்குறளும் இதனையே வலியுறுத்து-கின்றது. ஊருணியானது விருப்பு வெறுப்பின்றி யாருக்கும் நீரை நல்குகின்றது. ஆனாலும் அவரவர் கொண்டுவரும் பாத்திர அளவுக்கே கொடுப்பதன்றி, நீரைக் கூட்டிக் குறைப்பது அதன் இயல்பன்று. அவ்விதமே இறைவனருளும் வேலை செய்வது. "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார், அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்," என்பர் திருமூலர். அந்த அன்பினுடைய அருட் சக்திகள், நாம் சுவாசிக்கும் ஆகாயம்-போல நம்மைச்சுற்றி ஓயாது உறங்காது எப்போதும் அலைவீசி நிற்கின்றன. நாம் மனக்கதவைத் திறக்கும் நேரங்களில் அவை உள்ளே புகுந்து வேலை செய்யும். அல்லாதபோது நாம் திருவரு-ளுக்கு விலககாகி நிற்போம்; நம் மனக் கோட்டையைத் தகர்த்து பலாத்காரமாக உட்புகுவது அதன் இயற்கையல்ல. இதுவே 'மனந்திரும்புத'லின் உண்மை. இவ்வுண்மை நம்முடைய ஆலயங்-களுக்கும் வழிபாட்டிற்கும் பொருந்துவது. நமது பூஜைகளில் அடிக்கடி நடைபெறும் பாத்ய, அாக்ய, ஆசமனங்கள் இம்மனந் திரும்புதல் பொருட்டே. இனி, அடியார்கள் ஓதும் 'பாவ அறிக்கை' மந்திரமும், சாமியார் ஓதி ஆசீர்வதிக்கும 'பாவ மன்னிப்பு' மந்திரமும் அவற்றின் கருத்தைக் காட்டும் பொருட்டுக் கீழே தரப்படுகின்றன.

## 2. பாவ அறிக்கை (Confession).

**அடியார்கள்:**—"தேவனே, நீர் நித்திய வாழ்விற்காகவும் உம்முடைய நித்தியத்தின் சாயலாகவும் மனிதனைப் படைத்-துள்ளீர். ஆயினும் நாங்கள் எங்கள் பிதிரார்ஜிதத்தின் மகிமையை மறந்து, சத்தியத்தின் நெறியைவிட்டு விலகி அலைந்து விடுகின்றோம். ஆனால், கடவுளே, நீர் எங்களை உமக்கென்றே படைத்தீர்; உம்மை அடைந்தாலன்றி எங்க-ளுக்கு இளைப்பாறுதல் இல்லை. எங்கள் பலவகைப்பட்ட

குறைபாடுகளை உம்முடைய கருணைக் கண்ணால் நோக்கி, எங்கள் குறைகளையெல்லாம் மன்னித்தருளும். அப்போது நாங்கள் நித்திய ஒளியின் பிரகாசத்தால் நிறைந்து உமது வல்லமையையும் நன்மையையும் பிரதிபலிப்போம். நமது கர்த்தராகிய ஏசுவின் மூலம் ஆமேன்."

## 3. பாவ விமோசனம் (Absolution).

**சாமியார்:**—"தேவனாகிய பிதா, தேவனாகிய குமாரன், தேவனாகிய பரிசுத்த ஆவி உங்களை + ஆசீர்வதித்துக் காத்துப் பரிசுத்த மாக்குவாராக கர்த்தர் உங்கள்மேல் கிருபை கூர்ந்து உங்களைக் கண்நோக்கக் கடவர். கர்த்தர் எல்லாப் பாவங்களையும் உங்களுக்கு + விமோசனஞ்செய்து பரிசுத்த ஆவியினாலுண்டாகும் கிருபையையும் ஆறுதலையும் உங்களுக்குக் கட்டளையிடுவாராக. ஆமேன்."

இந்த மந்திரம் ஓதும்போது சிலுவை அடையாளமிட்ட இடங்களில் சாமியார் அந்த முத்திரையால் ஜனங்களை ஆசீர்வதிக்கின்றனர். அப்போது அவர் கரங்களின் வழியாகப் பரந்து விசிறும் அருளினாலேயே மேலே கூறப்பட்ட நுண்ணுடம்புச் சிக்கெடுப்பு நடைபெறுகின்றது. பாவ மன்னிப்பினுடைய உண்மை இதுவன்றி வேறல்ல.

பாடம் 19.

## தேவாராதனை.

### பகுதி II: தயாரிப்பு—3வது வேலை.

தயாரிப்பின் மூன்றாவது அங்கம், பக்தியைப் பெருக்குதலாம. இதன் முக்கியமான உறுப்புக்கள,

1—தூப ஆராதனையும் சின்ன ஆசீர்வாதமும்.

2—மகா மகிமை ஸ்தோத்திரம், வேறு இரு கீதங்கள், சின்ன ஆசீர்வாதம்

3—இடைக்கிடையே சிலுவை போட்டுக்கொள்ளுதல். என்பன.

"உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுகவாங்கிக் கடைய (இறைவன்) முன்னிற்குமே,"

என்ற அருட் பதிகம் முன்னே குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் படி, இறைவன் சாந்நித்தியத்தையும் அவன் வரப்பிரசாதத்தையும் பெறும் பொருட்டு இப்போது "உறவுகோல்" நடப்படுகின்றது. இறைவனோடு உறவென்பது ஆண்டான் அடிமைத்திறம் பூண்டவருக்கு, வணக்கமாம்; தந்தை மகன் உறவு கொண்டவருக்கு, அன்பாம்; தன்னையே மறந்து நிற்பவருக்கு, பக்தி ப்ரேமையாம. இம்மூவகை மக்களும் ஆலயத்துள்ளே காணப்படுவராதலால் அவரவருக்குகந்த வணக்கம், அன்பு, பக்தி மூன்றையும் பெருக்குவதற்கு ஏற்றவையாக மேற்சொன்ன உறுப்புக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

1. தூபமானது பல மதங்களிலும் பல ஆலயங்களிலும் பண்டைக்கால முதலே வழங்கப்பட்டு வருவதொன்று. அது புகையாக மேலேறுவது, அடியார் பிரார்த்தனைகளும் புகழ் மாலைகளும் இறைவன் திருவடியை நோக்கி மேலேறுவதைக் குறிக்கும்; அது நறுமணம் வீசி நாற்புறமும் பரவுவது, மக்கள் மீது பரவும் இறைவன் அருள் மணத்தை அறிகுறியாக உணர்த்தும். தம்மின் முதியோருக்குத் தூபமிடும்போது, பெரியோரிடஞ் செலுத்தும் வந்தன வழிபாடாக அது வணக்கத்தைக்

குறிக்கும். இவையாவும் அறிகுறிப்பொருள்கள். இனி அருள் நெறியாக, அந்நறும்புகையின் அலைகள் இச்சையுலக, மனவுலக, அதாவது புவர்லோக சுவர்லோக அசுத்தங்களை யகற்றி, மக்களுடைய இச்சைகளையும் எண்ணங்களையும் புனிதப்படுத்தி, பக்தியையும் மன அமைதியையும் அவ்விடத்தும் அவரிடத்தும் பரப்புகின்றன. இதுவே ஆலயங்களில் அதற்கேற்பட்ட முக்கியமான வேலை.

தூபங்களில் நூற்றுக்கு மேற்பட்ட வகைகளிருக்கின்றன. அவையனைத்துமே ஆலயங்களுக்கு உகந்தனவாகா. ஆலயங்களில் அதிகமும் உபயோகப்படுவன சாம்பிராணி (Benzoin), பரங்கிச்சாம்பிராணி (Olibanum, Frank-incense), சந்தனம், நயம் பன்னீர், ரோஸ் அத்தர் போன்றவை. காமப்பேயை அடக்கவல்ல முரட்டு அலைகளைக் கொடுப்பது சாம்பிராணி. அதனால் சாம்பிராணிப் புகையின் அலைகள் காம இச்சைகளுக்குக் கொடிய விரோதியாகும். இறைவனிடம் மனஞ் செல்லாது உலக இச்சைகளிலேயே உழலும் பாமர மக்கள் கூடுமிடங்களில், இதுவே மிகவும் உதவக்கூடிய தூபப்பொடி. பரங்கிச் சாம்பிராணி பக்திக்கும் மன அமைதிக்கும் ஆன்ம சாந்திக்கும் உத்தம அநுகூலி; அது முரட்டு மக்களைவிட அறிவு அன்புகளில் பண்பட்ட மக்களுக்கு அதிகமான நற்பலனைக் கொடுப்பது. சந்தனம் மனோதிடத்தையும் சலனமில்லாத, உறுதியான கொள்கையையும் கொடுக்கவல்ல தூபப்பொடி அசல் பன்னீரும் ரோஜா அத்தரும் மன மகிழ்ச்சியையும் இறைவனை நோக்கி மனத்தைத் திருப்பும் இச்சையையும் விளைவிப்பன. இக்குணங்களனைத்தும் ஆலய வழிபாட்டிற்கு எவ்வளவு இன்றியமையாதன வென்பது சொல்லாமலே விளங்கும் அதனால் தூபத்தின் மணம் ஆலயமெங்கும் பரவவேண்டுவது மிகவும் அவசியம். அங்ஙனம் தூபப்பொடி அளவில் அதிகமாக வேண்டிவரும்போது, அதன் விலையைக் குறைக்குமபொருட்டு, மேற்சொன்னவற்றோடு பொருத்தமான வேறு வாசனைச் சரக்குகளைக் கலந்து கொள்வது வழக்கம். ஆலயங்களுக்கு உகந்த கலப்பு தூபங்கள் பலவற்றை, அப்பைய தீக்ஷிதர் இயற்றியுள்ள "சிவார்ச்சனச் சந்திரிகை" என்ற நூலில் விரிவாகக் காணலாம்,

தூபப்பொருள்களெல்லாம் உத்தமம், மத்திமம், அதமமென மூவகைப்படும். மேற்சொன்னவை போன்ற உத்தம உணர்ச்சிகளை உண்டுபண்ணுவன உத்தமப் பொருள்கள். மத்திம தூபப்பொருள்கள் சிற்றின்ப உணர்ச்சிகளைத் தூண்டுவன. அதமப் பொருள்கள் பேய்க் கோவில்களிலும் மாந்தரீகர், சூனியக்காரராலும் கையாளப்படுவன. இவற்றால் வெறியாட்டங்களும் மூர்க்க உணர்ச்சியலைகளும் மிருகத்தன்மைகளுமே ஊக்கப்படுத்தப்படும். இன்று நம்மவர் இவ்வுண்மைகளைக் கவனியாமல், கடைகளில் விற்கப்படும் ஊதுவத்திகளை வாங்கி அவற்றின் சேர்மானங்களை அறியாமலே ஆலயங்களில் அதிகமும் உபயோகிக்கின்றனர். அவற்றில் அனேகம் சிற்றின்ப நுகர்ச்சிகளுக்காக அமைந்திருப்பனவாதலால், அப்பேர்ப்பட்ட வத்திகளை உபயோகிப்பது ஆராதனைக்கு ஏற்றதாகாது. அதனால் ஊதுவத்திகளின் சேர்மானந் தெரிந்தே அவற்றை ஆலயங்களில் உபயோகித்தல் வேண்டும். சாம்பிராணியும் பரங்கிச் சாம்பிராணியும் கலந்து உபயோகிப்பது உயர்ந்த நன்மையைத்தரும். அவ்வாறே அப்பைய தீக்ஷிதர் கூறும் கலப்புப் பொடிகளுமாம்.

இந்தத் தூபங்களோடு நெருங்கிய தொடர்ச்சியுடைய மற்றொரு நிகழ்ச்சியையும் ஆலயஞ் செல்வோர் அறிதல்வேண்டும். தேவர்களில் பல இனங்களிருப்பது மேலே சொல்லப்பட்டுள்ளது. நாம் வாய்ச்சொல்லால் நமக்குள் பரிமாறிக் கொள்வதுபோல, அவருள் பலவகையான இன்னிசைகள், பண்கள், இராகங்களால் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்பவர்கள் இருக்கின்றனர். அவர்கள் கானதேவர் எனப்படுவர். கந்தர்வர், கின்னரர் முதலியோர் அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள். பிராணப் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயங்களில் நாகசுரம், கின்னரி முதலிய வாத்தியங்கள் அழகுற வாசிக்கப்படும்பொழுது இவ்வகைத் தேவர்கள் அங்கு கூடி ஆலயத்தையும் அடியார் மனத்தையும் செப்பனிடுவர். பல நிற ஒளிகளாலும் வனப்பு வாய்ந்த உருவங்களாலும் சித்திரங்களாலும் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்பவர் ரூபதேவர்கள்; அவர்கள் ஆலயப் பூவலங்காரங்கள், சிற்பாலங்காரங்கள், தீபாலங்காரங்கள், ஒவியங்கள் இவைகளுக்கு மகிழ்ந்து ஆலயங்களில் கூடுவர். அவ்வாறே பலவகையான நறுமணங்களாலும்

வாசனைகளாலும் ஒருவருக்கொருவர் அளவளாவிக் கொள்பவர் பரிமள தேவர்கள்; அவருள் ஒரு சாரார் தூபதேவர்களாவர். ஆலயங்களில் உத்தம தூபப்புகை பரிமாறப்படும்போது இவர்கள் அங்கு வந்து அருளைப்பெருக்கி அடியார்களின் சூட்சும உடம்பு-களைப் பண் படுத்தியும் இறைவனைப் போற்றிப்புகழ்ந்து வணங்கி-யும் பணியாற்றுவர். வீடுகள், கடைகள், பள்ளிக்கூடங்கள் போன்ற பிரவர்த்திமுறை ஸ்தாபனங்களில் உன்னத நிலைத் தேவர்கள் பிரசன்னமாவதில்லை; விகாச முறையில் அவர்வழி நிற்கும் பஞ்சபூத கணங்களே திரண்டு வந்து கூத்தாடிக் கும்மாளம் போட்டு அங்குள்ள மக்கள் மனத்தில் மகிழ்ச்சியைப் பெருக்கும். இத்தகைய கணங்கள் ஆலயங்களில் எப்போதுமே பெருந்திர-ளாகக் காணப்படும். அவைகள் அடியார்களைப் பின்பற்றி அவர்களுடைய வீட்டிற்கும் வரத்தொடரும். அதைத் தடுத்து அவைகளிடம் விடைபெற்றுக் கொள்வதற்காகவே, நாம் ஆலயந்-தொழுது திரும்பும்போது வெளித்திண்ணையில் உட்கார்ந்துவர வேண்டுமென விதித்திருப்பது. பேய்க் கோயில்களில், வேம்பின்-பொடி முதலிய கலந்த தூபவாடை கண்டதும் அங்கு பேய்களும் பிசாசுகளும் குறளிகளுங்கூடி அவையும் பேய்க் கூததாடி வசப்-பட்டவரையும் ஆட்டுவிக்கும். இவையாவும் நெற்றிக்கண்ணுக்குப் புலப்பட்ட சில இயற்கை உண்மைகள்.

நமது ஆலயங்கள் பெரும்பாலும் கிழக்கு நோக்குவன. மிகச்சிலவே மேற்கு பார்த் திருப்பன. கிறிஸ்துவ ஆலயங்க-ளெல்லாம் மேற்கு நோக்கியே இருக்கும். ஆலயத்துள் கீழ்க்-கோடியில் பீடமும், பீடத்தின்மேல் நடுவே ஒரு சிலுவையும், சிலுவையின் இருபுறத்திலும் மும்மூன்று மெழுகுதிரி விளக்கு-களும் ஆராதனைக்குரிய இடங்களாக அமைந்திருக்கும். இவை நம் ஆலயங்களிலுள்ள கர்ப்பக் கிரகத்திற்குச் சமானமாகும். ஆலயமானது கிறிஸ்துவ முறைப்படி பிரதிஷ்டை செய்யப்படும்-போது அந்தச் சிலுவையும் ஆறு விளக்குகளும் சூரிய மண்டல புருஷனுக்கும் ஸாவித்திரியின் ஒவ்வொரு ஆதாரத்தோடு ஒவ்வொன்று இணைக்கப்படுகின்றது. இறைவனுடைய சக்தி-யானது சிருஷ்டி காலத்தில் வெளிப்படும்பொழுது ஏழு பெரும் பிரிவுகளாக வெளிவரும். அவை இறைவனுடைய கலைகள்

என்னப்படும். அக்கலைகளைத் தொழிற்படுத்தும் மூர்த்திகளும் அதிகாரிகளும் எழுவராவர். இவா சூரிய மண்டலத்தின் ஆதாரச் சக்கரங்களில், சாயாக்கிரகங்களாகிய ராகு கேது ஒழிந்த மற்ற ஏழு ஸ்தூல கிரகங்கள் மூலமாகவும் அவற்றின் கிரகநாதர் மூலமாகவும் அன்னவர் பரிவாரங்களாகிய தேவபூத கணங்கள் மூலமாகவும் தத்தம் சக்திகளைச் சூரிய மண்டலம் முழுவதிலும் பரப்புவர். இந்த மூர்த்திகளுடனேயே சிலுவையும் மற்ற விளக்கு-களும் மேற் சொன்னவாறு அருட் கருவிகளாக இணைக்கப்-படுவன. சிலுவைக்கு முன்னுகத் தொங்கும் விளக்கும் மற்ற ஆறு பக்க விளக்குகளும் ஆராதனையில் ஏற்றப்படும்போது, சூட்சும உலக இணைப்புக் கம்பிகள் மூலம் அந்த அதிகாரிகளின் கவனம் அவற்றிற்கு இழுக்கப்படும். சாமியார் இந்த தீபங்களையும் சிலுவையையும் பீடம் முழுவதையும் தூபதைதச் சுழட்டித தனித்தனியாக ஆராதிக்கும்போது, அம்மூர்த்திகளிடமிருந்து எழுவகை அருட் சக்திகள் அவ்வவற்றிற்குரிய தனித்தனி நவரத்ன நிறங்களுடன் கோடி சூரியப் பிரகாச வானவில் போலவும், நள்ளிரவில் பிரகாசிக்கும பலநிற நட்சத்திர வாணங்-கள் போலவும் மின்வீசி யிறங்கி ஆலயத்துள் பரவுவது நெற்றிக-கண் பார்வைக்குப் பெரியதோர் அற்புதமா யிருப்பதாகச் சொல்-லப்படுகின்றது. இந்து ஆலயங்களில் இந்தத் தூபப்பணிவிடையும் தீபப் பணிவிடையும் இறைவனுக்கு ஒரு உபசாரமாகக் கருதப்-படுகின்றனவே தவிர, இந்த சூட்சுமப் பலன்களைத்தரும் முறையில் உரிய அறிவோடும பயபக்தியோடும் இயற்றப்படுவதில்லை.

கிறிஸ்துவக்கோவில் தூபப் பாத்திரம் மூடிபோட்ட கிண்ணம் போன்றதாய், சன்னமான சங்கிலி உறியில் தொங்கவிடப் பட்டிருக்கும். உறியை நீளமாகவிட்டு அதை ஊஞ்சல்போல ஆட்டியும், கட்டையாகப் பிடித்துத் தொட்டில் போலக் குலுக்-கியும், வேண்டிய திக்கை நோக்கி வேண்டிய உயரத்தில் தூபப்-புகையை அவர்கள் நின்றவண்ணமே செலுத்துவார்கள். நெருப்பில் தூபப் பொடியை இடும்போது பாதிரியார் "இப்புகை, செல்லும் இடமெல்லாம் சாந்தியைப் பரப்புவதாக," என்றுவது, "இறையருளுக்கு இப்புகை வழிவிலக்குவதாக" என்றுவது ஆசீர்வதித்தே இடுவர்; அல்லது ஒரு நேரப் பூஜைக்குரிய

பொடியை மொத்தமாக ஆசிர்வதித்துக்கொடுப்பர். அது தூபப் பொடியின் வீரியத்தை அதிகப்படுத்தி, அவ்வாறு ஆசீர்வதிக்கப்படாத பொடியைவிடப் பல மடங்கு அதிகமான நற்பலனைக் கொடுக்கும். நமது ஆலயங்களில் இந்த ஆசிர்வாதமுறை அறியப்படுவதில்லை, அநுசரிக்கப்படுவதுமில்லை. தூபம் உபயோகிக்கும் யாவருமே இம்முறையைக் கையாளுவதால் கூடுதலான நன்மைபெற இயலும்.

தூபாராதனை முடிந்ததும் சாமியார் சின்ன ஆசீர்வாதம் செய்கின்றனர்; அதாவது அவர் ஜனங்களை நோக்கித் திரும்பி நின்று, "கர்த்தர் உங்களோடிருப்பாராக," என்று கூறிக் கையை உயர்த்தி ஆசிர்வதிக்கவும், ஜனங்கள் தலைவணங்கி மறுமொழியாக, "அவர் உமது ஆவியோடும் இருப்பாராக," என்று கூறுகின்றனர். பின்னர் அடியார்களுக்கு பக்திப் பரவசத்தை உண்டு பண்ணவல்ல மூன்று கீதங்கள் பாடப்படுகின்றன. அவற்றுள் மகா மகிமை ஸ்தோத்திரம் என்ற மூன்ருவது கீதம் கீழே தரப்படுகின்றது. அது பிதா, புத்திரன், பரிசுத்த ஆவி மூவருக்கும் ஆவது.

("உன்னதப்பாட்டு")

என்ற

## 2 மகா மகிமை ஸ்தோத்திரம்.

(1) உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலுள்ள நல்லுறவு மக்களுக்கு சாந்தியும் உண்டாவதாக. கர்த்தராகிய பராபரனே, பரம ராஜாவே, சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய தேவனே, உம்மைத் துதிக்கிரேம், உம்மைப் புகழ்கிரேம், உம்மை வணங்குகிரேம், உம்மை மகிமைப் படுத்துகிரேம், உமது சிறந்த மகிமையினிமித்தம் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிரேம்.

(2) பிதாவினிடமாத்திரமேயிருந்து (அதாவது தாயின் சேர்க்கையின்றி) அவதரித்த கர்த்தரா யிருக்கிற கிறிஸ்துநாதரே, உள்ளுறையும் ஒளியே, கர்த்தராகிய பராபரனே, பிதாவின் சுதனே, எல்லாவற்றையும் அழகாகவும் வல்லமையுடனும் தமது பேரறிவால் நடத்தி வைக்கிறவரே, உமது கருணையைப் பொழியும்; சிருஷ்டி முழுவதையும் உமது

வல்லமையினால் தாங்கிப் பாதுகாப்பவரே, எங்கள் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளும்; அண்டம் முழுவதிலும் உம்முடைய அழகைப் பிரகாசிப்பிக்கின்றவரே, உம்முடைய மகிமையை ஒளிவு மறைவின்றி விளக்கிக் காட்டும்.

(3) நீரே பரிசுத்தர், நீரே கர்த்தர், தேவரீர் ஒருவரே பரிசுத்த ஆவியோடே தேவனாகிய பிதாவின் மகிமையிலே + உன்னதமானவரா யிருக்கிறீர்—ஆமென்."

இந்த கீதத்தை, இருநூறு முன்னூறுபேர் சேர்ந்து அவர் தாய் மொழியிலே நன்கு பொருளுணர்ந்து பண்ணோடும் உருக்கத்தோடும் பாடும்பொழுது, கேட்பவருக்குக் கல்மனமும் கரையும், பக்தி பெருக்கெடுத்தோடும், ஆநந்தக் கண்ணீர் சொட்டும். பாடுபவருக்கோ அளவற்ற ஊக்கமும் உற்சாகமும் உண்டாகும், தம்மையே மறந்தநிலை யேற்படும். சிவப்பு, நீலம், மஞ்சள் நிறங்கள் ஒவ்வொன்றிலும் பல பல விதங்கள் மின்னொளிபோன்ற அலைகளாக அங்கு திரளும். அவையாவும் ஒன்றுகூடிச் சுருண்டு திரண்டு சொக்கப்பனைப் பிழம்புபோல உயர்ந்து பலநிறப் பொறி வீசிக்கொண்டு வானத்தை நோக்கி ஏறும். அதற்கு உத்தாரமாக இறையருள் மேலுலகத்திருந்து மலையருவி போலச் சொக்கப்பனைப் பிழம்பைச்சுற்றி ஆலயத்துள் இறங்கும். (படம் பக்கம் 100. பார்க்க) இவற்றுள் ஒரு துளிகூட வீணாகாமலும், கவசக் குமிழிக்கு வெளியே சிதறிப்போகாமலும், மிகுந்த ஆற்றலுடனும் விரைவுடனும் அவற்றைக் கையாண்டு விசுவகர்மதேவர் அருளாலயத்தைக் கட்டி வருகின்றனர். சிலுவைக்கு முன்னே சாமியார் நிற்பர்; அவருக்கு முன்பாக நிர்மாணதேவர் நிற்பர். தன் வேலைக்காக அவர் அங்குமிங்கும் செல்வதில்லை; குழைமண் சுவர் கட்டுகிற ஒருவனைச் சற்று கவனித்தால் நிர்மாணதேவர் வேலை முறை ஒரு சிறிது விளங்கும். மண்சுவர் கட்டுகிறவன், குழைத்த மண்ணைக் கையில் உருட்டி உருட்டி, நின்ற இடத்திலிருந்து கொண்டே சுவரில் மேடு பள்ளம் பார்த்துப் பந்துபோல எறிவான். அம்மாதிரியே நிர்மாணதேவரும் சிலுவைக்கு முன் நின்றுகொண்டே, சக்தி அலைகளை வாரி வாரிக் கையால் வேண்டிய திக்கில் வீசியும், அவற்றை மனத்தால் ஏவிச் சுவராக அமைத்தும் வேலை செய்கின்றனர். முதலில், தூப ஆராதனை நடைபெறுகை-




**கிறிஸ்துவ ஆராதனையில் அருட்பொழிவு**

சுற்றி மேல்நோக்கி எறுவது அடியார்கள் பக்திப் பிரவாகம்; உத்தாரமாக நடுவே கீழ்நோக்கி இறங்குவது இறைவனுடைய அருட்பிரவாகம்.

[பக்கம் 100




**பத்மாசனுயநம - ஆசனம் அமைப்பு**

1. அடியார்கள் கீதம் பாடும்போது, விசுவகர்மதேவர் மேற்கு நோக்கி நின்று வலக்கையை நீட்டி ஆன்மப் பிரதக்ஷணமாகச் சுற்ற, பத்மதளங்கள் ஒவ்வொன்ருக உண்டாகும்.
2. கீதம் பாடும்போது இறையருட்பொழிவு.
3. பத்மதளங்கள் அமைப்பு.

[பக்கம் 101

யில் ஏற்பட்ட அருளையும் பக்தியையும் உபயோகித்து, ஆமையோடுபோல் நீண்டிருந்த கவசக்குமிழியை நடுவே விசாலப்படுத்தி வட்டக் குமிழியாக்குகின்றனர்; குமிழியின் சுவரில் ஓட்டை ஒழுக்குகள் ஏற்படக்கூடிய இடங்களில் அங்கு சுவரைத் திண்ணமாக்குகின்றனர். முதற் கீதம் பாடும்போது, அவர் மேற் சொன்ன முறையில் வேலை செய்துகொண்டே ஆன்மப்பிரதக்ஷணம்போலத் தன்னைச்சுற்றிக் கொண்டு எல்லாத் திசைகளையுங் கவனிக்கின்றனர். அப்போது முன்னைய “டைமன்” தளத்தின்மேல் பெரிய பன்னிரண்டிதழ்த் தாமரையொன்று உண்டாகின்றது. (படம் பக்கம் 101. பார்க்க) அது இறைவனுக்கான பதுமாசனம் போலத் தோன்றுகின்றது. பின் அந்த இதழ்கள் மடங்கி மேலெழுந்து குமிழியை நிமிர்த்து நாற்புறமும் சுவராக வளர்ந்து மேலே வளைந்து மூடித் தட்டட்டியாக அமைந்து விடுகின்றன. இப்போது அருளாலயம் கல்லாலயத்தைக் கவிந்து மூடிநிற்கும் பெரிய பெட்டகம்போலக் காணப்படுகின்றது. (படம் பக்கம் 102 பார்க்க) நம்முடைய ஆலயப் பூஜை முறையிலும் மூர்த்தி ஆவாகனம் செய்யுமுன், பத்மாஸனம் மனத்தால் அமைக்கப்பட்டுப் பூஜிக்கப்படுவது இங்கு கவனிக்கத்தக்கது. நம்முடைய ஆராதனை முறையில் இது அருளாலய அமைப்பிற்குரிய கிரியைகளில் ஒன்றாக இருக்குமோவென எண்ணவேண்டியிருக்கிறது.

இனி, இரண்டாவது கீதம்பாடும்போது அருளாலயத் தட்டட்டிக்குமேல், விமானங்கள் சிறிதாக முளைத்தெழுகின்றன. (படம் பக்கம் 104. பார்க்க). மூன்றாவது கீதமாகிய “மகா மகிமை ஸ்தோத்திரம்” பாடப்படும்போது விமானங்கள் பூர்த்தியாகி விடுகின்றன. அதன் முதற் பாடல் விமானத்தின் அடிப்பத்தியையும், இரண்டாம் பாடல் நடுப்பத்தியையும், மூன்றாம் பாடல் மேற்பத்தியையும் கட்டுவதற்கு உதவி புரிகின்றன. கடைசிப்பாட்டில் அடியார்கள் தம்மீது சிலுவை முத்திரை செய்து கொள்ளும்பொழுது நடு விமானத்தின் உச்சியில் செவ்விளஞ் சூரியன்போன்ற சிலுவையொன்றும் அமைந்து விடுகின்றது. நெற்றிக்கண் பார்வை பெற்ற பண்டைக்காலப் பெரியோர்கள், இவ்விதம் தேவர்கள் பலபல மதங்களில் அமைக்கும் அருளாலயங்களைக்கண்டு, அந்தந்த மதத்திற்கான ஸ்தூல ஆலய வகுப்பையும்

அதற்குரிய ஆகம நூல்களையும் சிற்ப சாஸ்திரங்களையும் ஆக்கி-வைத்ததன்றியும், பின்வரும் குருட்டு மக்கள் சூட்சும அறிவின்-றித் தம் மனம் போனவாறு அவற்றை மாற்றுதபடி பலவகையான கட்டுப்பாடுகளையும் வற்புறுத்தி வைத்தனரென்று தெரிகிறது. இந்த கீதங்கள் முடிந்ததும் சின்ன ஆசீர்வாதம் திரும்பவும் செய்யப்படுகின்றது. அதன்பின் அறிவு அலைகளைப் பெருக்கும கிரியை தொடங்கப்படுகிறது.

மந்திரங்கள் பொதுவாக இருவகைப்படும். பீஜாக்ஷரங்களும் நாமங்களுஞ் சேர்ந்தது ஒருவகை; பிரார்த்தனைகளும் ஸ்தோத்-திரங்களும் மற்றொருவகை. இந்தப் பிரார்த்தனைகளைப் பொரு-ளறிந்தும் மன ஒருமைப் பாட்டுடனும் செய்யவேண்டிய முறைப்படி செய்யும்போது அவை வெறும வேண்டுகோளாக மாத்திரம் இராமல், இறைவன் நாமத்தால் இடப்படும கட்டளை-ளாகின்றன; அதாவது எண்ணிய எண்ணியாங்கு நடைபெறு-கின்றன. இதுவே,

> " நிறைமொழி மாந்தர் பெருமை, நிலத்து
> மறைமொழி காட்டிவிடும்,"

என்ற திருக்குறளின் உண்மை. மறைமொழியே மந்திரம. "ஆமென்" "ததாஸ்து," "அவ்விதமே ஆகக்கடவது," என்பன வெறும் மனோ விருப்பங்களல்ல; மன உறுதியுடனும் முழு நம்பிக்கையுடனும் இயற்கைச சக்திகளுக்கு இறைவன் பெயரால் இடப்படும் தீவிரமான கட்டளைகளாம். அவ்வித நோக்கததுடனும தீர்மானத்துடனுமே அவை ஓதப்படல்வேண்டும். கிறிஸ்துவ ஆராதனையில், அதிகார மந்திரமாகிய "பிதா, புத்திரன், பரிசுத்த ஆவியின் நாமததிலே" என்ற மகா மந்திரத்தைத் தவிர, மற்றவையெல்லாம் ஸ்தோத்திரப் பிரார்த்தனை மந்திரங்களேயாம். நமக்குள்ளும் வைதிக மந்திரங்கள் பெரும்பாலும் ஸ்தோத்திரப் பிரார்த்தனைகளாக விருக்கும்; ஆகம மந்திரங்கள் அனேகமாய் அக்ஷரங்களும் நாமங்களுமாயிருக்கும்.

கிறிஸ்துவ கீதங்களைப் படித்துப் பார்ப்பவர்களுக்கு அவருடைய தத்துவக் கொள்கைகள் ஒரு சில விளங்க வரும்.




அருளாலய நிர்மாணம்

விசுவகர்மா பத்மதளங்களை விரித்து மடக்கிச் சுவர்களாக்கி மேலே தட்டட்டியும் ஆக்குதல்.

[பக்கம் 102

"பிதா, புத்திரன், பரிசுத்த ஆவி என்ற பரிசுத்த திருத்துவமும், தேவன் என்ற பிரிககப்படாத ஒருத்துவமுமானவர்,,' என்ற கருத்து அங்கு அடிக்கடி காணப்படும். அதாவது "ஒருவரும் மூவரே, மூவரும் ஒருவரே" என்ற பொருள் கொடுப்பது அது. திருமூலர் திருமந்திரத்துள்ள,

"ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத்து அலர்மிசை அயனும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனர்
பேதித் துலகம் பிணங்கு கின்றாரே."

என்ற பிணக்கமின்றியே அங்கு அவரால் அவ்வுண்மை ஒப்புக் கொள்ளப் படுகின்றது.

பாடம் 20

## தேவாராதனை.

### பகுதி II: தயாரிப்பு-4வது வேலை.

தயாரிப்பின் அடுத்தவேலை அடியார்களின் அறிவைப் பெருக்கி ஆலயத்துள் சுவர்க்கலோக, அதாவது, மன உலக அறிவலைகளைப் பெருக்குதலாம்.

### சுருக்க ஜெபம்.

**சாமியார்:**—"எல்லா இருதயங்களையும், எல்லா விருப்பங்களையும், எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனே, நாங்கள் தேவரீரிடத்தில் பரிபூரணமாய் அன்பு கூரவும், உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப் படுத்தவும், எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவினிமித்தம் உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம் பண்ணியருளும்—ஆமென்."

'சுருக்கஜெபம்' என்ற இந்தப் பிரார்த்தனையுடன் அறிவைப் பெருக்கும் கிரியை ஆரம்பமாகின்றது. அக்கிரியையின் முக்கியமான உறுப்புக்கள், சுவிசேஷ படனம், அல்லது, சுவிசேஷம் வாசித்தலும், விசுவாசப்பிரமாணம் செய்து கொள்ளலுமாம. இடையிடையே சில சுத்திகரிப்புப் பிரார்த்தனைகளும் சின்ன ஆசிர்வாதங்களும் சிலுவை முத்திரை செய்து கொள்ளுதலும் நடைபெறுகின்றன. இவற்றுள் "சுவிசேஷம்," கிறிஸ்து நாதரின் வாழ்க்கை வரலாற்றையும் உபதேசங்களையும் அறிவிப்பது; 'விசுவாசப்பிரமாணம்,' கிறிஸ்து மதத்தின் அடிப்படையான தத்துவக் கொள்கைகளைச் சுருக்கமாக உணர்த்துவது. சுவிசேஷத்தைச் சாமியாரோ அவருடைய உதவியாரோ வாசிப்பர். விசுவாசப் பிரமாணம் ஆலயத்துள்ள அனைவரும் சேர்ந்து ஓதுவர். இந்த இரண்டு சமயங்களிலும் ஏற்படும் அறிவலைகளை நிர்மாணதேவர் திரட்டி அருளாலயச் சுவரையும் தட்டட்டியையும் பலப்படுத்துகின்றனர். இப்போது அருளாலயம் பணி தீர்ந்து,




கிறிஸ்துவ அருளாலயம் - கோபுரம் கட்டல்

[பக்கம் 104

இந்நூல் முகப்புப் படத்திலுள்ளபடி (படம் 1.) காணப்படும். விஸ்வகர்மதேவர் வேலை இத்துடன் முடிவடைகின்றது. ஆயினும் அவர் ஆராதனை முடியும்வரை தாமதித்து, மகிழ்ச்சியுடன் அதில் ஈடுபட்டு, முடிவில் விசர்ஜனம் செய்யும்போதே விடைபெற்றுச் செல்லுகின்றனர்.

கிறிஸ்துவேதநூல் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பாகங்களாக உள்ளது; அவற்றுள் புதிய ஏற்பாடே சுவிசேஷம் எனப்படுவது. அதனை இந்துக்களில் பெரும்பாலோர் இன்று நன்கறிவராகையால் அதுபற்றி ஒன்றும் இங்கு கூறப்படவில்லை. ஆனால் கிறிஸ்தவர் தத்துவக் கொள்கைகளை நம்மவர் அறியாராகையால் அது இங்கு தரப்படுகின்றது.

## விசுவாசப் பிரமாணம்.
(The Nicene Creed)

"வானத்தையும் பூமியையும், காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய ஒரே தேவனை விசுவாசிக்கிறோம்.

"ஒரே கர்த்தருமாய், தேவனுடைய ஹிரண்ய கர்ப்பக் குமாரனுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறோம்; அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே தமது பிதாவினாலே ஜெனிப்பிக்கப்பட்டவர்; தெய்வத்தில் தெய்வமானவர், ஜோதியில் ஜோதியானவர், மெய்த்தேவனில் மெய்த்தேவனானவர், உண்டாக்கப்படாமல் ஜெனிப்பிக்கப்பட்டவர், பிதாவோடே ஒரே தன்மையுடையவர், சகலத்தையும் உண்டாக்கினவர்; மனிதராகிய நமக்காகவும் நமக்கு இரட்சிப்பு உண்டாகவும் பரமண்டலத்திலிருந்து இறங்கி, பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் அவதரித்து மனுஷனானார்; நமக்காகப் பொந்திபு பிலாத்துவின் (Pontius Pilate) காலத்தில் சிலுவையில் அறையுண்டு, பாடுபட்டு, அடக்கம் பண்ணப்பட்டார்; வேதவாக்கியங்களின்படி மூன்-

றும் நாள் உயிர்த்தெழுந்தார். பரமண்டலத்துக்கேறி, பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்; உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந் தீர்க்க மகிமையோடே திரும்ப வருவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவில்லை.

"கர்த்தருமாய், ஜீவனைக் கொடுக்கிறவருமாய், பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமாய், பிதாவோடும் குமாரனோடும் கூடத் தொழுது தோத்தரிக்கப்படுகிறவருமாய், தீர்க்க தரிசிகள் மூலமாக உரைத்தவருமா யிருக்கிற பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறோம். ஒரே பொதுவான அப்போஸ்தலத் திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறோம். பாவ மன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட ஒரே ஞான ஸ்நானத்தை அறிக்கை யிடுகிறோம். மரித்தோர் உயிர்த்தெழுதலும், மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகும் என்று காத்திருக்கிறோம்—ஆமென்."

இப்பிரமாண விண்ணப்பம் முடிந்ததும்,

சா—"கர்த்தர் உங்களோடிருப்பாராக."

அ—"அவர் உமது ஆவியோடு மிருப்பாராக."

என்ற சின்ன ஆசீர்வாதம நடைபெறுகின்றது.

பாடம் 21.

## தேவாராதனை.

### பகுதி III: காணிக்கை செலுத்துதல்.

காணிக்கை செலுத்துவது ஆலயப் பணிவிடைக்காரர் பராமரிப்பிற்காக அமைந்த ஒரு ஏற்பாடே தவிர மற்றப்படி ஆராதனைக்கோ அருளாலய நிர்மாணத்திற்கோ அருள் ஒழுக்கிற்கோ அவசியமான அங்கமல்ல. ஆரம்பத்தில், அப்போஸ்தலர் காலத்தில், கிறிஸ்துவமதத்தில் முதல் முதலாகச் சேர்ந்தவர்கள் அப்போஸ்தலர் கண்காணிப்பின் கீழே பொதுவுடமைக் கூட்டமாகவே வாழ்ந்து வந்ததாகத் தெரிகிறது. அவர்கள் தொகை அன்று மிகச் சுருக்கமாகவே யிருந்தபடியால், ஒவ்வொருவரும் தம்மிடம் உள்ளது உரியதை விற்றுப் பொது நிதியாக வைத்துக்கொண்டு, ஈவுப்படி கிடைத்த உணவை உண்டு, சுவிசேஷத்தைப் பரப்பும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். பின்னால் அவர்கள், தொகையில் அதிகப்பட்டுத் தனித்தனி வாழத்தொடங்கவே, அவரவர் வீட்டிலுள்ள ரொட்டி முதலிய உணவுகளைக் கொண்டு வந்து சமர்ப்பிப்பது வழக்கமாயிற்று. ஆலய ஊழியர் உண்டு மீந்ததை அடுத்துள்ள ஏழை மக்களுக்கு வழங்கி விடுவர். இந்த ஏற்பாட்டில் சிலநாள் விருந்தும் சிலநாள் பட்டினியும் ஏற்படுவது கண்டு, அன்றன்று அழிந்து போகக்கூடிய உணவுகளுக்குப் பதிலாகச் சேமித்து வைக்கத்தக்க தானியங்கள், திராக்ஷபானம், எண்ணெய் முதலியவற்றைப் பின்னர் காணிக்கையாகச் சமர்ப்பித்தனர். இக்காலத்தில் இதுவும் நின்று வெறும் பணம் மாத்திரமே காணிக்கையாகக் கொடுக்கப்படுகின்றது. ஆயினும் பண்டைய வழக்கத்தை யனுசரித்து, காணிக்கைப் பணம் வசூலிக்கப் பட்டவுடன் கொஞ்சம் ரொட்டியும் திராக்ஷபானமும் பீடத்தின்மேல் வைக்கப்பட்டு, சிலுவை முத்திரை, மந்திரங்களால் சுத்திகரிக்கப்படுகின்றன. அதன்பின் சாமியார் அவற்றை அடியார்களின் உடல் பொருள் ஆவியின் அறிகுறியாக இறைவனுக்குச் சமர்ப்பிக்கின்றனர்.

இதுவரை நடந்த ஆராதனை முழுவதும் கருவியாகிய உடம்பே. இனியே உயிர்ப்பாகம் தொடங்குகின்றது. அதற்கு-

முன், மேலே விளக்காது விடப்பட்ட சில விஷயங்களை இவ்விடத்து ஆராய்வது பொருத்தமாகும்.

(1) மேலே மந்திரங்களைச் சுருக்கமாகத் தொகுத்துரைத்த இடங்களில், "இடையிடையே சிறுவை போடுதலும் சின்ன ஆசீர்வாதமும் நடைபெறும்," என்று பொதுவாகக் கூறப்பட்டது. அரைமணி நேரத்திற்குள்ளாக நடைபெறும் இந்த ஆராதனையில், சிறுவை போட்டுக் கொள்ளுதல் ஏழுமுறையும், சின்ன ஆசீர்வாதம் ஒன்பது முறையும் செய்யப்படுகின்றன. இச்சிறு கிரியைகள் இவ்வளவு அதிகமாக இயற்றப்படவேண்டிய காரணம் நெற்றிக்கண்ணால் ஆராயப்பட்டபொழுது கீழேகண்ட சில உண்மைகள் வெளியாயின.

ஒருவன் எடுத்துக்கொண்ட வேலை இனிது முடியவேண்டுமாயின், அவனுடைய அறிவு, இச்சை, செயல் மூன்றும் ஒருமுனைப்பட்டு இயங்கவேண்டுவது அவசியம். அல்லாதபொழுது அவ்வேலையில் விக்கினம் ஏற்படாமற் போகாது, உடைந்து போன நூல் ஊசிக்குள் புகாதது போல. வண்டிக்காரன் ஒருவன் வடக்கு நோக்கி வண்டியை ஓட்ட, ஒரு காளை மேற்குத் திரும்பியும், மற்றக் காளை கிழக்குத் திரும்பியும் முறித்திழுக்குமானால் வண்டியின் கதி என்னவாகும்! அவ்விதமே அறிவு இச்சை செயல்கள் ஒருமுனைப்படாத வேலையும் முடிவுறாது. சிறுவை முத்திரை செய்துகொள்வது இந்த ஒருமுனைப்பாட்டுக்கு உதவுவதென்பது மேலே விளக்கப்பட்டுள்ளது. ஆனால் நம் போன்ற சாதாரண மக்களது மனமோ கள்ளுண்ட குரங்குபோல ஓயாத ஆட்ட ஓட்டத்தில் நிற்பது. அவ்விதம் காடும் கரையும் மனக்குரங்கு கால்விட்டோடுங் காரணத்தால் அதனை அடிக்கடி கடிவாளமிட்டு இழுப்பது அவசியமாகின்றது. நெற்றியில் மனிதனுடைய அறிவு ஸ்தானமாகிய ஆக்ஞைச் சக்கரத்தையும், நாபியில் இச்சை ஸ்தானமாகிய மணிபூரகத்தையும், செயலுக்குரிய தோள்களையும் உரிய மந்திரஞ் சொல்லித் தொடும்பொழுதெல்லாம், இவற்றை ஒருமுகப் படுத்தவேண்டிய அவசியம் நினைவிற்கு வரவேண்டும். அப்போது அம்மனிதன் உறங்காது கண்விழித்துக் கொள்கிறான், மனக்குதிரையை மட்டுப் படுத்துகின்றான். இந்த முத்திரையால் ஏற்படும் அருட் கசிவும் பூதகண

வசீகரமும், இவையிரண்டும் ஏகாக்கிர சித்தத்திற்குச் செய்யும் உதவியும் மேலே கூறப்பட்டிருக்கின்றன. இது காரணமாகவே இம்முத்திரையை அடியார்கள் அடிக்கடி உபயோகப்படுத்துவது. நம்முடைய கோவில்களைக் கவனிப்பவருக்கும் இது சம்பந்தமான உண்மையொன்று விளங்கும். அங்கு ஒவ்வொரு மூர்த்தியும் ஒவ்வொரு இடத்தில் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவும், விக்னேஸ்வரர் என்ற கணபதியோ பல இடங்களில் உட்கார்ந்திருப்பது காணப்படும். கோவிலுக்குள் மாத்திரமன்றி, ஊரிலுள்ள மூலை முடுக்குகள், சந்து பொந்துகள், ஆறு குளங்கள், அரசு வேம்படிகள், சாலையோரங்கள், எல்லாம் பிள்ளையார் மயமாகவே காணப்படுவது நம்மவர் நன்கறிவர். பிள்ளையார் குட்டும் தோப்புக்கரண முத்திரையும் மனோ வாக்குக் காயங்களை ஒருமுனைப்படுத்தும் கிரியைகளென்பது முதற்பாகத்தில் விளக்கப்பட்டுள்ளது. இந்த ஒரு முனைப்பாடு ஆன்மீகத் துறையிலும் லௌகீகத் துறையிலும் இன்றியமையாது வேண்டப்படும் வெற்றி வேலாகையால், மனித முயற்சி நடக்கு மிடங்களிலெல்லாம் இப்பிள்ளையார் எதிர் நின்று, ஏகாக்கிர சித்தத்தின் அவசியத்தை நினைப்பூட்டி, அதற்கு வேண்டும் அருளைத் தமது கணங்கள் மூலம் சொரிந்துகொண்டு நிற்பர்.

(2) இனி, கிறிஸ்தவரின் தத்துவக் கொள்கைகளை விளக்குவது அவர்களுடைய "விசுவாசப் பிரமாணம்". அக்கொள்கைகள் அவருள் சகல பிரிவினருக்குமே பொதுவாகவுள்ளவை. இதனையும் அறிகுறியாகச் சிலுவை முத்திரை உணர்த்தும். அதன் பொருள்கள் நம்முடைய மதத்திலும் காணக்கிடக்கின்றன. நெற்றிக்கண்ணன் சிவன்; மனிதனுடைய ஆக்ஞா சக்கரத்திற்கு அதிபனும் அச் சதாசிவனே. நாபித் தாமரையோன் விஷ்ணு, மணிபூரகத்திற்கு அதிபனும் அம்மகாவிஷ்ணுவே. மேலுயர்ந்த தாமரையில் வீற்றிருப்பவன் பிரம்மா, நாபிக்கு மேலுள்ள தோள்கள் செய்யும் படைப்புத் தொழிலுக் கதிபனும் பிரம்மா. கிறிஸ்தவர் குறிப்பிடும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் ஸ்தானங்கள் இவ்விதம் நமக்கும் பொருந்துவன. சிவன் பிறப்பதில்லை; உலக நன்மைக்கு அவதாரமெடுப்பவர் விஷ்ணு. அவ்விதமே அவருள்ளும் உலகரக்ஷகராகப் பிறப்பவர் விஷ்ணு

அம்சமாகிய கிறிஸ்துவே, பிதாவல்ல. அவர் விசுவாசப் பிரமாணம் நம் புராண வரலாறுகளைப்போல அண்ட உற்பத்தியைக் குறிப்பிடுவது. "மாரி," என்ற மகா மாயையாகிய கன்னி மரியாளிடம் வியாபித்து வெளிப்பட்டு, பிரகிருதியாகிய சிலுவையில் பந்தப்பட்டு, மனிதருக்கு விடுதலை வழி காட்டியபின், தன் பூர்வ நிலைக்குச் சென்றவர் குமாரனாகிய கிறிஸ்து பகவான். அண்டம் உண்டாகும் பொருட்டுத் திருப்பாற் கடல் கடையப்படும்பொழுது, கடலில் அடிவரை மூழ்கி, அதாவது மகா மாயையை வியாபித்துக கூர்மாவதாரமாய் மந்தரமலைச் சிலுவையில் பந்தப்பட்டு, அமிர்தத்தை ஈந்து, தன்னிலைக்குச் சென்றவர் விஷ்ணுபகவான். மத்தாகிய மந்தரமலையில் வாசுகியைக் கட்டி இருபுறமும் தேவாசுரர் நின்று இழுத்துக் கடையும்போது நிமிர்ந்து நிற்கும் மத்தும் இருபுறமும் நீண்டிருக்கும் பாம்புக் கயிறும் சிலுவைபோன்றே யிருப்பதுவும் அறியத்தக்கது. கிறிஸ்து நாதர் சிலுவையில் அறையப்படாவிட்டால் உலகம் பாவத்தில் நின்றும் தப்பிப் பிழையாதென்பது கிறிஸ்துமத போதனை. கூர்மாவதாரம் மலையின் பாரத்தைத் தாங்காதிருந்தால் அமிர்தமாகிய நித்ய வாழ்வும் பேரின்ப நிலையும் உலகிற்கு அகப்படாதென்பது இந்து மதக்கொள்கை. இவ்வாறு விருப்பு வெறுப்பின்றிப் பல மதங்களையும் உற்று நோக்குவோருக்கு, அவற்றின் அடிப்படை உண்மைகள் எவ்வளவு ஒற்றுமையுடையனவென்பது நன்கு விளங்கும். "மேரி" என்பதன் மூலப்பதம் "மாரி" என்பதே. அவளே நமது பராசக்தியும் மகாமாயையும் பத்ரகாளியும் மாரியம்மனுமாம். அவள் நித்திய கன்னியுமாம்.

ஒருவன் வலக்கை நடுவிரல் சுட்டுவிரல்களைக் கொண்டு "பிதாவினுடையவும" என்று புருவ நடுவைத்தொட்டுக் கையைக் கீழே கொண்டுவந்து, "குமாரனுடையவும்" என்று நாபியைத்தொட்டு, "பரிசுத்த ஆவியினுடையவும் நாமத்திலே" என்று சொல்லி இடத்தோள் வலத்தோள்களைத் தொட்டுக்கொள்வதே "சிலுவை முத்திரை செய்தல்," (Crossing oneself) என்ற கிறிஸ்துவக் கிரியையாம். அவர்களது முறைகளை அனேகமாய் இந்துக்கள் அறியாராகையால் இது திரும்பவும் இங்கு விரித்துச் சொல்லப்படுகின்றது.

(3) இந்தச் சிலுவை போடுதல் போலவே சின்ன ஆசீர்-வாதமும் பலதடவை நடைபெறுவதொன்று. அதன் முறை-யாவது, சாமியார் அடியார்களை நோக்கி இரு கைகளையும் நீட்டி உயர்த்தி, "கர்த்தர் உங்களோடிருப்பாராக," என்று ஓதுவர். உடனே அடியார்கள், "அவர் உமது ஆவியோடு மிருப்பாராக," என்று மறுமொழி கூறுவர். இவற்றின் பலனை நெற்றிக்கண்ணால் பார்த்தபோது, சாமியார் மந்திரம் சொன்னதும் அவரிடமிருந்து பல நிறங்கொண்ட மின்னொளி வலையொன்று, வீசி விரிந்து மிக வேகமாய்ப் பறந்துசென்று அடியார் கூட்டத்தைக் கவிந்து, சிலுவையோடு அவரை இழுத்துப் பிணைக்கின்றதாம். "அவர் உமது ஆவியோடும் இருப்பாராக," என்று அடியார்கள் மறு-மொழி கூறும்போது, அடியாரிடத்துண்டாகும் பக்தி முழுவதும் ஒன்றுதிரண்டு நீல அலைகளாகச் சிலுவையை நோக்கிச் செல்-கின்றதாம். ஆனால் அடியார்களோ பரிபக்குவத்தில் பலவிதங்-களாயிருப்பர். மிகப் பெரும்பாலோர் 'தன்னல' முடையோ-ராகவும் அனேகர் இறைவனுக்கு அஞ்சுபவராகவுமே அங்கு காணப்படுவர். உண்மை யன்போடும அறிவோடும், செய்வன திருந்தச்செய்யும் பக்தர்கள் மிகச் சுருக்கமாகவே இருப்பர். அதனால் பக்தியலைகள் பெரும்பாலும் இருண்டதும் சுருண்டது-மாகவேயிருக்கும், பரிசுத்தவானாகிய இறைவனடி சேரத் தகுதி-யற்றவையாகவே இருக்கும். அவற்றைத் தூய்மையாக்கிப் பண்-படுததாது மேலுலகங்களுக்கு அனுப்பும்போது, அவை திரிசங்கு சொர்க்கமபோன்று மேலேற மாட்டாமலும் மேலுலகங்களைப் பூலோகத்தோடு இணைக்கமாட்டாமலும் போகும். ஆகவே அங்கிருந்து உத்தாரமாக வரவேண்டிய இறையருள் கீழிறங்கத் தடைப்படும். அக் குறைபாட்டை நீக்குவதற்காகவே அந்தப் பக்திக் கலப்பு-அலைகள் யாவற்றையும் சூட்சும வலையானது சாமியாரை நோக்கி இழுக்கின்றது. சாமியாரின் நுண்ணுடம்பு-கள் அவற்றைச் சல்லடைபோல அரித்துச் சீர்படுத்தவும், தூய்மைப் படுத்தப்பட்ட அந்த பக்தி சிலுவையிற் சென்று மோதி இறைவனடி நோக்கி மேலேறுகின்றது. உடனே வலையும் உலைந்து போகின்றதாம். இந்த அதிசயத்தைக் கண்டபோது இச் சூத்திரம் வேலைசெய்யும் முறையை ஆராய்வது அவசியு-மாயிற்று. அப்போது புலப்பட்டதாவது:—

பிரதிஷ்டை செய்யப்பட்டபோது பீடத்திலுள்ள சிலுவையும், அபிஷேகம் பண்ணப்பட்டபோது ஆசாரியராகிய பாதிரியாரும் பகவான் கிறிஸ்துநாதருடன் சூட்சுமமாக இணைக்கப்படுகின்றனர். அதனால் பகவானுடைய அருள் மேலுலகங்களிலிருந்து கீழிறங்கும்போது அவ்விருவரையும் குழாயாகக்கொண்டே இறங்குகின்றது. அதன் முழு வல்லமையையும் தாங்குதற்குரிய பக்குவம் அடியார்களிடத் தில்லாமையால், அவர்கள் தீதின்றிய நன்மை பெறவேண்டுமானால் அது சிறுகச்சிறுக ஆலயத்துள் பரப்பப்பட வேண்டுவது அவசியமாகின்றது. ஆச்சாரிய பட்டத்திற்குரிய கிரியைகள் நடைபெறும்பொழுது, சாமியாருடைய நுண்ணுடம்புகள் ஆபத்தின்றி இறை அருளை ஏற்கவும், அதனைப் புறத்தே வழங்கவும், இணக்கக் கேடான அலைகளைப் பண்படுத்தவும் வேண்டிய தயாரிப்பைப் பெறுகின்றன. அத்துடன், பீடம், சிலுவை, மெழுகுதிரி விளக்குகள் இவற்றிற்கு தூபாராதனை நடத்தும்பொழுது, அங்கு இறங்கும் அருட் சக்திகள் வேகமாக வெளியேறு திருக்கும் பொருட்டுப் பீடத்தைச்சுற்றி ஒரு சிறிய சூட்சும கர்ப்பக்கிரகமும் அமைக்கப் படுகின்றது. அதனுள்ளேயே நிர்மாணதேவரும் சாமியாரும் நின்று வேலை செய்வது. ஆராதனையின் ஒவ்வொரு முக்கியமான கட்டத்திலும் அமோகமான அருள் சூட்சும கர்ப்பக்கிரகத்துள் இறங்கும். உடனே சாமியார் சின்ன ஆசிர்வாதஞ் செய்து உள்ளே திரண்டு நிற்கும் அருள் அழுத்தத்தின் வேகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அடியார்மீது செலுத்திப் படிப்படியாக அவர் நுண்ணுடம்புகளை முறுக்கேற்றுவர். அதற்காகவே அக்கிரியை அடிக்கடி செய்யப்படுவது. மின்சார நிலையங்களில் 'பரிணமி' (Transformer) என்ற கருவியொன்றுண்டு. அது மின்சாரத்தின் வேகத்தை வேண்டிய அமுக்கத்திற்குப் பாகுபடுத்தி, மனிதருக்கும் விளக்குகளுக்கும் மற்றும் யந்திரங்களுக்கும் அபாயமின்றி உபயோகப்படும்படி அதனை வெளியே அனுப்பும். அம்மாதிரி வேலையே சாமியார் ஆலயத்துள் இயற்றுவதும். இதனை வேறொரு விதத்திலும் விளக்கலாம். கொதிக்கிற நீரைக் குப்பிக்குள் ஊற்றினால் குப்பி உடனே வெடித்துவிடும். ஆனால் இளவெந்நீரை முதலில் ஊற்றிச் சிறுகச் சிறுகச் சுடுநீரைக் கூட்டினால் அக்குப்பியுடம்பு கூடுதலான சூட்டைப் பொறுக்கும்.

இனி, அடைபட்ட அறைக்குள் ஆள் நெருக்கமாயிருக்கும்போது அங்குள்ள ஆகாயம் சூடேறிவிடும். வேலை முடிந்ததும் கதவுகளை எல்லாம் திறந்து அவர்கள் திடீரென வெளியேறத்தொடங்கினால் பலருக்கு ஜலதோஷம் பிடிப்பது அநுபவம். கதவுகளை ஒவ்வொன்றாகத் திறந்து சற்றுத் தாமதித்தால், உள்ளும் புறமும் ஆகாயம் சமமான தட்ப வெப்பமுடையதாகி, யாருக்கும் குற்றஞ் செய்வதில்லை. இது போன்றதே இந்த அருள் அமுக்கத்தை ஆலயத்திற்குள் சமநிலைப் படுத்துவதும். விசுவகர்ம தேவருடைய நிர்மாணவேலை முடியுஞ் சமயத்தில் அருள் அமுக்கம் ஆலயமெங்கும் சமப்பட்டுப் போவதால், பீடத்தைச் சுற்றியமைந்த சூட்சும கர்ப்பக்கிரகம் அவரால் அப்போது உலைக்கப்படுகிறது. இத்துணைப்பெரிய வேலையொன்று இரண்டு சிறு வரிகள் கொண்ட இந்தச் சின்ன ஆசீர்வாதத்தால் நடைபெறுவதாகத் தெரிய வந்தது.

நமக்கு அறிமுகம் இல்லாத இச் சிறு கிரியையை இவ்வளவு விளக்குவானேனெனில், நம்முடைய பூஜை முறைகளிலும் ஒவ்வொரு முக்கியமான கட்டத்தின் முடிவிலும் இம்மாதிரியான சிறு கிரியையொன்று விதிக்கப்பட்டுள்ளது. ஆவாகனம், அபிஷேகாலங்காரங்கள், அர்ச்சனை நைவேத்தியங்கள், ஆராத்தி இவை நமது பூஜைகளில் சில முக்கியமான கட்டங்கள். இவை ஒவ்வொன்றின் முடிவிலும் பாத்யம், அர்க்யம், ஆசமனங்கள் சமர்ப்பிக்கும்படி விதிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விதம் பல முறை செய்வதற்கு ஆவசியம் காணப்படவில்லை. அதன் கருத்தை ஆகமவல்லார் ஆராயும்பொருட்டே, மேற்சொன்ன விபரங்கள் கொடுக்கப்படுகின்றன. பட்டருக்கும் பாதிரியாருக்கும் அபிஷேக முறையில் உள்ள ஒற்றுமைகள் பின்னால் விளக்கப்படும். நமது ஆலயங்களில் பட்டரைத்தவிர வேறு யாரும் மூலஸ்தானத்திற்குள் பிரவேசிக்க ஆகமவிதிப்படி அருகரல்லர். கிறிஸ்துவமுறையிலும் பூஜை நடக்கும்போது சாமியார்களைத் தவிர வேறு யாருக்கும் பீடத்தில் அமர உரிமையில்லை. அதற்குக் காரணம் அங்குள்ள மிக ஏற்றமான அருள் அமுக்கம் என்பதும், அது ஏனையோருக்குத் தீமையே பயக்குமென்றும் தெரிய வருகின்றது. உலக மக்களில் இந்துக்களே கிரியைகளில் கூடுதலான பற்றுடையவர்.

கள்; யோக சித்திகளிலும் உன்னத நிலையிலுள்ளவர்கள். அப்படியிருந்தும் நம் கிரியைகளின் மறைபொருள்களை நெற்றிக்கண் கொண்டு விளக்கவல்லவர் யாரும் இதுவரை வெளிவராதது நமது துர்ப்பாக்கியமே யாகும்.

(4) நம் நாட்டுப் புராதன முறைகளில் புராண படனம் என்பது ஒன்று. புராணங்களை நியமமாக விதிப்படி படித்தலும், அவற்றிற்குப் பொருள் சொல்லலும் கேட்டலும் சிறந்த புண்ணியங்களென்றும், அவையாவும் ஞான யக்ஞமென்றும் நம் நாட்டில் கருதப்படுகிறது, அல்லது கருதப்பட்டு வந்தது; அங்ஙனம் படிக்கும்பொழுது கைக்கொள்ளவேண்டிய விதிகளும் திட்டப்படுத்தப்பட்டிருக்கின்றன.

"புராண மண்டபத்தைக் கோமயத்தினால் மெழுகுவித்து, இடம்பண்ணி, அதன் மீது பீடத்தை வைத்து, அதன்மேலே பட்டுப் பரிவட்டம் விரித்து, அதன்மேலே புராணத்திருமுறையை வைத்து, சந்தனம் புஷ்பம் தூபம் தீபம் முதலியவைகளினாலே விதிப்படி பூஜைசெய்து, நமஸ்கரித்து, இருந்து கொண்டு, ஒருவர் வாசிக்க, ஒருவர் பொருள் சொல்லல் வேண்டும். வாசிப்பவர் திருமுறையின் பாகத்தை இரண்டு கையினாலும் பிடித்துக் கொண்டே வாசித்தல் வேண்டும். படிக்கத் தொடங்கும்போதும் முடிக்கும்போதும், காப்புச் சொல்லல்வேண்டும். அப்பொழுது எல்லோரும் அஞ்சலி செய்துகொண் டிருத்தல்வேண்டும்", என்று அவ்விதிகளை முனிவர் ஆறுமுக நாவலர் தொகுத்துக் கூறுகின்றனர். நாவல்களைப் போலவே ஞானநூல்களையும் சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டே படிக்கும் இந்நாளில், மேற்சொன்ன விதிகளை மூடக்கொள்கைகளாகவே மக்கள் கருதுவது இயல்பு. அச்சுப்பொறிக் காலத்திற்கு முன்பு கையேடுகளை எழுதி முடிப்பது மிகவும் அருமையான காரியமா யிருந்தபடியால், அவற்றைப் பாதுகாக்கும்பொருட்டு இந்தப் பாராட்டுச் சடங்குகள் அமைக்கப்பட்டனவென்று சிலர் எண்ணுகின்றனர். நூலினுடைய போதனைகளுக்கும் அதனை இயற்றித்தந்த ஆசிரியருக்கும் நன்றி கூறும் முறையில் இந்த வந்தனை வழிபாடுகள் இயற்றப்பட்டு வநதனவென்பது வேறு பலர் கொள்கை. எதுவாயினும், "செலுத்தப்படும் வணக்கம் பிறமதத்தவர் நம்மை

ஏளனம் பண்ணுகிறபடி வெறும் ஒலைக்கோ தாளுக்கோ அல்ல,"
என்பது மாத்திரம் அனைவரும் விளக்க முயல்வது.

இவ்வாறே கிறிஸ்துவ ஆலயங்களிலும் சுவிசேஷம் வாசிக்கும் பொழுது சில சடங்குகள் கையாளப்படுகின்றன. சுவிசேஷம் வாசிப்பவர் "டீக்கன்" என்ற உதவிக் குரு. அவர் பாதிரியார் முன்பு மண்டியிட்டு, "தேவனே, உம்முடைய பரிசுத்த சுவிசே-ஷத்தை வெளியிடும் பொருட்டு என்னுடைய இருதயத்தையும் உதடுகளையும் சுத்திகரியும்," என்ற தொடக்கத்தையுடைய பிரார்த்தனை மந்திரத்தைக் கூறுகின்றனர். பாதிரியார், "தேவ-னுடைய அன்பு உம்முடைய இருதயத்தின் வழியாகப் பிரகா-சிக்கவும், அவருடைய வல்லமை உம்முடைய உதடுகள் வழியாக வெளிப்படவும், கர்த்தர் உம்முடைய உதடுகளிலும் இருதயத்-திலும் இருப்பாராக," என்று ஆசீர்வதிக்கின்றனர். உடனே அடியார் அனைவரும், "தேவனே, உமக்கு மகிமை உண்டாவ-தாக," என்று கூறி, அவரவர் மனம் வாக்குக் காயங்களைக் கடவுளுக்கு அர்ப்பிக்கிற பாவனையில், தமது நெற்றியிலும உதடு-களிலும் இருதயத்திலும தனித்தனியாக வலக்கைப் பெருவிரல் கொண்டு சிலுவை யடையாளம் செய்துகொள்ளுகின்றனர். 'டீக்கன்' என்ற உதவிக்குரு முட்டுப்பணியிலிருந்து எழுந்தவுடன் சப்டீக்கன் சுவிசேஷத்தை அவர் முன்னால் விரித்துப் பிடிப்பர். ஆலயப் பணிவிடைக்காரர் இருவர் (Acolytes) இரண்டு மெழுகு திரிகளை ஏற்றி இருபுறமும் பிடித்து நிற்பர். தூபக்காரன் சுவிசே-ஷத்தை நோக்கித் தூபமிடுவர். இவ்வளவு தோரணைகளோடு, உத-விக் குருவானவர் தொடங்கவேண்டிய இடத்தில் பெருவிரல் கொண்டு சிலுவை முத்திரைசெய்து, வாசிக்க ஆரம்பிக்கின்றனர். ஏற்பட்ட பாடத்தை வாசித்து முடித்ததும் முதலில் தொடங்கிய இடத்திலேயே திரும்பவும் பெருவிரலால் சிலுவை முத்திரை வைத்-துத் திருக்கடைக் காப்புச் செய்கின்றனர். தொடங்கும் இடத்தி-லேயே முதலிலும் முடிவிலும் பெருவிரற் சிலுவை செய்ய வேண்டுமென்பது மிகவும் அவசியமாகக் கருதப்படுகின்றது. அல்லாதபோது சூட்சும பலன்களில் சில முட்டுப்பாடுகள் ஏற்படுகின்றனவாம். நமது புராண படனத்திலும், காப்புச் செய்யுளையே தொடக்கத்திலும் முடிவிலும் சொல்லல்வேண்டு

மென்பது இங்கு கவனிக்கத்தக்கது; முடிவில் சொல்வது இதர சமயங்களிற்போல வாழ்த்தல்ல. சென்ற சில நூற்றாண்டுகளாக, கிறிஸ்தவரிற் பல பிரிவார் நம் போன்றே இவற்றைப் பொருளற்ற சடங்குகளெனக் கருதி நிறுத்திவிட்டனர். சில பிரிவார் இன்றும் அவற்றை நடத்தி வருகின்றனர். அந் நிகழ்ச்சிகள் நெற்றிக் கண்ணால் கவனிக்கப்பட்டபோது, அவை வெறும் பொருளற்ற சடங்குகளாயிராமல், ஒவ்வொன்றும் ஒரு காரணம் பற்றியே அமைந்திருப்பதாகக் காணப்பட்டது. அவற்றைத் தெரிவதற்கு அவற்றின் அடிப்படை அமைப்பொன்றை அறியவேண்டுவது அவசியமாகையால், முதலில் அது சுருக்கமாகக் கூறப்படும். அதுவும் மேற்சொன்ன நெற்றிக்கண் ஆராய்ச்சியின் பலனேயன்றி, வெறும் மனக்கோட்டையல்ல.

பாடம் 22.

# தேவாராதனை.

## சுவிசேஷம் ஓதும் முறை.

உலகத்துள்ள பல்லாயிரக் கணக்கான பாஷைகளில் பல பல நூல்கள் புற்றீசல்போலத் தோன்றுவதும் மறைவதுமாக இருந்து வருகின்றன. அவற்றுள் ஒரு சில அவ்வாறு அழியாது நிலைத்து விடுகின்றன. அவை பொருட் செறிவாலோ, உண்மையின் நிறைவாலோ, அல்லது தூய இன்பம் பயப்பதாலோ, அல்லது ஆன்ம முன்னேற்றத்திற்கோ வீடுபேற்றிற்கோ வழிகாட்டுவ-தாலோ, உலக மக்களுக்கு இன்றியமையாத சில தேவைகளைப் பூர்த்தி பண்ணுவதால் ஒரு வகையான நீடூழி வாழ்வைப் பெற்று விளங்குகின்றன. இது உலகத்துள்ள எல்லா நாடுகளிலும் எல்லா மொழிகளிலும் காணப்படும் நிகழ்ச்சி.

இனி, இந்த நீடுவாழும் நூல்களைப் பொதுவில் இருவகையாகப் பிரிக்கலாகும். மக்களுக்கு ஆபாசக் களஞ்சியச் சிற்றின்பம் பயப்-பனவாயல்லாமல், நேரப் போக்காக நல்லின்பம் பயக்கும் உயர்தரக் கலை நூல்கள் ஒருவகை. அவை கட்டுக்கதைகள், காவியங்கள், நாட-கங்கள், நாவல்கள் போன்றவை. மற்றொருவகை மக்களிடம் அறிவையும் அன்பையும் பக்தியையும் பெருக்கி, அவரைப் பண்படுத்திச் சீர்தூக்கி, ஆன்ம முன்னேற்றத்திற்கும் விடுதலைக்-கும் வழிகாட்டும் உத்தம நூல்கள். அவை புராணங்கள், இதிகாசங்கள், சமய நூல்கள், நீதி நூல்கள், தத்துவ நூல்கள் முதலியவையாம். இவ்விருவகை நூல்களிலும் ஏதாவதொன்றை நாம் விருப்பத்தோடு படித்து முடித்தவுடன், நம மனத்தின்கண் அது சம்பந்தமான ஒருவகைத் திரைப்படம் தோன்றுவது சாதாரண அனுபவம். அப்போது, நெற்றிக்கண் பார்வையுடைய ஒருவன், நம் தலைக்கு மேலாகப் பலநிற ஒளிகளைக்கொண்ட அந்த எண்ண உருவம் மிதந்து கொண்டிருப்பதை நன்கு காண்-பான். அதாவது ஒருவன் மகாபாரதத்தைக் கருத்தூன்றிப் படித்து முடிப்பானானால், அவனிடத்துண்டாகும் நினைவுப் படத்தில், அக்கதையின் நிகழ்ச்சிகளும் நாடக பாத்திரங்களும்

அவர்கள் குணாதிசயங்களும் ஒரு பெரிய வர்ணத்திரைப்படம் போன்று புலப்படும். இந்த எண்ண உருவங்களில், ஒரே தன்மை யுடையவை ஒன்றையொன்று வசீகரித் திழுத்துக்கொள்ளும் முறைகளையும் நியதிகளையும்பற்றி முதற் பாகத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. அந்த இயற்கை ஒழுங்குகளின்படி, பாரதக்கதை சம்பந்தமாக எழும் எண்ணங்கள் யாவும் ஒருசேர வசீகரிக்கப்பட்டு, ஒன்று திரண்டு, பல பல சிகரங்களையுடைய மிகப்பெரிய மலைபோன்று, நமது உருவமன உலகமாகிய சுவர்க்கலோகத்தில் மிதந்து கொண்டிருக்கின்றதாம். அது போன்றே, உலக மகா கவியாகிய ஷேக்ஸ்பியரின் நாடக சம்பந்தமான அவ்வகை உருவமொன்று, இங்கிலாந்தையொட்டிய சுவர்க்கலோக பாகத்தில் மிதந்து கொண்டிருக்கும். இந்த இலஞ்சியூரி லிருந்துகொண்டு ஒருவன் தன்னை மறந்து ஷேக்ஸ்பியர் நாடகமொன்றை நன்கு ரஸித்துப் படிப்பானுனால், அப்போது அவனிடத்தெழும் மனோ சிருஷ்டிகள், அதாவது நினைவுருவங்கள், மனோ வேகத்தில் இங்கிலாந்துருவத்தோடு தொடர்புகொள்ளும். இது நவக்கிரகங்கள் சூரியனுல் வசீகரித்திழுக்கப்படுவது போன்றது; ஆயினும் அதைவிடக் கோடி மடங்கு சூக்ஷ்மமும் வேகமுங்கொண்டது. அச்சமயம் அந்த உணவூட்டத்தால், இங்கிலாந்துள்ள உருவம் கூடுதல் வன்மையும் நீடிய வாழ் நாளும் பெறுவதோடு, தனது வசீகரபாதை வழியாக இலஞ்சியிலுள்ளவன் மனத்தில், அவன் மனப் பயிற்சிக்கும் பக்குவத்திற்கும் ஏற்றபடி புதுப்புது அழகுகளையும அநுபவங்களையும் இன்பங்களையும் தன்னிடந்திரண்டுள்ள நவரசக் களஞ்சியத்திலிருந்து வாரி வாரி வழங்கும். இந்த நிகழ்ச்சியில் நம்பக்கூடாதது ஒன்றும் இல்லை. பலகோடி மைல்களுக்கப்பாலிருக்கும் சூரியனிடத்து ஏற்படும மாறுதல்கள் ஸ்துலமான உலகிலேயே நொடி நேரத்தில் நம்மைத் தாக்க வல்லனவாயிருக்கும்போது, அவற்றினும் மிக நுண்ணிய மன உலக சூரியன்களாகிய எண்ணஉருவத் தொகுதிகள் அந்த நியதியைப் பின்பற்றுவதில் நம்பத்தகாத தொன்றுமில்லை.

இந்த நீடுவாழும் நினைவுருவங்கள் உலகப் பெரு நூல்கள் யாவற்றிற்குமே தனித்தனியாக உள்ளன. அத்துடன் அவை சமய நூல்களாகும்போது, அங்கு வேறொரு அற்புத நிகழ்ச்சியும்

நடைபெறுவதாகக் காணப்படுகிறது. சமய நூல்களின் பல நோக்கங்களில் ஒன்று, ஸ்தூல உலகில் வாழும் மனிதனை சூட்சும உலக அருட் சக்திகளோடு இணைப்பதாம். இது பெரிதும் மேலுலக வாசிகளாகிய தேவர்களுடைய ஒத்துழைப்பாலும் அவர்கள் இறைவனுக்கு ஆற்றும் பணிவிடையாலும் நடை-பெறுவது. அத்தகைய தேவர்களில் ஒவ்வொருவர் ஒவ்வொரு சமயநூல் நினைவுருவத்தை அதிட்டித்து நின்று, அதன் அருட் சக்தியைப் பெருக்கி, சமயம் நேரும்போதெல்லாம் அதனை விநியோகித்துக் கொண்டிருப்பர்.

"ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்,"

என்ற முதுமொழிக்கேற்பத் தொண்டாற்றி நிற்கும் அந்த தேவர்கள், மனிதனுடைய மடமையும் ஆணவத்திமிரும் எங்கெல்லாம் சற்றே இடங்கொடுக்குமோ அங்கெல்லாம் அந்த அருளை நுழைத்து, தமக்குகந்ததான அந்த இறை பணியில் கண்ணுங்கருத்துமாயிருப்பர். அவ்வேலைக்கு உதவியாயிருக்கும் சில கருவிகளும் திறவுகோல்களுமே, புராணப்படனத்தின்போது அநுசரிக்கும்படி ஆன்றோரால் அமைக்கப்பட்டிருக்கும் ஏற்பாடுகளென்று நெற்றிக்கண்ணுக்குக் காணப்பட்டது.

புராண படனத்திற்குரிய தயாரிப்பு வேலையாகிய மெழுகுதல், விளக்கேற்றல், பலகையில் புராணத்தை வைத்துப் பூஜித்தல் முதலியவை செய்யும்போது, புராண நூலைச்சுற்றிப் பூச்சிக்கூடு (Cocoon) போன்ற ஒரு அருட் கருவிக்கூடானது சூக்ஷமமாக அமைகின்றது. அது மின்சார விளக்கிற்கு அமைக்கும் "பொருத்திகள்," (ஸ்விச், Switch) போன்றது புராண நூல் நல்ல பதிப்பாக, அழகான கட்டடத்தில், (Binding), பட்டு உறை போடப்பட்டதாக இருந்தால் அது இவ்வேலைக்கு மிக்க அநுகூல-முள்ளதாகக் காணப்படுகின்றது. அத்துடன் அது பௌராணிகர் எப்போதும் பூஜையில் வைத்திருக்கும் நூலாக இருக்குமானல் அதன் பலன் முன்னிலும் கூடுதலாகக் காணப்படுகின்றது. பௌராணிகர் காப்புச்செய்யுள் கூறும்போது, அது மூல உருவத்தை அதிட்டித்து நிற்கும் தேவருடைய கவனத்தை இழுத்து, புராணநூற் கருவிக்கும் அவருக்கும் கம்பியில்லா

மனவுலகத் தந்தியொன்றை (Mental Wireless) அமைக்கின்றது. பௌராணிகர் இன்னபாகம் வாசிக்கப் போவதாகக் கூறும்போது, அதிஷ்டான தேவர் தன் களஞ்சியத்தில் அதற்குரிய அறையைத் திறந்துவைத்து, திருக்கடைக் காப்புச் சாத்தும் வரையிலும் படன சம்பந்தமான அறிவையும் அன்பையும் அருளையும் அமோகமாக அங்கு பொழியச்செய்வர். அது பௌராணிகர் வாக்குக்குச் சொல் வன்மையைக் கொடுக்கும்; அவர் மனத்தில் ஆனந்தத்தையும் ஊக்கத்தையும் பெருக்கும்; கூடியிருக்கும் அடியாரிடம் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும். அத்தகைய பரவசநிலை அவர்கள் தனித்தனியே அடையக்கூடாதது, இன்று காண்பதற்கு அரிதாகிப்போனது. பல முதியோர்கள் பண்டு அனுபவித்தறிந்துள்ளது

மேற்கூறிய நிகழ்ச்சிகள் யாவும் தேவாலயத்தில் சுவிசேஷம் வாசிக்கும்போது (Gospel reading) நெற்றிக்கண்ணுக்குப் புலப்பட்டவை. நமக்குள் புராண படன காலந்தவிர சிவாலயங்களில் தேவாரம் ஓதும்போதும், முதலாவதாகக் கட்டியம்கூறும் முறையொன்று இருந்து வருகிறது. வடமொழி ஸ்தோத்திரம் சொல்லி முடித்து, "ஜெய விஜயீபவ, தேவ தேவோத்தம, தேவதா, ஸார்வ பௌமா, அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகா ஸ்ரீ (மூர்த்தி நாமம்) ஈஸ்வரப் பிரபூ, எச்சரீக்கை, தேவாரம் அருளிப்பாட," என்று விண்ணப்பம் செய்யப்படுகின்றது பின், திருமுறைக்கு முன்னும் பின்னும் "திருச்சிற்றம்பலம்" என்று ஓதப்படுகிறது. இவை யாவும் வெற்றுரைக ளல்லவென்றும், தேவாரத் திருமுறைத் திருவுருவத்தின் அதிஷ்டான தேவரை அழைப்பதற்காக அமைந்த ஏற்பாடுகளா யிருக்குமெனவும் இப்போது எண்ணவேண்டி யிருக்கிறது.

பாடம் 23.

# IV. நற்கருணை ஆராதனை.

## (அப்பம் பிரதிஷ்டை செய்தல்.)

## (Consecration.)

### I—சுத்தி.

ஆராதனைமுறை எதனையும் ஒருவகையில் மூன்று பாகங்களாகப் பிரிக்கலாகும்: அதாவது உடல், உயிர், ஆன்மா என. எந்த ஆராதனைக்கும், உடலாகும் சூக்ஷ்ம ஆலயம் முதலாவதாக அமைக்கப்படல்வேண்டும்; இரண்டாவதாக அந்த உடம்பிற்கு உயிராகும் பிராணப் பிரதிஷ்டை செய்யப்படவேண்டும். மூன்றுவதாக அங்கு ஆன்மாவாகும் மூர்த்தியின் பிரசன்னம் அடையப்படவேண்டும். இந்த மூன்று பகுதிகளும் கையாளப்படாதவரை, ஆராதனையின் பலன் அரைகுறையாகவோ சூனியமாகவோதான் இருக்கும். நமது ஆகமப் பூஜைமுறைகளைப் படித்துப் பார்ப்பவருக்கு இம்மூன்று பகுதிகளும் அங்கு தெளிவாகக் காணப்படும். ஆனால் இன்று நம் ஆலயங்களின் நடைமுறையைப்பற்றி விரித்துக் கூறுதிருப்பதே மேன்மையென விடுக்கப்படுகிறது. "ஆன்மார்த்த பூஜை" செய்யாத, செய்யவே அறியாத, பட்டர்களும் பூஜாரிகளும் ஆலயத்து நடைபெறும் "பரார்த்த பூஜை"யை எங்ஙனம் ஆகம முறைப்படி ஒழுங்காக இயற்றவல்லவராவர்

"ஆற்றரு நோய்மிகும், அவனி மழைகுன்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்,
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே."

என்பது யோக சித்தர் திருமூலரது திருமந்திரச்செய்யுள். அங்கு, "தப்பிடில் தானே," என்பது பூஜை செய்யத் தவறுவதும், பூஜையைத் தவறுகச் செய்வதும் என்று இரு பொருள்படும். மேற் சொன்ன கருத்துக்கள் உண்மையாயின், இன்று நம் நாட்டின் நிலைமையிலிருந்து நமது ஆலயங்களின் ஒழுங்கை ஒருவாறு யூகிக்கலாகும்.

இதுவரை கிறிஸ்துவ ஆராதனையில் கூறப்பட்ட கிரியைகள் யாவும் உடலாகிய சூக்ஷ்ம ஆலய அமைப்பைச் சேர்ந்தனவாம். இப்போது அதற்கு உயிரூட்டும் அங்கமாகிய தேவர்கள் ஆவாகனம் தொடங்கப் பெறுகிறது. அதன் ஆரம்பமாகப் பூஜாரி தூப உறிக்கிண்ணத்தை எடுத்து, அதில் தூபத்தைப் பெருக்கிச் சிலுவையையும் பீடத்தையும் தூபமிட்டுக்கொண்டு:—

"கர்த்தாவே, இந்த தூபம் உமது சந்நிதியில் மேலெழுவதுபோல, எங்கள் பிரார்த்தனையும் உமது பார்வையில் விளங்கட்டும். உமது பரிசுத்த தேவர்கள் உம்முடைய அடியார்களைச் சூழ்ந்து, அவர்கள் மீது உமது ஆசீர்வாதத்தின் பலனைப் பொழியட்டும்.

"கர்த்தர் எங்கள் இருதயத்தில் தம்முடைய அன்பின் ஆர்வத்தையும் அயராத் தண்ணளியின் சுவாலையையும் எழுப்புவாராக"

என்று ஓதுகின்றனர். பின், வேதக் கோவிலின் எல்லாத் திக்குகளையும் நோக்கித் தூபத்தை ஊஞ்சலாட்டி வழங்கி, தூபக்கிண்ணத்தைக் கீழே வைத்துக் கையைத் தூய நீரால் கழுவித் துடைப்பர். இது ஆலய சுத்தி இத் தூபக்கிரியையின் சூக்ஷ்ம நிகழ்ச்சி முன்னே விளக்கப்பட்டுள்ளது.

ஒருநிமிஷ நேரம் ஒருவன் கண்ணை மூடி மௌனமாக உட்கார்ந்து தன் மனப்போக்கை உற்று நோக்குவானுனல், அதன் குரங்காட்டம் அவனுக்கு எளிதில் புலப்படும். ஒருவன் மனமே அவ்வாறு தையாட்டம் ஆடும்போது, ஆலயத்துள் பலபேர் கூடியிருக்கும் இடங்களில், குடும்பக்கவலை, வீட்டுத் தொல்லை, வேலைத்தொல்லை, வழக்குகள், வியாச்சியங்கள், வியாபாரச் சிக்கல்கள், வறுமைப்பேய், நோய் நொடிகள், சாக்கர்டுகள் முதலிய நினைவுகள் எல்லாம் ஒன்று திரண்டு, புயற்காற்றில் அகப்பட்ட கடலைப்போல, அங்கு சூக்ஷ்ம உலகில் ஒரே கொந்தளிப்பைக் கொடுத்துக் கொண்டிருக்குமாதலால், இறைபணிக்கேற்ற அமைதி அவ்விடத்து எளிதில் பெறப்படுவதில்லை. அதனுல், ஆராதனையில் ஏற்படும் அருட்பொழிவின் புலன் பெரிதும் வியர்த்தமாகிவிடும்,

அது நேராதிருக்கவும், ஆலயத்துள் மன அமைதியையும் அடியார்க்குள் ஒப்புரவையும் இறையன்பையும் நிலை நாட்டவும், இந்தத் தூபப்பணிவிடை அடிக்கடி நடைபெறவேண்டி யிருக்கின்றது. மேலே சொன்ன பிரார்த்தனையைப் பூஜாரி ஓதவும், அங்குள்ள தூப தேவர்கள் ஆலயமுழுவதும் பறந்து சென்று, தூபத்தின் சூக்ஷ்ம பலனை எங்கும் பரப்பிப் பிரார்த்தனையின் வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கின்றனர். அங்குள்ள அடியார்கள் தம்மையறியாமலே ஒரு மனச் சாந்தியையும் பக்தி உணர்ச்சியையும் பெறுகின்றனர். பதிவாக ஆலயந்தொழும் பலர் இப்பேர்க்கொத்த அநுபவங்களை நமது ஆலயங்களிலும் அவ்வப்போது அறிந்திருப்பர்.

பாடம் 24.

## IV. நற்கருணை ஆராதனை.

### II—தேவர்கள் ஆவாகனம்.

கட்டளைப் பிரமாணம். (The Canon)

**சாமியார்:**—உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்.

**அடியார்கள்:**—எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்.

**சா:**—"நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கடவோம்.

**அ:**—அப்படிச் செய்வது தகுதியும் நீதியுமா யிருக்கிறது.

முகவுரை (Preface)

**சா:**—"கர்த்தாவே, பரிசுத்த பிதாவே, சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, நாங்கள் எக்காலத்திலும் எவ்விடத்திலும் தேவரீருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவது மிகவும் தகுதியும் நீதியும் எங்களுக்கு விசேஷித்த கடமையுமாயிருக்கிறது.

"ஆதலால், தூதரோடும் பிரதான தூதரோடும், சிம்மாசனங்களோடும், துரைத்தனங்களோடும், ராஜ்யங்களோடும், நீதிவான்களோடும், வல்லமைகளோடும், கெருபீன்களோடும் சேராபீன்களோடும் பரலோக குழாங்கள் அனைத்தோடும், நாங்களும் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து, மேன்மைப்படுத்தி இடைவிடாமல் உம்மை ஸ்தோத்தரிக்கிறோம்."

**எல்லோரும்:**—"நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பரம தேவாதிதேவர், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்துள்ளன, உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமையுண்டாவதாக."

"கர்த்தரின் நாமத்திலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா."

## விளக்கக் குறிப்பு.

தேவாராதனையைப்பற்றி இதுவரை கூறியுள்ளதிலிருந்து, குருக்களும் அடியார்களும மந்திரங்களால் பின்னிப் பிணைந்து நின்று இயற்றும் கூட்டு வழிபாட்டின் முறை (Congregational Worship) ஒரு சிறிது விளங்கியிருக்கும். அத்தகைய வழிபாடு நன்கு இயற்றப்பட வேண்டுமாயின் அது அவரவர் தாய் மொழியிலேயே நடைபெறவேண்டு மென்பதும் விளங்கி யிருக்கும். நம்முட்போலவே கிறிஸ்தவருக்குள்ளும் பல பல பிரிவார் இருக்கின்றனர். அவருள் லத்தீன் மொழியிலேயே கிரியை நடத்தும் ரோமன் கத்தோலிக்கரைத் தவிர, மற்ற வகுப்பார் யாவரும் இந்த தேவாராதனையை அவரவர் தாய் மொழியிலேயே இயற்றி வருகின்றனர். அத்துடன் அது சுமார் இரண்டாயிர வருஷ காலமாக நடந்துவரும் கிரியையாதலாலும், உலகின் பலவகைப்பட்ட நாடுகளிலும் பலதிறப்பட்ட மக்களிடையும் பலவிதமான மொழிகளிலும் நடைபெறுவதாலும், அங்கு உறுப்புகள் கூடியும் குறைந்தும் வலிந்தும் மெலிந்தும் நாளடைவில் மாறி விடுவது உலக இயற்கை. ஆயினும் சாதாரண யந்திரங்களில் சில இன்றியமையாத கருவிகள் என்றும் இருந்து தீரவேண்டுவது போல, இந்தக் கிறிஸ்துவ அருள் யந்திரத்திலும் இன்றியமையாது இருந்து தீரவேண்டிய பாகங்கள் "கட்டளைப் பிரமாணங்கள்" என்ற பெயரால் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமான ஒன்று இப்பாகம். இதற்கு ஆதியிலிருந்தே ஒரு பண்முறையும் வகுக்கப்பட்டுள்ளது. அதனையும் மாற்றுதல் தகாதென்ற கொள்கையிருப்பதால், அப்பண்ணும் மாறுதலின்றியே இன்றும் எல்லா மொழிகளிலும் நடைபெற்று வருகின்றது.

இவ்விதமான ஒற்றுமை வேற்றுமைகளும் கட்டுப்பாடுகளும் நமது பூஜை முறைகளிலும் காணக்கிடப்பன. நமக்குள்ளும் ஆலயக்கிரியைகளை விதிக்கும் ஆகமங்கள் பலவாக உள்ளன. அவை ஆதியில் தனித்தனியாக நம் பரந்த நாட்டின் பல பாகங்களில் நிலவியனவாயிருத்தல் வேண்டும். ஆயினும் அவற்றை ஆராய்வோருக்கு அங்கும் இன்றியமையாதனவாய் ஒற்றுமையுடைய பொது உறுப்புக்களும், இடம் பொருள் ஏவலுக்கும் கால நிலைக்கும் ஏற்றபடி மாறுதல் கொண்ட சிறப்புறுப்புக்களும விளங்கும்.

இந்தக் கிறிஸ்தவக் "கட்டளைப் பிரமாண" த்தின் முதற் பாசு-ரத்திற்குப்பண்டைய ஞானிகள் அமைத்துள்ள பண்ணொலியானது தேவர்களை அழைப்பதற்கான ஆகம தந்திரமுறையில் அமைக்கப்-பட்டுள்ளது. அக்காரணத்தாலும், பல நூற்றாண்டுகளாக அதனை விளிகூவுதலாகத் தேவர்கள் கேட்டுவந்த பழக்கத்தாலும், "உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்" என்ற பண் தொடங்கிய நொடியிலேயே அதன் ஒலி ஆகாயத்தில் விசிறி, தேவாராதனையில் முக்கிய பங்கெடுப்பவரான நவகண வானோர்களின் கவனத்தை ஈர்க்கின்றது. இது டெலிபோன் நம்பர் கூப்பிடுவது போன்றது. இரண்டாவது பாசுரத்தில் அவர்கள் பெயர் குருக்களால் கூறப்-படவும், நவ கணத்திற்கொருவராக ஒன்பது மேதக்க தேவர்கள் பருந்துப் பாய்ச்சலில் உள்ளே வந்திறங்கிச் சிலுவையின் பின்னால் அரைவட்டமாக அடியாரை நோக்கிக்கொண்டு நிற்பாராம். கிறிஸ்தவரால் நவகண வானோர் என்று கூறப்படுபவர், இறைவ-னுடைய நவகலைகளைச் சேர்ந்தவரென்றும் இறைவியினுடைய நவசக்திகளைச் சேர்ந்தவரென்றும், சூரியமண்டல நவக்கிரகங்-களைச் சேர்ந்தவரென்றும் அறிவாளிகளால் சொல்லப்படுகின்றது. அவர்கள் யாவரும் சூட்சுமமான மிகப்பெரிய முட்டைக்கூண்டு உருவத்தில், நடுவே மிகக் காம்பீரியமாய் நிமிர்ந்துயர்ந்த சூட்சும மானிட வடிவத்தில், இமை கொட்டாப் பரந்த கண்களோடு, வானவில் நிறங்கள் அனைவற்றையும் கோடி சூரியப் பிரகாசமாய் அலையலையாகக் கொளித்துக் கொண்டிருப்பராம். ஆயினும் அவரவர் கலைக்கேற்ற ஒரு நிறம் மாத்திரம் அங்கு மிகக் கூடுதலாகச் சுவாலை வீசிக்கொண்டிருக்குமாம். இந்த உன்னத ஒன்பதின்மரும் ஆலயத்துள்ளே பறந்திறங்கும்போது, அவருக்-குப்பிறகே அவரது பரிவாரங்களாக நூற்றுக்கணக்கான சாதாரண தேவர்களும் (Ordinary Angels), ஆயிரக்கணக்கான பூத கணங்களும் (Nature Spirits) உள்ளே திரண்டு வந்திறங்கு-வராம். வந்ததும் அவருள் முதற் கலையாகிய சூரியகலைத் தேவ-ரானவர் அதிகார ஸ்தானம் வகித்து, சிலுவைக்கு நேர் பின்னால் கம்பீரமாக நிற்பராம். அதிகாரச் சின்னமாக அவர் ஒரு இரத்-தினக்கோல் பிடித்திருப்பராம். அதன் நிறம் ஆலயப் பண்டி-கையைப் பொறுத்திருக்குமாம். கிறிஸ்தவருள்ளும் நமக்குட்-போலவே, பிதா அல்லது சிவனுக்குரிய விழாக்கள், குமாரன்

அல்லது விஷ்ணுவுக்குரிய விழாக்கள், பரிசுத்த ஆவி என்ற பிரம்மா, கன்னிமரியாள் என்ற தேவி விழாக்கள் எனப் பலவகையுள்ளன. அதிகாரதேவர் இரத்தினக்கோலும், பிதாவுக்குரிய பூஜையில் பொன் மின்னொளியில் வயிரவெள்ளி நீலக்கதிர்கள் பாய்ந்த நிறமாகவும், புத்திரனது விழாவில் ஆகாய நீலமாகவும், மூன்றாவதான பூஜையில் இளஞ்சிவப்பும் மஞ்சணைச் சிவப்பும் கலந்த் ஜோதியாகவும் பேரொளிகொண்டு விளங்குமாம். கூடியிருக்கும் விண்ணவர் கூட்டத்தை நெற்றிக்கண்ணால் தெரிசிக்க வல்லவருக்கு அது ஒரு மனங்கொள்ளாக் காட்சியாகவும் விளக்க வொண்ணா நிகழ்ச்சியாகவும் மறக்கவொண்ணா அற்புதமாகவும் இருக்குமென்று கூறப்படுகிறது. இதனைக் கண்டு கூறியுள்ளவர் வங்கப்பணிமுனிவர் மாத்திரமன்றி, சூக்ஷ்மப் பார்வை பெற்ற வேறு பல பிரமுகர்களாகிய பிஷப் வெட்ஜ் உட் (Bishop Wedgewood), 'ஆஸ்கார் கொல்லர் ஸ்ற்ராம்' (Rev. Oscar Kollerstrom), 'அனிபெஸன்ற் அம்மையார்' (Dr. Annie Besant), 'ஹாட்ஸன்' (Mr. Hodson) முதலியோரும் அவரவர் அநுபவமாக வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் கூறுவதிலிருந்து ஆலயத்துள் இப்போது அடியார்கள் தரையிலிருந்து கூரை முகடுவரை ஒரே கூட்டமாகத் திரண்டிருப்பராம். அவருள் மிகச் சுருங்கிய எண்ணிக்கையே உயிர் வாழும் மானிடராம். அவரைவிடப் பலமடங்கு கூடுதலாக இருப்பராம் மரித்துப்போன ஆண்களும் பெண்களும். இவர்கள், இறந்தவுடன் தமது இச்சை உடம்பென்ற யாதனா சரீரத்தில் (Astral Body) புவர்லோகத்தில் வாழ்பவர்கள். ஸ்தூல உடம்போடிருக்கும் அடியார்களின் தலைக்கு மேலாகவும், முன்புறமும் பின்புறமும், இரு பக்கங்களிலும் இவர்கள் ஆகாயத்தில் மிதந்து கொண்டிருப்பராம். இவர்கள் யாவரும் உலகில் உயிரோடிருந்தபோது அடிக்கடி ஆலயதெரிசனஞ் செய்தவர்கள்; இறந்த பின்பும் பழைய ஆலயங்களுக்குச்சென்று ஆராதனையில் ஈடுபட்டு அங்குள்ள அருட் பொழிவையும் ஆசீர்வாதத்தையும் முன்னைவிடக் கூடுதலான பக்தியோடும் இன்பததோடும் அனுபவிப்பவர். நமது ஊனக்கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் இத்தகையோர் எல்லா ஆலயங்களிலும் காணப்படுவர். இவர்களுக்கு புவர்லோக

வாழ்க்கையில் பூரண அவகாசமிருப்பதால், இவர்கள் யாவரும் தமக்கு மிகப் பிரியமான இந்த ஆலய தெரிசனத்துக்குச் செல்லத் தவறுவதில்லை. இனி மூன்றாவதாக, இவர்கள் யாவரையும் விடப் பலநூறு மடங்கு அதிகமாகவுள்ளவர்கள் அங்கு வந்திருக்கும் தேவர்களும் தேவகணங்களும் பூதகணங்களுமாம். இவர்கள் பெரும்பாலும் சிலுவைக்குப் பின்னாலும் அதற்கு மேலே ஆகாயத்திலும் மிதந்து கொண்டிருப்பாராம். ஆகவே ஆளேயில்லாத ஆலயத்திலுங்கூட ஒவ்வொரு ஆராதனையிலும் சூக்ஷ்ம அடியார்கள் ஆயிரக்கணக்காகக் குழுமியிருப்பரென்று கூறப்படுகிறது. அவர்களைக் கருதியாவது ஆராதனைகள் ஒழுங்காக நடைபெறவேண்டுமென்று அவ்வறிஞர் கூறுகின்றனர்.

இனி, இந்த நவகண வானோர்கள் பிரசன்னமானதும், மூன்றாவது பாசுரம் பாடப்படும். அப்போது அதில் தேவர்களும் மானிடரும் இறந்தவராகிய பிதுரர்களும் எல்லோருமே பங்கெடுத்துக் கொள்வராம். தேவர்களுடைய பக்திப் பெருக்கு பார்ப்பவரைப் பிரமிக்கச்செய்யுமாம். தோத்திரத்தில் முதலாவது "பரிசுத்தன்" பிதாவைப் புகழ்வது. அப்போது பலவர்ண நட்சத்திரங்கள் நிறைந்த வாண வீச்சுப்போன்று பொற்சோதிப் பரப்பொன்று விண்ணிலிருந்து ஆலயத்துள் இறங்குமாம். இரண்டாவது "பரிசுத்தன்" குமாரனாகிய கிறிஸ்துவை ஸ்தோத்தரிப்பது. அப்போது விண்ணிலிருந்து ஒரு நீல வர்ணஜோதியும் மூன்றாவது "பரிசுத்தன்" பாடும்போது செந்தாமரைச் சோதியொன்றும் ஆலயத்துள் வந்திறங்குகின்றனவாம். அவற்றை அதிகார தேவர் நின்றயிடத்திலிருந்தே தம் மாத்திரைக்கோலை ஓச்சி, ஆலயத்துள் ஆவசியமுள்ள இடம் பார்த்துப் பரப்பி அருளாலயத்தை நிரப்புவராம். இத்துடன் ஆராதனையின் உயிர்ப்பாகம் முடிவுறுகின்றது.

நமது ஆலயங்களிலும் இத்தகைய தேவர்களை அழைப்பதற்குப் பல கிரியைகள் ஏற்பட்டுள்ளன. அவற்றுட் சில, சூரியபூஜை, கணபதி பூஜை, கர்ப்பாலய பூஜை, மூர்த்தி ஆவாகனங்கள், ஸ்நபன அபிஷேகங்கள், ஆவரண பூஜைகள் முதலியன. ஆனால் இவற்றுள் அநேகம் நமது ஆலயங்களில் இன்று நடைபெறுவதில்லை. இம்மாதிரியான முக்கிய அம்சங்களின்றிய ஆராதனை

என்ன பயன் பயக்குமோ இறைவனுக்கே வெளிச்சம். அடியார்களுடைய பக்தி மறைந்து, அவருக்குள் நாஸ்திகம் பரவிவிட்டதென்ற அழுகைக்குரல் மாத்திரம் எங்கும் கேட்கப்படுகிறதே தவிர ஆலயங்களிற் காணப்படும் ஆபாசங்களையும் ஆராதனைக்குறைபாடுகளையும் தாறுமாறுகளையும் திருத்தியமைக்க முயற்சிப்பவர் எவரையுங் காணவில்லை. ஆலயங்களில் ஆரத்தி செய்யும்போது முருகனுக்குத் திருப்புகழும் சிவனுக்கும் தேவிக்கும் தேவாரப் பண்களும் பெரிய மேளத்தில் வாசிப்பது, தேவர்களுக்கும் நமக்கும் அவற்றாலாகும் சூட்சும பலன் கருதியே பண்டைப் பெரியோர் விதித்த முறைகளென்று நம்பவேண்டியிருக்கிறது. ஆனால் இப்போது நமது ஆலயங்களில் மேளகாரர் அதிகமும் வாசிப்பது சிற்றின்ப உணர்ச்சி தரும் திரைப்படப் பாட்டுக்களே; இந்த அழகில் குற்றங்கள் மாத்திரம் நாஸ்திகப் பதர்கள் மேலாம். பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகமெல்லாம் இருட்டுத்தான்.

இனி, அருட் சக்திகள் மாயையைக் காரியப்படுத்தும்போது உண்டாகும் நிறங்களிலிருந்து, நமது முன்னோர்கள் நெற்றிக்கண் கொண்டு இறைவனுக்கு உருவகுத்த முறைமை ஒரு சிறிது புலனாகின்றது. சிவபெருமான் பொன்னார் மேனியன், மின்னார் செஞ்சடையன், மிளிர் பொற் கொன்றை யணிந்தவன்; மகாவிஷ்ணு மேகவண்ணன், நீலக்கடல் வண்ணன், பச்சைமா மலைபோல் மேனியன், பசுந்துளசி அணிபவன்; பிரம்மா செந்தாமரையோன், செம்மேனியன்; பகவதி செவ்வரளி மாலையும் மஞ்சணைக்காப்பும் செந்துவராடையுமே அணிபவள். இவ்வகையான பல நுட்பங்களெல்லாம் இன்று நம்மவர் கருதுவது போன்று வெறும் மனக் கற்பனை உருவங்களல்லவென்றும் சூட்சும விஞ்ஞான சாஸ்திர (Occult Science) அடிப்படை யுடையனவென்றும் இப்போது தெரிகிறது. ஏனெனில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் அருட் சக்திகள் அந்தந்த நிறங்களிலேயே வெளிவருகின்றன. இவை இயற்கை உண்மைகளாகையால், என்றும் எவராலும் ஆராய்ந்து கண்கூடாகக் காணக் கூடியனவென்று அந்த அநுபூதிமான்கள் உறுதி கூறுகின்றனர்.

> "புகல்இரும் பனிச்சோலைப் பொன்மலைபோல் பொலிந்திலங்கி
> அகல்விசும்பில் சுடர்மாட்டி ஐம்பூதம் அகத்(து) அடங்கி
> மண்ணகம் இருள்நீங்க மன்னுயிர் படைத்தக்கால்

அண்ணல் ஏற்(று) எழில்ஊர்தி அருமறை முதல்வனும்
தண்ணறும் கமழ்துழாய்த் தாமரைக் கண்ணனும்
வண்ணம்வே(று) உடம்(பு) ஒன்றாய் வானவில் அனையரே.''

என்று பாடிய "பழம் பாடல்" புலவனார் நெற்றிக்கண் கொண்டு இவ் வான வில்லைக் கண்டனரா, அல்லது கற்பனையால் பாடினரா, எவர் அறிவர்.

உலகம் பலவிதம், உலக மக்களும் பலவகையினர். மனிதர் யாவருக்குமே மெய் வாய் கண் மூக்கு செவியாகிய ஐம்புலன்களும் பொதுவாக இருப்பினும், அவற்றுள் சிறப்பாக ஒவ்வொரு புலன் மூலமே ஒவ்வொருவர் உணர்ச்சி ததும்பப்பெறுவா. அந்த வேறு பாட்டால் விளைவதே ஓவியர், இசைவாணர், எழுத்தாளர், கவிகள், நடிகர்கள் போன்ற பலவகை மக்களினங்கள். அந்த உண்மையையொட்டி, இக் "கட்டளைப்பிரமாணம்" நடைபெறும் போது ஐம்புலன்களுக்கும் உணவூட்ட, மெழுகுதிரி விளக்குகள் உயர்த்தப்படும், தூபம் பெருக்கப்படும், வெள்ளியோசை மணி குலுக்கப்படும், இன்னிசை எழுப்பப்படும். இவைகள் அவரவருக்குரிய புலன் மூலம் மனத்துட் புகுந்து அவரிடம் பக்தியைப் பெருக்கும். இக்கருத்துப்பற்றியே நமது ஆலயங்களிலும் புஷ்பாலங்காரங்கள், தீபாலங்காரங்கள், தீபதூப ஆராதனைகள், மேளதாளங்கள், மணியோசைகள் யாவும் ஒருங்கே இயற்றப்படுவன. ஆனல் பல பல சேகண்டிகளைக் கட்டிக்கொண்டு தடபுடலாக முரட்டோசை விளைவிப்பது இன்னிசையாகாது. அத்தகைய கர்ண கடூரமான கொடுஞ்சத்தம் தேவகணங்களை நடுங்கச்செய்யும்; அடியார்கள் சூக்ஷ்ம உடம்புகளில் ஊசி புகுத்தும், காதைத் துளைக்கும், மன அமைதியைக் குலைக்கும். ஒரே கண்டாமணி மாத்திரம் மேளத்தின் தாளத்தை யொத்து ஒலிக்கப்படல் வேண்டும். வேறு அபசுரமான ஒலிக்கு ஆலயத்துள் இடமே யிருத்தலாகாது.

நமது விருந்துகளில் அறுசுவை உண்டியும் பல பல வகைக்கறிகளும் பரிமாறுவது, இந்த 'உலகம் பலவகை' என்ற உண்மையைப் பொறுத்ததே. விரும்பி அழைக்கப்பட்டவர் உண்ணுமல் போகக்கூடாதென்ற நோக்கத்துடன், ஒரு சுவை பிடிக்காதவர் வேறொன்றை உண்ணட்டுமென்ற பெரு நோக்குடனேயே நமது விருந்துச்செழிப்பு நடைபெறுவது. அவ்வுண்மை யறியாது அதனை வீண் விரையமென்று பழிப்பது தவறு.

பாடம் 25.

## IV. நற்கருணை ஆராதனை.

(அப்பம் பிரதிஷ்டை செய்தல்.)

### III. அருள் விநியோக விண்ணப்பம்.

**சாமியார்:**—"அன்பே வடிவெடுத்த எங்கள் பிதாவே, இந்தப் பரிசுத்த ஆராதனை யக்ஞத்தைக் கீழ்க்கூறுங் காரியங்களுக்காக நாங்கள் அர்ப்பணஞ்செய்ய வேண்டுகிறோம்:—

(1) உமது பரிசுத்தமுள்ள திருச்சபைக்கு சாந்தியும் ஐக்கியமும் அருளிச்செய்து, அதை உலக முழுவதிலும் மேன்மையுற நடத்துவீராக.

(2) எங்கள் அரசனுக்கும், அத்யக்ஷகருக்கும், மற்றுள்ள எங்கள் ஆலய குருக்கள்மாருக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும், இங்கு கூடியிருக்கும் அடியார்கள் அனைவருக்கும் அருள் வழங்குவீராக.

(3) நிலையில்லாத இந்த உலக வாழ்க்கையில் துன்பம், துக்கம், வறுமை, வியாதி முதலான உபத்திரவங்களால் வருந்துகிற யாவரையும், விசேஷமாக இன்னின்னரையும் (பேர்களைச்சொல்ல) உமது தயவினாலே தேற்றி ஆதரிக்க வேண்டுமென்று பணிவாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

(4) தூல உடற்சுமையை நீக்கி உமது திருவடிக்கு நீர் அழைத்துக்கொண்ட உமது பிள்ளைகள் எல்லோருக்காகவும் விசேஷமாய் (அ—ஆ—இ—ஈ) என்போருக்காகவும் வேண்டிக்கொள்கிறோம்."

என்பதே சாமியார் இறைவனிடம் செலுத்தும் அருட்பங்கீடு விண்ணப்பம். அபிஷேகமான சாமியாரைத்தவிர வேறுயாரும் இதனை விண்ணப்பிக்க அருகரல்லர். தூல உடற்சுமை நீக்கப் பட்டவரென்பது, மரித்துப்போனவரே.

இப்பூலோகத்தில் பல பல ஏரிகளும் நீர்நிலைகளும் உள்ளன. அங்கு நிறைந்து நிற்கும் தண்ணீர், சூரிய வெப்பத்தால் சிறிது

ஆவியாக மாறி ஆகாயத்திலேறி அதற்குக் கொஞ்சம் தணுப்பைக் கொடுக்கும்; கரைவழியாகக் கசியும் ஊற்று மூலமாக, அண்டையி லுள்ள பயிர் பச்சைகளுக்கு மாத்திரம் செழிப்பைக் கொடுக்கும். இவையே இயற்கையில் நடைபெறுவன. ஆனால் செயற்கை முறையில் அங்கு மக்கள் கால்வாய்களையும் மடைகளையும் அமைப் பார்களானால், அவற்றின்மூலம் ஏரி நீர் வெளிப்பட்டு உலக அனுகூலமாகப் பல பல வேலைகளை இயற்றவல்லதாகும். அம்மா-திரியே சப்த உலகங்களையும் இறைவனுடைய அருள் நீர்நிலைக-ளென்னலாம். அந்தந்த உலகுக்கமைந்த அருட் சக்திகள் அந்தந்த உலகில் மாத்திரம் பரந்து நின்று, உயிர் வர்க்கங்களி-னுடைய சூட்சும உடம்புகளைப் பண்படுத்துவதில் ஓயாது ஒழியாது வேலைசெய்து கொண்டேயிருக்கும். ஆனால் அது மந்த கதியாகவே யிருக்கும். அந்த சக்திகளின் இயற்கை வேலைமுறை அது. ஆயினும் செயற்கை முறையில் கீழ் உலகங்களை நோக்கி அவற்றிற்கு மடை அமைக்கலாமாயின், அவற்றின் மேலுலக மந்தகதி கீழ் உலகில் மிகத் தீவிர கதியாகமாறி, பரிபக்குவ-மில்லாத சாதாரண மக்களுக்கும் அவை பலன் கொடுக்க இயலு-கின்றது. விசுவகர்மதேவர் நிர்மாணித்த சூட்சும ஆலயத்தினுள் இதுவரை நடைபெற்ற அருட்பொழிவெல்லாம், அடியார்க-ளுடைய சாதாரண பக்தியாலும் சிற்றறிவாலும், தேவர்களுடைய தீவிர பகதியாலும் நுண்ணறிவாலும் ஏற்பட்ட மடைகள் வழி-யாகக் கீழிறங்கிய அருளேயாம ஆனால் இப்போது நடக்க விருக்கும் திவ்ய நற்கருணை ஆராதனை மூலமாக இனி இறங்கும் அருளோ, நேரே பகவான் கிறிஸ்துநாதரிடமிருந்தும், அவர் தொடர்புகொண்டுள்ள இறைவனுடைய இரண்டாவது மூர்த்த-மாகிய மகாவிஷ்ணுவிடமிருந்தும் நேரடியாகப் பொழிவதாகும். முன்னதற்கும் இதற்கும் அளவிலும் தன்மையிலும் உள்ள வேறு பாடுகள் கடுகுக்கும் மலைக்குமுள்ள வித்தியாசம் போல்வன. தேவர்களும் மனிதரும் இதுவரை இறக்கியுள்ள அருட்சக்திகள், பூலோக புவர்லோக சுவர்லோக சம்பந்தமானவைகளே. அவை மக்களுடைய திரிலோக உடம்புகளை மாத்திரம் பாதித்து அவற்றை ஏகதேசமாகப் பண்படுத்தும். ஆனால் இனி நேரும் அருட்பிரவாகங்களோ, மகர், ஜனோ, தபோலோக சம்பந்தமுள்-ளனவாய், மனிதருடையவும் தேவர்களுடையவும் அன்னமய

பிராணமய மனோமய கோசங்களை மாத்திரமன்றி அவர்கள் விஞ்ஞானமய ஆநந்தமய கோசங்களையும் பண்படுத்தவல்லன. (இவ்வுடம்புகளைப்பற்றி முதற்பாகம் பார்க்க). இதுவே ஆலய ஆராதனையின் ஆன்மநிலைப் பாகம். அதற்கு முன்னதாகச் சாமியாரால், தனியாக அருள் விநியோகிக்கப்படவேண்டியவர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

இந்த அருள் விநியோக விண்ணப்பம் ஆராதனையின் இன்றியமையாத பாகமல்ல; அருட்பொழிவிற்கு அநுகூலமானதுமல்ல. அது நமக்குள் நடைபெறும் அர்ச்சனைகளை யொத்தது. நமது ஆலயங்களில், இறந்தவருக்கும் இருப்பவருக்கும் நாம நக்ஷத்திரங்கள் சொல்லி அவர்கள் நன்மை கருதி இறைவனை வேண்டி அர்ச்சனைகள் செய்வது மிகச் சாதாரண வழக்கம். அந்த அர்ச்சனைச் சீட்டுகளும கூலிகளும் ஆலயந்தோறும் வேறுபடுகின்றன. இவ்வூர்க் கோவிலில் இரண்டணுவிற்குச் செய்யப்படுகிற அர்ச்சனை இராமேஸ்வரத்திலும் திருப்பதியிலும் ஏழு, ஒன்பது ரூபாய்களுக்குச் செயயப்படுகின்றன. இந்த அர்சசனைகளால் ஏதாவது பலன் உண்டுமா, கூலிக்கேற்பக் கூடுதல் குறைவுண்டுமா, அல்லது எல்லாம் வெறும் ஏமாற்றநதாளு என்பதுபற்றி ஒன்றும் உறுதியாய்க் கூறுவதற்கில்லை. அதனால் இந்தக் கிறிஸ்துவ முறையின் உட்பொருளை அறிவது நமக்கும் அநுகூலமாயிருக்குமென்றே அது இங்கு விளக்கப்படுகிறது.

சாமியார் சிலுவையை நோக்கி நின்று விநியோக விண்ணப்பம் பண்ணும்போது, அச்சிலுவையின் பின்னால் நின்றுகொண்டிருக்கும் அதிகார தேவர் சாமியார் எண்ணங்களை உற்றுக் கவனிக்கின்றனர். ஒவ்வொரு பெயரையும் கேட்டவுடனே, அடுத்துக் குழுமிநிற்கும் சாதாரணதேவர் ஒருவரை நோக்கித் தன் அதிகாரக்கோலை நீட்டுகின்றனர். அங்ஙனம் குறிப்பிடப்பட்ட தேவர் முன்வந்து அந்தக் கட்டளையை ஏற்றுக்கொண்டு சற்றுவிலகிக் காத்துநிற்பர். தேவகணங்களில் பல வகைகளிருப்பது கூறப்பட்டுள்ளது. அவருள் இந்த விநியோக வேலையில் ஈடுபடுபவர் தேவதூதுவர்கள் (Messenger Angels) என்று கிறிஸ்துவமதத்தில் அழைக்கப்படுகின்றனர். அவர்களே சூக்ஷ்ம உலகங்களின் தபால் இலாக்காச் சிப்பந்திகள், இவருள்

ஒவ்வொருவர் ஒவ்வொரு விநியோகப் பேர்வழிக்குப் பொறுப்புக் கொள்வர். ஆராதனை முடிந்ததும் அந்தந்தத் தூதுவருக்குரிய அருட்பங்கை அதிகாரதேவர் தம்கோலை நீட்டி வழங்கவும், குறிப்பிட்ட தேவதூதர் முன்வந்து, அந்த அருளைத் தம் உடம்பில் உறிஞ்சிக்கொள்வர். அபபோது அவருடைய முட்டைக் கூண்டு போன்ற சூட்சுமவுடல் மிகவும் பூரித்து மிகமிக கூடுதலாக ஒளி வீசிக் காணப்படும். பின்னர் ஆராதனை முடிவில் சாமியார் பூஜையை விசர்ஜனம பண்ணுமபோது அந்த தேவதூதுவர்கள் வாயுவேகம் மனோவேகத்தில் வெளிக்கிளம்பி அந்தந்தப் பேர்வழிகளைக் கண்டு பிடித்து அவருடைய சூக்ஷ்மம உடம்புகளில் அவர்களுக்குப் பங்கிடப்பட்ட அருளைக்கொட்டிவிடுவர். அப்பேர்வழிகள் பூலோகத்தில் நனவு நிலையில் உயிர் வாழ்பவர்களாயினுஞ்சரி, இறந்தவராகவோ அல்லது உறக்கத்திலோ புவர்லோக சுவர்லோகங்களில் இருப்பவர்களாயினுஞ்சரி, நொடிப்போதில் சிறிதும் பிசகாமல் அவரைத தேடிப்பிடிதது, அவரவர் பங்கை இம்மியுங் குறையாமல் அவரவரிடம சேர்ததுவிடுவர். அப்போது தேவதூதருடைய உடமபு முன்னைய நிலைககுவரும், அருளைப் பெற்றவருடைய மனத்திலும சூக்ஷ்மம உடமபுகளிலும் மாறுதல் காணப்படும் அதாவது, நோயுடையவர் சிறிது குணப்படுவர், துக்கமுடையவர் அமைதிபெறுவர், சஞ்சலப்பட்டவர் சாந்தி பெறுவர், சோர்ந்திருப்பவர் ஊக்கம் பெறுவர், அச்சமுடையவர் தைரியம் பெறுவர், திகைத்து நிற்பவர் தேறுதல் பெறுவர்; இம்மாதிரி அவரவர் தேவைக்குகந்தபடி இறந்தவருக்கும் இருப்பவருக்கும் அந்த அருளானது இயன்ற உதவிபுரியும். இந்த விநியோகம் ஒருவருக்கு அடிக்கடி ஏற்படும்போது, பலன் ஸ்தூலமாகப் பிறருக்கும் புலப்படும.

தனிப்பட்ட பேர்களுக்காக விநியோக விண்ணப்பம் செய்யப் படும்போது, அவர்கள் பெரும்பாலும் சாமியாருக்கு அறிமுகமானவராகவேயிருப்பர். அப்போது அவருடைய உருவம் சாமியார் மனத்திலிருக்கு மாகையால், அவர் சம்பந்தமான தேவ தூதருக்கு அன்னாரைக் கண்டு பிடிப்பது எளிதாகின்றது. சில சமயங்களில் விண்ணப்பிக்கப் படுபவர் சாமியாருக்குத் தெரியாதவராக இருக்க நேரிடும். அப்போது அந்தத் தேவதூதுவர்,

சாமியாருக்கு எவ்விடமிருந்து கோரிக்கை வந்துள்ளதோ அதைத் தேடிப்பிடித்து அதன் மூலம் குறிப்பிட்ட ஆளைக் கண்டுபிடிப்பர். இது தேவர்களுக்குப் பிரயாசையின்றிச் செய்யக்கூடிய ஆற்றல்களில் ஒன்றாயினும், இப்பேர்ப்பட்ட சமயங்களில் அத்தேவர்களின் வேலைக்கு ஒத்தாசையாக, விநியோகத் தேவையுள்ள ஆட்களின் படங்களைச் சாமியாருக்கு அனுப்பிவைப்பது கிறிஸ்தவருக்குள் வழக்கம். மற்றப்படி சாமியார் அவரை அன்போடு நினைத்தாலும், அல்லது ஆலயத்துள் அர்ச்சனைக்காரரோடு தொடர்புள்ள யாராயினும் அன்போடு அவரை அழைத்தாலும், அம்மக்கள் ஆலயத்துள் தமது சூக்ஷ்ம நிலையில் மிக வேகமாய் வந்து சேருகின்றனராம். அப்போதும் தேவதூதர்களுக்கு அவரைத்தேடும் வேலை சுலபமாகின்றதாம்.

நமக்குள்ளும் இந்த முறைகள் பலவும் காணப்படுகின்றன. இங்கு தாமே ஆலயஞ்சென்று அர்ச்சனை செய்பவரும் உளர்; பிறர்மூலஞ் செய்பவருமுளர். தென்காசியிலிருப்பவர் பணமனுப்பி வடகாசியில் அர்ச்சனை செய்வதுமுண்டு. அப்போது அங்குள்ள அர்ச்சகருக்கு ஆளை அறிவது கூடாதகாரியம். ஆதலின் ஆகமமுறைப்படி அர்ச்சனைகள் நடைபெறுமாயின், இப்பேர்ப்பட்ட வேளைகளில் மேற்சொன்ன சூத்திரம் ஏதோ நமக்குள்ளும் நடைபெறலாமென்று அநுமானிக்க வேண்டியிருக்கின்றது.

பாடம் 26.

## IV. நற்கருணை ஆராதனை.

### IV. பிரதிஷ்டை ஜபம்.

### (The Prayer of Consecration).

மனிதன் இறந்தபோது காணப்படுவது அவனுடைய உடம்பு மாத்திரம், அதாவது அவனுடைய பிரேதம்; அவன் உறங்கும்போது காணப்படுவன அவனுடைய உடம்பும் உயிரும். அவன் நனவு நிலையில் வேலை செய்யும்போது காணப்படுவன உடம்பு, உயிர், ஆன்மா என மூன்றுமாகும் அதைப்போன்று கிறிஸ்துவ ஆராதனையில் விஸ்வகர்மதேவர் நிர்மாணிக்கும் அருளாலயம் உடம்பென்றும், நவகணை வானோர்கள் அங்குவந்து நிரப்பும் அருள் உயிரென்றும், இனி நேரப்போகும் கிறிஸ்து நாதர் பிரசன்னம் கிரியையின் ஆன்மபாகமென்றும் முன்னே கூறப்பட்டது. அந்த ஆன்மபாகத்தைப்பற்றி இனிச் சுருக்கமாக ஆராய்வோம்.

யூதருக்குள்ளே "பஸ்காப்பண்டிகை" (Feast of the Passover) என்ற ஒரு திருவிழா உண்டு. அது இன்றைய ஈஸ்டரை யொட்டிவருவது. அச்சமயம் அம்மக்கள் பெருந்திரளாக அவர்களுடைய தலைமை க்ஷேத்திரமாகிய "எருசலேமில்" வந்துகூடி அந்தப் பண்டிகையைக் கொண்டாடுவார்கள். திருவிழாவன்று அவர்கள் விரதமிருந்து இரவு புளிப்பில்லாத கோதுமை அப்பமும் திராக்ஷ ரசமும் இறைவனுக்கு நிவேதித்து அருந்துவார்கள். பகவான் கிறிஸ்து நாதர் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தின நாளிலே அந்த பஸ்காப்பண்டிகை (Paschal) நேர்ந்தபடியால் அதைக் கொண்டாடும் பொருட்டு பகவானும் சிஷ்யர்களும் " எருசலேம் " சென்றனர். அங்கு,

" வேளை வந்தபோது, அவரும் அவருடனே கூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தி யிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, நான் பாடு படுகிறதற்குமுன்னே உங்களுடனேகூட இந்த பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும்

நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லு-கிறேன், என்று சொல்லி,

" அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்து, இது உங்களுக்காகக் கொடுக்-கப்படுகிற என்னுடைய சரீரமா யிருக்கிறது, என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள், என்றார். போஜனம் பண்ணின பின்பு அவர் அந்தப்படியே (பானப்) பாத்திரத்தையும் கொடுத்து இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்திலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்." (லூக்கா சுவிசேஷம் : xxii. 14-20).

இதுவே கிறிஸ்துவ தேவாராதனையின் பிரமாணமும் முதல் ஸ்தாபனமும் ஆகும். பகவான் கிறிஸ்து நாதராலேயே இது ஸ்தாபிக்கப்பட்டுள்ள படியால், இப்போதும் அப் பரம்பரைப்படி அபிஷேகம் பண்ணப்பட்ட அதிகாரிகள், விதிப்படி இம்மந்தி-ரத்தை ஓதும்போது கிறிஸ்துநாதரே பிரசன்னமாகி, அந்த அப்பத்தின் மூலமும் திராக்ஷ பானத்தின் மூலமும் தமது ஒப்புயர்வற்ற அருளை உலகுக்கு மலையாறுபோல வழங்கி வருகின்றனராம். இதுவே இந்த ஆராதனையில் வங்கப்பணி முனிவர் முதல் முதல் நெற்றிக்கண்ணால் கண்ட அற்புதக்காட்சி. அவரை அதன் ஆராய்ச்சியில் சாங்கோபாங்கமாக ஈடுபடுத்தி-யதும் அதுவே.

இந்த ஆராதனையில் உபயோகமாகும் அப்பமும் திராக்ஷ-ரசமும் " நற்கருணைத் திரவியங்கள் " என்றழைக்கப்படுகின்றன. அப்பம் புளிபபில்லாத கோதுமை மாவினால் செய்யப்பட்ட பிஸ்கோத்துப்போன்ற சிறு சிறு ரொட்டியே. அடியார்களுக்கு விநியோகிக்கப்படுவன, அளவிலும் கனத்திலும் ரூபாய்கள் போன்றிருக்கும். சாமியார் பிட்டு உபயோகிப்பது ஓலைக்-கனத்தில் உள்ளங்கையகலத்தில் செய்யப்பட்டிருக்கும். இந்த நற்கருணைத் திரவியங்களைச் சாமியார்களைத்தவிர வேறுயாரையும் கையாட விடுவதில்லை. அடியார்கள் பிரசாதம் வாங்கும்போது மண்டியிட்டுக் கைகூப்பி வாயை அங்காத்து வாங்கிக்கொள்ள-வேண்டும்; சாமியார் ஆசீர்வதித்து அதை வாயிலிட்டவுடன்

மெல்லாமலே அதனை விழுங்கிவிட வேண்டியது முறை. பல்லால் அதை மெல்லுவது, நமக்குள் சிவாபராதம்போன்ற பெரிய தேவாபராதமாகக் கிறிஸ்தவரால் கருதப்படுகிறது. இந்த தேவாராதனைக்கிரமத்தை உண்மையாகவே அறிய விரும்புவோர் இரண்டொருமுறை ரோமன் கத்தோலிக்கர் ஆலயஞ்சென்று அவர்களது காலை வழிபாட்டைக் கண்டுவருவது அவசியம். ஆங்கிலங் கற்றுள்ளவர் அதன் பின்னர் "ஸாக்ரமந்தின் ஆராய்ச்சி சாஸ்திரம்," (The Science of the Sacraments, by Bishop. C. W. Lead beater) என்ற நூலைக் கற்பாராயின் அங்குள்ள படங்கள், விளக்கவுரைகளிலிருந்து இந்துமதக் கிரியைகள் பலவற்றின் சூக்ஷ்ம நிகழ்ச்சிகளை அநுமானமாக ஒருவாறு அறியலாகும். அதன் மூலம் நமது ஆலயக்கிரியைகளும் சமயச்சடங்குகளும் உட்பொருளுணர்வோடு திருந்தச் செய்யப்படலாமென்ற ஆவல்கொண்டே இந்நூல் எழுதப்படுகிறது.

இந்த அப்பமும் திராக்ஷ பானமும் பாதமுள்ள இரண்டு சிறு சந்தனக் கும்பாக் கிண்ணங்களில் வைத்து ஆராதிக்கப்படும். அக்கிண்ணங்கள் குறைந்தபக்ஷம் வெள்ளியினாலாவது செய்யப்பட்டு, உட்புறம் பொன் முலாம் பூசப்பட்டிருக்கவேண்டும். பணமுள்ள ஆலயங்களில் அவை பொற் பாத்திரங்களாகவும், பெருஞ்செல்வமுள்ள ஆலயங்களில் அவை கட்டிப்பொன்னில் நவரத்தினங்கள் இழைத்தனவாகவும் இருக்கும். கிறிஸ்தவருடைய பூசாரிகள், சாமியார் என்றும் குருக்கள் என்றும் ஐயர் என்றும் பலவாறாக அழைக்கப்படுவர். அதுபோலவே இக்கிண்ணிகளும் பூசைப்பாத்திரமென்றும் திவ்ய நற்கருணைப்பாத்திரமென்றும் ஆம்பலென்றும் பலவிதமாக அழைக்கப்படுவன.

இந்தப் பாத்திரங்களில் ஒன்றில் அப்பத்தையும் ஒன்றில் திராக்ஷ ரசத்தையும் இட்டு மூடி, பலிபீடத்தில் சிலுவையின் முன்னாக வைத்துச் சாமியார் சில மந்திரம் முத்திரைகளால் முதலில் அவற்றைச் சுத்தி செய்வர். இது கொஞ்சம் நீண்டவேலை. அதன் முடிவில்,

**சாமியார்:—I.** "சர்வ வல்லமையுள்ள பிதாவே, பரிசுத்த தேவனே, இந்த நற்கருணைத் · திரவியங்கள் உமது புத்திர-

னுடைய விலையற்ற + சரீரமும் + இரத்தமுமாக எங்களுக்கு மாறும்படி அவற்றை உமது வார்த்தையாலும் பரிசுத்த ஆவியினாலும் + ஆசீர்வதித்து, + அங்கீகரித்து, + உறுதிப்படுத்துவீராக."

II. "தேவனே, அவர் பாடுபடுகிறதற்கு முந்தின நாளிலே, தமது பரிசுத்தமான திருக்கரங்களால் அப்பத்தை எடுத்து, தம்முடைய சர்வவல்லமையுள்ள பிதாவாகிய உம்மை நோக்கிக் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அப்பத்தை + ஆசீர்வதித்துப் பிட்டு சிஷ்யர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லோரும் இதை வாங்கிப் புசியுங்கள்,

"**இது என்னுடைய சரீரமாயிருக்கிறது**" என்று அருளினார்."

இந்த இரு மந்திரங்களையும் சாமியார் மிக மிக உருக்கத்தோடும் பணிவோடும் அத்யந்த பயபக்தியுடனும், உலக ரக்ஷிப்பின்பொருட்டு கிறிஸ்து பகவான் தம்மையே பலிகொடுத்த பெருங்கருணையை வியந்து போற்றி அதனாலான அளவற்ற நன்றியோடும், ஓதுவர். இடையிடையே சில கிரியைகளையும் இயற்றுவர். இப்பாகமே கிறிஸ்தவர் அனைவராலும், "ஸாக்ரமந்து," (Sacrament) என்றும் "யூக்கரிஸ்து," (Eucharist) என்றும் "மாஸ்," (Mass) என்றும் அழைக்கப்படும் அவர்களுடைய பிரதான ஆராதனையின் ஜீவநாடி. "இது என்னுடைய சரீரமாயிருக்கிறது," "இது என்னுடைய இரத்தமாயிருக்கிறது," (மேலே பார்க்க) என்னும் வாக்கியங்களே அந்த ஜீவநாடியின் இரு உயிர்ஸ்தானங்கள். அவை ஆண் பெண் போலவும் இறைவனும் சக்தியும்போலவும் இணைந்து நிற்பனவாய் (Complementary), அருட்பொழிவில் ஒன்றையொன்று பூர்த்தி செய்வன. ஆகவே இதுவரை இயற்றப்பட்ட கிரியைகள் யாவும் இந்த சிகரத்திற்கு கொண்டு செலுத்தும் படிக்கட்டுகளே யென்பது சொல்லாமலே யமையும்.

## விளக்க உரை.

மேலே கூறியுள்ள முதல் மந்திரத்தில் சாமியார் "சரீரமும் இரத்தமுமாக" என்பதை ஓதும்போது, அப்பத்தின் மீதும்

---

குறிப்பு:—(+) அடையாளமுள்ள இடங்கள் சாமியார் சிலுவை முத்திரை செய்யும் இடங்களாம்.




**திவ்ய நற்கருணை ஆசீர்வாதம்**

(a) சிலுவை பீடம்; (b) சாமியார்; (c) திவ்ய நற்கருணை அப்பமும், ஆம்பலும், (Monstrance); (d) அருட்பிரபா மண்டலம் - உட்சோதி; (e) ஷை வெளி மண்டலம்; (f) அருட்பொழிவு; (g) ஆசனங்கள்; (h) தரை.

அத்துணை மகிமையுடையது அவருடைய பேராற்றல். கண்ணபிரான் கோபிகாஸ்திரீகள் அனைவர் வீட்டிலும் ஏககாலத்தில் பிரசன்னமாயிருந்ததுவும் இவ்வல்லமையாலேயே.

கிறிஸ்துநாதர் பிரசன்னமானதும் அது நெற்றிக்கண்ணே காணக்கூசும் ஒரு காட்சியாக இருக்குமாம்; அவ்வளவு ஜோதிமயமாக இருக்குமாம் அவரது தெய்வீகத்தோற்றம். அப்போது ஆலயத்துள்ளும் பெரும் ஆர்ப்பாட்டம் ஏற்படுமாம். அங்கு கூடியிருக்கும் நவகண வானோர்களும் மற்றும் தேவர்களும் அவரைக்காணவல்லவராகையால், அவர்களெல்லோரும் பக்திப் பெருக்கெடுத்துத் தலை வணங்கி அவரை ஸ்தோத்தரிப்பராம. அது அருளாலயத்திற்கு ஒரு புதிய சோபையையும் அழகையும் கொடுக்கும். இந்த நிலையில் சாமியார், சிலுவையை நோக்கி மண்டியிட்டு வணங்கி, “இது என்னுடைய சரீரமாயிருக்கிறது.” என்று ஓதிக்கொண்டு, அப்பக்கிண்ணத்தை பகவானுக்குச் சமர்ப்பிக்கும் பொருட்டும் அடியார்கள் அனைவரும் கண்டு வணங்கும் பொருட்டும் தன் இருகையாலும் பிடித்து மிகுந்த பக்தியுடனே தலைக்குமேலாக உயர்த்துவர். உடனே, வெறும் அப்பமாக இருந்த அந்த பூலோகத்திரவியம் கிறிஸ்துநாதர் அருளினால் தேவவசீகரம்பெற்ற நற்கருணைத் தேவ திரவியமாக (Consecrated Host) மாறி, கோடி சூரியப் பிரகாசத்தோடு ஒளிவீசி நிற்கின்றது. அப்போது அது அவருடைய ஸ்தூல உடம்பே யாகின்றது; அதனால் அது அவருடைய மாம்சம் எனப்படுகின்றது. அதே சமயம் மூன்றுவிதமான அருட்சக்திகள் உயர்த்தப்பட்ட அப்பத்தின் மூலம் பகவானிடமிருந்து வெளிவரு கின்றனவாம்.

ஒன்று, சூரிய ஒளியும் வெப்பமும் போன்று, உயிரினங்களைப் பகுத்துப் பிரிக்காமலும் வேறு படுத்தாமலும் பொதுப்படையாக யாவர்மீதும் ஒன்றுபோலப் பொழிந்து, ஆலயம் முழுவதும் நிறைந்து, அதற்கப்பாலும் நாற்புறமும் பல மைல் தூரம் பரவி, அங்குள்ள யாவரையும் பாதிப்பது. (படம் பக்கம் 140 பார்க்க) அது தன் எல்லைக்குள்ளகப்படும் விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்கள் யாவற்றையும் ஊக்கிப் பண்படுத்தி வளர்க்கின்றது. அதற்குக் கீழ்ப்பட்ட உடம்புகளை அது நேரடியாகப் பாதிப்ப-

தில்லை. இது பரிபக்குவமடையாத மேலுடம்புகளைப் பாதிக்கும் போது அந்த சாதாரண மக்களுக்கு ஒருவிதமான சாந்தியும் ஆநந்தமும் அச்சமயத்திற்கு ஏற்படும். மற்றையோருக்கு அது நீடிய சாந்தியைக் கொடுக்கும்.

இரண்டாவது அருட் சக்தி, சூரியனிடமிருந்து தனித்தனிக் கிரணங்கள் வெளிவருவது போன்று ஆலயத்துள்ளிருக்கும் அடியார்களைத் தனிப்பட்ட முறையில் மாத்திரம் பாதிப்பது. நமது ஆலயங்களில் தீபாராதனை நடைபெறும்போது, மனம் வேறு சென்றிருந்தாலும் பழக்க வாசனையினால் பலர் கையெடுத்துக் கும்பிடுவதுபோல, தேவாலயத்திலும் இந்த . அப்ப ஆராதனை நடைபெறும்போது பழக்கவாசனையினால் யாவரும் மண்டியிட்டுத் தலைவணங்கித் தொழுது நிற்பர். ஆயினும் யாவர் மனத்திலும் பக்தி ஒன்றுபோல இருப்பதில்லை. அடியார்களுள் பக்தி வீசும் இருதயத்தில் மாத்திரமே இந்தத் தனிப்பட்ட கிரணங்களில் ஒன்று வந்து புகுந்து, அவருடைய இச்சையுடம்பு மனவுடம்புகளைப் பரவசப்படுத்தும்; அவற்றிற்குச் சிறிது மலர்ச்சியும் வளர்ச்சியும் கொடுக்கும். இது திறந்த கதவு மூலம் சூரிய ஒளி உட்புகுவது போன்றது. மனம் வேறுபட்டிருப்போரை நோக்கி இத்தனிப்பட்ட ஜோதிக்கதிர் செல்வதுமில்லை, உட்புகுவதுமில்லை, அவரைப் பரவசப்படுத்துவதுமில்லை. அப்பர் சுவாமிகள் அருளியுள்ள "உருகாதார் உள்ளத்து நில்லார் போலும்," என்ற வாக்கு இங்கு நினைப்புக்கு வருகிறது. இந்த இரண்டு சக்திகளுங்கூடி ஒருவனைத் தாக்கும்போது, அவனுடைய ஸ்தூல உடம்பொன்றைத் தவிர, மற்ற சூக்ஷ்ம உடம்புகள் யாவுமே முன்னேற்றம் பெற்றுச் சிறிது விகசிக்கின்றன. ஸ்தூல உடம்பு அப்பப் பிரசாதத்தை உட்கொள்ளும்போது திடப்படும்.

இனி, மூன்றாவதான அருள், சிலுவையைச்சுற்றி மாத்திரம் அமர்ந்து நிற்கும். அது முன்னே சொன்ன அர்ச்சனை விநியோகத்திற்காகத் தனியாக வெளிவரும் அருளாம். இது துண்டித்துப் பங்கு போடக்கூடிய தன்மை யுடையதாயிருக்கின்றது. பின்னால் பங்கிடும்பொருட்டு இதை மேலே சொன்ன அதிகாரதேவர் கைவசப்படுத்தித் தம்மைச் சுற்றிச் சிலுவையண்டை தங்க வைத்துக் கொள்வர்.

அப்பம் ஆராதனையாக உயர்த்தப் படும்போது அடியார் கவனத்தை இழுக்கும் பொருட்டுக் கிண்கிணிமணி குலுக்கப்படும், சுகந்த தூபம் பெருக்கப்படும். அடியார்களுக்குள் அரவமே யில்லாத அமைதி காணப்படும். நமது ஆலயச் சந்தடிக்கும் அதற்குமுள்ள பெரும்வித்தியாசம் நம்மையறியாமலே அப்போது நமக்குத் தென்படும். இந்த அப்ப ஆரத்தி முடிந்ததும் கிண்ணத்தைப் பலிபீடத்தில் வைத்துவிட்டு,

**சாமியார்:—**"அப்படியே இராப்போஜனம் பண்ணின பின்பு, அவர் பாத்திரத்தையும் எடுத்து மறுபடியும் ஸ்தோத்திரம் பண்ணி, அதை + ஆசீர்வதித்து சீஷர்களுக்குக் கொடுத்து, இதை எடுத்து நீங்கள் எல்லோரும் பானம் பண்ணுங்கள்,

**"இது என்னுடைய இரத்தமாயிருக்கிறது,"**

நீங்கள் இவற்றைச் செய்யும்பொழுதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இவற்றைச் செய்யுங்கள், என்று திருவுளம் பற்றினார்,"

என்ற மந்திரத்தை ஓதிக்கொண்டு, பகவான் இயற்றிய கிரியையை முன்போலவே திரும்பவும் இயற்றி, ஸ்தோத்திரம்பண்ணி, ஆசீர்வதித்து, "இது என்னுடைய இரத்தமாயிருக்கிறது," என்னும் போது, மண்டியிட்டு மிகுந்த பயபக்தியோடு பானப்பத்திரத்தையும் தலைக்குமேலே உயர்த்தி ஆராதிப்பர். அப்போதும் முன்னே சொன்ன மூன்றுவித அருட்சக்திகளும் இந்தபானத்தின் மூலமும் அமோகமாகப் பிரவகிக்கின்றன. ஆனால் முன்னையவை ஆண்தன்மை கூடினவையாகவும், இப்போது வரும் வெள்ளம் பெண்தன்மை கூடினதாகவும் இருக்கின்றன. அதனால் இந்த ரசம் பகவானுடைய இரத்தமாகக் கருதப்படுகின்றது. சாமியார் பானப்பாத்திரத்தைக் கீழே வைத்ததும், யாவரும் கோஷ்டியாக ஒரு ஜெயகீதம் பாடுவர். அதில் மக்களோடு தேவர்களும் இறந்தோரும் யாவரும் பங்கு கொள்வர்; ஆலயத்துள் அருட்பொலிவு அமளி குமளியாயிருக்கும். கீதத்தின் சில பாசுரங்கள வருமாறு:

**யாவரும்:—**"ஓ, உள்ளொளிர்ந்த ஜோதியே! உமது சாக்கிரமெந்தில் காணப்படும் உம்மை வணங்குகிறோம்.

இந்தப் பூலோகத் திரையின்கீழ் உம்மை வணங்கி கன-பக்தியாய் உமது சன்னிதானத்தை வாழ்த்துகிறோம்.

(1) "வாரும் வாரும் விசுவாசிகளே! வெற்றி சிறந்தோரே!
ஆனந்தக் களிப்போடே அனைவரும் வருவீரே!

"வாரும் வாரும் ஓ பெத்தல கேமுக்கு,
வந்து தூதர்களின் ராஜனைப் பாரும்,
வந்து அவரை சாஷ்டாங்கஞ் செய்வோம்,
வந்து கர்த்தராகிய கிறிஸ்துவை சாஷ்டாங்கஞ்செய்வோம்.

(2) தேவாதி தேவர், ஜோதியில் ஜோதி,
பூலோகச்சட்டையில் தம் ஜோதியை மறைத்துள்ளவர்,
மெய்த்தேவன், அவர் தேவனில் பிறந்தவர்,
வாரும் அவரைச் சாஷ்டாங்கஞ் செய்வோம்.

(3) பரலோக பாடகரே, சந்தோஷத்தால் ஆர்ப்பரியும்!
பரலோகவாசிகளே, எல்லோரும் துதியுங்கள்,
உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை உண்டாவதாக,
வாரும் அவரைச் சாஷ்டாங்கஞ் செய்வோம்.

(4) "கர்த்தாவே, உமது பலி பீடத்தில் வீற்றிருக்கும் உம்மை வாழ்த்துகிறோம்'
பிதாவின் வார்த்தையே, நித்தியவெளிச்சமே,
உமக்கே எக்காலமும் மேலான மகிமை ஏற்கும்,
வாரும் அவரைச் சாஷ்டாங்கஞ்செய்வோம்.

ஆமேன்."

கீதம் முடிந்ததும் சாமியார் பூஜாபலனையும் தம்மையும் அடியார்களையும் மந்திரஞ்சொல்லி இறைவனுக்கு அர்ப்பணம் பண்ணுவர். அப்பொழுது பகவானுடைய பிரசன்ன மூர்த்தி-யானவர் ஒரு பேரானந்த முறுவலோடு அதனை ஏற்று அனை-வரையும் ஆசிர்வதித்து மறைந்து விடுகின்றனர்.

இத்துடன் பூஜை முடிவுற்றதென்னலாம். அப்பம், பானம் இவற்றின்மூலம் பொழியப்படும் ஆண் பெண் குண அருட்பிரவா-கங்கள், நவரத்தின யந்திர ஸ்தாபனமுள்ள கிறிஸ்தவ ஆலயங்-களில் ஆண்குணங்கள் அதிகமும் சிலுவையின் வலப்புறத்திருந்தும் பெண் குணங்கள் இடப்புறத்திருந்தும் பெருக்கெடுப்பதாகக் காணப்படுகின்றன. நமது கோவில்களில் ஆண்பாலார் மூர்த்தியின்

வலப்புறமும் பெண்பாலார் இடப்புறமும் நின்று தொழுவது சாதாரண வழக்கம். அது சௌகரியத்திற்காக மாத்திரமல்லாமல் வேறு நுண்பொருளுடையதாகவும் இருக்கலாமென்று மேற்கூறி-யதிலிருந்து எண்ணவேண்டி யிருக்கிறது.

இனி, இதுவரை கூறப்பட்டவற்றின் சாராம்சமாவது:—

1. ஆராதனையின் தொடக்கத்தில் சாமியார் மந்திர தீர்த்தத்-தால் (Holy Water) ஆலயத்தைப் புரோக்ஷணம் (Asperges) செய்கின்றனர். அப்பொழுது மிகப்பெரிய நுண்ணுலகக் கூடார-மொன்று ஏற்பட்டு ஆலயம் முழுவதையும் மூடி, தீமை பயப்பன-வாக அகத்துள்ள யாவற்றையும், அதாவது பூத அசுர ராக்ஷச கணங்கள், தீய நினைவுருவங்கள், பேய் பிசாசுகள் முதலிய யாவற்-றையும் கூடாரத்தைவிட்டு வெளியே அகற்றுவதோடு, அத்தகை-யவை ஆராதனை முடியும்வரை திருமபவும் உள்ளே வராதபடி தடுக்கவல்ல ஒரு கவசமாக அது அமைகின்றது.

2. பின்னர், அருளைத்திரட்டுவதற்கு ஆவசியமான சூக்ஷ்மம அருளாலயத்தை நிர்மாணிக்க ஒரு விசுவகர்மதேவரை (Building Angel) அனுப்பும்படி, சாமியார் இறைவனைப் பிரார்த்திக்கின்-றனர். அப்போது நிர்மாணதேவர் ஒருவர் பிரசன்னமாகி, முன்சொன்ன கவசத்தை அடிப்படையாகக்கொண்டு சூக்ஷ்மம ஆலயமொன்றை அமைக்கத் தொடங்குகின்றனர். அது "அருள்-திரட்டி" என்றழைக்கப்படும். அடியார்களுடைய அன்பு, பகுத்-தறிவு, பக்தி ஆகியவைகள் பூலோக புவர்லோக சுவர்லோகப் பஞ்சபூதங்களை ஆலயமதில்களுக்கு வேண்டிய தளவாடங்களாகப் பண்படுத்திக் கொடுக்கின்றன.

3. பின், சாமியார் ஆவரண பூஜை செய்கின்றனர், அதாவது நவகண வானோரை விதிப்படி ஆவாகனஞ் செய்கின்றனர். அந்த வானோர்களும் பிரசன்னமாகி, அருளாலயத் திருப்பணியைப் பூர்த்தி செய்து, உள்ளே பூலோக புவர்லோக சுவர்லோக சம்பந்த-மான அருட்சக்திகளால் அதனை நிரப்பி, அடியார்களுடைய இச்சையுடம்பு, மன உடம்புகளுக்கு முறுக்கேற்றி அவற்றைச் சுருதி கூட்டுகின்றனர். அடியார்களும் அவரவர் பக்குவத்திற்-கேற்பப் பலவாராகப் பண்பட்டு உரம்பெறுகின்றனர்.

4. அதனமேல் மூர்த்திப் பிரசன்ன பூஜை செய்யப்படுகின்றது. அப்போது கிறிஸ்து நாதர் பிரசன்னமாகி ஆலயத்தை இதற்குமுன் ஏற்படாத மகா், ஜயோ, தபோலோக அருட் சக்திகளால் நிறைக்கின்றனர்.

5. பிரசன்ன மூர்த்தியை தேவர்களும் மனிதர்களும் வணங்கித் துதித்தபின், சாமியார் மிகுந்த பயபக்தியோடு அப்பத்தையும் திராக்ஷ பானத்தையும் ஆராதனையாக அர்ப்பிக்கின்றனர். அப்போது பகவானனவர், உடற்பசியை ஆற்றும் உலகத்திரவியங்களாயிருக்கும் அவ்விரண்டையும், ஆன்மப்பசியை ஆற்றும் தேவ நற்கருணைத் திரவியங்களாக மாற்றி யமைக்கின்றனர்.

6. பின்னர், பூஜாபலன் அர்ப்பணஞ் செய்யப்படுகின்றது. தேவரையும் மக்களையும் உலகத்தையும் ஆசிர்வதித்து விட்டுப் பிரசன்ன மூர்த்தியாகிய கிறிஸ்து பகவான் மறைந்து விடுகின்றனர். அப்புறம் அந்தத் தேவத்திரவியங்கள் மிகுந்த பயபக்தியுடன் பிரசாதமாக மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

மேற்சொன்னவை யாவும் சாமியாருக்குச் செயயப்படும் (Ordination) அபிஷேகப் பலனாலேயே சாத்தியமாகின்றன. இந்த அபிஷேகத்தைப்பற்றிப் பின்னர் கூறப்படும். சைவ வைஷ்ணவ ஆலயங்களில் பூஜைசெய்யும் பட்டர்களும் இத்தகைய அபிஷிக்தர்களே. அவர்கள் வெறும் வேதப் பிராமணர் மட்டுமல்லர். அவர்கள் செய்யும் பரார்த்த பூஜையாகிய ஆலய ஆராதனையிலும், தேவகணங்களுக்கு அதிபதிகளாகிய கணபதி பூஜையும் சூரிய பூஜையும் ஆரம்பத்தில் செய்யும்படியும், பின்னர் நவக்கிரக பூஜைகள், மூர்த்தி பூஜைகள், ஆவரண பூஜைகள், பிரசன்ன பூஜைகள் யாவும் செய்யும்படியும் விதிக்கப்பட்டுள்ளன. ஆறுகாலப் பூஜைகள் ஏற்பட்டுள்ள ஆலயங்களில், இவையாவும் அன்றாடம் காலை மாலை உச்சிக்காலமாகிய மூன்று வேளைகளிலும் தவறாது செய்யப்படல் வேண்டுமென்பது விதி. ஆனால் இக்காலத்தில் ஆகமவிதிகளை மீறி நடப்பதே பெரும்பான்மையாகவும், அனுசரிப்பது சிறுபான்மையாகவுமே இருந்து வருகின்றது. அவற்றைக் கண்காணிப்பவரும் எவருமிலர். ஆகமவிதிகளை அறிபவரும் இலரென்றே சொல்லும்படியாக அருகிவிட்டனர்,

அதனால், இந்நிலைக்கு மாற்றமேற்படுமோ,—இன்றைய இந்து ஆலயங்களில் நாம் யாது பலன் பெறுகின்றோமோ—என்பன பற்றித் திட்டமாக ஒன்றுஞ் சொல்வதற்கில்லை.

கிறிஸ்துவ ஆலயங்களில் குருக்கள்மார் மிகுந்த சிரத்தை-யோடும் சிறந்த பயபக்தியோடும் கிரியை நடத்துவதைப் பார்க்-கும்போது நமக்கே அதிசயமும் அதில் ஆர்வமும் உண்டாகும். ஆனால் நமது ஆலயங்களிலோ, தீபாராதனை செய்யும்போதுங்-கூடப் பட்டரும் தீபம் ஏற்றிக்கொடுக்கும் பரிசாரகனும் மூர்த்-திக்கு முன்னால் நின்று வழக்காடிக் கொண்டிருப்பது அடியார்-களுக்கு மனவேதனை தரும் அனுபவம். இதனைப் பலரும் நேரில் கண்டிருப்பர்.

கிறிஸ்துவ ஆலயங்களில் பூஜாரிகள் மாத்திரமன்றி அடியார்-கள் கூடித்தொழுவதும், பார்வைக்கு ஒரு அழகாகவிருக்கும். அனைவரும் அமைதியாகவும், அங்கிங்கு நகராமலும், வார்த்தை-யாடாமலும், அவரவர் இடத்தில் இருந்தபடியே தொழுதுவிட்டு ஆரவாரமின்றி வெளியேறுவர். ஆயினும், இவ்வாறு புறக்கிரியை-களைக் கட்டுப்படுத்திய போதிலும் ஆன்ம வளர்ச்சியில் அவர்கள் பலவகைப்பட்டவரா யிருப்பராதலால், அவர்களுடைய இச்சை-களையும் எண்ணங்களையும் அவ்வாறு கட்டுப்படுத்துவது இயலாத காரியம். அதனால், புண்யாக வாசனத்தின்போது கட்டப்பட்ட கவசக்கோட்டை, புறத்திருந்து சூட்சுமவுலகத் தீங்குகள் உள்ளே வராமல் தடுக்குமாயினும், அகத்திருப்போர் மனத்திலெழும் உலக எண்ணங்கள் இச்சைகள் கவலைகள், காமக் குரோத லோப மோக மத மாச்சரியங்களையும், அவற்றாலாகும் அலைகள், சலனங்கள், உருவங்களையும் அவ்வாறு தடுப்பது இயலாததாகும். அதற்காக ஒருகூட்டம் தேவர்கள் அந்தச் சுகாதார வேலையில் விழிப்பா-யிருந்து, அருளாலயப் பணிக்கு இடையூறு வராவண்ணம் அந்த சூக்ஷ்ம அசுத்தங்களைத் திரட்டிப் புறத்தே எறிந்துகொண்டே யிருப்பர். இது நெற்றிக் கண்ணுக்குக் காணப்பட்டது.

மிகச் சிறப்பாக நடக்கும் கிறிஸ்துவ ஆலயங்களிலேயே இவ்வாறாயின், செய்யத்தகாதெனவே பெரும்பாலுஞ் செய்யப்-படும் நமது ஆலயங்களின் நிலை என்னவோ! இங்கு ஆலயங்-

தொழுவோர், பிராகாரங்களில் ஓடுவதும் சாடுவதும் கூக்குரலிடு-வதும், வெட்டிப்பேச்சுப் பேசுவதும் சந்நிதானத்தை மறைத்து நின்றுகொண்டு ஊர் வம்பளப்பதும், குழந்தைகள் கதவுகளில் ஏறி மணிகளைக் குலுக்குவதும் குதிப்பதும் ஓலமிடுவதும், உண்மையாகத் தொழுவோர் ஒரு சிலரையும் அமைதியாகத் தொழவொட்டாமல் இடைஞ்சற் பண்ணுவதுமே நம் ஆலயங்-களில் அதிகமும் காணப்படுவன. இங்கும் சுகாதார தேவர்கள் இருப்பராயின் அவர்கள் பாடு பெருந்திண்டாட்டமாகவே யிருக்கு மென்பதில் ஐயமில்லை. கிறிஸ்தவ ஆலயங்களின் ஆராதனைகளைக் காண்பதே நமமவருக்கு ஓர் நல் விருந்தாகும், நமது ஆலயங்களைச் சீர்திருத்துவதற்கு ஓர் சாதகமாகவுமிருக்கும். அந்த ஆசை பற்றியே கிறிஸ்தவ ஆராதனையின் நெற்றிக்கண் ஆராய்ச்சி இவ்வளவு விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. இங்கு கூறப்படாத, கூறவும் முடியாத பல பல உண்மைகள், "சாக்ரமெந்தின் சாஸ்திர ஆராய்ச்சி நூல் "(The Science of the Sacraments)" என்ற நூலில் உள்ளன. ஆங்கிலங் கற்றுள்ளவர் அதனைப் படித்தறியு-மாறு மிக்க ஆவலுடன் வேண்டிக்கொள்ளப் படுகிறார்கள். அது கிறிஸ்தவர் நன்மைக்காகவல்ல, இந்துக்கள் நன்மைக்காகவே.

---

குறிப்பு: கிறிஸ்தவ ஆராதனையின் ஆராய்ச்சியிலிருந்து பரார்த்த பூஜைக்கு இன்றியமையாதனவாகக் காணப்படும் உறுப்புகளாவன :—

(1) புண்யாகவாசனமும் ஆலயத்தைச்சுற்றி அதனாலாகும் சூட்சுமக் கவச அமைப்பும.

(2) இறைவனை (கணபதி)யை வேண்டி விசுவகர்ம நிர்மாண-தேவரை அழைத்தலும் அவர் வந்து சூட்சும அருளாலயத்தைக் கட்டத்-தொடஙகலும்.

(3) ஆவரண பூஜையாகிய நவகண வானோ அழைப்பும், அவர்கள் தோனறி சூட்சும ஆலயத்தைப் பூர்ததிபண்ணி, அதனை அருட்சக்திகளால் நிரப்புதலும்.

(4) மூர்த்தியை, அதாவது பகவான் கிறிஸ்து நாதரை ஆவாகித்-தலும் அவா பிரசன்னமாவதும்.

(5) மூர்ததி ஆராதனையும் நைவேத்தியம் சமர்ப்பித்தலும். இவற்றின் மூலம் நைவேத்தியம் தேவத்திரவியமாதல்.

(6) பிரசாதம் வழங்குதல்.

இவற்றுள் ஒன்றோ பலவோ குறைவுபடும்போது பூஜையின் பலன் முற்றுப் பெறுவதில்லை.

பாடம் 27.

## கிறிஸ்துவ ஆராதனை.

### V. முடிவு.

(பிரசாதம் வழங்குதல்)

அப்பமும் திராக்ஷ ரசமும் ஆராதனைமூலம் தேவ வசீகரம் பெற்றுக் கிறிஸ்து நாதருடைய மாம்சம், இரத்தம் ஆகிய தேவத்திரவியங்களாக மாறுவதற்கு "வஸ்து மாறுதல்" (Transubstantiation) என்று பெயர். அது ஒரு அற்புதமாகக் (Miracle) கிறிஸ்தவர்களால் பாராட்டப் படுகிறது. ஐம்புலன்களையே சாட்சியாகக் கொள்ளும் இந்த விஞ்ஞான காலத்தில் இந்த அற்புதத்தைப் பற்றிக் கிறிஸ்தவர்களே பெரிதும் ஐயப்படுகின்றனர். ஆயினும் அதன் உண்மைப்பொருள் நெற்றிககண் ஆராய்ச்சிமூலம் ஒருவாறு உணரப்படுகின்றது.

சாதாரண அப்பமும் திராக்ஷரசமும் உண்ணப்பட்டால் உடம்பின் பசியை மாத்திரம ஒருவிதம் தணிக்கும், அதுவும் வயிறு நிறைய உண்ணப்பட்டால்தான். ஆனால் அவை நற்கருணை தேவத்திரவியங்களானபின், அவற்றில் ஒரு கடுகளவு உட்கொண்டாலுங்கூட அந்த மனிதனுடைய ஸ்தூல உடல்மாத்திரமல்லாமல் சூக்ஷ்ம உடம்புகள் யாவற்றிலும் ஒரு அற்புத நிகழ்ச்சி காணப் படுகின்றது திராக்ஷரசததில் கலக்கப்பட்டுள்ள தண்ணீரின் தெய்வ சக்தியால் அவனுடைய இச்சையுடம்பு ஒளி வீசி உயர்வடைகிறது; திராக்ஷரசததால் அவனுடைய மனோமய கோசமும் அப்பத்தால் விஞ்ஞானமய ஆனந்தமய கோசங்களும் மலர்ச்சி பெற்று, அவை யாவும் கோடிசூரியப் பிரகாசமாக ஒளி வீசித் திகழ்கின்றன. அப்போது சாதாரண மக்களிடம் அதமகுணங்கள் தாமதப்படும், உயர்குணங்கள் ஓங்கி நிற்கும். திருவள்ளுவர் "பேரா இயற்கை" என்று குறிப்பிட்ட மனச்சாந்தி அவனிடம் அப்போதைக்கு ஏற்படும். அம்மனிதனது பக்குவத்தைப் பொறுத்து இப்பலன்கள் சிறிது நேரம்முதல் நாலைந்துமணி நேரம் வரை நிலைத்து நிற்கும். பின்னர் அவனுடைய பழைய இயற்கை சிறிது சிறிதாகத் தலை தூக்கி, இந்தச் செயற்கை நிலையோடு

எதிர்த்துப் போராட, அதனால் இந்தத் தெய்வீக அலைகள் கொஞ்சம் கொஞ்சமாக மந்தப்பட்டு முடிவுறும்; ஆயினும் அவன் ஒரு சிறிது ஆன்ம முன்னேற்றம் பெற்றவனாவான். இங்ஙனம் அவன் நாள்தோறும் இந்த நற்கருணைப் பிரசாதம் ஏற்றும், மற்ற நேரங்களில் நல்வாழ்வு வாழ முயற்சித்தும் வருவானானால், அவன் வெகு விரைவில் முன்னேறி மேன்மக்கள் நிலையை எய்துவன். அன்றிப் பக்குவத்தில் உயர்ந்துள்ள மனிதன், அதாவது ஒழுக்கத்திலும் அறிவிலும் பக்தியிலும் உத்தம மனிதன் ஒருவன் இதனை உட்கொள்வானாயின், அவனிடம் அப்போது ஆநந்த பரவசம் உண்டாகும், தொண்டை விம்மும், மயிர்க்கூச்செறியும், ஆநந்தக்கண்ணீர் பெருகும், அறிவுக்கெட்டாத ஒரு சாந்தியையும் அவன் அடைவான். இந்த சாந்தி வெகுநேரம்வரை நிலைத்தும் நிற்கும். இவ்வித தெய்வீக பலன்களைக் கொடுப்பதனாலேயே அவை தேவ வசீகரம் பெற்ற நற்கருணைத் திரவியங்கள் என்று உண்மையுடன் கூறப்படுகின்றன.

சாமியார் இப்பிரசாதங்களை அடியார்களுக்கு வழங்குமுன், தாம் அவற்றை முதலில் உட்கொள்வர்; அவர் முதலில் உட்கொள்வது அவசியம். அல்லாதபோது அவை மற்றோருடைய நுண்ணுடம்புகளை மாத்திரம் இயகக வல்லனவா யிருக்கின்றன. அதனால் பூரண பலனையும் அடியார்கள் பெறாது போகின்றனா. ஆனால் சாமியார் அவற்றை முதலில் உட்கொள்ளும்போது, அவருடைய அன்ன உடம்பும் பிராண உடம்பும தீவிரம் பெறுகின்றன. பின்னர், அபிஷேகத்தின்போது பிரதிஷ்டை (Consecration) செய்யப்பட்டுள்ள அவருடைய கரங்களிலிருந்து பிரசாதங்களை ஏற்கும் மனிதரிடம், அந்த அலைகள் பரவி, அவர்களுடைய அன்னமய பிராணமய கோசங்களையும் பண்படுத்துகின்றன. வயிற்றினுட் சென்ற தேவத்திரவியங்கள், கண்ணாடிச் சிமினிக்குள்ளிருக்கும் மின்சார விளக்குப்போல, தம்மிடத்தடங்கியுள்ள அருட்பிரகாச ஒளியைக் கட்டவிழ்த்துவிட்டு அம்மனிதனைச் சுற்றிப் பரப்பிக்கொண்டேயிருக்கும். காற்றிலகப்பட்ட தூபம்போல இந்த அருள் வேகமாக விரயமாகிவிடாமல், தாமதித்து நின்று வேலை செய்யும்பொருட்டு அதற்குக் கவசமிடுமாறு ஒரு பிரார்த்தனையுஞ் செய்யப்

படுகிறது. அப்போது அது ஆற அமர நின்று வேலைசெய்து முடிவில் ஓய்ந்து விடுகின்றது.

இக் கவச மந்திரம் வருமாறு:—

**சாமியார்:**—"ஜெபம் பண்ணக்கடவோம். (ஜனங்கள் முழங்காலில் நிற்க) பரம ஈவினால் முசிப்பாற்றப்பட்ட நாங்கள் உம்மைப் பிரார்த்திப்பதாவது: கர்த்தாவே, உம்முடைய கிருபை எங்கள் இதயங்களில் ஒட்டவைக்கப்படவும் எங்கள் ஜீவியத்தில் இடைவிடாமல் காணப்படவும் அருள் செய்யும். கிறிஸ்துவினிமித்தமே—ஆமென்.

**சாமியார்:**—கர்த்தர் உம்மோடிருப்பாராக.

**ஜனங்கள்:**—" அவர் உமது ஆவியோடும் இருப்பாராக."

நற்கருணைத் தேவத்திரவியங்களை உட்கொண்டவனிடமிருந்து இந்தப் பிரசாத அருட்சோதி ஒளிவிசிறிக் கொண்டிருக்கும் நேரம் வரை, அதில் திளைத்து இன்புறும்பொருட்டுப் பல பூதகணங்கள் அவன் செல்லுமிடமெல்லாம் அவனைச் சூழ்ந்து வட்டமிட்டுக் கொண்டிருப்பர். இவற்றையொத்த சில உண்மைகள் நமது ஆலயங்களிலும் நடைபெறுமெனஎண்ணவேண்டி யிருக்கிறது. சிவாலயங்களில் ஆராதனை முடிந்ததும், பட்டர் விபூதி வழங்குமுன் அதை மூர்த்தியின் பாதத்தில் வைத்தெடுத்து, மூர்த்திக்குத் தரித்துப் பின் தானுந்தரித்துக்கொண்ட பிறகே அடியார்களுக்கு வழங்குவது வழக்கமாயிருக்கிறது. இது சாமியார் அப்பமுட் கொள்வதை யொத்திருக்கிறது. இனி, தரிசனஞ்செய்து வீடு திரும்புபவர், கொடிமரத்தண்டை உட்கார்ந்து இறைவன் நாமத்தை இயன்றவரை ஜெபித்து அஸ்திரமந்திரத்தால் கவசமிட்ட பின்னரே வெளிச்செல்ல வேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு வெளியே செல்லும்போது சிவகணங்கள் கூடவருவரென்றும், கோபுரவாயிலில் உட்கார்ந்து அவர்களை உள்ளே செல்லும்படி வழியனுப்பிய பின்னரே வீடுசெல்ல வேண்டுமென்றும் விளக்கமாகவே ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. இது ஆலயதெரிசன விதியின்கீழ் வருவது. கிறிஸ்துவ ஆராய்ச்சியி

லிருந்து இவற்றின் உட்பொருள்களும் ஒருவாறு நமக்கு விளங்குகின்றன.

இனி, சாமியார் பிரசாதம் வழங்குமுன், அதிற் சிலவற்றைச் சேமித்து வைத்துக்கொள்வர். அது எல்லாத் தேவாலயங்களிலும் எப்போதும் கை காவலாக இருக்கும். சிலுவையின் அடியில் பீடத்தில் "திவ்ய நற்கருணைப்பெட்டி" (Tabernacle) என்ற ஒரு சிறு அறை உண்டு. அதனுள் இந்த "தேவநற்கருணை ஸ்தாபகம்" (Reserved Host) வைக்கப்பட்டு பந்தோபஸ்தாகப் பூட்டப்படும். நமது ஆலயங்களிலுள்ள யந்திரங்கள் இறையருளை இடைவிடாது தம்மைச்சுற்றிப் பரப்பிக்கொண்டிருப்பதுபோல, இந்த ஸ்தாபகமும் இரவும் பகலும் தேவ அருளை நாற்புறமும் பொழிந்து கொண்டேயிருக்கும். அங்கு தேவர்கள் மாறி மாறி இடைவிடாது காவலிருப்பர்; வாடாவிளக்கும் எரிந்துகொண்டிருக்கும். இந்த அருள் விசிறுதலும் தேவர்கள் காவலும் நெற்றிக்கண்ணால் காணப்பட்டவை.

பிரசாதம் வழங்குதல் ஒருபுறம் நடந்துகொண்டிருக்கவும், அதிகார தேவரானவர், அதாவது நவகணவானோரில் மாத்திரைக்கோல்கொண்டு நடுவே நிற்கும் சூரியகலைத்தேவர், முன்னம் நியமித்துள்ள தேவதூதுவர்களை விளித்து, விநியோகிக்கவேண்டிய அருளை விண்ணப்பத்தின்படியே அவரிடம் பங்கிடுகின்றனர். அவர் யாவரும் தனித்தனியாக முன்வந்து அவரவர்க்குரிய அருளை உறிஞ்சி, உடம்பு பூரித்து, வெளியே பறக்க ஆவலாய்க் காத்து நிற்பர். கிரியை முழுவதும் முடியும்போது சாமியார் விசர்ஜன மந்திரத்தை ஓதவும, தூதுவர்கள் மனோ வேகமாய்ப் பருந்துப் பாய்ச்சலில் வெளியே பறந்து அருச்சனைக்காரரைத் தேடிச்சென்றடைகின்றனர். மற்றுள்ள தேவ பூத கணங்களும் ஆலயத்தைவிட்டு வெளியேறுவர். அப்போது தம் அதிகாரக்கோலை ஓச்சி, சூரியகலைத்தேவரானவர் அருளாலய நிர்மாணத்தை உலைத்து, உள்ளே பொங்கி நிறைந்து நிற்கும் இறையருளை உலகிற் பரப்பிவிட்டு, அடியாரை நோக்கிப் புன்முறுவலோடு தலைவணங்கி அங்கிருந்து வெளியேறுகின்றனர். ஆலய அதிகாரிகள் மங்கள கீதம்பாடிக்கொண்டு உடைகளை மாற்ற உட்செல்வர், அடியார்கள் இறைவனைத் தொழுது வெளிச்செல்வர்.

இவையே கிறிஸ்துவ தேவாராதனைச் சுருக்கமும் ஒரு சிறிது அவற்றின் மறைபொருளும். அவர்கள் பூஜையின் முடிவு மந்திரங்களாவன:—

**அடியார்கள்:**—"ஆமென், நம்முடைய தேவனுக்குத் துதியும், மகிமையும், ஞானமும், ஸ்தோத்திரமும், கனமும், வல்லமையும், சகதியும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

**சாமியார்:**—(ஆசீர்வாதம்):—"எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்களோடே இருந்து, நீங்கள் தேவனையும் அவருடைய குமாரனாகிய நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும் அன்பிலும் நிலைத்திருக்கும்படி, அது உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் காக்கக்கடவது. பிதா குமாரன் பரிசுத்த ஆவியுமாகிய சர்வவல்லமை பொருந்திய தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. ஆமென்."

கிறிஸ்துவ தேவாராதனை முற்றிற்று.

பாடம் 28.

## சுதந்தரச் சிற்ப விதானம்.

### 1. முன்னுரை.

வங்கப்பணி முனிவரால் மிக மிக நுணுக்கமாக நெற்றிக்-கண்ணால் ஆராயப்பட்டுள்ள மற்றொரு கிரியாமுறை சுதந்தரச் சிற்ப விதானம் (Free Masonry) எனப்படுவது. அது ஒரு அந்தரங்க முறையாதலால், மேலே மிகச் சுருக்கமாகவே விளக்-கப்பட்ட கிறிஸ்துவ ஆராதனை யவ்வளவுகூட அதனை விளக்குதல் இயலாததாகும். எனினும் இதிற்காணப்படும் சில அம்சங்கள் அனுமானமாக நமது ஆலய ஆராதனையை விளக்கத்தக்கனவா யிருப்பதால், அவற்றுள் பகிரங்கமாக வெளியிட அனுமதியுள்ள சில குறிப்புக்கள் இனித் தரப்படுகின்றன

இன்று உலகில் உயிர்த்துள்ள ஆகம ஆராதனைகளுள் மிக மிகப் புராதனமான தொன்று இந்த சுதந்தரச சிற்ப விதானம். ஆகமமுறைகள் என்பன சிறப்பாக தீக்ஷைகளும் ஆசாரியாபி-ஷேகங்களும் செய்யப்பட்ட ஆசாரியரால் மட்டும் நடத்தப்படும் உரிமையுடையன. வைதிக முறைகள் என்பன உபநயனம் போன்ற சமயப்பிரவேச சம்ஸ்காரம் செய்யப்பட்ட யாவராலும் இயற்றத்தகுவன. "வேதம் பசு, அதன் பால் ஆகமம்," என்ற வாக்கியம் எழுந்தது இந்தப் பொதுச் சிறப்புத் தன்மை வேறு-பாடு கொண்டே.

வங்கப்பணி முனிவர் தம் முற்பிறப்புக்களை ஆராய நேரிட்ட போது, இன்றைக்கு சுமார் ஆறுயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அவர் எகிப்துதேசத்தில் பிறநதிருந்ததாகக் கண்டனர். அன்றைய எகிப்துநாடு மிகமிக உன்னத நாகரீக முடையதா யிருந்தது. அந் நாகரீகமும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலைத்-திருந்தது. அக்காலத்திய அவர்களது மதம் இருபாகங்களைக் கொண்டதாயிருந்தது. ஒன்று இப்போதைய இந்துமதம்போன்று பிரம்மாண்டமான ஆலயங்களையும், விக்கிரகங்களையும்விலையுயர்ந்த ஆடையாபரணங்களையும் தீபதூபங்களையும் மேளதாளங்களையும் ஆடல் பாடல்களையும் கோஷ்டி கானங்களையும் ஏராளமான

பண்டிகைகளையும் திருவிழாக்களையும் அவற்றை நடத்திவைக்கும் பூசாரிகளையும் உடையதாய், அபக்குவிகளுக்கும் பொது மக்களுக்கும் ஐம்புலன்கள் மூலம் நல்லுணவும் நல்லுணர்வும் ஊட்டி அவர்கள் பக்தியைப் பழுக்கவைத்தது ' அவர்களுடைய ஆலயங்கள் தென்னிந்தியப் பெருங்கோவில்களின் உயரத்தில் இரண்டு மூன்று பங்குகொண்டனவாய், மேல்த் தட்டட்டிகள் கண்ணுக்கு எளிதில் எட்டாதனவாய் இருந்தன. அவற்றின் ஜீரணங்கள் இன்றும் உலக அதிசயங்களாக விளங்குகின்றன.

இந்தப் பகிரங்க பாகமன்றி அம்மக்களில் பக்குவிகளுக்கும் மேன்மக்களுக்குமாக அமைக்கப்பட்ட அந்தரங்க பாகமொன்றும் அவர்கள் மதத்தில் இருந்து வந்தது. அதன் இருப்பை அம்மக்கள் யாவரும் அறிந்திருந்தனர். அதனுல், விருப்பமுள்ளவர்கள் அதிற் சேருவதற்குரிய தகுதியைப்பெற முயல்வர். அங்ஙனம் தனியாகத் தெளிதெடுக்கப்பட்டோர், நாற்புறமும் அரணும் காவலும் செய்யப்பட்ட விசாலமான அரங்கங்களிலோ கல்லறைகளிலோ குகைகளிலோ மிக அந்தரங்கமாகக் கூட்டம் நடத்துவர். அத்தகைய அரங்கமொன்றில் வங்கப்பணி முனிவரும் ஒரு முதன்மை ஸ்தானம் வகித்திருந்தனர். இப்பிறப்பில் தீட்சை செய்யப்படும் பொருட்டுத் தற்காலச் சிற்ப அரங்கத்தினுள் (Masonic Hall) அவர் முதன் முதலாக இட்டுச் செல்லப்பட்டபோது, அரங்கத்தை நோக்கியதும் அவர் திகைத்தனராம். பின் அதிசயித்தனராம்; பின் ஆறுயிரம் ஆண்டுகளுக்குமுன் எகிப்தில் அந்தரங்க ஆராதனை அரங்கத்தில் நின்றுகொண் டிருப்பதாகவே உணர்ந்தனராம். உள்ளே இட்டுச்செல்லும முறையே சிறிது உணர்ச்சியுடைய எவரையும் திகைக்கவைக்குந் தன்மையது. அத்துடன் உள்ளே கண்ட காட்சி அவரை மேலும் அதிசயிக்கச் செய்தது. சீனதேசத்தில், சரித்திரம் எட்டாக்காலத்திலேயே மண்மூடிப் பாழடைந்துபோன மண்டபம் ஒன்றினுள், சிவலிங்கம், நந்தி, நடராசர், தக்ஷிணுமூர்த்தி, சண்டேசர் ஆகிய உருவங்கள் இன்றைய சிவாலயத்தைபபோலவே ஸ்தானங்கள் வகிக்குமானுல் இரண்டும் ஒரே ஆலயமுறை என்பதைப்பற்றி ஐயப்படவேண்டுமா? அது போன்று சில முக்கிய அதிகாரிகள், அவர்கள் இருப்பிடங்கள், மற்று ஆடைகள் ஆபரணங்கள் முதலியன இங்கும் எகிப்திலும் ஒத்திருப்பதைக் கண்டவுடனே, அது இதே, இதுவும்

அதே என அவர் அபிப்பிராயப்பட்டனர். பின்னர், பழைய சரித்திரங்களையும் நூல்களையும் ஆராய்ந்தபோது, எகிப்திலிருந்து 'மோசே' என்ற தீர்க்கதரிசி இதனைக் கற்றனரென்றும், அவர் யூதக் குருக்கள்மாருக்குப் போதித்து அவரிடம் இதை ஸ்தாபித்தனரென்றும், அவர்களுடைய ராஜரிஷியாகும் 'சாலமோன்' அரசன் அதேபோன்ற ஆலயமொன்றைத் தன் தலைநகராகிய எருசலேமில் நிர்மாணித்து, அதன் பல அங்கங்களுக்கும் எகிப்தியப் பொருளைக்கொண்ட எபிரேயப் பதங்களில் பெயர் கொடுத்து, எகிப்தியர் இறைவனுக்குக் கொடுத்திருந்த பெயர்களையும் தன் போக்கில் மாற்றியமைத்து, அவ்விதம் எகிப்திய சின்னங்களை அதிலிருந்து மாற்றிவிட்டனரென்றும் புலப்பட்டது. எகிப்தில் 'ஆமென்' என்பது பரம்பொருளுக்குப் பெயராயிருந்தது. 'ஆமென்—ரா' என்றால் இரண்டற்ற ஏகப்பொருள் என்று கொண்டனர். அந்த 'ஆமென்-ரா'வை அவர்கள் உருவ வணக்கத்தில் 'ஒஸிரிஸ்' (Osiris) (இறைவன்), "ஐஸிஸ்" (Isis) (இறைவி) 'ஹோரஸ்' (Horus) (குமரன்) என்று வழங்கினார்கள். அவை யூதருக்குள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என மாற்றப்பட்டன. 'யோவான்' சுவிசேஷத்தில், முதல் அத்தியாயத்துள்ள "ஆதியிலே வாக்கு இருந்தது, அது தேவனோடிருந்தது, அது தேவனாயிருந்தது," என்ற தொடக்கத்திய உயர்ந்த தத்துவக் கருத்துக்கள் எகிப்தியருடையவை யென்று மேனாட்டு ஆராய்ச்சியாளர் யாவரும் இன்று ஒப்புக்கொள்கின்றனர். எகிப்து தேசததில், அதன் சத்தியயுகமாகிய அக்காலத்தில், பல முத்தான்மாக்களும் அவருடைய சிஷ்யர்களும் வேறு பல மேன்மக்களும் வந்து பிறந்து, அங்குள்ள மதத்தையும் நாகரிகத்தையும் கலைப்பண்பாடுகளையும் வளம்பெறச்செய்தனர். அவற்றின் அழிவு சிதைவுகள் இன்றும் உலக அற்புதங்களாகவுள்ளன. காலக்கிரமத்தில் அம்மேன்மக்கள் முத்தியடைந்து உலகை நீததோரும், வேறு நாடுகளில் பிறந்தோருமாக நீங்கிவிட, பின்வந்த சிற்றறிவுடைய மக்களால் அவர்கள் சமயமும் பண்பாடும் சீரழிந்தன.

'சாலமோன்' அங்கீகரித்திருந்த அந்தரங்கச் சிற்பவிதானம், ரோமாபுரி நாகரிகம் பெற்றபோது அங்குவந்து சேர்ந்தது. பின் அது ஐரோப்பாமுழுதும் பரவிற்று. ரோமசைன்யத்தில் சேவை

செய்த ஒரு ஆங்கிலப் பிரபுவால் சுமார் கி. பி. 300ல் அது இங்கிலாந்துக்கும் கொண்டு வரப்பட்டது. ஆங்கிலேயர் மூலம் அது அமெரிக்காவிலும், பின் அவர்கள் இந்தியாவிற்கு வந்தபோது அவர்களோடு அதுவும் நம்மீது படையெடுத்துவந்து நமது நாட்டிலும், நன்கு வேரூன்றிவிட்டது. இச் சிற்பவிதானம் இன்று பல்வேறு பிரிவுகளாகி உலகமுழுதும் பரவியிருப்பினும், நமது ஆலயக்கிரியைகளைப்போலவே அதுவும் உட்பொருளை மறந்து அழுகிழந்து ஒளி மழுங்கியே உயிர்த்திருக்கின்றதென்னலாம். அதற்கு ஒளியூட்டும் முறையில் அமைந்துள்ளனவாம் இன்றைய வங்கப்பணி முனிவரின் அவ் விதானம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள். அவருடைய நடைமுறையைப் பின்பற்றி, சுதந்தரச் சிற்பிகளுள் ஒரு சாரார் (Co-Masonry) இன்று மேன்மையும் ஆன்ம நலமும் மிகக் கூடுதலாகப் பெற்று வருகின்றனர்.

பண்டைய எகிப்தியர் இச் சிற்பவிதானத்தை "ஆமென் ஆலயத்திருப்பணி" என்றழைத்தனர். 'ஆமென்' என்பது அவர்கள் பரம்பொருளுக்குக் கொடுத்திருந்த பெயராதலால் இம்முறை அவருக்குள் இறைவன் திருப்பணியாகக் கருதப்பட்டு வந்தது. இப்பணி நான்கு உட்பொருள்களை யுடையதென அவர்கள் அடியார்களுக்கு விளக்கினர்.

ஒன்று, அது அறிகுறியாக இறைவனுடைய படைப்பு முறையை விளக்குவது. இது சிருஷ்டி தத்துவம் என்னப்படும்.

இரண்டாவது, அது அருள்நெறியாக, அடியார்களுக்கு ஆன்மார்த்தமாகவும் உலகிற்குப் பரார்த்தமாகவும், அருளைப்பொழிந்து யாவரையும் பாதுகாப்பது. இது காத்தல்முறை அல்லது ஸ்திதி தத்துவமாம்.

மூன்றாவது, ஒழுக்கநெறியையும், மக்களுக்குள் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும், சிற்பிகளுக்குரிய அணிகள், ஆடைகள், கருவிகள் மூலமாகப் போதித்துப் பேரின்பப் பெருநெறியையும் அதற்கு அடிப்படையாகும் இயற்கை நியதிகளையும் அத் தட்டுமுட்டுகளைக் கொண்டு மிகத் தெளிவாகவும் எளிதாகவும் விளக்குவது. இது அநுக்கிரகம் அல்லது லயம் என்னப்படும்.

நான்காவதாக, மரணத்தின்பின் மனிதர் நிலையை அந்தக் கிரியையின் பல அங்கங்கள் நாடகம்போல நடித்துக்காட்டி, மரித்தபின் இன்பமாய் வாழவேண்டிய முறைகளையும் அது விளக்குவது. அங்கு உதவி புரியவல்ல பூதகணங்களின் தொடர்பையும் ஆக்கிக்கொடுப்பது.

இவற்றுள் மூன்றாவதொன்றே இப்போது நடைமுறையிலுள்ளதென்னலாம். ஆனால் அன்றைய எகிப்தியருக்குள் இந்த அந்தரங்கமுறை அங்கத்தினர் யாவரும் இவ்வுண்மைகள் அனைவற்றையுமே நன்கு கற்பிக்கப்பட்டிருந்தனர்.

வங்கப்பணிமுனிவர் வாழ்ந்த எகிப்து தேசம் 42 நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு "ஆமென் ஆலயத்திருப்பணிச்" சிற்றரங்கம் இருந்தது. அங்கு நடைபெறும் வழிபாடு அந்த நாடு முழுவதும் அருளைப்பரப்பவல்லதாயிருந்தது இவையன்றித் தலைநகரத்தில் வேறு மூன்று பேரரங்கங்கள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் நாற்பது உறுப்பினரை மாத்திரம் கொண்டிருந்தது. அவர்கள் மற்றச் சிற்றரங்கங்களிலிருந்து தெளித்தெடுக்கப்பட்டவர்கள்; கோதிலா ஒழுக்கத்தாலும், கிரியை நடத்தும் திறமையாலும் ஏகாக்கிர சித்தத்தாலும் தலைசிறந்து நின்றவர்கள். அவர்கள் ஒவ்வொரு பேரரங்கத்தில் ஒவ்வொருமாதிரிக் கிரியையை இயற்றி வந்தனர். ஒன்றில் மன வலிமையையும் ஆற்றலையும் பெருக்கும் அருள் முதன்மையாகவும், மற்றவை அவற்றைச் சார்ந்தும் பெருக்கெடுக்கும. இது ஒஸிரிஸ் (Osiris) (சிவ) அம்சமுடையது. இரண்டாவது அரங்கத்தில் அன்பும் ஞானமும் பெருக்கும் அருள் முதன்மையாகவும், மூன்றாவதில் அழகையாக்கும் அருள் முதன்மையாகவும், மற்றவை அவற்றைச் சார்ந்தும் வெளிவரும். இரண்டாவது ஹோரஸ் (Horus) (விஷ்ணு) அம்சமென்றும், மூன்றாவது ஐஸிஸ் (Isis) (தேவி, பிரம்மா) அம்சமென்றும் விளக்கப்பட்டன. அன்பும் ஞானமும் ஒன்றேயெனவும் அன்பை ஆக்காதது சிற்றறிவென்றும் ஞானமல்லவென்றும் அவருக்குள் அறியப்பட்டது, குன்றாத அன்பிற்கு ஞானமே அடிப்படையாதலால்.

இனி, இந்த மூன்று பேராறங்கங்களிலிருந்தும் மாதம் ஒரு-முறை பொழியப்படும் அருள்வெள்ளப் பெருக்கு எகிப்து தேசம் முழுவதுமே பரவி, அதாவது சுமார் 3000 மைல் நீளமும் 1000-மைல் அகலமும் பரவி, சுற்றியுள்ள மற்றப் பிரதேசங்களுக்கும் செல்லவல்லதாயிருந்ததாம். அதன் பலன் அடுத்தமாதக் கூட்டம் நடைபெறும்வரை நிலைத்துப் பணிசெய்யப் போதுமானதாயு மிருந்ததாம். உலகம் உண்டானது முதல் இதுவரை தோன்றி-யுள்ள பரார்த்த சம்பந்தமான அருட்கிரியைகளில், இவ்வளவு சக்தியும் வல்லமையும் வீரியமும் வாய்ந்தது வேறெதுவும் உண்-டானதில்லையென்று சொல்லப்படுகிறது. தோன்றியது மறைவது இயற்கை நியதியாதலால் இந்த ஆமென் ஆலயத்திருப்பணியும் தோன்றி, நிலவி, மறைந்துவிட்டதென்னலாம். அதில் இப்போது எஞ்சி நிற்பதே இன்றைய உலகிற்குப் போதுமானது போலும். இதற்குக் கூடுதலான அருளை இன்றைய நாகரிக மக்களுடைய பிணந்திண்ணிக் கட்குடி உடம்புகள் பொறுக்கா போலும்.

பாடம் 29.

## சுதந்தரச் சிற்ப விதானம்.

### II. அரங்கமும் தளவாடங்களும்.

சுதந்தரச் சிற்பிகள்கூடும் அந்தரங்க அறை (Lodge) இங்கு அரங்கம் என்னப்படுகிறது. அதன் தரைப்படம் (Ground Plan) ஒன்று கொடுக்கப்பட்டிருக்கின்றது. (படம் பக்கம் 160 பார்க்க) அவர்கள் கூடும் இடம் சாதாரணமான பெரிய அறை (Hall) போன்றதேயாயினும், அவர்கள் கிரியையில், "அதன் நீளம் கீழ்த்திசை முதல் மேற்றிசைவரையும், அகலம் வடதிசைமுதல் தென் திசை வரையும் உயரம் அண்டமுகட்டிலிருந்து பூமத்திவரையும்," என்று கூறப்படுவதினால், அவர்கள் 'அரங்கம்' என்றழைப்பது அந்த அறையை மாத்திரமல்லவென்றும், உலகத்தையும் அண்டத்தையுமே அறிகுறியாக அவ்வறையைப் பாவிக்கின்றார்களென்றும் விளங்குகிறது. அத்துடன் அது நம் சிவாலயங்களைப்போலவே மல்லாந்து படுத்திருக்கும் மனிதனையும் குறிக்கிறதாம். அதனால் அவர்கள் அரங்கம் (Lodge) அண்டமும் பிண்டமுமாகின்றது. அந்த மனிதப் பிண்டத்தில் அரங்கத்தின் தலைவர் (R. W. M.) நமது சிவலிங்கத்தைப்போல நெற்றிச் சக்கர ஸ்தானமாவர். இது ஆக்ஞைச் சக்கரம். இரண்டாமதிகாரியின் (W. S. W) இருப்பிடம் முதுகுத்தண்டின் அடியிலுள்ள மூலாதாரத்தையும், அதனையடுத்துக் குறியினடியிலுள்ள சுவாதிஷ்டானத்தையும், அதனையடுத்த நாபிச்சக்கரமாகிய மணிபூரகத்தையும் உணர்த்தும். இது சிவாலயத்தில் கொடிமரம்-பலிபீடம்-நந்தியையொத்தது. அரங்கத்தில் மூன்றாவது அதிகாரியின் இருப்பிடம் நமது நடராசர் போன்று இருதயத்துள்ள அனாகதம் என்னும் சக்கரம். நெற்றி அறிவையும், இருதயம் அன்பையும், குதம் ஆற்றலையும் கொடுப்பன. அதனால் அந்தச் சக்கரங்களையும், அவற்றின்மூலம் அம்மனிதனுடைய அறிவு அன்பு ஆற்றல், அல்லது அறிவு இச்சை செயல்களையும் பண்படுத்தி உயர்த்துவதே இவ்விதானத்தின் நோக்கம். அத்துடன் அது பரார்த்தமாக உலக நன்மையும் புரிவது.




சுதந்தரச் சிற்ப அரங்கம் - தளம்

தரைப் படத்தில், நடுவில் சதுரங்கக் கட்டம்போலுள்ளது "தளம்" என்றழைக்கப்படும். கிரியையில் பங்கெடுக்கும் அதிகாரிகளைத்தவிர வேறு யாரும் அதனுள்ளே பிரவேசித்தலாகாது. அதிகாரிகளும் வலமிடமாகப் பரிமாற வேண்டுமே தவிர இடம்வலமாகவோ குறுக்கும் மறுக்குமாகவோ அத்தளத்தினுள்ளே நடமாடக்கூடாது. நெற்றிக்கண்ணால் ஆராயப்பட்டபோது, ஏனையோர் அவ்வாறு பிரவேசிப்பதும் அதிகாரிகள் தாறுமாறாக நடமாடுவதும் அங்கு ஏற்படவிருக்கும் அருளாலய நிர்மாணத்திற்கு ஊனம் விளைவிப்பதாகக் காணப்பட்டது. தளத்தைச்சுற்றி விளிம்புபோலக் காணப்படும் தாழம்பூக்கரை தளத்தின்மேல் அமைய இருக்கும் அருளாலய கர்ப்பக்கிரகத்திற்கு அரணாக வேலை செய்கின்றது. கிரியையின்போது அதன் வழியாகச்சுற்றி ஓடும் அருள் அந்தக் கர்ப்பக் கிரகத்திற்கு அகழிபோன்றும் கவசம்போன்றும் வேலை செய்கின்றது. அதனால் அது "உலகப்புரவலர்" என்ற அதிகார முத்தர் குழாத்தையும் வித்தகச்சித்தர் கணத்தையும் அறிகுறியாக விளக்குகின்றதாம். அண்டத்தை அழிக்கத்தொடங்கிய ஆலகால விஷத்தைத் திரட்டிக் கண்டத்திலடக்கி அதன் கொடுமையை நீக்கியருளிய சிவபெருமானைப்போல, உலகில் ஓயாது விளைந்துகொண்டிருக்கும் தீமையின் வெப்பத்தைக் கூடியவரை தணித்து, நன்மையை ஒன்று பத்தாகப்பெருக்கி, உலகிற்கு அரணாக (Gaurdian Wall) நின்று உலகமுன்னேற்றத்தை இறைவன் சங்கற்பப்படி நடத்தி வருவதால் இவர்கள் உலகப்புரவலரென்றும், அதிகார முத்தரென்றும், வித்தகச்சித்தர்களென்றும், வெள்ளியம்பலச் சோதரரென்றும் வெவ்வேறு பெயர்களால் பல மதங்களிலும் போற்றப்படுவர்.

தளத்தின் நான்கு மூலைகளிலும் வரையப்பட்டிருக்கும் குஞ்சங்கள், நன்மை தீமை வினைப்பலன்களை நடுவுநிலை தவறாது துலாக்கோல்போல நின்று மக்களுக்கு ஊட்டிவரும் கர்மாதிகாரிகள் நால்வரையும் குறிப்பன. அவர்கள் ஏவலைச்செய்துவரும் கீழதிகாரிகள் நிலம், நீர், தீ, காற்று ஆகாயங்களின் தலைவர்களாவார். அவர்கள் நமக்குள் குபேரன், வருணன், அக்கினி, இந்திரன் என்றழைக்கப்படுகின்றனர். இந்நான்கு இனங்களைச்சேர்ந்த தேவ பூதகணங்களே (Angels and Nature Spirits)

இச் சிற்ப விதானத்தில் அழைக்கப்படுபவர், பங்கு கொள்பவர், நிர்மாணிப்பவர், அருளை விளைப்பவர், விநியோகிப்பவர்; அங்கு எல்லாக் கிரியைகளையும் துணை நின்று இயற்றுபவர் இவர்களே. இவர்கள் கிறிஸ்தவ ஆராதனை நவகண வாஞேரைவிட மிகத்-தாழ்ந்த படியிலுள்ளவர்கள். அத்துடன் கிறிஸ்தவ ஆராதனையிற்-போல இங்கு பகவான் பிரசன்னமும் ஏற்படுவதில்லை. அதனுல் அடியார்களின் அறிவையும் திறமையையும் பக்தியையும் பொறுத்தே அருட்பொழிவின் அளவும் தன்மையும் இருக்கும். ஆகவே இவ்விதானத்தில் ஈடுபடும் அடியார்கள் மிகவும் கண்ணுங்-கருத்துமாக ஒரு முனைப்பட்ட மனத்தோடு பணிபுரிவது இன்றி-யமையாதது. அவர்கள் அங்கு பெறும் முன்னேற்றமும் அவர்-கள் ஆர்வத்தைப் பொறுத்ததே.

சொக்கட்டான் தளத்தைச் சுற்றியுள்ள இடைவெளி, அடி-யார்கள் வலம் வரவும் அங்குமிங்கும் செல்லவும் ஏற்பட்ட இடம். கிரியை ஆரம்பமானது முதல் முடிவுபெறும் வரை அனைவரும் அங்கு வலம் இடமாகவே நடத்தல்வேண்டும். அரங்க அறையும், இந்து ஆலயங்களைப்போல நேர் கிழக்கு மேற்காகக் கட்டப்பட-வேண்டும். இந்த இரு கட்டுப்பாடுகளின் சூக்ஷ்ம பலன்கள் உரிய இடங்களில் விளக்கப்படும்.

அரங்கத்துள்ள தளவாடங்கள், தட்டு முட்டுக்களைப்பற்றி அதிகம் கூறுவது அந்தரங்க முறைக் கேற்றதல்ல; கூறினும் உள்ளே சென்று காணுதவருக்கு அதிகம் விளங்குவதுமல்ல. அங்கு ஒரு ஏணிப்படம் உண்டு. அது உயிர்கள் ஆலம் விழுது-போல மேலுலகங்களிலிருந்து படிப்படியாகப் பூலோகம் வரை-வந்து, அங்கு உலோக வர்க்கத்தில் தங்கியிருந்து, திரும்பவும் மேல் நோக்கிப் படிப்படியாகத் தாவரம், விலங்கினம், மனித-வர்க்கங்களின் வாயிலாக முன்னேறி இறைவனைச் சென்றடையும் விகாசமுறை என்ற பரிணுமமுறையை விளக்குவது. அக்கருத்து நம் ஆலயக் கொடிமரங்களுக்கும் பொருந்துவது. அங்குள்ள ஒவ்வொரு கணு ஒவ்வொரு வர்க்கத்தையும் ஒவ்வொரு உலகத்-தையும் சுட்டிக் காட்டும். அதனுல் கொடிமரந்தோறும் பல கணுக்கள் படிப்படியாக அமைந்துள்ளன. கொடிமரத்தின்

உச்சியில் மூன்று குறுக்குத் தண்டுகளும், சிவாலயங்களில் அதற்கு மேலாக உச்சியில் ஒரு நந்தியுமிருக்கும். மூன்று குறுக்குக்-கம்புகளும் பிரம்ம விஷ்ணு ருத்திராம்சங்களென்று சைவாகமங்-களில் கூறப்பட்டுள்ளது. அதாவது பரிணும முறைப்படி உயிரானது படிப்படியாக கீழிறங்கிக் கொடிமரத்தின் பீடமாகிய கருங்கல்லில், உலோக வர்க்கத்தில் மூழ்கி மேலேறி, பிரம்ம சிருஷ்டியாகிய சப்த உலகங்களையும், விஷ்ணு சிருஷ்டியாகிய பஞ்ச கோசங்களையும், சிவ சிருஷ்டியாகிய நான் எனதென்னும் ஆன்ம நிலையையும் கடந்து அப்பாற் சென்று, இறைவனுடைய அருள் வாகனமாகிய (ஆ) நந்தியாக நிற்கும். அதுவே முத்தி நிலையென்றும் விடுதலையென்றும் பேரின்ப நிலையென்றும் அழைக்-கப்படுவது.

---

பாடம் 30.

## சுதந்தரச் சிற்ப விதானம்.

## III. ஆரம்பக் கிரியைகள்.
## (Preliminary Ceremonies).

கிறிஸ்தவருள் இரு பெரும் பிரிவுகளும் பல சிறு பிரிவுகளும் இருப்பனபோலவே, இச் சுதந்தரச் சிற்பவிதானத்திலும் இரு பெரும் பிரிவுகளும் பல சிறு பிரிவுகளும் இருக்கின்றன. அப்பெரும் பிரிவுகள் ஆண்களை மாத்திரங்கொண்ட ஆண் சிற்பிகள் சங்கமென்றும் (Masculine Masonry), ஆண் பெண் இருபாலாரையுங் கொண்ட கூட்டுச்சங்கமென்றும் (Co. Masonry) பெயர் பெறுகின்றன. அவற்றுள் ஆண்சிற்பிகள் சங்கத்தில் பல பல பிரிவுகள் உள்ளனவாயினும், அவர்கள் கிரியையில் முக்கியமான அம்சங்களில் ஒற்றுமையும் சில்லறை விஷயங்களில் சில வேறுபாடுகளும் காணப்படும். இது நமக்குள் பலவாக விரிந்த ஆகமங்களிலும், கிறிஸ்தவருள் பல பகுதியாரின் ஆராதனை முறைகளிலும் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள் போன்றதே. அவற்றுள், சுருக்கமாக விளக்க இங்கு எடுத்துக்கொண்ட விதானமுறை இருபாலாரையுங்கொண்ட கூட்டுச் சங்கமுறை (Co. Masonry) யாகும்.

### 1. வலம் வருதல்.

இதன் ஆரம்பமாக அங்கத்தினர் யாவரும் அரங்கத்தின் வெளியே ஒருவர்பின் ஒருவராக அணிவகுத்து நிற்பர். அதில் முதல் மூன்று பேர்கள் தூபக்காரனும் கைவாட்காரனும் ஸ்தானீகருமாவர். யாவரும் பண்ணோடு கீதம் பாடிக்கொண்டு அரங்கத்தினுள் ஒழுங்காகப் புகுந்து, சொக்கட்டான் தளத்தைச்சுற்றி வலமாகவந்து அவரவ ராசனத்தி லமருவர். அரங்கமானது நேர் கிழக்கு மேற்காக அமைக்கப்பட வேண்டுமென்று மேலே கூறப்பட்டுள்ளது. அதற்குக் காரணமும், உள்ளே வலம் வரும் பலனும் நெற்றிக்கண்ணால் ஆராயப்பட்டன.

பூமியின் மத்தியரேகையிலிருந்து வடதுருவத்தை நோக்கியும் தென் துருவத்தை நோக்கியும், அவ்வாறே இரு துருவங்களிலு-மிருந்தும் மத்தியரேகையை நோக்கியும், பேரொழுக்காக ஒரு-விதக் காந்தசக்தி ஓயாது ஓடிக்கொண்டிருக்கின்றதாம். இது மின்சார சக்தியோ இரும்பை வசீகரிக்கும் காந்த சக்தியோ அல்ல; அவற்றைவிட மிகச் சூட்சுமமான தொன்று. அருளா-லயப் பணிக்கும் அருள் விநியோகத்திற்கும் அது அதிகமாக உதவுவது. அந்த சக்தியின் மற்றொரு ஒழுக்கு பூமியைச்சுற்றி அதன் மத்தியரேகை வழியாக ஓடிக்கொண்டிருக்கும். இந்த ஒழுக்குகளின் இருப்பைத் தூய உடம்புகளை யுடையோர் அனு-பவத்தில் கண்டறியலாமென்று கூறப்படுகிறது. மது மாமிசம், லாகிரிப்பொருள் எவையும் உண்ணாத தூய சைவ உணவுப் பரம்-பரையில் பிறந்து, நல்லொழுக்க முடையோராய் வாழ்பவர்கள் ஒவ்வொரு திக்கில் ஒவ்வொரு மாசம் தலைவைத்துப் படுத்துறங்கு வாராயின், அப்பலன்களின் வேறுபாடுகளை உடம்பிலும் மனத்-திலும் உணருவராம். இவ்வுண்மையை யொட்டியே நமக்குள் தெற்கு தலைவைத்து யாவரும் படுக்கலாமெனவும் வடக்கு தலை-வைத்துச் சந்நியாசிகள் மாத்திரமே படுக்கவேண்டுமென்றும் விதிக்கப்பட்டுள்ளது. கிழக்கும் மேற்கும், அவரவர் உடம்பு வாய்ப்பைப் பொறுத்துப் பிடித்தமாகவும் அல்லாமலும் அமையுமாம். ஒத்த திக்குகள் ஆரோக்கியத்தையும் மன உற்சாகத்தையும் தருமாம்: ஒவ்வாதவை உடம்பிலும் மனத்-திலும் தளர்ச்சியை உண்டுபண்ணுமென்று சொல்லப்படுகின்றது.

சுதந்தரச்சிற்ப அருளாலய நிர்மாணத்தில், சொக்கட்டான் தளமே கர்ப்பக்கிரகம் அமையும் இடம். பக்தியுடன் பண் பாடிக்கொண்டு சிற்பிகள் அத்தளத்தை வலமாக வரும்பொழுது, பூமியின் காந்த ஓட்டங்களின் நடுவில் அத்தளம் ஒரு அருட்-சுனையாக அமைய, அதனைச்சுற்றி அகழிபோன்று அக்காந்தத்தின் ஓடையொன்று மிக்க வேகத்துடன் வலமாக ஓடத்தொடங்கு கின்றது. இவ்வோட்டம் ஆராதனை முடியம்வரை நடந்து-கொண்டிருக்கும். சிற்பிகள் இந்தச் சுனையையும், சுற்றி நீரோ-டையையும் மனத்தால் கற்பித்துக்கொண்டே வலம் வரும்படி அறிவுறுத்தப் படுகின்றனர். அவர்கள் தவறினும் இப்பலன்கள்

அமையத்தவறு. ஆயினும் இந்தத் தனிப்பட்ட விதானத்தில் அறிவோடும் முழுக்கருத்துடனும் செய்யப்படும் கிரியைகளே மேலான பலன்களைப் பூரணமாகவும் மிகத் துரிதமாகவும் கொடுப்பதாகக் காணப்பட்டன.

அரங்கத்துள் குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருந்த காந்த சக்தி இப்போது தளத்தைச்சுற்றியுள்ள பிராகாரத்தில் வலமாக மாத்திரம் ஓடும்; அந்த வேகத்தினால், அதன் போக்கோடு சேர்ந்து செல்லும் அடியார்களின் சூக்ஷ்ம உடம்புச் சிக்கல்களை அது போக்க வல்லதாகின்றது. அந்த அரணில் ஓட்டை உடைசல்கள் ஏற்படாதிருப்பதற்காகவே அந்தப் பிராகாரத்திலோ தளத்தினுள்ளோ எவரும் முறைதவறாக நடக்க அனுமதிக்கப்படார். அரங்கத்தினுள் சூக்ஷ்ம ஆகாய சுத்திகள் தூபக்காரன், கைவாட்காரன் இருவராலும் செய்யப்படும்.

நம் நாட்டிலும் ஆலயங்கள் ஏராளமாக உண்டு, அவற்றில் பிராகாரங்களும் உண்டு, அங்கு பிரதக்ஷணங்களும் உண்டு. அவற்றிற்கு விதி விலக்குகளும் உள்ளன. ஆனால் அவற்றை நாம் அனுசரிக்கும் விதத்தை விளக்கப்போனால் அது நமக்கு வெட்கக்கேடாகவே முடியும். இனி, நமது ஆலயங்களின் உட் பிராகாரத்தில் எண்மர் பலிதேவர்கள் இருப்பார்கள். அவருக்கு பலி பீடங்களும் உண்டு. பலியும் நாள்தோறும் இடப்படும். அவர்கள் கர்ப்பக்கிரகத்திற்கு அரணாக அமைந்தவர்கள். அதனால் அந்த பலிபீடங்களுக்கு ஊடாக அனாவசியமாய் யாரும் செல்லக்கூடாதென்ற விதியும் உள்ளது. இயற்ற எளிதான இச்சிறுவிதியைக்கூட நம்மக்கள் அனுசரிப்பதில்லை, அதன் உட்பொருளை உணராத காரணத்தால்.

ஆலயங்களில் வலமாகவரும் பிரதக்ஷணமுறை அண்ட பிண்டங்களின் படைப்பு முறையை, அதாவது இறைவனுடைய சிருஷ்டி தத்துவத்தை அறிகுறியாக விளக்குகின்றது. சூரிய மண்டலத்தை எடுத்துக்கொண்டால், முதலாவதாக அதன் எல்லை பரவெளியில் வரையறுக்கப் படுமாம். பின் அது வலம் இடமாகக் கடையப்படுமாம். அந்தப் பிரம்மாண்டமான சுழியினுள் நவக்கிரக சுழிகள் கடையப்படுமாம். அம்மாதிரியே அரங்கத்தி-

னுள்ளும் குறிப்பிட்ட ஸ்தானங்களில் சில சுழிகள் தூபக்காரனால் அமைக்கப்படுகின்றன. அண்டத்தைவிட்டு மனிதனை யெடுத்துக் கொண்டாலும் அங்கும் கர்மாதிகாரிகள் முதலில் அவனுடைய சூக்ஷ்ம உடம்புகளைப் பிண்டமாகக் கடைந்தெடுப்பராம். அவற்றினுள்ளாகப் பிராணமயகோசமும் அதில் ஏழு ஆதாரச்-சுழிகளும் வகுக்கப்படுமாம். பின்னர் அப் பிராணமயகோசம் தாயின் கர்ப்பத்தில் புகுத்தப்பட, அதனைக் கருவாகக்கொண்டே குழந்தையின் ஸ்தூல உடம்பு அமையுமாம். நமது ஆலயத் திருப்பணிகளுக்கு முளைப்பிடிக்கும் முறைகளும் இந்தப் படைப்-புத்தொழிலை இங்ஙனமே விளக்குவன.

சுதந்தரச் சிற்பிகள் அரங்கத்துட் புகுமுன்னர் முதலாவ-தாகவும் முக்கியமாகவும் கவனிக்கவேண்டுவது அவர்களுடைய உடை. நாம் வழக்கமாக உடுத்தும் உடை எதுவும் இல்லாமலே அங்கு அவர்கள் உட்செல்லலாம், தைரியம் உண்டுமாயின். அந்த அம்மணங்களைத் தடுக்க அங்கு யாருக்கும் உரிமை கிடையாது. ஆனால் சிற்பிகளின் சிறப்புடையாகிய மேலாடையை—அது ஒரு கைக்குட்டைபோன்ற ஏப்ரன் (Apron) என்ற அரைமுழச் சவுக்கமே—அதை இடுப்பில் கட்டித் தொங்கவிட்டுக் கொள்ளாத-போது அவர்கள் உள்ளே செல்ல அனுமதிககப்பட மாட்டார்கள். அந்தக் கோமணத் தொங்கட்டத்திற்கு இப்போது பல பொருள்-கள் அறிகுறியாகக் கூறப்படுகின்றன. ஆனால் பண்டைய எகிப்தியருக்குள் அப்பொருள்கள் யாவும் விளக்கப்பட்டதா-யினும், அந்த ஏப்ரன் துணியை இடுப்போடு இணைக்க உதவிய அரைஞாண் கொடிக்கே அதிக மதிப்புக் கொடுக்கப்பட்டது. அக்காலத்துக் கொடி இக்காலதனதப்போல வெறுங் கயிரா யிருக்கவில்லை. இரண்டு விரல் அகலமுள்ள அரைப்பட்டை அல்லது ஒட்டியாணம்போன்று, நீளமான பையாக அது இருந்தது. அப் பையினுள் அபிமந்திரிக்கப் பட்ட ஆகாயம்—வாயுவல்ல, அதற்கு மேற்பட்ட ஆகாயம் (Ether)—அடைக்கப்-பட்டிருந்தது. அதனால், ஆராதனையின்போது பெருக்கெடுக்கும் அருட் சக்திகளில் சில, கீழ் நோக்கிப் பாய்ந்து குறியடியிலுள்ள சக்கரத்தைத் தீவிரப் படுத்திச் சிற்றின்ப இச்சைகளைப் பலப்படுத்-தாதிருக்கும் பொருட்டு, அவ்வாறு ரக்ஷை செய்யப்பட் டிருந்தது. அந்தத் துணைக் கருவி இப்போது அறவே மறந்துவிடப் பட்டது,

நமக்குள்ளும் குழந்தை பிறந்த பத்தாம் நாள் அல்லது பதினாறாம் நாளில், கௌபீனம் கட்ட வேண்டிய வசதியோ அவசியமோ ஏற்படாத காலத்தில், அதற்கு இடுப்புக் கயிறும் அதில் தாயத்தும் நாய் வரைந்த காசும் திறவு கோலும் கோர்த்துக் கட்டுவது ஏதோ சூக்ஷ்ம பலன் கருதித்தானிருக்க வேண்டும். அது ஆணுக்கும் பெண்ணுக்கும் தரிப்பதுவும் கவனிக்கத் தக்கது. மற்று, சந்தியா வந்தன அநுஷ்டானங்கள், ஆன்மார்த்த பூஜைகள், ஆலய வழிபாடுகள், சிரார்த்தங்கள் முதலிய சமயக்கிரியைகளிலெல்லாம் கௌபீன மின்றி அவற்றில் ஈடுபடுவது குற்றமுடைத்து என்று நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன. அது உடை முறையில் மரியாதையோ அசுத்தமோ கருதிமாத்திர மல்லாமல் மேற்சொன்ன உட்பொருளை உத்தேசித்தும் விதிக்கப்பட்டிருக்கலாமென்று அநுமானிக்க வேண்டியிருக்கின்றது.

## 2. தூபமிடல்.

இனி, வலமாக வந்த சிற்பிகள் அவரவரிடஞ் சேர்ந்தவுடன் நடைபெறுவது தூபப் பணி விடை. கிறிஸ்தவ ஆலயங்களிலும் சிற்ப அரங்கங்களிலும் உபயோகப்படும் தூபக் கப்பரை மூடு கிண்ணம் போன்று மூன்று பொடிச் சங்கிலிகளில் உறி போலத் தொங்கவிடப் பட்டிருக்கும். சங்கிலியை இரு கைகளிலும் பற்றிக் கொண்டு தூபத்தை வட்டமாகச் சுழற்றி இட்டோ, தொட்டில் போல மேல் கீழாகக் குலுக்கி ஆட்டியோ, பக்க வாட்டாக வீசியோ, வேண்டிய மானஸீக நுண்ணுருவங்களை அமைத்துக் கொள்ளுதல் இயலும்.

தூபமானது ஜனங்கள் கூடுமிடங்களில் வேர்வை முதலிய துர் நாற்றங்களைப் போக்கி நறு மணத்தைப் பரப்பி ஸ்தூல சுத்தி செய்யும்; அதை விடக் கூடுதலான உதவி அது சூக்ஷ்ம உலகில் செய்வது. அது பற்றி முன்னரே விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சுதந்தரச் சிற்ப விதானத்தில், தூபக்காரன் சொக்கட்டான் தளத்தினுள் சில முக்கியமான இடங்களிலும், பிராகாரத்தில் சில முக்கிய ஸ்தானங்களிலும், பெரிய புற்றுப் போலும் பெரிய மீன்தூரி அல்லது அப்பளக் கூடை கவிழ்த்தியது போலும் அடியில் பெரு வட்டமாகவும் மேலே வரவரக் கொஞ்சம் கொஞ்சமாகச்

சிறு சிறு வட்டங்களாகவும் கயிற்றுச் சுருணை போல வட்டமிட்டுக்கொண்டே தூப உறியைச் சுழற்றித் தூபமிடுவர். அப்போது அவ்விடங்களில் சூக்ஷ்மப் புற்றுருவங்கள் ஏற்பட்டு ஆராதனை முடியும் வரை நிலைத்திருக்கும் சிற்ப முறைப்படி தீக்ஷை பெறத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் அவற்றினுள்ளே கொண்டு நிறுத்தப்படுவர். தீக்ஷையின் போது அவர்கள் இடபிங்கலை சுழுமுனா நாடிகள் முறையே திறக்கப்படும். அந்த நாடிகள் திறப்பதற்கு அனுகூலமாக, இந்தக் கூடைகளுக்குள் திரண்டு சுழன்று கொண்டிருக்கும் அருட் சக்திகள் அம் மக்களுடைய பிராணமய மனோமய கோசங்களைப் பண்படுத்துகின்றனவாம். இது நெற்றிக்கண்ணுக்குப் புலப்பட்டது.

இந்த சூக்ஷ்மக் கூடைகளை நிர்மாணித்த பின்னர், தூபக்காரன் மூன்று பிரதம அதிகாரிகளின் முன்பாகவும் தனித்தனி சென்று சிற்ப விதிப்படி அவர்களுக்கு தூபாராதனை செய்வான். அவர்கள் மூவரும் அழகு, அன்பு, ஆற்றல் என்ற பிரம்ம, விஷ்ணு, சிவாம்சமாகப் பணி புரிவது முன்னே சொல்லப் பட்டுள்ளது. அந்த மூன்று வகையான அருட் சக்திகளையும் விளைவிப்பதற்கும் விநியோகிப்பதற்கும் தனித தனித் தேவ கணங்கள் உள்ளனராம். கிரியையின்போது இந்த அதிகாரிகள் அவரவர்க்குரிய தேவர்களோடு சூட்சுமமாக இணைக்கப் படுவராம். அதிகாரிகளை நோக்கித் தூபமிடுங்காலத்து அந்தத் தேவர்கள் அவ் இணைப்பைக் குழாயாக்கி ஆராதனை முடியும் வரை அதன் வழியாக அருளைச் சொரிந்து கொண்டிருப்பராம்.

உத்தம தூபங்கள் புவர்லோக சுவர்லோக அலைகளை யுண்டு பண்ணி மக்களுக்கு மனச் சாநதியையும் பக்தியையும் ஊட்டும் முறையும், தூப தேவர்களையும் கணங்களையும அங்கு வசீகரித்திழுத்து அவர் மூலம் அருளைப் பெருக்குவதும், அதிகாரிகளால் ஆசீர்வதிக்கப்படும் போது அவை தம் இயற்கையை விடக் கூடுதலான பலனைத் தருவதும், இவையும் இன்ன பிறவும் கிறிஸ்தவ ஆராதனையில் விளக்கப்பட்டிருக்கின்றன. அவை யாவும அதே பலன்களோடு இந்த அரங்கத்தினுள்ளும் நடைபெறுகின்றன.

## 3. தீபமிடல்.

தூபப் பணிவிடை முடிந்ததும் நடைபெறுவது தீப மேற்று-தல் என்னும் கிரியை. பிரதம அதிகாரிகள் மூவருடைய மேஜை-களிலும் ஒவ்வொரு மெழுகுவத்தி ஒரு தண்டின் மேல் இருக்கும். அவற்றை முறையே அம் மூவரும்,

1. "இறைவனுடைய ஞான ஒளி நம் பணியை விளக்கு-வதாக".

2. "இறைவனுடைய வல்லமை ஒளி நம் பணியைத் தாங்குவதாக".

3. "இறைவனுடைய அழகு ஒளி நம் பணியை அலங்-கரிப்பதாக".

என்ற மந்திரங்களை ஓதி, உரிய விதிப்படி ஏற்றி வைப்பர். முன்னம் இவர்களை நோக்கி தூப விதானம் செய்யப் பட்டபோது இந்த மூன்று அதிகாரிகளும் பிரம்ம விஷ்ணு சிவாம்ச தூப தேவர்களோடு இணைக்கப்பட்டது போல, இப்போது அத்தகைய அக்கினி தேவர்களோடும் அவர்கள் சூக்ஷ்மமாக இணைக்-கப்படுகின்றனராம். இங்கு மெழுகு வத்திகளுக்கும் மின்சார விளக்குகளுக்கும் வேறுபாடு காணப்பட்டது. பரம்பரையாக ஏற்பட்டுள்ளவை மெழுகுவத்திகள். அவற்றை உரிய மந்திரங்-களோடு ஏற்றும் போது அக்கினி தேவர்கள் மூலம் ஒரு அருட் பொழிவும், கிரியை முடிவுறும் வரையில் அதிகாரிகளுக்கும் அந்த தேவர்களுக்கும் ஒரு தொடர்பும் ஏற்படுவது நெற்றிக் கண்ணால் காணப்பட்டது. இவ் வுண்மை இடைக் காலங்களில் விளக்கப்-படாது மறைந்து போனதால், கிரியை நூலை வாசிப்பதற்காகவே அவ் விளக்குகள் அமைந்திருப்பனவாக இன்று எண்ணி, அனேக சபைகளில் அவற்றை மின்சார விளக்குகளாக மாற்றி விட்டனர். மேற் சொன்ன தீபமேற்றுங் கிரியை வரும்போது, அவர்கள் மந்-திரங்களை ஓதிப் பொத்தான்களை அழுத்தி மின்சார விளக்கை ஏற்றி விடுகின்றனர். அம்முறை மெழுகு திரிகள் கொடுக்கும் சூக்ஷ்ம பலன் எதையும் கொடுக்கவில்லையென நெற்றிக் கண்ணுக்குப் புலப்பட்டது. காரணம், ஒளியையும் சூட்டையும் ஒரு சேரப்-பரப்பும் மெழுகு திரிகள் அக்கினி தேவரின் பிரதி நிதிகளாக

விளங்குகின்றனவாம். கணக்கற்ற மின்சார விளக்குகள் ஒரு அறையில் எரிந்து கொண்டிருந்தாலும், அவை எவ்வளவு நேரம் எரியினும், அவற்றால் அங்கு வெப்பம் மிகுவதில்லை. அதனால் அவ் விளக்கு அக்கினியாக வில்லையாம்.

இந்த உண்மையை அறியாமல் இக்காலத்திய நமது ஆலய நிர்வாக அதிகாரிகள், எண்ணெ விளக்குகளை ஒழித்து, எங்கும் மின்சார விளக்குகளும் சினிமாக் கொட்டகைகளுமாக ஆலயங்களை மாற்றி வருகின்றனர். அது ஆலய அருட் பொழிவிற்கு அநுகூலமானதல்ல வென்பது மேற் சொல்லியதிலிருந்து ஒருவாறு விளங்குகிறது. அத்துடன் ஒவ்வொரு மூர்த்திக்கும் முன்பாக அமைந்துள்ள சந்நிதித் தூக்கு விளக்குகளை ஏற்றும்போதும், ஆராதனையின்போது தீபத் தட்டுகளைப் பொருத்தும் போதும, அந்தந்த மூர்த்திக்குரிய மந்திரங்களை ஓதிப் பொருத்துவது அவருடைய சாந்நித்தியத்தைப் பெறுவதற்கான விதி யென்றும் விளங்குகிறது. இப்போது நடை பெறுவதெல்லாம் இதற்கு நேர் மாறாகவே உள்ளன. பலன்களும் அதற்குத் தகவே இருக்க முடியும்.

மெழுகு வத்திகள் மிருகக் கொழுப்புக் கலவாதனவாய், தேன் மெழுகு அல்லது தாவர நெய்களால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும். அல்லாத வத்திகள் குற்ற முடையன, விரும்பததகாத பூத கணங்களை வரவழைப்பன. இது கருதியே நமக்குள்ளும் சில சில எண்ணெய்களே ஆலயங்களுக்கு விதிக்கப்பட்டுள்ளன ; வேறு சில விலக்கப் பட்டுள்ளன. புன்னைக்காய் எண்ணெய், வேப்பெண்ணெய் முதலியவற்றை நமது ஆலயங்களில் தீண்டார்.

கண்ணுக்கான ஒளியும் மூக்குக்கான நறும் புகையும் அருட்பொழிவிற்கு உதவும் விதங்கள் கூறப்பட்டன. இனி, செவிக்குரிய ஒலியிலும் சில சில விதி விலக்குகளை இங்கு கூறுவது பொருத்தமாகும். மணி ஓசைகளும் கெண்டாமணி ஒலியும் மிக்க இனிமையுடையனவாக இருக்க வேண்டும். அடிப்பதுவும், தாளத்தோடு இணங்கி ஒரே விதமான ஒலியலைகளை உண்டு பண்ணி மனதிற்கு நிம்மதியும் இனிமையும் பயக்கும் வண்ணம் இருக்க வேண்டும்.

அல்லாதபோது கந்தர்வ கின்னர கணங்களை வரவழைப்பதற்குப் பதிலாக அவ் அலைகள் அசுரகணங்களை உள்ளே அழைத்து விடும். கெண்டாமணி அடிக்கும்போதும், திருச் சங்கு ஊதும் போதும், அந்தந்த மூர்த்தியினுடைய அருளும் ஆசிர்வாதமும், காற்றோடு மணம் கலந்து செல்வது போல அந்த ஒலியுடன் கலந்து அது எட்டும் தூரம் செல்லவேண்டுமென்ற பிரார்த்தனையுடன் செய்யப்படுமாயின், அவற்றின் பலன் பல மடங்கு அதிகரிப்பதுமல்லாமல், செய்வோனுக்கும் பணச் செலவில்லாத ஒரு புண்ணியப் பலனையுங் கொடுக்கும். அவன் இறையருளைப் பெருக்கும் பாத்திரமாகி ஏற்பட்ட நற்பலனைப் பெறுகின்றான்.

பாடம் 31.

## சுதந்திரச் சிற்ப விதானம்.

## III. ஆரம்பக் கிரியைகள்.

### (4). நடை திறப்பு.
### (Opening the Lodge).

*பிரதம அதிகாரி மற்றச் சிற்பிகளை விளித்து, அதாவது, கவனியுங்கள் என்கிற முறையில் மேஜையைத் தட்டி,*

"சகோதரர்களே, நடை திறக்க உதவி புரியுங்கள்: சுதந்தரச் சிற்பிகளின் முதற் கவனம் யாது?"

*என்று கேட்பர். மற்றொரு அதிகாரி,*

"அரங்கம் நன்கு அரண் செய்யப் பட்டிருக்கிறதா என்று கவனிப்பது." *என்று விடை யளிப்பர்.*

"அங்ஙனம் செய்வீராக" *என்று முதலதிகாரி கூறவும், கதவுகள் மூடப் பட்டிருக்கின்றனவா வெனக் கவனிப்பதற்கு அது சம்பந்தமான சில சோதனைகள் நடைபெறும்.*

*இச் சிற்ப விதானம் மிக அந்தரங்கமான ஒரு முறையாதலால், அவர்கள் கூடும் அறைகள் சாதாரணமாக அந்நியர் நடமாட்டமில்லாத ஒதுக்கிடம பார்த்துக் கட்டப் பட்டிருக்கும. அநேகமாய் அவை மேல் மாடியிலேயே இருக்கும்; தனி மதிலுக்குள்ளும் இருக்கும். கிரியை தொடங்கு முன் அறைகள் நன்கு பூட்டப்படும், வெளியே காவலும் வைக்கப்படும். ஆகவே இவற்றை விட வேறு அரண் அந்த இடத்திற்குத் தேவை யில்லை. ஆதலால் அரண் செய்யும்படி எச்சரிக்கை செய்வது அங்கு நடக்க விருக்கும் கிரியைக்கு ஊனம் உண்டாகா வண்ணம் சூக்ஷ்ம உலகில் கவசம் அமைக்கும் பொருட்டாம். இக் கேள்வி விடைகளின் போதும், அதிகாரிகள் தம் மேஜைகளில் குட்டும் போதும், அங்கு அருளாலய நிர்மாணத்திற்கு அடிப்படையிடப்படுகின்றது. மேஜையில் குட்டுவது பூத கணங்களை அழைக்க ஏற்பட்ட ஓர் முத்திரை; நமது பிள்ளையார் குட்டும் அதுவே.*

இந்த எச்சரிப்புக்கு மற்றொரு பொருள், சிற்பிகள் ஒவ்வொருவரும் தம் தம் அறிவு இச்சை செயல்களை அரண் செய்து கொள்ள வேண்டுமென்பது. சுதந்தரச் சிற்பியானவன் அண்டச் சிற்பியாகிய ஆண்டவன் திருப்பணியில் ஓயாது ஈடுபட்டு உழைப்பவன்; உலகில் இன்பத்தையும் சாந்தியையும் ஓயாது பரப்பக் கங்கணங் கட்டியுள்ளவன். அதற்குத் தயாரிப்பாகத் தன் அறிவு இச்சைகளில் கீழ்த்தரமானவையாய், விருமபத் தகாதனவாய், விலக்க வேண்டுவன வாயுள்ள விருப்பு வெறுப்புக்கள் நினைவுகளைப் புறத்திருந்து உள்ளே புகாமல் தடுத்து நிறுதத வேண்டுவது அவனுடைய முதல் வேலையாகும. அதனால் தன் மனத்திற்கு அரண் அமைத்துக் கொள்ளும்படி அவன் ஏவப்படுகிறான். இனி, சட்டியிலுள்ளதே அகப்பையில் வருமென்பது பழமொழியாகையால, அதன்படி, பிறருககு இன்பம பயக்க முயலுமுன் சிற்பிகள் தம அகததே இன்பத்தையும் சாந்தியையும் அமைத்துக் கொள்ளுவதும் முறையாகும். இந்த இரு வேலைகளுக்குமாகத் தன்னை அரண் செய்து கொள்ளுமபடியும அவன் எச்சரிக்கபபடுகின்றான். இக் கிரியை நமக்குள் ஒவ்வொரு முயற்சிக்கும் தொடக்கத்தில் செய்யப்படும் விக்னேஸ்வர வழி பாட்டையொக்கும்.

இரண்டாவது கேள்வியாக, "சுதந்தரச் சிற்பியின் அடுத்த கவனம் யாது" என்று அதிகாரி வினவுவர்.

"அன்னியர் யாரும் அகத்துளரா வென ஆராய்வது" என்ற விடை அளிக்கப்படும. உடனே அரங்கத்துள்ளிருக்கும் அனைவரும் எழுநது நின்று, தாங்கள் உண்மைச் சிற்பிகளென்று நிரூபிக்கச் சில முத்திரைகளையும் சைக்கினைகளையும் காட்டுவர்.

சிற்ப விதானத்தில் நடைபெறும் மந்திரங்கள், முத்திரைகள், பாவனைகள், சைக்கினைகள், வினாக்கள், விடைகள் யாவுமே அறிகுறிகளாக ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களைக் கொடுக்க வல்லவன; அன்றி அருள் நெறியாக மூலாதாரம் முதலிய ஆறாதாரங்களின் விரிவையும் அதன் மூலம் ஆன்ம வளர்ச்சியையும தருவன; மூன்றாவதாகப் பேரின்ப அநுபவத்திற்கான ஒழுக்க நெறியையும புகட்டுவன. விளக்க வல்லவருக்கு நமது வேதாந்த சித்தாநதக் கருத்துக்களும் அவை புகட்டும் முத்தி நெறிகளும் அங்கு

அடங்கி யுள்ளனவாகக் காணப்படும். இன்றையச் சிற்பிகள் பெரும்பாலோர் இவ்விதானத்தை அறிகுறியாகவும் ஒழுக்க முறையாகவுமே கொண்டாடுகின்றனர். ஆனால் நெற்றிக் கண்ணால் நோக்கிய போது அது ஒரு மகத்தான அருள் நெறி யென்றும், அந்த அருட் பொழிவே அதன் முதல் நோக்க மென்றும், மற்ற இரண்டு பலன்களும் அதற்கு அடங்கியவையே யெனவும் தெரிய வருகின்றது. அறிகுறிகளை விளக்குவதற்கும் ஒழுக்க நெறி புகட்டுவதற்கும் இவ்வளவு அரணும் அந்தரங்கமும் ஆவசிய-மற்றவை. ஆனால் அது அருள் நெறியாகும் போது அங்கு நடைபெறும் முத்திரை பாவனை முதலியவை திரிலோக தேவ கணங்களை அழைப்பதற்கான முறையில் அமைக்கப் பட்டிருக்கும். சிற்ப ஆகமக் கிரமப்படி தீக்ஷை பெற்றுள்ள சிற்பிகள் அவற்றை இயற்றும் போது, அந்த தேவ கணங்கள் பிரசன்னமாகி அவருக்கு உதவுவர். அல்லாதார் செய்யின் அத்தகைய பலன் வராது போவது மன்றிப் பைசாச அசுர பூத கணங்களால் இடையூறு-களும் ஏற்படுவது நெற்றிக் கண்ணுக்குத் தெரிய வந்தது. அந்த ஆபத்தைக் கருதியே இவ் விதானத்திற்கு இவ்வளவு பாது-காப்பும் ஒளிப்பு மறைப்பும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

சிற்ப முத்திரைகள் ஆதாரங்களிற் சிலவற்றைத் திறந்து, சூக்ஷ்ம சக்திகள் நல்லனவும் தீயனவும் எளிதில் அவற்றுள் புக இடங் கொடுக்கும். தகாத முறைகளிலும் இடங்களிலும் அந்த ஆதாரக் கதவுகளைத் திறப்பதனால, அவை தக்க பாதுகாப்பின்றி பாதை உபத்திரவங்களுக்கு இடங் கொடுக்கின்றன. தற்காத்துக் கொள்ளுந் திறமை அந்த ஆதாரங்களுக்கில்லையாதலால், ஆன்ம வீட்டுக் கதவுகளைத் திறக்கும் போது திருடர் உள்ளே நுழைந்து விடாதிருக்கவே, வேதங்கள் மந்திரங்களுக்குப் பல பல கட்டுப்-பாடுகளும் ரகசியங்களும் பெரியோர்கள் அமைத்திருப்பது. இந்த ஆதாரங்கள் தொழிற்படும் முறைகளும், உடம்பில் அவற்றின் ஸ்தானங்களும் அவை விரிவடையும் விதங்களும், "அண்டத்தி-லுள்ளது பிண்டத்தில்", என்ற இந் நூலின் முதற் பாகத்தில் விளக்கப் பட்டுள்ளன; அங்கு கண்டு கொள்க. சிற்பிகளென்று நிரூபிக்கும் பொருட்டுச் செய்யப்படும் முத்திரை பாவனைகள் அரங்கத்துள்ளார் நுண்ணுடம்புகளை அருட் பேற்றிற்குத் தகுதி-

யுடையனவாக அமைக்கின்றன. அல்லாத போது அருள் வெள்ளமானது அவர்கள் மீது சிதறி உடம்புகளில் ஊறாது உதிர்ந்து போகும். ஆகவே இதுவரை நடைபெற்ற கிரியைகளுள்,

(1) தூபப் பணிவிடை அரங்கத்திற்கும் ஆன்மாக்களுக்கும் தூய்மையை ஆக்கியது.

(2) அரண் செய்தது அரங்கத்திற்கும் ஆன்மாக்களுக்கும் கவசத்தை ஆக்கியது.

(3) முத்திரைக் கிரியை அரங்கத்தையும் ஆன்மாக்களேயும் அருட் பேற்றிற்கு இலக்காக்கியது.

இவ்வளவு தயாரிப்பின் பின்னர், அருள் யந்திரம் சாவி கொடுக்கப் படுகின்றது. சாவி கொடுக்கும் முறை மிக மிக எளிதே. சில விஞக்களும் விடைகளுமே அந்தச் சாவியின் சூத்திரங்கள். அவை கேட்போருக்கு வெறும பள்ளிப் பிள்ளேகள் சம்பாஷணே போலவே தோன்றும. அவ்வளவு எளிதாகவும், எவருக்கும் ஐயம விளேக்காத அவ்வளவு மறைவாகவும் இவ்விதானம் ஆன்றோரால் அமைக்கப பட்டுள்ளது. ஆனல் சாவி கொடுத்த நொடியிலேயே அருள் யந்திரம் ஓடும் விதமும் வேகமும் நெற்றிக் கண்ணுள்ளோருக்குப் பெருத்த அதிசய மாயிருக்கு மென்று வங்கப்பணி முனிவர் கூறுகின்றனர். இந்த அற்பக் கேள்விகளுக்கு இந்தப பெரும் பலன்களாவெனக் கண்டோர் திகைப்பராம். "இந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ," என்பது பழமொழி. அதனல் ஆன்றோர் முறைகளே நன்கு ஆராயாது அற்பமென்று இகழ்வது அறிவுடைமையாகாது. இந்தச் சிற்பமுறை நூல்கள் வெளியாகி விட்டாலும், அதன் அந்தரங்கம புலப்படாதிருக்கவே, இவ்வளவு அற்ப முறையில் கேள்விகள அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அரங்கத்தின் அதிகாரிகள் எழுவர். அரங்கம் மனிதனேக் குறிப்பிடும் போது அவர் எழுவரும் அவனுடைய ஆதாரங்கள் மாத்திர மன்றி ஏழு உடம்புகளுமாவர். அரங்கம் அண்டத்தைக்

குறிக்கும் போது அவர்கள் சப்த லோகங்களாவர். அந்த உடம்புகளும் உலகங்களுமாவன :—

1. அன்ன உடம்பு. பூலோகம்.
2. பிராண உடம்பு. புவர்லோகம்.
3. இச்சை யுடம்பு. சுவர்லோகம்.
4. உருவமன உடம்பு. மகர்லோகம்.
5. அருவமன உடம்பு. ஜனோலோகம்.
6. விஞ்ஞானமய உடம்பு. தபோலோகம்.
7. ஆனந்தமய உடம்பு. சத்யலோகம்.

இந்த உடம்புகளும் உலகங்களும் எங்கோ உள்ளன வல்ல சந்திரன், சூரியன், நக்ஷத்திரங்கள் இவைகளை யடுத்து எட்ட உள்ளனவு மல்ல. அவை யாவும் நமக்கு உள்ளேயும் நம்மைச் சுற்றிலுமே இருக்கின்றன வென்பதை அறிய வேண்டும்.

மனிதன் ஒவ்வொருவனுக்கும் தனித் தனியாக மேலே சொன்ன ஏழுடம்புகளும் பிறவியிலேயே அமைந்திருக்கின்றன. அவை யாவும் அவன் இருக்கும் இடத்திலேயே அவனுடைய அன்ன உடம்பைச் சுற்றிக் கைக்கு ஒரு முழம் விரிந்த பெரிய கோழி முட்டை போல அமைந்துள்ளன. அது போலவே சப்த உலகங்களும் நாமிருக்கும் இடத்திலும் நமக்கு உள்ளும் நமக்குப் புறம்பாக நாலா பக்கத்திலும் பரவிப் பரந்து கிடக்கின்றன. மனிதன் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் போது அவனுடைய அன்னமய—பிராணமய கூட்டுடம்பு பூலோகத்தில் வேலை செய்கிறது. அவன் உடம்பை அசையாமல் நிறுத்தி, விருப்பு வெறுப்புக்களையும் மண் பெண் பொன்னாசைகளையும் உணரும்போது அவனுடைய இச்சையுடம்பு புவர் லோகத்தில் தொழிற்படுகிறது. அவன் மரம் மலை காடு வீடு போன்ற உருவங்களை எண்ணும் போது அவனுடைய உருவமன உடம்பு சுவர்லோகத்தில் வேலை செய்கின்றது. அழகு அன்பு உண்மை என்ற அருவ குணங்களை எண்ணும் போது அவனுடைய அருவ மன உடம்பு மகர் லோகத்தில் தொழில் செய்கிறது. அதற்கு மேலுள்ள உடம்புகள் முதிர்ந்த யோகியருக்கன்றி மற்றையோருக்கு வித்திலுள் முளை போலவும் முட்டையில் கருப் போலவும் உறங்கிக் கிடக்கும். அவற்றை வளர்ப்பதே கிரியா முறைகளின் ஒரு பெரு நோக்க மாகும். மனிதனுடைய விஞ்ஞான

மயகோசம் அவனுக்குப் பேரறிவையும், ஆனந்த மயகோசம் பேரின்பத்தையும் நல்க உதவுவன. இந்த உடம்புகள், உலகங்களைப் பற்றி முதற் பாகத்தில் விரிவாகக் காணலாம்.

காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு. அதை எவரும் மறுக்கார். ஆனால் அது, தன் குஞ்சே பொன் குஞ்சு, மற்றக் குஞ்செல்லாம் மண் குஞ்சு, என்று வாதிக்குமானால் அதை ஒருவரும் ஒப்பார். அம்மாதிரியே ஒவ்வொருவனும் தன் தன் மதத்தையேபெரிதாகப் பாராட்டுவது இயல்பு; அதிலே அவன் பிறந்து வளர்ந்து பழகியுள்ளதனால். ஆனால் தன் மத மொன்றே மதம், மற்றவை யெல்லாம் அதம், அவம், என்று பறையடித்துப் பூசல்களைக் கிளப்பும் போது, கற்றோரும் மற்றோரும் உலக ஒற்றுமைக்காகவேனும் அதைக் கவனிக்க வேண்டுவது அவசியமாகின்றது. அத்தகைய சமரசம் ஏற்படத் துணை புரிவது பல மதங்களையும் பற்றிய ஆராய்ச்சி. அதனாலேயே நமது இந்து மதத்திலுள்ள உலகப், உடல் சம்பந்தமான உண்மைகள் பண்டு வேறிடங்களிலும் இருந்தன வென்றும், இன்றும் அவ்வாறே இருந்து வருகின்றன வென்றும் இங்கு காட்டப் படுகின்றன. உலகத்துள்ள பெரு மதங்கள் யாவற்றிலும் அவை மறைமுகமாகக் கூறப் பட்டிருப்பது அவற்றை அன்போடு ஆராய்பவா அறியலாகும்.

இனி, சுதந்தரச் சிற்ப விதானத்தின் சூத்திரத்திற்கு விசையாக அமைக்கப் பட்டுள்ளவை மூன்று வினாக்களும் அவற்றின் விடைகளுமாம். முதலாவதாக, "அதிகாரிகள் எத்தனை பேர்? அவர்கள் யார் யார்?" என்று பிரதம அதிகாரி வினவுவர். பிரதம அதிகாரி பெற்றுள்ள ஆசாரிய தீக்ஷையின் பலனாகவும், மற்ற அதிகாரிகள் பெற்றுள்ள தேவகணத் தொடர்பின் பலனாகவும், அந்தந்த அதிகாரியின் பெயர் கூறப்படும் போது அவரோடு இணைந்துள்ள தேவ கணங்களுக்கு ஒரு அறை கூவல் போன்ற அலை சூக்ஷ்ம லோகத்தில் ஏற்பட்டு நாற் புறமும் பரவும்; வானொலி நிலய ஆகாய அலைகள் வானொலிப் பெட்டிகளைச் சென்றடைவது போல. சப்த உலகங்களிலும் அவ்வவ் வுலகவாசிகளான தேவ கணங்கள் இருக்கின்றன ரென்பது முன்னே கூறப்பட்டுள்ளது. நமக்குள் நீர் வாழ்வன, நிலம் வாழ்வன, ஆகாயம்



தேவ - பூதகணங்கள் (3 கூட்டம்)

*சுதந்தரச் சிற்பவிதான அருளாலயம் அமைத்தலும் அருட்பணி புரிதலும்*

[பக்கம் 179

வாழ்வன என்றிருப்பது போன்றது அது. அவர்கள் வழக்கமாக் அவ்வவ் வுலகங்களிலேயே வேலை செய்வர். ஐந்தாவது அதிகாரி-யின் பெயர் கூறப்படும் பொழுது சொர்க்கலோக தேவ கணங்-களில், அரங்கத்தினடுத்துள்ளோர் திடுக்கிட்டு விழிப்பெய்துவர். ஆறுவது அதிகாரியின் பெயர் புவர் லோகத்தில் அழைப்பை விடுக்கும். தேவ கணங்களில் ஒரு சாரார் இறைபணியில் ஈடுபட எப்போதும் தவித்துக் கொண்டிருப்பர். அவர்கள் எங்கே-யெங்கே, எப்போ யெப்போ சமயம் வாய்க்கு மென்று ஆவலாய் எதிர்பார்த் திருப்பார்கள். அவர்கள் இந்த அரிய சந்தர்ப்-பங்களை நழுவ விடார். அவர்களுடைய முன்னேற்றமும் முத்தி-நெறியும் சமயக் கிரியைகள் மூலமாகவே நடைபெறுவன.

பிரதம அதிகாரியின் அடுத்த வினா, "அவரவருடைய ஸ்தானம் யாது?" என்பது. அதற்குக் கீழ் அதிகாரிகள் தனித் தனியாக விடையளிக்கும் போது, அந்தந்த அதிகாரிக்குரிய திருப்பணித் தேவ ரொருவர் திடீரென்று தோன்றி அவர்களுடைய தலைக்கு மேலாக மிதந்து, தனக்குரிய பணியைப் பேராவலோடு எதிர் பார்த்து நிற்பர். அவ்விதம் தேவர்கள் எழுவர் ஏழு அதிகாரி-களின் தலைக்கு மீதும் காத்துக் கொண்டிருப்பார்கள். மூன்றுவது வினா "அவரவருடைய கடமை யாது?" என்பது. அதற்கு விடை யளிக்கப்படும் போது, அந்தந்த தேவருக்குரிய கையாட்களாகும் பூத கணங்கள் (Nature Spirits) திரண்டு வந்து அவரவர் தலை-வருக்குப் பின்னல் அவர்கள் ஏவலை எதிர் பார்த்துக் குழுமி நிற்கும். (படம் 179-ம் பக்கம் பார்க்க) அவை கும்பல் குமபலாக ஆவலோடு நிற்கும் நிலை, வேட்டைக்குச் செல்லும் நாய்கள் சங்கிலியை வலித்து நிற்பது போலவும் பருந்துகள் பாய்ச்சலுக்-குத் தயாராய் நிற்பது போலவும் ஓட்டப் பந்தயக்காரர் வெடிச்-சத்தத்திற்குத் தயாராய் நிற்பது போலவும் இருக்குமாம். அவ்-வளவு ஆத்திரம் நிறைந்த நிலைமையில் நடைபெறுமாம் நடை திறப்பு.

பிரதம அதிகாரியைக் கவிந்து நிற்கும் தேவர் ஸ்தபதி போன்றவர்; அவர் ஆற்றல் மிக்க ஒரு பெரிய மேதையாயிருப்-பர். அவர் அதிகார மாத்திரைக் கோலொன்று கையில் வைத்திருப்பர். தம் கட்டளைகளை யெல்லாம் அதைக் கொண்டே

குறிப்பிடுவர். மற்றுள்ள ஆறு அதிகாரிகளைக் கவிந்து நிற்கும் தேவர்கள் தொழில் வல்ல உதவிக் கொத்தர்களாவர்; அறிவும் ஆற்றலுமுள்ள மானிடரை (Skilled Workmen) ஒத்த நிலையிலுள்ளவர்கள். இந்த எழுவரையும் பின் பற்றி நிற்கும் பூதகணங்கள் ஏவின வேலையை மாத்திரம் முறைப்படி செய்ய-வல்லவர்கள்; தாமாக எடுத்துக் கட்டி ஒன்றைச் செய்ய வல்லவ-ரல்லர். அதனால் இங்கு அழைக்கப்படும் தேவர்களுக்கும் கிறிஸ்தவ ஆராதனையில் வரும் நவகண வானோருக்கும் உள்ள வேறுபாடுகள் அறியத் தக்கன. அங்கு பங்கெடுப்பவர்கள் தேவர்களுள் மிக உன்னத நிலையிலுள்ளவர்கள். மனுதருடைய உதவியோ ஒத்துழைப்போ எதுவு மின்றியே சாமியாரை மாத்திரம் வைத்து ஆராதனையைப் பூர்த்தி செய்ய வல்லவர்கள். பல சாமியார்கள் அன்றாடம் தனியாகச் செய்யும் ஆராதனையில் அவ்வாறு நாள்தோறும் செய்து வருபவர்கள். அடியார்களால் ஏற்படும் குறைவுகளை நிறைவு செய்யவும் குற்றங்களைக் களையவும் வல்லவர்கள். ஆனால் சிற்ப விதானத்தில் வருபவர்கள் அத்துணை உயரியோர் அல்லர். அங்குள்ள பிரதம அதிகாரியும் (R.W.M.) அரங்கத்தினுள்ளே மாத்திரம் ஆசீர்வதிக்க அருகதையுடையவ-ரன்றி, அதை விட்டு வெளியே வந்து ஆசீர்வதிக்கும் சுதந்திர-முடையவரல்லர். ஆனால் கிறிஸ்தவச் சாமியார்களோ எந்தவேளை-யிலும் எந்தஇடத்திலும் எவரையும் பூரண பலனோடு ஆசீர்வதிக்கும் பெற்றி வாய்ந்தவர்கள். அதனால் அவர்களைப் பின் நின்று அணைத்-தாதரிக்கும் தேவர்களும் அதற்கேற்ற வல்லமை யுடையவர்களா-யிருக்கின்றனர்.

நமக்குள்ளும், வைதீக முறைப்படி உபநயனம் பெற்ற பிராமணர் யாவருக்கும தேவர்களை அழைக்கும் உரிமை ஏற்பட்-டிருக்கின்றது. ஆனால் ஆலயங்களில் பரார்த்த பூஜை செய்ய அவர்களுக்கு உரிமை அளிக்கப்பட வில்லை. அவர்கள் மூல-ஸ்தானத்துட் செல்லுதலும் மூர்த்தி பிம்பங்களைத் தொடுதலும் ஆகாதென்றே ஆகமங்கள் விதித்துள்ளன. வைதிக சம்ஸ்காரங்-களோடு ஆகமத்திலுள்ள சமய விசேஷ நிர்வாண தீக்ஷைகளும் ஆசாரியாபிஷேகமும் பெற்றுள்ளோரே அங்கு பிரசன்னமாகும் தேவர்களையும் தேவதைகளையும் ஆவாகிக்க அருகதை யுடையவர்-கள். அதனால் வைதிகத் தேவர்கள் சிற்ப தேவர்களாகவும்,



சுதந்தரச் சிற்ப அருளாலயம்

(கிரேக்க நாட்டுப் பண்டைய ஆலய முழி இது)

[பக்கம் 181

அபிஷிக்த தேவர்கள் நவகணவானோர் போன்று மிருக்கலாகும். இந்த அபிஷிக்தர்களும் வைதிக தியான முறை, ஆகம நியாச முறை, பிரசன்ன பூஜை முறை என மூன்று விதங்களாக ஆவாகனம் பண்ணுவர். இம் மூன்றும் ஒன்றுக்கொன்று விரிவாக இருப்பதால் அங்கும் பலன் வேறுபாடுகள் இருக்கலாமென்று எண்ண வேண்டியிருக்கிறது.

சிற்ப அரங்கத்தினுள் இப்போது தேவர்களும் அவர்கள் கணங்களும் மிக்க ஆவலோடு காத்து நிற்க, சூக்ஷ்ம பார்வையில்லாத அதிகாரிகளும் அங்கத்தினரும் அதனை ஒன்றும் அறியாதவராய் ஒருவித பக்தியில் மாத்திரம் ஈடுபட்டு எதிர் பார்த்திருக்க, பிரதம அதிகாரி "நான் நடையைத் திறக்கிறேன்" என்று கூறி மேஜைமேல் முப்முறை தட்டுவர். இந்தத் தட்டுகள் மூன்றும் நம் பிள்ளையார் குட்டுகள் மூன்றும் ஒரே இனத்தைச் சேர்ந்த ஒரு வகை முத்திரைகள். தட்டிய நொடியிலேயே அந்த அறைகூவலுக்குப் பதிலளிக்கும் பூதகணங்கள், குபேர கணங்களென்றும் பிருதிவி கணங்களென்றும் பெயர் பெறும் ஒருவகைக் கூளிகள், புதுக் கூட்டங்கள், பூமிக்குள்ளிருந்தும் நாற்புறத் திலிருந்தும் புற்றீசல் போலப் பொலபொலென்று கிளப்பி உள்நுழைந்து, அருளாலய நிர்மாணம் உருவாதற்கு இன்றியமையாததான ஒருவகைக் காந்த (Magnetic) நிலையை அங்கு சூக்ஷ்ம ஆகாயத்தில் அமைத்து விட்டு ஒதுங்கிக் கொள்கின்றனர்—(Create the necessary atmosphere). உடனே ஸ்தபதித் தேவர் கைக்கோலை இங்குமங்குமாக ஓச்ச, மேலே மிதக்கும் தேவர்கள் எழுவரும் தம்மைத் தம் அதிகாரிகளோடு ஒரு மின் கம்பியினால் இணைத்துக் கொள்கின்றனர். அவர்களுடைய கையாட்களும் அவர்களின் ஏவலின்படி வேலை தொடங்கி, சொக்கட்டான் தளத்தில் கர்ப்பக் கிரகத்தையும், அதைச் சுற்றி ஆயிரக்கால் மண்டபம் போன்றதொரு ஆலயத்தையும் மிகத் துரிதமாக நிர்மாணித்து விடுகின்றனர். மண்டபத் தூண்கள் உருண்டையாய் உயரமாயிருக்கும். ஒவ்வொரு அங்கத்தினரைப் பொதிந்து ஒவ்வொரு தூண் அமைந்திருக்கும். முற்றுப் பெற்ற ஆலயம் கிரேக்க நாட்டுப் பண்டைய ஆலயங்கள் போன்றிருக்கும. (படம் பக்கம் 181 பார்க்க). அதிகாரிகளைக் கவிந்து

நிற்கும் தேவர்கள் நின்ற விடத்திலிருந்தே மனக் கற்பனையால் தம் வேலைகளைச் செய்து முடிப்பார்கள். மேலுலகத் தத்துவங்களின் முறையறிவாருக்கு அவை மனத்தைக் கொண்டே வேண்டிய உருவங்களாக எளிதில் அமைக்கத் தக்கவை. அம் முறைகளில் தேர்ந்தவர்கள் இந்த நிர்மாண தேவர்கள். அவருடைய பூத கணங்கள் மாத்திரம் அங்குமிங்கும் ஓடியாடி வேலை செய்வன. நிர்மாண வேலை முடிந்ததும் அவையாவும் அவரவர் தலைமைத் தேவரை அண்டி, ஆரம்பத்திற் போல நின்று கொள்ளும். அதற்கு மேல், அருளாலய கர்ப்பக் கிரகத்தினுள், அதாவது சொக்கட்டான் தளத்தில், புதிய அங்கத்தினருக்குச் சிறப்ப முறைத் தீக்ஷைகள் செய்யப்படும். தீக்ஷை பெறுவோர் இல்லாதிருப்பின், சில அறவுரைகள் வழங்கப்பட்டு அரங்கம் நடை யடைக்கப்படும்.

பாடம் 32.

## சுதந்தரச் சிற்ப விதானம்.

### IV. தீக்ஷைகள்.

### Initiation.

சுதந்திரச் சிற்ப தீக்ஷைகள் மூன்று. முதல் தீக்ஷை செய்யப்பட்டவன் சாதகன் அல்லது வேலை பயில்வோன், (E. A.) (Entered apprentice) எனப்படுவான். இரண்டாவது தீக்ஷகன் உடன் தொழிலாளி, சம வேலைக்காரன், வேலை பயின்றவன்—(F.C) (Fellow Crafts man) என்றழைக்கப் படுவான். மூன்றாவது தீக்ஷை பெற்றவன் சிற்ப நிபுணன் (M.M) (Master Mason). இந்த மூன்று தீக்ஷைகளும் சில சபைகளில் ஒரே நாளில் நடத்தப்படுகின்றன. அது அவ்வளவு உசிதமான முறையல்ல. வேறு சில பிரிவார் இடையிடையே சில/பல மாதங்கள் விட்டு, அந்தப் புதுச் சிற்பிகளை மாதந்தோறும் நடைபெறும் கூட்டங்களில் வைத்து நன்கு படிப்பித்த பின்னரே, அடுத்த தீக்ஷை செய்து வைக்கின்றனர். ஆனால் பண்டைக் காலத்தில் ஒவ்வொரு தீக்ஷைக்கு மிடையே எவ்வேழு வருஷங்கள் விடுத்து, அவ் விடையில் அவர்களுடைய சாதனைகளையும் சிற்ப அறிவு விருத்தியையும் ஒழுக்க முன்னேற்றத்தையும் நன்கு கவனித்து, தகுதியுடையோருக்கு அதன் பின்னரே அடுத்த தீக்ஷை செய்யப்பட்டு வந்தது. ஏழாண்டு முடிவில் தகுதிக் குறைவாகக் காணப்பட்டவருக்குக் காலவரையறை பின்னும் நீட்டித்து வைக்கப்பட்டது. அவ்வளவு சாவதான முறைக்கு இது காலமல்ல; அவசரத்திற்கேற்பவே பலனும் அற்பமாகக் காணப்படுகின்றது.

### முதல் தீக்ஷை.

தீக்ஷைக்குத் தகுதி யுடையவனைத் தேர்ந்தெடுக்கப் பட்ட விண்ணப்பதாரன் கண்ணைக் கட்டி முதலாவதாக அரங்கத்தினுள்ளே கொண்டு செல்லப்படுகின்றான். உள்ளே செல்லு முன் அவனுக்கு வேறு சில தயாரிப்புகளும் செய்யப்படுகின்றன. சிற்ப விதானம் அந்தரங்க முறையாதலால், உரிய வாக்குறுதி பெறுமுன்

உள்ளே ஒன்றையும் அவன் காணக் கூடாதாகையால் அவனுடைய கண்கள் கட்டப்படும். அதற்கு வேறு அறிகுறிப் பொருளும் உண்டு; அதனை மேலே காண்க

I:—அரங்கத்தினுள்ளே முதலில் அவன் மூன்று முறை பிரதக்ஷணமாகக் கொண்டு செல்லப்படுவான். அப்போது முறையே பிருதிவி, அப்பு, அக்கினி, வாயு கணங்களுக்குத் தனித்தனியே அவனைக் கொண்டு சில பலிகள் போடப்படும். உத்தம பூத கணங்கள் இன்றைய ஆபாசக் களஞ்சிய மனிதனை வெறுத்தொதுங்குகின்றன. இந்தப் பலியின் பின்னர் அவன் அன்போடு அவர்களால் ஏற்றுக் கொள்ளப் படுகின்றான்.

II:—பின்னர் சொக்கட்டான் தளத்திலுள்ள சூக்ஷ்ம கர்ப்பக்கிரகத்தினுள்ளாக அவன் கொண்டு நிறுத்தப் படுவான். அங்கு திரண்டு பேரமுக்கமாக நிறைந்து நிற்கும் அருட் சக்திகளால் அவனுடைய நுண்ணுடம்புகள் முறுக்கேற்றப் படுகின்றன. அங்கே வாக்குறுதி வாங்கப்படுகின்றது. அப்பால் தீக்ஷை செய்யப்படுகின்றது. பின், "அவன் யாது விரும்புகின்றான்" என்று வினவப்படுகின்றான். "வேண்டுவது ஒளி" என்று அவன் விடை கூறவும் அவனுடைய கண்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. ஒளியாவது ஞான ஒளியும் ஊன ஒளியுமாம்; கண்களும் அவ்வாறே.

III:—கடைசியாக சாதகனுக்குச் சில அறிவுரைகளும் எச்சரிக்கைகளும் செய்யப்படுகின்றன.

மேலே கூறியவற்றை விளக்கமாகவோ விரிவாகவோ கூற அனுமதியில்லை. சுதந்தரச் சிற்பிகள் அனைவரும் "சுதந்தரச் சிற்பத்தின் மறை பொருள்" ("The Hidden Life in Free masonry," by Bishop C. W. Leadbeater—33.) என்ற நூலை நன்கு கற்றறிவது, அக்கிரியையைப் பூரண பலன் தரும் முறையில் இயற்றுவதற்கு அவர்களுக்கு அனுகூலமாயிருக்கும். சிற்பிகளல்லாதார் அந்நூலைக் கற்பதனால், அக்கிரியையின் பொருளைப் பொதுப்படையாக அறிவதோடு, தமது மதங்களிலுள்ள கிரியைகள் பொருளற்ற வெறும நடிப்புகளல்ல வென்ற உணர்வையும் பெறுவர்,

இனி

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்து இவ்வுலகு" என்பது

வள்ளுவர் வாக்கு. நேற்றிருந்தவன் இன்றில்லை யென்பது அதன் பொருள். ஆயினும் இந்த நொடியிலிருந்தவன் அடுத்த நொடியில் இல்லாமற் போவதும் நம்மில் பலருக்கு அனுபவமாக வுள்ளது. இவ்வாறு ஒவ்வொருவருக்கும் உறுதியாக நேர இருப்பதும், எந்த நிமிஷத்திலும் நேரக் கூடியதுமான ஆபத்திற்கு மனிதனுயுள்ளவன் தயாராயிருப்பதே அறிவுடைமை, என்று பண்டையோர் கொண்டனர். அல்லாதபோது, இறந்தவன் கண்ணைக் கட்டிக் காட்டுக்குள் விட்டது போன்று தட்டுத் தடுமாறித் திணறி விழுந்து அல்லலுறுவான், என்பது அவர்கள் அனுபவத்தால் கண்ட உண்மை. அத்துடன், உலக வாழ்க்கையை விட மரணத்திற்கு அப்புறமுள்ள வாழ்க்கை அதிகம் நீடித்ததென்பதையும் அவர்கள் கண்டறிந்திருந்தனர். ஐம்பதாண்டுகள் உலகில் வாழ்பவன், வாழ்வாங்கு வாழ்வானுயின் மரணத்தின் பின்னுள்ள வாழ்க்கையை 500 முதல் 1500 ஆண்டுகள் வரை நீட்டித்துக் கொள்ளலாமென்றும், அவ் வாழ்க்கையையும் துன்பமே யின்றி மிக இன்பகரமாக அமைத்துக் கொள்ளலா மென்றும், அந்த யோக சித்தர்கள் கண்டனர். அதனுல் மரணத்தின் பின்னுள்ள மனிதர் நிலைகளையும், அங்கு நேரக் கூடிய இடைஞ்சல்களையும், இன்னல்களையும், அவற்றைத் தடுக்கவும் நீக்கவும் வேண்டிய வழிகளையும், அங்கு இன்பமாய் வாழ்வதற்கான முறைகளையும், மக்கள் யாவரும் அறிந்திருக்க வேண்டு மென்பது அவர்களது ஆவலாயிருந்தது. இம்முறைகள் யாவும், விண்ணப்பதார் தொடக்கத்திற் செய்யும் பிரதக்ஷணங்களின் போது நடைபெறும் சில நிகழ்ச்சிகள் மூலம் சிற்பிகளுக்கு விளக்கப் படுகின்றன. பின்னுல் உதவக் கூடிய சில தேவ பூத கணங்களுக்கு அவன் அப்போது அறிமுகப் படுத்தப்படுகின்றுன்; அவர்களை அழைக்கும் சைக்கினைகள் படிப்பிக்கப் படுகின்றுன். அவர்களுக்குப் பலியிட்டு அவர்களுடைய நட்பைப் பெறுகின்றுன். அந்த குறிப்பிட்ட கணங்கள் இந்து மதத்தில் நாகர், கந்தர்வர், யக்ஷர், அந்தரர் என்றழைக்கப்படுவர். இவர்கள் யாவரும் பிதுர்

தேவர்களுக்கடங்கியவர்கள். இதுவே தீக்ஷையில் நடைபெறும் முதல் வேலை.

இரண்டாவதாக, மனிதனுடைய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் விடுதலைக்கும் அவசியமான அருட்சக்தி குண்டலினி-யென்னப்படும். அது ஒவ்வொரு மனிதனிடமும் அவனுடைய முதுகுத்தண்டின் அடியிலுள்ள மூலாதாரத்தில் ஏழு சுருள் கொண்ட பாம்புபோலச் சுருண்டு உறங்கிக் கிடக்கும். (இந்நூல் முதற் பாகம் பார்க்க) விண்ணப்பதார் அரங்கத்தினுள்ளே புகுந்தவுடன் அங்கு திரண்டு நிற்கும் அருட் பெருக்கால் அவனுடைய நுண்ணுடம்புகளில் சில மாறுதல்கள் ஏற்படு-கின்றன. அவை இக் குண்டலினியைத் தட்டி யெழுப்புவதற்கு அவ்வுடம்புகளைப் பண்படுத்துவன. பின்னர் அவன் சொக்கட்-டான் தளத்தில் கர்ப்பக் கிரகத்தினுள்ளாகக் கொண்டுநிறுத்தப்-படும்பொழுது அங்குள்ள அதிகமான அருள் அழுக்கத்தினால் அவனுடைய பிராணமய கோசமும் வேண்டிய முறையில் பண்-படுகிறது. அப்பால் தீக்ஷாகிரியை நடைபெறும்போது, குண்டலினி மேல் நோக்கிச் செல்ல வேண்டிய பாதைகளாக முதுகுத் தண்டிலுள்ள இடை, பிங்கலை, சுழுமுனை என்ற மூன்று நாடிகளில் இடநாடி திறந்து, குண்டலினியின் சந்திரகலை மேலே மூளையை நோக்கி வீறிட்டெழும். இக்கலை சாதகனுடைய காமக்-குரோத லோப மோக முதலிய கீழ்த்தர இச்சைகளை அடக்கவும், அன்பு அருள் பக்தி இரக்கம் போன்ற உயர்தர இச்சைகளைப் பெருக்கவும் அதிகந் துணை புரிகின்றது. சிற்ப முறையில் சாதக-னுடைய முதல் வேலை, இச்சைகளை அடக்குதலும் நல்வழிப் படுத்துதலுமே யாதலால், அதற்கு வேண்டிய உதவியும் இக் கிரியை மூலம் அவனுக்கு அருளப்படுகின்றது. அதுவே இட-நாடியைத் திறந்து இடகலையை மேலெழுப்புவது.

மூன்றாவதாக, இலங்குமுயிர் உடலனைத்தும் ஈசன் கோயி-லாதலால், அந்தக் கோயில் திருப்பணியே சுதந்தரச் சிற்பிகள் பொறுப்பேற்கும் வேலை. தம் ஸ்தூல உடம்பை ஒருவாறு அடக்கியாள வல்லவரே அப்பணியைச் செய்தல் இயலும். அல்லாதவர் தமோ குணத்தவராய்ச் சோம்பேறிகளா யிருப்பர்; அவர்கள் பண்டைக் காலங்களில் இம் முறையில் சேர்க்கப் படார்,

மற்றவர், இதில் முதல் தீக்ஷை பெற்றவுடனே அதுவரை சுய-நலத்திற்காகப் பாடுபட்ட இச்சைகளையெல்லாம் ஆன்ம சுதந்த-ரத்தைக் கோரி இப்போது பர நலத்திற்குத் திருப்ப வேண்டியவ-ராவர். சங்கத்திற் சேரு முன்னரே ஊனுடம்பைக் கைவசப் படுத்தியது போலவே இப்போது அவன் தன் இச்சைகளைப் பண்படுத்தும் முதல் வேலையில் ஈடுபடுகின்றான். அவன் தன்-னுடைய இச்சைகளில் கரடு முரடுகளை உளியால் அடித்தும், மூலை முக்குகளைச் சவுக்கப்படுத்தியும் மட்டந் தட்டியும், கோணல்களை உடைத்தெறிந்தும், சர சரப்புகளை மெருகு கொடுத்தும், அண்டச் சிற்பியின் ஆலயப் பணிக்கு உகந்த கருங்கல்லாகத் தன்னை அமைக்க வேண்டியவனாகின்றான். இதில் முயல்பவனுக்கு முதல் தீக்ஷையில் தட்டி யெழுப்பப்பட்ட சந்திரகலை நன்கு துணை புரியும். அவ்வித முயற்சிகளில் முனைத்து நிற்காது, மாதாந்திரச் சிற்பக் கூட்டங்களுக்கு மாத்திரம் சென்று விட்டு மற்ற நேரங்களில் உறங்கிக் கிடப்பவனுக்கு, இந்தத் திறந்த இடநாடி நீரோ-டாத வடிகால் போலவும் பழக்க மில்லாத பாட்டை போலவும் சீக்கிரம் தூர்ந்து விடும். இதுவே இன்றையச் சுதந்தரச் சிற்பிகள் பெரும்பாலோர் நிலை.

இதுவரை கூறப் பட்டவை முதல் தீக்ஷையின் பலா பலன்கள். இரண்டாவது தீக்ஷையின் போது சிற்பியினுடைய பிங்கலை நாடி திறக்கப்படும்; குண்டலினியின் சூரிய கலை மேலே-றும். இது அவனுடைய மனத்தை அடக்குவதற்கும் பயிற்று-வதற்கும் பெரிதும் துணை புரிவது. அடக்குவதென்பது மனத்தைக் காடும் மலையும் ஓட விடாமல் அதனை ஒரு முனைப்பட்ட ஏகாக்கிர சித்தம் பெறச் செய்வது. பயிற்றுவதென்பது அறு-பத்து நான்கு கலை ஞானங்களிலும் கற்றுத் தேர்ச்சி பெறுவது. அல்லாத மனம் அண்டச் சிற்பியின் ஆலயப் பணிக்கு உகந்த கல்லாகாது.

மூன்றாவது தீக்ஷையின் போது அவனுடைய சுழுமுனை நாடி திறக்கப்பட, அதன் மூலம் அக்கினிகலை மேலேறும். அப்போது தெய்வீக குண்டலினி சக்தி பூரணமாகப் பணி புரியும். அது அவனுடைய ஆன்ம வளர்ச்சிக்கும் விடுதலைக்கும் அவற்றின்

மூலம் பூரண ஆன்ம சுதந்தரத்திற்கும் உறு துணையாவது. அத்தகைய சுதந்தரச் சிற்பி வேண்டுமென்றால் பிறக்கின்றான், வேண்டாமென்றால் உடலை உகுக்கின்றான். அவனே பிறப்பு இறப்புக்களைக் கடந்த சுதந்திரவான்; அண்டச் சிற்பியின் அழிவற்றதான அருளாலயத்துள்ள அழகிய தூண். ஒவ்வொரு சுதந்தரச் சிற்பியையும் இந்த முடிவான பேரின்ப நிலையை அடையச் செய்வதே இந்த விதானத்தின் பெரு நோக்கமாகும்.

பாடம் 33.

## சுதந்தரச் சிற்ப விதானம்.

### V. நடையடைத்தல்.

### (Closing the Lodge.)

தீக்ஷைகள் செய்யப்பட யாருமில்லாத போது, நடை திறந்ததும் சிற்ப சம்பந்தமான நடைமுறைப் பாடங்களும் அறிவுக்கான விளக்கவுரைகளும் சிறிது நேரம் நடைபெறும். பின்னர் விதான முறைப்படி நடை யடைக்கப்படும். நடை யடைக்கும் ஓசை கேட்ட நொடியிலேயே தேவ கணங்களில் ஒரு சாரார் அருளாலயத்தை உலைப்பர்; வேறொரு சாரார் அருளில் ஒரு பாகத்தைக் கொண்டு உலகம் முழுவதிலுஞ் சிதறிக் கிடக்கும் சிற்பிகளில் ஒவ்வொருவருக்கும் சிறிது சிறிதாக அதனை விநியோகிப்பர். அது கோவிலில் சுண்டல் வழங்குவது போன்றிருக்கும். மூன்றாவதொரு கூட்டத்தார் எஞ்சியுள்ள அருளை அரங்கத்தைச் சுற்றிப் பரப்பி அப் பிரதேசத்தைப் புனிதப் படுத்துவர்.

இத்துடன் சுதந்தரச் சிற்ப விதானம் முடிவுறும்.

பாடம் 34.

## பாரத சமாஜ பூஜை.

இந்து மதத்தில் கோஷ்டி பூஜை என்ற கூட்டுத் தொழுகை முறை (Congregational Worship) ஏற்படவில்லை யென்பது மேலே கூறப்பட்டுள்ளது. இந்துமத ஆலயங்களில் பெருந்திரளான மக்கள் வழிபாட்டிற்காக ஒருங்கு கூடுவரேனும், அவர்களில் ஒவ்வொருவரும் தனித்தனி பிரார்த்தனைகளையும் தோத்திரங்களையும அர்ச்சனைகளையும் தேங்காய் பழம் முதலிய நிவேதனங்களையும் செய்துகொள்வார்களே யொழிய, யாவரும் ஏக காலத்தில் ஒரே பிரார்த்தனை—தோத்திரங்களை ஓதவோ, பூஜாரியோடு இடையிடையே ஈடுபட்டு நின்று மந்திரங்களைச் சொல்லவோ அங்கு ஏற்பாடில்லை. அக் குறைபாட்டை நிவிர்த்திக்கச் சமீப காலத்தில் எழுந்ததே இந்து மத பூஜையாகிய இந்த பாரத சமாஜ பூஜா விதானம்.

அகில உலக ஸ்தாபனமாகிய "திவ்ய ஞான சங்கம்" (Theosophical Society), ஒரு சர்வ சமய சமரஸ சங்கம். அதன் தலைமைக் காரியாலயம், சென்னையில் கடலோரத்தில் அடையாற்றங்கரையில் மிக அழகாக அமைந்துள்ளது. அது ஓர் உலகப் பிரசித்தி பெற்ற ஸ்தலம். அவ்விடத்தில், பல நாட்டார் வந்து தங்கி உலக சேவை செய்து கொண்டிருக்கின்றனர். அவருள், வேத விற்பன்னராகிய சில வைதிகர்கள் அங்கு நடைபெறும் கிறிஸ்தவ ஆராதனையையும், அதனைப் பற்றிய வங்கப் பணி முனிவர் சூக்ஷ்ம ஆராய்ச்சி நூல்களையும் கற்றறிந்து, அதன் பயனாக அவ் வாராதனையில் அடிக்கடி ஈடுபட்டு நற்பலன் அனுபவித்த போது, அது போன்ற வழிபாடொன்றைத் தம் மதத்திலும் அமைக்க ஆவல் கொண்டனர். இப் பூஜை முறைகளின் அடிப்படை யமைப்பை அவர்கள் நன்கறிந்திருந்த மேதையராகையால் இந்து மதத்தில் வைதிக சம்ஸ்காரங்களாகிய உபநயனம் முதலிய கிரியைகளிலும் வேதங்களிலு மிருந்து பொருத்தமான மந்திரங்களைப் பொறுக்கியெடுத்து, பாரத சமாஜ பூஜா விதானம் என்ற ஒன்றை அமைத்தனர். அந்த விதான நூல், நாகரி எழுத்திலும் கிரந்த எழுத்திலும் தமிழ் மொழி

பெயர்ப்பிலும் வங்கப் பணி முனிவர் ஆராய்ச்சிக் குறிப்போடு கூடிய ஆங்கில மொழி பெயர்ப்பிலும், சென்னையிலுள்ள அடை-யாற்றுப் பிரசுராலயத்தில் (T. P. H. Adyar) விற்கப்படுகின்றது. அந்நூலை ஆஸ்திக இந்துக்கள் அறிந்திருக்கவேண்டியது அவர்கள் கடமைகளில் ஒன்றாகும்.

இந்தப் பாரத சமாஜ பூஜையின் அங்கங்கள் பத்து:—(1.) சங்கல்பம், (2) திக்பந்தனம், (3) தூபம், (4) அக்னி தேவர்-கள் ஆவாகனம், (5) ஆபோ தேவர்கள் ஆவாகனம், (6) தேஜோ தேவர்கள் ஆவாகனம், (7) தியானம்-புஷ்பாஞ்சலி, (8) நைவேத்-யம், (9) திக் விமோசனம், (10) ஆசீர்வாதம், என்பன அவை. இதில் அத்வர்யு (தலைவர்) என்னப் பட்டவர் வைதிக சம்ஸ்கார-மாகிய உபநயனம் பெற்ற எந்தப் பிராமணரும் ஆகலாம். ஆகம-முறைப் பூஜாரிகளிற் போல தனிப்பட்ட ஆசாரியாபிஷேகம் அவருக்கின்மையால், அவரைப் புரோகித ரென்றழைப்பது பொருத்த முடையது. இந்த ஆலயத்துள் விக்கிரகங்கள் எவை-யும் கிடையா. மூலஸ்தானத்தில் ஒரு நெய்தீபம் மாத்திரம் இறைவனுக்கு அறிகுறியாக இராப்பகல் வாடாது எரிந்து கொண்டிருக்கும். ஆதலால் இதனை ஜோதிராலயமென்றும் அழைப்பர். இப் பூஜை மந்திரங்கள் நமக்கு அன்னியமானவை-யல்ல. அதனால் அவற்றைத் தனித் தனியாகக் கூறவோ விளக்-கவோ தேவையில்லை, இடமு மில்லை. விருப்பமுள்ளவர்கள் சொற்ப விலையுள்ள மூல நூலை வாங்கிப் பார்த்துக் கொள்ளலாம். இது முந்திய இரு முறைகளையும் போல அவ்வளவு நுணுக்கமாக ஆராயப்பட வில்லை. அதனால் வங்கப்பணி முனிவர் ஒரு சிலவே தந்துள்ள உட்பொருட் குறிப்புக்கள் மாத்திரம் கீழே தொகுக்-கப் படுகின்றன:—

## போது.

I:—இப்போதுள்ள உலகப் பெரு மதங்களுள், சைவ சமயம், யூத மதம், முகம்மதிய மார்க்கம் மூன்றும் சிவாம்சத்தைக் கொண்டாடுவன. ஆதலால் அவற்றின் மூலம் ஆண்மை, வீரியம், விடா முயற்சி, மன உறுதி, துறவு போன்ற ஆண் குணங்களை வளர்க்கும் அருட் சக்திகளே மிகக் கூடுதலாகப் பெறப்படு-

கின்றன. இந்த பாரத சமாஜப் பூஜையில், இறைவனுடைய பிரம்ம விஷ்ணு சிவாம்சங்களாகிய மூவரும் அவரவர்க்குரிய வேத மந்திரங்களால் துதிக்கப்படுகின்றனரேனும், இங்கு நிர்மாணிக்கப்படும் அருளாலயத்தில் மேற்படி சிவாம்ச குண நிறங்களே மிக அதிகமாகக் காணப்படுகின்றன.

II:—கிறிஸ்தவ மாபெரும் அருளாலயத்தைப் போலல்லாமல், இங்கு அமையும் சூக்ஷ்ம ஆலய நிர்மாணம், ஸ்தூல ஆலயக் கட்டிடத்தை விட ஒரு சிறிதே பெரிதாகக் காணப்படுகின்றது. ஆனால் சூக்ஷ்மக் கோபுரமோ, ஸ்தூல விமானத்தை விட மிக மிகப் பெரிதாக அமைகின்றது. (படம் 192-ம் பக்கம் பார்க்க—கருப்புக்கோடு விமானம், கலர்க்கோடு சூக்ஷ்ம கோபுரம்.)

III:—இப் பூசையில் அடிக்கடி ஓதப்படும் காயத்ரி மந்திரமே இதன் முக்கிய அம்சமாகக் காணப்படுகின்றது.

இவை அவர் பொதுப் படக் கூறியவை. இனிப் பூஜையின் பத்து அங்கங்களையும் பற்றி அவர் தனித் தனியாகக் கூறியுள்ளன வருமாறு:—

(1) சங்கல்பம்:—இது செய்யும் போது, ஒவ்வொருவரும் சிறிது நீரை உள்ளங்கையில் ஏந்திக் கொண்டு மந்திரங்களை ஓதி உட்கொள்ளு கின்றனர். இது ஆத்ம சுத்திக்காகச் செய்யப்படுகின்றது, (ஆசமனம்). கிறிஸ்தவ ஆராதனையில் முதன் முதலாகச் செய்யப்படும் பாவ விமோசனக் கிரியைகள் (Asperges—Absolution) போன்றது. ஆனால் அங்கு பெறப்படும் மேலான பலன் எதுவும் இங்கு பெறப்பட வில்லை. கிறிஸ்தவ சாமியார் ஆசாரியராக அபிஷேகஞ் செய்யப்படும் போது, பகவான் கிறிஸ்து நாதரோடு அவர் சூக்ஷ்மமாக இணைக்கப்படுகின்றனர். அதனால் அவர் தீர்த்தத்தை அபிமந்திரிக்கும்போதும் அடியார்களை ஆசீர்வதிக்கும் போதும் கிறிஸ்து நாதருடைய அருள்வலி அவர் கரங்களின் வழியாக இறங்கி, இறை சங்கற்பத்திற்கு மாறான, அதாவது அறமல்லாத மறச்செயல்களால் சிக்கல் பட்டுக் கிடக்கும் மக்களுடைய நுண்ணுடம்புகளையெல்லாம் சிக்கெடுத்துச் சீர்படுத்தி, அவற்றை இறை வழிபாட்டிற்குத் தகுதி யுடையன வாக்குகின்றது. ஆனால் இங்கு



பாரத சமாஜப் பூஜா அருளாலயம்

ஏற்படும் பலன் அவரவர் மன வுறுதியைப் பொருத்ததா யிருக்கின்றது. அந்த மனோபாவனைக்குத் தக்கபடியே அவருக்கு ஏகாக்கிர சித்தமும் மனச் சாந்தியும் ஒரு சிறிது ஏற்படுகின்றன வென்னலாம்.

பின்னர் புரோகிதர் மணியைக் குலுக்கி மந்திரம் ஓதும் போது, ஸ்தான சுத்தி செய்யப் படுகின்றது. சில தேவ, பூத கணங்கள் (Angels and Nature Spirits) தோன்றுகின்றன.

(2) திக்பந்தனம்:—புரோகிதர் "ஓம் பூர் புவஸ் ஸுவ," என்று மாத்திரம் ஓதுகின்றனரேனும், அவர் கோவிலைச் சுற்றித் திரிலோகக் கோட்டை யொன்று அமைவதாக மனத்தால் பாவிக்க வேண்டும். அப்போது பூலோக தத்துவங்களில் ஆகாய தத்துவ சம்பந்தமான ஒரு குறடும் தளமும், அதைச் சுற்றிக் கைபிடிச் சுவர் போன்ற சுற்று மதிலும், ஸ்தூலக் கோவிற் கட்டிடத்தைச் சுற்றி அமைகின்றது.

(3) தூபம்:—இங்கு அஷ்ட திக்குப் பாலகர்களும் அவர்கள் கணங்களும் போற்றப் படுகின்றனர். தூபம் மேலெழும் போது, தேவ பூத கணங்களால் அருளாலயத் தூண்கள் எழுப்பப்படுகின்றன. இவை திரிலோகத் தத்துவங்களால் ஆக்கப் பட்டபோதிலும், பெரும் பாலும் பூலோக ஆகாய தத்துவத்தாலேயே (Etheric matter) கட்டப் படுகின்றன. தூப முடிவில் காயத்ரி ஓதப்படுகின்றது.

"ஓம், அந்த தெய்வீக ஸவிதா புருஷன் புகழ் மிக்க தேஜஸைத் தியானிக்கின்றோம். அவர் எங்கள் தியானத்தைத் தூண்டுவாராக. ஓம் அப்பு தேயு பிருதிவி அமிர்தம் ப்ரம்மம், பூர் புவஸ்ஸுவர் ஓம்." (அல்லது, ஓம் அந்த ஸாவித்ரி எங்கள் தெய்வத்தின் திவ்ய தேஜஸைத் தியானிக்கின்றோம், அவர் எங்கள் தியானத்தைத் தூண்டுவராக.) என்பது காயத்திரியின் தமிழ்ப் பெயர்ப்பு.

ஸவிதா என்பது சூரியன்; ஸவிதா புருஷர், சூரியனை இடங்கொண்ட இறைவன்; ஸாவித்ரி, இறை சக்தி.

இம் மந்திரத்தைப் பொருளறிந்து சந்தத்தோடு அனைவரும் ஒன்று கூடி ஓதும்போது, சூரியபகவா னிடமிருந்து பல-வகைப் பட்ட வானவில் நிறங்களில், கோடி சூரியப் பிரகாசமான அருட்கதிரைப் பிழம்பு அருளாலயத்துள் இறங்கி, அடியார்-களுடைய இதயச் சக்கரத்துட் புகுந்து அதனை ஊக்கப்படுத்தி, அவரைப் பக்திப் பரவசமாக்கி அவர்கள் நுண்ணுடம்புகளைப் பூரிப்பித்து, ஆலயத்தையும் நிரப்புகின்றது. (இம் மந்திரத்தின் சூக்ஷ்ம பலன்களை மூல நூலிற் காண்க. அங்கு அது படத்-தோடு மிக விரிவாக விளக்கப் பட்டிருக்கிறது. காயத்ரி ஓதும் ஒவ்வொருவனும் அதைக் கற்றறிய வேண்டுவது இன்றி யமை-யாதது. அதை அறியாததினால் அம் மந்திரத்தின் முழுப் பலனும் இன்று அடையப் படாமல் வீணாகின்றது.)

(4) அக்கினி தேவர்கள் அழைப்பு:—இங்கு ஒரு தட்டத்தில் விபூதியின் மேல் கர்ப்பூரம் வைத்து ஏற்றி ஆராதிக்கப் படுகிறது. யாகாக்கினி, தேவலோக வாசிகளுக்கு வாய் என்னப்படுகிறது. இந்த அழைப்பின் போது அருளாலயச் சுவர்கள் தட்டட்டி வரை எழுப்பப் படுகின்றன தேவலோக மென்னப்படும் சுவர்லோகத் தத்துவங்களாலேயே அந்த நிர்மாணத்தின் பெரும் பாகம் ஆக்கப்படுகின்றது. (இதனாலேயே சுவர்லோகம் தேயு தத்துவ-மாகும்போலும்.) பின்னர் விபூதி யாவருக்கும் வழங்கப் படுகின்-றது. காயத்ரி, கோஷ்டியாக மறுமுறை ஓதப்படுகின்றது; முன் சொன்ன அருட் பொழிவும் மறுமுறை நேரிடுகின்றது.

(5) ஆபோ தேவர்கள் அழைப்பு:—ஆபோ தேவர்கள், ஜல தேவர்கள் என்ற வருண கணங்களாவர். இவர்களின் அழைப்பு முடிவில் காயத்ரி மந்திரம் மூன்றும் முறை ஓதப் படுகின்றது. இப்போது தேவர்களால் அருளாலயம் தட்டட்டி யிடப்பட்டு, கோபுரத்திற்கு அடிப்படையும் அமைக்கப் படுகின்றது. அருட்-பொழிவும் இடைவிடாது நடந்து கொண்டே யிருக்கிறது. மந்திரங்கள் பக்தியை எழுப்பவும், பக்தி இறைவனை நாடவும் தேவ கணங்களை ஊக்கப் படுத்தவும், அவற்றின் மூலம் அருட்-பெருக்கு அதிகரிக்கவுஞ் செய்கின்றன. இந்த அழைப்பின் போது சூக்ஷ்ம ஆலயத்தில் அதிகம் நடைபெறுவது புவர்லோகப் பொருள்களாலாகிய நிர்மாண வேலையாம். (சப்த லோகங்களில்

புவர்லோகம் இந்து மதத்தின் அப்புதத்துவம் என்பது அறியத் தக்கது.)

(6) தேஜோ தேவாகள் அழைப்பு :—இங்கு புரோகிதர் ஒரு திரியை எடுத்து வாடா விளக்கில் பொருத்தி ஏந்திப் பிடித்துக் கொண்டு சில மந்திரங்களை ஓதுவர். அக் கிரியை, உயிர்கள் யாவும் இறைவனுகிய ஒரே பெருஞ்சோதியி னின்றும் வெளிவரும் சிறு பொறிகளே என்பதை அறிகுறியாகக் காட்டுவது. இந்த ஆராதனையின்போது அருளாலய நிர்மாணம் பூரணமாகின்றது. கோபுரம் முடிவடைகின்றது. அழைப்பின் முடிவில் புரோகிதர் கைத்திரியை வாடா விளக்கோடு சேர்க்கின்றனர்; அது உயிர்கள் ஒடுவில் இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலையை உணர்த்தும் பாவனை. பின் காயத்ரி திரும்பவும் முன் போல ஓதப்படுகிறது. அதே சமயம் வாடா விளக்கின் ஜோதியிலிருந்து சூக்ஷமமான ஒரு மின்னற் கதிர் வெளிப்பட்டு அடியார் ஒவ்வொருவருடைய இதயத்தினுள்ளும் புகுந்து அவரை ஊக்கப் படுத்துவது நெற்றிக்-கண்ணுக்குக் காணப்படுகின்றது.

(7) தியானம் —கர்ப்பூர ஆரத்தி —புஷ்பாஞ்சலி :—இதுவே ஆராதனையின் உச்சநிலை, உயிர்ப்பாகம். இதுவரை நடந்தவை யாவும் இதற்கான தயாரிப்பே. இப்போது பூஜாரி கர்ப்பூரத்தை ஏற்றி மூலஸ்தானத்துள்ள தூண்டா மணி விளக்கை ஆராதிக்-கின்றனர். யாவரும் புருஷ சூக்தத்திலிருந்து சில சுலோகங்களை பக்திப் பரவசத்துடன் ஓதுகின்றனர். அப்போது நடுக் கோபுரம் முன்னிலும் பெரிதாக உயர்கிறது. தட்டட்டியும் திண்ணம் பெற்றுக் கெட்டிப் படுகிறது. பின்னர், ஸ்ரீ ருத்ரத்திலுள்ள

"ஓம் பகவானே விசுவேஸ்வரா, மகாதேவா, முக்கண்ணு, திரிபுராந்தகா, திரிகாக்கினி காலா, காலாக்னிருத்ரா, நீலகண்டா, மிருத்யுஞ்சயா, சர்வேஸ்வரா, சதாசிவா, ஸ்ரீமன் மகா தேவாய நம:" என்ற தோத்திர சுலோகம் மிகவும் உருக்கத்துடன் கோஷ்டியாக ஓதப்படுகிறது. இந்த ஸ்தோத்திரம் தொடங்கியதும், நீல கண்டத்தையுடைய மூர்த்தி யொருவர் தேவி-யோடும் கர்ப்பக் கிரகத்தினுள், தீப மிருக்கும் பீடத்தின் மேலாக, யோகாசனத்தில் பிரசன்னமாகின்றனர். இது நெற்றிக்கண்

கண்ட காட்சி. இந் நீலகண்டர்கள் தேவியரின்றித் தனியாக ஒரு போதும் பிரசன்ன மாவதில்லையாம். (இதை யறிந்தே நம் முன்னோர்கள், ஆலயங்களில் சிவ பெருமானுக்கு உற்சவ விக்கிரகங்கள் வகுக்கும் பொழுது, தனிப்பட்ட தேவி யொருவரையும் பிரியாவிடை அல்லது பாகம் பிரியாள் என்ற ஒரு ஒட்டுத் தேவியையும் செய்து வைத்திருக்கின்றனர் போலும். இதனை எல்லாச் சிவாலயங்களிலும் காணலாகும்.)

இந்த சிவ ஸ்தோத்திரம் முடிந்ததும் கற்பூரம் யாவருக்கும் நீட்டப் படுகிறது. அனைவரும் கையால் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்கின்றனர். ஒவ்வொருவரும் தீபத்தைத் தொடும்போது, அங்கு நின்றும் ஒரு அருட்சோதிக் கதிரானது அவருட் புகுந்து, அடுதத கிரியையின் அருளை ஏற்பதற்கான பண்பாட்டை அவருடைய சூக்ஷ்ம உடம்புகளுக்குக் கொடுக்கின்றது. இதனை அக்கினி தரும் ஆசீர்வாத மென்னலாம.

பின்னர் ஒவ்வொருவருக்கும் சில புஷ்பங்கள் வழங்கப்படுகின்றன. யாவரும் பூவுடன் கூப்பிய கையராய் மேலும் தோத்திரங்களை ஓதுகின்றனர். கோபுரத்தின் உச்சியில் அழகிய ஸ்தூபியும் வேறு சில அலங்காரங்களும் இப்போது அமைகின்றன. அருளாலய நிர்மாணம் அத்துடன் பூர்த்தி யாகின்றது. பிரசன்ன தேவருடைய ஆசி அநுக்கிரகமும், அடியார்களின் பக்தியும் ஆர்வமும், அவர்கள் பொருளறிந்து ஓதும் ஸ்தோத்திரங்களும், அவற்றின் பயனாக மேலுலங்களிலிருந்து அமோகமாக இறங்கும் அருட் பொழிவும் ஆலயத்தை நிரப்புகின்றன. தோத்திரம் முடிந்ததும், ஒவ்வொருவரும் மூலஸ்தான தீபத்தின் முன் சென்று, பூவைப் பாதத்திலிட்டு, நின்ற வண்ணமே தலை வணங்கித் தொழுது அவரவரிடத்திற்குத் திரும்புகின்றனர். அவர்கள் அவ்வாறு புஷ்பாஞ்சலி செய்யும் போது தீபத்தி னின்றும் ஒரு அருட் சுடர் அவருட் பாய்ந்து, அவருக்கு மனத் தூய்மையையும், திண்மையையும், துறவையும், ஆத்ம சக்தியையும் அளிக்கின்றது. அதனால் அவருக்கு வீரியம், வீரம், ஊக்கம் முதலிய ஆண்மைக் குணங்கள் விருத்தி யடைகின்றன வென்னலாம்.

(7) நைவேத்யம் :—அடுத்ததாக நடைபெறுவது நைவேத்யம். இது தூய தீர்த்தமே. இங்கு அன்ன சூக்தம் ஜெபிக்கப்படும்.

நிவேதிக்கப்பட்ட தீர்த்தம் யாவருக்கும் வழங்கப் படுகிறது. அதை அவர்கள் ஆசமனம் பண்ணும் போது, மேலே சொன்ன ஆண்மைக் குணங்களுக்கு அனுசரணையான, அவற்றைப் பூர்த்தி பண்ணுவதான (Complementary) மன அமைதி, சாந்தி, அன்பு, பொறுமை முதலிய பெண்மைக் குணங்கள் அவரிடம் ஊக்கப்படுத்தப்படுகின்றன.

கடைசியாக திக் விமோசனமும் ஆசீர்வாதமும் பிரம்மார்ப்பணமும் செய்யப் படுகின்றன. உடனே சூக்ஷ்ம அருளாலயம் உலைந்து அங்கு திரண்டிருந்த அருளானது நாற்புறமும் பரவிச் சுற்றியுள்ள நாட்டை ஆசீர்வதிக்கின்றது. பூஜையும் முடிவடைகின்றது. "இந்திய நாட்டின் ஒற்றுமைக்கும் சமரசத்திற்கும் அநுகூலமான அருட் பொழிவுகள் இவ் வாராதனையால் ஏற்படுகிறபடியால் இது பாரத நாடு முழுவதும் பரவுவதாக", என்று ஆசி கூறி, வங்கப்பணி முனிவர் தம் நெற்றிக் கண் குறிப்புக்களை முடிக்கின்றனர்.

பாடம் 35.

# பாரத சமாஜ பூஜை.

## இதர குறிப்புகள்.

இந்த பாரத சமாஜ பூஜையானது இதற்கு முன் விளக்கப்பட்ட இரு ஆராதனை முறைகளையும் போல அவ்வளவு நுணுக்கமாக வங்கப்பணி முனிவரால் ஆராயப்படவில்லை. அவை இரண்டும் பல நாடுகளிலும் பல காலங்களிலும் பல நேரங்களிலும் பல பேர்களைக் கொண்டும் இயற்றப் பட்டுப் பல ஆண்டுகளாகவும ஆராயப்பட்டு, மிக மிக நுணுக்கமான அந்த ஆராய்ச்சிகள் பல பெரு நூல்களாக வெளியிடப் பட்டுள்ளன. ஆனால் வங்கப்பணி முனிவர் இப் பூஜையை மூன்று முறைகளே ஆராய்ந்தனர். ஒரு முறை வைதிகப் பிராமணர் ஒருவரைப் புரோகிதராகக் கொண்டு பூஜை நடத்தப் பட்டது. பின்னொரு முறை பிராமணி அம்மையாரொருவரால் நடத்தப் பட்டது. அந்த இரு தடவைகளிலும் மேலே விளக்கப் பட்டுள்ள பலன்கள் யாவும் பெறப்பட்டன. மூன்றாவதாக அது, உத்தம ஒழுக்கமும் உயரிய கல்வியும் வடமொழி விற்பன்னமு முள்ள பிராமண ரல்லாதார் ஒருவரால் நடத்தப் பட்டது. அப்போதைய நிகழ்ச்சி வங்கப்பணி முனிவரையே அதிசயிக்கச் செய்ததாம். ஆயினும் அது தொடர்ந்து ஆராயப் படாததால் இப் பூஜையின் ஆராய்ச்சி ஓரளவு மொட்டைக் கோபுரமாக நின்று விட்ட தென்னலாம். ஆராயப்பட்ட வரை இங்கு கூறப்பட்டுள்ளவை யாவும் உண்மையே. மேல் எழும் ஐயப் பாட்டுகளுக்குத் தக்க விடை தருவார் இப்போதில்லை.

இது வரை விளக்கப்பட்டுள்ள ஆராதனைகள் மூன்றிலுமிருந்து, ஆராதனையின் இன்றியமையாத நிகழ்ச்சிகள் அருளாலய நிர்மாணமும் மூர்த்திப் பிரசன்னமு மென்பது தெளிவாகும். அவை நிகழாத விடத்து ஆராதனை குறைபாடுடையதாகவும் அதன் நோக்கம் முற்றுப் பெறாததாகவும் உணரப்படும். பிராமணரல்லாதார் இந்த வைதிக ஆராதனையை நடத்தியபோது, அவர் மிகுந்த பக்தியுடனும் மந்திரப் பொருளுணர்ச்சியுடனும் அதை நடத்திய போதிலும், அங்கு சூக்ஷ்ம ஆலய நிர்மாணமோ, அதை நிர்மாணிக்கும் தேவ கணங்களின் வரவோ, அல்லது நீலகண்ட மூர்த்தியின் பிரசன்னமோ எதுவும் ஏற்படவில்லை யாம். வேறே

பலன்கள் பல பெறப் பட்டனவாம், வேறு கணங்கள் தோன்றின-வாம். ஆனால் பரார்த்த பூஜை யாகும் ஆராதனை நோக்கம் ஒன்றும் அங்கு நடைபெறவில்லை. மற்றைப்படி நேரிட்ட பலன்கள் பக்தி-யுள்ள பஜனை மடங்களிலும் ஏற்படுவனவேயாம்.

வங்கப்பணி முனிவர் இதைக் கண்டு அதிசயித்தனர். இந்த வேறு பாட்டுக்குக் காரணம் யாதா யிருக்குமென்று தன்னைத் தானே வினவிக் கொண்டனர். பிராமணருக்கும் இந்தத் தனிப்-பட்ட தேவ கணங்களுக்கும் யாதானும் ஒப்பந்தம் ஏற்பட்டி-ருக்குமா—இல்லையேல் ஒரே மந்திரத்தை ஒரு கூட்டத்தார் ஓதும்-போது அவர்கள் வருவதற்கும் வேறொருவர் ஓதும் போது அவர்கள் கவனியாதிருப்பதற்கும் காரணம் என்ன? ஒப்பந்தம் எத்தகையது? யார் செய்திருப்பர்? பிராமணர்கள் வேறு இரத்தக் கலப்பே யில்லாத ஒரே ஜாதியரா? அது இருக்க முடியாதே,—அப்படியானால் உண்மைப பிராமணர் யாவர்? பிராமணருள்ளும் யாவருக்கும் இதே பலன் இந்த ஆராதனை கொடுக்குமா, அல்லது அங்கும் வேறுபாடுகள் காணப்படுமா? இவையும் இன்னன பிற கேள்விகளும் அவர் மனதில் உதித்தன-வாம். ஆனால் அவை மேற்கொண்டு ஆராயப்பட வில்லை.

இந்த வைதிக முறையை யொட்டி அது சம்பந்தமான பிரம்ம காயத்ரி ஒருவாறு ஆராயப்பட்டது. அது வட மொழியிலும் ஆங்கில மொழி பெயர்ப்பிலும் ஓதப்பட்டது. பிராமணராலும் பிராமண ரல்லாதாராலும் பௌத்தமதக்காரர் ஒருவராலும் ஓதப்பட்டது. அப்போது யாவரிடத்தும் அதே பலன் பெறப்-பட்டதும் தெளியப்பட்டது. அதனால் பிரம்ம காயத்ரிக்கு ஜாதி வேறுபாடில்லை, பாஷை வேறுபாடில்லையென்று எண்ண வேண்டி-யிருக்கிறது. முழு விபரங்களை மூல நூலிற் காண்க.

இனி, இந்த நெற்றிக்கண் ஆராய்ச்சிகள் மூன்றிலுமிருந்து நமது இந்து மத ஆராதனைகளில் அனுமானமாகப் பெறக் கூடியவற்றை நோக்குவோமாக. கிரியைகளில் அதிகமான பற்றுடையவர்கள் இந்துக்கள். உண்மையை யாவர் கூறினும் ஏற்றுக் கொள்ளும் திறந்த மனப்பான்மை யுடையவர்களும் அவர்கள். ஆயினும் அவர்களுடைய கிரியா முறைகளை நேரடியாக ஆராயும் நெற்றிக் கண்ணர் இதுவரை தோன்றாதது நமது கலி காலக் கொடுமை போலும்.

பாடம் 36.

## சிவாலயப் பரார்த்த பூஜை.

### முன்னுரை.

இந்துமதக் கிரியைகள் பொதுவாக இரு வகைப்படும்: வைதிக முறை, ஆகம முறையென. இவை இருபெரும் வழிகளாகக் கூறப்படினும், இரண்டும் ஊடும் பாவும்போல ஒன்றையொன்று பின்னியே நிற்பன. ஆயினும் சில சில சிறப்பு விதிகள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக அமைந்துள்ளன வாகையால் அவை இரண்டு முறைகளே யாம். அவற்றுள் வேத முறை பொது எனப்படும். உபநயனம் பெற்ற பிராமணன் எவனும் அதனை இயற்றுதற் குரியவன். அதனால் அங்கு பூசாரி என்ற தனிப்பட்ட வகுப்பார் இலர். ஆகம முறையோ ஒரு சில வகுப்பாருக்கே உரியதாய், அவருள்ளும் தீக்ஷா சமஸ்காரங்களும் ஆசாரியமும் பெற்ற அருகதை யுடையோரால் மாத்திரமே இயற்றத்தக்கதாயுள்ளது. அதனால் ஆகம முறை சிறப்பு முறை யென்று அழைக்கப் படுகின்றது.

தமிழ் நாட்டிலுள்ள ஆலயங்களில் பெரும்பாலன ஆகம முறைகளில் அமைக்கப்பட்டுள்ளவை. அதாவது அங்கு பிரதிஷ்டைகள், பூஜைகள், தரிசன விதிகள், திருவிழாக்கள் யாவும் ஆகம விதிப்படி நடைபெறுவனவாம. சைவ ஆகமங்கள் காமிகம் முதலாக 28 மூலாகமங்களும், அவற்றின் பேதங்களான 207 உபாகமங்களுமாம். வைஷ்ணவ ஆகமங்கள் வைகானசம், பாஞ்சராத்திரம் என இரு பெரும் வகையின. ஆகமங்கள் இவ்வாறு பலவாயினும் அவற்றுள் உயிர்ப் பாகங்கள் அடிப்படையில் வேறுபாடின்றியே இருக்கும்; உடற் பாகங்களில் மாத்திரம் சில சில வேறுபாடுகள் காணக் கிடக்கும். அது, விமானம், மோட்டார், ரயில் எஞ்சின் ஆகிய யந்திர வகைகளுள், ஒவ்வொன்றிலும் பல பல மாதிரிகள் நடமாடினும், அவை யாவற்றுள்ளும் உயிர்ப்பாகங்கள் ஒரே அடிப்படையை உடையனவாகவும், மற்றவைகள் பெரிதும் வேறுபட்டும் இருப்பன போலாம்,

இந்த ஆகமங்களும் மிகப் பரந்தவை. சைவ மூல ஆகமங்கள் இருபத்தெட்டுமே தொண்ணூற்றொன்பது கோடியே முப்பத்து மூன்று லக்ஷத்து நாற்பத்தி நாலாயிரம் சுலோகங்களை யுடையன. உபாகமங்கள் 207 வேறே யுள்ளன. இவ்வாறு பரந்து விரிந்த நூல்களைக் கற்பவர் சுருங்கவே, சில ஆசாரிய புருஷர்கள் அவற்றைச் சுருக்கியும் விளக்கியும் தொகுத்தும் பத்ததிகள் (Compendiums and Made Easies) என்ற பேரால் சிறு சிறு நூல்கள் இயற்றியுள்ளனர். சிவாகமப் பத்ததிக்காரர் பதினெண்மர். அவருள் ஈசான சிவாசாரியாரும் அகோர சிவாசாரியாரும் இயற்றியுள்ள பத்ததிகளே இப்போது பெரிதும் பழக்கத்திலுள்ளன. அவற்றுள் இங்கு மேற்கோளாகக் காட்டப்படுவது அகோர சிவாசாரியார் பத்ததியில் "பரார்த்த பூஜா விதி" என்னும் பாகம். வடமொழியிலுள்ள இந்நூலை, தேவகோட்டைச் சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தார் தமிழில் அழகாக மொழி பெயர்த்து அச்சிட்டுச் சொற்ப விலைக்கு விற்பது, அவர்களுக்குப் புண்ணியமும், புகழுந் தரத்தக்க சிவகைங்கரிய மாகும். இத் தமிழ்நூல் எல்லாச் சிவாலயங்களிலும் கட்டாயமாக இருக்க வேண்டிய நூல்களில் ஒன்று; ஆலய நிர்வாகிகள் யாவரும் அறிந்திருக்க வேண்டிய நூல்களில் ஒன்று; ஆலய வழிபாட்டில் நம்பிக்கையும் பற்றும் உடைய ஒவ்வொரு தமிழ் மகனும் கற்றறிய வேண்டிய நூல்களில் ஒன்று. அதற்குரிய வசதிகள் இருந்தும், அங்ஙனம் வழக்கில்லாதது கண்டு மனம் பெரிதும் வருந்துகின்றது. ஆலயப் பூஜைகள் இன்று சரிவர நடைபெறுமைக்கு ஒரு முக்கிய காரணம், பூஜை முறை பற்றித் தமிழ் மக்களிடம் இன்று பரவியிருக்கும் நள்ளிருள் மூட்டம்போன்ற அறியாமையே.

ஆகமங்களில் ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகைப் பூஜைகள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் ஆன்மார்த்த பூஜை தனிப்பட்ட சம்ஸ்காரங்களைச் சேர்ந்தது, அவரவர் நன்மைக்குச் செய்துகொள்வது. பரார்த்த பூஜை பிரதிஷ்டிக்கப்பட்ட ஆலயங்களில் உலக க்ஷேமத்தின் பொருட்டுச் செய்யப்படுவது. அதுவே இங்கு ஆராயப்படுகின்ற முறை. ஆயினும் இரு முறைகளும் பெரும்பாலும் ஒத்திருப்பனவே. முன்னதை அறிந்தவர் பின்னதையும் எளிதில் அறிவர். ஆசாரியர், பட்டர், குருக்கள்

முதலியோர் ஆன்மார்த்த பூஜை அன்றாடம் செய்தே தீரவேண்டும். பரார்த்த பூஜையோ ஆலய முறையுள்ளவர் அம் முறைகாலத்து மாத்திரம் இயற்றுவதாகும். ஆனால் இன்று எத்தனை ஆசாரியர்கள் ஆன்மார்த்த பூஜை இயற்றுகின்றனர்? இயற்ற அறிந்தவர் தாம் எத்தனை பேர்? அதிகாரிகள் கணக்கெடுத்துப் பார்ப்பார்களாக. ஆன்மார்த்த பூஜை செய்ய அறியாதவர் பரார்த்த பூஜையை முறைப்படி செய்யார், செய்யவும் அறியார். பூஜையின் உயிர்ப்பாகங்கள் ஆன்மார்த்த பூஜை மூலம் அனுபவ உணர்ச்சியாக அறியப்பட வேண்டுவன, நெற்றிக்கண் திறக்காத பேர்களுக்கு.

பாடம் 37.

## சிவாலயப் பரார்த்த பூஜை.

### ஒருகாலப் பூஜை.

பரார்த்த பூஜா விதிகள் யாவும் அறிகுறியாகவும் அருள் நெறியாகவும் பொருள் கொடுப்பன. அவற்றுள் அருள் நெறியை விளக்க வந்த இந்நூல் வேறு முறைகளை விளக்க இடந்தராமை-யோடு, விரிவான செய்திகளைக்கூற இதில் இடமும் போதாதாகும். பொதுவாக அங்கு, காலையில் பள்ளியறைத் திறப்பு முதல் இரவு சயனலயப் பூஜைவரை நடைபெறுவன யாவும், இறைவனுடைய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில் முறைகளை விளக்குவனவாம். காலையில் பள்ளியறை திறப்பு சிவமும் சக்தியும் பிரிந்து தொழிற்படுவதாலுண்டாகும் தோற்றத்தையும், இரவு பள்ளியறை மூடுதல் சக்தியானது சிவத்-தில் ஒடுங்கும்போது ஏற்படும் லயத்தையும் குறிப்பிடுவன. ஆறு-காலப்பூஜைகள் இறைவனுடைய விகாசமுறை யென்ற பரிணாம முறைத் திட்டத்தை விளக்குவன. இந்த அறிகுறிப் பொருளும், இந்நூலின் முதற் பாகத்தில் கூறப்பட்டுள்ள அணுமுதல் அண்டம்வரையுள்ள அனைவற்றிற்குமே பொருந்தும். பூஜை முறைகளையும், அவற்றில் உபயோகிக்கப்படும் ஆதார சக்தி, ஆசனம், மூர்த்தி ஆவாகனம், ஆவரண மூர்த்திகள், இவர்களின் மந்திரங்கள் தியானங்கள், வேறு ஆயுதங்கள் முதலிய விளக்கங்கள், மற்றும் தத்துவங்கள் கலாதிகளாகிய அத்துவா மந்திரங்கள், அனைவற்றையும் கற்று நோக்குவோருக்கு ஏகமாய் நின்ற பரிபூரணம் ஒன்று, முதலில் இச்சா ஞானக் கிரியா-சக்திகளாகவும், பின் அகார உகார மகார நாத விந்துக்களாகவும், பின் பிரம்மா விஷ்ணு ருத்திரன் மகேஸ்வரன் சதாசிவ மூர்த்தி-களாகவும், அவர்கள் மூலம் சிருஷ்டி ஸ்திதி சம்மாரம் திரோபவம் அநுக்கிரகம் ஆகிய ஐந்தொழில்களாகவும், பரிணமித்து நடை-பெறும் முறைகள் தெரியவரும். அவற்றை வல்லார் வாய்க்-கேட்டறிந்துகொள்க.

இனி, நமது ஆலயக் கிரியைகள் நெற்றிக் கண்ணால் ஆராயப் படவில்லையென்பது முன்னே கூறப்பட்டுள்ளது. ஆதலால்

அங்ஙனம் ஆராயப்பட்டுள்ள கிரியைகளிற் காணப்படும் ஒத்த அம்சங்களைக்கொண்டே நமது கிரியைகளையும் ஒருவாறு அனுமானிக்க வேண்டியிருக்கிறதே தவிர, வேறு தீர்மானமாய் ஒன்றும் இங்கு கூறுவதற்கில்லை. அதனால் அறிவுக்குப் பொருந்து-மிடங்களில் அக்கருத்துக்களை நேயர்கள் அங்கீகரிக்க ; அல்லாத-விடத்து உதறிவிடுக. மற்றும் விளக்கவல்ல நுண்மதியுடையோர் நமது சமயத்திற்குப் புத்துயிரூட்டும் பொருட்டு வேறு நூல்-களையும் வெளியிடுவார்களாக.

## I. இரவு சயனாலயப் பூஜையும், பைரவ பூஜையும்.

இரவு பள்ளியறை மூடியவுடனே, பைரவருக்கு வழி-பாடியற்றி, அவருடைய பரிவாரங்களாகிய வேதாள கணங்களுக்-கும் பலி போடப்படுகின்றது.

"கிராம ரக்ஷையின் பொருட்டும் எல்லா ரோகங்களையும் நாசஞ்செய்யும் பொருட்டும் கொடுமையான இடையூறுகளைப் போக்கும் பொருட்டும் பாயசான்னத்தால் பலி சமர்ப்பிக்க வேண்டும்," என்பது ஆகம வாக்கியம். அதன் பின்னர் சயனாலய முத்திராதண்டம் பைரவரிடம் ஒப்படைக்கப் படுகின்றது. முத்திரா தண்டத்தை வைத்திருப்பதால், வைரவர் ஆலயக் காவலாளரென்றும் அவர் துடியாயுள்ள ஆலயங்களில் திருடருக்கு உயிராபத்தென்றும் நமக்குள் ஒரு சிலர் நம்புகின்றனர். அவரிடம் ஒப்படைக்கப் படுவது முத்திரைக் கோலேயன்றி ஆலயத் திறவு-கோல்களல்ல. முத்திரைகள் பூட்டுகளுக்குக் கவசமேயன்றி வேறல்ல. அதனால், ஆலயத்திற்குக் காந்தக் கவசமாகவுள்ள சூக்ஷும நிலையை, இராக்காலங்களில் வலி மீறி நிற்கும் அசுரர்கள் பாதியாமற் பாதுகாப்பதே பைரவர் வேலையெனக் கொள்வது முறையாகும். அன்றி மனிதர் செய்யவேண்டிய பாரா வேலையை அவர் செய்வரென்று எதிர் பார்ப்பது தவறு.

ஆகவே காலையில் அருட்பணி தொடங்குமுன், முத்திரைக் கோலைக் கைக்கொண்டுள்ள அவருடைய அனுமதி இன்றி-யமையாததாகின்றது. அதனால் ஆகமங்களிலும் க்ஷேத்ர பாலாநுக்ஞையே காலையில் செய்ய வேண்டிய முதற் கிரியையாக

விதிக்கப் பட்டுள்ளது. அவரை ஆராதித்து அவரிடமிருந்து முத்திரைக் கோலைப் பெற்றுப் பள்ளியறையைத் திறந்தபின்னரே மூர்த்திகள் சான்னியத்யம் பெறுவர், பரிவார தேவதைகள் தொழிற்படுவர், (அருள்) சிருஷ்டித் தொழிலும் தொடங்கும் ஆலயமும் ஆராதனைக்குத் தகுதி பெறும்.

## II. காலையில் பைரவர் பூஜை.

அதிகாலையில் ஆலயத்து நடைபெற வேண்டிய முதல் வேலை அதனைத் துப்புரவு செய்தல்; அதாவது அலகிடல், நீர் தெளித்தல், மெழுகுதல், குப்பை கூளங்கள் நிர்மாலியங்களை அப்புறப் படுத்துதல் முதலியன. இது உழவாரப்பணிவிடை என்று பெயர் பெறும். முற்காலங்களில் இது உத்தம பக்தர்களால் செய்யப்பட்டு வந்தபோது ஆலயங்கள் சீரும் சிறப்பும் பெற்று விளங்கின. அப்பர் சுவாமிகள் நமக்கு முத்திநெறியாக நடத்திக் காட்டிய முறை இதுவே. இன்றைய சாதுக்களில் வெறுஞ் சோற்றுச் சோம்பேறிகளாய்க் காவி கட்டித் திரிபவர்கள் இந்தப் பணியிலாவது ஈடுபடுவது நாட்டுக்கு நன்மை பயப்பதோடு அன்னார் மேற் பிறவிக்கும் ஆதரவாக விருக்கும்.

காலையில் செய்யும் அடுத்த வேலை புண்யாகத்தைத் தயாரித்து ஆலயத்தைப் புரோக்ஷித்தல். முதலில் செய்தது ஆலய ஸ்தூல சுத்தி, பின்னது சூக்ஷ்ம சுத்தி. இந்த இரண்டும் நடைபெற்ற பின் க்ஷேத்ர பாலாநுக்ஞை என்ற பைரவர் பூஜை செய்யப்படல் வேண்டும். பைரவருக்கு ஆவாகனம், தியானம், அபிஷேகம் முதலியவற்றைச் செய்து, நைவேத்யம் தூப தீபங்களைச் சமர்ப்பித்து,

"ஓ சுவாமின் க்ஷேத்ர பாலரே, பூமியில் உள்ள எல்லாச் சனங்களையும் இரட்சிப்பதற்கான சிவ பூஜையைச் செய்வதற்காக முத்திரா தண்டத்தைத் தந்தருளும்" என்று பிரார்த்தித்து, அங்குச முத்திரையால் முத்திரைக் கோலை அர்ச்சகர் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்பிரார்த்தனை பரார்த்த நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.

கிறிஸ்தவ ஆராதனையில் முதன் முதலாகத் "தீர்த்தம் தெளித்தல்" (Asperges) என்ற புண்யாகவாசனம் நடைபெறுவதும் அப்போது ஏற்படும் அருளாலயக் கவசமாகிய சூக்ஷ்ம நிகழ்ச்சியும் அந்த ஆராதனைப் பாடத்தில் விளக்கப்பட்டுள்ளது, (படம் பக்கம் 64 பார்க்க). அந்தப் புண்யாகக் கிரியை யில்லாதபோது தேவர்கள் அங்கு வேலை செய்ய இயலாது போகின்றனரென்றும் அங்கு கூறப்பட்டுள்ளது. நமது புண்யாகமும் கிறிஸ்தவ முறையிற் போன்று உரிய மந்திரங்களாலும், அபிமந்திரிக்கப்பட்ட தீர்த்தத்தாலும், அபிஷேகம் பெற்ற ஆச்சாரியாராலுமே செய்யப்படுவதால், அங்கு ஏற்படும் பலாபலன்கள் இங்கும் ஏற்படுமென அனுமானிக்கலாகும். அவ்வாறயின் புண்யாகம் செய்யப்படும்போது பூலோக-புவர்லோக-சுவர்லோக தத்துவப பொருள்களாலாகிய மாபெரும் சூக்ஷ்மக் கூடாரக் குமிழி யொன்று (Vast Bubble of etheric and astro-mental matter) (படம் பக்கம் 64 பார்க்க) ஆலயத்துள்ள சூக்ஷ்ம அசுத்தங்களை யெல்லாம் புறத்தாக்கி ஆலயத்திற்குக் கவசம் போன்று அமைவதாயிருக்கும். அதன் பின்னர் பைரவருடைய கணங்கள் அவரது பூஜையின்போது பிரசன்னமாகி அருள் வேலையில் ஈடுபடுவரென எதிர்பார்க்கலாம்.

ஆகமங்கள் கூறும் ஆன்மார்த்தம், பரார்த்தம் என்ற இரு வகைப் பூஜை முறைகளில், வேறுபாடுகள் ஒன்றுக்கொன்று அதிகம் காணப்படவில்லை. ஆனால் பூஜகனுக்கு மாத்திரம் ஆன்ம லாபத்தைக் கொடுக்கும் ஆன்மார்த்த பூஜையில் இந்தப் புண்யாகமும் பைரவ பூஜையும் இடம் பெறவில்லை. ஆதலால் உலக நன்மையின் பொருட்டும் அங்குள்ள சகல ஜீவராசிகளின் க்ஷேமத்தின் பொருட்டும் செய்யப்படும் பரார்த்த பூஜைக்கு இந்த இரண்டு கிரியைகளும் இன்றியமையாதன வென்று துணிய வேண்டிருக்கிறது. ஆகமவிதிகளும் அவ்வாறே உள்ளன.

## III. சயனாலய பூஜை.

பின்பு பள்ளியறையைத் திறந்து சயனாலய பூஜை செய்யப்படும். சிவபெருமானும் தேவியாரும் அவரவர் மூலஸ்தானஞ் சேர்க்கப்படுவர். அதுமுதல் சிருஷ்டி வேலையும் ஆரம்பமாகும்.

அது இங்கு உலகப் பாதுகாப்பிற்கான அருளைப் படைக்கும் வேலையாம். அவ்வேலைக்கு உதவியாகும் ஸ்தான சுத்தி, பாத்யம் அர்க்கியம் ஆசமனம் கற்பித்தல், திரவியங்கள் சேகரிப்பு, திரவிய சுத்தி, பஞ்ச கௌவியம் பஞ்சாமிர்தம் திருமஞ்சனம் தயாரிப்பு, முதலியவை யாவும் முறைப்படி நடைபெற வேண்டும், அதாவது உரிய மந்திரம் முத்திரை பாவனைகளால் சுத்தி செய்யப்பட்டு சக்தி யூட்டப்பட வேண்டும். இவையாவும் அருட் பொழிவிற்கும் அருட் பெருக்கத்திற்கும் ஆவசியமான பொருள்களும் கிரியை-களுமாம். ஆயினும் ஆகம அறிவு மிகச் சூனியமாயிருக்கும் இக்-காலத்தில் அவை சரியாக நடைபெறுவதில்லை யென்பது மிகவும் வருந்தத் தக்கது. விதிக்கப்பட்ட கிரியைகளை முறைப்படி இயற்றுமல், ஆலயங்கள் பலனொன்றையும் கொடுக்க வில்லையெனக் குறைகூறுவது, அடுப்பில் தீயே மூட்டாமல் சோறு வேகவில்லையே யென்று குறை சொல்வதையே ஒக்கும்.

உலகம் பலவிதம். அதனுல், யாவருக்கும் விதிக்கப்பட்ட பேரின்பநெறி ஆலய வழிபாட்டைத் தவிர வேறில்லையென்று நமது சமய நூல்கள் வற்புறுத்தவில்லை. வேறு பல சாதன முறை-களும் நம் சாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ளன. ஆகையால் ஆலயந் தொழுவது தமக்குரிய நெறியல்லாதவர், அதில் நம்பிக்கை யில்லாதவர், தாம் அறியாத தொன்றை இகழவோ குறை கூறவோ செய்யாது ஒதுங்குவதே அறிவுடமை. அவர்கள் பூரண அறிவைப் பெற்றுள்ளதாகத் தம்மைக் கருதிக்கொண்-டாலும் உலகம் அதனை ஒப்பாது. ஆனுல் ஆலய வழிபாட்டில் நம்பிக்கையுள்ளோர், இன்று செய்துவருவதுபோலத் தம்மை இகழ்வோரைக் கண்டிப்பதே தமக்குரிய வேலையெனக்கொள்ளா-மல், மிகமிகத் தப்பும் தவறுமாக ஆலயங்களில் நடைபெறும் கிரியைகளை ஆராய்ந்தறிந்து, அவற்றைச் சீர்பெற நடத்தச் செய்வது அவருக்குரிய மிகப் பெருங் கடமையாகும்; அல்லாத போது அவர்களும் இழுக்குறுவர், ஆலயவழிபாடும் இன்றைய நிலையிலுந் தாழ்ந்து இடுக்கண்படும்.

## IV. சூரிய பூஜை.

ஆகம விதிப்படி காலையில் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டிய கிரியைகளில் சூரிய பூஜையும் ஒன்று. ஆனுல்

அதன் அவசியத்தை அறியாத காரணத்தால் இன்று பெரும்பாலும் அது செய்யப்படுவதில்லை. சூரிய பூஜையின்போது, "ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனிபாம் பிரண்டும்" ஆவாகிக்கப்பட்டுப் பூஜிக்கப்படுவர். இவருள் ஞாயிறு முதல் சனிவரையுள்ள ஏழு கிரகங்களும் சூரிய மண்டலாதிபதியின் ஏழு ஆதாரங்களென்பது இந்நூல் முதற் பாகததில் விளக்கப்பட்டுள்ளது. அந்த கிரக நாதர்கள் எழுவரும், இறைவனுடைய சப்தகலைகளுக்கும் சூரியமண்டலத்திற் கேற்பட்டுள்ள அதிகாரிகளும், சப்தகணத் தலைவருமாவர். மற்ற ராகுவும், கேதுவும் சாயா கிரகங்கள். அவருக்கு சூரிய மண்டலத்தில் ஸ்தூல உடம்புகள் இல்லை. சூரிய மண்டலத்தைப் படைக்கும் பொருட்டுத் திருப்பாற் கடல் கடையப் பட்ட போதே அவர்கள் வாழ்ந்திருந்து, அமிர்தம் பங்கிடப்பட்ட போது துண்டிக்கப்பட்டவர்களென்பது புராணக்கதை. ஆகவே அவர்கள் சூரிய மண்டலத்திற்கு மேற்பட்ட அண்டத்தைச் சேர்ந்த (Cosmic Angels) கணநாதர்களாயிருத்தல் வேண்டும். கிறிஸ்தவ ஆராதனையின்போது நவகண வானோர்கள் அழைக்கப் படுவதும், அவர்கள் பிரசன்னமாகி ஆலயத்துச் செய்யும் அற்புதங்களும், முன்னே கூறப்பட்டுள்ளன. இந்த சூரிய பூஜையின்போது சூரிய பகவானும் அவருடைய சகாக்களும் அஷ்ட திக்குப் பாலகர்களும், அதிகாரம் பெற்ற ஆசாரியாரால் அழைத்து ஆராதிக்கப்படும்போது, நவக்கிரகங்கள் சம்பந்தமான தேவ கணங்கள் தோன்றி ஆலயத்தில் ஏற்பட்டுள்ள புண்யாகக் கூடாரக் கவசத்துள் அருட்பணி தொடங்குகின்றனரென்று, வெறும் அநுமானம் மாத்திரமன்றி நிச்சயமாகக்கூடக் கூறிவிடலாம். ஏனெனில், முறைப்படி ஆவாகனஞ் செய்யின் அழைக்கப்படுந் தேவர்களும் மூர்த்திகளும் பிரசன்னமாகின்றனரென்பது ஆகமங்களின் துணிபு. அது உண்மையாதல் இன்று நெற்றிக் கண்ணுக்கும் விளங்குகின்றது.

## V. கணேச பூஜை.

அடுத்தபடியாக நடைபெறுவது—நடைபெறவேண்டுவது—கணபதி பூஜையாம். கிறிஸ்தவ ஆராதனைக்கும் இந்த வழிபாட்டிற்கும் உள்ள நெருங்கிய தொடர்பிலிருந்து, இது அருளாலய

நிர்மாணத்திற்காக அவர்கள் அழைக்கும் விசுவ கர்ம தேவர்கள் வருகையாயிருக்கலாம். பரார்த்த பூஜைக்கு வேண்டிய முதற் பணியும் அதுவே. ஆனால் கணபதியோ சகல தேவ பூதகணங்-களுக்கும் தலைவராவர். அவர் பூஜையிலும் அவருடைய விக்னேசராதிய அஷ்ட மூர்த்தங்களும் பாலகணபதி முதலிய பதினாறு கணநாதர்களும், அஷ்டதிக்குப் பாலகர்களும், வேறு பலரும் அழைக்கப்படுகின்றனர். ஆகையால் இங்கு பரார்த்த பூஜைக்குரிய அருளாலய அமைப்பிற்கான தேவர்களும், அதை அருளால் நிரப்பி எடுத்த காரியம் இடையூறின்றி இனிது முடிக்க-வல்ல தேவர்களும் இப்போது பிரசன்னமாவரென்று அனு-மானிக்கலாம்.

கிறிஸ்தவ ஆராதனையில் சாமியாரும் அடியார்களும் சேர்ந்தே தொழுகை நடத்துவதும் அந்த இரு கூட்டத்தாரும் அருட் பொழிவில் பங்கெடுத்துக்கொள்வதும் காணப்பட்டது. ஆனால் நமது முறைகளில் அடியார்களுக்கு ஒன்றும் இடமின்றி யாவும் பட்டர் அல்லது அர்ச்சகராலேயே செய்யப்படவேண்டி-யிருப்பதால், அவருடைய உதவிக்காக தேவர்களும் கூடுதலாக வரவழைக்கப்படுகின்றனரெனக் கொள்வதும் தவறாகாது.

---

பாடம் 38.

# சிவாலயப் பரார்த்த பூஜை.

## ஒற்றைக் காலம் (தொடர்ச்சி).

## VI. சிவபூஜை.

கணேசர் பூஜைக்குப்பின் நிகழ்வது மூலஸ்தானத்துள்ள சிவலிங்க பூஜை. அதுவே பூஜையின் சிகரம்; அதுவரை நடந்தவை யாவும் அதற்கு முன்னணிகளே; அப்போது பெறப்படும் அருட் களஞ்சியத்தைச் சேமிப்பதற்கான பெட்டகங்களே; அந்த சிகரத்திற்குக் கொண்டு செல்லும் படிகள் போலுமாம்.

இந்நூல் பூஜா விதி நூலல்ல; ஆதலால் பூஜைக்குரிய மந்திர தந்திரங்கள் எதுவும் இதில் இடம் பெறவில்லை; அவற்றிற்கு இடம் கொடுப்பது சாத்தியமுமாகாது. நமது பூஜையின் உட்பொருளை அறிவதற்கு, அதன் அங்கங்களைப் பொதுப்படையாக அறிவதே போதுமானது; அங்ஙனம் அறிவது அவசியமுமாகும். அதனால் தனித் தனியாக மூர்த்திகளுக்குச் செய்யப்படும் ஆராதனையின் அங்கங்கள் மாத்திரம் சுருக்கமாகக் கவனிக்கப்படும். அந்த அங்கங்களின் பெயர்களாவன :—

1. வியாபக நியாசம், என்ற ஆத்மா மூர்த்தி பாவனை.
2. துவார பூஜை.
3. கர்ப்பாவரண பூஜை.
4. பிம்ப சுத்தி.
5. ஆதார சக்தி பூஜை.
6. ஆசன பூஜை.
7. ஆவாகனம்.
8. தூப, தீப, அர்க்கிய உபசாரம்.
9. அபிஷேகம்.
10. அலங்காரங்கள்.
11. ஆவரண பூஜை.
12. தூப, தீப, அர்க்கியங்கள்,
13. நைவேத்யம்,

14. தீபாராதனை.
15. ஸ்தோத்திரம், அர்ச்சனைகள்.
16. பூஜா சமர்ப்பணமும் நிரோதார்க்கியமும்.

இவற்றுள் ஆறுவதாகிய ஆசன பூஜையும், ஏழு, பதினொன்றாகிய ஆவாஹன, ஆவரண பூஜைகளும் விரிவாக நடைபெறும் பொழுது அது போகாங்க பூஜை யென்னப்படும். ஆவரண பூஜையில்லாமலும் ஆசன பூஜை தனித் தனியாக வின்றித் தொகுப்பாகவும் நடைபெறும்பொழுது அது லயாங்க பூஜையாகும். அவற்றுள் போகாங்க பூஜை, அதாவது விரிவான பூஜை, கால சந்தி, உச்சிக்காலம், சாயரக்ஷை ஆகிய மூன்று காலங்களிலும் தவறாது நடைபெற வேண்டுமென்பது ஆகமவிதி. ஆனால் இப்போது ஆறு காலப் பூஜைகளுமே அலங்கோலமாக நடைபெறும்போது ஆகமவிதி என்று சொல்லவே நா கூசுகிறது. ஆன்மார்த்த பூஜை அன்றாடம் செய்பவர் இந்த போகாங்க பூஜையை நன்கு மனப்பாடம் பண்ணியிருப்பர். ஏனைய சிவாச்சாரியர், குருக்கள், பட்டர், அர்ச்சகர்கள் ஆகிய ஆலயப் பூஜகர்கள் ஏட்டைக் கையில் வைத்தாவது வாசிக்கவல்லரோ என்பது சோதித்தே அறியப்பட வேண்டும். ஆசன பூஜை, ஆவரண பூஜைகளில் வேறு பாட்டைத் தவிர மற்ற அங்கங்கள் யாவும் எல்லாக் காலங்களிலும் ஒழுங்காக நடைபெற வேண்டும்.

## VI—(1) வியாபக நியாசம்.

மூர்த்தி பூஜையில் மிக மிக முக்கியமான பாகம் ஆவாகனம் அல்லது மூர்த்தி அழைப்பு. அதில் மிக முக்கியமான உறுப்பு பிராணப்பிரதிஷ்டை: அதாவது ஒவ்வொரு ஆத்மாவிலும் அந்தர்யாமியாயுள்ள ஈஸ்வரனை அந்தந்த மூர்த்தி சொரூபமாக அகத்துப் பாவனை செய்து, மூர்த்தி பிம்பத்திலும் நியாசங்கள் மூலம் மூர்த்தியைப் பாவனை செய்து, அந்தரியாமியாயுள்ள ஈஸ்வரனை பிம்பமூர்த்தியில் ஸ்தாபித்தல். அப்போது, ஆகமங்களில் ஆன்றோரால் கற்பிக்கப்பட்டுள்ள உருவத்தோடு, மூர்த்தியானவர் தேஜோமயமாக அங்கு பிரசன்னமாவது நெற்றிக் கண்ணுக்குக் காணப்படும். நினைவுகளும் எண்ண உருவங்களும் தொழிற்படும் நியதிகளைக் கற்றறிந்தவர், (Thought Forms By

C. W. Leadbeater) நெற்றிக் கண் திறக்காதவராயினும் இந்நிகழ்ச்சியைப்பற்றி ஐயப்படார்.

இனி, சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய ஆத்மாவாகத் தன்னைக்கொண்டு, இந்தப் பிராணப் பிரதிஷ்டை செய்வது பெரிதும் குற்றமுடையதாகும். உரிய மந்திரம் முத்திரை பாவனைகளால் மூர்த்தியைத் தன்னிடம் வியாபமாக்கி, தான் மூர்த்தியுடன் ஒன்றி, தான்மூர்த்தியாகவே நிற்பதாக உணர்ந்து இந்தப் பிராணப் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டுமாதலால், ஆரம்பத்தில் இந்த நியாசம் அர்ச்சகரால் தம்மீது செய்து கொள்ளப்படுகிறது. தேவர்களை அழைப்பதுபோலவே, மூர்த்திகளை அழைக்கும் உரிமையும் ஆத்மார்த்த பூஜகருக்கும் பரார்த்த பூஜகருக்கும் தீக்ஷைகள் மூலம் அளிக்கப்படுகின்றது; இருவகையாரும் இந்த வியாபக நியாசம் செய்துகொள்வது இன்றியமையாதது. வியாபக நியாசமாவது குறிப்பிட்ட மூர்த்தியைத் தம்மிடம் வியாபகப்படுத்துவது.

## VI—(2) துவார பூஜை.

இப்பூஜையில் அழைத்துப் போற்றப்படும் தேவ தேவியர் சுமார் இருபதின்மரை நோக்கும்போது, இவர்கள் யாவரும் அருளாலய நிர்மாணத்தில் ஈடுபடுபவரும், அதனை அடியார்களுடைய காமக் குரோத லோப மோக அசுத்தங்களிலிருந்து பாதுகாப்பவரும், மற்று அருட்பெருக்கிற்கு ஆவன செய்பவருமாக இருப்பார்போலும். அவர்கள், கங்கை யமுனை சரஸ்வதி லக்ஷ்மி முதலிய தேவிகளும், கணபதி நந்தி ஸ்கந்தர் மகா காளர் புவங்கர் ஆதிய கணநாதர்களும், சூரியன் சந்திரன் ஆதிய மண்டல கர்த்தருமாவர். கிறிஸ்தவர் இருமுறைகளே தேவர்களை அழைக்கவும, நமக்குள் தேவதேவியர் பலரும் பல முறைகள் அழைக்கப்படுவது, நமது ஆராதனையின் பலன் மற்றவற்றைவிடக் கூடுதல் சக்தி வாய்ந்ததாயிருக்குமோ அல்லது வேறு காரணத்தாலோ அறிவதற்கில்லை.

## VI—(3) கர்ப்பாவரண பூஜை.

கிறிஸ்தவ ஆராதனையில் முதலாவதாகப் பேராலய அருள் திரட்டி யென்ற சூக்ஷ்ம அருளாலயக் கட்டிடம் ஏற்பட்டது.

பின்னர் அதனுள்ளாகச் சிலுவையைச் சுற்றி ஒரு சிறு கவசக்கூடு ஏற்படுகின்றது, அதுவே திவ்ய நற்கருணை அப்பங்கள் சேமித்து வைத்தற்குரிய இடமாகவுள்ளது. பின்னர் பகவான் கிறிஸ்து நாதர் பிரசன்னமாவதற்கு முன்னதாக தூபங்களாலும் மந்திரம் முத்திரைகளாலும் சிலுவைக்கு முன் மற்றொரு கவசாலயம் அமைவு பெறுகின்றது. அதனுள்ளேயே பகவான் பிரசன்னமாகின்றனர்; அவருடைய தனிப்பட்ட அருளும் அங்கு அமோகமாக நிரம்பிப் பின் அது வெளியே விநியோக மாகின்றது.

சுதந்தரச் சிற்பவிதானத்திலும் இம்மாதிரிப் பெரிய மாளிகையினுள் அரங்குகள் போன்ற பல சிறு நிர்மாணங்கள் காணப்படுகின்றன. சூக்ஷ்மப் புற ஆலயம் அமைக்கப்பட்டபின், உள்ளே பிரதக்ஷிணங்கள் தூபங்கள் கானங்கள் நடைபெறும்போது, அங்குள்ள சொக்கட்டான் தளத்தின்மீது கர்ப்பாலயம் அமைவதும், அந்த கர்ப்பாலயத்தினுள்ளும் பிரதம அதிகாரிகள் மூவர் முன்பாக மூன்று புற்றுப்போன்ற கூடாரங்கள் தனித்தனியாக அமைவதுவும் கூறப்பட்டுள்ளன. அவை தூபக்காரனாலும் பூதகணங்களாலும் அமைவதும், அவற்றினுள் தனிப்பட்ட அருள் பேரமுக்கமாகப பெருகி உரிய வேலைகளைச் செய்தபின் வெளியேறி நாற்புறமும் பரவுவதும் விளக்கப்பட்டது. இவற்றையொட்டி நமது ஆலயங்களை ஆராய்வோமானல், புண்யாகம், பைரவர் பூஜை, சூரிய பூஜை, பிள்ளையார் பூஜைகள் கோவில் முழுவதையுமம மூடி நிறகுமம பேராலய அருள் திரட்டியை அமைப்பதாகவுமம, பின்னர் ஒவ்வொரு மூர்ததிக்கும் தனிததனியாகச் செய்யப்படுமம கர்ப்பாவரண பூஜைகள் அங்கே சிறு சிறு கர்ப்பாலய அருள் திரட்டிகளை அமைப்பதாகவும் கொள்ளலாம். பெரிய மாளிகையினுள் அரங்குகள போன்ற அந்தப் பல கர்ப்பாலய அருள் திரட்டிகளுள், ஆகம முறைப்படி மூர்த்தி பூஜை நடைபெறுமபோது அநத இறை மூர்த்தத்திற்குரிய சிறப்பு அருள், தனிப்பட்ட அருள், அங்கு (High Pressure) பேரமுக்கமாகத்திரளும்; நிரோதார்க்கியம கொடுக்கும்போது சூக்ஷ்மக் கர்ப்பக் கிரகம் உலையும; அங்கு திரண்ட அருள் ஆலய முழுவதும் பரவும்; பூஜை முடிவில புறவுலகிலும் பரந்து

தன் கருணைத் தொழிலைச் செய்யுமென்று அனுமானிக்கவேண்டி-யிருக்கிறது. இதுவே கர்ப்பாவரண பூஜையின் பலன்.

## VI. (4.) பிம்ப சுத்தி.

பிம்பத்துள்ள பரிவட்டங்கள், நிர்மாலியங்களைக் களைந்து, பிம்பத்தைத் தீர்த்தத்தால் மந்திரஞ் சொல்லிப் புரோக்ஷித்தல் பிம்பத்திற்குச் செய்யும் சூக்ஷ்ம சுத்தியாம்.

## VI. (5) (6) ஆதார சக்தி-ஆசன பூஜைகள்.

இவற்றின்போது பலபல தேவகணங்களும் பூத கணங்களும அழைக்கப்பட்டுப் போற்றப்படுகின்றனர். அவர்கள் எந்த மகத்-தான அருட்பணியை இயற்றுகின்றனரோ, நெற்றிக்கண்ணுள்-ளோரே சொல்ல வல்லவர். அவற்றையொத்த கிரியைகள், ஆராயப்பட்ட ஆராதனைகள் ஒன்றிலும் காணப்படவில்லை.

## VI. (7) மூர்த்தி ஆவாகனம்.

இது ஆகமப் பூஜைகளில் மந்திரம், முத்திரை, பாவனை என்ற மூன்று கிரியைகளை இணைத்துச் செய்யப்படுவது. இவற்றுள் ஏதாவது ஒன்றை நீக்கி மற்ற இரண்டையும் செய்தாலுமோ, அல்லது இணக்கமற்ற முத்திரை பாவனைகளை இயற்றினுலுமோ, அங்கு தேவ சம்பத்திற்குப் பதிலாக அசுர சம்பத்தே விளையு-மென்று ஆகமங்களிற் கூறப்பட்டுள்ளது. இந்த அற்பக் கிரியை-களுக்கு அவ்வளவு வல்லமை இருக்கக் கூடுமாவென ஐயப்பாடு நிகழலாம். சுதந்தரச் சிற்ப விதானத்தில் தவறான முறையில் மந்திர முத்திரை நியாசங்கள் செய்யப்பட்டபோது, அங்கு நன்மைகுப் பதிலாகத் தீமையுண்டாயதும், உத்தம பூதகணங்க-ளுக்குப் பதிலாகக் குறளிகளும் அருவருப்பான பூதகணங்களும் அவற்றைச் சுற்றிக் குழுமியதையும் வங்கப்பணி முனிவர் நெற்-றிக்கண்ணுற் கண்டு கூறியுள்ளனர். ஆதலால் மேற் சொன்ன ஆகமக் கூற்று உண்மையெனக் கொள்ள இடமிருக்கின்றது.

இந்த ஆவாகனத்தின்போது, மூர்த்தியின் மூல மந்திரம் ஆசாரியரால் முதலாவது ஓதப்படும். அப்போது அம் மூர்த்தி யானவர் தேஜோ ரூபமாயும், தண்டாகாரமாய்ப் பிரியாதிருக்கும்

அவயுவங்களோடு கூடினவராயும், அருகதை பெற்ற அந்த அபி-ஷிக்தர் அழைப்பிற் கிணங்கித் தோன்றுவாராம். பின்னர், மந்திரம் முத்திரைகளால் வித்தியாதேகமும், அதில் மெய், வாய், கண், மூக்கு, செவி முதலிய உறுப்புகளும், நியாச முறையில் வகுக்கப்படவேண்டும். இது குயவன் களிமண்ணில் உரு வகுப்பதும் சிற்பி கற்சிலையில் உருவகுப்பதும் போன்றது. பின் வேதரிஷிகள் ஓதியுள்ள தியான சுலோகம் முழுக் கருத்துடனும் பொருள் தெரிந்தும் ஓதப்படல் வேண்டும். அந்த சுலோகங்களில்,

"பங்கை யாசனமும் பால்நிற மேனியும்
பொங்கரவணிந்த பொற்புரி நூலும்
தென்கலை வெண்பிறை திருமுடி ஐந்தும்
கண்கள் மூவைந்தும் கரங்கள் ஈரைந்தினில்
மலர்தரு சூலம் வச்சிரம் கதிர்வாள்
குலைமழு அபயம் கொண்டு வலப்பால்,
அரவொடு பாசம் அதிர்மணி வெங்கனல்
விரவிய அங்குசம் மேவி இடப்பால்,
உறைந்திடும் சதாசிவ உருவினைப் பணிவாம்."

என்பன போன்று அந்தந்த மூர்த்திக்குரிய வடிவம் நிறம் ஆடையாபரணங்கள் ஆயுதங்களெல்லாம் இனிது பாவனை செய்யும் விதத்தில் தொகுத்துக் கூறப்பட்டிருக்கும்.

பின்னர் பிராணப் பிரதிஷ்டையும், காயத்திரி ஜெபமும் நடைபெறும். அப்போது "அங்கிருப்பது பிம்பமென்னும் புத்தியை நீக்கி மூர்த்தி பிரசந்நமாயிருப்பதை அர்ச்சகரும் அடியார்களும் உணரவேண்டும்" என்பது ஆகம எச்சரிக்கை வாக்கியம். நெற்றிக்கண் திறக்காத மக்களுக்கு மனத்தில் பேத புத்தியும் ஐயப்பாடும் நிகழா வண்ணம் அக்காலத்திலேயே இந்த எச்சரிப்பு எழுதி வைக்கப்பட்டுள்ளது.

காயத்திரி மந்திரப்பலன் பாரத சமாஜப் பூஜையின்போது நெற்றிக்கண்ணால் நன்கு ஆராயப்பட்டுள்ளது. அப்போது விண்ணிலிருந்து ஒரு மின்னொளிக் கதிர் ஓதுவோனுடைய இருதயத்துட் புகுந்து அவனுடைய சூக்ஷ்ம உடம்புகளுக்கு ஒரு

பூரிப்பைக் கொடுத்து, அங்கு நின்றும் பிரதி பலித்து விசிறி போல விரிந்து வெளிவந்து எதிர்ப்பட்டவருள்ளும் வீறிட்டுச் சென்று பாய்ந்து, அவர்கள் அனைவருக்கும் அந்தப் பூரிப்பைக் கொடுப்பதாகவும் கூறப்படுகின்றது. அதன்படி இந்த காயத்திரி ஜபம், பாவன உருவமாகப் பிரசந்நமாகியுள்ள மூர்த்தி சாந்நித்தியத்தை முற்றுப் பெறுவிக்க உதவுமென்று அநுமானிக்கக் கூடியதாயிருக்கின்றது.

## VI. (8) தீப தூப அர்க்கியங்கள்.

இவை அர்ச்சகருடைய அழைப்பிற்கிணங்கிப் பிரசந்நமாகியுள்ள மூர்த்திக்கு அவர் செய்யும் உபசாரங்களாகும் ஆயினும் அவை வேறு சூக்ஷ்ம பலன்களையும் உடையன. தீபங்களும் தூபங்களும் அக்கினி கணங்களையும் கந்தர்வ கணங்களையும் அழைப்பதற்கு உதவும் முறை முன்பாடங்களில் கூறப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள அர்க்கியங்கள் மூன்றாகும்; அவை பாத்யம், ஆசமனம், அர்க்கியம் என்பன. அவற்றுள் பாத்யம் பாதம் கழுவுதல்; அது அர்க்கிய நீரை நம: என்ற மந்திரத்தால் மூர்த்தி பாதத்தில் தெளிப்பது. ஆசமனம் பருகக்கொடுத்தல்; அது மேற்படி நீரைக் கொண்டு 'ஸ்வதா' என்று கையில் தெளிப்பது. அர்க்கியமாவது அர்ச்சித்தல் அல்லது உண்ணக் கொடுத்தல்; 'சுவாஹா' என்று நீரை மூர்த்தி சிரசில் தெளிப்பது. இவற்றுள் நம: என்ற மந்திரம் நமஸ்கரிக்கின்றேன் என்றும், 'ஸ்வதா' என்பது என்னை அர்ப்பிக்கின்றேன் என்றும், 'சுவாஹா' என்பது வாரும் வாரும் என்றும், என்னை ஏற்றருளும் என்றும் பொருள்படுவன. இந்தக் கருத்துக்களிலிருந்து அக்கிரியையின் உட்பொருளை ஒருவாறு ஊகிக்கலாம். அதாவது,

(1) ஆலயங்களில் விக்னேசுர வழிபாடு அடிக்கடி நடைபெறும்; ஒவ்வொரு மூர்த்தியின் முன்பும் நடைபெறும். அது அடிக்கடி சிதறிப்போகும் அடியார்களுடைய மனம் மொழி மெய்களைக் கூட்டி அடக்கி ஒருமைப் படுத்துதற்கான ஒரு கிரியையாம். அம்மாதிரியே ஒவ்வொரு மூர்த்தி பூஜையின்போதும் மூன்று நான்கு தடவைகள் கொடுக்கப்படும் இந்த அர்க்கியங்கள், "நமஸ்கரிக்கின்றேன், என்னை அர்ப்பிக்கின்றேன், என்னை வந்து

ஆண்டருளும்.'' என்று ஓதும்போது, அவை பட்டருடைய மனோ வாக்குக் காயங்கள் புறத்துச் செல்வனவற்றை மூர்த்தியிடம் திருப்பி ஒருமைப் படுத்துவதற்கு உதவுவதோடு, மூர்த்தியினுடைய அருளை வலிந்து பெறுவதற்கும் துணையாயிருத்தல் கூடும்.

(2) எவ்வாறெனில், காயத்திரி மந்திரங்கள் அருட்பொழிவை வசீகரிப்பன வென்பது நெற்றிக்கண்ணால் அறியப்பட்டது. அம் மந்திரங்களும் பலப்பல. அவை ஒவ்வொன்றிலும் மூன்று வினை முடிபுகள் உள்ளன. அவை,

(1) வித்மஹே= (மூர்த்தியை) நோக்குகின்றோம்,
(2) தீமஹீ= (அவரை) தியானிக்கின்றோம்,
(3) பிரசோதயாத் = (அவர் எம்மை) ஏவுவாராக,

என்பனவாம். அவற்றுள், "நோக்குகின்றோம்,'' என்பது வேறு செல்லும் மனத்தை இறைவனிடம் திருப்பி, அவரை உருவகப்படுத்தி, அம் மூர்த்தியின் சொரூப லட்சணங்களை மனத்தால் ஆராய்ந்து, அவரிடம் ஆழ்ந்த பக்தி பூணுதல். "தியானிக்கின்றோம்,'' என்பது அவரை மனத்தகத்தாக்கி அவரோடு ஒன்றி நிற்றல், அல்லது நிற்க முயலுதல். "ஏவுவாராக'' என்பது பக்தனிடம் யான் எனது என்னும் செருக்குகளை வேரறுத்து, அவ்வாறு புனிதப் படுத்தப்பட்ட ஆன்மாவைத் தம் அருட் கருவியாக்கித் தமது திருவுளப்படி அதனை ஆட்டுவிக்கப் பிரார்த்தித்தல்; அதாவது அவருடைய தூய வாகனமாக்கியருள இறைவனை வேண்டுதல் இம் மூன்று கருத்துக்களும் அர்க்கியோபசாரத்திலும் தொனிக்கின்றன. "நம'' என்று பாதத்தில் தீர்த்தந் தெளிக்கும்போது, நமஸ்கரிக்கின்றேன், - நோக்குகின்றேன், - போற்றுகின்றேன்-வித்மஹே என்றபடியாம். "ஸ்வதா'' (கொடுத்தல்) என்று நீரைக் கரத்தில் தெளிக்கும்போது, கொடுக்கின்றேன் - என்னை அர்ப்பிக்கின்றேன் - என்னை விடுத்து உம்மை மனத்தாக்குகின்றேன் - தீமஹீ, என்றபடியாம். "ஸ்வாஹா'' (அழைத்தல்), வாரும் வாரும், என்று சிரசில் தெளிக்கும்போது, என்னை வந்து ஏற்றருளும் - ஏவியருளும் - பிரசோதயாது என்றவாறும். இவற்றிலிருந்து அர்க்கியங்கள் வெறும் உபசாரங்களல்லாமல் அருட்கருவிகளே யென்று துணியலாகும். அவை கிறிஸ்-

தவ முறையில் சின்ன ஆசிர்வாதம் போன்ற கிரியையாயிருத்தலாகும். அதன் நுண் பலன்களை அக்கிரியையின் கீழ்க் காண்க. அபிஷேகங்கள், நைவேத்தியங்கள், தீபாராதனைகள் முதலிய உபசாரங்கள் யாவும் அருட் கருவிகளன்றி வேறல்லவென்று அறியவேண்டும்: அதாவது, முறைப்படி இயற்றப்படின்.

## VI. (9) அபிஷேகம்.

அபிஷேகத் திரவியங்கள் எண்ணெ, பால், தயிர், நெய், தேன், இளநீர் எனப் பலவாம். அவையாவும் பிம்பத்தில் கசடுகளை உண்டுபண்ணுவனவே; அங்குள்ள அழுக்கைப் போக்குவனவல்ல. ஆகையால் அவற்றைக் கொண்டு அபிஷேகஞ் செய்வது பிம்பத்தைத் துடைத்துத் துப்புரவு செய்வதற்காகவல்ல. வேறென்னையெனின், வாயுவிலுள்ள தணுப்பை உப்புமண் எளிதில் உறிஞ்சும், மற்ற மண் உறிஞ்சாது; மின்சார சக்தியைச் சில உலோகக் கம்பிகள் எளிதில் ஏற்கும், மற்றவை ஏற்காது கரிந்துவிடும்; தரையில் சிந்திய நீரை மையூறித்தாள் எளிதில் உறிஞ்சும், மற்றவை உறிஞ்சா. அவ்வாறே அருட் சக்திகளிலும் ஒவ்வொரு சக்தி ஒருசில பொருள்களில் வேகமாகத் தோயும். அவை மூலம் பிம்பத்திற்கும் அதன் யந்திரத்திற்கும் அச்சக்தியை மாற்றலாகும். அதனாலேயே பலவகைத் திரவியங்கள் அபிஷேகத்திற்கு விதிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றிற்குரிய அஷ்ட சமஸ்காரங்கள் செய்யாமலும் அவற்றில் மந்திர உருவேற்றாமலும், அபிஷேகத்தின்போதும் ஓதவேண்டிய மந்திரங்களை ஓதாமலும், இன்று நடைபெறுவதுபோன்று வெறும் கடன் கழிப்பதாயிருந்தால், அபிஷேகச் செலவு வீண்விரைய மென்பாரது வாதம் மிகப் பொருத்தமானதே. அதனால் ஆலயங்களில் அபிஷேகங்கள் நடத்துவிக்கும் அடியார்கள், நற்பலனைப்பெற விரும்புவார்களாயின், அவற்றைத் திருந்தச் செய்யும் முறைகளைக் கேட்டறிந்து அவ்வாறு செய்யும்படி அர்ச்சகரை வற்புறுத்தவேண்டும். அல்லாதபோது அவர்கள் கைச்செலவு பொருளற்றது, பகுத்தறிவாளர் இகழ்ச்சி வசவே பொருளுடையது.

ஆகம விதிகளின்படி அபிஷேகங்கள் நடைபெறுமாயின், அங்கு பிரதிஷ்டை, கும்பாபிஷேகங்களின்போது பிம்பத்திலும்

அதன் யந்திரத்திலும் சேமித்து வைக்கப்பட்டுள்ள தெய்வீக சக்திகளும் வசீகர அருளலைகளும், அபிஷேகத் திரவியங்களில் தோய்ந்துள்ள சக்திகளால் வீரியம் பெறுகின்றன. ஒவ்வொரு நேரத்துப் பூஜையின் முடிவிலும் சண்டேசர் பூஜையும் விசர்ஜனமும் செய்யப்படும்போது, பிரசன்ன மூர்த்திகள் யாவரும் வெளியேறுவர். விசுவகர்மதேவர் நிருமித்துள்ள அருளாலயம் உலைந்து, திரண்டிருந்த அருள் முழுவதும் உலக நன்மையின் பொருட்டு நாற்புறமும் நாட்டில் பரவும். மற்ற தேவர்களும் அவர்கள் கணங்களும் வேறு வேலையின் பொருட்டு வெளியேறி விடுவர். அதன் பின்னர் அடுத்தகாலப் பூஜை ஆரம்பிக்கின்ற வரையில், தொழ வரும் அடியார்களுக்கு அநுக்கிரகம் செய்வது பிம்பசக்தியும், அதன் அடியிலுள்ள யந்திரசக்தியும், அவற்றை அன்போடு காவல் செய்து நிற்கும் பாதுகாப்புத் தேவர்களுமே. ஆதலால் அவ்வேலைக்குத் துணைபுரிவதான அபிஷேகங்கள், மற்ற உபசாரங்கள்யாவும் ஆகம விதிப்படி ஒழுங்காக நடைபெற வேண்டுவது மிகவும் அவசியமாகும். அல்லாதபோது அப் பொருள்களை ஏழை எளியோருக்கு உதவுதல் புண்ணியந்தரும்.

## VI. (10) அலங்காரங்கள்.

இது ஆடையாபரணங்களாலும் புஷ்பங்களாலும் விக்கிரகத்தை அலங்கரிப்பது. அடியார் மனத்தைக் கவர்ந்து அவர்களுக்கு பக்தியை யூட்டுவதே அதன் முதல் நோக்கம்; அதுவே அதன் முக்கியநோக்கமும். அன்றி வேறோர் சூக்ஷம காரணமும் உள்ளதாகப் புலப்படுகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கிறிஸ்தவக் கோவிலொன்றைப் பிரதிஷ்டை செய்ய லங்கப்பணி முனிவர் ஒரு சமயம் செல்ல நேரிட்டது. அதற்கு வேண்டும் சாமக்கிரியைகளுக்கு ஒரு பட்டியலை முன்னதாகவே அவர் அனுப்பியிருந்தனர். அதில், தானிய வகைகளில் யவைக் கோதுமைக்கு அவர் கொடுத்திருந்த ஆங்கிலப் பெயர், அதாவது அவர் நாடாகிய இங்கிலாந்தில் வழங்கும் பெயர், அமெரிக்காவில் சோளத்திற்கு வழங்குவதாம். அதனால் அங்குள்ளோர் யவைக்குப் பதிலாகச் சோளத்தைத் தயாரித்திருந்தனர். நமக்குள் யவைக் கோதுமை தேவ தானிய-

மென்றும் சத்துவகுணப் பொருளென்றும் கிரியைகளுக்குரிய நவதானியங்களில் ஒன்றென்றும் மக்கள் அறிவர். அவ்வாறே சோளம் அசுர தானியமென்பதும் தமோகுணப் பொருளென்பதும் கிரியைகளுக்கு விலக்கென்பதும் யாவரும் அறிந்ததே. மேனாட்டில் சென்ற 500 ஆண்டுகளாக இக்கிரியைகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டுவிட்டபடியால், அத்தகைய அறிவு கிரியைகளில் பற்றுடையோரிடத்தும் காணப்படுவதில்லை. அதனால் அங்கே சோளம் தயாரிக்கப்பட்டிருந்தது. பிரதிஷ்டையின்போது வங்கப்பணி முனிவர் சூக்ஷம நிகழ்ச்சிகளிலேயே கவனமாயிருந்தனராம். அதனால் ஊனக்கண் உபயோகம் அற்பமாகவே யிருந்ததாம். அப்போது உதவிக்குரு யவை என்ற இடத்தில் சோளத்தைக் கொடுக்க, முனிவரும் வாங்கி அழைப்பு மந்திரங் கூறி இறைத்து விட்டனர். அதே நொடியில் பறவைகள் போன்ற ஒரு அசுரகணக் குறளிக் கூட்டம் அங்கு பிரசன்னமாகவும், அவர் அதிசயித்துக் கையை நோக்கினர். உடனே தவறை அறிந்து, அவர்களை உத்வாசனஞ் செய்துவிட்டு யவையை வரவழைத்துச் சடங்கைப் பூர்த்தி பண்ணியதாகக் கூறியுள்ளனர். அந்நிகழ்ச்சி சம்பந்தமாக அவர் கூறியுள்ள விபரத்தின்படி :—

"உலோக வர்க்கத்திலும் தாவர வர்க்கத்திலும் உள்ள இயற்கைப் பொருள் ஒவ்வொன்றும் தேவ வர்க்கத்தில் ஒவ்வொருவித கணங்களோடு தொடர்புடையதாம். தேவ வர்க்கம் என்பது தேவர்களையும் அசுரர்களையும் கொண்டது; நாள் என்பது பகலும் இரவும் சேர்ந்தது போல. (அவர்களின் விகாசமுறைப் படிகளைப்பற்றிய அட்டவணை முன்பாடத்திலுள்ளது). அவர்கள், தம்மோடு இணைப்புள்ள தாவர சங்கமங்களின் வளர்ச்சி, மாறுபாடு, பலப்பேறு, படுகை, யாவற்றிலும் ஈடுபட்டிருப்பராம். மரம் செடி கொடிகளின் தளிர், பூ, காய், கனி, வித்து யாவற்றிலும், அவர்களின் இடைவிடாத பராமரிப்பு இருந்துகொண்டிருக்குமாம். அவற்றைக் கண்காணித்துக்கொண்டு அவர் ஓயாது அங்கு சுற்றித் திரிவராம். அதனால் அப்பொருள்கள் உள்ள இடங்களில் அந்தந்த கணங்களின் இயற்கைக் கேற்ற, அதாவது நன்மை தீமையான, பாதிப்புகள் இருந்துகொண்டிருக்குமாம்.

முறையறிபவருக்கு அப் பொருள்களின் உதவியைக்கொண்டு அந்தந்தக் கணங்களைத் தருவித்தல் எளிதாம்."

இவற்றிலிருந்து சில உண்மைகள் நமக்கு விளங்குகின்றன. நமக்குள் பில்லி, சூனியம், கழிப்புப் போன்ற அசுப காரியங்களில் இரும்பு போன்ற தகடுகளில் யந்திரங்கள் எழுதப்படுகின்றன. சுப காரியங்களில் பொன் வெள்ளி செம்பு போன்ற தகடுகளையே கையாளுகின்றனர்.

அவ்வாறே ஆலயங்களிலும் ஒவ்வொரு மூர்த்திக்கும், விதிக்கப்பட்ட பூக்களும் விலக்கப்பட்ட பூக்களும் உள்ளன. பராசக்தி பார்வதிக்கு அறுகும் நெல்லியும் விலக்கு; அவள் மகன் விக்கினேசருக்கு அறுகு ஆகும், துளசி ஆகாது; அவள் தமயன் விஷ்ணுவுக்குத் துளசி ஆகும், அட்சதை ஆகாது; அவள் நாதன் சிவனுக்கு வில்வம் ஆகும், தாழம்பூ ஆகவே ஆகாது; சூரியனுக்கு வில்வம் ஆகாது; பைரவருக்கு நந்தியாவர்த்தம் ஆகாது. நம்முடைய பார்வைக்கு அவையாவும் நல்ல அழகான புஷ்பங்களே, ஆனால் இந்த விதிவிலக்குகளிலிருந்து அந்தந்த மூர்த்தியின் அருட்பொழிவிற்குச் சில பூக்களும் கணங்களும் உதவியாயிருக்குமென்றும், வேறு சில இடையூறு யிருக்குமென்றும் அநுமானிக்கவேண்டி யிருக்கிறது. கிறிஸ்தவர் மகம்மதியரைப்போலச் செயற்கைப் பூக்கள், செயற்கைக் கற்களை நம்முடைய ஆலயங்களில் உபயோகியாது, இயற்கை ரத்தினங்களையும் இயற்கைப் புஷ்பங்களையும் மாத்திரமே வருவாய் ஏதுமில்லாத ஆலயங்களிற் கூட நமது ஆன்றோர் விதித்திருப்பது, மேற் கூறிய சூக்ஷ்ம பலன் கருதியேயெனக் கொள்ளவேண்டியிருக்கிறது. அப்படியாயின் ஸ்தூல வசீகரத்தைவிடப் புஷ்பங்களின் சூக்ஷ்ம வசீகரம் கூடுதலான பயனைக் கொடுப்பதாகவுமிருக்கலாம். பூ எடுப்பதற்கும் பூத் தொடுப்பதற்கும் பூப்பண்டாரங்கள் அநுசரிக்க வேண்டிய ஆசாரங்களுக்கும் விதி விலக்குகள் நமது நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவை நடைமுறையில் கடினமானவையுமல்ல. அவற்றை அநுசரிப்பதால் ஆலயத்திற்குத் தூய்மையும் பூப் பிள்ளைகளுக்கு ஒரு மனச் சாந்தியும் வேலையில் மகிழ்ச்சியும் அநதக் கணங்களின் உதவியால் ஏற்படும். ஆனால் இன்று பல் துலக்காதும் குளித்து முழுகாதும் கை கால்

கழுவாதும் பூப் பண்டாரங்கள் நந்தவனம் புகுந்து ஆபாசம் பண்ணுவதும், தொடுத்த மாலைகளைக் கால் மிதிபடும் இடங்களில் எறிவதும், பின்னர் அவைகளையே மூர்த்திக்குச் சாத்துவதும், அந்த தேவ பூத கணங்களை விரட்டி ஓட்டுமேதவிர ஆலயத்துள் திரட்டிக் கூட்டுவனவல்ல. இந்தச் சிறு நுட்பங்களை யெல்லாம் ஆலய அதிகாரிகள் கவனியாராயின் அவர்கள் கண்காணிப்பு பாரார்த்த நன்மை பயக்காது போம்.

இனி, ஆடைகளாகும் பரிவட்டங்களில் பருத்திநூற் பரி-வட்டங்களைவிடப் பட்டுப் பரிவட்டங்கள் அருட் சக்திகளைச் சேமிப்பதற்குப் பெரிதும் உதவுவன. எவையாயினும் அவை தூய ஆடைகளாயிருத்தல் வேண்டும். ஒவ்வொரு நிறங்கொண்ட பட்டுகளுக்கு ஒவ்வோர் வகை அருட் பொழிவு உரியதாகக் காணப்படுகின்றது. ஆபரணங்களில் பொன்னும் நவரத்னங்களும் அருட்பொழிவைப் பெருக்குவதற்குப் பெரிதும் உதவுவன. பல பல பொன்னுபரணங்களுக்குப் பதிலாக சிறிய நவரத்னப் பொட்-டொன்றே போதுமானதாகும். அருட்பொழிவு விநியோகங்-களில் நவரத்னங்கள் பெரும்பணி புரிவதாகும்.

## VI. (11) ஆவரண பூஜைகள்.

இயற்கை முறைப்படி சப்த உலகங்களில் அந்தந்த உலகிற்குரிய சக்திகள் அந்தந்த உலகத்திலேயே தொழிற்படும்; கீழுலகங்களுக்கு சாதாரணமாக அவை இறங்குவனவல்ல. அதற்குக் காரணம் அங்கங்குள்ள தன்மாத்திரைகள் அல்லது சலனங்களின் அளவு வேறுபாடாம். மேலுலகத் தத்துவங்கள் மிக நுண்ணிய அலைகளையுடையன. அவை மந்தசலனப் பொருள்களின்மீது இறங்கும்போது, அந்தத் தடித்த பொருள்கள் அவ்வேகத்தைத் தாங்காது சிதறுண்டு போகும். மேல்ஸ்தாயி சுரங்களை கீழ்ஸ்தாயி சுருதிகளில் வாசிக்க முயன்றால் கீழ்ஸ்தாயிக் கம்பிகள் அளவுக்குமீறி முறுக்கேறி அறுந்துபோகும். இது அநுபவத்தில் எளிதில் காணக்கூடிய உண்மை. எல்லா இயற்கை நியதிகளும் சக்திகளும் தொழிற்படும் முறை இதுவே. அதனால் உயர்வற உயர்ந்த உலகத்துள்ள சக்திகள் நமக்குப் பயன்படவேண்டுமானால் அவை பூலோக, புவர்லோக, சுவர்க்க-

லோகங்கள்வரை படிப்படியாக இறக்கப்பட, அல்லது பரிணமிக்கப்படவேண்டும். இந்தப் பரிணமிப்பு வேலையைச் செய்வதே ஆவரண பூஜை. அப்போது அழைத்துப் பூஜிக்கப்படும் தேவதைகளும், தேவர்களும் இந்த வேலைக்குதவும் (Transformers) பரிணுமிகளாவர்.

அருட் சக்திகள் யாவற்றிற்கும் சில பொதுக் குணங்கள் உண்டு. அல்லாது, ஒவ்வொரு மூர்த்தியின் அருளிலும் ஒன்றோ பலவோ சிறப்புத்தன்மைகளும் காணப்படும். பூஜைக்குரிய பூவினங்களில் பொதுவும் சிறப்பும் ஏற்பட்டுள்ள காரணம் இதுவே. அதே காரணத்தால் ஒவ்வொரு மூர்த்திக்கும் வெவ்வேறு ஆவரண தேவர்கள் உள்ளனர். சிவபெருமானுக்கு முதல் ஆவரணத்தில் அவருடைய பஞ்ச மூர்த்தங்களும், இரண்டாவது ஆவரணத்தில் அஷ்டவித்யேசுரர்களும், மூன்றுவது ஆவரணத்தில் அஷ்ட கணநாதர்களும், நான்காவது ஐந்தாவது ஆவரணங்களில் அஷ்டதிக்குப் பாலர்களும், அவர்களுடைய சக்திகளும் உரியவரென்று ஆகம சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவர்களே அவருடைய பூஜையில் அழைக்கப்படுபவர்கள்.

இந்திரன் முதலிய அஷ்டதிக்குப் பாலகர்களும் அவர்கள் சக்திகளும் எல்லா மூர்த்திகளுக்கும் பொதுவானவர்கள். ஏனெனில் மற்ற மூர்த்தங்களால் சுவர்க்கலோகம்வரை இறக்கப்பட்ட சக்திகளை இவர்களே பண்படுத்தி பூ புவர் சுவர்லோகங்களில் விநியோகிப்பவர்கள். அதற்கு மேற்பட்ட சக்திகளை அநுபவிக்க, இன்றைய பெரும்பாலான மக்களுக்குப் பக்குவம் இன்னும் ஏற்படவில்லை. பக்குவிகளுக்கு ஆலய வழிபாடு விதிக்கப்படவில்லை. அன்னோர் ஆலயம் வருவராயின் அது அருளைத் தமக்கு இரப்பதற்கல்ல, பிறர் பொருட்டு அதனைச் சுரப்பதற்காம்.

மின்சார நிலையங்களில் மின்சாரம் முதலில் மிக உயர்ந்த அமுக்கத்தில் (High Pressure) சேகரிக்கப்படும். பின் பரிணுமிகளின் (Transformers) உதவியைக்கொண்டு பல ஊர்களுக்கும் அது அனுப்பப்படும். அல்லாமல் முழு வேகத்தோடும் அனுப்பப்பட்டால் அவ்வூர்களே பாழாய்விடும்,

அம்மாதிரியே நகரங்களுக்குச் செய்யப்படும் தண்ணீர் வசதிமுறை அநுபவங்களும். ஊருக்கு வெகு தொலைவில் பெரிய நீர்த்தேக்கங்கள் முதலாவதாக அமைக்கப்படும். அங்கிருந்து ஆறு ஏழடி குறுக்களவுள்ள குழாய்களின் மூலம் தண்ணீர் வெளியே கடத்தப்படும். அக்குழாய்களை அப்படியே நகரங்களில் திறந்துவிட்டால் அது நாசவேலையைத் தவிர நன்மை செய்யாமல் போகும். அந்நகரங்களே வெள்ளப் பெருக்கால் பாழாகிவிடும். வீடுவாசல்கள், தோட்டம் துரவுகள், வீதிகள் சாலைகள் எல்லாமே அழிவுறும். ஆகையால் ஊரை அடுத்தவுடன் சிறு குழாய்கள் பெரியவற்றோடு இணைக்கப்பட்டுப் பின் அந்தந்தத் தெருவிற்குத் தக்கபடி மேலும் சிறிய குழாய்கள் இரண்டாமவற்றோடு இணைக்கப்பட்டுக் கடைசியாகத் தண்ணீர் வீடுகளுக்குள் வரும்போது ஓரங்குலக் குழாயே உபயோகிக்கப்படும். சப்த உலக நிகழ்ச்சிகளும் நியதிகளும் அதே அடிப்படை உண்மைகளைக் கொண்டனவாம்.

இந்துமதத்தில் சமய சாஸ்திரங்களுக்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்கு மிடையே என்றுமே பிணக்குகள் இருந்ததில்லை. தோன்றாப் பொருளாகிய இறைவனை அடைவதற்கு தோற்றப் பொருளைப் பற்றிய விஞ்ஞான அறிவு அவசியமென்றே நம் சமய நூல்கள் கூறுகின்றன. தோற்றங்களைப் பற்றிய அறிவு அங்கு பாசஞானம் எனப்படும். அந்தப் பாசங்களைப்பற்றி அறியாத போது அவற்றை வெல்லுதல் இயலாத காரியம். அங்ஙனம் அறிந்து அப்பாசத்தை வெல்லமுயலும் அறிவுமயமாகிய ஆத்மஞானம் பசுஞானம என்னப்படும. பாசத்தால் பந்தப்பட்டுள்ளதால் ஆன்மா பசு எனப் பெயர் பெறுகிறது. தோன்றாப் பொருளைப்பற்றிய ஞானம் பதி ஞானம் என்னப்படும். அப்பதியைக் "கண்டவர் விண்டாரிலர், விண்டவர் கண்டாரிலர்" எனப்படுவதால் அப்பதி ஞானம் அநுபூதியால் மாத்திரமே பெறப்படுவது. அதற்கு வேண்டும் பலவகைச் சாதனங்களும் இந்து சமய நூல்களிற் காணப்படும். அதனாலேயே மேனாட்டிற்போல நமக்குள் சமய சாஸ்திரத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரத்திற்கும் சச்சரவுகள் ஏற்படவில்லை. அத்துடன் பூரண ஒற்றுமையும் பண்டும் இன்றும் அங்கே இருந்து வருகின்றது.

## VI. (12). தீப தூப அர்க்கியங்கள்.

இவை ஆவரண பூஜையின்போது அழைக்கப்படும் இறை மூர்த்தங்களுக்கும் தேவர்களுக்கும் செய்யப்படும் உபசாரங்கள், அருள் வாய்க்கால்கள். இவற்றின் கருத்துக்கள் மேலே கூறப்பட்டுள்ளன.

## VI. (13). நைவேத்தியம்.

உபசாரங்கள் யாவுமே அருள் விளைக்கும் கருவிகள் என்பது மேலே கூறப்பட்டுள்ளது. அதிலிருந்து நைவேத்திய உபசாரமும் இறைவனுக்குப் பசி ஆற்றுதற்கல்ல வென்பதும், அக்கொள்கை அறிவுக்குப் பொருத்தமற்றதென்பதும், அன்றி அது அடியார்களுக்கு அருள் வழங்குவதற்காகவென்பதும் ஒருவாறு தெளியப்படும். விதிப்படி இயற்றப்படும் ஆராதனையின்போது அமோகமாய்ப் பெருகி வழியும் அருட் சக்திகள், அடியார்களுடைய சூட்சும உடம்புகளையே சார்ந்து அவற்றின் மூலமே ஒரு சிறிது ஸ்தூல உடம்பையும் இயக்குவன. அது காற்றை வாயால் ஊதிக் கல்லை நகர்த்துவது போன்ற கடின வேலை. ஆயினும் பண்பட்ட உடம்புகளை யுடையவருக்கு மயிர்க் கூச்செறிதல், ஆனந்தக் கண்ணீர் வடிதல் முதலிய பரவச நிலைகள் உண்டாவதுமுண்டு. அல்லாமல் சூட்சும உடம்புகளைச் சாரும் அருளும், வெந்நீரில் தண்ணீர் கலப்பது போன்று, புறவுலகிலுள்ள இழி சலனங்கள், அலைகளால் சீக்கிரஞ் செயலற்றுவிடும். அதனால் அந்த உயர்தர அருட் சக்திகள் சற்றுநேரம் உடம்பில் நிலைத்திருப்பதற்கும், நமது ஸ்தூல உடம்புகளைக் கூடியவரை நேரடியாகத் தாக்கிப் பண்படுத்துமாறும் இந்த நைவேத்தியக் கிரியைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கிறிஸ்தவ ஆராதனையில் உபயோகப்படும் அப்பமும் திராக்ஷ ரசமும், அங்கு இறைவனுக்கு ஆபோசனமாகக் கொடுபடாவிட்டாலும், கிறிஸ்து பகவான் "இதை உண்ணுங்கள், இது என்னுடைய மாமிசம்; இதைப் பருகுங்கள், இது என்னுடைய ரத்தம்," என்று அருளிச் செய்து அவற்றை விநியோகித்தபடியால், அவற்றையும் நைவேத்தியம் என்று கொள்வது ஒருவாறு

பொருத்த முடையதே. மந்திரங்களும் அம்முறையிலேயே அன்றுமுதல் இன்றுவரை உபயோகிக்கப்பட்டு வருகின்றன; அச்சமயம் அங்கே "வஸ்து மாறுதல்" (Transubstantiation) என்ற ஒரு அற்புதம் நிகழ்கின்றதென்பது கிறிஸ்து மதக் கொள்கை. "வஸ்துமாறுதல்," என்றபோது அப்பமும் ரசமும் பகவானுடைய மாமிசமும் ரத்தமுமாக மாறிவிடுகின்றனவென்று முன் காலத்திய கிறிஸ்தவர் யாவருமே ஒப்புக்கொண்டனர். பின்னர் ஊனக்கண் பகுத்தறிவு வளர்ச்சி பெற்று, "கண்டதே காட்சி, கொண்டதே கோலம், உண்டதே யோகம், உகந்ததே வாழ்க்கை" என்ற கொள்கைகள் பரவியபோது, இந்த "வஸ்து மாறுதல்" மூடக் கொள்கை யென்றும், அப்பம் எப்பவும் அப்பமே யென்றும், திராக்ஷ ரசமும் அவ்வாறே யென்றும் கிறிஸ்தவருட் பலர் கொள்ளத் தொடங்கினர். பூஜை நடத்த வேண்டிய சமயக் குருமார்களுக்குள்ளும் இந்த ஐயப்பாடு நிகழத் தொடங்கிற்று. ஆகவே அந்த அற்புதம் பற்றிய வாதம் பிரதி வாதங்கள், கட்சி எதிர்க்கட்சிகள், கண்டனம் விளக்கங்கள், பெருமிதம் ஏளனங்கள் முதலியன அன்று தொடங்கி இன்னும் நடந்து கொண்டே யிருக்கின்றன. அக்கிரியையில் நம்பிக்கை-யில்லாத கிறிஸ்தவர்கள் அதனைக் கைவிட்டுவிட்டனர். அது வங்கப் பணி முனிவரால் நெற்றிக்கண் கொண்டு ஆராயப்பட்ட-போதே, அதன் உண்மை, சூட்சும உலகங்களில் நம்பிக்கையுள்ள ஒரு சிலருக்கு விளங்கி வருகின்றது. அப்பமும் ரசமும் ஸ்தூலக் கண்ணுக்குப் பழைய படியே தோன்றினும், ஆராதனையின் பின்னர் அவற்றின் சூட்சும பாகங்கள் முற்றிலும் மாறி, முன்-போல அவை பூலோகத் திரவியமாயிராமல் மகத்தான வசீகரம் பெற்ற தேவத் திரவியங்களாகி விடுகின்றனவென்பது தெளிவா-கின்றது. அப்போது, பகவானுடைய உடம்பிலிருந்து எவ்வித மகோன்னத அருள் ஓயாது சுற்றிப் பரவிப் பெருக் கெடுத்துக்-கொண்டிருக்குமோ, அதே அற்புத நிகழ்ச்சி இவற்றிலும் நடைபெறுகின்றதாம். அவற்றை உட்கொண்டவருடைய உடம்பி-லிருந்து ஒரு அருட்சோதி நெடுநேரம் விசிறிக்கொண்டிருக்கிற-தாம். உத்தம பூத கணங்கள் பல அந்த அருளில் திளைத்து இன்புற்றுக்கொண்டு அவரைச் சுற்றிச் சுற்றி வட்டமிடுமாம். அப்பப்பிரசாதம் உண்டவரை அண்டின மக்களுங்கூட ஒருவித

சாந்தியும் மனமகிழ்ச்சியும் பெறுவராம். ஆராதனையின் முடிவில் இந்த நற்கருணைத் திரவியத்தில் ஒரு பாகம் பலி பீடத்துள்ள சிலுவையின் அடியிலிருக்கும் நற்கருணைப் பெட்டிக்குள் சேமித்து வைக்கப்படும். அங்கிருந்தும் அந்த மகோன்னத அருள் இடை-விடாது அலை அலையாகப் பரவிக்கொண்டிருக்குமாம். அதில் திளைக்கும் பொருட்டும் அதற்குக் காவலாகவும் பல தேவர்கள் அங்கு குழுமி நிற்பராம். இவையாவும் வங்கப்பணி முனிவரால் விளக்கப்பட்டுள்ளன; இந்நூலின் கிறிஸ்தவ ஆராதனைப் பாடங்-களில் தொகுத்துக் கூறப்பட்டுமுள்ளன. இவற்றிலிருந்து நமது நைவேத்தியங்களைப்பற்றி ஏதாவது அநுமானிக்கக் கூடுமா?

கிறிஸ்தவ நிவேதனங்கள் மிக மிகக் கவனமாகத் தயாரிக்கப் படுகின்றன; மிகமிகப் புயபக்தியுடன் கையாளப்படுகின்றன. சாமியாரைத் தவிர வேறுயாரும் அவற்றைத் தொடவுஞ் செய்-யார். கடுகத்தனை அப்பத்துண்டோ ரசத்துளியோ கீழே சிந்தப் பொறார். கிண்ணங்களைக் கழுவக்கூட அயலாரிடம் கொடார். பிரசாதத்தின் முன்னே மண்டியிட்டு வணங்குவர்; மண்டியிட்டே அதனை வாயில் பெறுவர்; மெல்லாது விழுங்குவர். அவற்றை மெல்லுவதுகூடப் பெரிய குற்றமாகக் கருதப்படுகிறது. நம்முடைய பிரசாதங்களைப்போல அவற்றை வீட்டுக்குக் கொண்டு போகக் கேட்டால், அச்சொல் செவியிற் பட்டவுடனேயே குருக்கள்மார் ஏங்கி மயங்கிவிடுவர். அவ்வளவு மகிமையும் வல்லமையும் உண்மையிலேயே உடையனவென்பது இப்போது நெற்றிக்கண்ணாலும் அறியப்படுகின்றது. அதனால், ஞானிகள் அமைத்த பண்டைய ஏற்பாட்டைப் பின் வந்த மக்கள் அறிந்தோ அறியாமலோ மிகுந்த சிரத்தா பக்தியுடன் இன்றும் பின்பற்றி வருகின்றனர்.

ஆனால் நமது ஆலயங்களில் என்ன காண்கிறோம்? அங்கு பல சீர்கேடுகள் காணப்படுவதுபோலவே இதிலும் முறைகேடே காணப்படுகின்றது. நைவேத்தியங்கள் ஆசாரக் குறைவாகவும் மிகுந்த அலட்சியத்தோடுமே தயாரிக்கப்படுகின்றன. அவ்வாறே அவை நிவேதிக்கப்படுகின்றன. அவ்வாறே அவை விநியோகிக்க-கவும் படுகின்றன. அவற்றைக் கீழே சிந்திச் சிதறியும் காலால்

மிதித்தும் நாய் நரிகளுக்கெறிந்தும் நாலாவிதமாகச் சீரழித்தும், அவற்றை ஒரு கழிவு பொருளாக நாம் கையாளுகிறோமே யொழிய இறைவனுடைய நிர்மாலியம் என்று நம்மவர் கொண்டாடுவதில்லை. அதனால் கிறிஸ்தவ ஆராதனையிற் போல, அத்துணை உயரிய தேவ வசீகரம் நமது ஆலய நிவேதனங்களோடு இணைக்கப்பட்டிருக்குமாவென ஐயப்பட வேண்டியதாயிருக்கின்றது. அதனைப் பற்றித் தீர்மானமாகக் கூறவல்லவர் சூட்சும திருஷ்டியாளரே. அன்றியும் நமது நூல்களில் நிர்மாலியங்களைப்பற்றி ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் காணப்படுகின்றபடியால், தக்க அதிகாரத்துடன் அவற்றை விளக்க வல்லவர் அன்பு கூர்ந்து விளக்குவாராக. ஆகமங்களின் சில வாக்கியங்களாவன:—

## காமிகாகமம்.

1. யானைநோய் உண்ட விளாங்கனியின் சாரத்தைப்போல லிங்கத்தின் முகங்களில் நிவேதனஞ்செய்த அன்னத்தைப் பாவிக்க வேண்டும். (யாரும் உண்ணலாகாதென்பதாம்.)

2. நிர்மாலியம் என்பதற்கு மலமற்றதாயிருப்பது, பரிசுத்தமானது என்று பொருள். அதனால் சிவ நிர்மாலியத்தை நிந்தித்தலாகாது. அதை அநுபவித்தலுமாகாது. தவறி அநுபவிப்பின் அகோர மந்திரத்தைப் பதினாயிரம் முறை ஜெபித்துப் பிராயச்சித்தஞ் செய்யவேண்டும்.

3. அசுத்தமான ஆன்மாவையுடைய எவன் அசுத்தத்துடன் ஆசையினால் என்னால் (சிவனால்) அநுபவிக்கப் பெற்ற பரம சுத்தமான நிர்மாலியத்தை அநுபவிக்கின்றானோ அவன் இரசத்தை உண்டவன் எவ்வாறு நாசமடைவானோ அவ்வாறே நாச மடைவான்.

4. என்னுடைய அடையாளங்களான விபூதி ருத்திராக்ஷம் முதலியவற்றைத் தரித்து என்னையே சரணமாக எவர் அடைந்திருக்கின்றனரோ அவரே என்னுடைய நிர்மாலியத்தை அநுபவிக்கலாம்; ஏனையோர் அநுபவித்தல் கூடாது.

வாதுளாகமம்.

5. ஆயிரம் உபவாசங்களின் பலன்களும், அநேக பிராஜா பத்தியங்களின் பலன்களும், சிவப்பிரசாதத்தின் பலத்தின் கோடியில் ஒரு அம்சத்திற்குக்கூடச் சமானமாகாது.

வேறு நூல்கள்.

6. என்னால் (சிவனால்) அநுபவிக்கப்பட்ட நிர்மால்யம், பாதஜலம், புஷ்பம், பத்ரம் என்னுமிவற்றை எவன் ஆதரவுடன் அநுபவிக்கின்றானோ, அவன் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் இவற்றை முறையே அடைகின்றான்.

இவ்வாறு ஒவ்வொரு ஆகமத்திலுமே விதிவிலக்குகள் முரண்படுவனவாகப் பல காணப்படுகின்றன. சகலாகம பண்டிதர்கள் அவற்றைச் சமரசப்படுத்தி உண்மையை விளக்குவாராக.

இன்னும் வாதுளோத்தராகமத்தில், "பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கத்தில் எவ்வாறு பூர்வபாவனை செய்யக் கூடாதோ, அவ்வாறே சிவப்பிரசாதத்தினிடத்தும் பூர்வ பாவனையை நீக்குதல் வேண்டும்," என்னும் வாக்கியம் உள்ளபடியால், இங்கு "வஸ்து மாறுதல்" (Transubstantiation) போன்ற ஏதோ ஒரு நிகழ்ச்சி நடைபெறுகின்றதென அநுமானிக்கலாகும். ஆயினும் அவைபற்றி நெற்றிக்கண் ஆராய்ச்சியின்றி, உறுதியாகவோ நுணுக்கமாகவோ ஒன்றும் கூற முடியாதென்றாலும் நமது ஆலயங்களில் நிவேதிக்கப்படும் பொருள்கள், விதிப்படி நிவேதிக்கப்படின் ஏதோ மாறுதல்களை அடைகின்றனவென்றும், அவற்றை பய பக்தியுடன் உட்கொள்வதால் மக்கள் ஸ்தூல உடம்பிலும் சூட்சும உடம்புகளிலும் நற்பலன் பெறுவரென்றும் பொதுப்படையாகக் கொள்ளுதல் தவறாகாது.

மடைப்பள்ளியில் ஆக்குவனவெல்லாம் நைவேத்தியமாகாது. அங்கு எவ்வளவு அட்டினும் ஈஸ்வரனுக்கு நிவேதிப்பது ஒருபடி அரிசிக்கு மேற்போகாது. அவ்வாறு நிவேதிக்கப்படுவதற்கே மேற்சொன்ன கருத்துக்கள் பொருந்துவன.

## VI. (14) தீபாராதனே.

நைவேத்தியத்தின் பின்பு ஒவ்வொரு மூர்த்திக்கும் நடைபெறும் அடுத்த கிரியை தூபதீப ஆராதனைகள். தீபங்களைப்பற்றிய சூட்சும நிகழ்ச்சிகள் கிறிஸ்தவ ஆராதனையிலும் சிற்பவிதானத்திலும் வங்கப்பணி முனிவரால் ஆராயப்பட்டவை முன் பாடங்களில் விளக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவ ஆலயத்துள்ள ஒன்பது மெழுகு திரி விளக்குகளும் பிரதிஷ்டை செய்யப்படும்போது அவற்றுள் ஒவ்வொன்று நவகண வானோருள் ஒவ்வொரு கணத்தோடு இணைக்கப்படுகின்றதாம். அந்தந்த மெழுகுதிரி, ஆராதனையில் ஏற்றப்படும்போது அதன் ஒளியும் வெப்பமும் பரப்பும் அலைகளும் சலனங்களும் அந்தந்த வானோர் கணத்தின் கவனத்தை இழுக்கின்றனவாம். சிரார்த்தத்தில் இடப்படும் பிண்டங்கள் எந்த ஆகாயத்தபால் மூலம் பிதிர்களைச் சேருகின்றனவென்று ஏளனம் பண்ணும் இன்றையப் பகுத்தறிவு மேதாவிகள் இதனையும் பரிகாசம் பண்ணுவது இயற்கை. தமிழ் நாட்டில், பஞ்சாயத்துப் போர்டுகளில், ஊர்ப்பொது ஸ்தாபனமாக அமைக்கப்பட்டுள்ள ரேடியோப் பெட்டிகள் யாவும் திருச்சி வானொலி நிலையத்தோடு மாத்திரம் சுருதி கூட்டப்பட்டிருக்கும். அதனால் திரிசிராப்பள்ளி ஒலிபரப்புத் தொடங்கியதும் பஞ்சாயத்துப் பெட்டிகள் யாவும் விழிப்படைவது இன்று சிறு குழந்தைகளும் அறியும் உண்மை. ஆயினும் சிறிது காலத்திற்கு முன்பு எவரேனும் பெரியார் ஒருவர் "இவ்வித நிகழ்ச்சி இயலும்" என்று கூறுவராயின் அவரை வெறும் பித்தனென்று மக்கள் கொள்வது இயற்கையே. அதனால் உண்மை இன்மையாகிவிடாது. அவ்வாறே இந்தப் பிரதிஷ்டா தீபங்களின் வேலை நடைபெறும் முறையும் அமைந்துள்ளது. மேற் சொன்ன தீப அலைகள் நாற்புறமும் கிளம்பியதும் அடுத்து நிற்க நேரிடும் தேவ பூத கணங்கள் ஆலயத்துள் தம் பணியையும் உதவியையும் நாடுகின்றனரென்று ஓடோடியும் வந்து உதவுவராம்; நேராகப் பிரசந்நப்பட அவசியமில்லாதபோது தம் அருள் அலைகளைப் பிரதியுத்தரமாக அவ்விடத்திற்கு அனுப்புவராம்.

சுதந்தரச்சிற்ப விதானத்திலுள்ள மெழுகுதிரி விளக்குகளும் அவ்வாறன இணைப்புடையனவே. அங்கும் இதே சூட்சும நிகழ்ச்சிகள் நடைபெறுவது நெற்றிக் கண்ணுக்குப் புலப்பட்டது.

இவ்வுண்மையை அறியாமல் சில சிற்ப விதான அரங்கங்களில் மெழுகுதிரிகளை அகற்றிவிட்டு, மின்சார விளக்குகளை உபயோகித்துவருகின்றனர். அங்கு இந்த அருட் பொழிவாகும் சூட்சும நிகழ்ச்சிகள் ஒன்றும் நடைபெறவில்லையாம். அதனால் ஒளியும் சூடும் ஒரு சேரப் பரப்பும் தீபங்கள் அக்கினி தேவரின் அம்சங்களாய், சூட்சும உலகத்தவராகிய தேவர்கள், அசுரர்கள், பூதங்கள், தேவ பூதகணங்கள் ஆகியோருடன் இணைக்கப்பட்டுள்ளனவென்றும், மின்சாரம்போன்ற வெறும் ஒளிவிளக்குகள் அங்ஙனம் தொழிற்படுவனல்லவென்றும், எண்ணவேண்டியிருக்கிறதென்று வங்கப்பணி முனிவர் அபிப்பிராயம் கூறுகின்றனர்.

இனி நமது பண்டைய சாஸ்திரங்களிலும் சமய நூல்களிலும் தீபங்கள் மூன்று விதங்களாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளன. அவை உத்தமம், மத்திமம், அதமம் எனப்படும். நெய்யும் தாமரை நூலும் இட்டு ஏற்றப்படும் தீபங்கள் உத்தம தீபங்கள்; மிக உயர்ந்த வானோருடனும் மூர்த்திகளுடனும் இணைக்கப்படுபவை. எள், இலுப்பை, தேங்காய் எண்ணெகளில் பஞ்சுத் திரியிட்ட தீபங்கள் மத்திமங்கள்; உத்தம வானோருடன் தொடர்புடையவை. வேம்பு, புன்னை யெண்ணெகள் போன்றவை அதம தீபங்களாம்; பேய் பிசாசுகளும் மிக இழிவான பூத கணங்களும் அசுரக் கூட்டங்களும் கொண்டாடுவனவாம்; அவை பேய்க் கோவில்களில் மாத்திரமே உபயோகிக்கத்தக்கனவாம். இவ்வுண்மையையொட்டியே கிறிஸ்தவக் கோயில்களிலும் தேன்மெழுகு, தாவர எண்ணெகளாலான மெழுகு திரிகளைத்தவிர மற்று மிருகக்கொழுப்பாலான வர்த்திகள் கண்டிப்பாக விலக்கப்பட்டுள்ளன. நெய் விளக்குகளும் ஏராளமான சரவிளக்குகளும் திருவாசிகளும் நடைமுறையிலுள்ள ஆலயங்கள் மிகுந்த தூய்மையும் சாந்நித்தியமுமுடையனவாய், அடியார்களைப் பெருவாரியாகக் கவர்ந்து இழுப்பனவாய் விளங்குவது இன்றும் கண் கூடாகக் காணப்படுவது. செல்வவான்களை மக்கள் அண்டுவதுபோன்று பணமுள்ள ஆலயங்களை அடியார்கள் அண்டுகிறார்கள் என்பதல்ல; ஏனெனில் ஆலயங்கள் அடியார் பணத்தைப் பறிக்கின்றனவேயன்றித் தம் பணத்தை அவருக்கு விநியோகிப்பனவல்ல. தீபங்களைப்பற்றிய இந்த சூட்சும உண்மைகளை

அறியாமல் இன்றைய ஆலய அதிகாரிகளும் வேலையாளரும் சிக்கனங்கருதி எண்ணெ விளக்குகளைப் பெரும்பாலும் அகற்றிவிட்டு மின்சார விளக்குகளோடு நின்று விடுகின்றனர். இது உலோபி யொருவன் சிக்கனங்கருதி உணவை நிறுத்திவிட்டுத் தண்ணீரைக் குடித்துக்கொண்டு உயிர் வாழ்வதுபோலாம். இரண்டு தரப்பிலும் பணம் மிகுதிப்படுவது உண்மையே; ஆனால் அந்த இரண்டிடங்களிலும் உடம்புமாத்திரமே பிணமாய் மிகுந்திருக்குமேயொழிய உயிர் நிலைத்திருப்பதில்லை. அதனால் மின்சார விளக்குகளை எவ்வளவு வேண்டுமானாலும் ஏற்றட்டும், அதற்காக எண்ணெ விளக்குகளைக் கூடியவரை குறையாதிருப்பது முறை. இந்தக் கவனக் குறைவுக ளெல்லாம் ஆலய நிர்வாகிகள்மீது பரார்த்தநன்மைப் பங்கத்தையும் அதனாலாகும் பாவத்தையும் சுமத்துவன. பரார்த்த நன்மைக்குப் பங்கம் விளைப்பதையே ஈஸ்வராபராத மென்பர். அறிந்து தொட்டாலும் அறியாது தொட்டாலும் தீயானது சுடாமல் விடாது. அவ்வாறே எல்லா இயற்கை நியதிகளும் (Nature's Laws) தொழிற்படும். அதனால் ஆலயங்களில் நடக்கும் அட்டூழியங்கள் எவையும் அவநம்பிக்கை காரணமாகப் பலன் கொடாது நின்றுவிடா. இது வெறும் பயமுறுத்தலல்ல, அன்போடு செய்யும் அறிவுறுத்தல். வினை விதைத்தவன் வினையறுப்பான், தினை விதைத்தவன் தினை யறுப்பான் என்பது மூதுரை.

நமது ஆலயங்களிலுள்ள தீபங்களும் பிரதிஷ்டையானவையே. அநேக ஆலயங்களில் அவற்றின் வருவாயைப் பொறுத்து மூலஸ்தான மூர்த்திகளின் முன்பு வாடா விளக்குகள் எரிந்துகொண்டிருக்கும். சில ஆலயங்களில் அவை நெய் விளக்குகளாகவுமிருக்கும். வாடா விளக்குள்ள ஆலயங்களில் இருளும் அசாந்தியுங் குறைந்து, அருளும், சாந்தி சாந்நித்தியமும் அதிகமாகவுமிருக்கும். மற்ற பரிவார மூர்த்திகளுக்குள்ள விளக்குகள் பெரும்பாலும் பூஜா காலங்களிலேயே ஏற்றப்படும். விளக்குகளை ஏற்றும்போது உடற் சுத்தமும் உள்ளச் சுத்தமுமுடைய பரிசாரகர் ஆசாரத்துடனும் பயபக்தியுடனும் மூர்த்தியின் மூல மந்திரஞ்சொல்லி அவற்றை ஏற்றவேண்டியது முறை. ஆனால் இன்று ஆலயக்கிரியைகள் யாவுமே முறை கேடாக நடைபெறும்போது இதில்

மாத்திரம் முறையை எதிர் பார்ப்பது முறையாகாது. நடைமுறையும் அங்ஙனமே யுள்ளது.

இந்த தீபங்களைப்போலவே தீபாராதனைத் தட்டுகளும் பிரதிஷ்டிக்கப்பட்டவையே. பிரதிஷ்டையின்போது அவற்றுள் ஒவ்வொன்றும் உரிய மூர்த்திகளுடனும் தேவதைகளுடனும் தேவ பூத கணங்களுடனும் இணைக்கப்படுகின்றன. புஷ்பதீபம் என்ற 5 அல்லது 7 தட்டுக்களைக்கொண்ட தீபம் 51 திரிகளையுடையது; ஐம்பத்தொரு அட்சர தேவதைகளோடும் இணைக்கப்பட்டுள்ளது. சைவாகமங்களின்படி சிவமும் சக்தியும் நாதவிந்துக்களாகப் பரிணமித்தபோது அவற்றிலிருந்து பெறப்பட்டவை, 51 ஒலிகளும் அவற்றாலாகிய வர்ணங்கள் அல்லது அட்சரங்களும், அவற்றாலாகிய பதங்களும் சப்த கோடி மகா மந்திரங்களும் என்ற சொற்பிரபஞ்சம் ஒருபுறம். மற்றொருபுறம் 38 கலைகளும் அவற்றிலிருந்து தத்துவங்களும் புவனங்களுமாகிய பொருட் பிரபஞ்சங்கள் தோன்றினவாம். இவையே ஆன்மாக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தனு கரண புவன போகங்கள். அவற்றில் இந்த 51 அட்சரங்களுடனும் அவற்றின் சக்திகள், அதி தேவதைகள் தேவ கணங்களோடும் தொடர்புகொண்டு இயங்குவதே முதலாவதான புஷ்ப தீபம். அவ்வாறே மற்றுள்ள சோடச தீபங்களும் அருளியக்கம் பெறுவன. அவற்றுள் சில, வியாக்ர தீபம (பராசக்தி), ஸிம்மம் (துர்க்கை), பிரமரம் (தேவி), சக்தி (சக்தி), திரிசூலம் (திரி மூர்த்தி), ஹம்ஸம் (பிரம்மா), கூர்மதீபம் (மஹாவிஷ்ணு), புருஷமிருகம் (சரஸ்வதி), கஜம் (விநாயகர்), குக்குடம் (ஸ்கந்தர்) என்று கூறப்பட்டுள்ளன. மற்றுள்ள தீபங்களுக்கும் அவ்வாறே தனித்தனி மூர்த்திகள் உள்ளனர். அவற்றுள் ஒவ்வொன்றையும் சமர்ப்பிக்கும்போது அவற்றிற்குத் தனித் தனியாக மந்திரங்களும் ஏற்பட்டுள்ளன. அமமந்திர சுலோகங்களை ஓத முடியாதபோது, ஆராதனை மூர்த்தியின் மூலமந்திரமாவது ஒவ்வொன்றுடனும் பக்தியுடன் ஓதப்படல் வேண்டும். இது இன்று எங்கும் நடைபெறுவதில்லை.

நமது ஆலயங்களில் அருட் பொழிவு பெரும் பிரவாகமாகப் பெருக்கெடுக்கும் வேளை இந்த ஆராதனை வேளையே; அதுவே

அடியார்களுடைய பக்திப் பெருக்கையும் ஊக்கப்படுத்தும் வேளை. ஆகையால் இக் கிரியை மிகுந்த கவனத்துடனும் பய பக்தி-யுடனும் இயற்றப்பட வேண்டும். அடியார்களும் கூடுதலான அருளைப் பெற இவ் வேளையை எதிர் பார்த்து வழிபடச் செல்வது நல்லது; சென்றால் மாத்திரம் போதாது, முறையுடன் வழி படவும் வேண்டும். அவ் வேளையே பல திறப்பட்ட அருட் சக்திகள் பண்பட்டுத் திரிலோகங்களுக்கும் இறங்கும் வேளை-யாகையால், யாவரும் ஆலய தெரிசன விதிப்படி தம்மைத் தயாரித்துக் கொண்டு அப்போது தொழுவது அதிகப் பயனைத் தரும்.

## VI. (15) தோத்திரங்கள்.

இனி நடை பெறுவது தோத்திரங்கள், ஆரிய திராவிட வேத பாராயணங்கள். பொருளறிந்து அன்புடன் ஓதப்படும்போது இவை அடியார் மனத்தில் பக்தியைப் பெருக்கவும், அதனால் அவரிடம் அருள் நன்கு சாரவும், அந்த பக்திக்கு மாறுத்தரமாக ஆலயத்துள் அருட் சுரப்பு ஏற்படவும் உதவுகின்றன. பொரு-ளறியாதும் கவனம் ஊன்றாமலும் யந்திரத்திட்ட இசைத் தட்டுப் போல ஒலிக்கப்படுமானால் இவை உரிய பலனில்லாது-போம்.

## VI. (16) பூஜா சமர்ப்பணம்.

இதுவே மூர்த்தி பூஜையின் முடிவு. பரார்த்த பூஜையின் பலன் உலக க்ஷேமத்திற்காக உதவும் பொருட்டு நிரோதார்க்-கியத்துடன் ஈஸ்வரார்ப்பணம் பண்ணப்படும். யாதொரு தேவையும் இல்லாதவன் இறைவன். ஆதலான் அவனுக்கு ஈயப்படுபவை யாவும் உலகையே சாரும். அர்ப்பிக்கப் படாதவை அவனவனையே சேரும்.

இந்த அர்க்கியங்கள் நான்கு வகை: சாமான்னியம், விசே-ஷம், நிரோதம், பராங்முகம் என. ஒவ்வொன்றுக்கும் தயா-ரிப்பு முறை வெவ்வேறு. அவற்றுள் சாமான்னியார்க்கியம் பரிவார தேவதைகளை உபசரிக்க உபயோகப்படுவது. விசே-ஷார்க்கியம் மூலஸ்தான மூர்த்திகளாகிய சிவன், விஷ்ணு, தேவி

ஆகியோருக்கு உபயோகிக்கப்படுவது. நிரோதார்க்கியம் மூர்த்தி பூஜையை முடிப்பது. நிரோதம் என்றால் அழிவு. அதனால் இப்போது சூட்சுமமாக நடைபெறுவது கர்ப்பாலய அருள் திரட்டிகளின் அழிவு என்று அனுமானிக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சிறு சிறு அருள் திரட்டிகள் தனித் தனி மூர்த்திகளின் பூஜை யாரம்பத்தில், முதலாவதாகிய கர்ப்பாவரண பூஜையில், அமைகின்றன வென்பது மேலே கூறப்பட்டது. அதனுள் ஆராதனையின் போது கூடுதலான வீரியத்துடன் (High Potency) திரண்டு அடைபட்டிருக்கும் அருள், இப்போது வெளிப்பட்டுப் பேராலய அருள் திரட்டி முழுவதும் பரவி அங்கு சம நிறையாக வியாபித்து நிற்கும். அதற்கான நிரோதார்க்கியம் கொடுப்பதே பூஜா சமர்ப்பணமாம். இதுவே தனித் தனி மூர்த்தியின் ஆராதனை முடிவும், ஒரு வகையில் சோடசக் கிரியையும் ஆகும்.

செயலுள்ள ஆலயங்களில் நாள் தோறும் ஆறு காலப் பூஜைகள் நடைபெறும். ஒவ்வொரு காலமும் சண்டேசர் பூஜையுடன் முற்றுப் பெறும். அந்தந்தக் காலங் கூடியதும் கொடுக்கப்படுவது நாலாவதாகிய பராங்முக அர்க்கியம். அக்கிரியை விசர்ஜனமென்னப்படும்; அதாவது அனுப்புதல்,—அழைக்கப்பட்ட தேவாதிகளை நன்றி கூறி விடை கொடுத்தனுப்புதலாகும். அதைச் சண்டேசர் பூஜை (X) முடிவில் காண்க.

சைவ மக்களில் சமய விசேஷ தீக்ஷைகள் பெற்று ஆன்மார்த்த பூஜையும் ஏழப் பண்ணியவருக்கு, சைவ சமய சந்தான குரவருள் ஒருவரும் சகலாகம பண்டிதருமாகிய அருணந்தி சிவாசாரியார், தம் "சிவஞான சித்தியா"ரில் மூர்த்தி பூஜையைப் பற்றிய குறிப்புக்களை இவ்வாறு தொகுத்துக் கூறுகின்றனர் :—

"புத்திர மார்க்கம் புகலிற் புதிய விரைப்போது,
புகை, ஒளி, மஞ்சனம், அமுது முதல் கொண்டு, ஐந்து
சுத்தி செய்து ஆசனம், மூர்த்தி, மூர்த்திமானும்
சோதியையும் பாவித்து, ஆவாகித்துச், சுத்த
பத்தியினால் அர்ச்சித்துப் பரவிப் போற்றிப்,
பரிவினொடும் எரியில்வரு காரியமும் பண்ணி,
நித்தலும் இக் கிரியைதனை இயற்றுவோர்கள்
நின் மலன் தன் அருகிருப்பர் நினையுங்காலே."

இந்த ஆன்மார்த்த பூஜை இன்று முழுவதும் அருகி விட்டது. அதனால் பரார்த்த பூஜை முறையும் அடியார்களுக்கு மட்டுமன்றிப் பட்டருக்குமே பாடமாகாது போயிற்று. இந்து சமயக் கிரியா முறைகளுக்கும் அவற்றைக் கைக் கொள்ளும் ஆலயங்களுக்கும் இது ஒரு பரிதாபகரமான நிலை. பிரமாண நூல்கள் இருந்தும் அவை பயன்படாது கிடக்கின்றன. அவை

பாடம் 39.

## சிவாலய பரார்த்த பூஜை. (தொடர்ச்சி II.)

### VII. பரிவார பூஜை.

நமது ஆலயங்களில் மூலவருக்கும் அம்பாளுக்கும் கால சந்தி, உச்சிக் காலம், சாயரக்ஷை ஆகிய மூன்று காலங்களிலும் இந்தப் பதினாறு அங்கங்களுடன் கூடிய பூஜை செய்யப்பட வேண்டும். இதில் ஆகமங்களுக்குள் பேத மில்லை. மற்ற மூன்று உப காலங்களிலும் இவ்வளவு விரிவாக வன்றிச் சுருக்க முறை கையாளப்படும். இந்தச் சுருக்க முறையே பரிவார தேவதைகள் யாவருக்கும் பிரதான காலங்கள் மூன்றிலும் நடைபெறுவது. மற்றக் காலங்களில் அவர்களுக்குப் பூஜை கிடையாது. பரிவார பூஜைகள் யாவும் பேராலய அருள் திரட்டிக்குள் இறை யருளைத் திரட்டுவதற்கான பலவித உபாயங்களாகும்.

### VIII. நித்ய ஹோமம்.

பரிவார பூஜைக்குப் பின் நடைபெறுவது அக்கினி காரியம். அது நித்ய ஹோமம் என்னப்படும். நமது நூல்கள், "அஷ்ட சமஸ்காரங்கள் செய்யப்பட்ட அக்னி, தேவர்களின் நாக்கு" என்று கூறுகின்றன. ஸ்தூல சம்பந்த மில்லாமலே மனத்திற்கு எய்ப்பையோ ஊக்கத்தையோ கொடுக்கக் கூடிய புற நிலைகள் இருப்பது மனோ தர்ம சாஸ்திரிகள் நன்கறிவர். அதனால் வேத மந்திரங்களோடு கூடிய நெய், அவிசு, பொரி, கடுகு, எள், பலவகைச் சமித்துக்களால் சிவாக்கினியில் ஆகுதிகள் கொடுபடும்போது, அங்குள்ள பூ, புவர், சுவர்லோக ஆகாயங்களில், தேவர்களின் வாழ்க்கைக்கும் வேலைக்கும் வீரியத்திற்கும் மனத் திருப்திக்கும அநுகூலமான அலைகளும் சலனங்களும் அமைகின்றனவாம். அந்த நுண் அலைகளே தேவர்களுக்கு உணவாவது; ஸ்தூல உணவு அவர்களிடம் சாருகின்றதென்பதெல்ல. தேவர்களுக்கு அசக்தியையும் வெறுப்பையும் தரவல்ல அலைகள் அபிசார ஓமம் முதலியவற்றிலிடப்படும் ஆகுதிகளின் தொழிலாகும். அவை அசுரருக்கு நல்விருந்தாவன.

இன்று ஐரோப்பிய அமெரிக்க நாட்டுக் கலாசாலைகள் சில-வற்றில், வகுப்பறைகளில் தக்க அளவிற்கு மின்சார காந்த சக்தியைப் பரப்புவதால் கணித சாஸ்திரம் போன்ற கடின பாடங்கள் பிள்ளைகளால் எளிதில் கிரகிக்கப்படுகின்றன வென்பது அநுபவ மூலமாகத் தெரிகிறது. அம் மாதிரியே தேவர்களுக்-குதவும் அலைகளையும் காந்த நிலையையும் வசீகர சக்திகளையும் இந்த அக்கினி காரியம் உண்டு பண்ணுமெனக் கூறப்படுகின்றது. அக்கினி காரிய மில்லாது இந்து மதக் கிரியைகள் எவையுமே நடைபெறுவதில்லை. ஆகையால் அதில் ஏதோ ஒரு பேருண்-மையை வித்தகச் சித்தர்களா யிருந்த நமது ஆன்றோர் அமைத்-துள்ளன ரென்று கருதுவது தவறாகாது.

"சிருஷ்டி தத்துவத்தில், பிரம்ம தேவன் யக்ஞத்தோடே பிரஜைகளைப் படைத்து, இதனால் விருத்தியடையுங்கள், இது உங்களுக்குக் காமதேனு வாகட்டும். இதனால் தேவர்களைப பேணுங்கள், தேவர்கள் உங்களைப் பேணட்டும், பரஸ்பரம் பேணிப் பெரு நன்மை யெய்துவீர், யாகத்தால் பேணப் பெற்ற தேவர்கள் நீங்கள் நாடிய போகத்தை நல்குவார்கள்." (III. 10, 11, 12) என்றும்,

"உணவினின்றும் உயிர்கள் உண்டாகின்றன. உணவு மழையினின்றும் உண்டாகின்றது. மழை யக்ஞத்தினின்றும் உண்டாகின்றது." (III. 14) என்றும் பகவான் கூறுகின்றனர். இவை கீதாசாரியார் திருவாக்குகள். இவற்றிலிருந்து, நாடு செழிப்பதற்கும் மக்கள் நல் வாழ்வு பெறுவதற்கும் இந்த நித்ய ஹோமமாகிய யக்ஞம் ஒரு முக்கியமான கருவியெனக் கருத வேண்டிருக்கிறது. அந்தணன் ஒவ்வொருவனும் அவனவன் வீட்டில் நாள் தவறாது அக்கினி காரியம் செய்து வந்த காலத்தில், அக் குலத்தவர் பெரிதும் போற்றப் பட்டன ரென்பதும், பாரத நாடும் பட்டினி பசியின்றிப் பெரு நாகரீகத்தில் வாழ்ந்து வந்த தென்பதும் சரித்திர உண்மைகளே. அதனால் அவை ஒன்றுக் கொன்று தொடர் புடையனவாக இருந்திருத்தல் கூடுமென்று துணியலாகும். ஆலய ஆராதனைகளும், அன்றைய இந்து அரச-ரின் கீழ் ஆகம முறைப்படி வெகு அழகாக நடந்திருத்தல் வேண்டும்: அது பக்தியும் சமய நூலறிவும் பெருகிச் செழித்-

திருந்த காலமாதலால். இன்று "பார்ப்பானைச் சாமியென்ற காலமும் போச்சு, பசியும் பஞ்சமும் தலை விரித்தாடலாச்சு".

அக்கினி காரியம் முடிந்ததும் அந்த பஸ்மம் எல்லா மூர்த்திகளுக்கும் ரக்ஷையாகத் தரிக்கப்படல் வேண்டும். மனிதருக்குள் நோய் நொடிகள், பேய் பிசாசுகள், பாதை உபத்திரவங்கள் முதலியன வந்தவற்றை விலக்குதற்கும் வாராமல் தடுப்பதற்கும் ரக்ஷைகள், தகடுகள், தாயத்துக்கள், காப்புக்கள் போன்றவை அணியப்படுவதுண்டு. இந்த ரக்ஷைகள் (Talisman) நம் நாகரிகத்தை எளனமாகப் பழிக்கும் மேனாட்டாருக்குள்ளும் நடைமுறையிலுள்ளன. ஆனால் அவ்வித இடைஞ்சல்கள் ஏற்படாத மூர்த்தி பிம்பங்களுக்கு ரக்ஷையிடும் நோக்கம் யாதாயிருக்கும்?

கோவிலுள் கரண்டிகொண்டு தீர்த்தம் விநியோகிப்பின் அது பலருக்கு வழங்கலாகும். பஞ்சபாத்திரத்தையே கவிழ்ப்பதானால் அது ஒரு சிலருடன் காலியாகிவிடும். மழைகாலங்களில் உண்டாகும் ஆற்றுப் பெருக்கை அப்படியே செல்லவிட்டால், அது நீடித்த நன்மை தராது கடலிற் சென்று கலந்துவிடும்; அதனை அணைகட்டிச் சிறுகச் சிறுக வெளியே விடுத்தால், அது ஆண்டு முழுவதும் மக்களுக்குப் பயன்படும் முறையில் பணி செய்யும். அவ்வாறே யந்திரங்கள், ரக்ஷைகள், தகடுகளில் ஸ்தாபிக்கப்படும் சக்திகள், முறைப்படி கவசமிடப் படாவிட்டால் நீடித்து நின்று வேலை செய்யாமல் வெகு விரைவில் ஒழுக்கெடுத்து விடுவது நெற்றிக் கண்ணுக்குத் தெரியவந்தது. ரக்ஷைகள் தயாரிப்பவர் இவ்வுண்மையை அறிந்தோ அறியாமலோ அகோர மந்திரம். அஸ்திர மந்திரம் முதலியவற்றால் இந்தக் கவசமிட்ட பின்னரே (Locking the Talisman) தகடுகளை அணியக் கொடுப்பர். அதுபோலவே மூர்த்தி பிம்பங்களிலும் அவற்றின் அடியில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் யந்திரங்களிலுமுள்ள தேவ சக்திகள், வேகமாக விரயமாகிப் போகாமல் சிக்கனமான முறையில் விநியோகமாகும் பொருட்டே இந்தப் பஸ்ம ரக்ஷை பிம்பங்களுக்கு இடப்படுகின்றதெனக் கொள்ளுதல் கூடும். ரக்ஷை என்ற பெயர் ஆகமங்களில் கொடுக்கப்பட்டிருப்பதனாலேயே இவ்வாறு பொருள் கொள்ள இடமுண்டாகிறது. ஆகவே நமது ஆலயகிரிகைகள் தக்கோரால் நுணுக்கமாக ஆராயப்படுமானால்,

அறிகுறியாகவோ அருள் நெறியாகவோ அங்குள்ள ஒவ்வொரு சிறு செயலும் பெரும் பொருள் நிறைந்த அமைப்பாகவே இருப்பதாகப் புலப்படலாம்.

## IX. நித்யோத்ஸவம்.

மூர்த்திகளுக்கு ஆவரணங்கள் உள்ளனபோன்று ஆலயங்களுக்கும் ஆவரணங்கள் உள்ளன. அவையே பிராகாரங்கள் என்றழைக்கப்படுபவை. முன்பாடத்திலுள்ள மூர்த்தி ஆராதனையில், மூர்த்தியின் ஆவரணங்கள், ஆவரண தேவதைகள், அவர்கள் செய்யும் வேலைகள் யாவும் விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கர்ப்பக்கிரகத்திலும், பூஜையின்போது அழைக்கப்பட்டு அங்கு பிரசன்னமாகும் தேவர்கள் கர்ப்பாலய அருள் திரட்டி என்ற சூக்ஷ்ம கர்ப்பாலயம் ஒன்றை அமைப்பரென்றும், அங்கு ஆவரண தேவதைகள் மேலுலகிலுள்ள மிகமிக நுண்ணிதான இறையருளைப் படிப்படியாகப் பரிணமஞ் செய்து திரட்டித் திரிலோக வாசிகள் அனுபவிக்கக் கூடியமுறையில் அந்தப் பல்வேறு சக்திகளைப் பண்படுத்துவரென்றும் கூறப்பட்டுள்ளது. அத்துடன், ஆரம்பத்தில் புண்ணியாக வாசனம், கணபதி பூஜைகளின்போது விசுவ கர்ம தேவர் ஆலயம் முழுவதற்கும் அமைக்கும் சூக்ஷ்ம அருளாலயமும் கூறப்பட்டுள்ளது. அதுவே பேராலய அருள் திரட்டி யென்றும், அதனுள்ளேயே சிறு சிறு கர்ப்பாலய அருள் திரட்டிகள் தோன்றுமென்றும் விளக்கப்பட்டுள்ளது. இந்தக் கர்ப்பாலய அருள் திரட்டிகளுக்குள் நடைபெறும் சக்திப் பண்பாடு பேராலய அருள் திரட்டியிலும் நடைபெறுவதற்காகவும் அந்தந்த ஆவரணங்களின் பாதுகாப்பிற்காகவும் கோவில் பிராகாரங்களிலும் ஆவரண தேவதைகள் பிரதிஷ்டிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பிராகாரம் அல்லது ஆவரணத்திலும் அவர்கள் எட்டெட்டுப்பேர் இருப்பர். அவர்கள் ஸ்தானம் சிறு சிறு பலி பீடங்களாக விருக்கும். அவர்களுக்குப் பலியிடுவதே நித்யோத்ஸவம் எனப்படுவது. அந்த ஆவரண தேவர்களின் மகத்தான இறைபணி அவர்களுக்கு பலியிடும் முறையிலேயே விளங்கும். இறைவனே ஸ்ரீ பலி தேவராக மூர்த்தங்கொண்டு சிவிகையிலேறி மேள தாளங்களுடன் பிரகாரங்களில்

வலமாகச் சுற்றிவந்து, அந்தந்த ஆவரண தேவர்முன் நின்று தாமே நேரில் அவருக்குப் பலியிடுவர்.

இந்த ஸ்ரீ பலி சுற்றுதல், பிராகாரங்களில் வலஞ்சுற்றிவரும் காந்த ஓட்டத்தைப் பண்படுத்துவதற்குமாம். ஆகையால் பூஜா காலங்களில் ஆவரண பலிபீடங்களுக் கிடையே குறுக்கும் மறுக்குமாக அடியார்கள் நடமாடுதலாகாது. அவ்வாறு நடமாடுவது சவுக்கமான காந்தஓட்டத்தில் அங்கங்கே ஒட்டை ஒழுக்குகளை உண்டுபண்ணி அதன் வீரியத்தைக் குறைத்துவிடும். அதனால் வலம் வரும் அடியார்களின் சூக்ஷ்ம உடம்புகள் சிக்கல் நீங்கிச் செம்மைப்படத் தவறிவிடும்.

## X. சண்டேசர் பூஜை.

ஒவ்வொரு காலமும் சண்டேசர் பூஜையுடன் முடிவுறும். அப்போது சிவ நிர்மாலியங்கள் சண்டேசருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அவருக்குப் பூஜை செய்யப்படும். உடனே பராங்முகார்க்கியமும் பூஜை விசர்ஜனமும நடைபெறும். அப்போது பேராலய அருள் திரட்டி சிதைந்து, உள்ளே திரண்டிருந்த அருட் சக்திகள் கோவிலின் நாற்புறமும் நாடெங்கும் பரவும். பூஜையின் ஒழுங்கையும் ஊக்கத்தையும் பொறுத்து, அந்த அருளானது ஐமபது, நூறு மைல்கள்வரை நாலாபக்கமும் பரவுமெனப் படுகிறது. அதனாலேயே இது பரார்த்த பூஜையாவது. பராங்முகார்க்கியம் கொடுத்ததும், அழைப்பிற்கிணங்கிவந்த தேவதைகளுந் தேவர்களும் பூதர்களும் அவர்கள் கணங்களும் ஆலயத்தை விட்டு வெளியேறுவர்.

சுதந்தரச் சிற்பவிதானத்தில் பிரதம அதிகாரி உரிய சைக்கினையுடன், "நான் நடையை அடைக்கின்றேன்," என்று ஓதுவர். உடனே அங்குள்ள வானவர் வெளியேறும் நிகழ்ச்சி நெற்றிக் கண்ணுக்கு விளங்கிற்று. கிறிஸ்தவ ஆராதனையின் முடிவில் சாமியார் சிலுவை முத்திரை செய்து, "ஈற்றே, மீஸா ஏஸ்ற்" என்று லத்தீன் பாஷையில் வழியனுப்புவர். உடனே நவகண வானோரும் மற்றுள்ள கணங்களும் வானவில் நிறங்களில் ஒளி வீசிக்கொண்டு ஜோதிமயமாய், கோடிசூரியப் பிரகாசமாய்,

ஆகாய வெளியில் பரந்து செல்வது ஒரு கண்கொள்ளாக் காட்சி யென்றும், நெற்றிக்கண் பார்வைக்கு அது அளவிலா அற்புதமாக விருக்குமென்றும் வங்கப்பணி முனிவர் கூறியுள்ளனர்.

இத்துடன் ஒருகாலப் பூஜை முடிவடைகின்றது. மேற்சொன்னவற்றுள் பைரவர், சூரிய பூஜைகளைத் தவிர மற்ற எல்லா அங்கங்களும் உச்சிக் காலத்திலும் சாயரக்ஷையிலும் நடைபெற வேண்டுமென்பது ஆகம விதி.

இதுவரை சிவாலய பரார்த்த பூஜா முறை குறிப்பாகத் தொகுத்து விளக்கப்பட்டது. உலகில் பல சமயங்களிலும் காணப்படும் ஞான அடிப்படை ஒற்றுமையும் ஒழுக்க அடிப்படை ஒற்றுமையும் அறிஞர்களால் ஒருவாறு இன்று ஒப்புக்கொள்ளப்படுகின்றன. அவற்றின் கிரியா முறைகளையும் நுணுக்கமாக ஆராயும்போது அங்கும் அடிப்படை ஒற்றுமையே காணப்படுகின்றதென்பது இதுவரை கூறியவற்றிலிருந்து ஒருவாறு விளங்கியிருக்கும். அவ்வாறு விளங்கும்போது,

"வேறுபடும் சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளே, நின்விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை, முடிவில் மோன
வாரிதியின் நதித்திரள் போல் வயங்கிற் றம்மா"

என்ற நம் தாயுமானப் பெருந்தகையாரின் அருள் வாக்கு அவர்கள் மனத்து வேரூன்றும். அந்த அறிவு உண்மையாக ஏற்படுமானால், மதங்களில் அவருக்கு ஒரு சமரச உணர்ச்சி உண்டாகும். அவற்றின் ஆராதனைகளிலும் நம்பிக்கையும் பக்தியும் பெருகி, சமய சம்பந்தமான உலக ஒற்றுமைக்கு அவர்கள் ஒரு ஊன்று கோலாக விளங்குவார்கள்.

கிரியா முறைகளை நுணுக்கமாக ஆராய விரும்புவோர் அவற்றைப்பற்றிய வங்கப்பணி முனிவர் (Bishop C. W. Leadbeater) நூல்களை நன்கு கற்றறிவாராக. இங்கு தொகுத்துக்கூற இயலாத பல பல முக்கியமான உண்மைகள் அவற்றிலிருந்து விளங்கவரும். கிரியைகளில் பற்றுள்ளவர்கள் கட்டாயமாகக் கற்றறிய வேண்டிய நூல்கள் அவை; அப்பொழுதே அவர்கள் ஒருவாறு காரண காரிய முறைகளையறிந்து, செய்வன திருந்தச் செய்து, அக்கிரியைகளால் நற்பலன் பெறுதல் கூடும். அல்லாதபோது அவர்கள் வழிபாடுகள் வெறும மூடக்கொள்கைகளாக, அற்பப்பலன் கொடுப்பனவாகவே யிருக்கும்.

பாடம் 40.

## பூஜைகள் தப்பிடின்.

திருமந்திரம்.

“ ஆற்றரு நோய்மிகும், அவனி மழைகுன்றும்,
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்,
கூற்றுதைத்தான் திருக் கோயில்களானவை,
சாற்றிய பூஜைகள் தப்பிடில் தானே. (517)

முன்னவனார் கோயிற் பூஜைகள் முட்டிடின்,
மன்னர்க்குத் தீங்குள, வாரி வளங் குன்றும்,
கன்னம் களவு மிகுத்திடும் காசினிக்கு,
என்னருள் நந்தி எடுத்துரைத்தானே.” (518)

திருமூலர் சித்த புருஷர். அவர் கூறியுள்ள திருமந்திரம் வேத மந்திரங்களை யொத்த பெருமை யுடையது. அதனால் அது தமிழ் மறை யெனப்படுவது. அங்கு, “பூஜைகள் தப்பிடின்” நேரிடுங் கேடுகளைக் குறிப்பிடும் மந்திர மொழிகள் மேலே தரப்பட்டுள்ளன. “பூஜைகள் தப்பிடின்” என்பது பூஜைகள் செய்யப்படாமல் தப்பிப் போனாலும் பூஜைகள் தப்பாகச் செய்யப்பட்டாலும், அதாவது பூஜைகளைச் செய்யத் தவறினாலும், தவறாகச் செய்தாலும் என இரு வகையாகப் பொருள்படும். மேற் சொன்ன பலன்களை மனதில் வைத்துக் கொண்டு நமது ஆலயப் பூஜைகள் எவ்வாறு நடைபெறுகின்றன வென்று ஒரு சிறிது ஆராய்வோம்.

எவரையும் குறைகூறும் நோக்கத்தோடு இந்தப் பாடம் எழுதப்படவில்லை. ஆனால் நோயிருப்பை அறியாதபொழுது அதற்குச் சிகிச்சை தேடுவது இயலாததுபோல உள்ள குறைபாடுகளை அறியாதவரை அதற்குப் பரிகாரம் ஏற்படப்போவதில்லை. அந்நோக்கத்தோடேயே இப்பாடம் எழுதப்படுகிறது. ஒருபானை சோற்றிற்கு ஓரரிசி பதம் என்பார்கள். அதுபோல ஆலயங்கள் யாவும் ஆராயப்படவில்லையானாலும், ஆராயப்பட்டவற்றுள் காணப்பட்ட குறைபாடுகள் பொதுப்படையாகக் கூறப்படுகின்-

றன. ஆலய அதிகாரிகளும் அடியார்களும் மனம்வைத்தால் அவை பெரும்பாலும் நீங்கி அதனால் நாட்டுக்கு நன்மை ஏற்படு-மென்பது உறுதி.

மேலே செல்லுமுன், இதுவரை விளக்கப்பட்டவற்றுள் ஒன்றிரண்டு குறிப்புகளை ஞாபகப்படுத்திக்கொள்ளுதல் நல்லது. அவையாவன :—ஆகம சாஸ்திரங்கள் சூட்சும உலக விஞ்ஞான நூல்கள், (Occult Science treatises). அங்கு கூறப்படும் கிரியைகள் குப்த உலக ரஸாயனத தொழில் முறைகள், (Al. Chemical processes). நமது ஆலயங்கள் பெரியனவும் சிறியனவும் புவர்லோக சுவர்லோக ரஸாயனத் தொழிற்சாலைகள், (Laboratories & Power Houses). பூலோகத்து ஒளி, சூடு, மின்சாரம், காந்த சக்திகளைப் பலமுறைகளில் உற்பத்தி செய்வதுபோல, மேலுலக சக்திகளைக் கையாளும் முறைகளே ஆலயக்கிரியைகள். அவை மனிதனுக்கு ஆத்ம சாந்தியையும் மனோமய விஞ்ஞானமய கோசங்களின் வளர்ச்சியையும் அருளும்போது அங்கு ஏற்படும் சக்திகள் அருட்சக்திகள் எனப்படும். ஆனால் பூலோக ரஸாயன முறைகள் "தப்பிடின்" அவைமூலம் மனிதனுக்கும் வீடு வாசல்களுக்கும் ஆபத்துகள் உண்டாவதுபோல, ஆலயப் பூஜை-களாகிய குப்த ரஸாயன முறைகளும் "தப்பிடின்" அவை மனித வர்க்கத்தைக் கீழ்மைப்படுத்தும் மருட் சக்திகளை உண்டுபண்ணி விடுமென்பதே தலைப்பில் உள்ள திருமந்திரச் செய்யுள் அறி-வுறுத்துவது. அது இன்றைய உலக அனுபவமாகவும் உள்ளது. இவ்விதக் கேடும் நன்மையும் ஆலயஞ் செல்லும் மனிதனுக்கு மாத்திரமல்ல; ஆலயத்தைச்சுற்றியுள்ள உயிர்வர்க்கங்கள் யாவுமே அவ்வாறு பாதிக்கப்படும். அதனால் ஆலயப் பூஜைகள் ஆகம முறைகளில் வழுவாது, மிகக் கவனத்துடனும் பயபக்தியுடனும் பொருளறிந்தும் மிகத் துல்லியமாகவும் இயற்றப்படல் வேண்டு-மென்பது வற்புறுத்திக் கூறத் தேவையில்லை.

நமது ஆஸ்பத்திரிகளில் ரணசிகிச்சைகள் நடைபெறுவதை அநேகர் பார்த்திருப்பார்கள். அங்கு ஆயுதங்கள் யாவும் கிருமி நாசகாரிகளில் அடுத்தடுத்துக் கொதிக்க வைத்துச் சுத்தம் செய்யப்படும். டாக்டர்களும் நர்ஸுகளும், அவ்வாறான முக-மூடிகளை அணிந்திருப்பார்கள். மூக்கு, வாய் வழியாக வரும்

சுவாசம் நோயாளியைப் பாதிக்காதிருக்க அம் முகமூடிகளும் மற்று அவர்கள் கைகள், கால்கள், உடைகள் யாவுமே அவ்வாறு சுத்தி செய்தாகவேண்டும். அல்லாதபோது "சஸ்திர வேலை வெற்றிகரமாய் நடந்தது, நோயாளிதான் இறந்துபோனுன்" என்று முடிவு கூறி விடுவார்கள்.

அவ்வாறே க்ஷயரோக ஊசிமருந்து (BCG Vaccine), பென்ஸிலின் முதலிய சாஸ்திரீய மருந்துகளும் தயாரிக்கப்படுகின்றன. பென்ஸிலின் வெறும் பூஞ்சாணத்திலிருந்தே தயாரிக்கப்படுகின்றதாயினும் அதன் தொழிற்சாலைகளைப் படங்களில் காணும்போதே மனம் பிரமிக்கின்றது. அங்கு பரிமாறுகிறவர்கள் ஆவிகள் (Ghosts) போலவே காணப்படுகின்றனர். கண்களைத் தவிர மற்று உடம்பு முழுவதும், கைவிரல்கள் உட்படக் கிருமி நாசகாரித் துணியாலேயே மூடப்பட்டிருக்கின்றன. சாதாரண வெளிச்சமோ காற்றோ உளளே புகக்கூடாதாம். அவையும் தனியே தயாரிக்கப்பட்டனவாம். அவ்வளவு கவனமாய் வேலை நடைபெறுவிட்டால் நற்பலனுக்குப் பதிலாகத் தீய பலனே ஏற்படுமாம. பூலோக ரஸாயன முறைகளுக்கு இவ்வளவு கட்டுப்பாடானல் மேலுலக முறைகளுக்கு எவ்வளவு சூட்சுமமான கட்டுப்பாடுகள் கவனிக்கப்படவேண்டுமென்பதைக் கூறவும் வேண்டுமா? விஞ்ஞானத் தொழில் முறைகள் யாவும், அவை பூலோக முறைகளாயினும் சரி, சூட்சும லோக முறைகளாயினும் சரி, நற்பலன் தருவதற்கு உரிய நியதிப்படி (Laws) இயற்றப்பட வேண்டுவது இன்றியமையாதது.

லயாங்க பூஜை என்ற சுருக்க பூஜையும் போகாங்க பூஜை என்ற விரிவான பூஜையும் இரு முறைகளை மேலே கூறப்பட்டுள்ளன. பிம்பம், யந்திரம், ஆலயம் இவற்றின் வசீகர அருட்பொழிவும் சாந்தியும் இடைவிடாது நாற்புறமும் வீசிறிக்கொண்டிருப்பதால் அவை நேரத்திற்கு நேரம் குறைந்துகொண்டேவரும். பெரும்பாலும் அக்குறைவை நிரப்புவதே லயாங்க பூஜையின் வேலையென்னலாம். அவ்வேலையோடு சுற்றுப்புர நாட்டையும் அங்குள்ள உயிர்வர்க்கங்கள் யாவற்றையும் அருளாலயத்தின் மூலம் ஆசீர்வதிப்பது போகாங்க பூஜையின் வேலையாம்.

இனி, முன்பாடத்தில் கொடுக்கப்பட்ட எண்ணிக்கையின்படி (2) காலை பைரவர் பூஜை, (4) சூரிய பூஜை, (5) கணபதி பூஜைகள் அனேக ஆலயங்களில் நடைபெறுவதில்லை. வருவாய் குறைவாகவுள்ள ஆலயங்களில் ஆரம்பக் கிரியையும் அத்யாவசியக் கிரியையுமான (1) புண்யாகங் கூட நடைபெறுவதில்லை. அதனால் எங்கெந்த தேவர்கள் பிரசன்னமாவர், விசுவகர்ம அருளாலய நிர்மாணம் எவ்வாறு நடைபெறுகின்றது, அல்லது பேராலய அருள் திரட்டி அமைக்கப்படுகின்றதா வென்பன அறிவதற்கில்லை. புண்யாக மில்லாத ஆலயங்களில் தேவர்கள் மூச்சுத் திணறுகிறார்களா வென்பதும் அறிவதற் கில்லை.

## (3) திரவியங்கள் தயாரிப்பு.

இதுவும் முறைப்படி தயாரிக்கப் படுவதில்லை. ஆலயத்தின் செல்வத்திற் கேற்றபடி பல திரவியங்கள் திரட்டபபடுமே யொழிய அவை ஆகம முறைப்படி தயாரிக்கப்படுவதில்லை. அர்க்கிய பாத்ய ஆசமனீய தீர்த்தங்கள் தயாரிக்கப்படுவதும் மூர்த்தி பூஜைகளில் உபயோகப்படுத்துவதும் ஒழுங்காக நடைபெறுவதில்லை. திரவியங்களுள் ஒன்றாகும் பஞ்ச கவ்யத்தை எடுத்துக் கொண்டால் அதைத் தயாரிக்கும் முறையாவது: தரையை மெழுகி அங்கு நன்றன்கு கோடுகளால் குறுக்கும் நெடுக்குமாகச் சதுரக்கோலம் போட வேண்டும். அப்போது 9 சம சதுரங்கள் ஏற்படும். அவற்றுள் முறையே நடு, கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்குச் சதுரங்களை உரிய மந்திரங்களால் தனித் தனி அபிமந்திரிக்க வேண்டும். பின் அங்கு ஐந்து பாத்திரங்களை வைத்து அவற்றிற்கும் வெவ்வேறான மந்திரங்கள் ஓதப்படல் வேண்டும். பின் சிருஷ்டிக் கிரமமாக, மக்களுக்குக் காமதேனுவின் அருளமுதக் கொடையாகும் பால், தயிர், நெய், கோசலம், கோமயம், என்பவற்றை நடுக் கிண்ணத்திலிருந்து வலமாக முறையே ஒவ்வொன்றில் ஒவ்வொன்றை வார்த்து, அவற்றிற்குத் தனித் தனியாக ஏற்பட்டுள்ள மந்திரங்களால் தேவ சக்தி யூட்ட வேண்டும். பின்னர், லயக்கிரமமாகக் கோமயத்திலிருந்து பால் வரை அடி பிடித்து ஒன்றோடொன்று கலந்து அந்தக் கலப்புக்கு அஷ்ட சமஸ்காரங்கள் செய்து மந்திரம் முத்திரை பாவனைகளால் வசீகர சக்தி யூட்டித் தூப தீபங்கள் சமர்ப்பித்து அர்ச்சித்து

வணங்குதலே பஞ்ச கவ்யம் தயாரிக்கும் முறை. இது இம்மாதிரி எந்த ஆலயத்திலாவது நடைபெறுகின்றதாவென ஆலய ஆதரவாளர்கள் கவனிப்பாராக.

பஞ்சாமிர்தம் தயாரிப்பதும் இதனைப் போன்றதே; மந்திரங்கள் மாத்திரம் வேறு யிருக்கும். ஆனால் நம் ஆலயங்களில் அந்த அமிர்தம் தயாரிக்கப்படும் விதத்தை விளக்கினால் நாஸ்திகருக்கு அது நகைப்புக் கிடமாக விருக்கும்; ஆங்கில முறை வைத்தியருக்கு அது உண்ண அருவருப்பாயிருக்கும். அலம்பாத, அதாவது அழுக்குப் படிந்த கைகால்களையுடைய நாலைந்து பேர் தரையில் வட்டமாகக் குந்தியிருப்பர். நடுவே ஒரு சட்டியை வைப்பர். சுற்றிலும் குப்பையும் கூழமுமாகக் கிடக்கும். சிலர் வாழைப் பழங்களை உரித்து மேலுங் கீழுமாகப் போடுவர்; அதாவது சில வாய்க்குள்ளும் வயிற்றுக்குள்ளும் போகும். சில சட்டியினுள்ளும் போய் விழும். சில தரையிலும் அவர்கள் கால்களிலும் விழுந்து அந்த மண்ணோடும் கல்லோடும் சட்டிக்குள் எடுத்துப் போடப்படும். சில வாயினால் ஊதப்பட்டு அந்த எச்சிலோடு உள்ளே போடப்படும். இந்தப் பரிசுத்த தயாரிப்புக்கு முத்திரை (ஸீல்) வைக்கிற மாதிரி கரும்புத் துண்டுகளை காலுக்குள் மிதித்துக் கொண்டு அதைக் கல்லால் தட்டி நைத்தெடுத்து உள்ளே பிழிந்து விடுவர். பின் யாவற்றையும் சேர்த்துப் பிசைந்து ஈஸ்வரனுக்கும் அபிஷேகம் பண்ணி விடுவர். இந்தத் தயாரிப்பைப் பார்த்துக் கொண்டிருந்த அறிவிலிகள் யாராவது அரோசகப் பட்டால்—(அரோசகம் அருவருப்புக்கு நாகரீகப் பெயர்)—அவன் உடனே நாஸ்திகனென்றும் பிரசாதத்தை நிந்திதத பாவத்திற்காளானு னென்றும் இகழப்படுவான். சுகாதார விதிகளின் உண்மையை அவன் விளக்குவானுனல் உடனே அவன் சு-ம. (சுயமரியாதைக்காரன்) என்று தூற்றப்படுவான். இத் தகைய ஆஸ்திகப் பஞ்சாமிர்தம் இருப்பதைவிட இறப்பதே நல்லது. இந்தப் பஞ்சாமிர்தத் திரவியங்களைத் தவறுன, மூர்த்திக்குப் பலன் தராத முறையில் உபயோகிப்பதை விடச் சு-ம-க்காரர் கூறுகிறபடி அவற்றை ஏழை எளியவருக்கு வழங்குவது இதற்கு மேலான இறை பணியாக விருக்கும.

நடமாடுங் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடுங் கோயில் பரமர்க் கதாமே"
என்ற திருமந்திர மொழியும் அதை ஆமோதிக்கும்.

இனி, ஆராதனையின் உயிர் நாடியாயுள்ள மூர்த்தி பூஜையின் முக்கியமான பதினாறு உறுப்புகளும் மேலே கூறப்பட்டுள்ளன. அவை எவ்வாறு கோர்வையாகவும் ஒன்றுக் கொன்று இணைப்பாகவும் ஆதரவாகவும் இருக்கின்றன வென்பதும், ஒன்றை யொன்று பூர்த்தி செய்கின்றன வென்பதும், யாவும் சேர்ந்து தேவ கைலாயம் போன்றதோர் தெய்வீக விதானமாக அமைகின்ற தென்பதும் அதிலிருந்து விளங்கும். ஆனால் ஆலயங்களில் இப்போது நடைபெறுவது என்ன?

பட்டர் முதலில் கதவைத் திறப்பார். துவார பாலகர் இருப்பதான எண்ணமே அவருக்கு உண்டாவதில்லை. அவை வெறுங் கல்லுருவங்கள் தானே! பின், பரிசாரகர் வந்து விளக்கேற்றுவர். பட்டர் உள்ளே சென்று பிம்பத்தின் பரிவட்டத்தைக் களைந்தெறிவார். பழைய மாலைகளையும் (நிர்மாலியங்களை) காலின் கீழ் இடுவர். ஒரு குடம் தண்ணீரை மேலே கொட்டுவர். மாப் பொடி, மஞ்சட் பொடி, எண்ணை ஏதாவது இருக்குமாயின் அவற்றைத் தடவி, மேலுங் கொஞ்சம் தண்ணீரைக் கொட்டுவர். திரும்பவும் பரிவட்டத்தைச் சாத்தி, மாலைகளை அணிந்து விட்டு, நைவேத்தியம் தயாராகும் வரை கோவிலைச் சுற்றி வட்ட உலாத்தாக முருகன் பத்தி யுலா வருகிற மாதிரி வெட்டிப் பேச்சுப் பேசிக் கொண்டு திரிவார் பரிசாரகர் நைவேத்தியம் கொண்டு வந்ததும் அதைத் தொட்டு மூர்த்தி முன் சற்றுத் தெறித்து விட்டு, தீபத் தட்டைச் சுழற்றுவார். இதுவரை மந்திரமோ, தந்திரமோ, மாயமோ எதுவும் நடைபெறுவதில்லை. தீபாராதனையின்போது ஏதாவது நடைபெறுமாயின் அது பட்டருக்கும் பரிசாரகருக்கும் உள்ள வழக்காடு மந்திரமாகவே யிருக்கும். அவர்கள் பூசல்களைத் தீர்த்துக் கொள்வதற்கு இதுவே அவர்களுக்கு ஏற்ற சமயமாக அமையும். ஏனெனில் இருவரும் இடத்தை விட்டு நீங்க முடியாது. ஒருவர் ஏசிப்பேசுவதை மற்றவர் கேட்டுத்தானுக வேண்டும். அதனுல் மேளதாளங்களை விட உயர்ந்த சுரத்தில் அந்த வழக்குகள் ஓதப்படும், அடியார்-

களும் நின்றுகொண்டுதானிருப்பார்கள். மூர்த்தியும் அங்கு இருக்கத்தான் செய்வர்போலும். அது கல்லுருவந்தானே, அங்கு காது எப்படிக் கேட்கும்?

இந்த அழகானமுறையில் நமது ஆலய ஆராதனைகள் இன்று நடைபெறும்போது, திருமூலர் எச்சரித்துள்ள தீமைகள் உலகில் அனுபவமாகக் காணப்படுவதில் அதிசயமென்ன விருக்கிறது. எங்கும் கன்னமும் களவும் நோயும் மலிந்துகிடக்கின்றன. தூயோரைக் காண்பது அரிதினும் அரிதாகிவிட்டது. ஆலயங்களுக்கும் உலக வாழ்க்கை, உலக நிகழ்ச்சிகளுக்கும் ஏதாவது தொடர்புளதா என்ற ஐயப்பாடும் இன்று உண்டாகிவிட்டது. ஆலயங்கள் ஆகமமுறைப்படி சீர்படுத்தப்படாவிடின் இந்த ஐயப்பாடு உண்மைப்பாடாகவே மாறிவிடும். நாலுபேர் நம்மை நோக்கி நகையாடவேண்டுமென்ற நோக்கத்துடனே, அல்லது எவரையும் குறைகூறுமுகத்தாலோ இவை எழுதப்படவில்லை. ஆனால் நோயின் சின்னங்களை அறியாதபோது, நோய்வாய்ப்பட்டிருப்பதாகவே உணராதபோது, அதற்குச் சிகிச்சை செய்வது கூடாத காரியம். அதனாலேயே நம் ஆலயங்களிலுள்ள குறைபாடுகளில் ஒரு சில—ஒரு சிலவே—இங்கு உரைக்கப்பட்டுள்ளன.

விதிப்படி நடைபெறும் ஆலயங்கள் சூக்ஷ்ம உலக ரசாயனத் தொழிற்சாலைகள், மக்களுக்கு ஆன்ம உணவளிக்கும் பால்பொங்கல் பானைகள், பொக்கிஷங்கள், அருள் ஊற்றுகள். லௌகிக உணவுகள் நிலையற்றவை, நீடித்த இன்பம் தரமாட்டாதவை. ஆன்மீக உணவோ இணையற்றது, ஏழேழ்பிறப்புக்கும் உதவுவது, என்றும் பால்போலப் பொங்கிக்கொண்டிருப்பது, இறவாப் பேரின்பந் தரவல்லது. அந்த ஆலயங்களாகிய தைப் பொங்கற்பானைகளைத் தாங்கி நிற்கும் மூன்று கட்டிகள் அதிகாரிகள், அர்ச்சகர்கள், அடியார்கள் என்ற மூவருமாவர். இம்மூவரும் சேர்ந்துழைத்தாலன்றி ஆலயங்கள் ஒருக்காலும் செம்மைப்படா, சீரும் சிறப்பும் பெறு, நாமும் ஆன்ம உணர்ச்சியில் செழிப்புறுதுபோம்.

இங்கு கூறப்பட்ட மூவருள், அதிகாரிகள்பாலுள்ள முதற்குறை அறியாமை. "ஒரு வேலையுங் கிடையாதவருக்கு உபாத்தி-

பாயர் வேலை" என்ற ஏளனப் பேச்சொன்று சிறிது காலமாக நமக்குள் நடமாடுகின்றது. அதுபோன்றே யுள்ளது ஆலயங்களுக்கு இன்று நியமிக்கப்படும் அதிகாரிகள் நிலைமையும். அவர்கள் ஆஸ்திகரா நாஸ்திகரா என்றுகூடக் கேள்வியில்லை; அதில் அக்கரையுமில்லை, நிபந்தனையுமில்லை. ஆலயங்கள் எதற்காக என்பதும் அவர்கள் அறியத்தேவையில்லை அவை உயிருள்ள ஸ்தாபனங்களா, அல்லது சில மேதாவிகள் கருதுகின்றபடி ஊராரை ஏய்க்கும் பொம்மலாட்டங்களா என்றுகூட எண்ணிப்பார்க்க வேண்டியதில்லை. அந்த எண்ணமில்லாதபோது, அங்கு உயிர் உண்டுமானால் அதனை ஊட்டி வளர்க்கும் முறைகள் யாவை, ஆலயங்களில் பேணவேண்டியவை எவை, களையவேண்டியவை எவை என்று அவர்களுக்கு அறியவேண்டிய அவசியமே யில்லாது போகின்றது. அதனால் அவர்களில் அநேகர் இந்துமத சாரம்சங்கூட இன்னதென அறியார்; அறிய ஆவலும் கொள்ளார் அவர்கள் குடியிருக்கும் வீட்டைப்பற்றியும் அங்குள்ள சமையல் சாப்பாடுகளைப்பற்றியும் நன்கறிவர்; ஆன்மாக்களுக்கு வீடருளுவதாகச் சமயநூல்கள் கூறும ஆலயங்களின் அமைப்பைப்பற்றியோ, அங்கு நடைபெறும கிரியைகளைப்பற்றியோ கிஞ்சிற்றும அறியார்; அறியவேண்டிய அவசியத்தையும் உணரார். இந்த அலக்ஷிய மனப்பான்மையினால் ஆலயங்கள் தமக்குச் சம்பளங் கொடுக்க அமைந்த அமுதசுரபிகள் என்ற ஒரே எண்ணம் அங்கு தலையெடுத்துக் தடித்துவிடுகின்றது.

அதிலிருந்து விளைவது அவர்கள் இரண்டாவது குறைபாடாகிய குறுகிய நோக்கம். இன்றைய அதிகாரிகளின் கவலையெல்லாம் நிததியப்படிததரததை எவ்விதம குறைப்பது, ஆட்டைத் திட்டங்களை எவ்விதம் குறைப்பது, எவ்வாறு சிறப்புகளைக் குறைப்பது, சம்பளங்களைக் குறைப்பது என்ற சிக்கன வேலையொன்று. மேளதாளங்களைக் காதுக்குக கடுப்பாகவும தீப எண்ணைச்செலவு கண்ணுக்குக் கடுபபாகவும கருதும் பெரியோர்களும் அதிகாரிகளில் உள்ளனர். அடுதத வேலை மூலஸ்தானம வரை வியாபாரக் கூடங்களாக்கி வாடகை வசூலிப்பதும், அடியார்கள அறிவின்றி அசுத்தப்படுத்தும் புஷ்கரணிகள்-பொற்றாமரைக்குளங்களை மீன் பண்ணைகளாக்கிக் குளமபாசிக்குத்தகைக்கு விடுவதும் வேறு இயன்ற வழிகளிலெல்லாம்

வருவாயை விருத்தி பண்ணுதலுமாம். இவ்வாறு பணத்தைத் திரட்டுவது எதற்காக? ஆலயப்பூஜையை ஒழுங்கு பண்ணுவதற்கல்ல-அண்டத்தைப்படைத்த ஆண்டவனுக்கு உணவெதற்கு? முழுக்கெதற்கு? அதுவும் வாய் வயிறில்லாத கல்லுச்சிலைக்கு? அதனால் அந்தப்பணத்தைக்கொண்டு கோட்டிக்கார ஆசிரமங்கள், குஷ்டரோக ஆசிரமங்கள், க்ஷயரோக ஆசிரமங்கள் அமைப்பது தானே முறை. கூடுமானால் சில லௌகிகப்பாடசாலைகளும் கலாசாலைகளும் அமைக்கத்தான். இவ்வாறு இன்று அதிகாரிகள் சிக்கனம் பண்ணும் முறை உயிரில்லாத உடம்பையும் பறவையில்லாத கூட்டையும் பேணுவதையே யொக்கும்.

ஆலயங்கள் அருள் சுரக்கும் ஊற்றுக்கள் என்ற உண்மையைக்கண்டபின் பூலோக ரஸாயன முறைகளை எவ்வளவு கவனத்தோடு கையாளுகிறோமோ அவ்வாறு ஆகம முறைப்படி (According to Occult Science) அங்குள்ள பூஜைகளை ஒழுங்குபடுத்துவதே அதிகாரிகளின் முதற் கடமையாகும். அதற்கான செலவுகளில் சிக்கனம் பண்ணுவது ஈஸ்வராபராதமாகும். அது வள்ளலொருவன் வரையாது ஈவதைக் குறுக்கே நின்று தடுப்பது போலாம். அடுத்ததாகக் கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற நீதிமொழிக்கு வேறும் ஆழ்ந்த கருத்துக்கள் முன் பாடங்களிலிருந்து துலங்கியிருக்கும். ஆலயந்தொழ அடியார்கள் இருப்பினும் இல்லாது போயினும், ஆகம விதிப்படி நடைபெறும் ஆராதனைகள், அருட்பொழிவைச சுற்றியுள்ள நாட்டிற் பரப்பிக்கொண்டே யிருக்குமென்றும், அதனால் அங்குள்ள உயிரினங்கள் யாவும் உத்தம நலனையும் ஆன்ம முன்னேற்றத்தையும் சிறிது சிறிதாக அடைகின்றனவென்றும் யோகக்கண்ணால் காணப்பட்ட சூட்சும அறிவு காரணமாகவே ஆலயங்கள் ஊருக்கு மையமாகப் பலவிடங்களிலும் கட்டப்பட்டுள்ளன. அந்தப் பண்டைய ஆலயங்களிற் பல இன்று வறுமையால் வாடி வறண்டு கிடக்கின்றன. ஒரு வேளை பூஜைக்குக்கூட வகையில்லாதவை பல; அர்ச்சகருக்குப் போதிய உணவில்லாத கோவில்கள் பல; தீபத்திற்கு எண்ணெயில்லாதவை பல. இவற்றின் குறைபாடுகளை நீக்கி, பண்டே பிரதிஷ்டை பெற்றுள்ள ஆலயங்கள் அனைவற்றிலும் இரண்டு காலப் பூஜையாவது முறையாக நடைபெறச் செய்வதே செழிப்புள்ள ஆலயங்களின்

வருவாய் மிச்சத்திலிருந்து செய்ய வேண்டிய முதற்பணியும் கடமையுமாகும். அத்துடன் அர்ச்சகருக்கும் அதிகாரிகளுக்கும் அடியார்களுக்குமே அவரவருக் கேற்ற அளவு ஆகம அறிவும் ஆலயங்களின் உட்பொருள் விளக்கமும் புகட்டப்படல் வேண்டும். மற்றுள்ள பொது மக்களுக்கும் ஏற்ற முறையில் சமய அறிவு ஊட்டப்படவேண்டும். இச்செலவுகள் போக எஞ்சியிருக்கும் பணங்கள் ஆலயங்களைப் பழுது பார்ப்பதற்கும் புதுப்பித்தற்கும் பெருக்கிக்கட்டுவதற்கும், கோயிலில்லா ஊர்களில் புது ஆலயங்கள் நிர்மாணிப்பதற்கும் உபயோகப்படல் வேண்டும். இந்த ஆன்மீக முன்னேற்ற வழிகளை அலக்ஷியஞ்செய்து விட்டு ஆலய வருவாய்கள் லௌகிக வழிகளிலேயே செலவிடப்படுமானால், ஆன்மக் குஷ்டரோகிகளும் ஆன்ம க்ஷயரோகிகளும் லௌகிகக் கோட்டிக்காரருமே நாடெங்கும் பெருகுவர். இந்தியாவிற்கே சிறப்பாக உரியதான ஆத்ம ஞானமும் இங்கிருந்து நீங்கிவிடும்.

ஆலயங்களைப் பேணும் பொதுமக்கள் இன்று அருகிவிட்டனர். பொது வரியிலிருந்து தனிப்பட்ட சமயங்களைப் பேணுவது அரசாங்கத்துக்கு அடுக்காது. குஷ்டரோகிகளையும் க்ஷயரோகிகளையும் கோட்டிக்காரரையும் பேணுவதற்குப் பொது மக்கள் கடமைப்பட்டுள்ளனர். அதற்கான வரிகளை அவர்களிடம் வசூலிக்கவும் அரசாங்கத்தாருக்கு உரிமையுண்டு. அத்தகைய நேர்வழிகளைவிட்டுக் குறுக்கு வழிகளைக் கையாளுவதால் எதிர்பாராத விபரீத பலன்களே ஏற்படும்.

இனி, அர்ச்சகருடைய முதற் குறைபாடும் அவர்களுடைய அறியாமையே; அறிவின்மையல்ல, ஆகமநூல் அறியாமை. அதற்கு இன்றைய ஒரு பெருங்காரணம் அவர்களுக்குப் போதிய ஆதரவின்மை. சமீபகாலம்வரையில், இந்து மன்னர் ஆட்சியின்கீழ் அவர்களுக்கு உண்ண உடுக்கக் குறைவில்லாமலும் ஆசாரியரென்ற மதிப்பும் இருந்துவந்த காலத்தில், அவர்களில் வடமொழி தென்மொழி வல்லுனரும் வேதாகம விற்பன்னருமாகப் பல மேதையர் இருந்தனரென்பதற்கு அவர்கள் அருளியுள்ள பத்ததிகளும் சாஸ்திரங்களுமே சான்றாகும். 'சமீபகாலம் வரையில் அவருள் யோகக் காட்சியுடையோரும் பலர் இருந்திருத்தல் வேண்டும். சைவ சந்தானாசிரியருள் ஒருவராகிய உமாபதி

சிவாசாரியார் இன்றைக்கு சுமார் 600 ஆண்டுகளுக்கு முற்பட்டவரே. அவர் தில்லை வாழந்தணருள் ஒருவர்; நடராஜருக்குரிய அர்ச்சகர். அவர் தம் குருநாதருடைய கையிலிருந்து ஒழுகிய சாலியர் கூழை உண்ட குற்றத்திற்காகக் கோயிற் பூஜைக்கு அருகரல்லரென்று மற்ற அந்தணர்கள் அவரை விலக்கிவிட்டனர். அவரது பூஜை முறை தினத்தன்று வேறு அந்தணர்கள் பூஜித்த-போது அங்கே மூர்த்தி பிரசன்னமாகவில்லை. அதுகண்ட அந்தணரும் அரசரும் உமாபதி சிவத்தண்டை வந்து வணங்கி, மன்னிப்புப் பெற்று அவரைக் கொண்டு திரும்பவும் பூஜை செய்-வித்தனர் என்பது நமக்குக் கிடைத்துள்ள வரலாறு. பிரசன்ன-மாவதும் ஆகாததும் யோகக் காட்சிக்கே புலப்படுவதான ஓர் உண்மை.

அவ்வாறே சமீபகாலத்தவராகிய திருமழிசையாழ்வாரும், காஞ்சியில் பெருமாளை சேவித்துக்கொண்டு அவர் மீது பதிகம் பாடியிருந்தனர். அவ்விடத்துப் பல்லவ அரசன் தன்னையும் பாடும்படி ஏவ, அவர் மறுத்துவிடவே, அவரை ஊரைவிட்-டகலும்படி அவன் உத்திரவிட்டான் அவரும்,

"கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா—துணிவுடனே
செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்."

என்று பெருமாளை நோக்கிக் கூறிவிட்டு நகரெல்லையைத் தாண்டி-விட்டனர். மறுநாட் காலை அர்ச்சகர் கோவிலில் பூஜை செய்த-போது அங்கு மூர்த்தி சான்னித்தியம் பெறவில்லை. அதுகண்ட அர்ச்சகரும் அரசனும் ஆழ்வாரை வேண்டிக் குறையை நிவர்த்-தித்துக்கொண்டனரென்பது மற்றொரு வரலாறு இவ்விரண்-டிடங்களிலும், அர்ச்சகர் கூறியது இன்மை நவிற்சியென்றும், அரசர்கொண்டது மூட நம்பிக்கையென்றும் இன்று பலர் கூறுவர். மேலே விளக்கப்பட்டுள்ள மூர்த்தி ஆவாகன விவரங்-களைக் கற்றுணர்ந்தவர்கள், இந்நிகழ்ச்சிகள் உண்மையாயிருக்கலா-மென்றும் அன்று நெற்றிக்கண் திறந்த ஸ்தானிகர் ஆலயங்களில் இருந்தனரென்றும் ஏற்கத் தயங்கார்.

உரிய அதிகாரம் பெறாதவர் பூஜை செய்யும்போது இந்தப் பிரசன்னங்கள் ஏற்படுவதில்லையென்பது மேலே பாரத சமாஜ பூஜையின் விளக்கத்தில கூறப்பட்டுள்ளது வேறு தவறுகளாலும், உரிமையுடையோர் கையிலுங்கூட இவை நடைபெறாமற் போகலாமென்றுந் தெரிகிறது. முன் பாடங்களிற் கூறப்பட்டுள்ள சுதந்தரச் சிற்பவிதானம் (Free Masonic Ritual) உரிய தீக்ஷை பெற்ற அதிகாரிகளாலேயே நடத்தப்படல் வேண்டும். அவர்களுக்கு வேறு சில நிபந்தனைகளும் ஏற்பட்டுள்ளன. அதில் ஒரு அரங்க அதிகாரிகள் (Lodge Officers) தமது சபையோடு பிணங்கிப் பிரிந்துபோய் வேறோரிடத்தில் நிபந்தனை தவறி ஆராதனையை நடத்தி வந்தனர். வங்கப்பணி முனிவர் சென்று அதனை நெற்றிக் கண்ணால் நோக்கியபோது அங்கு அருளாலய அமைப்போ, தேவகணங்களின் பிரசன்னமோ, உரிய அருட்பொழிவோ ஒன்றும் ஏற்படவில்லையெனக் கண்டனர். ஆயினும் அதிகாரிகள் உரிமை பெற்ற பண்டைய அதிகாரிகளாகவே யிருந்தனர். ஆகவே ஆகம முறைகளை விதிப்படி அனுசரிக்காதபோது அந்த ரசாயனக் கிட்டங்கிகளில் என்னபலன் ஏற்படுமென்று சொல்வதற்கில்லை.

ஆனால், இன்றைய அர்சசகர் பெரும்பாலோருக்கு ஆகம அறிவு வெறுஞ் சூனியமென்றுதான் சொல்லவேண்டும். முன் பாடத்தில் மூர்த்தி பூஜையில் காட்டப்பட்ட பதினாறு அங்கங்களையும் நன்கு மனப்பாடம் பண்ணி அன்றாடம் உபயோகித்து வருவதனால் ஆன்மார்த்த பூஜகர்கள் அவற்றை வெகு அழகாகவும ஒழுங்காகவும ஆகம விதி தவறாமலும் சிறிது நேரததில் செய்து முடித்திடுவர். ஆலய மூர்த்தியிடம் அவற்றைச் செய்யும்படி அர்ச்சகரை அவர்கள் வேண்டுவாரானால், "ஐயய்யோ, அது பிரசன்ன பூஜையாயிற்றே. அதற்குத் தனியே கூலி கொடுக்க வேண்டுமே" என்பர் அர்ச்சகர். அன்றாடம் அவர் கடமையைச் செய்யாததில் குற்றமொன்றுமில்லை. அதனைச் செய்யச்சொன்னால் அதற்குத் தனியே கூலி. இதைப் பிரசன்ன பூஜை யென்று அழைப்பதால், மற்றக் காலங்களில் பிரசன்ன மொன்றுமில்லை யென்பதும் அங்கு விளங்குகிறது. அதற்காகத் தனிக் கட்டணம் ரூபாய் இரண்டோ, மூன்றோ நான்கோ கட்டிவிட்டால், உடனே

தீக்ஷிதர் வரவேண்டுமென்பர். ஏனெனில் இந்தப் பிரசன்ன மந்திரங்களை, அதாவது ஆசன ஆவாகன ஆவாரண முதலிய மந்திரங்களை அர்ச்சகர் அறியார். தீக்ஷிதரோ வைதிகர். அவர் ஏட்டைப்பார்த்து இம்மந்திரங்களை வாசிப்பரே யொழிய அந்த மந்திர ஸ்தானங்களோ உரிய நியாசங்களோ, தியானபாவனை-களோ ஒன்றையும் அவர் அறியார். இந்த ஆகம முறைகளை அவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காகக் கற்பரே தவிர மற்றைப்படி அவற்றை அலக்ஷியமாகவே கருதுவர். அன்றி அவற்றின் பொருளையும் அறியார். ஆகவே குருடும் குருடும் குருட்டாட்ட-மாடிக் குழிக்குள் விழுந்ததுபோல, தீக்ஷிதர் ஆசனங்களை ஓதும்-போது அர்ச்சகர் மூர்த்தியின் அங்கங்களை நியசித்தும், அங்க மந்திரங்களை ஓதும்போது பீடத்தைத் தொட்டும் ஒருவருகப் பூஜையை முடித்துவிடுவர். பார்த்துக்கொண்டிருக்கும் ஆன்மார்த்த பூஜகர் அழத்தான் வேண்டும் இவை நேரே கண்ட உண்மைகள். இதனை மிகைபடக் கூறியதாக நினைப்பவர்கள் ஒன்றிரண்டிடங்களில் பரீக்ஷித்து நோக்குவார்களாக. இவ்வளவு காரிருள் அர்ச்சகரிடம் இருத்தலாகாது. ஆன்மார்த்த பூஜை யில்லாதபட்டர் ஆலயப் பூஜைக்கு அருகரல்லரென்றும் தீக்ஷிதர் வேலையில் பழகிய பட்டரே பூஜை முறைக்கு நியமிக்கப்படுவ-ரென்றும் நிபந்தனையிருக்குமானல் இக்குறைபாடு எளிதில் நீங்கி விடும். இதைக் கவனிக்கும அதிகாரிகள் யார்?

அர்ச்சகருடைய அடுத்த பெருங்குறை அவர்களுடைய அலக்ஷிய மனப்பான்மை. ஆலய அதிகாரிகளிடம் அவர்கள கைகட்டி வாய்புதைத்து,மூச்சுவிடவும் பயந்து மிகவும் பணிவாக-வும் விநயமாகவும் நடந்துகொள்வர். ஆனல் ஆலயத்துள் அவர் பூஜிக்கும் இறை மூர்த்தங்களின் முன்பு, பனங்காட்டு நரி சல-சலப்புக்கஞ்சாது என்ற முறையிலேயே பரிமாறுவர். இது அந்தரங்க பக்தியினுல் அல்ல, அலக்ஷிய புத்தியால் ஏற்படுவது. அவர்கள் பூஜிக்கும் மூர்த்திகளைப் பூஜ்யங்களாகவே கருதுகின்றன-ரென்று எண்ணத்தோன்றும். கிறிஸ்தவக் குருமார்கள் அவர்-களுடைய ஆலயங்களில் பரிமாறுவதைக் காண்பவர் இவ்வேறு-பாட்டை எளிதில் அறிவர். அதனுல் பல அனுசாரங்கள் நமது ஆலயங்களுள் அச்சமின்றி நடைபெறுகின்றன. புகையிலைத்

தாம்பூலம் இன்று சாதாரணப் பழக்கம். அர்ச்சகர்களும் அந்த நாகரிகத்திற்கு விலக்கல்லர். பெரிய ஆலயங்களில் எச்சில் துப்பவும் தம்பலம் உமிழவும் அடிக்கடி வெளியே செல்ல அவகாசங் கிடையாது. அதனால் மூலஸ்தானத்தை யடுத்து உள்ளே உமிழ்ந்துகொள்வதில் குற்றம் யாது? இதனைவிட மிகக். கேடான அட்டூழியங்களும் அக்கிரமங்களும் பெரிய ஆலயங்களில் பிராகாரங்களிலும் ஒதுக்கிடங்களிலும் நடைபெறுவது நம்மவர் அறியாததல்ல. தேவதாசிச் சட்டம் வருமுன்பு மதுரையில் தென்மதுரைச் சொக்கர் முன்பும் மீனாக்ஷி தேவி முன்பும் அர்ச்சகர்களும் அவடத்து தேவதாசிகளும் காதல் களியாட்டுகள் நடத்திக்கொண்டிருப்பது சாதாரணக் காட்சி. அவற்றிற்கெல்லாம் பயப்படாத மீனாக்ஷியம்மையார் ஆதி திராவிடர் ஆலயப் பிரவேசஞ் செய்வதைக்கண்டதும்-விந்தையிலும் விந்தை-அஞ்சி நடு நடுங்கி அங்கு நின்றும் ஓடி விட்டனளாம். இதற்கு இந்தத் தூய்மை மிகுந்த அர்ச்சகர் மாத்திரமன்றி அடியார்களும் சேர்ந்து கூக்குரல். சுயமரியாதைக்காரர் செழித்து வளருவதற்கு இவை யெல்லாமே காரணங்கள்—அவர்களுடைய வக்கிர புத்தியல்ல.

உண்மையைக் கூறப்புகின் அர்ச்சகர் பலர் சைவசந்தி செய்தறியார், செய்யவும் அறியார். அதனை அறியாதபோது கரநியாசம் அங்க நியாசங்கள் செய்ய அறியார். அந்த சகளீகரணம் செய்ய அறியாதபோது வியாபக நியாசமாகிய ஆத்மா மூர்த்தி பாவனை எங்ஙனம் செய்வர்? மூர்த்திக்குப் பிராணப் பிரதிஷ்டை எவ்வாறு செய்வர்? ஆராதனைக்கு இன்றியமையாதனவான இத்தகைய சில்லரைக் கிரியைகளைக் கற்றுக்கொள்வதற்கு ஆகம அறிவொன்றும் தேவையுமில்லை. அவற்றைக்கூடக் கற்றுக்கொள்ளாத காரணம் அந்த அலக்ஷிய மனப்பான்மையேயாம். ஆகமங்களை விரிவாகக் கற்காவிட்டாலும் குறைந்தபட்சம் அவர்கள் வயிற்றுப் பிழைப்பிற்கான ஆலயக்கிரியைகளை மாத்திரமாவது மந்திரம் முத்திரை பாவனைகளுடன் பொருளுணர்ந்து ஆகம விதிப்படி இயற்றக் கற்றிருக்கவேண்டுமென்று அதிகாரிகள் வற்புறுத்துவாரானால் அர்ச்சகர் யாவரும இவற்றை எளிதில் கற்றுவிடுவர். அதற்கான கிரந்த நூல்களை—இப்போது ஏட்டுப் பிரதிகளாக உள்ளவற்றைத் தமிழ் உரையுடன் இந்துமத பரிபாலன போர்.

டார் ஆலயப் பணத்திலிருந்தே அச்சிட்டு வெளியிடுவாராயின் அவை அதிகாரிகள், அர்ச்சகர்கள், அடியார்கள் மூவருக்குமே பயன்படும் இறைபணியாகும். ஆலயங்கள் செம்மைப்படுவதற்கும் அது ஒரு முக்கியமான கருவியாயிருக்கும். சூக்ஷ்ம உலக ரசாயன சாஸ்திரங்களே ஆகம சாஸ்திரங்கள் என்றும், பூலோக ரஸாயனக்கிரியைகளைப் போலவே ஆகமக்கிரியைகளும் நன்மையும் தீமையும் தரவல்லன வென்றும் திரும்பவும் நினைப்பூட்டப் படுகிறது.

கடைசியாக, மூன்றாவதான அடியார்களைப்பற்றி விரிவாகக் கூறத் தேவையில்லை. சாஸ்தாவுக்கு நேர்ந்த கடா சந்நிதியில் வெட்டினாலென்ன கோவிலில் வெட்டினாலென்ன என்ற ஓர் பழமொழி நமக்குள் உண்டு அக்கொள்கையைக் கொண்டவரே நமது சமய அடியார்கள். அவர்கள் குடங் குடமாகப் பாலைக் கொட்டுவர், குறுணிக் கணக்காகத் தைலத்தைக் கொட்டுவர், எண்ணிக்கையில்லாது இளநீர்களை வெட்டுவர் ஒன்றும் காரணகாரிய முறையறிந்து செய்யார். தம் வீட்டிலுள்ள மோட்டார் யந்திரங்களைப்பற்றித் துருவி ஆராய்ந்திருப்பர், ஆலயத்துள்ள யந்திரங்களைப்பற்றிப் பொதுப்படையாகக்கூட யாதொன்றும அறியார். அதனால் செய்யவேண்டுவன யாதென அறியாது வெறும் பணத்தைக்கொட்டிக் கடனைக் கழித்துவிடுகின்றனர்; தம் மனத்தையும் திருப்தி செய்துகொள்ளுகின்றனர். ஆலயங்கள அருளை உற்பத்திசெய்யும்கருவிகளென்று (Machinery) அவர்கள் அறிவாராயின், அந்த யந்திரங்களைப் பேணும் முறைகளிலேயே தம் பணத்தையும் பொருள்களையும் செலவிடுவர். அதற்கான உபகரணங்களும அவ்வளவு விலையேறியவை யல்ல பத்து லக்ஷ ரூபாயில் வயிர முடிகள், ஐந்து லக்ஷ ரூபாயில் தங்க ரதங்கள் போன்றவை அருட் பொழிவிற்கு ஆவசியமானவையல்ல. வண்ணான் கழுதைக்குப் பொதி யேற்றுகிற மாதிரி விக்கிரகங்களின்மேல் ஆபரணப் பொதி யேற்றுவதும் ஆவசியமல்ல. அருட்பொழிவிற்கும் அருள் விநியோகத்திற்கும் அதிகமாக உதவுவதான ஒன்றிரண்டு நவரத்னப பதக்கங்கள் மாத்திரமே போதுமானது. அந்த ரத்னங்களும் சிறுமிளகுப் பருமன் போதுமானது. கண்ணையும் மனத்தையும் கவரத்தக்க

அலங்காரங்கள் யாவும் ஆடைகளாலும் பூமாலைகளாலும் செய்து கொள்ளலாம். அது சிக்கன முறையாயிருப்பதுடன் திருடர் மனதைக் கவராததுமாம். கும்பகர்ணன் நித்திய வாழ்வு கேட்கப்போய் நித்திரை வாழ்வு பெற்றானென்பது கதை. ஏதோ கோவிலுக்கு நேர்ந்த பணத்தை அர்ச்சகரிடம ஒப்படைத்து விட்டோமென்று திருப்திப்படுவது முறையாகாது. அறிவில்லாது செய்யும் வழிபாடுகளால் விபரீத பலனும் ஏற்படலாமென்பதை அடியார்கள் மனத்திருத்திக்கொள்வார்களாக. ஆலயங்களிலும் தலைகீழாக ஆறு காலப் பூஜைகள் வெறும் பேருக்குச் செய்வதை விட, முறைப்படி மூன்று காலப்பூஜைகள் செய்வது மிக்க மேன்மையான பலனைத் தருமென்பதற்கு யாதொரு ஐயமில்லை.

பாடம். 41.

## ஆலய தரிசன விதி.

ஆலய தரிசன விதிகளும் அறிகுறி, அருள்நெறி என இரு வகைப் பொருள்படுவன. இந்த நூல் அருள்நெறி பற்றியதாகையால் அம்முறை மாத்திரம் இங்கு கவனிக்கப்படும். திருவருள் கூட்டி வைப்பின் அறிகுறிப் பொருள் அடுத்த 3-வது பாகமாக எழுதப்படும்.

ஆலயங்கள் யாவும் அருள் பொழிய ஏற்பட்ட அமுதசுரபிகள் அல்லது காமதேனுக்கள் என்று மேலே காட்டப்பட்டுள்ளது. அவ்வாலயங்களிற் சென்று தொழுவது ஆன்மாக்கள் அந்த அருளில் தோய்ந்து சூக்ஷும உடம்புகளில் சிறிது சிறிதாகப்பண்பட்டுப் படிப்படியாக முன்னேறித் தம் சீவ நிலை நீங்கிச் சிவப்பேறு பெற்றுப் பேரின்ப மடைதற் பொருட்டாம். மணிவாசகப் பெருமான் அதனைச் "சித்தமல மறுவித்துச் சிவமாக்கல்" என்பர். அதற்கான தொழுகையும் விதிப்படி செய்யப்படாது போயின் தாமரையிலையிற் பட்ட தண்ணீர்போலவும் மெழுகு துணியிற்பட்ட மழையைப்போலவும் அந்த அருள் அவரை ஒட்டாது சிதறி ஒதுங்கிவிடும். அத்தகைய தரிசனம் பயனற்ற வழிபாடாவதோடு, ஆலயத்துள பிற அடியார்களுக்கு இடைஞ்சல் உண்டுபண்ணுமாயின் தமக்குத் தீங்கு தருவனவாயுமிருக்கும். நமது ஆலய தரிசன விதிகளை அனேகமாய்ப் பழக்கம் மூலமாக நமமவர் யாவரும் அறிந்திருப்பர். ஆறுமுக நாவலர் பாலபாடம போன்ற பல நூல்களிலும அவை காணப்படுவன.

இன்றைய மக்களிற் பெருமபாலார் திரிலோக வாசிகளே என்பதும் அதற்கு மேற்பட்ட உலகங்களில் வினைபுரியவல்ல வளர்ச்சி அவர்களுக்கு இன்னும் அமையவில்லையென்பதும் இந்நூல் முதற் பாகத்தில் விளக்கப்பட்டுள்ளன. பரிணாமமுறையில் அந்த மத்திமநிலை மானிடவர்க்கததிற்கு உதவி புரியும் பொருட்டு, பூ-புவர் ஸுவர்லோகக்குடிகளாகவுள்ள தேவ பூத கணங்கள (Angels and Nature Spirits) ஆலய ஆராதனையின்போது அவ்விடம் வந்து குழுமியிருப்பர். அடியார்கள் அவர்களுடைய கவனத்தை

இழுத்து அவர்களது உதவியைப் பெறுவதற்குத் தனித்தனி முத்திரைகளும் அமைக்கப்பட்டுள்ளன. அவருள் பூலோக சூக்ஷ்ம கணங்களுக்குத் தலைவர் அல்லது கணநாதராயிருப்பவர் விநாயகருடைய பதினறு மூர்த்தங்களில் ஒருவர். அந்த கணங்களை விளிக்கும் முத்திரை மூன்று குட்டும் தோப்புக்கரணங்களுமாம். புவர்லோக கணங்களின் தலைவர் அரிகர புத்திரர், சாஸ்தா, ஐயனும் என்றழைக்கப்படும் கணநாதராவர். அவர் சன்னதியில் தொங்கவிட்டிருக்கும் மணியை மும்முறை அடித்தலே புவர்லோக கணங்களின் கவனத்தைப் பெறுவதற்கான முத்திரை. சண்டேசர் சொர்க்க லோக கணங்களின் கணநாதர். அவருக்கான முத்திரை மும்முறை கை கொட்டிக் கும்பிடுதல். திரிலோகங்களிலும் வேறு பல கணங்களும கணநாதர்களும் உள்ளனர். அவர்கள் வேறு பணிகளில் ஈடுபட்டிருப்பவர்கள்.

இனி, தெரிசன விதிகளில் சில முக்கியமாவன:—

(1) ஆலயஞ் செல்ல விரும்புவோர் முதலாவதாகத் தம் உடம்பையும் உடைகளையும் சுத்தஞ்செய்துகொள்ளல் வேண்டும். உபநயனம் தீக்ஷைகள் பெற்றுள்ளவர்கள் உரிய அநுஷ்டானங்களைச் செய்துகொள்ளல்வேண்டும். அவற்றால் அவருடைய சூக்ஷ்ம உடம்புகள் இறையருளை எளிதில் உறிஞ்சும் பண்பாட்டைப் பெறும். மற்றவா உடமபுகள் அவ்வளவு அதிகப் பலனைப் பெறு. பின்னர், துள்ளும மறியாம் மனதனதப் பலி யேற்கக் காத்திருக்கின்ற பதரலிங்கமாகிய பலிபீடததிற்கு இப்பால் விழுந்து வணங்க வேண்டும். அப்போது அவாகள தம்மிடத்துள்ள லௌகிகக் கவலைகள், காமக குரோத லோப மோகங்களாகிய மிருகங்கள் யாவற்றையும் பலிகொடுத்துவிட்டு, இறைவனிடம் பக்தி யொன்றையே மனததில் இருத்திக் கொள்ள வேண்டும். அல்லாமல் ஆலயத்துட்சென்றபின்பும் அவர்கள் உலக விவகாரங்களைப்பற்றியே சிந்தித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் இருப்பார்களானல், அவர்கள் ஆலயஞ் செல்லாதிருப்பதே அவர்களுக்கு நன்மை; ஆலயத்திறகும் நன்மை; மற்றும் தொழ வரும் அடியார்களுக்கும நன்மை. அதனல அவர்கள் ஆலயஞ் சென்று நேரததை வீணுக்குவதைவிட வீட்டிலிருந்துகொண்டு சொந்த விவகாரங்களை நடததிக்கொண்டிருப்பதே லாபகரமான

வேலை அத்தகையோர் பலிபீடத் கண்டை நின்றே இறைவனைத் தொழுதுவிட்டு வெளியேறலாம். அன்னார் அடையக்கூடிய பலன் முழுவதையும் அவர்கள் அங்கேயே பெறுவர். ஆலயப் பிரவேசக் கட்டுப்பாட்டின் உட்பொருள் இதுவேயன்றி வேறல்ல. ஆலய வழிபாட்டிற்கு விதிக்கப்பட்டுள்ள நியதிகளையும் ஒழுங்குகளையும் ஒப்புக்கொள்ளாதவரும் ஏற்று நடக்காதவரும் அங்கு சென்று பலன்பெறுவதாக நினைத்துக்கொள்வது வெறும் மனப்பால் குடிப்பதேயாகும்.

"கையொன்று செய்ய விழியொன்று நோக்கக் கருத் [தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய் வினைதீர்த்த வனே"

என்ற பட்டினத்தடிகள் பாடலை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும.

(3) அகத்துள்ள மிருகங்களை இவ்வாறு பலியிட்டபின் எழுந்துசென்று, வாயிலின் வலப்புறமுள்ள அம்பல விநாயகரை முறைப்படி குட்டி வணங்கல் வேண்டும். கைம்மாறி மூன்று குட்டுகள குட்டிக்கொள்ளவேண்டும். காதுகளை மாறிப்பிடித்துத தரைவரை குந்தியிருநது மூன்று தோப்புக்கரணங்கள் போட வேண்டும். அல்லாது நின்ற நிலையிலேயே குதத்தை மாத்திரம குலுக்கிக்கொளவது போதாது. முறைப்படி குட்டி வணங்கும- போது, "ஓம் விக்னேஸ்வரா, மகா கணபதி, விநாய மூர்த்தி, எங்கள் மனம் மொழி மெய்களைக் குட்டி அடக்கி ஒருமுகப்படுத- தும" என்று மனதுக்குள்ளே பிரார்த்தனை செய்யவேண்டும். அவை மூன்றும் ஒருமுகப படாதவரை எடுததுக்கொண்ட காரியம் எதுவும் இடையூறின்றி இனிது முற்றுப் பெறுது,— உடைந்த திரிநூல் ஊசிக்குள் புகாததேபோன்று. மூன்றுதரம குட்டிக்கொள்வது மூளைத தண்டின் அடியிலுள்ள இடை, பிங்கலை, சுழுமுனை என்ற மூன்று நாடிகளையும தட்டி யெழுப்புதற்காம். அந்த நாடிகள் முதுகுத்தண்டின் அடியிலுள்ள மூலாதாரத்தி- லிருந்து தொடங்கி (முதற்பாகம் படம் பார்க்க) மூளையில் முட்டி நிற்கும். இப்படிக் குட்டிக்கொள்ளுதல் இரும்பைச் சம்மட்டியா-

லடித்து அனலை உண்டுபண்ணுவதும், வண்டிமாடு வேகமாய் நடக்கும்போது லாடமடிப்பட்டுப் பொறி பறப்பதும் போன்றதாம். இனி உக்கி போடும்போது, பூமிப் பந்தினுள்ளே அக்கினிக் குழம்பாகக் கொதித்துக்கொண்டிருக்கும் குண்டலினி சக்தியானது, குட்டுதலைக் கேட்டு விளிப்படைந்து நிற்கும் பூத கணங்களின் உதவிகொண்டு மூலாதாரத்துட்பாய்ந்து மனம்மொழி மெய்கள், அதாவது வழிபடுபவருடைய அறிவு இச்சை செயல்களை ஏகாக்கிர நிலைக்குக் கொண்டுவர உதவும். இக்குண்டலியானது மூலாதாரத்தைப் பூரணமாக விரியச்செய்து, மேல்நோக்கி ஏறி, தலையுச்சியிலுள்ள பிரம்மரந்திரத்தைச் சென்றடையும்போது அவன் சமாதி நிலையடைவான்; இறைவனை அநுபவமாகக் காண்பான்; பேரின்பத்தைப் பெறுவான். அது யோகம் பயில்வார் வேகமாக அடையும் உயர் பலன். மற்றவர்களுக்கு இது ஆலய வழிபாட்டினாலும் அநுஷ்டானங்களாலும், அன்றாட அறநெறி வாழ்க்கையாலும் சிறிது சிறிதாகப் பெறப்படும்; நீண்ட காலம் பிடிக்கும். குட்டும்போதும் உக்கி போடும்போதும் இந்தச் சிறு உதவிகளைச் செய்வதே கணேசர் சன்னிதியிற் காத்து நிற்கும் பூத கணங்களின் வேலை. பூஜை முறையாக நடைபெறாதபோது பூத கணங்கள் வராமலே போகலாம். வந்திருக்கும் இடங்களிலும் அவர்கள் உதவிக்கு அநுசரணையான மனப்பாங்கும் மந்திரம் முத்திரை பாவனைகளும் அடியார்களிடத்தில்லாதபோது அந்த கணங்கள் கவனியாமற் போவார்கள். சைவாகமப்படி சமய, விசேஷ, நிர்வாண தீக்ஷைகள் பெற்றுள்ளோருக்கு இந்த மூன்று நாடிகளும் குண்டலினியும் தீக்ஷை பண்ணி வைக்கும்போது தொழிற்பட்டு விடும். அவர்கள் மாத்திரம் ஆகமுறை வழுவாமல், அதாவது அங்கு குறிப்பிட்டுள்ள சந்தியா நேரத்தில நாள் தவறாது ஒழுங்காகவும் ஒருமுகப்பட்ட மனத்தோடும் உட்கருத்தறிந்தும் தமக்குரிய அநுஷ்டானங்களைச் செய்து வருவாராயின், அவர்கள் நாடிகள் தூர்ந்து போகாமல் விரிந்துகொண்டே வரும்; மேலான ஆன்ம பலனையும் அநுபவத்தாலறிவர். இந்துக்கள் தம பிள்ளைகளுக்குச் சிறு வயதிலேயே தீக்ஷைகளையும் மந்திர ஜெபங்களையும் செய்து வைப்பது, அவற்றின்மூலம் அவர்கள் சூக்ஷ்ம உடம்புகளைப் பக்குவப்படுத்தி, ஆன்மாவைப் பண்படுத்தி முத்தி நெறியாகிய பேரின்ப நெறியில் அவர்களைச்

செலுத்தும் பொருட்டேயாம. அவை இக்காலம் நடைபெறுதது உலகததிற்கே ஒரு பெருங் குறை. ஏனெனில்,

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும மழை"

(ரீ) அதற்குமேல் கொடிமரந்தாண்டி உள்ளே சென்று, உட்பிரகாரத்தில் இருமுறை பிரதக்ஷிணஞ் செய்தல் வேண்டும. அப்போது அடிமேல் அடி வைதது அமைதியாய் நடக்கவேண்டும. அவரவர் இஷ்டதெய்வததை தியானித்துக்கொண்டும் இறைநாமம் ஜெபித்துக்கொண்டும் அல்லது மூல மூர்த்தியை தியானித்துக்-கொண்டும வலம வருதல் வேண்டும. மனக்குரஙகானது நொடிக்கு நொடி காடுங்கரையும் காலவிட்டோடும். பிராகாரம் முழுவதிலும பல பல இறை மூர்த்தங்களை அமைத்திருப்பது அதற்கொரு பரிகாரமாகும. ஒரே மூர்த்தியைத தைலதாரைபோல இடைவிடாது தியானிப்பதைவிட ஒவ்வொரு மூர்த்தியாகத தொடர்நது வணஙகுவது நம்போன்ற சாதாரண மக்களுக்கு எளிது. இடையிடையே ஏகாக்கிரசித்தத்தை விளைவிக்கும விநாயகரும் எச்சரித்துக்கொண்டிருப்பர். "பல பல காமதத-ராகிப் பதைத் தெழுவார் மனத்துள்ளே கலமலக்கிட்டுத திரியும கணபதி யென்னும் களிறு" என்ற ஞான சம்பந்தர் திருவாக்கை அவர் ஞாபகப்படுத்திக்கொண்டிருப்பர். அதனுல் ஓடாமலும சாடாமலும் பிறரோடு பேசாமலும், மனத்தை இறைவனிடத்தே நிறுததியும முறைப்படி வலமவருமபோது, பிராகாரங்ளில் சுழித்து ஓடிக்கொண்டிருக்கும தெய்விகக் காந்த சக்திகள் அந்த அடியார-களுடைய சூக்ஷ்ம உடம்புகளைச் சிக்கறுத்து இறையருள் தோய்வதற்கு அவற்றை இலக்காக்கும். உலக வியவகாரங்களிலும் கவலைகளிலும் ஈடுபட்டிருப்பவருக்கு அதுகாரணமாக அவர்களு-டைய இச்சையுடம்பு, மன உடம்புகள் சன்னல் பின்னலாக ஓயாமல் சிக்குப்பட்டுக் கொண்டே யிருக்கும். அந்தச் சிக்கல்கள் தீவிரமான அலைகளையுடைய நுண்ணிய அருட் சக்திகளை உடம்பி-னுள்ளே புகவிடாமல் தடுத்துவிடும். ஆகவே மேலே கூறியபடி முறையாகவும் காரண காரிய அறிவோடும் அந்தரங்க பக்தியுட-னும் வலம் வராதவர்கள் பிரதக்ஷிணததாலுள்ள உண்மையான பலனைப் பெறமாட்டார்கள். வலம் வருவது உபசாரமாக

மூர்த்தியைச் சுற்றிவந்து வணங்குவது மாத்திரமல்ல. வேறும் ஆழ்ந்த பொருள்களை யுடையன.

(4) இருமுறையோ அதிகமாகவோ வலம் வந்தபின்னர் மகா மண்டபஞ் சென்று, கொண்டுவந்த தேங்காய் பழம் முதலிய வற்றை நிவேதித்துக் கற்பூரப் பணிவிடை செய்வித்து, திருநீறு முதலியவை வாஙகித் தரிததல் வேண்டும். இதுவே ஆலய வழிபாட்டின் தலையாய பாகம். அதற்கான முன் தயாரிப்பே அதுவரை நடைபெற்ற யாவும். அவனுடைய தயாரிப்புக்கும் பக்குவத்திற்கும் பக்திக்கும் ஏற்ற அளவில் கர்ப்பூர ஆரத்தியின்போது இறையருள் அவனிடம் ஒடிப் பாய்ந்து தோயும். அங்கு வழங்கப்படும் திருநீறு தூய்மையையும் சந்தனம் மனோ திடத்தையும் குங்குமம் அன்பையும் அடியார்களிடம் பெருக்க உதவுவன. அவ்வுதவிக்கான அருட்சக்திகள் அந்தப் பிரசாதங்களில் தோய்ந்து நிற்கும். இந்த மூன்று குணங்களையும் அன்றாட ஒழுக்கத்தில் பயில விரும்பும் அடியார்களுக்கு அவை மிக்க துணை புரியும்.

லெட் பீற்றர் துரையவர்கள் யோகப்பயிற்சி பெறு முன்னர் ஒரு சமயம் மதுரைக்குச் செல்ல நேரிட்டது. அங்குள்ள சிலர் அவரைச் சொக்கர் ஆலயததிற்கு இட்டுச் சென்றனர். கொடி மரத்தண்டை அவருக்குச சிறிது விபூதியும் குங்குமமும் வழங்கப்பட்டன. சர்வ சமய சமரச பாவனையுடைய அவர் அந்தப் பிரசாதங்களைத துண்டுததாள்களில் மடக்கிச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டனா. பின்னா அவா மேல் நாடுகளுக்குச் சென்றுவிடவே அந்தக் குளிர்பபிரதேசங்களுக்கு இநத மெல்லிய மேற்சட்டை உதவாமல பெட்டிக்குள் மடிந்தபடியே கிடந்துவிட்டது. ஆறேழு வருஷங்களுககுபபின் அவர் அப்பெட்டியைத திறக்க நேர்ந்தது. இடைக்காலததில் அவர் யோக சிததி பெற்று நெற்றிக்கண் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர் பெட்டியைத் திறந்தபோது அங்கு ஒரு சிறு மின்னொளித் தணல் ஒளி வீசிக்கொண்டிருந்ததாம. அது முன்னே மறந்துவிடப்பட்ட சொக்கராலயததுத் திருநீறு, குங்குமங்களிலிருந்து வெளிவருவதாகக் காணப்பட்டபோது அவருக்குண்டான அதிசயததிற்கு

அளவில்லை யென்று அவரே கூறியுள்ளனர். அப்பொருள்கள் அந்நிய நாடுகளில் அசைவ அலைகளை ஓயாது வீசிக்கொண்டிருக்கும் கள்ளுக் கடைகளுக்கிடையிலும் கசாப்புக் கடைகளுக்கிடையிலும் தங்கியிருந்தும் தமது தேவ சக்திகளை அவ்வளவு நீடித்த காலம் காப்பாற்றக் கூடுமானால் அவற்றின் வல்லமை எத்துணையதாயிருத்தல் வேண்டும் என்றே அவர் வியந்துள்ளனர். விழிகண் குருடராகிய நாம் அந்த அருமை பெருமைகளை அறியாமலும் ஆகம சாஸ்திரங்களின் எச்சரிக்கைகளை நம்பாமலும் அப்பிரசாதங்களைக் கீழே சிந்துவதும் காலால் மிதிப்பதும் தூர எறிவதுமான பாவங்களைச் செய்துவருகிறோம். இது இன்றைய அடியார்கள் குறைபாடுகளில் ஒன்று.

(5) தேங்காய் பழம் முதலிய நிவேதனங்களைப் பெற்றுக் கொண்டு அர்ச்சகருக்கு இயன்ற தக்ஷிணை கொடுத்துவிட்டு, முன்போல மீண்டுமொருமுறை பிரதக்ஷிணம் செய்ய வேண்டும்; ஆனால் ஒரு பிரதக்ஷிணத்திற்குமேல் செய்யக்கூடாது. ஏனெனில் தேங்காய் மூலம் தன்னை இறைவனுக்கு அர்ப்பித்தவுடன் அவன் பிறவி தீர்ந்து விடு பெறுவதை அது அறிகுறியாக உணர்த்துவது.

இந்தக் கடைசிச் சுற்றின்போது, கன்னி மூலையிலுள்ள விநாயகரை முன்போலக் குட்டி வழிபடவேண்டும். பேரின்பம் பெறுவதில் ஏகாக்கிர சித்தத்தையும் அங்கு பாவிக்கவேண்டும். பின் அடுத்துள்ள ஐயனார் மணியை மும்முறை கொட்டி ஒலித்து அவரையும் வணங்கவேண்டும் "அரிகரபுத்திரரே, இந்த மணியோசையோடு கலந்து எங்கும் இறையருள் பரவட்டும்" என்று அங்கு பிரார்த்திக்கவேண்டும். தான் மாத்திரம் உண்டு வாழ்வது மிருக வளர்ச்சி முறை, தன்னையும் மறந்து பிறர்க்கீந்து வாழ்வதே மனித வளர்ச்சி முறை; அல்லாத மனிதன் வேகமாக முன்னேற-மாட்டான்; பேரின்பத்தை எய்த மாட்டான் "அருளிலார்க்கு அவ்வுலகம் (பேரின்ப உலகம்) இல்லை," என்பதே இயற்கை நியதி. அதனால் புவர்லோக தேவகணங்கள் அவனுடைய சூக்ஷ்ம உடம்புகளை இங்கு பூரிப்பிக்கும் பொருட்டு அவ்வாறு நாம் பிரார்த்திக்க வேண்டும். வெறும் வாய்ப்பிரார்த்தனையோடு நில்லாது அந்த அன்பை உண்மையாக உணரவும் முயல வேண்டும்.

பின் சண்டேசர் முன்பு சென்று, "சுவாமீ, சிவ தெரிசனத்தின் பலனை எங்களுக்குத் தந்தருளும்," என்று பிரார்த்தித்து மும்முறை கைகொட்டிக் கும்பிடவேண்டும். அப்போது அந்த கணநாதரைச் சுற்றிக் குழுமிநின்று அவர் ஏவலை எதிர்பார்த்திருக்கும் சுவர்க்கலோக தேவ கணங்கள் அடியார்களுடைய மனோமய விஞ்ஞானமய ஆனந்தமய கோசங்களைக் கூடியவரை பூரிக்கப் பண்ணுவர். இந்த அருளுதவிகளைப் பூரணமாகப் பயன்படுத்தும் பொருட்டே ஆலய தரிசன விதிகளும் அனுஷ்டானங்களும் ஜெபங்கள்—தியானங்கள்—தோத்திரங்களும் ஒரு ஒழுங்கு முறையாக ஆன்றோரால் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சரிவரவும் பொருளறிந்தும் அனுசரியாது ஆலய தரிசனம் பலன் தரவில்லை யென்று குறை கூறுவது அடுப்பில் உலை யேற்றாது சோறு வேகவில்லை யென்று குறைகூறுவது போன்றதே. ஆலய வித்தைகள் வெறும் ரஸாயன வித்தைகளே. ஆனால் சூக்ஷ்மமானவை, ஆயினும் விதிவிலக்குகளுக்குக்கீழ்ப்பட்டு நடப்பவையே. இனி, திரிலோக தேவ பூத கணங்கள் மிகப் பலவகையினவென்பது முன்பாடங்களில் விளக்கப்பட்டுள்ளது. அவருள் ஒரு சாராரே இந்த ஆலயப்பணிவிடையில் ஈடுபட்டுத் தம் கணநாதரிடம் இவ்வாறு காத்து நிற்பவர். மற்றும் பல இனத்தவர் ஆலயங்களிலேயே வேறுவகைப் பணிகளில் ஈடுபட்டு நிற்பர்.

சண்டேச மூர்த்தி இடைவிடாத் தியானத் தமர்ந்து, இறைவனோடு இரண்டறக் கலந்து, என்றும் பேரின்பத்தில் சொக்கி நிற்பவர். அவர்முன் கை கொட்டுவது அவருடைய தியானத்தைக் கலைத்து அவர் கணக்கில் தம் பெயரைப் பதிவு செய்து கொள்வதற்காக வென்ற ஒரு மூடக் கொள்கை நமக்குள் இருந்து வருகிறது. உறங்குபவரை அவ்வாறு தட்டி யெழுப்புவதே குற்றமாக நமக்குள் கருதப்படும். அதிலும் தியானத்திலமர்ந்து சிவத்தில் லயித்து நிற்கும மகானைத் தட்டி யெழுப்புவது மிகப் பெரிய பாவமாக நமது சாஸ்திரங்களே கூறுகின்றன. அத்தகையோரை நோக்கிக் கைதட்டுவதே நமக்குள் பாமரமக்களும் அஞ்சுவதொன்று உலக வழக்கிலேயே தம்மின் மூத்தாரைக் கைதட்டிக் கூப்பிடுவது மரியாதைக் குறைவாகும். அதனால் கை தட்டும் நோக்கம் அதுவல்லவென்பது எளிதில் புலப்படும்.

சிலர் இத்துடன் நில்லாது தம் இடுப்பிலுள்ள முடை நாற்ற அழுக்குத் துணி நூலை உருவி அவர் முன்னே இட்டுச் செல்கின்றனர். அவர்கள் யுக்தி கூடுதலுள்ளவர்கள். தாம் சப்பாணி கொட்டியது அவர் காதுக்குள் ஏறாமற் போனாலும்—ஏனெனில் அந்தக் கல் விக்கிரகம் கண் விழிக்கவில்லையல்லவா—அவர் தாமாகக் கண்விழிக்கும்போதாவது தங்கள் அழுக்கு நூலைக் கண்டதும், அந்த முடை நாற்றத்தை முகர்ந்ததும், மகிழ்ச்சி கொண்டு தம் பெயரை அவர்பட்டிகையில் பதிவு செய்துகொள்ளட்டும் என்பது அவர்களது மூடக்கொள்கை. சண்டேசருக்குரியது சிவநிர்மாலிய மொன்றேயன்றி அடியார்களுடைய அழுக்குத் துணி நிர்மாலியமல்ல. அவருடைய சன்னிதியை அவ்வாறு அசுத்தப்படுத்துவது பெரிய குற்றமாகும். கற்றவர் மற்றவருக்கு இதனைக் கூறித் தடுப்பது அவரது கடமையாகும்.

இந்தத் தவறான வழக்கத்திற்குக் காரணத்தையும் ஒருவாறு ஊகிக்கலாம். சண்டேசர் முன்புவந்து சிவ தரிசன பலனைப் பூரணமாகப் பெற்றவர் அந்நொடியிலேயே சிவத்தோடு இரண்டறக்கலந்தவராவர்; அவர் பேரின்ப நிலை யெய்தியவர்; மல மறைப்புகள் யாவற்றினின்றும் விடுபட்டவர்; காமம் வெகுளி மயக்கற்றவர்; யான் எனதென்னும் செருக்கற்றவர்; ஆணவப் போர்வையாலாகும் அணுத்தன்மை நீங்கி வியாபகத்தன்மை எய்திய திகம்பரர்; ஆகவே பைரவர்; அழுக்கு மணம் நீங்கிய அம்மணர்; நிர்வாணி. அத்தகைய முத்தருக்கு ஆலயத்துள் அப்புறம் வேலை யொன்றுமில்லை. அதனாலேயே அடியார்கள் சண்டேசரிடமிருந்து நேரே பைரவர் ஆலயஞ்சென்று ஆடையற்ற அவரைத் தொழுதுவிட்டு வெளியேற வேண்டுமென்பது ஆலயதரிசனவிதி. ஆன்மாவிற்குப் புறததிருந்துவரும் மலமறைப்பு மனிதனுக்குச் செயற்கையாலாகும் துணிமறைப்புக்கு ஒப்பிடப்பட்டு, அம்மறைப்பை அகற்றுவதான அறிகுறிப் பொருளை உண்மை அனுபவத்திற்குக் கொண்டுவர இயலாமல் இவ்விதம அழுக்குச் சிலையைக் கிழிக்கும் பாவனை வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

(6) ஆலயத்துள் கடைசியாகச் செய்யப்படும் நிர்மல பைரவருடைய தரிசனம் ஆன்மாவின் விடுதலையைக் குறிப்பிடுவது. அதன்

பின்னர் அடியார்கள் வெளியே வந்து கொடிமரத் தண்டை உட்கார்ந்து கூடியவரை ஜெபம் செய்யவேண்டும். கடைசியாக அஸ்திர மந்திரத்தால் கவசம் செய்துகொண்டு விழுந்து வணங்கி வீட்டுக்குப் புறப்பட வேண்டும். அடியார்கள் புறவுலகிற் புகவும், மேட்டு நீர் பள்ளத்தை நோக்கி விரைந்தோடுவதுபோல அவரிடம் தோய்ந்திருக்கும் அருள்மணமும் வேகமாக வெளியே ஈர்க்கப்படும். அங்ஙனம் குளிர்காற்றி லகப்பட்ட வெந்நீர் போன்று அதன்வேகம் வேகமாக விரயமாகிப் போகாமல் தம்மிடம் ஒடுங்கி நின்று வெகுநேரம் வேலைசெய்யும் பொருட்டே கொடிமரத்தண்டை தியானமும் கவச மந்திரமும் விதிக்கப்பட்டுள்ளது. இது சுடுநீரைத் தெர்மாஸ் குப்பியில் (Thermos Flask) அடைத்துச் சேமிப்பது போன்றது. உண்மையான பக்தியுடன் ஆலயந்தொழும் அடியார்களுடைய உடம்புகளைச் சுற்றி ஒரு அருளொளிப் பிரபாமண்டலம் அங்கு ஏற்படும். அவர்கள் வெளிவரும்போது அதன் ஜொலிப்பில் ஈடுபட்டுத் திளைத்து நிற்கும் பூதகணங்கள் (Nature Spirits) அவரோடு கூடவே வரும். அவரை விடைகொடுத்து ஆலயத்துள் ளனுப்புவதற்காகவே வெளிவாயிலில் வந்து அடியார்கள் சற்று உட்கார்ந்து அவர்களை வழியனுப்பிக்கொள்ளும்படி ஆகமங்களில் விளக்கப்பட்டுள்ளது. இப்போது அந்த உட்காருதல் நடைபெறுகின்றது. ஆனால் அது இக்காலத்தில் தேங்காய் பழம் தின்பதற்கன்றி மேற் கூறிய காரணங்கொண்டல்ல அக்காரணம் இன்று அறியப்படுவதுமில்லை. சென்றி சுதண் ஆராய்ச்சியின்போது கிறிஸ்தவ ஆராதனையிற் காணப்பட்ட சம்பவங்களிலிருந்தே இந்த உண்மை இன்று வெளியாகிறது.

இவ்வாறு நாள்தோறும் அன்போடும் அறிவோடும் விதி தவறுமலும நியமமாக ஆலயந் தொழுபவர், அதாவது "உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுகவாங்கிக் கடைபவர்"

"கிரியையென மருவுமவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளரும் (ஆகம) நூலே"

என்ற உண்மைப்படி கிரியா பாதத்தில் நின்றும் ஞானபாதத்திற்கு விரைவிலேறி, முடிவில் சீவத்தன்மை நீங்கிச் சிவத்தன்மையெய்தி அந்தமில் ஆனந்தத் தழுந்தி நிற்பர். இந்தப் பேரின்ப

நிலையை ஆன்மாக்களுக்கு அருளுவதே ஆலயங்களில் நடை-பெறும் பரார்த்த பூஜையின் நோக்கமும் அடியார்கள் அங்கு சென்று வழிபடவேண்டுவதின் அவசியமுமாகும். இரண்டும் முறைதவறிச் செய்யப்படுமாயின் கருதிய நோக்கம் முற்றுப் பெறாதுபோம்.—இன்று முற்றுப் பெறாது போகின்றது.

"பூஜைகள் தப்பிடின்" பெறப்படும் பலன்களைப் பற்றிக் காரணாகமம் கூறுவதாவது :—

"பூஜை இல்லாவிடில் ரோகமும், புஷ்பமில்லாவிடில் குல நாசமும், சந்தனமில்லாவிடில் குஷ்டரோகமும், ஜலமில்லாவிடில் துக்கமும், தூப மில்லாவிடில் சுகத்தின் நாசமும், தீப மில்லாவிடில் பொருள் ஹானியும், நைவேத்தியமில்லாவிடில் துர்பிக்ஷமும், மந்திரமில்லாவிடில் தரித்திரமும், வஸ்திரமில்லாவிடில் மகா ரோகமும், ஹோம மில்லாவிடில் குலக்ஷயமும், பலி இல்லாவிடில் கிராம நாசமும, நெய்யில்லாவிடில் மரணமும், வில்வம் அறுகு அக்ஷதையில்லாவிடில் சத்ரு பயமும், மணியில்லாவிடில் செவிட்-டுத்தன்மையும், முத்திரையில்லாவிடில் அசுர பயமும், நித்யாக்னி காரியமில்லாவிடில் பூஜைக்கு நிஷ்பலமும், நித்யோத்ஸவமில்லா-விடில் அரசர், ராஜ்யம் இவைகளுக்குப் பயமும், சர்வ திரவிய மில்லாவிடில் தேவதைகளுக்குக் கோபமும் உண்டாகும். எல்-லாத் திரவியங்களும இல்லாவிடில் அளவுகடந்த தீங்கும் உண்டா-கும். ஆதலால், சர்வ முயற்சியாலும் பூஜையைப் பக்தியோடு நன்றாய்ச செய்யவேண்டும."

அதனால் அறியாமையினாலோ அலக்ஷியத்தினாலோ ஆகம விதிகளைப் புறக்கணிக்கும் அர்ச்சகர்கள் அப் பாவபலன்களை அடுத்த பிறப்பில் அனுபவிக்க வேண்டிவருமென்பது துணியப்-படும். கல்லும் மண்ணும் மயிரும் கலந்த அரிசியும் சோறாகலாம். அவை நீக்கப்பட்ட அரிசியும் சோறாகலாம். ஆனால் இரு சோறுகளும் ஒரே பலனைத் தருமென்று நம்பிக்கொள்வது ஏமாற்றம். இவ்வுண்மை ஆலயக்கிரியைகளுக்கும் பொருந்தும். தவறான பூஜைக்கும் முறையான பூஜைக்கும் பலன்கள் வெவ்-வேறாகவே இருக்கும்.

பாடம் 42.

## தீக்ஷைகளும் பிறவும்.

முன்பாடங்களில் அடிக்கடி குறிப்பிடப்பட்ட வங்கப்பணி முனிவருடைய (C. W. Leadbeater) நெற்றிக்கண் ஆராய்ச்சி நூல்கள் யாவும் புதை பொருட் களஞ்சியங்களாக விளங்குகின்றன. அவற்றிலிருந்து நமது ஆசாரங்களிலும் பலவற்றிற்குக் காரணங்கள் ஒரு சிறிது தெரிய வருகின்றன. தீண்டாமை, தொடாமை, திருஷ்டி தோஷம், தகடுகள், யந்திரங்கள், ரட்சைகள், ஆலயக்கிரியைகளின் உட்பொருள்கள், ஸ்தல யாத்திரா பலன்கள், பெரியார் சமாதிகள், மரணத்தின் பின்னுள்ள மனிதர் நிலைகள், அவருக்குச் செய்யும் சிரார்த்தங்கள், அவர்களுடைய புவர்லோக சுவர்க்கலோக வாழ்க்கை முறைகள், இங்கிருந்து அவருக்கு நாம் செய்யக்கூடிய உதவிகள், மற்றும் தேவ பூதகணங்கள், அந்தக் கணங்களுக்கும் நமக்குமுள்ள தொடர்புகள், அவர் உதவியைப் பெறும் முறைகள் என்பனவாதிய பல உண்மைகள் அப்பெரியார் நூல்களிலிருந்து விளங்குகின்றன. இந்து மதத்தில் நம்பிக்கையும் பற்றும், அதற்குப் புத்துயிரளிக்கும் விருப்பமும் உள்ள ஆங்கிலமொழி வல்லுனர் அந்நூல்களைக் கற்பதோடு, தம் சகோதர சகோதரிகளுக்கும் அங்குள்ள பொருள்களை எடுத்துக்கூறுவது இன்றைய நமது சமய நிலையில் ஒரு இன்றியமையாத பணியாகும். அவற்றிலிருந்து ஆலய ஆராதனைகளைப்பற்றிக் கோர்வையாகக் கூறப்படத்தக்கன இந்நூலில் இதுவரை கூறப்பட்டன. அல்லாதவற்றுள் ஒன்றிரண்டு குறிப்புகளை இனிக்கூறி இந்நூல் முடிக்கப்படும். அவையும் ஆலய சம்பந்தமானவையே; மற்றுள்ள விரிவுகளை மூல நூல்களிற் காண்க.

I காற்றாடி பறக்க விடுவது சிறுவருக்குள் ஒரு சாதாரண விளையாட்டு. காற்றாடியின் கயிறு கைக்குள்ளிருக்கும்வரை காற்றாடி எவ்வளவுதூரம் உயரப்பறந்தாலும் கடைசியாக அது அவர்கள் கையிலேயே வந்து சேரும். ஆனால் கயிறு கையைவிட்டுப் போய்விட்டால் காற்றாடியும் காற்றோடு போய்விடும். மக்களிற் பெரும்பாலோர் தன்னலங்கருதி ஜெப தபங்கள், தியா-

இச்சை, மனம் இவை வேலை செய்யும் சூக்ஷ்ம உடம்புகளோ கண்ணை மூடித்திறக்குமுன் காடு மலைகளைக் கடக்கவல்லவை, விண்ணும் மண்ணும் விரைந்தோட வல்லவை, பாதாளம்வரை பறக்கவல்லவை அவற்றை அடக்கியாள்வது வெறுங் கிள்ளுக் கீரை போன்ற விளையாட்டுக் காரியமல்ல. அவற்றை ஒருவாறு கையாளமாட்டாதவன் ஆசாரிய பதவிக்கு ஏற்றவனுமாகான். ஆகையால் இந்த முதல் தீக்ஷையின்போது அவனுடைய இச்சை-யுடம்பையும் மனவுடம்பையும் தூய்மைப்படுத்தவும் பண்படுத்த-வும் உதவுவதான சக்திகள் அவன்மீது பொழியப்படும், அவ்-வுடம்புகளுக்குள் புகுத்தப்படும். ஆனால் அவற்றை அரைகுறை யாகவோ பூரணமாகவோ பயன்படுத்துவது முற்றிலும் அவனையே பொறுத்தது. அவன் அச்சமயம் படிப்பிக்கப்படும் தயாரிப்பு முறைகளில் அடுத்த தீக்ஷைவரை நன்கு பாடு படுவானானால் உரிய பலனைப்பெற்று உயர்வுபெறுவான். அல்லாதவர் வெறும் யந்திரங்களாகவே இருப்பர்.

கிறிஸ்தவ இரண்டாவது தீக்ஷை டீக்கன் தீக்ஷை. இதன் மூலம் இரண்டு அனுகூலங்களை அவன் பெறுகின்றான். ஒன்று மேலே சொன்ன அருள் ஏரியிலுள்ள புவர்லோக அருட்சக்தி-களைக் கையாளும அதிகாரம். அதாவது உரிய மந்திரம் முத்திரை பாவனைகளால் விரும்பும்போது அவனால் திறக்கவும அடைக்கவும் வல்லதான குழாய் ஒன்று அவனையும் அந்த அருட் தேக்கத்தையும் இணைத்து நிற்கின்றது. இக்குழாயின் வேலை அவனுடைய குணாதிசயங்களைப் பொறுத்ததல்ல. அவன் நல்லோனாயினுஞ்சரி தீயோனாயினுஞ்சரி, அறிவாளியாயினுஞ்சரி, மடையனாயினுஞ்சரி, ஆஸ்திகனாயினுஞ்சரி, நாஸ்திகனாயினுஞ்-சரி, உரிய கிரியை மாத்திரம் விதிப்படி இயற்றுவானானால் அக்-குழாய் திறக்க அடைக்கத் தவறாது. இது நகர்ப்புரங்களில் நல்லோரும் தீயோரும் தண்ணீர்க்குழாயைத் திறப்பதுபோன்ற வேலையேயாகும். இதுவே டீக்கன் செய்யும் சூத்திரக் கருவி வேலை; வெறுங்குழாயாகமட்டும தாருவேலை செய்வது. உலகில் ஆசாரிய பதவிக்குரிய ஆன்ம பக்குவம் பெற்றோர் ஆயிரக் கணக்-காக அகப்படுவது அரிதெனக்கண்ட கிறிஸ்து பகவான் தம் அளப்பருங்கருணை மிகுதியினால் இந்த யந்திரக்கருவி (Mechanical arrangement) ஏற்பாட்டைச் செய்துள்ளனர் என்று அறிஞரால்

கூறப்படுகின்றது. இம்முறை மற்ற மதங்களிலும் இருந்து வருவதாகவே தெரிகின்றது. இம்மாதிரியான ஏற்பாடொன்று இன்றைய மதங்களில் இல்லாதுபோயின், உலகம் அருள் மழையில்லாத வறண்ட பாலைவனமாகவே யிருக்கும். அவ்வறட்சி பூமி வறட்சியும் ஆன்ம வறட்சியுமாக இருக்கும்.

டீக்கன் பெறும் இரண்டாவது பலன் அவனுடைய மனோமய கோசம் பகவான் கிறிஸ்துநாதருடன் இணைக்கப்படுவது. இந்த இணைப்பு சூக்ஷ்ம உலகங்களில் ஏற்படும் காந்த மின்னொளிக்கதிர் இணைப்பு. கிறிஸ்துநாதர் அருள் மயம். அந்த அருளைத் தீக்ஷகனும் அடிப்படையாக்கி, அன்பு முறைகளில் தன் அறிவையும் ஆற்றலையும் விருத்தி பண்ணுவானானால், அவன் தக்க பாத்திரவானாக ஆக, அவன் மனோமய கோசம் உத்தம முறையில் வளர வளர, அங்கு கிறிஸ்துநாதருடைய கங்குகரையற்ற அருட்பிரவாகத்திலிருந்து இவன் சுமக்கும் பாரம் அவன்மீது இறங்கி உலகைப் புனிதப்படுத்தி ஒளி வீசிக் கொண்டேயிருக்கும். அல்லாமல் அவன் இந்த இணைப்பை அலட்சியம் செய்து அறவழி விட்டு மறவழி நடப்பானாயின், அவன் போக்குவரத்தில்லாத வெறும் தந்தி நிலையம்போன்றே கடைசிவரை உயிர்வாழ்வான். மேலே சொன்ன யந்திரவேலை அப்போது பூரணமாக நடைபெறத் தவறிவிடும்.

இவ்வாறு கிறிஸ்தவ அருள் ஏரியுடனும் கிறிஸ்து பகவானுடனும் ஏற்படும் இரண்டு இணைப்புகளினாலேயே டீக்கன் தீக்ஷை பெற்றவன் உதவிக்குரு ஆகின்றான். அவன் பெறும் அடுத்த தீக்ஷை ஆச்சாரிய தீக்ஷை. அப்போது அவன் கிறிஸ்தவருக்குள் சாமியார், ப்ரீஸ்ற், குருக்கள், பாதிரியார், ஐயர் என்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றான். அவர்கள் அருள் ஏரியிலிருந்து புவர்லோகம் மாத்திரமன்றி சுவர்க்கலோக அருளையும் இறக்கவும் வினியோகிக்கவும், அடியார்களுடைய பாவங்களை கிறிஸ்துநாதர் பேரால் மன்னிக்கவும், அதாவது அவர்களுடைய சூக்ஷ்ம உடம்புகளைச் சிக்கெடுத்து நேராக்கவும், அவரை ஆசீர்வதிக்கவும், அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் திவ்ய நற்கருணைத் தேவத்திரவியங்களாக மாற்றவும், இன்னும் பல அருட் கிரியைகளியற்றவும் உரிமை பெறுகின்றனர். இது அவர்களுடைய யந்திரபாகம்.

இவற்றின் காரியசித்தி சாமியாருடைய ஒழுக்கத்தையோ அறிவையோ அன்பையோ ஆற்றலையோ பொறுத்ததல்ல. இது தவிர குருக்களுடைய விஞ்ஞான மயகோசமும் கிறிஸ்துநாத-ருடன் இப்போது இணைக்கப்படுகின்றது. இந்த இணைப்பும் சாதனங்களால் விரிவடைவதும் கவனக்குறைவால் தூர்ந்து போவதுமான இயல்பை உடையதே. அப்பியாசத்தில் வெற்றி பெறுபவர் இறைவனுடைய உயிர் நிலையங்களாகவே இருப்பர். அத்தகைய குருக்கள் ஒவ்வொருவரும் பகவான் கிறிஸ்துநாத-ருடைய மாபெரும் பிரக்ஞையின் புறநிலையங்களாவர் (Outposts of Consciousness). அவர்கள் மூலம் பகவான் உலகுக்குச் செய்-யும் அருட் பணிகளை நம்போன்றவர் அளக்க முடியாது.

கடைசி தீக்ஷை பெற்றவர் அத்யக்ஷகர், பிஷப், கண்காணி-யார் என்று அழைக்கப்படுவர். அவரே பிறருக்கு ஆசாரிய தீக்ஷை செய்யும் அதிகாரமுடையவர்; ஆலயங்களைப் பிர-திஷ்டை செய்யும் உரிமை உடையவர்; அருள் ஏரியில் எல்லா ஆழங்களிலும் நீந்திக்குளிப்பவர் அவருடைய ஆனந்தமய கோசமே பகவானுடன் இணைபட்டிருப்பதால் அவருள் மேதக்-கோர் உலகில் கிறிஸ்துநாதராகவே காணப்படுவர். இன்றைய ஓட்டசாட்ட உலகில் அன்னாரைப் பெறுவது அருமையினும் அருமையாயிருப்பினும், அவருடைய மகிமையில் ஒருபகுதி எல்லா பிஷப்புகளிடமும் இல்லாமலில்லை. ஆயினும் அவ்வுண்-மையை அவருட் பெரும்பாலார் அறியாதிருப்பதால் பகவான் அருளைப் பூரணமாகப் பயன்படுத்திக்கொள்ளும் பிஷப்புக்கள் இன்று சுருக்கமாகவே உள்ளனரென்னலாம்.

மேலே கூறப்பட்டவற்றிலிருந்து சைவாகம தீக்ஷா முறை-களைப்பற்றி ஏதாவது அனுமானிக்கலாமா? கிறிஸ்தவ ஏற்பாட்-டில் ஜாதி வரம்பென்பது கிடையாது, தகுதியொன்றே கருதப் படுவது. உண்மைப் பற்றுடையவரே அந்த இறை பணிக்குத் தம்மை அர்ப்பிப்பர். நமக்குள் ஆதிசைவருக்குக் குலத்தொழிலே ஆலய பூஜைதானென்றும் ஏனைய ஜாதியாருக்கு அங்கு அதிகார மில்லையென்றும் விதிகள் ஏற்பட்டிருப்பது காரணமாக, பட்டர் கூட்டத்தில் பால்குடி மறக்காத பிள்ளைமுதல் மணியடிக்கத்

தொடங்கிவிடுகின்றனர். அவருக்கு முறையாகப்படிக்க அவகாசமோ வசதிகளோ இன்று இல்லாது போகவே, அவருட் பலர் இமிற்றேஷன் (போலிப்) பட்டர்களாகவே யிருந்துவிடுகின்றனர். "மீன் குஞ்சுக்கு நீந்தப் பழகவேண்டுமா, பட்டக் குட்டிக்கு மணியடிக்கப் படிக்கவேண்டுமா?" என்பது பழமொழி. அதனால் சிலர் இந்த மணியடிப்போடு நின்றுவிடுகின்றனர். வேறு சிலர், தனவைசியப் பிரபுக்களின் ஆதரவினால் ஏதோ சில மந்திரங்களைப் பொருளறியாமலே ஓதவும், தம் முதியோரைப் பார்த்துச் சில கைக்கினைகளைக் காட்டவும் போலிப் பூசைகளை இயற்றவும் கற்றுத் திருப்தியடைந்து விடுகின்றனர். அடியார்களும் அதிகாரிகளுமோ எடுபிடிகளையும் தோரணைகளையும் பற்றியே அதிகம் கவனஞ் செலுத்துவார்கள். அதுவும் தர்மகர்த்தர்கள் என் ஆள், உன் ஆள் என்று பங்கு போட்டுக்கொண்டு ஆலயப் பணத்தைச் செலவிடுவர். பூசையைப்பற்றிய அறிவு இருவகையாருக்கும் பூஜ்யமாகவேயிருக்கும். அதனால் ஆதிசைவருக்குப் படிக்கவேண்டுமென்ற அக்கரையில்லாமற் போகிறது; ஆராதனைகள் ஒழுங்குபடவோ ஆலயங்கள் சீர்திருந்தவோ இடமில்லாமலும் போகின்றது.

இனி, நமது சிவாச்சாரியர்களுக்கு இன்றியமையாதனவாக ஆகமங்களில் விதிக்கப்பட்டுள்ள தீக்ஷைகளும், கிறிஸ்தவருக்குப்போலவே நான்காகும். அவற்றைப்பற்றிய குறிப்புகளை அடுத்த பக்கத்து அட்டவணையிற் காண்க.

(1) ஆதிசைவர்களுக்கு வைதிக முறைப்படி உபநயனமானதும் ஆகம முறைப்படி சமயதீக்ஷை செய்யப்படல் வேண்டும். அப்போது அவன் சிவமந்திரங்களை ஓத உரிமை பெறுகின்றான்; தாசநிலை, அல்லது ஆண்டான் அடிமையென்னும் இறை தொடர்பையும் பெறுகின்றான். மந்திரம் என்ற சொல் மந் = நினைப்பவனை, த்ர = காப்பது என்று பிரிந்து, ஓதுபவனைக் காப்பது என்று பொருள்படும். தன்னை அடிமையாகப் பாவித்து ஆண்டான் பெயரை ஓயாது ஓதுவதனால் அவனுடைய அருளைப் பெற்று சமயி பண்படுகின்றான். சரியை முறைப்படி அவனுக்கு விதிக்கப்பட்டுள்ள இறை பணிகளும் அவனுடைய மனம் மொழி மெய்களை அடக்கி யாளுவதற்கான புறக்கிரியைகளாகவே

# தீக்ஷை அட்டவணை

| | கிறிஸ்தவர் தீக்ஷைகள் | சைவாகமம் | தீக்ஷகன் பெயர் | தீக்ஷகன் அதிகாரம் | மார்க்கம் | பாதம் | இறை தொடர்பு | நெறி காட்டிய சமயகுரவர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஸப்டீக்கன் | சமயதீக்ஷை | சமயி | மந்திரம் | தாசமார்க்கம் | சரியை | ஆண்டான் அடிமை | திருநாவுக்கரசர் |
| 2 | டீக்கன் | விசேஷ தீக்ஷை | புத்திரகன் | ஷையுடன் ஆன்மார்த்த பூஜையும் யோகாப்பியாசமும் | சற்புத்திர மார்க்கம் | கிரியை | புத்திரன் | திருஞான சம்பந்தர் |
| 3 | ப்ரீஸ்ற் | நிர்வாண தீக்ஷை | சாதகன் | ஷை மூன்றுடன் பரார்த்த பூஜையும் | சகமார்க்கம் | யோகம் | தோழன் | சுந்தர மூர்த்திகள் |
| 4 | பிஷப் | ஆசாரியார் அபிஷேகம் | ஆசாரியா | ஷையாவும் மற்றுள்ள ஆகமக் கிரியைகள் அடங்கலும் | சன்மார்க்கம் | ஞானம் | அபேத, அதாவது இரண்டற்ற ஒற்றுமைநிலை | மாணிக்க வாசகர் |

அமைந்திருக்கின்றன. அதனால் சமயிக்கும் ஸப் புத்திரனுக்கும் பயிற்சி முறைகளில் உள்ள பெரிய ஒற்றுமை விளங்குகிறது. மேல் வரவிருக்கும் வளர்ச்சிக்குத் தன்னை இப்போது பண்படுத்துவதே சரியாபாதத்தின் வேலை. அதற்கான அருளே இந்த தீக்ஷையில் அவன்மீது பொழியப்படுகிறது. இந்த தாச மார்க்கத்தில் கைகாட்டியா யிருப்பவர் திருநாவுக்கரசு நாயனார். அவர் "நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீவா" என்ற திருத்தாண்டகத்தில அதன் அங்கங்களைத தொகுத்துக்கூறியுள்ளனர். அந்நாயனார் உழவாரப்பணிவிடையாகிய அடிமைத் தொழில் மூலம் இறைவனை அடையலாமென்ற உண்மையை உலகிற்கு உதாரணமாகக் காட்டியவர்.

இனி இரண்டாவதான விசேஷ தீக்ஷை பெற்றவன் மேற் சொன்ன மந்திராதிகாரததோடு அர்ச்சனாதிகாரம் என்ற ஆன்மார்த்த பூசை செய்யும் உரிமையையும பெறுகின்றான் ஆன்மார்த்த பூசைக்கும் பரார்த்த பூசைக்கும் கிரியா முறையில் அதிக வேறுபாடில்லை யென்பது மேலே கூறப்பட்டுள்ளது. இரண்டிலும் அருட் பொழிவிற்கான ஏற்பாடுகளே அமைந்துள்ளன. ஆயினும் யந்திரக் கருவிகளின் தாரதம்மிய வேறுபாட்டினால் ஆன்மார்த்த பூசை சுரக்கும் அருள் பரார்த்த பூசையை விடத் தன்மையிலும அளவிலும தாழ்ந்ததாகவே இருக்குமென எளிதில் அநுமானிக்கலாகும். இநத அருள் இறக்கம் காரணமாக விசேஷ தீக்ஷிதனும் கிறிஸ்தவ மக்களைப்போன்று தனக்குரிய சைவ சமய அருள ஏரியில் புவர்லோகபாகததோடு இணைக்கப்பட்டிருப்பானென்று எண்ண இடமுண்டாகின்றது. இந்த அருள் இணைப்பே ஆகமங்களில் கிரியாபாதத்திற்குரிய அர்ச்சனாதிகாரமென்று விதந்து கூறப்படுவது. அன்றி வெறும் வில்வத்தையள்ளி விக்கிரகத்தின் பாதத்திலிட்டு வணங்குவதையல்ல.

விசேஷ தீக்ஷிதன் பெறும் மூன்றாவது அதிகாரம் யோகாதிகாரம், யோகம பயிலும் உரிமை. "விரும்பிய மந்திராதிகாரம் அர்ச்சனாதிகாரம் மேவும் யோகாதிகாரம் எனச் சமயம் விசேடம் வரும்"—என்று சிவப்பிரகாச நூல் கூறுவது இதனையே. யோகம் என்ற சொல் "யுஜ்" என்ற தாதுவிலுண்டானது; சேருதல, கூடுதல், ஒன்று படுதல்,

என்று பொருள் படுவது. இருவர் ஒன்றுபடுவதும் இரண்டு பொருள்கள் இரண்டறக் கலப்பதும் யோகமென்று சொல்லத் தக்கனவே. ஆயினும் சாதாரண வழக்கில் இறைவனோடு ஆன்மா ஒன்றுபட்டு நிற்றலே யோகம் என்று கூறப்படுகின்றது. அதுவே நூல் வழக்கும். கிறிஸ்தவ முறையில் டீக்கன் என்ற உதவிக் குருவினுடைய மனையைக்கோசம் கிறிஸ்தவ பரம்பரைக்கு ஆதி கர்த்தராகிய பகவான் கிறிஸ்துநாதருடன் இணைக்கப்படுகின்ற-தென்பது நெற்றிக் கண்ணால் காணப்பட்டது. அந்த இணைப்பும் அதை வலுப்படுத்துவதற்கான பயிற்சிகளுமே அந்த மதத்தில் ஆதிகாலத்தில் ஏற்பட்டிருந்த யோகமுறை. அது அந்தரங்க முறையாக இருந்து வந்தது குருக்களாகுபவரே அவற்றைப் பயின்றுவந்தனர். அந்தக் கள்ளுக்குடிப் புலாலுணவு நாட்டில் சமய அதிகாரிகளே தம் தீக்ஷையின் பலத்தினால் அவற்றைப் பயில அருகதையுடையராயிருந்தனர். அதில் சித்தி பெற்ற சாமியார்கள் ஞானப்பிதாக்கள் (Gnostic Fathers) என்று பிரசித்தி பெற்றிருந்தனர். கள்ளும் மாமிசமும் யோகப் பயிற்சிக்கு அபாயமானவை என்பதை நம் நாட்டார் நன்கறிவர். அந்த அறிவு சிறிதுமில்லாத மேல் நாட்டார், தம் ஆணவச் செருக்கால் அவற்றைக் கற்க ஆசைப்படவே, கற்பிக்கும்படி சாமியார்களை இடைஞ்சற் படுத்தவே, அம்முறைகள் சிறிது சிறிதாக மறைத்து வைக்கப்பட்டு இன்று இல்லாமலே ஒழிந்துபோயின வென்ற நிலைமைக்கு வந்துவிட்டன.

ஆனால் நமக்குள் யோகமுறையைப்பற்றி ஒருநாளும் ஒளிப்பு மறைப்பு இருந்ததேயில்லை. அது எட்டு அங்கங்களை யுடைய-தென்பதை இந்நாட்டில் பண்டிதரும் பாமரரும் அறிவர். அந்த அஷ்டாங்க யோகத்தின் முதலிரண்டு படிகளாகிய இயம நியமாதிகளைப் பயிலமாட்டாதவர், மேற் செல்வதாலேற்படும் அபாயங்களை யறிவராகையால், அந்த அபாயங்களைக் கண்கூடாகக் கண்டுள்ளவராகையால், வெறும் ஆசையால் உந்தப்பட்டுப் பிறரை நொந்துகொள்ளாமல் தாமே யோகப் பயிற்சியினின்றும் விலகிக்கொள்வர். விசேஷ தீக்ஷை பெறுபவன் யோகாதிகாரம் பெறுகின்றான் என்னும்போது, அடுத்த தீக்ஷையில் முற்றுப்பெற விருக்கும் யோகத்திற்கு இங்கு அடிப்படையிடப் படுகிறதென்-றும், அதற்கு அநுகூலமான இணைப்பொன்று இறைவனோடு

ஏற்படுகிறதென்றும் எண்ணவேண்டியிருக்கிறது. இருமுறை-களிலும் இரண்டாவதான விசேஷ தீக்ஷைக்கும் டீக்கன் தீக்ஷைக்குமுள்ள பல ஒற்றுமைகளிலிருந்து இங்ஙனம் அநு-மானிக்க இடமுண்டாகிறது. அது உண்மையாயின், எந்த உத்தம புருஷரோடு சைவாகம தீக்ஷிதர்கள் இணைக்கப்பட்டிருக்கலாம்? சிவாகமமுறை திருக் கைலாய பரம்பரையைச் சேர்ந்தது. அப்பரம்பரைக்கு இன்றையத் தலைவர் சனத் குமார பகவானென்று கூறப்படுகின்றனர். அவர் குமாரக்கடவுள் அம்சமாம்; அவர் உள்ளங்கையில் ஒரு பந்துபோன்றுள்ளதாம் இந்த உலகம். அந்த உலகாதிபனறியாமல் ஒரு குருவிக்குஞ்சு கூடப் பறப்பதில்லையாம். அவருடனேயே விசேஷ தீட்சகன் இணைப்புப் பெறுவானாக இருக்கலாம். அந்த இறை இணைப்-பாகும் யோக முறையே சற்புத்திர மார்க்கமும், அதனால் அவன் பெயர் புத்திரனாகவும் இருக்குமபோலும். அந்தப் புத்திரனுக்கும் தகப்பனுக்குமான சிறப்புத் தொடர்பொன்று டீக்கனுக்குப்-போல இந்த தீக்ஷையால் இவனுக்கும் ஏற்படுகின்றதென்பது நெற்றிக்கண்ணால் ஆராயப்படவில்லையாயினும் அநுமானிக்கலா-கும். அந்தத் தொடர்பை அவன் அஷ்டாங்க யோக முறையில் பாடுபட்டுப் பலப்படுத்துவானாயின், அவன் அறிவிலும் ஆற்றலி-லும் மனோதிடத்திலும் ஒழுக்கத்திலும் முன்னேறி, அடுத்த நிர்வாண தீக்ஷைக்குத் தகுதியுடையவனாகின்றான். இந்த சற்-புத்திரமார்க்கத்தில் இன்று நமக்குக் கைகாட்டியாய் அமர்ந்-திருப்பவர் திருஞானசம்பந்தப் பெருமான். அவர் ஞானப் புதல்வர், ஞானசம்பந்தப் பிள்ளையார் எனப்படுவர்.

(3) சைவாகம மூன்றாவது தீக்ஷை நிர்வாண தீக்ஷை. இது ப்ரீஸ்ற் (Priest) அல்லது சாமியார் தீக்ஷை போன்று மிக நீண்ட-தொரு தீக்ஷை. சாமியாரைப்போலவே இவனும் பரார்த்த பூஜைக்கு யோக்கியதை பெறுகின்றான். அதனால் அவனுடைய அருட் குழாயும் சைவ சமய அருட் தேக்கத்தில் சுவர்க்கலோக அருள் ஆழம்வரை புகுத்தப்படுகின்ற தென்னலாம். அவ-னுடைய மார்க்கம் சகமார்க்கம், இறைவனுக்குத் தோழனாகும் மார்க்கம். அதனால் அவனுடைய அன்புடம்பாகிய விஞ்ஞான மய-கோசமும் சனத்குமாரரோடு அன்பு இணைப்புப் பெறுவதாக

யிருக்கும். அவனுக்குப் பெயர் சாதகன். தனது சாதகத்தால் இம்மையில் யோக சித்திகளையும் அம்மையில் சாரூபப் பதவியை-யும் பெறுபவன். இந்த சக மார்க்கத்தில் கைகாட்டியாயமர்ந்திருப்-பவர் சுந்தரமூர்த்தி நாயனார். யோகபாதத்தது அவர் ஆதிசைவர் பரம்பரையினர், தம்பிரான் தோழர் எனப் பெயர் பெற்றவர்.

(4) சைவதீக்ஷைகளில் நான்காவது ஆசாரியர் அபிஷேக-மாம். அவர் கிறிஸ்தவ (Bishop) பிஷப்பைப் போன்று ஆகமத்துள்ள சகல அதிகாரங்களையும் பெற்றவர் அவரே மற்றுமுள்ளோருக்கு நான்கு தீக்ஷைகளையும் செய்ய உரிமை-யுடையவர்; ஆலயப் பிரதிஷ்டைகள் செய்யவும், திருவிழாக்களில் ரக்ஷா பந்தனம், கொடியேற்றம், யாகசாலைப் பூஜைகள் முதலியன செய்யவும், ஞானோப தேசஞ் செய்யவும், மேற்கண்ட யாவற்றை-யும் செய்விக்கவும் உரிமையுடையவர். அதனால் அவருடைய அருட்குழாய் ஏரியின் ஆழம் முழுவதிலும் ஈடுபட்டு நிற்கும். இவருடைய மார்க்கமே மாணிக்கவாசக சுவாமிகள் திருஷ்டாந்த-மாகக் காட்டிய சன்மார்க்கம், இறைவனோடிரண்டறக் கலந்து நிற்கும் சித்தாந்த சுத்தாத்துவித நிலை, ஞானபாதம்

தமக்குரியதான இவ்வளவு மகோன்னத நிலைகளை இன்றைய ஆதிசைவர்கள் அறியாது கிடக்கின்றனர். ஒழுங்காக தீக்ஷை-களைப் பெறாமலும், அனுஷ்டானங்கள், ஆன்மார்த்த பூஜைகளைச் செய்யாமலும், யோகம் பயிலாமலும் நிலைகுலைந்து நிற்கின்றனர்; ஏளனம் பண்ணப்படுகின்றனர்; ஆதரவின்றி வறுமையால் வாடு-கின்றனர்; வயிற்றுப் பாட்டையே தம் வாய்ப் பாட்டாக்கி ஓயாத குறைபாட்டில் உயிர் வாழுகின்றனர். அவர்கள் தம் ஆசாரிய நிலை தவறவும் சிவாலயங்கள் சீரழிந்து போயின; அடியார்கள் அறிவிப்பாரின்றி மூடக்கொள்கையராயினர்; அவரும் தத் தமக்குரிய தீக்ஷை முறைகளையும் ஆன்மார்த்த பூஜைகளையும் நம்பிக்கையின்றிக் கைவிட்டு, வெறும் பானைக்குப் பட்டை போட்டது போன்று விபூதிப்பட்டைகளை மாத்திரம் அணிந்துகொண்டு இன்றைய சைவர்கள் விலையற்ற சை (வ்) வர்-களாகவே, அதாவது வெறும் சுன்னங்களாவும் உலோகாயதர்-களாகவுமே வாழ்ந்து வருகின்றனர். ஆலயங்களைப்பற்றி அவநம்பிக்கையும் பாமர மக்களுக்குள்ளும் பரவி வருகிறது.

இந்த நிலைமைகள் மாறிச் சைவசமயம் பண்டையச் சீர்பெறுமா? சிவாலயங்கள் முன்னைய சிறப்புப் பெறுமா? அடியார்களும் ஆதிசைவர்களும் இன்றையத் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து தங்கள் தங்கள் சமயக் கடமைகளை உணர்வார்களா? உலகம் முன்னேற உழைப்பார்களா?—இவற்றை இறைவனே அறிய வல்லவன்.

பண்டைத் தமிழர் சமயத்தில் ஊறியிருந்தபோது, திரை கடலோடித் திரவியம் தேடினர்; சென்ற விடமெல்லாம் தம் சமயத்தைப் பரப்பினர். ஆலயங்கள் கட்டினர்; நாகரீகத்தை நிரப்பினர்; பேரும் புகழும் பெற்று வாழ்ந்து வந்தனர். இன்றையத் தமிழ் மக்களோ ஆப்பிரிக்காவிலும் பீஜித் தீவிலும் அடிமைகளாகவும் கொழும்புச் சீமையில் கூலிகளாகவும் வயிறு கழுவுகின்றனர். சமயப்பற்றில்லாமையால் தம் சிறப்பு நாகரீகத்தையே இன்று இழந்து விட்டனரென்னலாம்.

கடைசியாக ஒன்றிரண்டு குறிப்புகள்.

(1) கிறிஸ்தவ முறையில் குருக்கள் (ப்ரிஸ்ற்), அத்தியட்சகர் (பிஷப்) தீக்ஷைகளின்போது, மற்றுள்ள பிஷப்புக்கள்,

"தேவாலயத்தில் உங்கள் அதிகாரத்திற்கும் ஆராதனைப் பணிக்கும் அருகதை யுண்டுபண்ணும் (Holy Ghost) பரிசுத்த ஆவியைப் பெறுவீராக—" என்ற தொடக்கத்து மந்திரத்தை ஓதிக்கொண்டு, தீக்ஷை பெறுவோன் தலை மீது தம் இரு கைகளையும் வைத்து ஆசீர்வதிப்பார்கள். அப்பொழுதே அவர்கட்கு கிறிஸ்தவ பாரம்பரியம் ஏற்படுகின்றதாம். இது செய்யப்படாதபோது அவர்கள் இயற்றும் கிரியைகள் உரிய பலன் ஒன்றையும் தராது போகின்றனவாம். அவர்கள் குருக்கள் அல்லராம. இதுவே குரு பரம்பரை என்ற பரிபாஷையின் பொருள் என்றும், ஆதி-கர்த்தரின் சக்தியானது தொடார்ச்சியாக உலகில் தொழிற்படும் முறை யென்றும் நெற்றிக்கண் ஆராய்ச்சியில் தெரிய வருகின்றது.

(2) குருக்கள் (ப்ரீஸ்ற்) தீக்ஷையின்போது அவருடைய உள்ளங்கைகளிலும் விரல்களிலும், அபிமந்திரிக்கப்பட்ட

தைலத்தால் சிறுவை முதலிய முத்திரைகள் வரையப்படும்; கை முழுவதும் தைலம் தடவவும்படும். பின்னர் இருகைகளையும் கும்பிடும் பாவனையில் சேர்த்துக் கட்டிச் சற்று வைத்திருந்து,

"ஆராதனை நடத்தும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்". என்று அவருக்குக் கூறி, "ஆண்டவரே, இக் கைகளைக்கொண்டு ஆசீர்வதிக்கவும், நற் கருணைத் திரவியங்களைத் தேவத் திரவியங்களாக்கவும் அதிகாரம் கொடுத்தருளும்—" என்ற தொடக்கத்திய மந்திரங்களையும் பிஷப் ஓதுவர்; அக் கும்பிடுகைகளைக்கொண்டு சில கிரியைகளும் செய்விப்பர். மின்னொழுக்கி (Lightning Conductor) அமைக்கப்படாத உயர்ந்த கட்டிடங்களில் மின்வெட்டுமாயின் அவ்வீடு இடிந்து போகும். அவை அமைக்கப்பட்டுள்ள வீடுகளில் அபாயம் உண்டாவதில்லை. அதே போன்று ஆராதனை நடத்தும கைகளுக்கும, அருட் குழாயாக நின்று ஆசீர்வதிக்கும் கைகளுக்கும், மேற் சொன்ன தயாரிப்பு இல்லாதபோது அருள் அங்கு ஒழுங்காக இறங்காமலும், அவ்வாறு தடைப்படும்போது ஆராதனை நடத்துபவருக்கு நரம் பதிர்ச்சிகளையும் பல கோய்களையும் உண்டு பண்ணுமாம. இதுவும் நெற்றிக் கண்ணால் ஆராயப்பட்ட உண்மை.

இனி இதை யொத்து, சிவாகம சம்பந்தமாக அகோர சிவாசாரியார் இயற்றியுள்ள "கிரியாக்கிரம ஜோதி" என்ற பத்ததியில் ஆசாரியாபிஷேகக் கிரியைகளை விளக்கும்போது,

(1) "குருவானவர் சர்வாதிகாரார்த்தமாக அவன் சிரசில் சிவஹஸ்தம் வைத்து—,"

"தீக்ஷை, பிரதிஷ்டை முதலானவற்றில் இன்று முதலாக நான் உனக்கு அதிகாரம் கொடுத்தேனென்று ஆக்ஞாபிக்க."

"பின்பு ஈஸ்வரரை நமஸ்கரித்து, "குரு மூர்த்தியை அபிதானஞ் செய்திருக்கிற தேவரீராலே அபிஷேகார்த்தமாக ஆக்ஞாபிக்கப்பட்டவனாய், நான் சம்ஹிதையைக் கரை கண்ட இவனுக்கு அபிஷேகம் செய்தேன், சிவனே. உம்முடைய அனுக்கிரஹத்தால் இவனுக்கு அதிகாரம் விக்கினமில்லாமல் நடப்பியும்" என்று விக்ஞாபிக்க."

(2) "சிவாதி மந்திரங்களால் அவனுடைய கை விரல்களின் நுனியில் எழுதி, பாசச்சேதாதி ஏதுவாக மந்திரங்களைத் தீபனஞ் செய்து பரிசித்து அவன் கையால் ஓமம் செய்விக்க—."

என்ற இரண்டு கிரியைகள் கூறப்படுகின்றன. இரண்டு மதங்களிலுள்ள முறைகளிலும் அதனதன் ஆசாரியராவதற்கு இவை இரண்டும் இன்றியமையாத உட்பொருள் வாய்ந்த உறுப்புக்களாகக் காணப்படுகின்றன. இவ்வளவு நெருங்கிய ஒற்றுமைகள் மதங்களுக்குள் காணப்படும்போது, அடிப்படை உண்மையறியாத மதவாதிகள் வெறும் மதங்கொண்டு போராடுவதேன்? அன்னோர் இந் நூலைக் கற்றுவது அமைதி பெற இறைவன் அருள் புரிவாராக.

"ஆலயந் தொழுவது சாலவும் நன்று"

---

முற்றிற்று.

---

பின் இணைப்பு I.

## தமிழ் மறை வழிபாடு.

இந்து மதத்தில் கோஷ்டி பூஜை என்ற கூட்டுத் தொழுகை (Congregational Worship) இல்லை யென்பது இந்நூல் முன் பாடங்களில் கூறப்பட்டுள்ளது. கூட்டமாக பஜனை நடத்துவது ஆராதனை முறையல்ல; ஆராதனைக்குரிய அங்கங்கள் அங்கு கிடையா. இக்குறையை நிவிர்த்திக்கும் பொருட்டுச் சென்னை அடையாற்றிலிருந்த ஒரு சிலர், வடமொழி வேத மந்திரங்களைக் கொண்டு பாரத சமாஜ பூஜை யென்ற கோஷ்டி பூஜை யொன்றை அமைத்து அதனை மிகுந்த சிரத்தா பக்தியுடன், காசி முதல் கன்னியாகுமரி வரையுள்ள பல இடங்களில் பொதுக் கூட்டங்களிலும் அவரவர் வீடுகளிலும் அடிக்கடி இயற்றி அருட் பலன் பெற்று வருகின்றனர். ஆனால் தமிழ் மக்களுக்கு அது பொருள் விளங்காமையோடு அவ் வேத மந்திரங்களில் அதிகாரமுமில்லாமையால், அவருக்குப் பரம்பரை உரிமையுடைய தமிழ் மறை மந்திரங்களின் உதவி கொண்டு ஒரு கூட்டுத் தொழுகை முறை இத்துடன் தனியாகக் கொடுக்கப்படுகின்றது. விருப்பமுடையவர் அதனைத் தமிழ நாடெங்கும் இயற்றி இறையருளை நிறையப் பெறுவாராக. கிரியா முறைகளுடன் கூடின தமிழ் மறை வழிபாடு பெரிய நூல் தனி நூலாக விலைக்குக் கிடைக்கும். அது கிரியை நடத்த வேண்டிய வகையை நன்கு விளக்கும்.

பின் இணைப்பு II.

## வேற்றுமையுள் ஒற்றுமை.

நம் மூதாதையர் நமக்குத் தெவிட்டாக் கனிகளாய்த் தமிழ் மொழியில் திரட்டிக் கொடுத்தவை பழமொழிகள். அவை பழம் மொழிகளும் மொழியின் பழங்களுமாம். முதுமொழியாகும் அப் பழமொழி முறையில் அமைந்தவைகளே, எளிய நடையும் செறிந்த பொருளும் சீரிய உண்மையும் நிறைந்தனவாகிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய அரும் பெரும் குறு நூல்கள். அம் மாதிரி நூல்களில் அடங்காதனவாய், அண்டத்தையும் பிண்டத்தையும் வடித்தெடுத்த ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டனவாய், பண்டிதரும் பாமரரும் பெரியோரும் சிறியோரும் தம் பேச்சிற்குப் பூணாகவும் அடைமொழியாகவும் மேற்கோளாகவும் அணிகளாகவும் வழங்குவனவாய் உள்ள பழமொழிகள் எண்ணிறந்தன. அவை சாதாரண மக்களால் சொலவடை என்று சொல்லப்படும். சொல்வன்மைக்கு இச்சொலவடைகள் முள்ளாணி போன்றவை. அம்முள்ளாணிகளில் ஒன்று "உலகம் பலவிதம்" என்பது.

உலகம் பலவிதம் என்பது சிறு குழந்தைகளுக்கும் புலனாகும் எளிய உண்மைகளில் ஒன்று. ஆயினும் பெரும் பெரும் பண்டிதரையும் ஆழங்காணாது அல்லற்படவைக்கும் உண்மையும் அது. எப்பக்கம் திரும்பினும் பல்விதப்பட்ட உலகம் நம்மைப் பகட்டி நிற்கின்றது. உலோகங்களில் கல் மண் செம்பு இரும்பு பொன் வெள்ளி உப்புகள்; நவரத்னங்களில் எண்ணில்லாத விதங்கள்; தாவரங்களில் புல் பூண்டு, செடி கொடி, தென்னை பலா, சந்தனம் தேக்காதிய கணக்கற்ற விதங்கள், பிராணிகளில் ஈ எறும்பு, ஆடு மாடு, கரடி புலி, யானை ஒட்டகை ஆகிய எத்தனையோ விதங்கள்; அவ்வாறே மானிட வர்க்கத்திலும். இவையன்றி ஒவ்வொரு இனத்திலுமுள்ள வேறுபாடுகளோ எட்டிலடங்காதன. "அண்ணல் யானை அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு, மன்னர்க்கிருக்க நிழலாகும்" பேரால மரத்தின் பல்லாயிரக்கணக்கான இலைகளில், ஒரே விதமான இரண்டு இலைகளைக் காண்பது அரிதினும் அரிதாகும். உலகத்தில் காணப்படும்

கோடிக் கணக்கான மனிதருக் கெல்லாம் மெய் வாய் கண் மூக்கு செவிகளாலேயே முகங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆயினும் ஒரே அச்சில் வார்க்கப்பட்ட இரு முகங்களைக் காண்பது இயலாத காரியம். இரட்டைப் பிள்ளைகள் முகத்திலும்கூட நுண்ணிய வேறுபாடுகள் காணப்படும். இவையன்றிச் செயற்கை வேறுபாடுகளை ஆராயப்புகின், அவற்றிற்கு முடிவே காண்பதரிது. பெயர் ஜாதி கர்மம் தொழில் உடை உணவு சமயங்கள் தெய்வங்கள் இவற்றிற்கோர் எல்லையே இல்லை. ஆகவே உலகம் பல விதம் என்பது எடுத்து விளக்கவேண்டிய ஆழ்ந்த உண்மையொன்றல்ல.

உலகம் இவ்விதம் பலவிதமாயிருப்பதின் பலனைச் சற்று ஆராய்வோமானால், உலகம் முழுவதிலும ஓயாத பூசலும் புழுக்கமும் சண்டையும் சச்சரவும் கலகமும அவற்றாலேற்படும் பெருந்துன்பமுமே என்பது புலப்படும. இயற்கை வேறுபாடுகளில், வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்ற உண்மை எங்கும் காணப்படுகிறது. பயிரை வேலி அழித்துவிடுகிறது; வேலியை ஆடு மாடுகள் அழித்து விடுகின்றன; ஆடு மாடுகளைக் காட்டு மிருகங்கள் அழித்து விடுகின்றன; காட்டு மிருகங்களையும் நாட்டு மிருகங்களையும பாரபக்ஷமின்றி மனிதர் கவளீகரித்து விடுகின்றனர். இவையன்றிச் செயற்கை வேறுபாடுகளிலும் எளியோரை வலியோர் அடிக்கிற கொள்கையே பின்பற்றப்படுகிறது; பணக்காரன் ஏழையை இகழ்கின்றான்; வெள்ளையன் கறுப்பு மனிதனை இகழ்கின்றான்; உடுப்பிட்டவன் துணி கட்டியவனைக் கோவணாண்டி என்கின்றான்; கோதுமை உண்பவன் அரிசித் தீனியையும, அரிசிக்காரன் கேப்பை சோளக்காரனையும் கேவலமாகக் கருதுகின்றனர். என் தெய்வம் உன் தெய்வமென்ற சமயச் சண்டைகளுக்கோ எல்லையில்லை. கிறிஸ்தவன் இந்துவையும், இந்து மகமதியனையும், வைஷ்ணவன் சைவனையும், ஒவ்வொருவனும் தன் மதமல்லாத மற்ற மதக்காரர் அனைவரையும் தூற்றுவதும் ஏசுவதும் பேசுவதும் இகழ்வதும் ஓயாத வேலையாகவே இருந்து வருகின்றன. உலகம் பலவிதப்படுவதால் உண்டாகும் இந்த ஓயாத பூசலே பண்டிதர் கண்ட உண்மை.

ஆனால், இந்த உலகம் பலவிதமாயிராமல் எங்கும் எல்லாம் ஒரே விதமாக அமைந்துவிட்டால் என்னவாகும்? அறுசுவைக்-

குப் பதிலாகக்கார சாரமில்லாத வெறும் அரிசிச் சோறே உலகம் முழுவதும் உணவாயிருந்தால், கலப்பு மணமின்றி எங்கும் ஒரே மணமே உலாவுவதாயிருந்தால், உலக மக்கள் அனைவருமே ஒருமுகங்கொண்டவராயிருந்தால், அவ்வித உலகத்தில் மனிதருக்குத் தலைநோயும் வயிற்றுநோயும் உண்டாகுமேயன்றி வேறு இன்பம் என்ன விளைய முடியும்? உலகம் ஒரேவிதமாவதனால் உயிர்களுக்கு மன வெறுப்பும் வேசடையும் (துக்கமும) ஏற்படுமே தவிர வேறு இன்ப உணர்ச்சி எதுவும் ஏற்படாது. இந்த உண்மையை மக்கள் உண்மையாகவே உணர்ந்திருப்பாரானால் பிறரையும், பிறவற்றையும், பழிக்கவும் தூற்றவும், இறுக்கவும் உரைக்கவும் எங்ஙனம் அவருக்கு மனம் துணியும்! இயற்கை அன்னையின் விதம் விதமான இந்த வேலைத்திறமையைக் கண்டு, கேட்டு, அவள் ஈன்றெடுத்த எண்ணிலடங்கா வேற்றுமைகளை அறிவால் உண்டு, அச்சத்தால் அதிசயத்தால் உயிர்த்து, பகுத்தறிவால் அவ்வேற்றுமையுள் ஒற்றுமையை உற்றறிந்து, அன்பால் அவற்றோடு ஒன்றி நின்று ஆனந்திப்பவரே உலகம் பலவிதம் என்ற பழமொழியின் ஆழத்தை யுணர்ந்த பெருமக்களாகிய பண்டிதராவார். உலகத்தைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும், அப்பண்டிதர் கண்ணே உளவாகும், என்பது பொருத்தமாம்.

இவ்விதப் பண்டிதரல்லாத மற்றையோருக்கு, உலக வேற்றுமையின்கண் ஒற்றுமை காட்டுவதான ஒரு முறை ஏற்படுமாயின், உலகப் பூசல்களைத் தீர்ப்பதற்கு அது ஒரு உயர்ந்த கருவியாகுமென்பது திண்ணம். எவற்றிற்கும் அடிப்படை உண்மைகளை ஆராய்வதால் அவ்வித முறையொன்று அமையும் என்பது இக்காலத்து அனுபவங்களால் அறியக் கிடைக்கின்றது. இதற்குத் துணைபுரியக் கூடியதும், பண்டே ஏற்பட்டுள்ளதுமான நன்னூற் சூத்திரமொன்று,

> "இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்,
> பகுதி, விகுதி, பகுத்திடை நின்றதை
> வினைப்பெயர், அல்பெயர்க் கிடைநிலை எனவே"

என்பதாகும். அதாவது (இலக்கியங் கண்டதற்கு) உலகத்தில் காணப்படும் ஒரே வகைத்தான நிகழ்ச்சிகளுக்கு(இலக்கணம் இயம்-

பலின்) அடிப்படை உண்மைகளை ஆராயப்புகின், (பகுதி) உயிரை-யும், (விகுதி) உயிர் தொழிற்படுவதற்கு இன்றியமையாததாய் ஏற்பட்ட உடம்பையும், (பகுத்து) பிரித்து வேறு வைத்து (இடை நின்றதை) எஞ்சியவற்றை, (வினைப் பெயர்) இன்றிமையாதனவாயி-னும் காலதேச வர்த்தமானங்களுக் கேற்ப மாறுபடுவன எனவும், (அல்பெயர்) நாளாவட்டத்தில் தன்னலத்தாலோ அறிவின்மை-யாலோ புகுத்தப்பட்ட உபயோகமற்ற இடைச் செருகல்கள் எனவும், (இடை நிலை) இவ்விரு வகையிலும் சேராதனவாய், செய்யாமையால் குறைவின்மையும், செய்தலால் குற்ற மின்மை-யும் ஆக உள்ளவை எனவும், (எனவே) பிரித்து ஆராய்வாயாக, என அதற்குப் பொருள் கூறலாகும். எனவே, பல நாடுகளிற் பல விதங்களாக அறிவுடை யோரால் ஏற்படுததப்பட்ட காரியங்-களுக்கு, காரணங்களை ஆராயுமிடத்து, முன்னிலை பின்னிலை என்ற முக்கிய உறுப்புகளை வேறுபடுத்தி, எஞ்சி நிற்பவைகளை அனுகூல-முடையவை, வெறுஞ்செயல், அவரவர் விருப்பைப் பொறுத்தவை எனப் பாகுபாடு செய்யின், அடிப்படை உண்மைகள் ஒருவாறு புலப்படுவதோடு, அத்துறையில் உலக ஒற்றுமைக்கு அவ்-வாராய்ச்சி அடிகோலியாகவு மிருக்கும.

இச் சூத்திர உரையைக் கண்டு இலக்கணப்புலவோர் எள்ளி நகையாடுவர். ஆயினும், அடிப்படை உண்மைகளை ஆராய்-வதற்கு இச்சூத்திரம் எளிதாக ஞாபகத்தில் வைக்கக் கூடிய அழகிய தொகுப்பு முறையாயிருப்பதால், செந்தமிழ்ப் புலவர் நகைப்புக்கு நாம அஞ்சவேண்டுவதில்லை. இனி, இச்சூத்திரத்தின் உதவிகொண்டு சில உலக நிகழ்ச்சிகளை ஆராய்வோம். முதலாவ-தாக உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாததான உணவை எடுத்துக் கொள்வோம்

உலகத்திலுள்ள உணவு முறைகள் பலவும் இந்தியா ஒரு நாட்டிலேயே உலவுகின்றன; அதனால் நம்நாட்டு உணவு முறைகளை ஆராய்வதொன்றே போதுமானது. இங்கு, நெல் கோதுமை சோளம் கம்பு வரகு முதலிய தானிய வகைகளும், பெரும் பயறு சிறு பயறு கடலை துவரை கொள்ளு மொச்சை முதலிய பருப்பு வகைகளும், மரக்கறி முதல் மாமிசம் வரையுள்ள பல கறிவகை-களும், மர எண்ணெ முதல் மீன் எண்ணெ வரையுள்ள கொழுப்பு

வகைகளும், பசும் பால் முதல் பனங்கள், சாராயம், பீர், பிராந்தி வரையுள்ள பான வகைகளும் அறுசுவைக்கும் மேற்பட்ட சுவைகளோடு சமைக்கப்பட்டு உண்ணப்படுகின்றன. அதனால் அவற்றை முதலாவதாக ஆராய்வோம்.

உடம்பை வளர்ப்பதும் தேக சுகத்தைப் பேணுவதுமே நாம் உண்ணும் உணவின் முதல் நோக்கமும் முக்கிய நோக்கமுமாகும். அந்த நோக்கத்தை முற்றுப் பெறுவிக்க இன்னின்ன தாதுக்கள் இன்றியமையாதன வென்பதைத் தற்கால நவீன ஆராய்ச்சியாளர் நன்கு துருவி ஆராய்ந்து வைத்திருக்கின்றனர். அதன்படி, உலகில் நடமாடும் பல வகையான உணவு இலக்கியங்களுக்கு இலக்கணம் இயம்பப் புகின், மாக்கூர்ப் பொருளென்கிற சர்க்கரைச் சத்தும் (Carbohydrates) புரதம் என்ற தசைச் சத்தும் (Proteins) கொழுப்புச சத்தும் (Fats) உணவின் தலையாகிய பகுதிகளாகும். இவற்றின் உணவுத் தன்மையைப் பூரணப்படுத்தும் உப்புச் சத்துக்கள் விகுதிகளாம். எஞ்சிய உணவுப் பொருள்களில், ஏ, பி, ஸி, முதலாகப் பலவிதமாகத் தொகுக்கப்படும் ஜீவசத்துக்கள் அல்லது 'விற்றமின்' என்ற உயிர்ச் சத்துக்களை வினைப்பெயர் என்னலாம். காபி, தேயிலை போன்றவை அல்பெயராம். நாவுக்குச் சுவை கொடுப்பதும் ஜீரணத்திற்கு அனுகூலமானதுமான உப்பு, புளி, மிளகாய் முதலிய சம்பாரப் பொருள்கள் இடைநிலை எனப்படும். இந்த அடிப்படை உண்மைகளை நன்கு அறிந்தவரிடையில் உணவைப் பற்றிய கலகம் ஏற்படுவதற்குக் காரணம் ஒன்றுமிராது. அவர்கள் நாடுவிட்டு நாடு பெயர்ந்த காலங்களில் அந்தந்த நாட்டில் அகப்படுவதான மேற்கண்ட அடிப்படைப் பொருள்களைக் கொண்ட உணவுகளை ஒன்று சேர்தது உண்டு, தம உடல் நலத்தைப் பேணிக்கொள்வர். அதற்கான சமன் செய்துள்ள உணவை (Balanced diet), ஊட்டச் சத்துப் பொருள் உணவைத தயாரித்துக்கொள்ள வல்லவராவர்.

உலகில நடமாடும் உணவுப் பொருள்களில் பெரும்பாலானவை இன்னின்ன சத்துக்கள் இவ்வளவிவ்வளவு உடையன என்று மேல் நாட்டு ரஸாயன முறைப்படி இன்று பரிசோதிக்கப்பட்டுப் பாகுபடுத்தப் பட்டிருக்கின்றன. உணவின் அடிப்படை

உண்மைகள், சர்க்கரைச் சத்து, தசைச் சத்து, கொழுப்புச்-சத்து, உலோக உப்புச் சத்துக்கள், உயிர்ச் சத்துக்கள் என்பவைதயும் அவையும் இன்னின்ன வயதுக்கும் தொழிலுக்கும் இவ்வளவிவ்வளவு வேண்டுவன என்பதையும் ஆராய்ந்து நிலை-நாட்டிய இக்காலத்தில், உணவுபற்றிய சச்சரவுகள் அநேகமாய் ஒய்ந்து விட்டன என்றே சொல்லலாம். உலகமகா இரண்-டாவது யுத்தமும் இதற்கு அதிகம் துணைபுரிந்த தெனலாம். அவரவர் பழக்க வழக்கமும் விருப்பு வெறுப்பும் பற்றிய உணவுப் பொருள்கள் பஞ்சநிலைக்கு வந்தபோது, பதிலாக வேறு பொருள்களை உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவை பற்றிய ஆராய்ச்சியும் அதிகப்பட்டன. எல்லாமாகச் சேர்ந்து, உலகில் உணவு இலக்கியங்கள் பலவாயிருப்பினும் அவற்றின் இலக்கணம் ஒன்றே என்பதும், உணவின் அடிப்படை உண்மைகளை அறியும்போது அங்குள்ள வேற்றுமைகளில் ஒற்றுமை ஏற்படு மென்பதும் இன்றைய அனுபவமாக இருக்-கின்றன.

உணவுக்கு அடுத்தபடியாக உலகம் முழுவதிலும் கொண்-டாடப்படுவது உடை. உண்மையில் உடையானது மனித-னுடைய அத்தியாவசியங்களில் ஒன்றாகும். "உடுக்கையிழந்த-வன் கைபோல" என்ற தெய்வப் புலவர் வாக்கிலிருந்து, உடையானது நீண்டகாலப் பழக்கத்தினால் மனிதனுக்கு ஓர் இன்றியமையாத பொருளென்றே கருதப்படுகிறது. இந்த உடையும் உணவைப் போலவே இருவகை நோக்கங் கொண்டது. இயற்கைத் தட்ப வெப்பங்களை மனித உடம்பு தாங்கும் நிலையில் ஒழுங்குபடுத்துவது உடையின் முதலாவதான நோக்கம்; இரண்டாவதாக, ஆள்பாதி ஆடைபாதி என்றபடி, அணிவோரை அழகுபடுத்துவது.

இந்த உடையிலக்கணத்தின் பகுதி அரையாடை; மேலாடை அதன் விகுதியாகும்; தலைப்பாகையும் பாதரட்சையும் வினைப்-பெயராகும்; மற்றுமுள்ளன அல்பெயர், இடை நிலையுள் அடங்கும். இந்த அடிப்படை உண்மைகளையும் உடையின் தலையான நோக்கத்தையும் அறிந்தவர் தேசகால வர்த்தமானங்-களுக்குத் தக்கபடி தமது உடையை அமைத்துக்கொள்ளத்

தயங்கார், பொருத்தமற்ற உடையினால் துன்புறுர். சூடுமிகுந்த நாடுகளில் உடம்பு முழுவதிலும் காற்றுட வேண்டுவது அத்தியாவசியம். அந்த இடங்களுக்கு அரைக்கு பஞ்ச கச்ச மென்ற பட்டத்தார் வேஷ்டியும் வல்லா வட்டாக அணிந்த அங்கவஸ்திரமும் மிகவும் பொருத்தமானவை; அல்லது, அரேபியா முதலிய நாடுகளிற்போலப் பெரு மணற் காற்றடிக்கும் இடமாயின், மிக நெகிழ்த்தியான கால் சிராயும் மேல் அங்கியும் முகம் மூடும் தலையங்கியும் உபயோகப்படுவன. இந்த உஷ்ணப் பிரதேசங்களுக்கு வெண்மை உத்தமமான நிறமாகும். அது சூரிய ஒளியை உள்ளுக்கு உறிஞ்சாமல் பிரதி பலித்துவிடும்.

இந்த உண்மைகளை நன்கறிந்தவரும் உண்மையென்று கண்டவற்றை உடனே கையாளும் உத்தம மகளிருமாகிய அன்னை வசந்தையார் (Mrs. Annie Besant) இங்கிலாந்திலிருந்து இந்தியா வந்து சேர்ந்ததும் மேல்நாட்டு உடையைக் களைந்துவிட்டு, இந்நாட்டுத் தட்ப வெப்பங்களுக்கேற்ற தாவணி (ஸாரியை) அணியத் தொடங்கினர். இந்த அறிவுடைச செயல், யான் எனதென்ற அபிமானமும் விருப்பு வெறுப்பால் ஒருதலைக் கொள்கையுமுடைய மேல்நாட்டு மக்களால் இகழப்பட்டுப் பத்திரிகைகளில் தூற்றப்பட்டது. அதே குறுகிய மனப்பான்மையுடைய இந்திய மக்களால் அச்செய்கை இந்தியரைப் பாராட்டுவதாகக் கருதப்பட்டுப் புகழப்பட்டுப் போற்றப்பட்டது. உடைபற்றிய அடிப்படை உண்மையைக் கையாளாமையால் இருதிறத்தாரும் மயங்கி மாறுபட்டனர். இன்று அந்த உடை இந்தியாவில் தங்கும் ஐரோப்பிய அமெரிக்க மக்களுக்குள் பழக்கத்தில் வந்துவிட்டதென்றே சொல்லலாம். வெள்ளையர் ஆண்களும் பெண்களும் இந்நாட்டுக்கேற்ற உடையுடுத்தி சென்னையில் அடையாற்றில் நடமாவது இன்றும் கண்ணுக்கினிய காட்சியாகும்.

இதுபோலவே குளிர்ச்சியுள்ள நாடுகளில் உட்சட்டை, புறச்சட்டைகளும், இறுக்கமான உடுப்புகளும் கால்ச் சிராய்களும், சூட்டை உறிஞ்சுவதான கறுப்பும் அதை யொட்டிய நிறங்களும் அவசியமானவை. இந்த உண்மையை ஒதுக்கிவிட்டு, ராஜ உடை என்ற மோகத்தினுலும், "மனிதன் கையில் மனிதன் அகப்பட்டால் குரங்கு" என்ற கொள்கைப்படி மேலதிகாரிகள்

ஆட்டி வைக்கும் குரங்கு வித்தைக்குப் பயந்தும், இந்நாட்டில் பலர் கழுத்தில் தூக்குக் கயிறு முதல் காலில் கோவணிப்பை வரை ஒன்று விடாமல் வெள்ளையரைப் போல் அணிந்துகொண்டு, வெய்யில் புழுக்கம் பொறுக்கமாட்டாமல் திணறிக்கொண்டு தங்கள் மடமையை மறந்து வெய்யிலைப் படைத்த இறைவனை நொந்து கொண்டும் காலங் கழிக்கின்றனர். இன்று இந்தியா சுதந்திரம் பெற்றபின் இது பெரும்பாலும் மாறி வருகின்றதென்னலாம்.

இம்மாதிரியே நாட்டின் மழை வெயில் பனி இவற்றிற்கேற்பத் தலைப்பாகையும் பாதரட்சையும் அமைந்திருப்பதையும், தவிர்த்த சில்லறை உடைகளும் அழகு அணிகளும் அவசியமற்றவை என்பதையும் அறிந்தோர், "என் உடை மேல் உன் உடை மேல்" என்ற வீண் வாததலைத் கிளப்பி உலகில் அல்லலை உண்டு பண்ண மாட்டார்கள்.

மூன்றாவதாக, உலகப் பிணக்குகளில் மிகப் பெரும் பிணக்கு சமயப் பிணக்கு. வேலிக்கு இட்டமுள் பயிரையே அழிப்பதுபோல உலக மக்களுக்குள் சாந்தியையும் சந்தோஷத்தையும அளிப்பதற்கென்றே அமைக்கப்பட்ட சமயங்களே சண்டைகளை விளைப்பதென்றால் அது நம்பக் கூடாததாயிருக்கின்றது. ஆயினும் உலக சரித்திரத்தை ஒரு சிறிது கற்றோரும, தந்தெய்வம் எந்தெய்வமென்று வழக்கிடும சமயங்களால் ஏற்பட்ட கலகங்களையும் பெரும் போர்களையும் கண்டு அதிசயிக்காதிரார். இன்றும் ஒவ்வொரு மதஸ்தனும் "என் மதமே உண்மை மத" மென்று இறைவன் பேராலேயே சத்தியம் பண்ணத் தயாராயிருக்கின்றான். இப்படி முரட்டுப் பிடிவாதங் கொண்ட சமய வெறியர்களால் உண்டாகுந்தொல்லைகளையும் சமயங்களில் இடைக் காலத்தில் புகுந்த பல பெருங் குறைகளையும் தீமைகளையும் கண்டு, இக்கால மக்களிற்பலர் "சமயங்கள் சுயநலச் சூழ்ச்சிகள்" என்று அவற்றை இகழ்ந்து ஒதுக்கவுந் தொடங்கிவிட்டனர். ஆகையால் பலவகைப்பட்டனவும, வெளிக்கு வேறுமாறாகத் தோன்றுவனவுமாகிய இந்த மதங்களுக்குள், ஒற்றுமை உண்டுபண்ணக் கூடிய அடிப்படை உண்மைகள் உளவா என்பது அறிவுடையோரால் ஆராய்தற்குரியது. சமயங்களின் தலையான நோக்கம் மனிதனுடைய இன்ப-

வாழ்க்கை, அதாவது ஆன்ம விடுதலை (Liberation). அவ்வீடு பேற்றிற்கு ஆன்ம பக்குவமும் அவசியமாகின்றபடியால் இவ்விரண்டு நோக்கங்களையும் முக்கியமாகக் கொண்டே எல்லாச் சமயங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. சமயங்களில் பொதுவாக மூன்று உறுப்புகள் காணப்படும்; அவை ஒழுக்கமுறை, கிரியைமுறை, கொள்கைமுறை என்பனவாம். அவற்றுள் ஒழுக்கமுறை இன்ப வாழ்க்கைக்கு ஏற்பட்டது, கிரியைமுறை உள்ளத்தின் பண்பாட்டிற்கு அமைக்கப்பட்டது, கொள்கைமுறை இவ்விரண்டிற்குமுரிய விதிகளையும் ஆதாரங்களையும் விளக்குவது.

மனிதனுடைய இலக்கு முழுவதும் அவனுடைய இன்ப வாழ்க்கையே என்பது சொல்லாமலே பெறப்படும். சமயங்கள் அனைவற்றிலும் அவ்வாழ்க்கைக்கு வழிகாட்டுவது ஒழுக்கமுறை என்பதும் மேலே சொல்லப்பட்டது. ஆற்றுநீர் ஓரிடமிருந்து மற்றோரிடம் சேரும்போது அது ஒழுக்கு எனப்படும். ஓட்டைக் கலயத்துள்ளது புறத்தே செல்வதும் ஒழுக்காம். ஆகவே ஒழுக்கம் என்பது உயிர்களின் அகத்திருந்து புறத்தும், தம்மிடமிருந்து பிறரை நோக்கியும் செல்லும் அறிவு, இச்சை செயல்களின் தொழிற்பாடுகளாம். மனிதன் தனிக்காட்டு மிருகமல்ல, ஒரு கூட்டுப் பிராணியாவான். புறத்து நேரும் இயற்கை நிகழ்ச்சிகள் உடம்பைத் தாக்கி மனிதனுக்கு இன்ப துன்பங்களை உண்டு பண்ணுவதுபோல, அவனிடமிருந்து புறஞ் செல்லும் ஒழுக்கமும் அவனையும் ஏனைய உயிர்களையும் இன்பத்திலோ துன்பத்திலோ ஆழ்த்திவிடும். அது காரணமாகவே, இன்ப வாழ்க்கைக்கு முறை வகுக்க வந்த சமயங்களெல்லாம் "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம் என்று மிடும்பை தரும்" என்ற இறை நியதியைக் கைப்பிடித்து, ஒழுக்கத்தையே முதலாவது குறிக்கோளாகவும் முக்கிய குறிக்கோளாகவும் எடுத்தாள்வன. இந்த ஒழுக்க முறையில் மதங்களுக்குள் மாறுபாடு ஏது? கொலை களவு காமம் கள்ளுண்டல் பொய்மொழிதலை விலக்காத மதம் ஏது? காமக் குரோத லோப மோக மத மாற்சரியங்களை அறவே ஆகாவெனக் கூறாத மதங்கள் எவை? அம்மாதிரியே அறஞ் செய்தலை விதிக்காத மதம் ஏது? அன்பு இன்சொல் ஈகை அடக்கம் நன்றி பொறை முதலிய நற்குணங்களை இன்ப வாழ்க்கைக்கு

ஊன்றுகோலாக ஏற்படுத்தாத மதங்கள் எவை? முப்பத்திரண்டென வகுக்கப்பட்ட அறங்களில் ஏதாவதொன்றைத் தீயது என்று கூறும் மதம் யாது? ஆழ்ந்த ஆராய்ச்சியின்றியே மதங்களுக் கிடையில் இந்த உயர்ந்த அடிப்படை உண்மையொன்று யாவருக்கும் புலப்படுமானால், சமயங்களின் மற்ற மாறுபடும் அம்சங்களைப் பற்றிக் கவலைப் படுவானேன்? உலக முயற்சிகள் முழுவதும் மனிதனுடைய இன்ப வாழ்க்கைக் கன்றோ? அதற்குரிய மருந்தை எந்த அநுபானத்தில் கொடுத்தால் என்ன? சர்க்கரையில் பொதிந்தோ, தேனில் கலந்தோ, தேத்தண்ணீரில் இட்டோ எவ்விதம் உண்ட போதிலும் ஒழுக்கமாகிய மருந்து ஒரே மருந்தாய், இன்ப வாழ்க்கையாகிய பலன் ஒரே அநுபவமாய் அமையுமாயின், மாறுபடும் சமயங்களின் மற்றப் பகுதிகளைக் கொண்டு சண்டைக் கொடி கட்டுவது மதியீனத்திலும் மதியீனமாகத் தோன்றவில்லையா? அம்மதியீனத்தால் பொறை என்ற நற்குணம் நீங்கி, அறிவு மழுங்கி, அன்பிற்கு இடையூறுண்டாய், சமயங்களின் முக்கிய குறிக்கோளாகிய இன்ப வாழ்க்கை கண்ணாடிச்சில்போலச் சிதறிச் சின்ன பின்னமாகி விடுகின்றது. இது இன்று உலகில் காணப்படும் கோரக்காட்சிகளில் ஒன்று.

இனி, தேச கால வர்த்தமானங்களுக் கேற்ப உள்ளத்தின் வளர்ச்சிக்கு அமைக்கப்பட்ட கிரியை முறைகளிலும், ஆராய்வாருக்குச் சில அடிப்படை உண்மைகள் புலப்படும். தற்காலத்தில் அதிவேகமாகப் பயணஞ் செய்ய விரும்புவோருக்குப் பல பல யந்திரங்களும் கருவிகளும் அமைந்திருப்பதை யாவரும் அறிவர். அவற்றுள் சில மின்சாரத்தாலும், சில நீராவியாலும், சில மண்ணெண்ணெயாலும், மற்றவை நிலக்கரியாலும் இயங்குவதையும் மக்கள் அறிவார்கள். இவற்றுள் ஒரு கருவிக்கேற்ற ஊட்டத்தை மற்றக் கருவிகளுக்கு ஆக்க முடியாது. அதற்காக யாரும் கங்கணங் கட்டிக்கொண்டு யுத்தக் களரியில் இறங்குவோரில்லை. ரயிலில் செல்பவன் மோட்டாரை முட்டி நொறுக்கியும், மோட்டாரில் செல்பவன் விமானத்தை நோக்கி வெடி வைத்தும் அல்லல் விளைப்பதைக் காண்கிலோம். அவரவர் இடம் பொருள் ஏவலுக்கேற்பக் கிடைத்த வண்டியில் ஏறித் தம் தம் காரியத்தை நோக்கிப் பயணஞ் செய்து வருவதே சாதாரண அநுபவமாக இருந்து வரு-

கிறது. அம்மாதிரியான ஏற்பாடே சமயங்களில் காணப்படும் கிரியை முறைகளுமாம்.

இன்றைய முன்னேற்ற நாடுகளாகிய இங்கிலாந்து, வட அமெரிக்கா முதலிய இடங்களில், கல்வி அறைகளில் யந்திரங்களைக்கொண்டு காந்த சக்தியைப் பரப்பிப் பிள்ளைகளுடைய அறிவை வேகமாக விருத்திசெய்ய முயல்கின்றனர். இது அந்நாடுகளில் சாதாரணப் பழக்கமாய் விட்டது. அதே முறையில் மக்கள் மனத்திற்கு சாந்தத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கக்கூடிய பலவகையான சக்திகளை அருட் சக்திகள் என்று சமயங்கள் கூறுகின்றன. அவற்றையும் தனித்தனியாகப் பிரித்துப் பெயரிட்டு விளக்கக்கூடிய பக்குவம் உலக வளர்ச்சியின்கண் இன்னும் ஏற்படவில்லை யாதலால், அவை தொகுதியாக அருட் சக்திகள் என்றே இன்று கூறப்படுகின்றன. அவற்றை மக்களிடம் பரப்புதற்கு அமைந்த முறைகளே ஆலயங்களிலும் மற்றிடங்களிலும் சமயங்கள் விதிக்கும் யந்திரங்கள், மந்திரங்கள் கிரியைகள் முதலியன. மின்சார சக்தி ஒன்றையே உற்பத்தி செய்யுங் கருவிகள் எத்தனையோ விதம் விதமாகவும் முறை முறையாகவும் ஆக்கப்பட்டிருப்பதுபோல, அருட் சக்தியை மனிதருக்கு வழங்கும் கிரியைகளும், தேச கால வர்த்தமானங்கட்குத் தக்கபடி பல விதங்களாய் அமைந்திருக்கும். இதுவே சமயக் கிரியைகளின் அடிப்படை உண்மை. இந்த உண்மையை அறிந்தவர்கள் பிறமதக் கிரியைகளில் பூரண விசுவாசத்தோடு கலந்துகொள்ளத் தயங்கார், பலன் பெறுவதிலும் குறைவுறார்.

ஆயினும் கிரியை முறைகளில் பற்றில்லாதவர் அதனைப் பின்பற்ற வேண்டுமென்ற அவசியமில்லை. ஏனெனில் இன்ப வாழ்க்கைக்கு இன்றியமையாதது ஒழுக்கமுறை யொன்றேயாகும். பித்த நோயுள்ளவனுக்குப் பித்தம் சாந்தமடையும்வரை சுவை ஏற்படாதது போலவும், காய்ச்சலுள்ளவனுக்கு உடம்பு தன்சூடு பெறுமை போலவும் ஒழுக்கமுறை கைவராதவனுக்கு இன்ப வாழ்க்கை எய்தவே எய்தாது. ஒழுக்கக் குறைவுடன் ஆன்மவளர்ச்சி யடைவது மிகவும் அபாயகரமானது. இந்த ஒருதலைப்பட்ட வளர்ச்சியால் ஏற்பட்டதே இன்று காணப்படும் உலக மகா யுத்தங்கள், ஆதலால், இந்தக் கிரியை முறைகளுக்குத்

தகுதிக்கு மேற்பட்ட மதிப்பைக் கொடுத்து, அது காரணமாக மக்கள் உம் சமயம் எம் சமயம் என்று சச்சரவு செய்வது அறிவுடைமையாகாது.

மாறுபடும் சமயங்கள் மானிட வர்க்கத்திற்கு ஓயாத தலைவலியைக் கொடுக்கக் காரணமாயிருப்பது அவற்றின் கொள்கை முறையாலே யாம். அவற்றையும் பக்ஷபாதமின்றி ஆராய்வோருக்குச் சில அடிப்படை உண்மைகள் தென்படும். ஆயினும் அவை போரிடுவதற்கான அவ்வளவு முக்கியத்துவம் உடையனவையல்ல. என்னெனில்,

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்"

என்ற உண்மையை அறிவதற்கு எந்த மதக் கொள்கை அவசியம்? அவ்விதமே

"அறத்தா றிது வென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"

என்பதை அறிய எந்தச் சமயக்கொள்கை தேவை? தற்காலத்தில், மனித வாழ்க்கையோ சுகாதாரம் பொருளாதாரம் அரசியல் சமூக இயல் எனப் பல துறைகளாகப் பகுக்கப் பட்டும், ஒன்றுக்கொன்று சரியான இணைப்பின்றியும் இருத்தலால், மக்கள் உழன்று வருகின்றார்கள். சமயங்கள் ஏற்பட்ட பண்டைக் காலத்தில், இவையெல்லாம் ஒரே வாழ்க்கை மரத்தின் பல வேர்களென்ற உண்மையை யறிந்து, காலை எழுந்து பல் துலக்குவது முதல் இரவு இன்ன பக்கம் தலை வைத்துப் படுக்கவேண்டுமென்பது வரையுள்ள மனித சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் சமயக் கொள்கையிலே புகுத்தி வைத்தனர். அதாவது உண்ணல், உடுத்தல், உறங்கல், கல்வி கற்றல், பொருள் சம்பாதித்தல், மணத்தல், குழந்தை குட்டிகளைப் பெறுதல், வளர்த்தல், மரித்தல் எல்லாமே சமயக் கொள்கைகளாகப் பாராட்டப்பட்டன. சமய ஆராய்ச்சி செய்யும்போது இது கருத்தில் வைக்கப்பட வேண்டும்.

மேலே எடுத்துக்கொண்ட நன்னூற் சூத்திரப்படி சமயங்களை ஆராயின், ஒழுக்கமுறை இன்றியமையாத பகுதியாகும். அதற்குச் சாதகமாயிருக்கும் கிரியைமுறை விகுதியாகும். அறிவோடு

கையாளின் பலன் கொடுக்கவல்ல வினைப்பெயர் போன்றனவும், வெறுஞ் சக்கையாகிய அல்பெயர் போன்றனவும், நன்மைக்கும் தீமைக்கும் இடங் கொடுக்கும் இடைநிலைக் கொள்கைளும் கொள்கை முறைகளிலேயே காணப்படும். அறிவுடையோர் பல சமயங்களின் நூல்களைக் கற்றுப் பகுத்தறிந்து கொள்வாராக.

இனி, இம் மாற்றங்க ளெல்லாவற்றிற்கும் அடிப்படையாக-வுள்ள உயிர்களைக் கவனிப்போமானால் அவற்றுள்ளும் சில அடிப்-படை உண்மைகள் கல்லார்க்கும் கற்றவர்க்கும் மிக எளிதில் புலப்படும். உலகில், ஓயாத குழப்பங்களுக்கும் கலகங்களுக்கும் கொடிய யுத்தங்களுக்கும் காரணராயிருக்கும் மனிதரை மாத்-திரம் எடுத்துக் கொள்வோமானால், அவருள் ஆண் பெண் என்ற பால் பாகுபாடும், கறுப்பு, சிவப்பு, மஞ்சள், வெள்ளை, பொது நிறம் என்ற நிற வேறுபாடும், உடலுறுதி, உயரம், வலிமையுள்ள மக்களினங்கள், குள்ளமாய் இளைத்திருக்கும் உடலையுடைய ஜாதி-கள் என்பனவுமாகிய இந்த இயற்கை வேறுபாடுகளால் எப்பொ-ழுதும் அவர் தம்முள் பிணங்கிக் கொண்டே யிருக்கின்றனர். இந்தப் புற வேறுபாடுகள் யாவற்றுள்ளும், ஒரே படித்தாக எல்லா உயிரினங்களிலும் ஒவ்வொரு உயிரிடத்தும் காணக்கிடப்-பது, உயிர்வாழ வேண்டுமென்ற அவா. இந்த உயிர் வாழ்க்கைத் தாகம் எல்லா உயிர்களுக்குமே பொதுவா-னது. மிகமிகச் சிறிய எறும்பையும் வாயினால் ஊது-வோமானால், அது உயிர்தப்ப ஓடும் வேகம் யாவரும் அறிந்ததே. அம்மாதிரியே பெரிய மிருகங்களும் மனித வர்க்க-மும். ஆகவே, உயிர்வாழ வேண்டுமென்ற இந்த அவா உயிர் இலக்கியத்தின் முதலாவது அடிப்படை உண்மை. இன்ப துன்-பம் இரண்டாவது அடிப்படை உண்மை. இது எல்லா உயிர்களும் உணர்வதொன்று. இன்ப துன்பங்களுக்கு ஈடுபடாதவர் உலகில் யாவரிருக்கின்றனர்? இன்பத்தையும் இன்பத்தை ஈவனவற்றை-யும் எய்த முயற்சிப்பதும், துன்பத்தையும் துன்பத்தை ஈவன-வற்றையும் விலக்க முயற்சிப்பதும் எல்லா உயிர்களுக்கும் பொதுவான மூன்றாவது அடிப்படை உண்மை. இது விருப்பு வெறுப்புண்மை எனப்படும். இனி, இம் முயற்சிக்கு ஆதாரமாக யாவருக்கும் அறிவு, இச்சை, செயல், என்ற மூன்று கருவிகள்

இயற்கையாக அமைந்திருப்பது நான்காவது அடிப்படை உண்மை.

ஆன்ம இலக்கணத்தில், வாழ்க்கைத் தாகமும் இன்ப துன்பமும் பகுதியாகும்; விருப்பு வெறுப்பும் மனம் வாக்குக் காயங்களும் விகுதி யெனலாம். இவை யாவும் பெயர், ஜாதி, குணம், கர்மத்தைத் தழுவியும் இடம் பொருள் ஏவலுக் குட்பட்டும் இயங்கும் முறைகளும் தொழில்களும் வினைப்பெயர், அல்பெயர், இடைநிலை எனப் பிரிபடும். இவை ஒவ்வொன்றையும் பற்றி விரிவாக எழுதப் புகின் அவை ஒவ்வொன்றுமே தனித் தனிக் கட்டுரையாகிவிடும். இந்த உயிர் பற்றிய அடிப்படை உண்மைகளை மனத்தால் அறிவது எளிது, ஆனால் உள்ளத்தால் உணர்வதோ அரும் பெரும் காரியம். இவை ஒவ்வொன்றையும் ஆழ்ந்து கருத வேண்டும்; பின்னர் விருப்பு வெறுப்பின்றிப் பிற உயிர்களுடைய எண்ணங்கள் ஆசைகள் செயல்கள் இவற்றை ஊன்றிக் கவனிக்க வேண்டும். அப்போது எந்த அடிப்படை உண்மையின் மீது அவை எழுகின்றன என்பது புலப்படும். அவற்றைத் தம் அனுபவத்தோடு ஒப்பிட்டு நோக்கும்போது, முதலாவதாகப் பிற உயிர்களிடம் ஒரு அனுதாபமும் பின் அவரோடு ஒரு ஒப்புரவுணர்ச்சியும் அப்புறம் அவர் மீது ஒரு அன்பும், அதன் மேல் ஒரு அதிசயமும் ஆச்சரியமும் ஆனந்தமும் தம் அறிவிலும் உள்ளத்திலும் படிப்படியாக உதிக்கக் காண்பார்கள். இந்த அனுபவத்திற்கு ஒரு உயர்ந்த உதவியாயிருப்பது "தனக்கு வந்தால் தெரியும் தலைவலியும் காய்ச்சலும்" என்ற பழமொழி. தன் அனுபவம் முதிர முதிர ஒருவனுக்குப் பிறர் இன்ப துன்பங்களோடு ஒன்றி நின்றுணருந் தன்மையும் முதிர்ச்சி யடையும்; அவரிடம் அன்பு பெருகும்; அந்த அன்பு காரணமாக ஆனந்தம் தழைக்கும். இதனைக் குறிப்பாகக் காட்டுவதே,

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

என்ற திருக்குறள்.

இந்நிலை அடைந்தோரே பலவிதப்பட்ட இந்த உலகைக் கண்டு கேட்டுண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனைக் கொண்ட

பண்டிதர். இவர் முழுவதும் அச்சம் நீங்கியவர், யாம் "அஞ்சுவதியாதொன்றுமில்லை, அஞ்ச வருவதுமில்லை" என்ற பெருமிதங் கொண்டவர், என்றும் இன்புற்றிருப்பவர்.

கடலே வறண்டென்ன, மலையே பொடிந்
தென்ன, காசினியில்
உடலே மடிந் தென்ன, உலகே அழிந்
தென்ன, உண்மை யொன்று
நடம் ஆடும் விந்தையை நாம் காணும்
போதிந்த மேதினியில்
இடமேது நெஞ்சமே அஞ்சவோ
ஆசை மீக் கொள்ளுதற் கோ.

என்று பாடியாடிப் பரவசங் கொண்டிருக்கும் பெரியோர். இன்னோருடைய உதாரணங் கண்டே இந்த உலகம் சாந்தியடைவது, உள்ளங் கடந்தான் (கட + உள்) உண்மைத் தன்மையை ஒரு சிறிது நுகர்வது.

இதுவரை இயற்கை யமைப்பில் உணவும் உயிரினமும், செயற்கை யமைப்பில் உடையும் சமயங்களும், வேற்றுமையில் ஒற்றுமை காட்டும் உண்மை ஆராயப்பட்டது. இவ்விதமே பலவகைப்பட்ட எந்த இனத்தையும் தொகுப்பையும் அடிப்படை உண்மை கொண்டு மனிதர் ஆராய்வாராகில், அவற்றின் ஒற்றுமை காணப்பட்டு, அந்த ஒற்றுமையால் அவர் மனத்தில் அன்பும், வேற்றுமையால் அவர் மனத்தில் புதுமையும் அருமையும் புலப்பட்டு, இப்போது மக்களுக்குள் வெகுவாக நடமாடும் வெறுப்பும் சலிப்பும் நீங்கும், விருப்பும் நட்பும் பெருகும். அதனால் மேற்பார்வைக்கு இந்தப் பூசல் கொண்ட உலகம் பலவிதமாயிருப்பினும், அவ்வேற்றுமையுள் ஒற்றுமையை உலகிற்குக் காட்டி உலகில் சாந்தத்தையும் சமாதானத்தையும் நாட்ட வேண்டியது அறிவுடையோர் கடமையாம்.

# இலஞ்சி புதுவீட்டுப் பொன்னம்மையம்மாள் ஞாபகார்த்த நிதி.

---

எனக்குப் பத்து வயதாகுமுன் என்னையும் எனக்கிளைய இருவரையும் தயங்கவிட்டு எங்கள் தாயார் கடையம் விசாலாட்சியம்மாள் 1071-ம் ஆண்டு மார்கழி மாதம் 21-ம் தேதி சனிக்கிழமை தேய்பிறைச் சதுர்த்தியன்று தனது 29-வது வயதில் இவ்வுலகத்தை நீத்தபோது, எங்களைக் கடையத்திலிருந்து இலஞ்சிக்குக் கொண்டுவந்து அருமையாய்ப் போற்றி வளர்த்துப் படிக்க வைத்து ஆளாக்கி விட்டவரும், என் தாயாரைப் பெற்ற பாட்டியாரும் ஆகிய பொன்னம்மையம்மாளின் பாத சமர்ப்பணையாகவும் அவளுக்கு எனது மனமார்ந்த நன்றி பாராட்டாகவும் இந்த நிதி ஏற்படுத்தப்படுகின்றது. இத்தொகையிலிருந்து என் பாட்டியார் ஞாபகார்த்த மலராக நான் இதுவரை எழுதியுள்ளதும் இனி எழுதுவதுமான நூல்கள் யாவும் அச்சிடப்படவேண்டும். அவற்றை விற்றுவரும் தொகையும் இந்நிதியோடு சேர்க்கப்படவேண்டும். இந்த நூற்பதிப்பையன்றி வேறுயாதொரு காரியத்திற்கும் இந்நிதியை உபயோகிக்கக் கூடாது.

### அச்சிடவேண்டிய நூல்கள்

1. தமிழ் மறை வழிபாடு (1) சிறிது (2) பெரிது (தயார்)
2. மறுபிறப்பு வரலாறுகள் ... (அச்சில்)

ஆலயங்களின் உட்பொருள் விளக்கம்

3. பாகம் I. அண்டத்திலுள்ளது பிண்டத்தில் (தயார்)
4. ,, II. ஆலயந்தொழுவது சாலவும் நன்று (தயார்)
5. ,, III. அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும் (தயாரிப்பில்)
6. ,, IV. ஆட்டை விழாக்களும் ஐந்தொழில் முறையும் (ஷை)

I. C. I. IN YOUR EYE
மகா சிவராத்திரி
அமாவாசை மாலை.
இலஞ்சி 1950.

